# TIRUKKALAMPAKAM

## TEXT WITH AṈANTATĒVAR'S COMMENTARY

# திருக்கலம்பகம்

## மூலமும் அனந்ததேவர் உரையும்



INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai-600 119
INDIA

# *TIRUKKALAMPAKAM*

TEXT WITH ANANTATEVAR'S COMMENTARY

# திருக்கலம்பகம்

மூலமும் அனந்ததேவர் உரையும்

*General Editor*
G. JOHN SAMUEL

*Editors*
M. PARIMANAN
R. JAYALAKSHMI

*English Rendering*
R. RAJARATHINAM

INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai-600 119
INDIA

*TIRUKKALAMPAKAM* - TEXT WITH AṈANDATĒVAR'S COMMENTARY
திருக்கலம்பகம் - மூலமும் அனந்ததேவர் உரையும்

Editorial Assistance
V. Ganesan

First Edition 1999, PP-366

Publication No. 66

© Institute of Asian Studies

Price Rs. 300 US $ 30

Published with the financial assistance from the Directorate of the Tamil Developement of the Government of Tamil Nadu for the best translations from Tamil to other language or from other languages to Tamil.

**Copies can be had from**

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai-600 119.
India.

Phone : (Off.) 4961662, 4960831
(Res.) 4960085
Fax : 91-44-4960959
E-mail : ias@xlweb.com
world wide web site : http//xlweb.com/heritage/asian.htm

Composed by
**Institute of Asian Studies, Chennai - 600 119.**

Printed by
**Students Xerox and Offset Service, Chennai - 600 020.**

# CONTENTS


| | | Page |
|---|---|---|
| 1. | பதிப்புரை | 5 |
| 2. | Editor's Note | 10 |
| 3. | ஆய்வுரை | 15 |
| 4. | A Critical Introduction | 48 |
| 5. | திருக்கலம்பகம் - மூலமும் அனந்ததேவர் உரையும்<br>*Tirukkalampakam* - Text with Anantatēvar's Commentary | 75 |
| 6. | இணைப்புகள் | |
| | 1. துணைநூற் பட்டியல் | 331 |
| | 2. செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 336 |
| | 3. சொல்லடைவு | 338 |
| | 4. கலம்பக நூல்கள் - பட்டியல் | 363 |

# A System of Transliteration of Tamil

## VOWELS

| Short | | Long | |
|---|---|---|---|
| அ | a | ஆ | ā |
| இ | i | ஈ | ī |
| உ | u | ஊ | ū |
| எ | e | ஏ | ē |
| ஒ | o | ஓ | ō |

| | |
|---|---|
| ஐ | ai |
| ஔ | au |

## CONSONANTS

| Hard | | Soft | | Medial | |
|---|---|---|---|---|---|
| க் | k | ங் | ṅ | ய் | y |
| ச் | c | ஞ் | ñ | ர் | r |
| ட் | ṭ | ண் | ṇ | ல் | l |
| த் | t | ந் | n | வ் | v |
| ப் | p | ம் | m | ழ் | ḻ |
| ற் | ṟ | ன் | ṉ | ள் | ḷ |
| ஸ் | s | ஷ் | ṣ | ஹ் | h |
| | | ஜ் | j | | |

## ĀYTAM

ஃ ḵ

# பதிப்புரை

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழிக்குத் தமிழ்ச் சமணர்களின் பங்கு மகத்தானது. அவர்கள், நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற பல இலக்கண நூல்களையும், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி போன்ற பெருங் காப்பியங்களையும், பெருங்கதை, யசோதர காவியம், உதயணகுமார காவியம் போன்ற சிறுகாப்பியங்களையும் நாலடியார் போன்ற அறநூல்களையும், திவாகரம், பிங்கலம் போன்ற நிகண்டுகளையும், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களையும், கணிதம், சோதிடம், மருத்துவம், வாது போன்ற பலதுறை நூல்களையும் எழுதித் தமிழ்மொழிக்குப் புகழும் பெருமையும் சேர்த்துள்ளனர். உதீசித்தேவர் இயற்றிய திருக்கலம்பகம் என்னும் சிற்றிலக்கியமும் இவ்வகையில் அடங்கும்.

### நூலுக்குரிய சுவடி

திருக்கலம்பகம் என்னும் இந்நூல் ஒரு சுவடிப் பதிப்பாகும். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் டி.எண். 287-இல் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள ஓலைச் சுவடியை அடிப்படையாகக் கொண்டது.

### நோக்கம்

இத்திருக்கலம்பக நூல் நான்கு பதிப்புகளைக் கண்டுள்ளது.

1. மு. ராகவையங்கார், திருக்கலம்பகம் மூலமும் உரையும், மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு, 1911.

2. அ. சம்பந்தராவ் நயினார் (திண்டிவனம்), திருக்கலம்பகம் மூலமும் உரையும், 1935.

3. ஆ. சக்ரவர்த்தி நயினார் (தஞ்சை) திருக்கலம்பகம் மூலம், 1955.

4. புலவர் எஸ். தன்யகுமார், உதீசித்தேவர் இயற்றிய திருக்கலம்பகம், மதுரைத் தமிழ்ச் சமணர்கள் சங்கம், 1995.

இவற்றில் முதல் மூன்று பதிப்புகள் கிடைக்கவில்லை. நான்காவது பதிப்பு மட்டும் கிடைக்கிறது. இவற்றில் உதீசித்தேவர் எழுதிய பாடலுக்கு அவரது காலத்திற்குச் சற்றுப் பின்னால் தோன்றிய அனந்ததேவரின் பதப்பொருள் பொழிப்புரையுடன் கூடிய நூல் இதுவரை யாரும் பதிப்பிக்க முன்வரவில்லை. இவ்வுரை இக்காலத்தில் உய்த்துணர அரிதாயினும் உரையாசிரியர் வரலாறு, உரை வரலாறுக்கு இஃது இன்றியமையாதது

உரையாசிரியர் வரலாறு, உரை வரலாறுக்கு இஃது இன்றியமையாதது என்பதால் இத் திருக்கலம்பகம் பதிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**சுவடிநூலின் புறஅமைப்பு**

சுவடி நூலின் மொத்த இதழ்கள் 142. இருபுறமும் மரத்தாலான சட்டத்தால் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இதழ்கள் நாட்டுப்பனை வகையைச் சார்ந்தவை. இதழின் நீளம் 46.5 செ.மீ. அகலம் 3.2 செ.மீ. சுவடியைச் செம்மையாகக் கட்டிவைத்தற்கேற்ப இதழ்களின் நடுவே துளை ஒன்று இடப்பட்டுள்ளது. சுவடி மிகப்பழமையாகக் காணப்படுவதால் இதழ்களின் பகுதிகள் சிற்சில இடங்களில் சிதைவாகவும் முறிந்தும் காணப்படுகின்றன. இதனால் பாடலடிகளும், சொற்களும், தொடர்களும், எழுத்துக்களும் சிதைந்துள்ளன.

**அக அமைப்பு**

சுவடியின் முதல் இதழ் நரம்பு கிழிக்கப்படாத இரட்டை இதழ் அமைப்புடையது. அது இரண்டாக ஒடிந்துள்ளது. எழுத்துகள் மிகவும் சிதைந்து உள்ளன. பதிப்பாசிரியரின் உய்த்துணர்வால் அவ்வெழுத்துகள் பஞ்சபரமேட்டிகளைக் குறிக்கும் பஞ்சமந்திரம் என்பது அறியப்பட்டது.

அடுத்துள்ள இரு இதழ்களில் நூலில் பயின்றுவரும் பாடலின் முதற்குறிப்பு அகராதி இடம்பெறுகிறது. மூன்றாவது இதழில் நூல் தொடங்குகிறது ஒவ்வொரு இதழிலும் பக்கத்திற்கு ஆறு வரிகள் எழுதப்பட்டுள்ளன. எழுத்துக்கள் மிகவும் தெளிவாக உள்ளன. இறுதி இதழில் நூலாசிரியர் உதீசித்தேவரைப் பற்றி இருபது அடிகளைக் கொண்ட ஆசிரிய விருத்தப்பாடல் ஒன்று இடம்பெறுகிறது. இப்பாடல் இந்நூலுக்குப் பதப்பொருளும், பொழிப்புரையும் எழுதிய அனந்ததேவரால் எழுதப்பட்டிருக்கலாம். இப்பாடலின் முடிவில் இந்நூல் படியெடுத்த ஆண்டாக சோபகிருது வருடம் தைமாதம் 22 ஆம் தேதி வியாழக்கிழமை பூரட்டாதி நட்சத்திரம் திருதிகை திதி பரீகம் தைத்துலம் இந்தச் சுபதினத்தில் எழுதி முகிந்தது முற்றிற்று. திருக்கலம்பகம் கவி. 111. உரை 111. என்ற செய்தி இடம்பெறுகிறது. இச்செய்திகளிலிருந்து நூல் படியெடுத்த ஆங்கில ஆண்டு 1903 என்பது தெரியவருகிறது. பரீகம் என்பது படிஎடுத்தவர் பெயராயிருக்கலாம்.

**பதிப்புமுறை**

இச்சுவடியின் இதழ்கள் மிகவும் பழமையானதாக உள்ளன. இதழ்களைத் தொடும்போதே ஒடிகின்றன. எனவே மிகவும் நிதானமாக ஒவ்வொரு இதழாக எடுத்து வைத்துக் கொண்டு எழுதவேண்டிய நிலை

ஏற்பட்டது. மேலும் சில இதழ்கள் முறிந்தும், சிதைந்தும் உள்ளன. இந்நூலகத்தில் டி. 289 எண்ணில் மூலம் மட்டுமே எழுதப்பட்டுள்ள சுவடியைத் துணையாகக் கொண்டு சிதைந்த பகுதியில் உள்ள பாடல்கள் மட்டும் எழுதப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

தொடக்கப் பாடலின் தலைப்பும், தலைப்பினை அடுத்துப்பாடலும், பாடல் முடிவுற்ற பின் பதப்பொருளும், அதனைத் தொடர்ந்து பொழிப்புரையும், பொழிப்புரைக்குப் பின்பு விளக்கவுரையும், விளக்கவுரையைத் தொடர்ந்து சிறப்பு விளக்கங்களும் அமைந்துள்ளன. சிறப்பு விளக்கங்கள் கிரந்தத்தால் எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக முதல் பாடலில் விளக்கவுரைக்குப் பிறகு சிறப்பு விளக்கமாக இருபத்து நான்கு தீர்த்தங்கரர் பெயர்களும் கிரந்தத்தால் எழுதப்பட்டுள்ளன. இரண்டாம் பாடலில்.

பிரபாவலயம் மூன்றாவன . . . . . . (கிரந்தம்) . . . . .

மதில் மூன்றாவன . . . . . .(கிரந்தம்) . . . . .

ஐந்து விடயங்களாவன . . . . .(கிரந்தம்) . . . .

ஐவகை உயிராவன . . . . . . .(கிரந்தம்) . . . . . .

அறுவகைப் பொருளாவன . . . . . .(கிரந்தம்) . . . . .

தேசகாதியாவன. . . . . . . . (கிரந்தம்) . . . . . . .

சர்வகாதியாவன . . . . . . . . (கிரந்தம்) . . . . . .

என தமிழில் தலைப்பும் கிரந்த எழுத்தில் விளக்கமும் தருகின்ற முறையில் அமைந்துள்ளது.

**பாவமைப்பு**

திருக்கலம்பகத்தில் உள்ள மொத்தப் பாடல்கள் 111. இவை கொச்சக ஒரு போகு கலிப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், வெண்டுறை எனப்பலவகைப் பாடல்களால் ஆனவை. இப்பாடல்கள் அனைத்தும் சீர் பிரிக்கப்படாமலும், அடிகள் வேறுபடுத்திக் காட்டப்படாமலும், பதப்பொருளை வேறுபடுத்திக் காட்டும் வகையில் சொல்லுக்கும் பொருளுக்கும் இடையில் சமக்குறி (-) இல்லாமலும், புள்ளியிட வேண்டிய இடத்தில் புள்ளி இல்லாமலும் எழுதப்பட்டுள்ளன.

**பிழைகள்**

சுவடியைப் படியெடுத்தவர் நல்ல தமிழ்ப்புலமை மிக்கவர் என்பது இந்நூலின் மூலம் அறிய முடிகிறது. சிற்சில பிழைகளைத் தவிர தொடர்ப்பிழை, கருத்துப்பிழை ஒன்றும் காணப்படவில்லை

## பதிப்பின்போது கடைபிடித்த விதிமுறைகள்

1. பாடலின் சீர்களும், அடிகளும் பிரிக்கப்பட்டு உரிய வடிவில் தரப்பட்டுள்ளன.

2. சுவடியின்கண் விடுபட்டனவும் சிதைவுற்றனவுமாகிய எழுத்துக்களும், சொற்களும் வேறு சுவடி, நூல்களின் மூலமாகவும், பதிப்பாசிரியரின் உய்த்துணர்வாலும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு முழுமையாகத் தரப்பட்டுள்ளன.

3. எகர, ஒகர குறில் நெடில்கள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

4. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடப்பட்டுள்ளன.

5. மிகக்கூடாத இடங்களில், மிகுந்திருந்த தேவையற்ற ஒற்றுகள் நீக்கப்பட்டுள்ளன.

6. ஒற்றுகள் இடம்பெறாதிருந்த தேவையான இடங்களில் ஒற்றுகள் இடப்பட்டுள்ளன.

7. ந-ன, ன-ண, ர-ற, ல-ழ-ள முதலிய எழுத்துக்கள் தம்முள் மயங்கி வந்துள்ள இடங்கள் உரிய முறையில் திருத்தப்பட்டுள்ளன.

8. சுவடியில் இடம்பெறும் கிரந்த எழுத்தாலமைந்த வடமொழிச் சொற்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

## பிறசெய்திகள்

நூலாய்வில் கலம்பகம் பற்றிய செய்திகளும், நூலாசிரியர், உரையாசிரியர் பற்றிய செய்திகளும் தரப்பட்டுள்ளன. திருக்கலம்பகம் திருக்குறளோடும், தேவாரம், பெரியபுராணம் போன்ற நூல்களோடும் ஒப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

பின்னிணைப்பில் துணைநூல் பட்டியல், பாடல் முதல்குறிப்பு அகராதி, சொல்லடைவு, கலம்பக நூல்கள் பற்றிய தொகுப்பு அகராதி ஆகியவை தரப்பட்டுள்ளன.

## நன்றியுரை

திருக்கலம்பகம் என்னும் சமணத்தமிழ்ச் சுவடியைப் பதிப்பிக்கும் பணியை அளித்து எங்களை ஊக்கப்படுத்திய நிறுவன இயக்குநர் மதிப்பிற்குரிய டாக்டர் ஜி. ஜான்சாமுவேல் அவர்களுக்கு என்றும் நன்றியுடையோம்.

திருக்கலம்பகநூலில் இடம்பெறும் வடமொழிச் சொற்களுக்கு எல்லாம் இரவு பகல் என்று பாராது பல விளக்கங்கள் அளித்து நூல் செம்மையடைவதற்குப் பெருந்துணையாக இருந்த சமணச் சான்றோர் வித்யாபூஷன். பண்டித ரத்னா. திருமிகு மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியார் அவர்களுக்கும், நூலுக்கு ஆக்கம் சேர்க்கும் வகையில் பல துணைநூல்களை இலவசமாக வழங்கி உதவிய பொன்னூர் புலவர் ச. தன்யகுமார் எம்.ஏ., பி.எட். அவர்களுக்கும், பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் எம்.ஏ., அவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுவடியைப் படி எடுக்க ஒப்புதல் அளித்த அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாளர் முனைவர் சு. சௌந்தர பாண்டியன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது. சொல்லடைவு செய்து தந்த ஆசியவியல் நிறுவன சுவடிப்புல நண்பர்கள் திருமதி. கு. செல்வ லட்சுமி, திரு. கோ. உத்திராடம், திரு. யா. அந்தோணிசாமி, திரு. கா. வ. பரந்தாமன் ஆகியோருக்கும், சொல்லடைவில் உதவியதோடு மொழிபெயர்ப்பு உடனுக்குடன் கிடைப்பதற்கும், அச்சுப்படி முறையாக அமைவதற்கும் உதவிய டாக்டர். கி. ஜெயகுமார் அவர்களுக்கும், ஆங்கில அச்சுப்படியைத் திருத்தி உதவிய டாக்டர். ஈ. சு. முத்துசாமி, கே. சிதம்பரம் ஆகியோருக்கும், அட்டைப் படம் வரைந்துதவிய திரு. அ.செ. நடராசன் அவர்களுக்கும், கணிப்பொறியில் கட்டமைத்துக் கொடுத்த ஆசியவியல் நிறுவனக் கணிப்பொறியாளர்க்கும், நன்முறையில் அச்சிட்டு உதவிய மாணவர் மறுதோன்றி அச்சகத்தினருக்கும் எங்கள் நன்றி உரியது.

# Editor's Note

The contribution of the Jains of Tamilnadu to the peerless and unique Tamil language is quite impressive. Profound treatises on Tamil grammar and prosody such as *Naṉṉūl, Nēminātam, Yāpparuṅkalam,* and *Yāpparuṅkalak kārikai,* major epics like *Cilappatikāram, Cīvakaçintāmaṇi,* and *Vaḷaiyāpati,* minor epics like *Yacōtara Kāviyam* and *Utayaṇa Kumāra Kāviyam,* didactic works like *Nālaṭiyār* and *nikaṇṭu* (Thesaurus) works such as *Tivākaram* and *Piṅkalam,* books under minor literary genres like *Antāti, Kalampakam, Piḷḷaittamiḻ,* and works on various branches of knowledge, namely mathematics, astrology, medicine and religious debate, all these form quite a formidable list of Jaina contribution to Tamil language and literature. *Tirukkalampakam* written by Uticittēvar comes under the category of significant contribution to Tamil language as well as Jainism.

**The title of the work**

The title of the work is *Tirukkalampakam.* The original of this work is a palm-leaf manuscript preserved in the Government Oriental Manuscripts Library, Chennai as D.No. 287.

**The objective of the present edition**

This work *Tirukkalampakam* has seen four editions as follows:

1. Mu. Rākava Aiyankar, *Tirukkalampakam Mūlamum Uraiyum,* Published by Maturai Tamiḻc Caṅkam, 1911.

2. A. Campanta Rao Nayinār, (Tintivaṉam) *Tirukkalampakam Mūlamum uraiyum,* 1935.

3. Ā. Cakravartti Nayinār, (Tañcai) *Tirukkalampakam Mūlam,* 1955.

4. Pulavar S. Taṉya kumār, Uticittẹvar Iyaṟṟiya *Tirukkalampakam,* Maturai Tamiḻc Camaṇanrkaḷ Caṅkam, 1995.

Of these four editions the first three are not available for reference and only the last and fourth edition is available.

Besides the above mentioned four editions there was a work by one Anantatevar, who lived slightly later than Uticitēvar, the author of

*Tirukkalampakam.* That work contained the text of *Tirukkalampakam* along with *patavurai* (word by word meaning) and *poḻippurai* (paraphrase) of the poems. Though this commentary of Aṉantatēvar is difficult to understand by average readers, it has been taken up for the present edition considering its chronological proximity to the original and the comprehensive nature of the commentary.

## The manuscriptology of the work : Its external structure

The total number of palm-leaves of the manuscript is 142. The leaves have been tied with wooden frames on both sides. The leaves belong to the *nāṭṭuppaṉai* variety of palmyrah trees. The length of each leaf is 46.5 cms and the width is 3.2 cms. A punched hole in the middle portion of the leaves is there to enable proper tying of the leaves. As the manuscript is quite ancient several portions of the leaves are found mutilated and broken. Hence the lines, words phrases and letters are mutilated.

## The internal structure of the manuscript

The first palm-leaf is a twofold piece with the stem not removed. But it is found broken into two pieces. The letters are badly mutilated. The editor's instinct however helped him to identify the mutilated letters as *Pañcamantiram* which refers to *Pañcaparamēṭṭikaḷ.* The next two leaves contain a glossary and the text of the work begins from the third leaf. There are six lines written in each side of a leaf. The letters have been written quite legibly. In the last leaf there is a poem in *aciriya viruttam* metre on Utīcittēvar, the author of *Tirukkalampakam.* This poem might have been written by Anantatēvar. At the end of this poem the date of copying the work is mentioned as *Cōpakirutu* year, *Tai* month, date 22nd, Thursday *Pūraṭṭāti* star, *Tirutikai titi parīkam kaittulam* on such auspicious day, written completed and ended. *Tirukkalampakam kavi* (poem) 111, *urai* (commentary) 111. From this entry we are able to find out only the period of the copying of the work, that is, 1903 and Parīkam, perhaps, is the name of the copyist.

## The pattern of editing

The leaves of this manuscript are quite hoary and they break even at a mere touch. Hence great care had to be taken in handling the leaves one by one and copying them with the help of the copied manuscript available under No. D. 289 in the Government Oriental Manuscripts Library, the poems in the mutilated portions were traced and written to complete the work.

The editing sequence is as follows:

The title of the first introductory poem is followed by the text.

At the close of the poem there is *patapporuḷ* ie, word by word meaning. Then we have a paraphrase or *poḷippurai*. After that we have *viḷakkavurai*, explanatory interpretation. Then there are special explanations written in *kirantam* script. For instance in the first poem after the *viḷakkavurai* the names of the 24 *Tīrttaṅkarars* are mentioned in *kirantam* script.

In the second poem the captions or headings are in Tamil whereas the explanations for those captions are in *kirantam* script.

Caption in Tamil

| | | |
|---|---|---|
| *Pirapāvalayam mūṉṟāvaṉa* | - | Explanations in *kirantam* |
| *Matil mūṉṟavāṉa* | - | Explanations in *kirantam* |
| *Aintu viṭayaṅkaḷāvaṉa* | - | Explanations in *kirantam* |
| *Aivakai uyirāvaṉa* | - | Explanations in *kirantam* |
| *Aṟuvakaip poruḷāvaṉa* | - | Explanations in *kirantam* |
| *Tēcakātiyāvaṉa* | - | Explanations in *kirantam* |
| *Carvakātiyāvaṉa* | - | Explanations in *kirantam* |

## The poetic structure of *Tirukkalampakam*

The total number of poems in the work is lll. They are set to different metres such as *Koccaka orupōku kalippa, Veṇpā, Kaṭṭaḷaikkalittuṟai, Viruttam,* and *Veṇtuṟai.* In all the poems, *Cīr* (metrical foot) division has not been properly done. The lines are not distinguishable. Between the words in the poems and their *patapporuḷ* (meanings) there are no hyphen marks to differentiate them. In places where dots are to be placed they are absent.

## Errors

The person who copied the manuscript must have been a great scholar in Tamil as the copy is singularly free from linguistic or conceptual errors. Only a few minor lapses are found.

**The rules and regulations adopted for edition**

1. The *cīr* (metrical foot) and *aṭi* (lines) were divided and given in proper alignment.

2. The mutilated letters and words in the manuscript were traced and provided with the help of other manuscripts. The editor's instinct also helped him to renovate such omissions and gaps.

3. The short vowel and long vowel of ẹ & ọ have been differentiated clearly.

4. Consonants have been dotted.

5. The redundant and needless *oṟṟus* (combining dotted consonants between two words) have been removed.

6. The omitted and needed *oṟṟus* have been provided.

7. The involuntary errors in differentiating *ṇa - ṉa, na - ṉa, ṟa - ra, ḻa - ḷa - la,* found in the manuscript have been properly corrected.

8. Proper explanations have been given to the Sanskrit words found in *kirantam* script.

**Other details**

In the critique of the work, information regarding *kalampakam* and details related to the author and commentator of the work have been provided. *Tirukkalampakam* has been evaluated in comparison with illustrious literary works such as *Tirukkuṟaḷ, Tēvāram* and *Periyapurāṇam.*

In the annexure of the edition, a bibliography, a glossary, a word index, and a consolidated list of all *Kalampakam* works in Tamil have been provided.

## Acknowledgement

We are forever grateful to Dr. G. John Samuel, Director, Institute of Asian Studies for having entrusted the publication of *Tirukkalampakam* to us and enthused us to complete the task.

The Jain scholars Messrs Vidyabushan, Pandita Ratna Mallinath Jain Sastriar, Pulavar Ca. Danyakumar, M.A. B.Ed. and Professor J. Srichandran, M.A., enabled to understand and interpret the work properly. We express our deep sense of gratitide to them.

Dr. S. Soundara Pantyan, Curator of the Govt. Oriental Manuscripts Library, Chennai kindly permitted us to copy the manuscript. We are grateful to him. Ms. G. Selvalakshmi, Mr. G. Uthiradam, Mr. Y. Anthonisamy, and Mr. K.V. Paranthaman, helped in preparing the word index. Dr. K. Jayakumar offered valuable suggestions and helped to get the translation very quickly and also to prepare index. Dr. E.S. Muthuswami & Mr. K. Chidambaram helped us in English proof correction. We express our gratitude to them. We thank Thiru A.S. Natarajan who has designed the pictorial illustration on the front wrapper and Student Xerox printers who has neatly done the printing of the work.

# ஆய்வுரை

திராவிடமொழிக் குடும்பத்தில் முதன்மைபெறும் தமிழ்மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. சங்க காலத்திற்கு முன்பே தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், சோதிடம், மருத்துவம் போன்ற பல துறைகளில் செழிப்புற்று இருந்தமையைத் தொல்காப்பியம் நமக்குக் காட்டுகின்றது. அந்நாளில் இலக்கியங்கள் அகம் எனவும், புறம் எனவும் பிரிக்கப்பட்டுப் பின்னர் மேல்கணக்கு நூல்கள் எனவும், கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் பிரித்து வகுக்கப்பட்டன. பின்னர் திருமுறைத்தமிழ் எனவும், அறநெறித் தமிழ் எனவும் அழைக்கப்பட்டன. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனவும் பெயரிடப்பட்டன. அடுத்த நிலையில் சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என்னும் வகைகளும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றன.

**சிற்றிலக்கியம் :**

ஆசிரியரின் படைப்பாற்றலும், காலத்தாக்கமும், சமுதாயச் சூழலும் புதுப்புது இலக்கிய வகைகள் தோன்றக் காரணமாகின்றன. அவ்வகையில் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பலவகைச் சிற்றிலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வரலாயின. அவை கோவை, உலா, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம், தூது, குறவஞ்சி, பள்ளு, மடல், மாலை எனப் பலவகையாகும். இவற்றைப் படைக்கும் ஆசிரியர் உலகியல் கடந்த கற்பனை நிகழ்ச்சிகளையும் உயர்வு நவிற்சி அணிகளையும், திரிசொல்லாட்சிகளையும், இல்பொருள் உவமைகளையும் அமைத்துக் கற்பவர் உள்ளத்தைக் கவரும் வண்ணமாகப் படைப்பர்.

'பிரபந்தம்' என்ற வடசொல்லுக்கு 'நன்றாகக் கட்டப்பட்டது' என்று பொருள். இது தமிழில் சிற்றிலக்கியம் என்று வழங்கப்படுகின்றது. இச்சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என்று பிரபந்த மரபியலில் கூறப்பட்டாலும் எல்லாப் பாட்டியல் நூல்களையும் ஒப்பு நோக்கி ஆராயும் போது "தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை நானூற்றுப் பதினொன்று" என்று பட்டியலிட்டுக் காட்டுகின்றார் த. அழகப்பராசு[1] அவர்கள்.

**கலம்பகம்**

சிற்றிலக்கிய வகைகளுள் கலம்பகமும் ஒன்றாகும். ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையும் முதல் கவியுறுப்பாக முன்கூறப்பட்டுப் புயவகுப்பு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து,

இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் உறுப்புக்களைப் பெற்று, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னும் இவற்றால் இடையிடையே வெண்பா, கலித்துறை விரவ அந்தாதித் தொடையால் மண்டலித்து முடிவது கலம்பகமாகும். இவ்வாறு பல்வேறு பாவும், பாவினமும் கலந்து வந்தமையால் இது கலம்பகம் என்னும் பெயர் பெற்றது.

**கலம்பகம் – சொல்லாட்சி :**

கலம்பகம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. இவர் தம் நூலாகிய திருப்பள்ளி எழுச்சியின் ஐந்தாம் பாடலில்

"களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த" [2] என்று பாடியிருக்கின்றார்.

அடுத்து நச்சினார்க்கினியரும் பெரும்பாணாற்றுப்படை உரையில் "பல பூக்களால் நெருங்கிய கலம்பகமாகிய மாலை"[3] எனக் கூறிச் செல்கின்றார்.

**கலம்பகம் – சொற்பொருள் விளக்கம் :**

தொண்டரடிப்பொடி யாழ்வார் பாடலிலுள்ள கலம்பகம் என்னும் சொல்லுக்கு விளக்கம் கூறும் உரையாசிரியர் 'பலவகைப் பூக்களாலே தொடுக்கப்பட்டதாய் அழகியதான அலங்கல்'[4] என்று உரை கூறுவதால் கலம்பகம் என்ற சொல் கலவை என்பதன் அடியாகப் பிறந்தது என்பதை அறியலாம். மேலும் கலம்பகம் என்பதைக் கலம் + பகம் எனப்பிரித்து, 'கலம்' என்பது பன்னிரெண்டு எனும் அளவைக் குறிக்கும் எனவும், 'பகம்' என்பது பன்னிரெண்டில் பாதியைக் குறிக்கும் எனவும் கூறி பதினெட்டு உறுப்புக்கள் பெற்று வருவதால் கலம்பகம் என்னும் பெயராயிற்று என்றும் கூறுவர்[5] ஆனால், இக்கருத்து கலம்பக நூல்களுக்குப் பொருந்தி வரவில்லை. காரணம், சிற்றிலக்கிய நூல்களுக்கு இலக்கணம் கூறும் பன்னிரு பாட்டியல் நூல் பதினைந்து உறுப்புகளையும் இலக்கண விளக்கம் இருபத்தோரு உறுப்புகளையும் கூறுகின்றன. இன்னும் சில பாட்டியல் நூல்கள் கூறும் உறுப்புகளின் எண்ணிக்கையை வைத்துநோக்கும்போது பதினெட்டு உறுப்புகள் என்பது பொருந்தி வரவில்லை. எனவே 'கலம்பகம்' என்பது பலவகைப் பாவும் பாவினமும் கொண்ட கலவை இலக்கியம்தான் என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

**கலம்பகம் ஒரு கலவை இலக்கியம்**

கலம்பகம் என்பதைக் கலப்பு + அகம் என்று பிரித்துக் கலப்பைத் தன்னகத்துக் கொண்ட ஒரு கலவை இலக்கியம் என, வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகப் பொருள் கொள்ளலாம்.

கலம்பக இலக்கியங்கள் 'ஐம்பாவும் இனமும்' ஆகிய பலவகைப் பாடல்களால் ஆனவை;

புயவகுப்பு முதலான பல உறுப்புகளைக் கொண்டவை;

ஒன்பான் சுவைகளுள் பலவகைச் சுவைகளும் பெற்றவை;

மடக்கு, யமகம் போன்ற சொல்லணிகள் பலவற்றைக் கொண்டவை;
உவமை உருவகம் போன்ற பலவகைப் பொருளணிகளையும் கொண்டவை;
பலவகை ஓசை நயங்களோடு கூடிய சந்தப் பாடல்கள் பலவற்றைப் பெற்றவை.

பலவகைத் திணைப் பொருள்களைத் தம்மகத்துக் கொண்டவை;
எனவே இது ஒரு கலவை இலக்கியம்தான் என்று தெளிவாகக் கூறலாம்.

**கலம்பகத்தின் தோற்றம்**

அகப்பொருள் இலக்கணத்துள் வகுக்கப்பெற்ற திணைகளுள் கைக்கிளைத்திணை, அன்பின் ஐந்திணைகளுக்குரிய முதற்பொருள்களுள் கார், இளவேனில் முதலிய காலங்கள், இரங்கல் முதலிய உரிப்பொருள்கள், தூது போன்ற பிரிவுப் பொருள்கள், பெருந்திணைக் குறிப்புகளுள் அமைந்த மடல், ஐயமகற்றும் கருவிகளாக அமைந்த வண்டு, வேலன் வெறியாட்டு போன்ற பல்வேறுவகைத் துறைப்பொருள்களில் புலவர்கள் தாங்கள் விரும்பியவற்றைத் தங்களுக்கு எளிமையாகக் கைவரக்கூடிய பாடல் வகைகளால் பாடித்தொகுத்துள்ளனர். இவையே கலம்பக இலக்கியங்களின் தோற்றமாக இருந்திருக்கக் கூடும்[6] என்பார் முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்கள்.

மேற்கண்ட முறையைப் பின்பற்றிப் பாடிய பிற கலம்பக ஆசிரியர்கள் தாங்கள் விரும்பிய புதிய துறைகளையும், பாவகைகளையும் சேர்த்து விரும்பாதனவற்றை நீக்கியும் பாடித்தொகுத்திருக்கலாம். இந்த வகையில் தோன்றி வளர்ந்தவையே இன்றைய கலம்பக இலக்கியங்கள் என்று கூறலாம்.

**கலம்பகம் பற்றித் தொல்காப்பியம் :**

இலக்கியம் கண்டதற்குத்தான் இலக்கணம் கூறும் முறை உள்ளது. இதற்கு மாறாக, தொல்காப்பிய இலக்கண நூலில் புதிதான இலக்கியம் இயற்றுதற்கான வழிமுறைகளைக் கூறியுள்ளதை நோக்குவோம்.

"விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"[7] என்பது தொல்காப்பிய நூற்பா.

இதற்கு உரை கூறும் பேராசிரியர் "புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரச்செய்வது . . . . கலம்பகம் முதலாயினவும் சொல்லுப" என்று கூறுகிறார்[8] எனவே இந்நூற்பா இலக்கியம் காண்பதற்கு இலக்கணமாக அமைவதை நாம் அறியலாம்.

**கலம்பக இலக்கணம்**

கலம்பக நூலின் இலக்கணம் பற்றி பலவகைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்ற போதும், இங்கு பாட்டியல் நூல்களில் காலத்தால் முற்பட்ட பன்னிரு பாட்டியல் நூல் கூறும் செய்தியினை நோக்குவோம்.

"சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அம்மானை ஊசல் யமகம களிமறம்
சித்து காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
புறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதி யாக வரும்என மொழிப" [9]

புலவர்களால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட கலம்பகத்தினை நோக்குமிடத்து முதற்கண் ஒருபோகு என்ற 'பா'வும் அதன்பின் ஒரு 'வெண்பா'வும் அதற்கடுத்த நிலையில் ஒரு 'கலித்துறைப்' பாடலும் முதல் உறுப்பாக அமைய வேண்டும். பின்பு புயம், அம்மானை, ஊசல், யமகம், (மடக்கு) களி, மறம், சித்து, காலம், மதங்கி, வண்டு, மேகம், கைக்கிளை, சம்பிரதம், தவம் என்னும் உறுப்புகள் வெண்டுறையும் வஞ்சித்துறையும், இன்னிசை வெண்பாவும், வெண்பாவின் பக்கத்து அமைந்துள்ளதாகிய அகவற்பாவும், பலவகையாகிய விருத்தங்களும் கலந்து, அந்தாதியாக வரும் என்பது இதன் கருத்தாகும்.

**கலம்பக உறுப்புகளின் விளக்கம்**

**புயம்**

இதனைப் புயவகுப்பு அல்லது தோள்வகுப்பு என்றும் கூறுவர். நூலின் தலைவனுடைய தோள்களைப் பலவகையாகப் புகழ்ந்து பாடுவது இவ்வுறுப்பின் சிறப்பாகும். இவ்வுறுப்பில் பாடப்படும் பாடல் எல்லாம் புறத்திணையில் உள்ள பாடாண் திணையைச் சேர்ந்த பாடாண் பாட்டாகும். பாடாண் பாட்டு என்பது ஒருவரது புகழ், வீரம், கொடை முதலியவற்றைப் புகழ்ந்து பாடும் பாட்டாகும்.

**அம்மானை**

அம்மானை என்ற இவ்வுறுப்பு எல்லா நூல்களிலும் கலித் தாழிசையினால் பாடப்பட்டிருக்கின்றது. இது, மூன்று பெண்கள் கூடிப் பாட்டுடைத் தலைவனின் தன்மைகளைப் பற்றி நயம்பட உரையாடிக் கொண்டே அம்மானை ஆடுவதாக அமைக்கும் பாடலாகும். இதற்கு மாறாக

திருக்கலம்பகத்தில் எண்பத்து இரண்டு பெண்கள் அருகனது புகழைச் சொல்லி அம்மானை ஆடுவதாகக் கூறப்படுகிறது.

**ஊசல்**

முதற்கண் ஊஞ்சல் ஆடும் மகளிரின் தன்மைகளைக் கூறி, அடுத்து, பாட்டுடைத் தலைவனின் பெருமைகளை ஊஞ்சலில் ஆடிக்கொண்டே பாடுவது போன்று அமைப்பதாகும். இது, ஆசிரிய விருத்தப்பாடல் அல்லது கலித்தாழிசைப் பாடலில் 'ஆடீரூசல்', 'ஆடாமோ வூசல்' என்பனவற்றுள் ஒன்று பாடல் அடிகளின் இறுதிச்சீரில் அமையுமாறு பாடுவதாகும்.

**காலம்**

கார், இளவேனில் முதலிய பெரும்பொழுது ஆறனுள் ஒன்றும் பலவுமாக அமைத்துப் பிரிவு நிலையில் உள்ள தலைவி பருவ நிகழ்ச்சிகளைக் கண்டு அவற்றையெல்லாம் நோக்கி வாய்விட்டுப் புலம்புவதாகச் செய்யுள் அமைப்பதை மரபாகக் கொண்டுள்ளனர். இதற்கு மாறாகத் திருக்கலம்பகத்தில் அருகதேவனை நம்பினவருக்கு எல்லா நன்மையும் உண்டாகும் என்று கூறப்படுகிறது. எனவே 'காலம்' என முடியுமாறு செய்யுள் அமைத்தலே பெரும்பாலோரின் கருத்தாக அமைந்தள்ளது.

**மடக்கு (யமகம்) :**

மடக்கு என்பது ஒரு செய்யுளில் ஒரு சொல், சீர் முதலியன மீண்டும் மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. இதனை யமகம் எனவும் கூறுவர்.

**களி :**

கட்குடியர்கள் குடிக்கும் கள்ளையும் அது உண்டாகும் பனை, தென்னை முதலிய மரங்களையும் சிறப்பித்துப் பாடுவதுதான் பொதுவாகக் களி என்ற உறுப்பில் கூறப்படுகிறது. இதற்கு மாறாகத் திருக்கலம்பகத்தில் கள் என்பது பஞ்சபரமேட்டிகளின் பஞ்சம்ந்திரம் என்று கூறப்படுகிறது.

**மறம் :**

மறம் என்பது ஒரு அரசன் மறவர்மக்களைத் தனக்கு மணம்பேசி முடிக்கும்படி ஒருதூதனை அனுப்ப, அவர்கள் அத்தூதுவனைப் பார்த்து மணவினை மறுத்தும், தூதனுப்பிய அரசனை இகழ்ந்து பேசியும், தூதுவனை அனுப்பி விடுவதாகச் செய்யுள் அமைப்பது.

**சித்து**

சித்து என்பது இரும்பு, செம்பு முதலியவற்றைப் பச்சிலைகளால் புடமிட்டுப் பொன்னாக மாற்றும் இரசவாதம் செய்பவர்கள், தமது ஆற்றலை ஒருவனிடத்துப் புலப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள் இயற்றுவது.

**மதங்கியார்**

இதை 'மதங்கு' எனவும் கூறுவர். 'மதங்கியர்' என்பவர் இசைக்கும், கூத்துக்கும் உரிய ஒரு சாதியார். இவர்கள் தம் இரண்டு கைகளிலும் வாளாயுதத்தை ஏந்திச் சுழற்றிக் கொண்டே தாமும் சுழன்று ஆடும் மகளிராவார். இவ்வாறு ஆடுகின்ற மகளிர்பால் தலைவன் ஒருவன் காதல் கொண்டு தனக்குண்டான காமத்தை வெளிப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள் இயற்றுவது. திருக்கலம்பகத்தில் மதங்கப் பெண்ணானவள் அருகபரமனின் பஞ்சமந்திரத்தைத் துதித்து வேண்டி நிற்பதாக அமைக்கப்பட்டுள்ளது.

**வண்டுவிடுதூது**

பிரிவு நிலையில் வருந்தும் தலைவி, தலைவனிடம் வண்டைத்தூதாக அனுப்பித் தன் நிலையை உணர்த்துமாறு கூறுதல் போல பாடல் இயற்றுவதாகும். திருக்கலம்பகத்தில் அடியார்கள் வண்டைத் தூதாக அனுப்பிச் சமவசரணத்தில் வீற்றிருக்கும் அருகபரமனிடம் இருக்கும் தாமரைப் பூவின் நறுமணத்தை வாங்கி வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

**கைக்கிளை**

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். காமக்குறிப்பிற்கு அமைதியில்லாத இளஞ்சிறுமி ஒருத்தியினிடத்து, அவளைத் தவிர தன் காமநோய்க்கு வேறு மருந்தில்லை என்று பெருந்துயர் கொண்ட காதலன் ஒருவன் பாடுவது. திருக்கலம்பகத்தில் அருகபக்தன் ஒருவன் அருகபெருமான் மேல் கொண்ட காதலை விளக்குவதாக இப்பகுதி அமைக்கப்பட்டிருக்கிறது.

**குறம்**

குறவர் இனப்பெண்கள் தலைவனின் சிறப்புகளைக் குறிசொல்லும் பாங்கில் அமைப்பது இத்துறை. குறவஞ்சி நாடகங்களில் காணப்பெறும் குறி சொல்லும் பாங்கு போல நீண்டு, ஓசை நயத்துடன் இல்லாமல் ஆசிரிய விருத்தங்களாகவே இந்நூலில் அமைந்துள்ளன.

**சம்பிரதம்**

சம்பிரதம் என்பது இந்திர சால வித்தையில் வல்லவர் ஒருவர் தம் சிறப்புக்களைத் தாமே கூறிக் கொள்வது போன்று பாடல் இயற்றுவது. திருக்கலம்பகத்தில் இந்திரசால வித்தையில் வல்லவர் ஒருவர் தன் செயல் திறமையையும் அருகனின் பெருமைகளையும் கூறிப் பிறசமயத்தாரைக் கடிந்தும் கூறுவதாக அமைக்கப் பட்டிருக்கிறது.

### தவம்

இத்துறையில் தவத்தைச் சிறப்பித்துக் கூறாமல் தவத்தை விலக்கிப் பாட்டுடைத் தலைவனாகிய இறைவனை வணங்கிப் பேறுபெறுமாறு எல்லாக் கலம்பக நூல்களிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மாறாகத் திருக்கலம்பகத்தில் தவத்தை விலக்கி உயிர் அழியாத பொருள் என்பதும், அந்த உயிர் ஆசையினால் வினையின் கண்படுதலும், அவ்வினையினால் நால்வகைப் பிறப்பும் உண்டாதலும், அவற்றால் துன்பப்படுதலும், அவ்வினையைக் கெடுத்தால் முக்தி எய்தி இன்பம் அடைதலும், அவ்வினையைக் கெடுப்பதற்கான வழிகளும் இப்பகுதியில் விரிவாகப் பேசப்படுகின்றன.

மேற்கண்ட கலம்பக உறுப்புகளே திருக்கலம்பகத்தில் இடம் பெற்றுள்ளன. பிற்காலத்தில் கொற்றியார், பிச்சியார், கீரையார், வலைச்சியார் போன்ற பல உறுப்புகள் கலம்பக இலக்கியத்தில் அமைக்கப் பெற்று, தற்போது கலம்பக இலக்கியத்தில் இருபத்தைந்து உறுப்புகள் வரை காணப்படுகின்றன.

### காலம் தோறும் கலம்பகம்

### நந்திக்கலம்பகம்

கலம்பக இலக்கியத்தில் காலத்தால் முற்பட்டது நந்திக் கலம்பகமாகும். இது தெள்ளாறெறிந்த நந்திவர்மனென்னும் பல்லவ மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு புலவர் ஒருவரால் பாடப்பட்டதாகும். இதன் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். இக்கலம்பகம் நந்திவர்மனது போர், வீரம், வெற்றி, கொடை, கல்வி முதலியவற்றைப் புகழ்ந்து பாடுகின்றது. இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் 1927இல் வெளியிடப்பட்டுள்ளது.

### ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

நந்திக் கலம்பகத்தை அடுத்து பழமையுடையதாகக் கூறப்படுவது பதினோராந் திருமுறையிலுள்ள ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம். இதனை இயற்றியவர் நம்பியாண்டார் நம்பியாவார். இவரது ஊர் திருநாரையூர் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு. இந்நூல் திருஞானசம்பந்தரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டமையால் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் என்னும் பெயர் பெற்றது.

### திருக்கலம்பகம்

திருக்கலம்பகத்தை இயற்றியவர் தொண்டை நாட்டில், ஆரணிக்கு அருகில் உள்ள ஆர்ப்பாக்கத்தைச் சேர்ந்த உதீசித்தேவர். இவர் அருகதேவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 111 பாடல்களால் இந்நூலை

இயற்றியுள்ளார். இந்நூலில் சமண சமய தத்துவங்களும், கோட்பாடுகளும், சமவசரணத்தின் பெருமைகளும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலின் காலம் பத்தாம் நூற்றாண்டா? அல்லது பதினான்காம் நூற்றாண்டா என்பது ஆய்வுக்குரியது.

### திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தை இயற்றியவர் தொல்காப்பியத் தேவர். இவரது காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு. இவர் திருப்பாதிரிப்புலியூர் சைவ அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருப்பாதிரிப் புலியூர் சிவபெருமான் மீது கலம்பகம் பாடியுள்ளார். இவர் சமண சமயத்தவராக இருந்து பின் சைவசமயத்திற்குச் சென்றிருக்கலாம்.

"தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலின்றி
நல்காத் திருச்செவிக்கு நானுரைப்ப தேறுமோ" [10]

என்று இரட்டையர்கள் பாடுவதிலிருந்து இவரது புலமை நன்கு விளங்குகின்றது.

ஆக, நந்திக் கலம்பகத்திற்குப் பிறகு இம்மூன்று கலம்பகங்களும் மிகப் பழமையானவையாகப் போற்றப் படுகின்றன.

அடுத்த நிலையில் "கண்பாவு கலம்பகத்திற்கு இரட்டையர்கள்" [11] என்ற பாடல் அடியிலிருந்து கலம்பகம் பாடுவதில் புலமை மிக்கவர்களாகச் சிறப்பிக்கப் பெற்ற இரட்டையர்களால் பாடப்பட்டவை தில்லைக் கலம்பகமும், திருவாமாத்தூர்க் கலம்பகமும் ஆகும். இவர்களின் காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டாகும். சைவசமயக் கலம்பகங்களில் சிறப்பாகக் கருதப்படுவது சைவ எல்லப்ப நாவலரால் இயற்றப்பட்ட அருணைக் கலம்பகமும். குமரகுருபரரால் இயற்றப்பட்ட மதுரைக் கலம்பகமும் ஆகும். காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டு.

படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்டது புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம். இதன் காலம் 17 ஆம் நூற்றாண்டின் இறுதி, 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கம். வைணவ சமயக் கலம்பகங்களில் மிகவும் சிறப்பாகக் கருதப்படுவது பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகம். இதன் காலம் 17- ஆம் நூற்றாண்டு. முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் பாடியது திருவேங்கடக் கலம்பகம். இதன் காலம் 19 ஆம் நூற்றாண்டு.

இத்தாலி நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டில் கிருத்துவசமயப் போதகராகப் பணியாற்றிய வீரமாமுனிவர் பாடிய திருக்காவலூர்க் கலம்பகம் கிருத்துவசமயம் சார்ந்த சிறந்த கலம்பக நூல்களில் ஒன்றாகும்.

சென்ற நூற்றாண்டில் பூண்டி அரங்கநாத முதலியார் இயற்றிய கச்சிக் கலம்பகம், இருபதாம் நூற்றாண்டில் இராமநாதன் செட்டியார் இயற்றிய மயூரகிரிக் கலம்பகம், அப்பு ஐயங்கார் இயற்றிய ஸ்ரீவரமங்கைக் கலம்பகம், அனந்த கிருஷ்ண ஐயங்கார் இயற்றிய திருப்பேரைக் கலம்பகம் முதலியன சிறந்த கலம்பக நூல்களுக்குச் சான்றாகும். இவற்றின் விரிவைப் பின் இணைப்பில் காணலாம்.

**கலம்பக இலக்கியத்தில் திருக்கலம்பகம்**

திருக்கலம்பகம் என்ற சொல்லில் 'திரு' என்பது அடையாகவும், 'கலம்பகம்' என்பது இலக்கிய வகையாகவும் அமைந்துள்ளது.

திரு என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி செல்வம், சிறப்பு, அழகு, காந்தி, பொலிவு, பாக்கியம், நல்வினை, தெய்வத்தன்மை போன்ற பலவகையான பொருள்களைக் கூறுகின்றது. இக்கலம்பகம் அருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப் பட்டமையால் 'திரு' என்ற அடைக்குத் தெய்வத்தன்மை என்ற சொல் பொருத்தமாக அமைகிறது. எனவே திருக்கலம்பகம் என்பது அருகப் பெருமானின் சிறப்புத்தன்மைகளைக் கூறும் கலம்பகம் என்று கூறலாம்.

திருக்கலம்பகநூல் பன்னிருபாட்டியல் கூறும் கலம்பக இலக்கணத்திற்கு ஏற்ப கலம்பக உறுப்புகளாக 'புயவகுப்பு' தொடங்கி 'தவம்' வரை 16 உறுப்புகளைப் பெற்று வருகின்றது.

மேலும் பாடல்களின் தொகையைப் பற்றி

"தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பில் எழுபது அமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினார் செய்யுள்"[12]

என்று கூறுகிறது. தேவர்க்கு 100 பாடலும், முனிவர்க்கு 95 பாடலும் அரசர்க்கு 90 பாடலும், அமைச்சர்க்கு 70 பாடலும், வணிகர்க்கு 50 பாடலும், வேளாளர்க்கு 30 பாடலும் கொண்டு கலம்பகம் இயற்ற வேண்டும் என்பது பொதுவிதியாகும். இங்கு திருக்கலம்பகம் அருகதேவர்க்கு 110 பாடல்களைக் கொண்டு அமைந்திருக்கிறது. எனவே பாட்டியல் நூல்கள் கூறும் பாடல்களின் வரையறைக்கு இக்கலம்பக நூல் பொருந்தி வரவில்லை.

**செய்யுட்கள் அமைப்பு :**

வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியல் செய்யுட்கள் அமைப்புமுறை பற்றி,

"கூறு **மொருபோகு வெண்பாக் கலித்துறைகள்**
மாறின் முதலுறுப்பா மன்**விருத்தம்** - வேறகவல்
**வஞ்சித் துறைவிருத்தம்** வான்றுறைவெண் பாமருட்பா
எஞ்சாக் கலியினங்கொண் டீட்டு". [13]

என்று கூறுகிறது.

இவ்விலக்கண அமைப்பிற் கேற்ப திருக்கலம்பகமும் முதற்கண் ஒருபோகும் தொடர்ந்து வெண்பா, கலித்துறையும் முதலுறுப்பாகக் கொண்டு அமைந்துள்ளது. மேலும் இந்நூலுள் இடம்பெறும் பாடல்கள் வருமாறு:

1. வெண்பா (1,3, 30, 66, 85, 99, 109, 111) - 8
2. நேரிசை ஆசிரியப்பா (17) - 1
3. ஆசிரியத்துறை (59) - 1
4. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (6, 8, 9, 21, 22, 24, 29, 31, 37, 38, 42, 48, 49, 51, 57, 71, 79, 80, 82, 84, 90, 98, 100) - 23
5. எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (11, 12, 20, 41, 65, 68, 76, 87, 104) - 9
6. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (5, 10, 14, 18, 28, 32, 36, 40, 43, 50, 54, 58, 64, 67, 73, 75, 78, 93) - 19
7. பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (27, 55, 56, 61, 91, 94, 101, 102, 103, 108) - 10
8. பதினான்கு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் (52, 92) - 2
9. சந்த விருத்தம் (35, 97, 105, 106) - 4
10. ஒரு போகு கொச்சகக் கலிப்பா (2) - 1
11. கட்டளைக் கலிப்பா (39) - 1
12. கலித்தாழிசை (45, 96) - 2
13. கட்டளைக் கலித்துறை (4, 7, 23, 46, 60, 74, 86, 107) - 8
14. காப்பியக் கலித்துறை (13, 34, 47, 53, 62, 63, 81, 83) - 8
15. கலிநிலைத் துறை (26) - 1

| | | | |
|---|---|---|---|
| 16. | கூலி விருத்தம் | (15, 25, 33, 69, 72, 88, 89) | - 7 |
| 17. | கலி வெண்பா | (77) | - 1 |
| 18. | வெண் கலிப்பா | (70) | - 1 |
| 19. | வஞ்சிப்பா | (110) | - 1 |
| 20. | வஞ்சித்துறை | (44) | - 1 |
| 21. | வஞ்சி விருத்தம் | (19, 95) | - 2 |
| | ஆக பாடல் | | 111 |

(அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் பாடல் எண்கள்)

**நூலாசிரியர் வரலாறு :**

திருக்கலம்பக நூலின் ஆசிரியர் பற்றிய பாடல் சுவடியின் இறுதி இதழில் காணப்படுகிறது. இதில் 'உதீசித்தேவர் பற்றிக் குறிக்கப்பட்டிருக்கும் பாயிரம்' என்று தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதில் வரும் செய்தியே இந்நூலுக்குப் புறச் சான்றாக அமைகிறது.

"வையக மடந்தை வாள்முக மாகிய
மெய்வளர் தொண்டையம் பதிக்கு வடாஅது
கன்னி கார்த்து மன்னிய பெரும்புகழ்
பழியில் பல்குடிப் பையூர்க் கோட்டத்
தொழியாச் சீர்த்தியொடு வழியறம் பயப்பினும்
ஆங்கவை கருதா அன்புகொ ளியல்பிற்
றாங்கா வீகைச் சான்றோர் குழீஇய
காரணி செந்நெற் கழனியம் படப்பை
ஆரணி நெடுந்துறை ஆர்ப்பா கைக்கோன்
அரசர்க் கரசெனு முரைசால் பெருமையிற்
றாவில் வடபான் மொழிதலை மணந்த
தேவ னென்னுந் தென்திசை பெரும்பெயர்
மாவண் டமிழின் வாதுநெறி பயின்ற
சாவக நிலையோன் சாக்கிய குடாரன்
காதல் சார்ந்து மேதகப் புனைந்த
திருமலி பிண்டித் தெய்வ நாயகன்
அருமலர்ச் சேவடிக் கமர்ந்தன னணிந்த
தொன்மலர்க் கலம்பகத் தூய மாலை
பின்முறை யோதுநர் பழிச்சுந ரெல்லாம்
சேதியம் பெருநெறி சேர்குவர் விரைந்தே" [14]

**பதப்பொருள் :** வையக மடந்தை - பூவுலகமாகிய பெண்ணின், வாள் முகமாகிய - ஒளிபொருந்திய முகமாகிய. மெய்வளர் - உண்மை நிலைபெற்று வளருகின்ற. தொண்டையம் பதிக்கு - தொண்டை நாட்டின். வடாஅது - வடக்குப் பக்கத்தில். கன்னிகார்த்து - இளமைத் தன்மையை அழியாது காத்து. மன்னிய பெரும்புகழ் - நிலைத்த புகழையுடைய. பழியில் - குற்றமில்லாத. பெருங்குடி பெருமைவாய்ந்த குடிகள் நிரம்பிய. பையூர் கோட்டத்து - பையூர் என்னும் கோட்டத்தில். ஒழியாச்சீர்த்தியொடு - அழியாத புகழுடன். வழியறம் பயப்பினும் - வழிவழியாக அறமே கிடைப்பதாயினும். ஆங்கவை கருதா - அவற்றைப் பெரிதாக நினையாத. அன்புகொள் இயல்பில் - அன்பு செலுத்தும் இயல்பையுடைய. தாங்கா ஈகை - வரையாது வழங்கும். சான்றோர் குழீஇய - சான்றோர்கள் நிரம்பிய. காரணி செந்நெல் - மேகத்துக்கு அழகு செய்யும் செந்நெற்கதிர் நிறைந்த. கழனி - வயல்களையும். அம்படப்பை - அழகிய தோட்டங்களையும் கொண்ட. ஆரணி நெடுந்துறை - ஆரணி செல்லும் பெருவழியில் உள்ள. ஆர்ப்பாகைக் கோன் - ஆர்ப்பாகை என்னும் ஊருக்கு அரசன். அரசர்க்கு அரசெனும் - அரசர்களுக்கெல்லாம் அரசன் என்னும் உரைசால் பெருமையின் - புகழ்மொழிக்கேற்ற பெருமையுடையவன். தாவில் - தாழ்வில்லாத. வடபால் மொழிதலைமணந்த - வடமொழியைக் கற்றுத் துறைபோகிய. தேவன் என்னும் - உதீசித்தேவன் என்பவன். தென்திசைப் பெரும்பெயர் - தென்னிந்தியாவில் மிகச்சிறப்புடைய. மாவண்டமிழின் - சிறந்த வளம் பொருந்திய தமிழ்மொழியின். வாதுநெறி பயின்ற - தர்க்கம் செய்யும் அளவுக்கு பயின்றவன். சாவக நிலையோன் - இல்லத்தில் இருப்பவன். சாக்கிய குடாரன் - பௌத்தமதத்தை வெட்டுகின்ற கோடாரி போன்றவன். காதல் சார்ந்து - அன்பு மிகுந்து. மேதகப் புனைந்த - சிறப்பாக இயற்றிய. திருமலி - சிறப்பு நிறைந்த. பிண்டி - அசோக மரத்தின் கீழ் அமர்ந்த. தெய்வ நாயகன் -அருகதேவனின். அருமலர்ச் சேவடிக்கு - மலர் போன்ற சிவந்த அடிகளுக்கு. அமர்ந்தனன் அணிந்த - விருப்பமுடன் அணிவித்த. தொன்மலர்க் கலம்பக தூயமாலை - பழமை வாய்ந்த சொற்களாகிய மலர்களால் கட்டப்பெற்ற கலம்பகம் என்னும் தூய்மையான மாலையை, பலமுறை யோதுநர் - பலமுறை படிப்பவர். பழிச்சுநர் எல்லாம் - துதிப்பவர் எல்லாம். சோதியம் பெருநெறி - ஒளிபொருந்திய அழகிய முக்தி உலகை. சேர்குவர் விரைந்தே - விரைந்து அடைவர்.

**கருத்து :** உலகமாகிய பெண்ணின் முகம் தொண்டை நாடு, அதில் வடபாகத்தில் உள்ளது பையூர்க் கோட்டம். அது பழியற்ற உயர்ந்த குடி மக்களையுடையது. அக்கோட்டத்தில் உள்ளது ஆர்ப்பாக்கம் என்னும் ஊர். இவ்வூர் சான்றோர்கள் நிறைந்துள்ள ஊர். அச்சான்றோர்கள் 'புகழ் கிடைக்கும்' என்ற கைமாறு கருதாமல் கொடுக்கும் தன்மையுடையவர். அவ்வூரில் வாழ்ந்தவர் உதீசித்தேவர். இவர் வடமொழியும் தென்மொழியும் சிறப்பாகக் கற்றவர். இல்லற வாழ்வில் ஈடுபட்டவர். பௌத்த சமயத்தை எதிர்த்துப்

போராடியவர்: அப்படிப்பட்டவர் அருகதேவன் பாதங்களுக்குக் கலம்பகம் என்னும் இலக்கியத்தை அணிவித்தார். இதைப் படிப்பவர் அருகன் பாதங்களை அடைவர் என்பது கருத்து.

**அகச்சான்று :** திருக்கலம்பகம் 46 ஆம் பாடலில் உரையாசிரியரின் விளக்கவுரையில் 'இதனால் உதீசித்தேவர் தான் பெற்ற இன்பம் கூறப்பட்டது' என்று குறிப்பிடுகிறார். எனவே இச்செய்தியிலிருந்தும் இந்நூலின் ஆசிரியர் உதீசித்தேவர் என்பது பெறப்படுகிறது.

**நூலாசிரியர் காலம்**

திருக்கலம்பக நூலாசிரியராகிய உதீசித்தேவர் வாழ்ந்த காலம் பற்றிப் பல்வேறு அறிஞர்களும் பலவாறாகக் கூறுகின்றனர்.

பேராசிரியர் மது. ச. விமலானந்தம்[15] அவர்கள் உதீசித்தேவரின் காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர்.

"ஆசியவியல் நிறுவனக் கலைக்களஞ்சியமும்"[16] "தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியல் களஞ்சியமும்"[17] இதையே கூறுகின்றன.

"முனைவர் வ. சுப. மாணிக்கம்"[18] அவர்களும் முனைவர் ந.வீ. செயராமன்[19] அவர்களும் ந.சி. கந்தையாப் பிள்ளை[20] அவர்களும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர்.

ஆ. பழநிசுவாமி சிவாச்சாரியார் அவர்கள் 'உதீசித்தேவர் தம் மத நூல்களில் வரும் வடமொழிக் குறியீடுகளைக் கூடியவரை தமிழ் மொழியில் கூறியுள்ளார். ஆதலினாலும் மற்றும் நடையழகாலும் மேருமந்தர நூலாசிரியர் காலத்தினும் (கி.பி. 14-ஆம் நூற்றாண்டு) இவரது காலம் பல்லாண்டுகளுக்கு முன்னரென்பது கருதத்தக்கதாய் உள்ளது.[21] என்று கூறுகிறார்.

முனைவர் கமில். வி. சுவலபில், முனைவர் இ.ஜே. பிரில் ஆகிய இருவரும் தம்முடைய தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியம் என்ற ஆங்கில நூலில் 'உதீசித் தேவரின் காலம் கி.பி. 10 ? 14-15 ஆம் நூற்றாண்டு ?' என்று வினவி, திருக்கலம்பக நூலில் 110 பாடல்கள் உள்ளன என்றம், புத்த சமயத்தின் எதிர்ப்பு நூல் என்றும் கூறி கலம்பக நூல்களில் காலத்தால் முந்தியது என்றும் வையாபுரிப் பிள்ளை கி.பி. 10 ஆம் நூற்றாண்டு என்று கூறுவதுதான், உதீசித்தேவரின் காலத்திற்குப் பொருத்தமாகும் என்று கூறுகின்றார்கள்[22]

திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தம்முடைய தமிழ் இலக்கிய வரலாறு என்ற ஆங்கில நூலில் 'நந்திக்கலம்பகம் கலம்பக நூல்களில் காலத்தால் முந்திய முதல் கலம்பகம் என்றும், இதன் காலம் (கி.பி. 826-849) கி.பி 9 ஆம்

நூற்றாண்டு என்றும் அதே கால கட்டத்தில் உதீசித்தேவரின் திருக்கலம்பகமும் எழுதப்பட்டிருக்கலாம்'[23] என்றும் கூறுகின்றார்.

மேலும் திருக்கலம்பகம் 74, 75 ஆகிய பாடல்களில் இன்றைய மயிலாப்பூர், மயிலாபுரி என்ற சொல்லால் வழங்கப்பட்டிருக்கின்றது. இச்சொல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் வழக்கில் உள்ளதாக சோ. அருணாசல தேசிகர்[24] நந்திக் கலம்பகப் பதிப்பின் முன்னுரையில் கூறியுள்ளார்.

சமணசமயம் சார்ந்த உதீசித்தேவரின் திருக்கலம்பகம் போல் சைவசமயம் சார்ந்த நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் என்ற நூலும் உள்ளது. இவரது காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு. உதீசித்தேவரின் திருக்கலம்பகம் மக்களிடையேயும் மன்னர்களிடையேயும் பெரும்புகழ் பெற்றிருக்கலாம். அது கண்டு நம்பியாண்டார் நம்பியும் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் என்று அதே பெயரில் கலம்பகம் புனைந்திருக்கலாம். 'சீவகசிந்தாமணிக்கு மாறாகச் சேக்கிழார் பெரியபுராணம் செய்தது' என்ற தலைப்பில்

> "சிந்தாமணியிலே மகிழ்ந்த அரசரைச் சேக்கிழார் 'இது இம்மைக்குமாகாது மறுமைக்குமாகாது' என்று தெருட்டினார். ஆயின் 'இம்மைக்கும் மறுமைக்கும் ஆகும் கதை எது?' என்று அரசர் கேட்கவே, அது சிவகதையே என்று சொல்லி அமைச்சர் சேக்கிழார் பெரியபுராணம் பாடினார்"[25]

என்ற செய்தியை மு. அருணாசலம் அவர்கள் தம்முடைய 'தமிழ் இலக்கிய வரலாறு'[26] என்ற நூலில் கூறியுள்ளார். இதுபோலவே ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்திற்கு முன்பாகவே திருக்கலம்பகம் எழுதப்பட்டிருக்கலாம்.

ஆக, மேற்கண்ட செய்திகளை எல்லாம் நோக்கும்போது உதீசித்தேவரின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி அல்லது பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் என்பது இந்நூல் பதிப்பாசிரியர் கருத்து.

## உரையாசிரியர் வரலாறு

திருக்கலம்பக நூலின் உரையாசிரியர் அனந்ததேவர் என்னும் பெரியார். இவர் இந்நூலுக்குப் பதப்பொருளும், பொழிப்புரையும் எழுதியவர். இவர் தந்தையின் பெயர் சந்திரநாத தேவர். இவருடைய ஊர் நூலாசிரியர் பிறந்த ஆர்ப்பாக்கத்திற்கு அண்மையில் உள்ள கோலியநல்லூர். இவர்கள் பற்றியும், நூலாசிரியர் பற்றியும் கூறும் பழம் பாடல் பின்வருமாறு;

### நிலைமண்டில ஆசிரியப்பா

“மலர்தலை யுலகினோர் நிலையிரு ளகலவுந்
தகைபெறு நல்லறம் பகையொழிந் தொளிரவும்
பொன்னெழின் மன்னிய மின்னியன் மின்னெயின்
மூன்றுடன் பொதுளிய பிண்டிநன் னீழலில்
வீரத் தரிபரி பேரத் தாணிமிர்
கனகத் தாமரை யனகப் பொகுட்டி
னங்குலி நான்கிற் செங்கதிர் புரைய
வளங்காத் தரும வளக்காம் பியையப்
புக்கமும் மதியின் முக்குடை கவிய
முத்தணி பெருக வரித்திர ளசைய
மந்தர நிலநறை யுந்தா விரிய
வலரொளி யமரர்கண் மலர்மழை சொரியத்
துந்துபி யொலிபுவி யந்தர மலியத்
தேவர்கள் பலதுதி யோவிலர் புரிய
வெங்கண் வினைப்பகை தங்குத லொழிய
வனந்த சதுட்டய வினந்தலை யணையப்
பொலன்மலை போலச் சலனமொன் றின்றி
நிலைகடல் போலக் கலக்க மின்றி
யெற்றுமா ருகம்போற் பற்றொன் றின்றி
நலமுறு வான்போன் மலமொன் றின்றி
வீற்றிருந் தறநெறி சாற்றிய விமலன்
கனமா யிலகுஞ் சரண்டா மரையை
யூக்க முறநினைந் தியாக்கை யுறத்தாழ்ந்
தாக்க முறப்பல வாக்குறப் புகழ்ந்தே
யுத்தர திசைமுதல் வைத்த தேவப்பெயர்
பெற்றநல் லறிவோன் சொற்றவன் கலம்பக
மாலைப் பதப்பொருட் பாலையுந் தொகுத்த
பொழிப்பையும் விளக்கித் தழைப்பச் செய்த
ஞாலமேற் புகழுஞ் சீலமும் வளமும்
சாலவுந் செறிந்த கோலிய நல்லூர்ப்
பதியு மண்டர்தம் பதியு மேத்தித்

துதியார்ப் பாகை தொன்னக ரத்தையு
முடையான் செல்வமு முடையான் விளங்கு
நிலைபெறு மதிப்பெயர் தலைப்புணர் நாதன்
தவப்பேற் றாலுற் றவன்பு லவோர்
ம்னந்தனின் மகிழ்கவி யனந்தனென் பவனே" [27]

**பதப்பொருள்**

மலர்தலை யுலகினோர் - அகன்ற இடத்தையுடைய இப்பூவுலகில் உள்ளவர். நிலையிருள் அகலவும் - மனத்திலுள்ள மயக்கமாகிய இருள் அகலவும். தகைபெறு நல்லறம் - தகுதிபெற்ற நல்ல அறச்செயல்கள். பகை யொழிந்து ஒளிரவும் - பகையில்லாமல் சிறப்படையவும். பொன்னெழில் மன்னிய - பொன்போன்ற அழகு நிலைபெற்ற. மின்னியல் மின்னெயில் - மின்னல் போன்று ஒளி வீசுகின்ற மூன்றுடன் பொதுளிய - மும்மதில்கள் நெருங்கிய. பிண்டிநன் ·னீழலில் - அசோக மரத்தின் நிழலில். வீரத்தரிபரி பேரத் தாள்நிமிர் - வீரம் நிறைந்த சிங்கமும், குதிரையும் பொறிக்கப்பட்ட தண்டையுடைய. கனகத்தாமரை - பொற்றாமரை மலரின். அனகப் பொகுட்டின் - பாவமற்ற பீடத்தில். அங்குலி நான்கில் - நான்கு விரற்கடையளவில். செங்கதிர்புரைய - கதிரவனை ஒக்கும். வளங்காத் தரும வளக்காம்பியை - (ஒளிபொருந்திய) வளப்பமான தருமமாகிய காம்புடன் கூடிய. புக்க மும்மதியின் முக்குடைகவிய - முழுமதி போன்ற வட்டமான மூன்று குடைகள் மேலே நிழற்ற. முத்தணி பெருக - முத்துக்களாலான தொங்கல்களும் நிறைந்து. அரித்திரளசைய - பவளங்களாலான தொங்கல்களும் அசைய மந்தா நிலநறை யுந்தாவிரிய - குறிஞ்சி நிலத்தின் தேன்துளிக்க. வலரொளி அமரர்கள் - ஒளிபொருந்திய தேவர்கள். மலர்மழை சொரிய - பூக்களை மழைபோல் தூவ. துந்துபியொலி - தேவ வாத்தியமாகிய துந்துபியின் ஒலி. புவிஅந்தரம் மலிய - பூவுலகிலும், வானுலகிலும் நிறைய தேவர்கள் இடைவிடாது பலவகையாகப் போற்ற. வெங்கண் வினைப்பகை தங்குதல் ஒழிய - கொடிய வினையாகிய பகை நில்லாதொழிய. அனந்த சதுட்டய இனந்தலையணைய - அனந்தஞானம், அனந்ததரிசனம், அனந்தவீரியம், அனந்தசுகம் என்னும் நான்கு குணங்களும் பொருந்த. பொலன் மலை போலச் சலனமொன்றின்றி பொன்னாலான மலைபோல (மேருமலைபோல) நிலையில் திரியாது. நிலைகடல் போலக் கலக்கமின்றி - நிலைத்த அலையற்ற கடல் போல சலனமின்றி யேற்று மாருகம் போல் பற்றொன்றின்றி - ஆடை முதலாக எந்தப்பொருள் மீதும் பற்றில்லாமல். நலமுறு வான்போல் மலமொன்றின்றி - தெளிவான வானம்போல் மாசு மறுவின்றி வீற்றிருந்து - பெருமையுடன் அமர்ந்து. அறநெறி சாற்றிய விமலன் - அறம் உரைக்கின்ற குற்றமற்ற அருக தேவனின். கனமாயிலகும் சரண்டாமரையை - விளங்குகின்ற தாமரைப்பூ போன்ற பாதங்களை. ஊக்கமற நினைந்து - ஊக்கத்தோடு நினைத்து.

யாக்கையுறத்தாழ்ந்து - உடல் கீழே படுமாறு வணங்க. ஆக்கமுற - நன்மை நிறையுமாறு. பல வாக்குறப் புகழ்ந்து - பல வகையான சொற்களால் புகழ்ந்து. யுத்தர திசைமுதல் - வடக்கு திசையை முதலாகக் கொண்ட உதீசி என்றும். வைத்த தேவர்ப்பெயர் - தேவர் என்னும் பெயரையுடைய. பெற்றநல்லறிவோன் - நல்லறிவாளனாகியவன். சொற்ற - பாடிய. வன்கலம்பகமாலை - திருக்கலம்பகம் என்னும் நூலுக்கு. பதப்பொருட் பாலையும் - பதவுரையையும். தொகுத்த பொழிப்பையும் விளக்கி - பொழிப்புரையையும் விளக்கமாக எழுதி. தழைக்கச் செய்த - இந்நூல் சிறப்படையும்படி செய்தவன். ஞாலமேற் புகழும் சீலமும் வளமும் - உலகத்தில் புகழும், ஒழுக்கமும் செல்வமும். சாலவும் செழித்த - மிகுதியும் நிறைந்த. கோலியநல்லூர் பதியும் - கோலியநல்லூர் என்னும் ஊரையும். அண்டர்தம் பதியும் - தேவர்கள் ஊராகிய அமராவதியும். ஏத்தித்துதி - போற்றித்துதிக்கின்ற. ஆர்ப்பாகைத் தொன்னகரத்தையும் உடையவன் - ஆர்ப்பாக்கம் என்னும் பழமையான நகரத்தை உடையவனும். செல்வமும் உடையான் - செல்வத்தை உடையவனுமாகிய, விளங்கு நிலைபெறு - நிலைபெற்று விளங்குகின்ற. மதிப்பெயர் தலைப்புணர்நாதன் - சந்திரன் என்னும் பெயரை நாதன் என்பதனுடன் சேர்த்து சந்திரநாதன் என்னும் பெயரை உடையவனின். தவப்பேற்றாலுற்றவன் - தவத்தாலுதித்தவனும். புலவோர் மனந்தனில் மகிழ்கவி - புலவர்கள் மனத்தில் நினைத்துமகிழக்கூடிய தன்மையுடையவனும் ஆகிய. அனந்தனென்பவனே - அனந்தன் என்னும் பெயரையுடையவன் ஆவான்.

**கருத்துரை :** அருகதேவர் இருள் அகல, அறம் பெருக, பகையொழிய பிண்டி நீழலில் தாமரை மலரின் பொகுட்டில் முக்குடை நிழற்ற, தேவர்கள் மலர்மழை சொரிய, துந்துபி ஒலிக்க, தேவர்கள் துதிக்க சலனம், கலக்கம், பற்று, மலம் எதுவும் இன்றி வீற்றிருந்து அறநெறி சாற்றியவர். அவருடைய பாதங்களை வாழ்த்திக் கலம்பகம் எழுதியவர் உதீசித்தேவர். அதற்கு உரை எழுதிச் சிறக்கச் செய்தவர் தேவர்களும் போற்றும் ஆர்ப்பாக்கம் நகரைச் சேர்ந்த கோலி யநல்லூர் என்னும் ஊரினரான சந்திரநாதர் எனபவரின் மகனான அனந்ததேவர் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

**உரையாசிரியர் காலம்**

திண்டிவனம் அ. சம்பந்தராவ் என்பவர் 20.03.1935-இல் திருக்கலம்பக நூல் (சில பாடல்களுக்குப் பொழிப்புரையுடன்) வெளியிட்டுள்ளார். அதன் முன்னுரையில் திருக்கோவலூர் வித்துவான் திரு. ஆ பழனி சுவாமி சிவாச்சாரியாரால் 02.03.1935-இல் எழுதப்பட்ட 'காலம்' என்ற தலைப்பில்,

> "இந்நூலாசிரியர் காலமும் உரையாசிரியர் காலமும் இன்னவை
> என விளங்கவில்லை ஊர் ஒன்றாயிருத்தலால் இருவரும்
> ஒரே காலத்தவராகவோ சற்று முன்பின்னாகவோ
> இருக்கலாமென்று ஊகிக்க இடமிருக்கிறது"[28]

என்று கூறுகின்றார். எனவே நூலாசிரியரின் காலத்துக்குச் சற்றுப் பின்னால் உரையாசிரியர் தோன்றியிருக்கலாம் என்பது இந்நூல் பதிப்பாசிரியர் கருத்தாகும்.

## திருக்கலம்பகமும் திருக்குறளும்

உலகமக்களின் நலன்கருதி சமணசமயக் கொள்கைகளை விருசபதேவராகிய ஆதிபகவன் முதன்முதலில் உருவாக்கினார் என்றும், அவருக்குப் பின் வந்த தீர்த்தங்கரர்கள் அக்கொள்கைகளை மக்களிடம் போதித்தார்கள் என்றும் சமண நூல்கள் கூறுகின்றன.

இக்கருத்து பற்றியே திருக்கலம்பக ஆசிரியரும்,

"மன்னியபே ருலகனைத்தும்
நின்னுள்ளே நீயொடுக்கினை
நின்னின்று நீவிரித்தனை
நின்னருளி னீகாத்தனை
யெனவாங்கு
ஆதிபகவனை யருகனை
மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே". (பாடல் - 109)

என்று பாடுகின்றார்.

இப்பாடலடிகளுக்கு, நிலைபெற்ற உலகம் முழுவதும் உனக்குள்ளே நீ ஒடுக்கினாய், உன்னிடத்தினின்று நீ தெரிவித்தாய். உன்னருளினாலே நீ காத்தாய் என்று சொல்லி ஆதிபகவனை அருகபரமனை மிகுந்த துன்பமானது நீங்க யாம் பலவாகத் துதிப்போம்' என்று உரை கூறப்படுகிறது.

இக்கருத்தை ஒட்டியே திருவள்ளுவர் என்னும் குந்தகுந்தாச்சாரியார்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (திருக்குறள்-1) என்றார்.

இக்குறட்பாவிற்கு திரு அரங்கநாத முதலியார் அவர்கள் 'எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல் உலகம் ஆதிபகவனை முதலாக உடையது' என்று விளக்கம் தருகிறார்.[29]

இதேபோல் திருக்கலம்பகப் பாடல்களின் கருத்துக்களுக்கு ஏற்பத் திருக்குறள் பாடல்களின் கருத்துக்கள் ஒப்புமையாக வருவதைப் பின் வருமாறு காணலாம்.

**வாலறிவன்**

தொன்மறையை விரித்தோய்நீ
துருநயங்கள் அழித்தோய் நீ
நன்னெறியை வகுத்தோய் நீ
நமனணுகாக் கதியோய் நீ (பாடல்-2)

என்ற திருக்கலம்பகப் பாடலடிகளுக்குக் 'கேவல ஞானத்தை உடையவன் அருகன். அவன் பழமையான வேதங்களைச் சொன்னவன். ஏகாந்த வாதங்களைக் கெடுத்தவன், அனேகாந்த வாதத்தை வகுத்தவன், காலனும் நெருங்க முடியாத முக்தி உடையவன். அவனை நாம் துதிப்போம்' என்பது பொருளாகும். திருக்குறளில்,

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (குறள்-2)

என்ற குறட்பாவிற்கு அ. சிம்ம சந்திரஜைன் சாஸ்திரியார் அவர்கள், 'ஒருவன் நூல்கள் பலவும் கற்று அந்நூற் பொருளில் தெளிவும் திட்பமும் உடையவனாயினும், கேவல ஞானத்தையுடைய இறைவனது திருவடிகளைத் தோத்திரம் செய்யாது விட்டால் அவனுக்கு ஒரு பயனுமில்லை'[30] என்று உரை கூறுகின்றார்.

இருநூல்களும் வாலறிவன் கேவல ஞானத்தை உடையவன் என்பதில் ஒன்றுபட்டு நிற்கின்றன.

**தாமரைப் பூமேல் நடந்தவன்**

"வாகன மாகம் பூத்த மாமல ராக வேகு
மேகனை . . . . . . . . . . . . ." (பாடல் - 21)

என்ற திருக்கலம்பகப் பாடலடிகளுக்கு, 'ஆகாயத்திலுண்டான பெருமை பொருந்திய தாமரைப்பூ வாகனமாக நடக்கும் அருகபரமனை . . .' என்று உரை காணப்படுகிறது.

அடுத்து, "ஏடவிழு நளினமிசை யேகுமவர் அடியிணையே" (பாடல் - 54)

என்ற திருக்கலம்பகப் பாடலடிக்கு 'இதழ்விரிகின்ற தாமரைப் பூமேல் நடக்கின்றவராகிய அருகருடைய இருபாதங்களும்' என்று பொருள் காணப்படுகிறது.

இப்பாடல்களின் கருத்தை ஒட்டியே திருக்குறளிலும், கூறப்படுகிறது.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (திருக்குறள் - 3)

என்ற குறட்பாவிற்குத் 'தாமரை மலரின் மீது நடந்தவனது பெருமைகள் சான்ற திருவடியை அடைந்தவர்கள் இவ்வுலகின் உச்சியிலுள்ள முக்தியுலகில் நிலையாக வாழ்வார்கள்' என்பது பொருளாகும்.[31]

ஆக மேற்கண்ட திருக்கலம்பகப் பாடல்களுக்குத் திருக்குறளின் கருத்து பொருந்தி வருவதை அறியலாம்.

**வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்**

"வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனடி
பூண்டு கிடந்தாற் புறத்திறுத்த வெங்கூற்றம் போகும்" (பாடல்-59)

என்ற திருக்கலம்பகப் பாடலடிகளுக்கு 'விருப்பும், வெறுப்பும் இயல்பாகவே இல்லாத அனந்த வீரியனாகிய அருகனுடைய பாதங்களை மனத்திற்கொண்டு, திரிகரணங்களையும் அடக்கியிருந்தால் பக்கத்தில் வந்த வெப்பமான வினையாகிய கூற்றம் போகும்' என்பது பொருளாகும். திருக்குறளில்,

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. (குறள் - 4)

என்ற குறட்பாவிற்குப் பரிமேலழர் 'ஒரு பொருளையும் விழைதலும், வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா'[32] என்று உரைகூறுகின்றார்.

இரு நூல்களின் கருத்துக்களும் ஒரே தன்மையில் அமைந்துள்ளது அறியத்தக்கது.

**காதி, அகாதி என்னும் இருவினை**

"இரியவிரு வினைப்பகைவ ரிகல்வாட்டி யைம்புலவெங்
கரியகதக் கடக்களிறு காய்ந்ததுநின் னருளாமோ" (பாடல்-2)

என்ற திருக்கலம்பகப் பாடலடிகள் 'காதி, அகாதி என்னும் இருவினை களாகிய பகைவர்கள் வலியைக் கெடுத்துப் பஞ்சவிசயங்களான வெப்பமாகிய கோபமும் மதமுமுடைய கருத்த யானைகளைக் கொன்றது நினது கருணையாகுமோ?' என்று கூறுகிறது.

அடுத்து,

"மறுவில் திருவறம் அமிர்த அருவியின்

மயல்கொள் இருவினை மண்ணவே" (பாடல் - 10)

என்ற பாடலடிகளுக்கு 'அருக பரமேட்டியினுடைய தாமரைப் பூப்போன்ற பாதங்களை அடைந்து ஒரு குற்றமும் இல்லாத செல்வத்தைத் தரும் சின தருமமாகிய நீரையுடைய ஆற்றிலே பந்தித்த அழுக்காகக் கொண்ட இருவினையுங் கழுவினால் . . . . . நீங்காத முச்சோதி உங்களையடையும்' என்று பொருள் கூறப்படுகிறது.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (திருக்குறள் - 5)

என்ற குறட்பாவின் உரையாக 'உண்மையாய் இருக்கின்ற இறைவனது புகழை விரும்பி வணங்கி வழிபாடு செய்கின்றவர்களுக்கு காதி வினை, அகாதிவினை என்னும் நல்வினை, தீவினையாகிய இருவினைகளும் வந்து சேரா' என்று பொருள் கூறப்படுகிறது.[33]

## அறவாழி அந்தணன்

அறவாழி அந்தணன் என்பதற்குத் தருமச் சக்கரத்தை உடைய அருகதேவன் என்று சமண நூல்கள் பொருள் கூறுகின்றன. திவாகரம் அறவாழி அந்தணன், அருளாழி வேந்தன் என்றும், பிங்கலம், சூடாமணி நிகண்டுகள் அறவாழி வேந்தன் என்றும், கயாதர நிகண்டு அறவாழி அண்ணல் என்றும் கூறுகின்றன.

திருக்கலம்பகத்தில்,

"பேரறங்கொணேமி கொண்டுவென்ற சோதியெங்க ளாதியே"
(பாடல்-25)

என்ற பாடலடிக்குப் 'பெரிதாகிய தருமச் சக்கரத்தைத் தன்னிடத்திற் கொண்டு வலியையுடைய கொடுமையான இருவினையாகிய பகைவர் கருகிச் சிந்தவென்ற சோதியானவர் எங்கள் சுவாமி' என்று பொருள் கூறப்படுகிறது.

அடுத்து,

". . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . உலகமேழும்

வந்திறைஞ்ச வருளாழி வலங்கொண் டேத்துஞ்

சிகரமா மணிநீல வண்ண . . . . . . . . . ." (பாடல் - 32)

என்ற பாடலடிகளுக்கு 'எழுவகை உலகமும் ஆனந்த மடைந்து வணங்க, தருமச் சக்கரத்தை வலது பக்கத்தில் கொண்டு தாங்குகின்ற சிகரத்தையுடைய பெருமை பொருந்திய அழகிய நீலநிறம் பொருந்திய' என்பது பொருளாகும்.

அடுத்து,

'சயங்கொ ளாழியங் கடவுளே' (பாடல் - 36)

என்ற பாடலடிக்கு 'வெற்றியைக் கொண்ட தருமசக்கரத்தையுடைய அழகிய கடவுளே' என்பது பொருளாகும்.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது" (திருக்குறள் - 8)

என்ற குறட்பாவிற்கு 'அறமல்லாத மறத்தின் பயனாகிய துன்பக்கடலை நீந்திக் கரையேறுதல் என்பது, அறத்தின் பயனான இன்பக்கடலாகிய உயிர்களிடத்து அருளுடையவனாகிய பகவனுடைய அடிகளைச் சேர்ந்தவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு அரிதாகும்'[34] என்ற பாரதிதாசன் உரையும் இக்கருத்தை ஒட்டியே அமைந்துள்ளது.

**காலனைக் கடந்தவர்**

'கொலைமாறாக் கொடியவெங் கூற்றினையுங் குதித்தனையே'
(பாடல் - 2)

என்ற திருக்கலம்பகப் பாடலடிக்கு, கொல்லும் தொழில் நீங்காத கொடுமையான வெப்பமுடைய காலனையும் கடந்தவர் அருகன் என்பது பொருளாகும்.

இதே கருத்துக் கொண்ட,

"கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு"

என்ற குறட்பாவிற்கு தவத்தின் வலிமையால் கேவல ஞானத்தின் பெருமையை அடைந்தவர்க்குக் காலனைக் கடத்தலும் சித்தியாகும் என்று பொருள் கூறப்படுகிறது.[35]

ஆக, மேற்கண்ட திருக்கலம்பகப் பாடல்களின் கருத்துக்கு பொருந்த திருக்குறள் பாடல்கள் அமைந்து வருவதைக் காணலாம். இவை போன்று இன்னும் பல இடங்களில் ஒன்றுபட்டு வருவது அறியத்தக்கதாகும்.

**திருக்கலம்பகமும் சைவமும்**

சமண சமய நூலாகிய திருக்கலம்பகத்தில் அருகதேவனின் திருமுகங்கள், திருக்கயிலாயமலை, சடைமுடி, காலனைக் கடிந்தது, காமனை வென்றது. முப்புரம் எரித்தது போன்ற பல செய்திகள் வருகின்றன. இச்செய்திகள் அனைத்தும் சைவசமயக் கடவுளான சிவபெருமானுக்கும் கூறப்படுகின்றன.

### திருமுகங்கள்

திருக்கலம்பகத்தில் அருகதேவனின் ஆயிரத்தெட்டு திருநாமங்களில் சத்தியோசாதன், வாமன், அகோரன், ஈசானன், தற்புருடன் என்ற ஐந்து பெயர்களும் உள்ளன.

"கோதில்புகழ்ச் சத்தியோ சாதன் வாம
னகோர னீசானன் தற்புருட னென்று" (பாடல் - 50)

என்ற பாடலடிகள் இவ்வைந்து பெயர்களையும் சுட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். அகோரம்[36], ஈசானம்[37], தற்புருடம்[38], வாமம்[39], சத்யோசாதம்[40] என்ற ஐந்து திருமுகங்களை யுடையவன் என்பதால் சிவனுக்கு இப்பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

### திருக்கயிலாயம்

கயிலையங்கிரி என்னும் கயிலாயமலை இமயமலைக்கு வடபுறத்தில் திபேத் நாட்டில் உள்ளது. இதற்கு வெள்ளியங்கிரி என்ற பெயரும் உண்டு. சமணர்களுக்கும் சைவர்களுக்கும் இம் மலை புனிதமான இடமாகக் கருதப்படுகிறது.

சமண சமய முதல் தீர்த்தங்கரரான ஆதிநாதர் இக்கயிலாய மலைமேல் தான் வீடுபேறடைந்தார் இது பற்றியே,

"கயிலாய மெனுந்திரு மலைமே லுறைகின்றவர்" (பாடல் - 75)

என்ற திருக்கலம்பகப் பாடலடி 'கயிலாய மென்று சொல்லப்படும் திருமலை மீது வாழ்கின்றவர் அருகப்பெருமானாகிய ஆதிநாதர்' என்று கூறுகின்றது.

அடுத்து, "போக்கறு சுடர்வெள்ளி
மாக்கயிலை மிசைநாப்பண்" (பாடல் - 110)

என்ற பாடலடிகள் 'குற்றமற்ற பிரகாசிக்கின்ற வெள்ளியாலாகிய பெருமை பொருந்திய கயிலாயமலை உச்சியின் இடைப்பகுதியில் உறைகின்றவர் ஆதிநாதர்' என்று கூறுகின்றது.

சைவ அடியார்களும் தங்கள் இறைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கயிலாய மலைக்குச் சென்றதாகக் கூறப்படும் பாடல்கள் திருத்தொண்டர் புராணத்தில் பல இடங்களில் வருகின்றன.

திருநாவுக்கரசர் புராணத்தில் வரும்,

"ஆளு நாயகன் கயிலையி லிருக்கைகண் டல்லால்
மாளு மிவ்வுடல் கொண்டுமீ ளேனென மறுத்தார்"[41] (பாடல் 366)

என்ற பாடலில் திருநாவுக்கரசர் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் காண்பதற்காகச் சென்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு ஆளாகியும் கயிலையைக் காணாமல் திரும்பமாட்டேன் என்று உடல் நோகத் துன்புற்று ஊர்ந்த செய்தி பெறப்படுகின்றது. அடுத்து, சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் வரும்,

"இந்நிலைமை யுதியர்பிரா னெம்பிரான் வன்றொண்டர்
பொன்னிவள நாடகன்று மகோதையினின் மேற்புகுந்து
மன்னுதிருக் கயிலையினின் [1]மதவரைமே லெழுந்தருள
முன்னர்[2]வயப் பரியுகைக்குந் திருத்தொழில்பின் மொழிகின்றாம்[42]
(பாடல் - 174)

என்ற பாடலில் சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் முறையே யானைமீதும், குதிரை மீதும் திருக்கயிலாயம் செல்லுகின்ற செய்தி இடம் பெறுகிறது.

இதுபோல் சைவ புராணங்களில் பல பாடல்கள் கயிலாய மலை பற்றிக் கூறுகின்றன. இப் பாடல்களின் கருத்தைப் பார்க்கும்போது சமண சமயத்தவரும், சைவ சமயத்தவரும் கயிலாய மலையைத் தங்கள் கடவுள் வீற்றிருக்கும் புனித இடமாகக் கருதினர் என அறியலாம்.

**சடைமுடி :**

சமண சமய முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் இவர் சடைமுடியுடன் இருந்தார் என்பதற்கான பாடல்கள் திருக்கலம்பகத்தில் காணப்படுகின்றன.

"ஆலநெடு நிழலமர்ந்தனை
காலமூன்று முடனளந்தனை
தாழ்சடை முடிச்சென்னிக்
காசறுபொன் னெயிற்கடவுளை' (பாடல் - 110)

---

1. மதவரை - மதங்கொண்ட மலைபோன்ற யானை.
2 வயப்பரி - வெற்றியுள்ள குதிரை

இப்பாடலில் ஆதிநாதரைக் குறிப்பிடும்போது 'ஆலமரத்தினுடைய மிகுந்த நிழலமர்ந்தவனே, முக்காலத்தையும் ஒரு தன்மையாக வளர்த்தவனே, பொருந்திய சடையை முடித்த குற்றமற்ற பொன்னாலாகிய மதிலையுடைய கருத்தனே' என்று உதீசித்தேவர் பாடுகின்றார்.

அடுத்து

"தொடர்படு சடையுட னிருந்து தோகையர்க்கு
இடர்படு மனத்தவ ரிறைமை கேட்பரோ" (பாடல் - 89)

என்ற பாடலடிகளுக்குத் 'தொடர்ச்சிப்பட்ட சடையுடனே வீற்றிருந்து மாதர்களுக்குத் துன்பப்படும் மனத்தவருடைய சுவாமித்துவத்தை ஒருவர் சொல்லக் கேட்பார்களோ!' என்று உரை கூறப்படுகிறது.

இதேபோல் சிவபெருமானுக்கும் சடைமுடி உண்டு. சைவர்களும் இவரை அன்போடு சடையன் என்றே அழைத்து வழிபடுகின்றனர்.

பெரியபுராணத்தில் குங்கிலியக்கலய நாயானார் புராணத்தில்,

"அடைவுற வொடுக்கி எல்லாம் அயர்த்தெழு மன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர் தமக்கொப் பில்லார்"[43]
(பாடல் - 13)

என்ற பாடலடிகளிலும் 'வயிலார் நாயனார் புராணத்தில்'

"நீராருஞ் சடையாரை நீடுமன வாலயத்துள்"[44] (பாடல் - 10)

என்ற பாடலடியிலும் சிவபெருமானைச் சைவ அடியார்கள் சடையன் என்றே அழைக்கின்றனர். இவ்வாறு பெரியபுராணத்தில் சுமார் 282 இடங்களுக்கு மேலும் தேவாரத்தில் 899 இடங்களுக்கு மேலும் சடையன் என்ற சொல்லாட்சி சிவபெருமானைக் குறித்து வருகின்றது.

இவ்வாறாகச் சமணர்களின் அருகதேவரும், சைவர்களின் சிவபெருமானும் சடைமுடி தரித்தவர்கள் என்பதை மேற்கண்ட பாடல்களின் மூலம் அறியலாம்.

**காலனைக் கடிந்தவர்**

அருக தேவர் காலனைக் கடிந்தவர். இதனால் அவருக்குப் பிறவாநிலை கிடைத்தது என்று திருக்கலம்பகம் பல பாடல்களில் கூறுகின்றது.

"கொலைமாறாக் கொடியவெங் கூற்றினையுங் குதித்தனையே"
(பாடல் - 2)

என்ற பாடலடி 'கொல்லுந்தொழில் நீங்காத கொடுமையான வெப்பமுடைய காலனையும் கடிந்தாய்' என்று கூறுகின்றது.

அடுத்து,

"கோறல் மாற்றி யுதைப்பது கூற்றையே" (பாடல் - 39)

என்ற பாடலடி 'கொல்லுதலை நீக்கி காலாலுதைப்பது காலனையே' என்று கூறுகின்றது.

என்றும்,

"கோள்வலிய கொடுங்கூற்றைத்
தாள்வலியின் விழவுதைத்தனை (பாடல் - 110)

என்ற பாடலடிகள் 'கூற்றத்தின் பலத்தையுடைய கொடுமையான காலனை முயற்சி வலியால் கெட உதைத்தவனே' என்று கூறுகின்றது.

இதே போல் சைவ நூலாகிய தேவாரத்தில் சிவபெருமான் காலனை வென்றவர் என்ற கருத்துபட அமைந்த பாடல்கள் 145 க்கு மேல் வருகின்றன. சான்றாக, திருஞான சம்பந்தர் தேவாரத்தில்,

"காலனைக் கழலால் உதைத்து ஒருகாமனைக் கனல் ஆகச் சீறிமெய்"[45]
(பாடல் - 2036) என்றும்,

"காலனை ஓர்உதையில் உயிர்வீடுசெய் வார்கழலான்"[46]
(பாடல் - 3450) என்றும்,

திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

"காலனைக் காலால் காய்ந்த கடவுள் தன்னை"[47] (பாடல் - 6591)
என்றும்,

சிவபெருமான் பக்தர்களைக் காப்பதற்காகக் காலனை வென்ற செய்தி கூறப்படுகின்றது.

ஆக, காலனை வென்ற செயலில் அருகதேவனும், சிவபெருமானும் ஒன்றுபட்டு நிற்பதை மேற்கண்ட பாடல்களின் வழி அறியலாம்.

**காமனை வென்றது**

அருகதேவன் நம்மிடமுள்ள காமம் என்ற குற்றத்தை நீக்குவதற்காக காமனை வென்றார் என்று கூறுகின்றது திருக்கலம்பகம்.

கண்மூன்று தோன்றியிகல் காமனுடல் பொடியாகக் கனன்றாய்த் தூய
(பாடல் - 38)

என்ற பாடலடி 'கேவலஞானமாகிய மூன்றாவது கண்ணைத் தோன்றச் செய்து வலிபொருந்திய மன்மதனுடைய தேகம் நீறாகக் கோபித்தாய்' என்று கூறுகிறது.

அடுத்து, "வேக வெங்கணைக் காமனைச் செறா
மெய்யெலாமுடன் றழுவு கேவல . . . ." (பாடல் - 40)

என்ற பாடலடி 'வேகம்பொருந்திய வெப்பமான பாணங்களையுடைய மன்மதனைக் கோபித்துத் தேகமெல்லாம் ஒரு தன்மையாகத் தழுவுகின்ற முக்தி' என்று கூறுகின்றது.

அடுத்து,

"சிலைவயங்கு தோளனங்கன் றிறலழித்த
விசயமென்னோ விசையு மாறே" (பாடல்-47)

என்ற பாடலடி 'கரும்பு வில்லானது விளங்குகின்ற கையையுடைய மன்மதனது வலியைக் கெடுத்த செயல் எப்படிப் பொருந்தும்' என்று கூறுகின்றது. அடுத்து,

"பிரமனே காமனைவெந் கண்ட வென்றிப்
பெருமானே . . . . . . (பாடல் - 80)

என்ற பாடலடி 'பிரமனே, மன்மதனைச் சாய்த்த வெற்றியையுடைய பெருமானே' என்று கூறுகின்றது.

சைவநூலாகிய தேவாரத்தில் சிவபெருமான் கரும்புவில் நாயகன் காமனை அழித்த செய்தி 82 இடங்களுக்கு மேல் காணப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில்,

"கன்றிய காமனையும் உருளக் கனல் வாய் அலறி
பொன்ற முனிந்த பிரான்"[48] (பாடல் - 3455) என்றும்,

திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

"காமனை அன்று கண்ணால் கனல் எரிஆக நோக்கி"[49]
(பாடல் - 4534) என்றும்,

சுந்தரர் தேவாரத்தில்,

"காமன் பொடியாக் கண்ஒன்று இமைத்த"[50] (பாடல் - 8196) என்றும்

காமனை அழித்த செய்திகள் கூறப்படுகின்றன.

இவ்வாறு காமனை அழித்த செயலில் அருகதேவரும், சிவபெருமானும் ஒன்றுபட்டு நிற்பதை மேற்கண்ட பாடல்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

**முப்புரம் எரித்தது :**

அருகதேவன் முப்புரம் எரித்து அழித்தார் என்றும், அம்முப்புரமாவன காமம், வெகுளி, மயக்கம் என்னும் மும்மலம் என்றும் திருக்கலம்பகம் கூறுகின்றது.

'இருவினை யிரிய மூவரண் முருக்கிய' (பாடல்-17)

என்ற பாடலடி 'ஒப்பற்ற இருவினைகளும் ஓட மும்மலங்களைக் கெடுத்த ஒப்பில்லாதவன்' என்று கூறுகின்றது.

அடுத்து, "அரணங் கொடிய மதின்மூன்று
அழியக் கனன்றீர் அன்றுள்ள" (பாடல் - 37)

என்ற பாடலடிகள் 'காவலாகிய கொடுமையையுடைய ஆவரண்ங்களான முக்குற்றமும் கெடக் கோபித்தீர்' என்று கூறுகின்றது.

இதேபோல் சைவசமயக் கடவுளான சிவபெருமானும் முப்புரத்தை எரித்து அழித்தார் என்றும், முப்புரம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குற்றங்கள் என்றும் சைவ நூல்கள் கூறுகின்றன.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில்,

"சிலையினால் முப்புரம் தீயெழச் செற்றவன்"[51] (பாடல் - 3082)

"சிலைதனால் முப்புரம் செற்றவன்"[52] (பாடல் - 3114)

"கணையினால் முப்புரம் செற்றவர்"[53] (பாடல் - 3247)

என்ற பாடலடிகளைச் சான்றாகக் காட்டலாம்.

முப்புரம் என்பது மூன்று கோட்டைகள் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் முப்புரம் என்பது மும்மலம் என்று தத்வார்த்தம் கூறுகிறது. இதுபற்றியே திருமூலரின் திருமந்திரமும்,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே" (திருமந்திரம் பாடல்- 343)

என்று கூறுகிறது இதனால் முப்புரம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் என்று தெரிகிறது. எனவே, சிவபெருமான் முப்புரம் அழித்தார் என்பதற்கு ஆன்மாக்களிடம் பொருந்தியுள்ள மும்மலங்களை அழித்தார் என்று பொருள்கொள்வது பொருத்தமாக இருக்கும். அருகதேவன் முப்புரம் அழித்தார் என்பதற்கு காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் அழித்தார் என்பது பொருளாகும். சமண சமயக் கொள்கைப்படி ஒவ்வொரு உயிரும் தம்மிட்முள்ள வினையைத் தானே போக்கிக் கொள்ளவேண்டும். எனவே, அருகதேவன் பிறரிடமுள்ள இக்குற்றங்களை அழிக்கமாட்டார் என்று சமண நூல்கள் கூறுகின்றன.

ஆக, முப்புரம் எரித்த செயலில் இரு சமயக் கருத்துக்கும் ஒற்றுமை உள்ளது போலக் காணப்பட்டாலும், அடிப்படையான தத்துவக் கருத்தில் மாறுபாடு உண்டு என்பது அறியத்தக்கது.

**கமடன்**

திருக்கலம்பகத்தில் 'நற்செய்கை இல்லாத வலிமைபொருந்திய கமடன்' என்றும், 'கபடத்தினாலும் கோபிக்கின்ற வைரத்தினாலும் பகைகொள்ளும் வலி யையுடைய கமடன்' என்றும் இரு இடங்களில் 'கமடன்' பற்றிய செய்தி வருகிறது

"அறனிலடல்கெழு கமடனக்ரம சண்டத்துட் குறக்கனன்றெறி"

(பாடல் - 35)

வஞ்சத் தினினழல் வேரத் தினினிகன்
மானக் கமடன் முன் . . . . . . . . . (பாடல் - 52)

என்ற பாடலடிகள் கமடன் பற்றிக் கூறுகின்றன.

கமடன் பற்றி அபிதான சிந்தாமணி என்னும் நூல் விநாயகரைப் பிள்ளைப் பருவத்தில் கொல்ல வந்த 'கமடாசுரன்' என்பவன் அவராலே கொல்லப்பட்டான் என்று கூறுகிறது.

திருக்கலம்பகம் காட்டும் 'கமடன்' பற்றிய கருத்தும் அபிதான சிந்தாமணியின் 'கமடன்' பற்றிய கருத்தும் ஒப்புநோக்கத்தக்கன.

இதுபோல் ஓங்காரம், முக்கண்ணன், சிவகதி, கந்தகுடி போன்ற சொல்லாட்சிகள், சமணம், சைவம் ஆகிய இரு சமயங்களிலும் ஒரே பொருளில் பயன்படுத்துவது ஒப்புநோக்கத் தக்கதாகும்.

**திருக்கலம்பகமும் பௌத்தமும்**

திருக்கலம்பக ஆசிரியர் உதீசித்தேவரைப் பற்றிக் கூறப்படும் பழம்பாடலில் "சாவக நிலையோன் சாக்கிய குடாரன்" என்ற அடி

காணப்படுகிறது. இதற்குப் பொருள் 'இல்லற நெறியில் இருந்த இவர் புத்த சமயத்தை வெட்டும் கோடாரி போன்றவர்' என்பதாகும். இச்செயலின் தாக்கம் இக்கலம்பகத்தில் பல இடங்களில் பேசப்படுகின்றது.

"முன்னைப் பிறப்பெண்ணில் பல்கோடி யெல்லா
முயன்றின்று பெற்றேன் முதற்போதி யென்றே
பின்னைப் பிறந்துற்ற யானில்லை யென்னும்
பெரும்பித்த ரோபுத்த ராவார் தெளிந்தீர்" (பாடல்-67)

என்ற பாடலில் 'முன்னே யான்பிறந்த பிறப்பினை எண்ணுங்கால் பலகோடி சனனத்திலும் எல்லா வினைகளையும் செய்து அனுபவித்து இப்போது மதிஞானி என்னும் பெயரை அடைந்தேன் என்று சொல்லிப், பின்பு உலகிற் பிறந்து ஞானத்தை அடைந்த நானே இல்லை என்று சொல்லும் பெரிதாகிய பித்தமுடையவரோ புத்தராவார்கள் என்று இவ்வாசிரியர் புத்த மதத்தவரைச் சாடுகின்றார்.

அடுத்து,

உரையோம் பயன்செய்த வற்கென்று வைத்தற மோதும்வஞ்சத்
...... .... . ........ . .... ........
...... ...... ........ .... ........
நிரையோ டுறங்குந் துறைமயி லாபுரி நின்றவரே.
(பாடல் - 74)

என்ற பாடலில் 'அனுபவிக்கும் பயனை வினை செய்தவனுக்குச் சொல்மாட்டோம் என்று சொல்லி வைத்துத் தருமத்தைச் சொல்லுகின்ற கபடநெறியுடனே பொருந்திய நல்ல நடையையுடைய புத்தர் என்று ஏசுகின்றார்.

தருமத்தைக் காப்பவர் என்றால் முன் வினையையும், நடக்கும் காலத்தில் நல்ல நெறியைப் பற்றியும் மக்களுக்கு அறவுரை கூறவேண்டும். அவ்வாறு கூறாதவர்கள் புத்தசமயத்து ஆசாரியர்கள் என்று புத்தசமயத்தைக் கடிந்துரைக்கின்றார் நூலாசிரியர்.

அடுத்து 'களி' என்ற உறுப்பில்,

"பண்டயன்றலை மண்டையிற்றிரு மாலரற்கு நிறைத்திடும்
பழையமந்திர மன்றுமந்திர யானமோதிய போதியான்
உண்டமந்திர மன்றுவேதியர் வேதமந்திர மோதிநின்
றுண்ணுமந்திர மன்றெனாவிடை நண்ணுமந்திரம் .....
..... ... ..... ...... ......

கொற்றமுக்குடை நற்றவன்றமர் கூறுமந்திர மஞ்சுமே"
(பாடல் -92)

என்ற பாடலடிகளுக்கு, ஆதியில் பிரம்மனுடைய தலைமண்டையில் திருமால் சிவனுக்கு ஊற்றிக் கொடுத்த பழைய கள்ளுமன்று, கள்ளின் விதியைச் சொன்ன அரசமர நிழலமர்ந்த புத்தன் குடித்த கள்ளுமன்று, பிராமணர்கள் வேதமந்திரத்தை ஓதிக்கொண்டு குடிக்கின்ற கள்ளுமன்று, என்நாவிலே பொருந்தும் மந்திரம் வெற்றிதரும் முக்குடைகளையுடைய அருகனது பக்தர்கள் சொல்லும் பஞ்சமந்திரமே ஆகும் என்பது பொருளாகும்.

இப்பாடலில் புத்தருடன், பிரம்மன், சிவன், திருமால் ஆகிய இந்து தெய்வங்களையும், பிராமணர்களையும் கடிந்துரைக்கின்றார் ஆசிரியர்.

அடுத்து சம்பிரதம் என்ற உறுப்பில்,

"தங்கு மார்வமிக் குடையவப் பாதகத்
தோர்கண முதலாகுஞ்
சமய வாதிகள் செவியினி லறம்புகச்
சாற்றுவன் காணீரே" (பாடல் - 103)

என்ற பாடலடிகளுக்கு 'தீய பாதத்தில் தங்கும் ஆர்வமிக்குடைய புத்தசமயம் முதலான ஏகாந்தவாதிகளின் காதுகளில் சினதருமம் நுழைய யான் சொல்லுவேன் காண்பீராக, என்று கூறுகின்றார்.

இவ்வாறாக புத்தசமயத்தையும் அச்சமயத்தைச் சார்ந்தவர்களையும் ஆசிரியர் பலவாறாகக் கடிந்துரைக்கின்றார்.

## அடிக்குறிப்புகள்

1 ச.வே. சுப்பிரமணியன், கே. பகவதி (பதி.), தமிழ் இலக்கியக் கொள்கை. ப.144.

2. கி வெங்கடசாமி ரெட்டியார் (பதி.), நாலாயிரதிவ்விய பிரபந்தம் ப. 231.

3. பெரும்பாணாற்றுப்படை வரி. 174. நச்சர் உரை

4. இராமஸ்சுவாமி ஐயங்கார் (உரை) பெரிய திருமொழி ப. 95.

5. ச.வே. சுப்பிரமணியன், கே. பகவதி (பதி.), தமிழ் இலக்கியக் கொள்கை. ப. 86.

6. மேற்படி நூல். ப. 90.
7. கு. சுந்தரமூர்த்தி (பதி.), தொல். பொருள். பேராசிரியம் ப. 577.
8. மேற்படி நூல். ப. 577.
9. கா. ரா. கோவிந்தராச முதலியார், (பதி.), பன்னிருபாட்டியல் ப. 67.
10. கு. வெ. பாலசுப்பிரமணியன். கலம்பகத்திறன் ப. 46.
11. மேற்படி நூல். ப.49.
12. கா. ரா. கோவிந்தசாமி முதலியார், (பதி.), பன்னிருபாட்டியல். ப. 68.
13. கொ. இராமலிங்கத்தம்பிரான். (பதி.), வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலும், வரையறுத்தபாட்டியலும். ப. 31.
14. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்கம். திருக்கலம்பகம். சுவடி எண்-268.
15. மது. ச. விமலானந்தம். தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம். பக். 248, 249.
16. G. John Samuel. (Ed.) Encyclopaedia of Tamil Literature (Volume One) P.97.
17. நா. பாலுசாமி. (பதி.), வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி. 4) ப. 876.
18. வ. சுப. மாணிக்கம். (பதி.), தமிழ் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் (முதல் தொகுதி). பக். 311, 312.
19. ந. வீ. செயராமன். சிற்றிலக்கிய புலவர் அகராதி. ப. 51.
20. ந. சி. கந்தையாப்பிள்ளை (பதி.). தமிழ்ப்புலவர் அகராதி. ப. 64.
21. அப்பாசாமி நயினார், சம்பந்தராவ் நயினார் (பதி.), திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்தமும். முன்னுரை.
22. KAMIL. V-ZVELABIL and E.J. BRLU. (Ed.), Lexicon of Tamil Literature. P. 725.
23. Vaiyapuri Pillai's History of Tamil Language and Literature. P. 725.
24. சோ. அருணாசல தேசிகர் (பதி) நந்திக்கலம்பகம் ப.153.
25. C.K. சுப்பிரமணிய முதலியார். சேக்கிழார். ப. 29.
26. மு. அருணாசலம், தமிழ்ப் புலவர் வரலாறு. 2 சேக்கிழார் ப. 11
27. ஆ. பழனிசுவாமி சிவாச்சாரியார் (பதி.), திருக்கலம்பகம் முன்னுரை.
28. மேற்படி நூல் முன்னுரை.
29. ஆ. அரங்கநாத முதலியார் (பதி.), திருக்குறள் ப.7.

30. எஸ். தன்யகுமார். (பதி.), திருக்குறள் கடவுள் வாழ்த்து ப. 71.

31 மேற்படி நூல். ப. 78.

32. தா.மா. வெள்ளை வாரணம். (பதி.), திருக்குறள் உரைக்கொத்து. ப. 6.

33. மேற்படி நூல். ப. 6, 7

34. மா. அண்ணாத்துரை. (பதி.), பாரதிதாசன் திருக்குறள் உரைத்திறன். ப. 62.

35. தா.மா. வெள்ளை வாரணம். (பதி), திருக்குறள் உரைக்கொத்து. ப. 11.

36. ஆ. சிங்காரவேலு முதலியார். (பதி.), அபிதான சிந்தாமணி ப. 7.

37. மேற்படி நூல். ப. 225.

38. மேற்படி நூல் ப. 796.

39. மேற்படி நூல் - ப. 1409.

40. மேற்படி நூல். ப. 570.

41. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர். (பதி.), திருத்தொண்டர் புராணம். ப. 268.

42. மேற்படி நூல் - ப. 551

43. மேற்படி நூல் ப. 174

44. மேற்படி நூல் - ப. 589.

45. INSTITUTE FRANCAIS D INDOLOGIE தேவாரம் முதல்தொகுதி. ப. 200.

46. மேற்படி நூல் - ப. 339.

47. மேற்படி நூல் தொகுதி. 2. ப. 269.

48. மேற்படி நூல் (முதல்தொகுதி) ப. 339

49. மேற்படி நூல் (தொகுதி இரண்டு) ப. 38.

50. மேற்படி நூல் (தொகுதி இரண்டு) ப. 497.

51. மேற்படி நூல் (தொகுதி இரண்டு) ப. 306.

52. மேற்படி நூல் (தொகுதி இரண்டு) ப. 309.

53. மேற்படி நூல் (தொகுதி இரண்டு) ப. 320.

- - - - -

# A Critical Introduction

Tamil, the prime language of the Dravidian group of languages, is also celebrated as one of the classical languages of the world. *Tolkāppiyam* reveals to us the excellence of Tamil language in literature, grammer, astrology, medicine etc. even during the pre-*caṅkam* period. In those days literary works were initially divided into two broad categories ie *Akam* (dealing with the theme of love) and *Puṟam* (dealing with war and pursuits other than romance). Later many literary subdivisions were made such as *Mēlkaṇakku* and *Kīḻkkaṇakku, Tirumuṟai* and *Aṟaneṟi, Peruṅkāppiyam* (major epic) and *Ciṟukāppiyam* (minor epic). *Ciṟṟilakkiyam* (minor literature) and *Pērilakkiyam* (major literature).

The creative ability of an author, the impact of the period of time of writing and the social circumstances are responsible for the appearance of new varieties of literature. From the 8th century A.D. onwards several kinds of *Ciṟṟilakkiyam* (minor literature) appeared and developed as a distinct literary pattern. Works under the titles of *Kōvai, Ulā, Paraṇi, Piḷḷaittamiḻ, Antāti, Kalampakam, Tūtu, Kuṟavañci, Paḷḷu, Maṭal* and *Mālai* are examples of *Ciṟṟilakkiyam*. The authors of the above mentioned works employ their imagination in choosing events or themes that transcend worldly reality and embellish them with their rich diction and hyperbole or unrealistic similes. The total effect of such an exercise is quite impressive from the reader's point of view.

The term *Pirapantam*, a Sanskrit word which means 'that which is bound or built', is used to denote the category of *Ciṟṟilakkiyam*. Though a study on *Pirapantam* works entitled *Prapanta Marapiyal* states that there are 96 *pirapantam* works actually there are 411 works of *Ciṟṟilakkiyam* according to *Aḻakapparācu* who has listed them after an exhaustive and comparative study of such works.

*Kalampakam* is a literary work of the *Ciṟṟilakkiyam* category. The work *Kalampakam* denotes a *Kalavai* which means a mixture or medley of various poetic units of Tamil prosody. Initially *orupōku, Veṇpā* and *Kalitturai* are employed as the poetic components of a *kalampakam* work which also contains *Puyavakuppu Ammāṉai, Kālam, Campiratam, Kār, Tavam, Kuṟam, Maṟam, Pāṇ, Kaḷi, Cittu, Iraṅkal, Kaikkiḷai, Tūtu, Vaṇṭu, Taḻai* and *Ūcal*. Apart from such poetic components a *kalampakam* has in itself metrical variations such as *Maṭakku, Maruṭpā, Āciriyappā, Kalippā, Vañcippā, Āciriya viruttam, Vañcitturai,* and *Veṇṭuṟai*. These metrically varied verses are interspersed with *veṇpā* and *kalitturai* verses and conclude with *antātit toṭai*. Thus a *kalampakam* is a veritable medley of verses in different metrical patterns.

## The diction of *Kalampakam*

The term *kalampakam* was first used by Toṇṭaraṭipoṭi Āḻvār of 9th century A.D. In the fifth song of his *Tiruppaḷḷiyeḻucci* there is a reference to *kalampakam* as follows

*Kaḷi vaṇṭu miḻarriya kalampakam puṉainta·* (One who has adorned the *kalampakam* lispingly hummed by a joyous beetle).

Nacciṉārkkiṉiyar in his commentary on *Perumpāṇārruppaṭai* defines *kalampakam* as closely knit garland of several kinds of flowers.

## *Kalampakam* - An etymological explanation of the term

Toṇṭaraṭippoṭiyāḻvār also seeks to explain the term *kalampakam* as a beautifully intertwined piece of various flowers. A *kalampakam* has thus originated from the word *kalavai* which means a mixture or medley.

Another etymological explanation divides the term *kalampakam* into *kalam + pakam. Kalam* is a term which indicates a volumetric unit in measuring food grains and oilseeds. As 12 *marakkāls* (bushels) make one *kalam*, here it indicates 12 poetic components. The word *pakam* denotes half of the number 12 ie number 6. As *kalampakam* consists of 18 poetic components this numerical explanation seems plausible, but the prosodic and grammatical treatises on *Cirrilakkiyam* such as *Paṉṉiru pāṭṭiyal* and *Ilakkaṇa viḷakkam* prescribe 15 and 21 poetic components respectively for *kalampakam* works. A few other prosodic works also do not agree with the stipulation of 18 poetic components for a *kalampakam* work. Research scholars are of the view that in its structural aspect also a *kalampakam* is a *kalavai* or mixture.

## *Kalampakam* - a literature of mixed pattern

The term *kalampakam* is bifurcated as *kalappu + akam* to indicate a mixture of varied literary patterns found therein. In Tamil grammar this is called *Aṉmoḷitokai* originating from *Vērrumait tokai.*

*Kalampakam* consists of various kinds of poetic verses that come under five forms of metre *aimpa* and its related *iṉam* or groups.

*Kalampakam* contains many poetic components such as *puyavakuppu.* A *kalampakam* handles many of the 9 *cuvai* or aesthetic emotions. It consists of *collaṇi* (structural technique in using words) such as *maṭakku, Yamakam* etc. *Kalampakam* employs figures of speech like *uvamai* (simile) and *uruvakam* (metaphor).

It also contains many *cantappāṭal* (songs that can be set to music) of various and subtle melodies. *Kalampakam* works have drawn their thematic contents from the *tiṇai* (a literary convention of conduct) of Tamil literature. Thus *kalampakam* has acquired the nature of a *kalavai ilakkiyam* (mixed literature) in many respects.

## The emergence of *Kalampakam*

According to Dr. Pū. Cupramaṇiyam, Tamil poets chose for their poems themes such as the seasons of *Kār* (rainy monsoon) and *Iḷavēṉil* (beginning of summer). These are known as *Mutaṟporuḷ* (prime themes) related to the *tiṇai* (conventional code) of *Kaikkiḷai* and *Aṉpiṉ aintiṇai*. The poets opted for *Uripporuḷ* (attributive theme) like *Iraṅkal* (condolence) and *Pirivupporuḷ* (theme of separation) like *Tūtu* (message). They also handled themes like *Maṭal* prescribed in *Peruntiṇai* and *Vaṇṭu* (beetle) considered as one of the tools for dispelling suspicion. *Vēlan Veṟiyāṭṭu* (frenzied dance in honour of vēlan) was also a *tuṟaipporuḷ* (theme pertaining to a particular literary branch or category) chosen by poets. Thus poets chose themes according to their personal preferences and felicity of poetic expresssion for their *kalampakam* works. The later poets who attempted *kalampakam* pieces introduced other themes besides those mentioned above. .The poets' individual likes or dislikes have been responsible for the introduction or elimination of themes and that accounts for the variety found in the themes of the existing *kalampakam* literature.

## *Tolkāppiyam's* comments on *Kalampakam*

Generally grammatical treatises deal with literary works that already exist but *Tolkāppiyam* provides guidelines and norms for creating literature.

*viruntē tāṉum putuvatu kiḷantu yāppiṉ meṟṟē* (*Tolkāppiya Nūṟpā* - 551)

The commentator explains the above line as versification based on one's innovative preference and includes *kalampakam* in the scope of such literary novelty.

## The prosody of *Kalampakam*

Though several works of prosody refer to the poetic structure of *kalampakam* it is only in *Paṉṉirupāṭṭiyal*, the earliest work in this regard, we find a clear stipulation.

*colliya kalampakam collil orupōku*

*mutarkan venpā kalitturai puyamē*
*ammānai, ūcal, yamakam, kali, maram,*
*cittē, kālam, matanki, vantē*
*kontal, marul, campiratam, venturai*
*tavacu, vañcitturaiyē innicai*
*puramey akaval viruttam ena varum*
*ceyyut kalantutān eytiya antam*
*atiyāka varum ena molipa"*

In a *kalampakam* there is at first *orupōku* verse followed by a *venpā* and a *kalitturai* poem in that order to form the *mutal uruppu* (first or initial component). Then there are the following components *Puyam, Ammānai, Ūcal, Yamaham, Matakku, Kali, Maram, Cittu, kālam, Matanki, Vantu, Mēkam, Kaikkilai, Campiratam* and *Tavam* to be incorporated. There will be a medley of *venturai Vañcitturai, Innicai venpā, Akavarpā* adjacent to the *venpā* and also several kinds of *viruttam* verses. A *kalampakam* will conclude with an *antāti*.

**The components of a *Kalampakam***

***Puyam*** - This is also known as *Puyavakuppu* or *Tōlvakuppu*. The word '*puyam*' means shoulder. This component is employed in a work to make laudatory references to the physical prowess or the mighty shoulders of the *Talaivan* (hero). This *uruppu* (component) is generally found in songs that come under *Purattinai* which deals with war and worldly pursuits under its subdivision *Patāntinai*. *Pātānpāttu* is the specific name of such a poem which glorifies one's fame, valour, and philanthropy.

***Ammānai*** - This poetic component is in the descriptive form of a game played by three women throwing up small balls and holding them dexterously. While playing thus they will pose questions. Come out with answers to the queries sometimes tackling the questions with counter questions. In *Tirukkalampakam* instead of three women 82 women participate in the *ammānai* game celebrating the glory of Lord Arukan. Generally *Ammanai* ballads observe the metrical pattern of *Kalittālicai*.

***Ūcal*** (Swing or the act of swinging)

This component is in the poetic form of women moving up and down in an *ūcal* or *ūñcal* (swing) and singing. The features and qualities of the swinging

women are described at first and then the women in their songs eulogize the glory and greatness of the *Pāṭṭuṭaittalaivaṉ* (the hero of the poem). The poetic meters employed for *ūcal* are either *Āciriya viruttam* or *Kalittāḻicai*. In the last metrical foot of the lines in this verse form the imperative expressions such as *āṭīr ūcal* (you swing) *āṭāmō ūcal* (shall we not swing) will be found.

### *Kālam* (Time - Seasons)

This conventional component is in the poetic form of expressing the pangs of separation of the *talaivi* (heroine) when the *Talaivaṉ* is far away in pursuit of wealth or fame. Major seasons such as *kār* (rainy season) and *iḷavēṉil* (beginning of summer) and the seasonal occurrences form the natural background for the lamentation and emotional outbursts of the *talaivi*. Though most of the authors of *kalampakam* works adopt this conceptual component, in *Tirukkalampakam, kālam* (season) has no impact since those who place their faith in Arukatēvaṉ (Lord Aruka) are not affected either by changing nature or fluctuating human nature.

### *Maṭakku* (Repetition)

This is a poetic technique by which a *col* (word) or *cīr* (metrical foot) is repeated or made to recur in different contexts or to give different meanings. This is also known as *yamakam*.

### *Kaḷi* (Drunken Revelry)

This poetic device is employed to describe the revelry of toddy drinkers. As *kaḷ* (toddy) is an alcoholic brew tapped from coconut or palm trees the poets hail the trees as well as the toddy obtained from them. However in *Tirukkalampakam* the term *kaḷi* acquires a spiritual connotation denoting one of the *Pañcamantram* (Five incantations of Arukaparamēṭṭikaḷ (Arukar the Jaina God).

### *Maṟam*

Ancient Tamil kings used to send their emissaries seeking brides from the parents of girls from *Maṟavar* community. The royal messengers on such matrimonial missions ran the risk of being insulted and humiliated. Even the kings who sent the messengers would be ridiculed. The poetic device *maṟam* is employed to describe such plights or failed missions in seeking the hands of *maṟava* girls in marriage.

### *Cittu*

This is a poetic exposition of *iracavātam*, (alchemy) the art of transmuting baser metals such as iron and copper into gold by means of *puṭam* (refining by a melting process) and using certain herbs. Cittu poems are in the form of alchemists expounding their professional talents.

### *Matañkiyār* or *Matañku*

Professional dancers and musicians hailed from a certain caste known as *matañkiyār*. These women used to whirl and dance brandishing swords in their hands. When a *talaivaṉ* (hero) became enamoured of such a *matañki* he would reveal his lust employing the poetic device known as *matañku*. In *Tirukkalampakam* a *mataṇki* girl is found earnestly praying to Arukatēvaṉ chanting *Pañcamantram* (Five incantations).

### *Vaṇṭu viṭu tūtu* (Sending a beetle with a message)

This is the poetic convention of sending a *vaṇtu* (beetle) with a poignant message to the *talaivaṉ* (hero) by the *talaivi* (heroine) who suffers from the pangs of separation. In *Tirukkalampakam* the devotees of Arukaparamaṉ (the prime Lord Aruka) depute a *vaṇtu* to reach Arukaparamaṉ seated on Camavacaraṇam (Lord Arukar's exalted abode) and bring the fragrance of the divine lotus associated with the Lord.

### *Kaikkiḷai*

The term *kaikkiḷai* means one-sided love or lust with no reciprocal response from the other party. This poetic device brings out the acute suffering experienced by a *talaivaṉ* who utterly fails to elicit any response to his amorous advances or overtures. The lovelorn hero feels that the girl alone can provide a balmy solace to his aggrieved heart. In *Tirukkalampakam* an ardent devotee of Aruka reveals his *kaikkiḷai*.

### *Kuṟam*

*Kuṟava* women (nomadic gypsies) were fortune-tellers and their predictive art was known as *kuṟi* (fortune telling). Those women would enlighten the *talaivi* (heroine) on the prowess and prosperity of *talaivaṉ* (hero) in the form of *kuṟi*. This poetic expression is laced with *āciriya viruttam* stanzas instead of the long and resonant *kuṟavañci* songs.

### *Campiratam*

This is a poetic form of the proclamation of the talents and dexterity of an expert in *intiracālavittai* (the art of conjuring illusion shows). This revelation will be done by the expert himself. In *Tirukkalampakam* an expert practitioner of *intiracālam* expounds not only his professional skill but also the greatness and glory of Arukar. He also lashes out at the practice of other religions.

### *Tavam* (Penance)

Generally in *kalampakam* works instead of extolling the benefits of *tavam* (penance) readers will be urged to pray to God who is the *pāṭṭuṭaitalaivan* (the hero of the poem) and obtain bliss and salvation. But in *Tirukkalampakam*, *tavam* (penance) is elaborately explained as a continuous spiritual process. *Uyir* (life) is imperishable, the desire for *uyir* exposes one to *viṉai* (good or bad deed). *Viṉai* on its part leads to *nālvakaippiṟappu* (the four kinds of birth) and the consequent miseries and the eternal bliss or freedom known as *mukti* can be obtained only by dispelling *viṉai*. The ways and means of absolving oneself of *viṉai* are also explained.

The above - mentioned components of *kalampakam* are found in *Tirukkalampakam*. In the later period of *kalampakam* literature, other *kalampakam* components such as Koṟṟiyār, Piccīyār and *Valaiciyār* were employed. At present there are about 25 components in usage in *kalampakam* literature.

### *Kalampakam* works - Their chronological sequence

*Nantikkalampakam* is the earliest work in *kalampakam* genre. It celebrates the heroic exploits of a king of Pallava dynasty by name Nantivarmaṉ. The prefix used to describe him as *Teḷḷāṟerinta* means that he fought and won a battle at a place called *Teḷḷāṟu*. The name of the author of this work is not known but the time of its composition has been fixed as the middle of the 9th century A.D. This *kalampakam* is an adulation of Nantivarmaṉ's battles, bravery victories, philanthropy and intellectual pursuits. This work was published by Maturai Tamiḻc Caṅkam in the year 1927.

### *Āḷuṭaia Piḷḷaiyār Tirukkalampakam*

This work comes next to *Nantikkalampakam* in the chronological order. This *kalampakam* was composed by Nampiyāṇṭār Nampi of Tirunāraiyūr. He

belonged to the 10th century A.D. The *Pāṭṭuṭaitalaivaṉ* of this work is Tiruñāṉacampantar, one of the famous *nāyaṉmārs* (ardent Caivite devotees) As Āḷuṭaiyapiḷḷaiyār is an appellation of Tiruñāṉa Campantar the work was entitled *Āḷuṭaya Piḷḷaiyār Tirukkalampakam*.

***Tirukkalampakam***

The author of this work Uticittēvar belonged to a place called Ārppākkam near Āraṇi which formed part of ancient Toṇṭaināṭu in Tamil land. The period of composition of this *kalampakam* has not yet been definitely fixed as research scholars claim both the 10th century and 14th century A.D. as the probable periods. This work contains 111 poetic stanzas enumerating and elucidating the tenets of Jainism, its codes and the exalted nature of *Camavacaraṇam* (the abode of Arukar).

***Tiruppātirippuliyūrk kalampakam***

Tolkāppiyattēvar is the author of this work. He belonged to the 14th century A.D. He composed this *kalampakam* on Lord Civaṉ at the instance of the ardent Caivaite devotees of Tiruppātirippuliyūr. It is surmised that this author might have been a Jaina first and then switched over to *Caivism*. His poetic felicity is appreciated as follows by Iraṭṭaiyar (twin poets).

*tolkāppiyattēvar coṉṉa tamiḻppāṭal iṉṟi*
*nalkāt tiruccevikku nāṉ uraippa tērumō*

(Except the Tamil verse composed by Tolkāppiyattēvar, will my utterances ever reach one's ears?)

Thus Tolkāppiyattēvar's *kalampakam* work is deemed an important piece next to *Nantikkalampakam*. Two poets who travelled everywhere together, and composed poems jointly, they were popularly known as *Iraṭṭaiyar* (twin poets). They were also noted *kalampakam* writers. The saying *Kaṇpavukalampakattiṟku Iraṭṭaiyar* (The twin poets for *kalampakam* worth seeing) testifies to their skill in this regard. Their works are *Tillaikkalampakam* and *Tiruvāmattūrk kalampakam*. These twin poets belonged to the 15th century A.D.

A *kalampakam* work considered the best among those composed on Caivism is *Aruṇaikkalampakam* written by Caiva Ellappa Nāvalar of the 17th century A.D. Paṭikkācuppulavar composed *Puḷḷirukkuvēḷūrk kalampakam* around the close of the 17th century or the beginning of the 18th century A.D.

Kumarakuruparar wrote *Maturaikkalampakam* during the 17th century A.D. Piḷḷaipperumāḷ Aiaṅkār's *Tiruvaraṅkakkalampakam* is considered the best among Vaishnavite *kalampakam*. The period of its composition was the 17th century A.D. *Tiruvēṅkaṭakkalampakam* was composed during the 19th century A.D by Muttamiḻkkavi Vīrarākava Mutaliyār.

Vīramāmuṉivar (Father Beschi) who was born in Italy served as a missionary preacher of Christianity in Tamilnadu. His work entitled *Tirukkāvalūrk kalampakam* is considered a piece of excellence in Christian literature. In the last century Pūṇṭi Araṅkanāta Mutaliyār wrote *Kaccikkalampakam*. Among the present 20th century works *Mayurakirik kalampakam* written by Irāmanātaṉ *Ceṭṭiyār*. *Śrivaramaṅkaik kalampakam* by Appu Aiyaṅkār and *Tiruppēraik kalampakam* by Anantakriṣṇa Aiyaṅkār are known as good *kalampakam* works.

### *Tirukkalampakam* - A piece of *kalampakam* literature

*Tirukkalampakam* is the compound of *tiru* + *kalampakam*, where *kalampakam* refers to a literary genre and *Tiru* is an attribute to it.

The Tamil Lexicon, compiled by the University of Madras, gives the following meanings to the attribute 'Tiru' : Wealth, Beauty, Peace, Celestial appeal, Fortune, Virtue, Spiritual. As Lord Aruka is treated as the hero of this *kalampakam*, *Tiru* acquires the meaning of spirituality and one may tend to conclude that this *Tirukkalampakam* sings about the glory of Lord Arukar.

*Tirukkalampakam* has the grammatical components of *kalampakam* literature right from *Puyavakuppu* to *tavam* (penance), enumerated in *Paṉṉirupāṭṭiyal*.

The grammar of *kalampakam*, while stating the total no. of verses to be composed under *kalampakam*, says that 100 verses should be devoted to Celestials, 95 to Saints, 90 to kings, 70 to ministers, 50 to merchants, and 30 to Vēḷāḷar. But this *Tirukkalampakam* which praises Arukatēvar has 110, all of anaphora (*antāti*) pattern. Thus, this text does not confine to the grammar of poetics.

### The structure of verses

*Vaccaṇantimālai*, a treatise on Poetics, describes the structure of composition of *kalampakam* as follows:

The *kalampakam* should be composed of *orupōku, veṇpā, kalitturai, viruttam, vañci viruttam, maruṭpā* metres.

One could find all these metrical compositions in *Tirukkalampakam*, beginning with *orupōku*, followed by *veṇpā, kalitturai.*

Following is the list of verses composed in above-mentioned metres, found in *Tirukkalampakam*.

| | | | |
|---|---|---|---|
| 1. | *veṇpā* | (1,3, 30, 66, 85, 99, 109, 111) | - 8 |
| 2. | *Nēricaiyāciriyappā* | (17) | - 1 |
| 3. | *Āciriyatturai* | (59) | - 1 |
| 4. | *Arucīrk kaḻineṭilaṭi āciriya viruttam* | (6, 8, 9, 21, 22, 24, 29, 31, 37, 38, 42, 48, 49, 51, 57, 71, 79, 80, 82, 84, 90, 98, 100) | - 23 |
| 5. | *Eḻucīrk kaḻinetilaṭi āciriya viruttam* | (11, 12, 20, 41, 65, 68, 76, 87, 104) | - 9 |
| 6. | *Eṇcīrk kaḻineṭilaṭi āciriya viruttam* | (5, 10, 14, 18, 28, 32, 36, 40, 43, 50, 54, 58, 64, 67, 73, 75, 78, 93) | - 19 |
| 7. | *Panniruċīrk kaḻineṭilaṭi āciriya viruttam* | (27, 55, 56, 61, 91, 94, 101, 102, 103, 108) | - 10 |
| 8. | *Patiṉāṉku cīrk kaḻineṭilaṭi āciriya viruttam* | (52, 92) | - 2 |
| 9. | *Canta viruttam* | (35, 97, 105, 106) | - 4 |
| 10. | *Orupōku koccakak kalippā* | (2) | - 1 |
| 11. | *Kaṭṭaḷaik kalippā* | (39) | - 1 |
| 12. | *Kalittāḻicai* | (45, 96) | - 2 |
| 13. | *Kaṭṭalaik kalitturai* | (4, 7, 23, 46, 60, 74, 86, 107) | - 8 |
| 14. | *Kāppiyak kalitturai* | (13, 34, 47, 53, 62, 63, 81, 83) | - 8 |
| 15. | *Kalinilaitturai* | (26) | - 1 |
| 16. | *Kaliviruttam* | (15, 25, 33, 69, 72, 88, 89) | - 7 |
| 17. | *Kaliveṇpā* | (77) | - 1 |
| 18. | *Veṇkalippā* | (70) | - 1 |
| 19. | *Vañcippā* | (110) | - 1 |
| 20. | *Vañcitturai* | (44) | - 1 |
| 21. | *Vañci viruttam* | (19, 95) | - 2 |
| | Total verses | ...... | 111 |

(Numbers given in brackets are Verse - Numbers)

## An account of the author of *Tirukkalampakam*

At the end of the palmleaf manuscript of *Tirukkalampakam*, the last leaf is found as an annexure where we find a reference to Utīcittēvar in the *pāyiram* (a preface in verse). The external evidence in respect of *Tirukkalampakam* can be inferred from the contents of this *pāyiram*. Details regarding the nativity of the author, his scholarship, his proficiency in Tamil and Sanskrit and his religious fervour are found in the *pāyiram* verse. The gist of the *pāyiram* is as follows: If the world is represented symbolically as a girl, Toṇṭaināṭu (a region in Tamilnadu) is that girl's face. Paiyūrkkōṭṭam a division of Toṇṭaināṭu is located in the northern portion. The inhabitants of that *Kōttam* are flawless and noble persons. Ārppākkam is a place situated in that *Kōṭṭam* (division). People of excellent qualities live there in large numbers. They are philanthropic without seeking publicity in return. Utīcittēvar lived in that place. He was quite proficient in both Tamil and Sanskrit. He was a householder with a family of his own. He fought against the tenets of Buddhism. Such a scholar adorned the feet of Arukar with his *kalampakam*. Those who read this *kalampakam* will attain the feet of Arukar.

### Internal Evidence

In the commentary on the 46th stanza of *Tirukkalampakam* the commentator observes by way of explanation that Utīci Tēvar's revelation of the bliss obtained by himself is known by means of this song. Hence Utīcittēvar's authorship of the work *Tirukkalampakam* is confirmed.

### The period of the author

Research scholars differ in their versions and views regarding the period of Utīcittēvar, the author of *Tirukkalampakam*. Prof. Matu. Ca. Vimalāṉantam has fixed the period of Utīcittēvar as the 15th century A.D.

*The Encyclopaedia of Tamil Literature* published by The Institute of Asian Studies and the *Vāḻviyal kaḷañciyam* brought out by Thanjavur Tamil University confirm the 15th century as the author's period.

But Dr. V.S.P. Māṇikkam, Dr. N.V. Ceyarāmaṉ and Pulavar N.C, Kantaiyā Piḷḷai state that the author belonged to the 14th century A.D.

Ā. Paḻaṉicuvāmi Civāccāryār observes that Utīcittēvar has in his religious works expressed in Tamil the Sanskrit phonetic symbols. This practice of the

author as well as his beautiful style proves that he belonged to a period much earlier than that of the author of *Mērumantaranūl* of the 14th century.

Dr. Kamil Zvelebel and Dr. E.J. Brill in their Encyclopaedia of Tamil Literature express the view that *Tirukkalampakam* contains 110 stanzas and it is an anti-Buddhist work. In attempting to fix the period of the work between the 10th and 14th or 15th century A.D. they ultimately agree with Vaiyāpuri Piḷḷai's view that the 10th century A.D. is the most probable period of Utīcittēvar and his *kalampakam* work. Tiru S. Vaiyapuri Pillai in his History of Tamil Literature mentions *Nantikkalampakam* as the earliest *kalampakam* work written during the 9th century A.D. (between 826-849). He also observes that Utīcittēvar's *Tirikkalampakam* might have also been composed around the same period.

In the 74th and 75th stanzas of *Tirukkalampakam* the name of Mylapore (in Chennai) is mentioned as Mayilāpuri. Cō. Aruṇācala Tēcikar in his edition of *Nantikkalampakam* observes in the introduction that Mayilapuri had been in usage as the name of that place in the 9th century A.D.

Similar to *Tirukkalampakam* which is a Jaina religious work *Āḷuṭaiyapiḷḷaiyār Tirukkalampakam* by Nampiyāṇṭār Nampi upholds Caivism. The latter work belonged to the 11th century A.D. It may be inferred that on account of the popularity and wide religious appeal of *Tirukkalampakam* the Caivite author would have been inspired to write his *Kalampakam* work on Āḷuṭaiyapiḷḷaiyār (Ñāṉacampantar). Cēkkiḻār, the illustrious hagiographer of *Nāyaṉmār* (ardent devotees of Lord Civaṉ) composed his monumental work *Periya Purāṇam* as a counter to *Cīvakacintāmaṇi*, a popular Jaina work. Cēkkiḻār who was the chief among the ministers of king Anapāya Cōlan prevailed upon the monarch not to be enamoured of the Jaina work *Cīvakacintāmaṇi* as it was not beneficial during one's life or beyond. He suggested to the king that only the lives of *Nāyaṉmārs* would serve both temporal and spiritual purposes. After thus convincing the king of the superiority of Caivism, Cēkkiḻār composed his magnum opus, *Periya Purāṇam*. This information is found in a work entitled Cēkkiḻār and also in the History of Tamil literature (*Tamiḻ ilakkiya varalāṟu*) by Mu. Aruṇācalam.

On the basis of the facts and evidences mentioned above the editor of the book has fixed Utīcittēvar's period as the end of the 9th century or the beginning of the 10th century A.D.

## An account of the commentator of *Tirukkalampakam*

A scholar by name Anantatēvar was the commentator of *Tirukkalampakam.* He has written the *patavurai* (word by word meaning of a poem) and *polippurai* (paraphrase of the poem). Anantatēvar was the son of Cantiranātatēvar. He belonged to Kōliyanūr, a place near Ārppākkam, the place of birth of Utīcittēvar. There is an old piece of verse furnishing details regarding the author and commentator of *Tirukkalampakam.* The gist of that verse set to *nilaimaṇṭila āciriyappā* meter is as follows.

Arukatēvar (Lord Aruka), in order to dispel darkness, eradicate enmity and develop *aram* (virtue) was seated under the shade of the *pindi* tree, astride a lotus covered by three parasols with the resonance of the divine *tuntupi* as a musical score and with the earnestly praying *Tēvars* in attendance as flowers showered all around. Lord Aruka seated amidst such surroundings proclaimed *araneri* (the code of virtue) as he remained unaffected by *calanam* (vacillation) *kalakkam* (anxiety) *parru* (desire) and *malam* (bond), Utīcittēvar composed his *kalampakam* eulogizing the feet of Arukar. He who adorned that *kalampakam* with a commentary was Anantatēvar, son of Cantiranātar, who belonged to Kōlianallūr near Ārppākkam which was held in great esteem even by *Tēvars.*

## The period of the Commentator

In an edition of *Tirukkalampakam* with the *polippurai* (paraphrase) for a few stanzas of that work, published by A. Campanta Rao of Tiṇṭivanam there is a reference to the period of the commentator. In the preface of that edition Vidwan Ā. Palanicuvāmi Civāccāriyār observes that the period of both the author and commentator of the work is not clearly discernible. However it may be surmised that as both of them belonged to the same place they would have been either contemporaries or lived slightly earlier or later than one another. Thus research scholars conclude that the commentator would have lived somewhat later than the author of the work.

## *Tirukkalampakam* and *Tirukkural*

According to authoritative Jaina works it was *Ātipakavan* also known as / *Virucapatēvar* who first evolved the tenets of Jainism. The *tīrtaṅkaras* (the saintly preachers of Jainism) who followed *Ātipakavan* in a chronological hierarchy preached the tenets of Jainism to the people at large.

In *Tirukkalampakam* we find the following verse

mannniya pērulaku anaittum,
ninnuḷḷē nī oṭukkinai,
ninninru nī virittanai,
ninnaruḷi nī kāttanai,
yenavāṅku,
ātipakavanai arukanai,
mātuyar nīṅka vaḻuttuvampalavē (Verse : 109)

(You have confined in yourself the established world entire. You have expounded it from yourself. You have protected it by your grace.

Stating thus let us pray, Arukan who is *Ātipakavan*, in various ways for dispelling our acute misery).

Tiruvaḷḷuvar (known as Kunta Kuntāccariyar in Jaina lore) in his first couplet of *Tirukkuraḷ* says

*akaramutala eḻuttellām ātipakavan mutarre ulaku*

Pūṇṭi Araṅkanāta Mutaliyār in his commentary on this couplet says 'As the letter A (அ) known as *akaram* comes first in the Tamil alphabet the world has *Ātipakavan* (the first God) as the Prime being. Jaina scholars aver that the term *Ātipakavan* refers to the first Jaina God.

In the second stanza of *Tirukkalampakam* we find the following lines.

*tonmaraiyai virittōy nī*
*tirunayaṅkaḷ aḻittōy nī*
*nanneriyai vakuttōy nī*
*naman aṇukāk katiyoi nī* (Verse -2)

(You have expounded the ancient scriptures.

You have demolished spurious arguments (konta vātam)

You have prescribed *Nanneri* (Ēkāntavātam)

You are in a state of *mukti* which is inaccessible to Kālan (the god of death)

The above - mentioned qualities of Arukan̲ make Him the sole possessor of *kēvala ñāṉam* (the ultimate wisdom). In *Tirukkuṟaḷ* we have the following couplet:

*kaṟṟatanāl āya payaṉeṉkol vālaṟivaṉ*

*naṟṟāḷ toḻāar eṉiṉ* (couplet-2)

A Jaina scholar by name A. Ammacantra Jain Cāstriyār explains this *kuṟaḷ* couplet as follow:

However much a person is learned in several works with clarity and profundity if he fails to pray the feet of *vālaṟivaṉ* (God who possesses ultimate wisdom) his scholarship is of no avail. The term *vālaṟivaṉ* according to the Jaina scholar means one who possesses *kēvala ñāṉam* and therefore refers to Lord Arukaṉ.

In *Tirukkalampakam* there are references to the association of Lord Arukaṉ with the divine lotus.

*'vākaṉamākam pūtta māmalarākavēku*

*mēkaṉai . . . . . .* (Verse- 21)

(Let us pray to Lord Arukaṉ who has as his *vākaṉam* (vehicle) the lotus of glorious blossoming origin in the sky)

*ēṭaviḻum naḷiṉamicai yēkumavar aṭiyiṇaiē* (pātal-54)

(Let us adore the feet of Lord Arukaṉ who treads on the lotus which delicately unfolds its petals)

In *Tirukkuṟaḷ* we have a couplet which expresses similar sentiments regarding the divine link between God and lotus

*malarmicai ēkiṉāṉ māṇaṭi cērntār*

*nilamicai nīṭu vāḻvār* (couplet-3)

K.P. Vimalanāta Jain Cāstriyār of Virutūr in his exposition of the above *kuṟaḷ* couplet gives the following interpretation.

Those who have attained the glorious feet of Arukaṉ who trod upon the lotus will reach *mukti*, the eternal state of freedom which lies on the top of this world and be there for ever. In *Tirukkalampakam* Lord Arukaṉ is depicted as One who has no likes or dislikes

*vēṇṭutal vēṇṭāmai illāta viraṉaṭi*

*pūṇṭu kiṭantāl puṟattiṟutta veṅkūṟṟam pōkum* (Verse - 54)

If people attain the feet of Lord Arukan̲ of endless valour who has no likes or dislikes and exercise control over their actions even the impact of their *vin̲ai* (action) which comes near in hot pursuit like *kūr̲r̲am* (Lord of death) will go away.

In *Tirukkur̲aḷ* we find the following couplet

*vēṇṭutal vēṇṭāmai ilan̲aṭi cērntārkku*

*yāṇṭum iṭumpai ila* (Couplet - 4)

The great commentator Parimēlaḻakar in his commentary interprets the *kur̲aḷ* couplet as follows:

Those who attain the feet of God who doth neither desire nor hate will never suffer from the miseries of birth or worldly existence.

The *Tirukkalampakam* verses and the *kur̲aḷ* couplet here are remarkably similar in diction and didactic contents.

In dealing with the spiritual concept of *iruvin̲ai* (good and bad deeds) there is a similarity between *Tirukkur̲aḷ* and *Tirukkalampakam*.

In *Tirukkalampakam* we find the following lines :

*iriyaviru vin̲aippakaiva ṅikalvāṭṭi aimpulaveṅ*

*kariyakatak kaṭakkaḷir̲u kāyṅtatunin̲ n̲aruḷāmō* (Verse - 2)

(Is it Thy grace,

To have deprived the *Iruvin̲ai* foes of their might

And to have destroyed the *Pañcavicayam* (the five sins) the, Rogue Elephants in their rut)

*kaṭavuḷ malaraṭi tun̲n̲iyōr*

*mar̲uvin̲ tiruvaram amirta aruviyin̲*

*mayalkoḷ iruvin̲ai maṇṇavē* (Verse - 12)

(If you attain the lotus feet of *Aruka paramēṭṭikaḷ*,

And wash off the binding dirt of *iruvin̲ai*,

In the ambrosial stream of *Jinatarma* (Jaina code)

Which provides flawless wealth,

The eternal *Muccōti* will reach you)

In *Tirukkur̲aḷ* the following couplet refers to *iruvin̲ai* as follows:

*irulcēr iruvinaiyum cērā iraivan*

*porulcēr pukalpurintār māṭṭu* (couplet-5)

This couplet is interpreted by Parimēlaḷakar as follows:

The illusory *iruvinai* (both good and bad deeds)

Will not affect those who have understood and preferred the true greatness and glory of God.

The similarity in views on *iruvinai* is quite evident here.

In *Tirukkalampakam* it has been stressed that Arukar's grace alone can help one to conquer sensuous desires.

*poriyaim pulattin vēṭkai nōy*

*tīrkku maruntu enru aruntavarkaḷ*

*pōrrum patattān ceyya patam*

*porrā ruṇarvu ponkātē* (Verse - 102)

(For those who do not proclaim that the fair red feet of Arukan worshipped by austere saints are the sole remedy for reversing the malady of desire stimulated by the five senses originating from the respective sense organs, there will be no improvement in their knowledge or comprehension)

*Tirukkuraḷ* has the following couplet dealing with the five senses:

*porivāyil aintavittān poytīr olukka*

*nerininrār nīṭuvāḷ vār* (Couplet - 6)

Maṇakkuṭavar, a commentator on *Tirukkuraḷ* interprets the *kuraḷ* couplet as follows:

People who abide by the austere code of conduct of those who have controlled the desires related to *ūru* (touch), *cuvai* (taste), *oḷi* (light) *nārram* (smell) and *ōcai* (sound) arising out of the *pori* (sense organs) of *mey* (body) *vāi* (mouth), *kaṇ* (eye), *mūkku* (nose) and *cevi* (ear) will live long.

In *Tirukkalampakam* the following lines proclaim the peerlessness of Arukan in all respects.

*ātiyē yāti yinri yakilamum parantu ninra*

*cōtiyē cotimūnri letaru cuṭarē vāna*

***vītiyē vīti pokum verimalar paka vēta*** (Verse - 22)

(Of! Prime One! Oh! Light which has spread over the entire universe without origin! Oh! Sun which rises and shines in the three *pirapavalayam* (halo) Oh! path of the sky! Oh! He who treads upon that celestial path? Oh! Mahout who rides the elephant of lotus flower! Oh! Expounder of scriptures)

In *Tirukkuṟaḷ*, on the other hand, we have a succinct description of God who is called non-pareil or peerless.

*taṉakkuvamai illātāṉ tāḷcērntārk kallāl*

*maṉakkavalai māṟṟal aritu* (Couplet - 7)

Maṇakkuṭavar, interprets this *kuṟaḷ* as follows.

(People, except those who have sought and attained refuge at the feet of God who is peerless and incomparable cannot get rid of their worries and anxiety)

The concept of peerlessness of God briefly mentioned in *Tirukkuṟaḷ* has been expanded in detail in the *Tirukkalampakam* verses mentioned above. In *Tirukkalampakam* we come across the following verses.

*pēraṟaṅko ṇēmi koṇṭu veṉṟa*

*cōti eṅkaḷ ātiyē* (Verse - 25)

(Our Prime Lord is the Luminous One who has with His *Tarumacakkaram* (wheel of virtue) conquered the vicious foes of *Iruviṉai*)

- - - - -- - - *ulakamēḻum*

*Vantiṟaiñca varuḷāḻi valaṅkoṇ ṭēttum*

*cikaramā maṇi nīla vaṇṇa* - - - - - (Verse - 32)

(Arukaṉ, worshipped by the seven worlds Sporting *Tarumacakkaram* in his right hand is the blue-hued peak of glory)

In the above mentioned lines Arukaṉ is projected as the ultimate upholder of virtue. Similar sentiments are found in the following *Tirukkuṟaḷ* couplet.

*aṟavāḻi antaṇaṉ tāḷcērntārk kallāl*

*piṟavāḻi nīntal aritu* (Couplet - 8)

For this *kuṟaḷ* couplet, Pāratitācaṉ, gives the following explanation.

(Only those who have sought and attained the feet of God who is an ocean of virtue with boundless grace for all beings can swim other oceans of turbulence and tribulation. For others it is impossible) This concept that God is the Supreme Embodiment of virtue is here stated in both *Tirukkalampakam* and *Tirukkuṟaḷ*.

In *Tirukkalampakam* we find the following laudatory verses regarding the divine attributes of Arukan̲.

*van̲aṅkap paṭunteyva nīyallātu yārnin̲ varampikanta*

*kun̲aṅkaṭ kuyar kur̲r̲aṅ kūr̲avallār* (Verse - 107)

(Who else is there to be worshipped as God? Who can find fault with your limitless divine qualities?)

In *Tirukkur̲aḷ* the following couplet declares the eightfold virtue of God

*kōḷil por̲iyir̲ kuṇamilavē eṇkuṇattān̲*

*taḷai van̲aṅkat talai* (couplet - 9)

Man̲akkuṭavar offers the following explanation for this couplet.

(A human body which has a head that does not bow before the God of eightfold virtue is like a puppet without discerning senses)

The supreme qualities of God that make him a worthy object of worship are stressed in both *Tirukkalampakam* and *Tirukkur̲aḷ*.

The following lines are found in *Tirukkalampakam* as a figurative representation of birth as an ocean and the imperative need for God's help in crossing that ocean safely.

*vīcuṭalā meritiraiyin̲ mēvu kaṭan̲ maruvu punai*

- - - - - - - - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

*yēṭaviḻu naḷin̲amicai yēkumavar aṭiyin̲aiyē* (Verse - 54)

(Only the feet of Arukar that tread upon the lotus serve as the proper float to cross the flowing ocean of birth symbolized by the human body)
*Tirukkur̲aḷ* has the following couplet expressing a similar concept.

*pir̲avip peruṅkaṭal nīntuvar nīntār*
*ir̲aivan̲ aṭicērā tar.* (Couplet - 10)

Parimēlaḻakar offers the following commentary for this couplet.

(Those who seek the feet of God as a float will cross the vast ocean of birth whereas those who fail to obtain refuge at God's feet will never be able to swim that ocean and will sink therein)

In both the works, birth is represented as a turbulent ocean and God is projected as the divine float to cross that ocean.

Thus the ten couplets in the first chapter (*atikāram*) entitled *kaṭavuḷ vāḻttu* (Invocation to God), in *Tirukkuṟaḷ* are found almost exactly simulated in *Tirukkalampakam* verses. The remarkable resemblance is in respect of both diction and didactic references.

**_Tirukkalampakam_ and Caivism**

In the Jaina work *Tirukkalampakam* we come across references to Arukatēvaṉ's physical features and divine actions that are quite similar to those of Lord Civaṉ.

***Tirumukaṅkaḷ*** **(Divine faces)**

Among the 1008 appellations of Arukatēvaṉ five are found in the following lines of *Tirukkalampakam*.

*kōtilpukaḷ cattiyōcātaṉ Vāmaṉakōraṉīcāṉaṉ taṟpuruṭaṉ* (Verse - 50)

The five names mentioned as those of the flawless Arukatēvaṉ occur in *Apitāṉa cintāmaṇi* to indicate the five faces of Civaperumāṉ as given below.

| | | |
|---|---|---|
| *cattiyōcātam* | - | One of the faces of Civamūrti |
| *vāmaṉam* | - | One of the faces of Civamūrti |
| *akōram* | - | One of the faces of Catācivamūrti |
| *icāṉam* | - | One of the five faces of Civaṉ |
| *tatpuruṭam* | - | One of the five faces of Civaperumāṉ. |

Thus we find that the five appellations of Arukar mentioned in *Tirukkalampakam* are used to denote the five faces of Lord Civaṉ in *Apitāṉa cintāmaṇi.*

**Tirukkayilāyam (The divine Kailash)**

Kailaiyaṅkiri or kailāyamalai (Mount Kailash) is situated north of The Himalayan range of mountains in the country called Tibet. This mountain, also known as Veḷḷiyaṅkiri, is held sacred by both Caivites and Jainas.

Ātinātar, the first *Tīrttaṅkarar* in Jaina spiritual hierarchy, is deemed to have attained *Vīṭupēṟu* (*mukti* or eternal state of freedom and bliss) at Mount Kailāsh. The following line in *Tirukkalampakam* testifies to the abode of Ātinātar at Mount Kailāsh.

*kayilāyam eṉumtiru malaimēl uraikiṉṟavar* (Verse - 75)

*pōkkaṟu cuṭar veḷḷi*

*mākkayilai micai nāppaṇ* (Verse - 110)

(Ātinātar is a resident of the glorious Kayilāya mountain of sterling and luminous silver)

The devotees of Lord Civaṉ believe that their God resides in Kailāyamalai. In devotional hymns and poems we come across descriptions of *Civanaṭiyārs* (devotees of Civaṉ) undertaking strenuous pilgrimage to Mount Kailash.

In *Tiruttoṇṭar purāṇam*, a hagiographic account of *nāyaṉmār* (ardent devotees of Lord Civaṉ) the following verses are found in *Tirunāvukkaracar purāṇam*.

*āḷu nāyakaṉ kayilaiyil irukkai kaṇṭallāḷ*

*māḷu mivvuṭal koṇṭu mīlēṉeṉa maṟuttār* (Verse - 366)

(Without seeing the abode of the Divine Ruler at Kayilai, I will not return with this mortal body)

Thus Tirunāvukkaracar, the most pious and famous among *nāyaṉmār*, is said to have strongly expressed his desire to visit Mount Kayilāsh and see Lord Civaṉ in His abode, though the saint has to undergo severe hardships, obstacles and strain in his holy mission.

In *Cēramāṉ perumāḷ nāyaṉār purāṇam* we find the following lines.

*innilaimai utiyar pirā ṉempirāṉ vaṉṟoṇṭar*

*poṉṉivaḷa nātakaṉṟu makotaiyiṉiṉ mēṟ pukuntā*

*maṉṉutiruk kayilaiyiṉiṉ matavaraimē leḷuntaruḷa*

*muṉṉarvayap pariyukaikkun tirutto ḻilpiṉ moḻikiṉṟām* (Verse - 174)

These verses describe the devout pilgrimage to Mount Kailāsh astride on elephant and a horse respectively by Cuntaramūrtti nāyaṉār and Cēramāṉ perumāḷ nāyaṉār who were ardent devotees of Lord Civāṉ.

Thus we find in both Caivite and Jaina works reverential references to Mount Kailāsh as the abode of their respective Gods.

**Caṭaimuṭi (Matted locks)**

In *Tirukkalampakam* there are many verses describing the first *Tīrttaṅkarar* Ātinātar as a divine being with matted locks (*caṭaimuṭi*)

*alaneṭu nīḻalamarntaṉai*

*kālamūṉṟu muṭaṉa ḷantaṉai*

*tāḻca ṭaimuṭi cceṉṉik*

*kācaṟupoṉ ṉeyiṟ kaṭavuḷai* (Verse - 110)

Ātinātar is described here as one who sat under the plentiful; shade of a banyan tree, who measured or spanned all the three periods of time (Past, Present and Future), who had trussed up matted locks and who was a God having ramparts of flawless gold around Him.

We have the following lines as well in *Tirukkalampakam* mentioning the *caṭaimuṭi* sported by Jaina saints.

*ṭōṭarpaṭu caṭaiuṭa ṉiruntu tōkaiyarkku*

*iṭarpaṭu maṉattava riṟaimai kēṭparō* (Verse - 89)

(Will the women folk listen to the exposition of the Godliness of those with mental agony by saints with matted locks who sit and preach)

Lord Civaṉ also is lovingly portrayed by Caivites as *Caṭaiyaṉ* (One with matted locks)

In *Periya purāṇam* we come across the following verses, in the account of *Kuṅkiliyakalaya nāyaṉār*

*aṭaivuṟa oṭukki ellām ayarttеḻu maṉpu poṅkac*

*caṭaiyavar malarttāḷ pōṟṟi iruntaṉar tamakkop pillār* (Verse - 13)

In the account of *Vayilār nāyaṉār* the following line is found.

*nīrāruñ caṭaiyārai nīṭumaṉa vālayattuḷ.* (Verse-10)

The terms *Caṭaiyavar* and *Caṭaiyār* in the above cited verses refer to the matted locks of Lord Civaṉ. In 282 contexts in *Periyapurāṇam* and 899 contexts in *Tēvāram* where the term *Caṭaiyaṉ* is employed to denote Lord Civaṉ.

Thus we find both Jains and Caivites using the appellation *Caṭaiyaṉ* honorifically to indicate their respective Gods.

**Kālaṉaikkaṭintavar (He who has conquered Kālaṉ or God of Death)**

In *Tirukkalampakam* there are verses celebrating Aruḳatēvar's conquest of Kālaṉ (God of Death)

*kolaimāṟāk koṭiyaveṅ kuṟṟiṉaiyuṅ kutittaṉaiyē* (Verse - 2)

(You have conquered the cruel and hot *kūṟṟu* (God of Death) who has not deviated from killing)

*kōral māṟṟi utaippatu kūṟṟaiyē* (Verse - 39)

(You have kicked kālaṉ in order to prevent him from killing)

*kōḷvaliya koṭuṅkūṟṟai*
*tāḷvaliyiṉ viḷavutaittaṉāi* (Verse - 110)

(With the might of your effort, You have kicked the cruel God of Death, Who is of evil strength)

Similarly in the hymns of *Tēvāram*, the great Caivite classic, there are about 145 references to Lord Civaṉ's act of kicking Kālaṉ by way of punishment. Tiruñāṉacampantar, the child prodigy in his *Tēvaram* hymns versifies as follows:

*kālaṉaik kaḻalal utaittu orukāmaṉaik kaṉalākac cīrimēy* (Verse - 2036)

(Thou hast kicked kālaṉ and flared up to set abaze Kāmaṉ)

*kālaṉai ōrutaiyil uyirvītucey vārkaḻalāṉ* (Pātal - 3450)

(In just one kick with your ankleted-leg You have deprived Kālaṉ of his life)

Tirunāvukkaracar, another illustrious Caivite saint, observes

*Kālaṉaik kālāl kāynta kaṭavuḷ taṉṉai* (Verse - 659)

(The God who has punished Kālaṉ using his leg)

Thus both Arukatēvaṉ and Lord Civaṉ have been attributed with the act of kicking Kālaṉ (God of Death).

**The conquest of Kāmaṉ (god of Love)**

In *Tirukkalampakam* it is mentioned that Arukatēvar conquered Kāmaṉ (God of Love) in order to get rid of *kāmam* (lust).

*kaṉmūṉṟu tōṉṟiyikal kāmaṉuṭal poṭiyākak kaṉaṉṟāyttūya* (Verse -38)

(You have shown your third eye of *kēvalañāṉam* (ultimate wisdom) in anger to burn the body of Kāmaṉ to ashes.)

*vēka veṅkaṇaik kāmaṉaic ceṟā*
*meyyelā muṭaṉ ṟaluvu kēvalap . . . .* (Verse - 40)

*Kēvalam*, the eternal state of bliss and freedom, which in its fury dispels Kāmaṉ (God of love) who is armed with vigorous and hot arrows and embraces one's body uniformly.

*cilaivayaṅku tōḷaṉaṅkaṉ ṟiṟalaḻitta*
*vicayameṉṉō vicaiyu māṟē* (Verse - 47)

(How does the act of destroying the strength of Kāmaṉ who carried the sugarcane bow on his shoulder, suit Thee?)

*piramaṉē kāmaṉaiven kaṇṭa veṉṟip perumāṉē* (Verse- 80)

(Oh! Piramaṉ! Oh! victorious Lord who has destroyed Kāmaṉ). In the Caivite classical anthology of *Tēvāram*, in 82 contexts we find poetic references to the episode of Lord Civaṉ burning Kāmaṉ to ashes.

In a *Tēvāram* hymn of Tiruñāṉacampantar we come across the following lines.

*kaṉṟiya kāmaṉaiyum uruḷak kaṉal vāy alaṟi*
*poṉṟa muṉinta pirāṉ . . . .* (Verse - 3455)

(The Lord who flared up at Kāmaṉ who erred and made him roll in fire, scream and perish)

Tirunāvukkaracar in his *Tēvāram* hymn observes,

*kāmaṉai aṉṟu kaṇṇāl kaṉal eriyāka nōkki* (Verse - 4534)

(Lord Civāṉ glared at Kāmaṉ, then set him ablaze.) In Cuntaramūrtti nāyaṉar's *Tēvāram* also we find a similar reference.

*Kāman poṭiyākak kaṇmūṉṟu imaitta* (Verse - 8196)

(Lord Civaṉ winked with his third eye to reduce Kāmaṉ to ashes)

Thus Civaṉ and Arukar have been credited with the act of burning Kāmaṉ to ashes.

***Muppuram Erittatu* (The act of burning the three forts or three vices)**

In *Tirukkalampakam* Arukatēvar is said to have burnt and destroyed *muppuram* also known as *mummalam* (Three vices). Those three vices are *kāmam* (lust) *vekuḷi* (anger) and *mayakkam* (illusion).

*iruviṉai iriya mūvaraṉ muṟukkiya* (Verse - 17)

These lines state that Arukar drove *iruviṉai* (both good and bad deeds) away and destroyed *mummalam* (three vices).

*araṉaṅkoṭiya matiṉ mūṉṟu*

*aḻiyak kaṉaṉṟīr aṉṟuḷḷa* (Verse - 37)

These verses also describe the destruction of the fortified and cruel *mummalaṉ* by Arukar. The terms *mūvaraṉ* and *matiṉmūṉṟu* literally mean three forts or three ramparts but spiritually and figuratively they refer to *mummalam* (three vices).

In Caivite works also Lord Civaṉ is attributed with the divine act of having burnt *muppuram* (three forts) or *mummalam* (three vices). Caivism defines *mummalam* as *āṇavam* (arrogance) *kaṉmam* (impact of past deeds) *māyai* (illusion)

In Tiruñāṉacampantar's *Tēvāram* we find the following lines:

*cilaiyiṉāl muppuram tīyeḻac ceṟṟavaṉ* (Verse - 3082)

*cilaitaṉāl muppuram ceṟṟavaṉ* (Verse - 3114)

*kaṇaiyiṉāl muppuram ceṟṟavar* (Verse - 3247)

All the above- mentioned verses refer to Lord Civaṉ's act of burning and destroying *muppuram* by using His *cilai* (bow) and *kaṇai* (arrow). As already mentioned the term *muppuram* means three forts according to mythologies and three vices (*mummalam*) in the spiritual context. This spiritual interpretation can be found in Tirumūlar's *Tirumantiram* a profound poetic work on spiritualism and human life.

*appaṇi ceñcaṭai āti purātaṉaṉ*

*muppurañ ceṟṟaṉaṉ eṉpārkaḷ mūṭarkaḷ*

*muppuramāvatu mummala kāriyam*

*appura meytamai yāraṟi vārē* (*Tirumantiram* - 343)

(Fools will say that the ancient one of red matted locks (Lord Civaṉ) destroyed the three forts (*muppuram*) But *muppuram* is *mummalam* (three vices). Who is aware of that act of aiming (at those vices)? In Caivite works Lord Civaṉ is attributed with the divine act of destroying *mummalam* (*āṇavam, kaṉmam* and *māyai*) ie. the three vices that bind āṉmā (souls). That is the spiritual import of burning muppuram according to Caivite religious doctrine.

In Jainism also Arukar's act of destroying *muppuram* means destroying the *mummalam* (*kāmam, vekuḷi* and *mayakkam*) but in Jainism Arukar does not destroy the *mummalam* of individual souls. Jainism fixes the responsibility of getting rid of mummalam to individual uyir. A person should get rid of his or her own vices caused by *viṉai* (deeds) .Though both Jainism and Caivism attribute the burning of *muppuram* to their respective Gods we find the difference mentioned above regarding whose vices were destroyed.

**Kamaṭaṉ**

In *Tirukkalampakam* the term kamaṭaṉ occurs in two contexts. Kamaṭaṉ is described as a strong and evil demon who is deceitful, furious and hostile by nature.

*aṟaṉilaṭalkeḻu kamaṭaṉakrama caṇṭattut kuṟakkaṉaṉṟeṟi* (Verse - 35)

*vañcat tiṉiṉaḻal vērat tiṉiṉikaṉ*

*māṉak kamaṭaṉ muṉ* (Verse - 52)

The above cited verses describe *Kamaṭaṉ* as a strong person without virtue and his deadly weapon became flowers when they were aimed at Arukar. In *Apitāṉa cintāmaṇi* Kamaṭācuraṉ is portrayed as an evil demon who attempted to kill Lord Vināyakar during the latter's childhood. But Lord Vināyakar overpowered Kamatācuraṉ and killed him. The similarity regarding the evil nature of Kamaṭaṉ in both the Jaina and Caivite works is to be noted. Certain other terms like *ōṅkāram, mukkaṇṇaṉ, civakati* and *Kantakuṭi* occur in both Caivite and Jaina works.

***Tirukkalampakam* and Buddhism**

In a poem of yore, we find a reference to Uticittēvar, the author of *Tirukkalampakam*.

*cāvaka nilaiyōṉ cākkiya kuṭāran*

The line means that this person who is a householder (one who is in the state of *Illaram*) is like an axe in cutting and felling Buddhism.

This anti-Buddhist stance of the author is evident in *Tirukkalampakam* in the following lines:

*munnaip pirapppennil palkōti yellā*
*muyanrinru perrēn mutar pōti yenrē*
*pinnaip piranturra yānillai yennum*
*perumpitta rōputta rāvār teḷintir* (Verse - 67)

Oh! discerning scholars who are aware of *meypporuḷ* (Truth), People who state first that they became enlightened as Buddha, a wise sage, on account of the impact of their past *vinai* (deeds) over billions of their previous birth say later that they were not the ones born earlier. Only such *pittar* (insane people) who are self-contradictory call themselves Buddha or his disciples and followers. Another barbed attack on Buddhism in *Tirukkalampakam* is as follows:

*Uraiyōm payanceyta varkenru vaittara mōtum vañca*
..... ...... ...... ......
..... ....... ....... ......
*niraiyō turaṅkun turaimayi lāpuri ninravarē.* (Verse- 74)

(See the deceitful Buddhists who do not attribute the impact of *vinai* (deeds) of the past births of one during one's present birth)

According to the followers of Jainism, one who seeks to protect virtue should take cognizance of the *vinai* of previous birth and regulate his present code of conduct accordingly. As Buddhism does not follow this concept Buddhists are not eligible to preach *tarmam* (*virtue*) to others.

Under the technique of employing the structure, *kaḷi*, (singing under the spell of intoxication the poet imparts the meaning that he does not refer to the toddy poured on the head of Piraman and given to Civan by Tirumāl, nor that which was drunk by Buddha under the Pipal tree, nor that which was drunk by Brahmins chanting Mantras, it is the Pañca mantra, always chanted by the devotees of Arukar, which suits to the taste of his tongue. Here the poet attacks the Hindu deities like Civan, Piraman, Tirumāl. Similarly under the *campiratam* technique, the poet says that he would preach the Jaina code of virtue into the ears of people belonging to other religions like Buddhism.

# திருக்கலம்பகம்

## மூலமும் அனந்ததேவர் உரையும்

### காப்பு

1. *பதினறுவர் பொன்வண்ணர் பச்சை யிருவர்*
*மதிவண்ணர் மற்றோ ரிருவர் - கதியடைந்த*
*செம்மைநிறத் தோரிருவர் சேர்ந்த முகிலிருவ*
*ரெம்மைக்குந் தெய்வ மெமக்கு.*

**பதப்பொருள்** : பொன்வண்ணர் - பொன்னிறமுடையவர்கள். பதினறுவர் - பதினாறு தீர்த்தங்கரரும். பச்சை - பசுமை நிறமுடையவர்கள். இருவர் - இரண்டு தீர்த்தங்கரரும். மதி - சந்திரன் போன்ற. வண்ணர் - நிறமுடையவர்கள். ஓரிருவர் - இரண்டு தீர்த்தங்கரரும். கதி - பஞ்சமகதியை. அடைந்த - சேர்ந்த. செம்மை நிறத்தோர் - சிவந்த வண்ணமுடையவர்கள். இருவர் - இரண்டு தீர்த்தங்கரரும். எம்மைக்கும் - இம்மை மறுமை யென்னு மெப்பிறப்பினுக்கும். தெய்வம் - சுவாமி. எமக்கு - எங்கட்கு என்றவாறு.

**பொழிப்புரை** : பஞ்சமகதியையடைந்த பொன்வண்ணர் பதினறுவரும், பச்சை வண்ணரிருவரும், வெள்ளை வண்ணரிருவரும், சிவந்த வண்ணரிருவரும் மேக நிறமுடையவ ரிருவரும் ஆகிய தீர்த்தங்கரரிருபத்து நால்வரும் எப்பிறப்பினுக்கும் எங்கட்குக் கடவுள் என்றவாறு.

மற்று - அசை, கதியடைந்தவர்கள் என்றது நடுநிலை தீபம், உத்சர்ப்பிணி, அவசர்ப்பிணி யென்னுங் காலவிகற்பத்தான் முறையே இருபத்து நால்வராக அவதரிப்பினுந் தன்மையால் ஒருவரே ஆகையால் தெய்வம் என ஒருமையாகக் கூறினார். இயற்கையா யெண்குணமு மெய்தி விருப்பு வெறுப்பின்றி யுருவமு மருவமும் ஒருங்கே எய்தி முக்தியாகிய மூவுலகத்து உச்சியின் விளங்குகின்ற சித்தரிடத்தில் வைத்த தியானத்தால் கற்பத்து உச்சியாகிய அகமிந்திர லோகத்தினின்றும் அவதரித்து மத்திம லோகத்தில் சுவாமி, சீவன், கருமம், காலம், வேதம், உலகம் என்னும் அறுவகை நித்தியப் பொருள்களின் குணங்களை விளக்கி, காம, வெகுளி, மயக்கமாகிய குற்றமுடையவர்களைக் கடவுள் என்று முன்னோடு பின் மாறுபட்டுத் தீநெறியை விரிப்பதாகிய நூலை நம்பி மயங்கும் மயக்கத்தை நீக்கி முக்தியடைந்தவர் ஆகையால் "கதியடைந்த" வென்றார்.

விருஷபர், அசிதர், சம்பவர், அபிநந்தர், சுமதிநாதர், சீதளர், சிரேயாஞ்சர், விமலர், அநந்தர், தர்மர், சாந்திநாதர், குந்துநாதர், அரநாதர், மல்லிநாதர், நமிநாதர், வர்த்தமானர் என்னும் பதினறுவரும் பொன்வண்ணமுடையவர்கள்; பார்சுவநாதர், சுபார்சுவநாதர் என்னுமிருவரும் பச்சை வண்ணமுடையவர்கள்; சந்திரபிரபர், புஷ்பதந்தர் என்னுமிருவரும் வெள்ளை வண்ணமுடையவர்கள்; பத்மபிரபர், வாசுபூச்சியர் என்னுமிருவரும் சிவப்பு வண்ணமுடையவர்கள்; முனிசுவிரதர், நேமிநாதர் என்னுமிருவரும் நீலவண்ணமுடையவர்கள்; இம்மை - இப்பிறப்பு, மறுமை - வரும்பிறப்பு. அம்மை - முக்தி.

நடுவுநிலைத்தீபம் :- இடைநிலை விளக்கணி.

உத்சர்ப்பிணி - இவ்வுலகம் எக்காலத்தில் தாழ்விலிருந்து உயர்வை நோக்கிச் செல்கின்றதோ அது உத்சர்ப்பிணி (உயர்வைக்கொண்டது) காலம் என்று கூறப்படுகிறது.

அவசர்ப்பிணி : இவ்வுலகம் எச்சமயம் உயர்விலிருந்து தாழ்வை நோக்கி வருகின்றதோ அது அவசர்ப்பிணி (தாழ்வைக் கொண்டது) காலம் என்று கூறப்படுகிறது.

அகமிந்திரலோகம் : எழுவகை உலகங்களுள் 6-வது உலகம், இந்திரர்கள் இருப்பிடம்.

எண்குணம் : கடையிலா அறிவு, கடையிலாக்காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு.

# Tirukkalampakam

## Text with Anantatevar's commentary

### *kāppu*

*patiṉaṟuvar poṉvaṇṇar paccai yiruvar*
*mativaṇṇar maṟṟō riruvar - katiyaṭainta*
*cemmainiṟat tōriruvar cērnta mukiliruva*
*remmaikkun teyva memakku.*

### Invocation

The sixteen *Tīrttaṅkarars*[1] of golden complexion,
Two *Tīrttaṅkarars* green in their hue,
Another two in the shade of the moon white,
Two others crimson - coloured
And two more *Tīrttaṅkarars* azure in complexion
These God - incarnates all who have obtained *kati*[2]
Our sole God- head are they at our births all.

## Explanatory notes

According to variations in time, like *utcarppiṇi*, *avacarppiṇi* the *Tīrttaṅkarars* form 24 in number. But all these 24 incarnations refer to one God. Hence, the singular form of word *teyvam* is employed in Tamil version.

1. *Tīrttaṅkarars* are worshipped as deities by the followers of Jainism. They are twentyfour in number deemed as manifestations of a sole Godhead.

Sixteen *Tīrttaṅkarars* of golden complexion are :- Viruṣapar, Acitar, Campavar; Apinantar,Cumatinātar, Cītaḷar, Cirēyāñcar, Vimalar, Anantar, Tarmar, Cāntinātar,

Kuntunātar, Aranātar, Mallinātar Naminātar, Varttamāṉar.

Two *Tīrttaṅkarars* of green complexion: Pārcuvanātar, Cupārcuvanātar.

Two *Tīrttaṅkarars* of white complexion : Cantirapirapar, Puṣpatantar.

Two *Tīrttaṅkarars* of red complexion: Patmapirapar, Vacupūcciyar.

Two *Tīrttaṅkarars* of sky-blue complexion : Municuvirataṟ, Nēminātar.

2. *kati* - Eternal state in Jainism. *Kati* is a comprehensive term denoting the ultimate state of eternity attained after passing through at birth a few stages of aberration in the passage of Time, adopting virtues by means of meditation and elucidation and eliminating vices and illusions.

*utcarppiṇi* : A period of time when the world progresses from a lower condition to a higher one.

*avacarppiṇi* : A period of time when the world declines from a higher state to a lower one.

### கொச்சக வொருபோகு கலிப்பா

#### தரவு

2. *பூநான்கும் பொதுளிவெறி திசைநான்கும் போயுலவத்*
*தேனார்ந்து சுரும்பாடத் திகழ்பிண்டித் திருநீழல்*

*நிலவுமிழ்ந்து நீர்த்ததும்ப நிழன்மாலை நித்திலஞ்சூழ்*
*குலவிலங்கு மதிமூன்றிற் குடைமூன்று முடனிழற்ற*

*பாங்கிலகு மணிக்கவரி பன்னூறா யிரமசைய*
*வோங்கரியா சனத்தும்ப ருலகுதொழ விருந்தனையே.*
*(இவை மூன்றும் தரவு)*

#### தாழிசை

*கயல்பிறழ்வ தெனப்பிறழுங் கருந்தடங்கண் ணார்கலவிச்*
*செயல்பிறவி வித்தென்று செறிதவர்முன் னுரைத்தருளி*

*தேறாத பிறப்பிகழ்ந்த சித்தியெனுங் கன்னியுடன்*
*மாறாத பேரின்ப மகிழ்வதுநின் குணனாமோ.*

*அடுமாற்ற லாருயிர்மே லாறாது மிகுந்தசினந்*
*தடுமாற்றந் தருமென்று தவவரசர்க் குரைத்தருளி*

*யிரியவிரு வினைப்பகைவ ரிகல்வாட்டி யைம்புலவெங்*
*கரியகதக் கடக்களிறு காய்ந்ததுநின் னருளாமோ.*

*உள்ளத்தா லெவ்வுயிர்க்கு மொத்தொழுகா தவர்பிறவி*
*வெள்ளத்தாழ் பவரென்று விரித்தவர்முன் விரித்தருளி*

*அன்போடு தொழுதெழுவார்க் கமருலக மளித்தமையா*
*னின்போல வரகதியு ணிறுத்துதனின் னியல்பாமோ.*
*(இவையாறும் தாழிசை)*

**அராகம்**

*கறையறு சுடர்மணி கரதல நடுவண*
*தெனமுழு துணரு நின்மதி*
*நறையலர் வெறியென நகுமணி யொளியென*
*நணுகியல் பினது நின்சுகம்*
*விரைசெறி முளரியின் மிசைமுறை பெயரல*
*மிதியல வியலு நின்னடி*
*வுரைபல தருகுவ துடன்மலை விலதரு*
*வொடுபொரு டழீயது நின்மொழி.*
*(இவை நான்கும் அராகம்)*

**தாழிசை**

*நறையோடத் தோடவிழு நறும்பூமென் கணைதுரந்து*
*நிறையோடப் பொருமதனை நீராக நோக்கினையே.*

*அலைமாறாக் கதிக்கடலு ளழுந்துயிர்வேட் டலமருஉங்*
*கொலைமாறாக் கொடியவெங் கூற்றினையுங் குதித்தனையே.*

*எழுதருசெஞ் சுடர்போனின் றிலங்கொளிமண் டலத்தினையே*
*தொழுதகுவீட் டிறைவிமணந் தூற்றுந்துந் துபியினையே.*
*(இவை மூன்றும் பெயர்த்தாழிசை)*

**அம்போதரங்கம்**

*அழர்பொழியத் தேன்பொழியு மசும்பொழியா முன்றினையே*
*உலகடங்க வுள்ளடங்கி யொலியடங்கா வெயிலினையே.*
*(இவை நாற்சீரோரடி - இரண்டு அம்போதரங்கம்)*

### அம்போதரங்கம்

*தொன்மறையை விரித்தோய் நீ*
*துருநயங்க ளழித்தோய் நீ*
*நன்னெறியை வகுத்தோய் நீ*
*நமனணுகாக் கதியோய் நீ*
*(இவைமுச்சீரோரடி - நான்கு அம்போதரங்கம்)*

### அம்போதரங்கம்

*வீரன் நீ விமலன் நீ விண்ணும் நீ கண்ணும் நீ*
*தீரன் நீ சுகதன் நீ சிவனும் நீ தவனும் நீ*
*(இவை இருசீரோரடி - எட்டு அம்போதரங்கம்)*
*எனவாங்கு (தனிச்சொல்)*

### சுரிதகம்

*ஒருதனிக் கடவுணிற் பரவுது முயிர்க*
*ளின்னல்வெங் கனல்கூர் புன்னெறித் தலைச்சென்*
*றுறுபுலக் கோண்மாத் திரிதரு மகன்றலைப்*
*பிறவிக் கானத்து மறவியுற் றுழந்தாங்*
*கலமரு துயரினை யெறியுநின்*
*னில்மரு திகிரி நீடுவாழ் கெனவே.*

*(இது சுரிதகம்)*

**பதப்பொருள் :** பூ நான்கும் - நால்வகை மலரும். பொதுளி - நெருங்கி. வெறி - அம்மலர்களின் வாசனையானது. திசை நான்கும் - நான்கு திக்குகளிலும் போய்ச்சென்று. உலவ - திரிய. தேன் - அம்மலர்களின் மதுவை. ஆர்ந்து - உண்டு. சுரும்பு - நால்வகை வண்டுகள். பாட- இசைபாட. திகழ் - விளங்கப்படுகின்ற. பிண்டி - அசோகினுடைய. திரு - அழகிய. நீழல் - நிழலில். நிலவு- பிரகாசத்தை. உமிழ்ந்து - வீசி. நீர் - குணமானது. ததும்ப - அதிகரிக்க. நிழல் - குளிர்ச்சிபொருந்திய. மாலை நித்திலம் - முத்துமாலைகள். சூழ் - சூழ்ந்த. குலவிளங்கு- மிகவும் விளங்குகின்ற. மதிமூன்றின் - மூன்றுமதிபோல. குடைமூன்றும் - முக்குடையும். உடன் - அவ்வசோக நிழலுடன். நிழற்ற - நிழல் செய்ய. பாங்கு - இருமருங்கிலும். இலகு - ஒளிர்கின்ற. மணி - அழகிய. கவரி - சாமரைகள், பன்னூறாயிரம்- நான்கு குறைந்த நாற்பது லட்சம். அசைய- அசைக்க. ஓங்கு - உயர்ந்த. அரியாசனத்து - சிங்காசனத்தில், உம்பர் - நான்கு அங்குலத்தின் மேல். உலகு - மூவுலகத்தவரும். தொழ - வணங்க. இருந்தனை - வீற்றிருந்தாய்.

கயல் - கயல்மீன்கள். பிறழ்வதென - பிறழுவனபோல். பிறழும் - பிறழாநின்ற. கரும் - கருமையாகிய. தடம் - பரந்த. கண்ணார் - கண்களையுடைய மாதரது. கலவி - புணர்ச்சியாகிய. செயல் - தொழிலானது. பிறவி - பிறப்பினுக்கு. வித்தென்று - மூலமென்று. செறி - நெருங்கிய. தவர்முன் - முனிவரெதிர். உரைத்தருளி - சொல்லி அருளி. தேனாக- அளவு காணப்படாத.

பிறப்பு - பிறப்பினின்றும் இகந்த - நீங்கிய. சித்தியெனும் - முத்தியாகிய. கன்னியுடன் - பெண்ணுடன். மாறாத - நீங்காத பேரின்பம் - அனந்தவின்பத்தினால். மகிழ்வது - நீயின்புறுவது. நின் - நினது. குணனாமோ - குணமாகுமோ. அடு - தம்மைக் கொல்ல வருகின்ற. மாற்றலார் - பகைவருடைய. உயிர்மேல்- ஜீவனிடத்தும். ஆறாது - அடங்காமல். மிகுந்த - அதிகரிக்க. சினம் - கோப்மானது. தடுமாற்றம் - பிறவியை. தருமென்று - கொடுக்குமென்று. தவவரசர்க்கு- முனீந்திரர்களுக்கு. உரைத்தருளி - சொல்லியருளி. யிரிய - கெடும்படி. இருவினை - தேசகாதி, சர்வகாதி யென்னும் இருவினைகளாகிய. பகைவர் - பகைவருடைய. இகல் - வலியை. வாட்டி- கெடுத்து. ஐம்புலம் - பஞ்சவிஷயங்களாகிய. வெம் - வெப்பமாகிய. கரிய - கருத்த. கதம் - கோபமும். கடம்- மதமுடைய. களிறு - யானைகளை. காய்ந்தது - கொன்றது. நின் - நினது. அருளாமோ - கருணையாகுமோ. உள்ளத்தால் - உள்ளன்பினால். யெவ்வுயிர்க்கும் - ஐவகைப்பட்டவுயிர்கட்கும். ஒத்து - ஒத்துநின்று. ஒழுகாதவர் - நடக்காதவரே. பிறவி - பிறப்பாகிய. வெள்ளத்து - கடலில். ஆழ்பவரென்று - அழுந்துவரென்று. விரி - பரந்த. தவர்முன் - முனிவர்முன். விரிததருளி - சொல்லியருளி. அன்போடு - விருப்புடன். தொழுது- வணங்கி. எழுவார்க்கு - எழுபவருக்கு. அமருலகம் - வானவருலகத்தை. அளித்து - கொடுத்து. அமையா - கிடையாத. நின்போல - உன்னைப்போல. வரகதியுள் - முத்தியில். நிறுத்துதல் - வைக்குதல். நின் - நினக்கு. இய்ல்பாமோ - தன்மையாமோ.

கறையறு - குற்றமற்ற. சுடர் - ஒளியையுடைய. மணி - இரத்தினமானது. கரதலம்- கையினுடைய நடுவணதென - மத்தியிலிருப்பக் காண்பதுபோல. முழுதும் - உலகமனைத்தையும். உணரும் - அறியும். நின் - உனது. மதி - அனந்த ஞானம். நறை- தேன்பொருந்திய. அலர் - பூவினது வெறியென - மணம்போலவும். நடு - விளங்குகின்ற. மணி- ரத்தினத்தினுடைய. ஒளியென - விளக்கம் போலவும். நணுகு - பொருந்திய. இயல்பினது- தன்மையுடையது. நின் - உனது. சுகம் - அனந்தசுகம். விரை - வாசனையானது. செறி - பொருந்திய. முளரியின் - தாமரைப்பூவின். மிசை - மேல். முறை - இருபாதங்களுமுறையாக. பெயரல - நடவாதனவாகவும். மிதியல - மிதியாதனவாகவும். இயலும் - நடக்கும். நின் - உனது. அடி - பாதங்கள். உரைபல - பதினெண் மொழிகளையும். தருகுவது - கொடுப்பதாகியும். உடன் - அதினுடன். மலைவு - முன்னொடு பின் மாறுபாடு. இலது - இல்லாததாகியும். அருளொடு- ஜீவகாருண்யத்துடன். பொருள் - அறுவகைப் பொருளையும். தழீயது - தழுவி நிற்பது. நின் - உனது. மொழி - பரமாகமம்.

நறை - தேனானது. ஓட - பெருக. தோடு - இதழ்கள். அவிழும் - விரிகின்ற. நறும்- வாசனை பொருந்திய. பூ - மலர்களாகிய. மென் - மெல்லிய. கணை - பாணங்களை. துரந்து - ஏவி. நிறை - மனநிலை. ஓட -கெட. பொரு - போர்செய்கின்ற. மதனை - மன்மதனை. நீறாக - நீறுபட. நோக்கினை- பார்த்தாய். அலை - திரைகள். மாறா - நீங்காத. கதி - நாற்கதியாகிய. கடலுள் - கடலில் அழுந்து - முழுகுகின்ற உயிர் - ஜீவன்களை. வேட்டு - விரும்பி. அலமருவும் - சுழல்கின்ற. கொலை - கொல்லுந்தொழில். மாறா - நீங்காத. கொடிய - கொடுமையான. வெம் - வெப்பமுடைய கூற்றினையும் - காலனையும். குதித்தனை - கடந்தாய். எழுதரு - உதிக்கின்ற. செஞ்சுடர்போல் - சூரியனைப்போல,. நின்று - நிலைபெற்று. இலங்கு - விளங்காநின்ற ஒளிமண்டலத்தினை - பிரபாவலைய மூன்றினையுடையாய். தொழுதகு - யாவரும் வணங்கத்தக்க. வீட்டிறைவி - முத்தி நாயகியினுடைய. மணம் - கல்யாணத்தை. தூற்றும் - அறிவிக்கின்ற. துந்துபியினை - துந்துபியினையுடையாய்.

அலர் - மலர்களை. பொழிய - தேவர்கள் சொரிய. தேன் - அம்மலர்களின் மதுவை. பொழியும் - பொழிதலினாலே. அசும்பு - வழுக்குதல் நீங்காத. முன்றினை - முற்றத்தையுடையாய் உலகு - மூவுலகத்தவரும். அடங்க - தன்னுள் அடங்க. உள் - மத்திமலோகத்துள். அடங்கி - தானடங்கி. ஒலி - திவ்வியத்தொனியை. அடக்கா - அடக்காத யெயிலினை - மும்மதிலையுடையாய்.

தொல் - பழமையாகிய. மறையை - வேதங்களை. விரித்தோய் நீ - சொன்னவன் நீயே துருநயங்கள் - ஏகாந்தவாதங்களை. அழித்தோய்நீ - கெடுத்தவன் நீயே. நன்னெறியை- அநேகாந்த வாதத்தை. வகுத்தோய் நீ - வகுத்தவன் நீயே. நமன் - காலன். அணுகா - நெருங்காத. கதியோய் நீ - முத்தியையுடையவன் நீயே.

வீரன்நீ - அனந்தவீரியத்தையுடையவன் நீயே. விமலன்நீ - நிர்மலத்தையுடையவன் நீயே. விண்ணும்நீ - ஆகாயஸ்தானத்தை உடையவன் நீயே. கண்ணும்நீ - ஞானக்கண்களையுடையவன் நீயே. தீரன்நீ - தீரத்தையுடையவன் நீயே. சுகதன்நீ - நன்னடையை யுடையவன் நீயே சிவனும்நீ- மங்களகரத்தை யுடையவன் நீயே. தவனும்நீ- தவத்தையுடையவன் நீயே என - என்று; இவ்வாறாக. ஒருதனி - ஒப்பற்ற கடவுள் - அருகபரமேஷ்டியே. நின் - உன்னை. பரவுதும் - யாம் துதிப்போம். உயிர்கள் - ஜீவன்கள். இன்னல் - துன்பமாகிய. வெம் - வெப்பம் பொருந்திய. கனல் - நெருப்பானது. கூர் - மிகுந்த. புன் - அற்பமதமாகிய. நெறித்தலை - வழியில், சென்று- போய். உறு - பொருந்திய. புலம் - பஞ்சவிசயங்களான. கொல் - கொலை செய்யும். மா - மிருகங்கள். திரிதரும் - திரிகின்ற அகன் - பரந்த. தலை - யிடத்தையுடைய. பிறவி - பிறப்பாகிய. கானத்து - காட்டில் மறவியுற்று - நன்னெறியில் செல்ல மறந்து. உழந்து - உழன்று. ஆங்கு- அப்பிறவிக் காட்டில். அலமரும் - சுழல்கின்ற. துயரினை - துன்பத்தை. யெறியும் - அறுக்கின்ற. நின் - உனது. நிலம் - மூவுலகத்தினும். மரு - மருவிய திகிரி - அறவாழி. நீடு - அனந்த .காலம். வாழ்கெனவே. வாழ வேண்டுமென்றே என்றவாறு.

**பொழிப்புரை :** நால்வகை மலரும் நெருங்கி அம்மலர்களின் வாசனை நான்கு திக்கினுஞ் சென்று திரிய அம்மலர்களின் மதுவையுண்டு நால்வகை வண்டுகளிசைபாட விளங்கப்படுகின்ற வசோகினுடைய வழகிய நிழலிற் பிரகாசத்தை வீசிக் குணமானது தளும்ப குளிர்ச்சி பொருந்திய முத்துமாலைகள் சூழ்ந்த மிகவும் விளங்குகின்ற மும்மதிபோல் மூன்று குடையும் அவ்வசோக நிழலுடன் நிழல் செய்ய; இருமருங்கிலும் ஒளிர்கின்ற அழகிய சாமரைகள் நான்கு குறைந்து நாற்பது லட்சம் சுழல வுயர்ந்த சிங்காசனத்தின் நான்கு அங்குலத்தின் மேல் மூவுலகத்தவரும் வணங்க வீற்றிருந்தாய்.

கயல்மீன்கள் புரளுவன போலப் புரளா நின்ற கருமையாகிய அகன்ற கண்களுடைய மாதரது புணர்ச்சியாகிய தொழிலானது பிறப்பினுக்கு மூலமென்று நெருங்கிய முனிவர்களுடைய யெதிரே சொல்லியருளி; அளவு காணப்படாத பிறப்பினின்றும் நீங்கிய முத்தியாகிய பெண்ணுடன் நீங்காத அனந்த வின்பத்தினான் மகிழ்வது நின்குணமாகுமோ? தம்மைக் கொல்லவருகின்ற பகைவருடைய ஜீவனிடத்தும் அடங்காமல் அதிகரித்த கோபமானது பிறவியைக் கொடுக்குமென்று முனீந்திரருக்கு சொல்லியருளி தேசகாதி சர்வகாதி என்னும் யிருவினைகளாகிய பகைவர்கள் வலியைக் கெடுத்து பஞ்சவிஷயங்களான வெப்பமாகிய கோபமும் மதமுமுடைய கருத்தயானைகளைக் கொன்றது நினது கருணையாகுமோ? உள்ளன்பினால் ஐவகைப்பட்ட உயிர்கட்கு மொத்து நின்று ஒழுகாதவரே பிறப்பாகிய கடலிலழுந்துவாரென்று பரந்த

முனிவரெதிரே சொல்லியருளி விருப்புடன் வணங்கி யெழுபவருக்கு வானவருலகத்தை கொடுத்து கிடையாத முத்தியின்கண் உன்னைப்போல் வைக்குதல் நினது தன்மையாகுமோ?

குற்றமற்ற ஒளியையுடைய இரத்தினமானது கையின் மத்தியிலிருப்பக் காண்பது போல மூவுலகையும் அறியுமுனது அனந்த ஞானம்; தேன் பொருந்திய பூவினதுமணம் போலவும் விளங்குகின்ற இரத்தினத்தினது விளக்கம் போலவும் பொருந்திய தன்மையுடையது உனதனந்தசுகம்; வாசனை பொருந்திய தாமரைப்பூவின் மேலிருபாதமும் முறையாக நடவாதனவாகவும் மிதியாதனவாகவும் நடக்கும் உனதுபாதங்கள்; பதினெண் மொழியையுங் கொடுப்பதாகியும் அதினுடன் முன்னோடு பின் மாறுபாடில்லாதாகியும் ஜீவகாருண்யத்துடன் அறுவகைப்பொருளையுந் தழுவி நிற்பது நினது பரமாகமம்.

தேன்பெருகு மிதழ்கள் விரியாநின்ற வாசனை பொருந்திய மலர்களாகிய மெல்லிய பாணங்களை யேவி மனநிலை கெடப் போர் செய்கின்ற மன்மதனை நீறுபடப் பார்த்தாய். பிறப்பாகிய அலைகள் நீங்காத நாற்கதியான கடலில் முழுகுகின்ற ஜீவன்களை விரும்பிச் சுழல்கின்ற கொல்லுந் தொழில் நீங்காத கொடுமையான வெப்பமுடைய காலனையுங் கடந்தாய். உதிக்கின்ற சூரியனைப் போல் நிலைபெற்று விளங்குகின்ற பிரபாவலய மூன்றினையுடையாய்.. யாவரும் வணங்கத்தக்க முத்திநாயகியினுடைய கல்யாணத்தை அறிவிக்கும் துந்துபியினையுடையாய்.

தேவர்கள் மலர்களைச் சொரிய அம்மலர்கள் மதுவைச் சொரிதலினாலே வழுக்குதல் நீங்காத முற்றத்தினையுடையாய். மூவுலகத்தவரும் தன்னுள்ளடங்க, மத்திமலோகத்துட் தான் தங்கி திவ்விய தொனியை யடக்காத மும்மதிலையுடையாய்.

பழைமையாகிய வேதங்களைச் சொன்னவன் நீயே. ஏகாந்தவாதங்களைக் கெடுத்தவன் நீயே. அனேகாந்தவாதத்தை வகுத்தவன் நீயே. காலன் நெருங்காத முக்தியையுடையவன் நீயே.

அனந்த வீரியத்தை யுடையவன் நீயே; நிர்மலத்தையுடையவன் நீயே; ஆகாய தானத்தை யுடையவன் நீயே; ஞானக் கண்ணினையுடையவன் நீயே; தீரத்தையுடையவன் நீயே; நன்னடையை யுடையவன் நீயே. மங்களகரத்தை யுடையவன் நீயே; தவத்தையுடையவன் நீயே.

இவ்வாறாக,

ஒப்பற்ற கடவுளே! ஜீவன்கள் நன்னெறியில் செல்ல மறந்து பரந்தவிடத்தை யுடைய பிறப்பாகிய காட்டிற் பொருந்திய பஞ்ச விஷயங்களான் கொலை செய்யும் மிருகங்கள் திரிகின்ற துன்பமாகிய வெப்பம் பொருந்திய நெருப்பு மிகுந்த அற்பமாகிய வழியிற் சென்று சுழன்று அப்பிறவிக் காட்டில் சுழலாநின்ற துன்பத்தை; அறுக்கின்ற மூவுலகினு மருவிய உனது அறவாழி அனந்தகாலம். வாழ வேண்டுமென்றே யாம் உன்னை துதிப்போ மென்றவாறு.

**வி-ரை :** இதனால் இறைவனது பெருமையும் அவனருள் வழிபட்டு நடக்கும் அறவாழியினது தன்மையுஞ் சீவன்களுடைய வெளிமையுங் கூறப்பட்டன. சுரும்பு, அமரர் முன்றில் - கடைக்குறை விகாரம். குலவிலங்கு, ஒருதனி- மீமிசைப்பதம் ஏகாரம் - தேற்றேகாரம் இதனுள், யாம் - தோன்றாவெழுவாய், உன்னை - செயப்படுபொருள்• துதிப்போம் - பயநிலை.

நால்வகை மலராவன: கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ.

நால்வகை வண்டுகளாவன: கருவண்டு, பொன்வண்டு, ஞிமிறு, சுரும்பு.

குடை மூன்றாவன : சந்திராதித்தியம் (முத்துக்குடை), நித்தியவினோதம் (மாணிக்கக்குடை), சகலபாஜனம் (பொற்குடை).

பிரபாவலயம் மூன்றாவன - தீர்த்தங்கரர்களின் பின்னால் விளங்கும் ஒளி மண்டலம் பிரபாவலயம் ஆகும். அவை,

1. ஆலோகம் - முற்பிறவி, பிற்பிறவி ஆகியவற்றைக் காணுதல்.
2. பிரபாமூர்த்தி - அந்த ஒளியே உருவமாக இருத்தல்.
3. கனகப்பிரபை - பன்னிரு கணங்களுக்கும் தலைவனான ஒளியை உண்டாக்குவது.

மதில் மூன்றாவன - உதயதரம் (உயர்வைக் கொடுக்கக்கூடியது) பிரீதிதரம் (மகிழ்ச்சியை உண்டாக்குவது. கல்யாணதரம் (நன்மையை உண்டாக்குவது).

ஐந்து விசயங்களாவன: சப்தம் (ஓசை) ஸ்பரிசம் ( தொடுதல் ) ரூபம் (உருவம்) ரஸம் (சுவை) கந்தம் (நாற்றம்).

ஐவகை உயிர்களாவன: ஏகேந்திரியம் (ஓரறிவுயிர்) துவீந்திரியம் (ஈரறிவுயிர்) திரீந்திரியம் (மூவறியுயிர்) சதுரிந்திரியம் (நாலறிவுயிர்) பஞ்சேந்திரியம் (ஐந்தறிவுயிர்).

அறுவகைப் பொருளாவன

ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம்.

**ஜீவன்** : இது ஆன்மா, உயிர் எனவும் அழைக்கப்பெறும். உயிர்கள் எண்ணிறந்தன; அழிவில்லாதன, அநாதியாக உள்ளன. இவற்றைக் கடவுள் படைக்கவில்லை. நல்வினை, தீவினை என்னும் புண்ணிய பாவங்களைச் செய்து, அவற்றின் பயனாக இன்ப, துன்பங்களைத் துய்ப்பதும், நரககதி, விலங்கு கதி, மக்கள்கதி, தேவகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து, இறந்து உழன்று திரிவதும் இருவினைகளை அறுத்துப் பிறவா நிலையாகிய பேரின்ப வீட்டினை அடைவதும் உயிர்களின் இயல்பாகும்

உயிர்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என்று ஐந்து வகைப்படும். ஐயறிவுயிர் பகுத்தறிவு உள்ளவை, பகுத்தறிவு இல்லாதவை என இரு வகைப்படும்.

உயிர்கள் வீட்டது, மாற்றது என இருவகைப்படும். வீட்டது எனப்படும் 'மோட்சசீவன்' அறிவு விளக்கப்பெற்று இருவினைகளையும் நீக்கி வீடுபேறடையும் தன்மையுள்ளது. மாற்றது எனப்படும் 'சம்சார சீவன்' நல்வினை, தீவினைகளில் கட்டுண்டு அவ்வினைப் பயன்களைத் துய்ப்பதற்காக நரகத்திலும் சுவர்க்கத்திலும் பிறப்பதும், இறப்பதுமாகி உழன்று திரியும் தன்மையுள்ளது. விலங்கு, நரகர், தேவர் என்னும் பிறப்புக்களில் பிறந்த உயிர்கள் அப்பிறவிகளிலேயே வீடுபேறடையாது. மக்களாகப் பிறந்த உயிர்கள் மட்டும் தான் வீடு பேறடைய முடியும்.

**புத்கலம்:** இது உயிர்களில் படிந்து புண்ணிய பாவங்களைச் செய்ய வைக்கும் தன்மையுள்ளது. புத்கலத்தில் ஐந்து புலன்களும், ஐம்புலன்களால் அறியப்படுகின்ற பொருள்களும் இருட்டு, வெளிச்சம், வெய்யில், நிழல், ஒளி, நிலம், நீர், நெருப்பு, காற்று முதலியனவும் அடங்கியுள்ளன.. புத்கலம் நுண்ணிய பருப்பொருளாகவும், பெரிய பருப்பொருளாகவும் மாறும் தன்மையுள்ளது. புதகலத்திற்கு உருவம், நிறம், சுவை, நாற்றம், ஊறு இவைகள் உள்ளன. இது உயிர்களுக்கு உடம்பையும், மனம், வாக்கு, சுகம், துக்கம், பிறத்தல், வாழ்தல், இறத்தல் முதலியனவற்றையும் கொடுக்கின்றது.

**தர்மம் அதர்மம்:** இவை புண்ணியம், பாவம் என்பன அல்ல. தர்மம் அதர்மம் என்பன நுண்ணிய அணுப்பொருள்களாக உள்ளன. இவை உயிர்கள் இயங்குவதற்கும் தங்கி நிற்பதற்கும் இடங்களாக உள்ளன.

மீன்கள் நீந்துவதற்கும் ஓய்வு கொள்வதற்கும் நீர்நிலை உதவுவது போல, உயிர்கள் இயங்குவதற்கும் தங்குவதற்கும் தர்மம், அதர்மம் என்றும் அணுப்பொருள்கள் இடமாக உள்ளன. நடத்தல், ஓடுதல முதலிய இயக்கங்கள் தர்மம் என்னும் அணுக்களின் உதவியினாலாகும். இருத்தல், நிற்றல், கிடததல் முதலியவை அதர்மம் என்றும் அணுக்களின் உதவியினால் ஆகும். இவைகள இல்லையானால் புதகலங்களால் உண்டாகும் பலவகையான உடம்புகள் இயங்கவும் தங்கவும் முடியாது

**காலம்:** பொருள்களில் மாற்றங்கள் உண்டாவதற்கு உதவுவதும், அம்மாற்றங்களை அறிவதற்கும் உதவியாக இருப்பது காலம ஆகும் இது இருவகைப்படும். 1. வியவஹார (நடைமுறை) காலம். 2 நிச்சயகாலம். முதல் வகையினது மாறுதல், செயல் ஒப்பீடு ஆகியவற்றினால் அறியப்படும். இரண்டாம் வகையானது தாமாகவே மாறுதல் அடையும் உயிர் முதலான பொருள்களின் மாறுதலுக்கு உதவியாக இருப்பது.

**ஆகாயம்:** *சமண சமயக் கொள்கைப்படி* ஆகாயம் ஐந்து பூதங்களுள் ஒன்றன்று, இது உயிர்கள், புத்கலம், தர்மம், அதர்மம், காலம் ஆகிய மேற்கூறப்பட்ட பொருள்கள் தங்குவதற்கு இடம் கொடுப்பதாகும் இது லோக ஆகாயம், ஆலோக ஆகாயம் என இருவகைப்படும்.

**ஏகாந்தவாதங்களாவன:** சைவம், வைணவம், இரணியகர்ப்பம், பிரம்மம், பௌத்தம், கபிலம், கணாதரம.

**சர்வகாதியாவன:** எந்த கர்மமானது ஜீவனுடைய குணங்களை முற்றிலும் கெடுக்கின்றதோ அதைச் சர்வகாதி எனகின்றனர். இது இருபததொரு வகைப்படும்.

1 கேவல ஞானா வரணீயம் - உலகில் உள்ள எல்லாவற்றையும் மூன்று கால ஞானத்தையும் அறிய முடியாதவாறு மறைப்பது,

2. கேவல தர்சனாவரணீயம் - பொறிகள், மனம், துணையின்றி ஆன்மாவால் அறியப்படும் முழுதுணர் ஞானமாகிய கேவல ஞானத்தால் காணும் காட்சியைத் தடுப்பது

3 நித்திரா நித்திரை - அதிகத் தூக்கம் வரக் காரணமாயிருப்பது,

4. பிரசலா பிரசலை - உட்கார்ந்து கொண்டே தூங்குதல், வாயிலிருந்து நீர்வடிதல், உடல் நடுங்குதல் முதலியவற்றிற்குக் காரணமானது.

5. நித்திரை - தூக்கம் வரக் காரணமாயிருப்பது.

6 பிரசலை - சிறிது தூக்கம் வரக் காரணமாக இருப்பது கண்களைச் சிறிது திறந்து கொண்டு அரைத்தூக்கம் தூங்குவது.

7 ஸ்த்யான க்ருந்தி - தூக்கத்தில் வேலை செய்தல், நடத்தல், வாய் பிதற்றுதல் முதலியவற்றிற்குக் காரணமானது.

8 அனந்தானுபந்தி குரோதம் - பல பிறவிகளில் தொடரக் கூடிய சினம்

9. அனந்தானுபந்தி மானம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய செருக்கு.

10. அனந்தானுபந்தி மாயம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய வஞ்சனை.

11. அனந்தானுபந்தி லோபம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய பேராசை

ஆகிய நான்கும் நற்காட்சியைத் தடுக்கும் வினைகளாகும்.

12. அப்ரத்யாக்யான குரோதம் - இல்லற நெறியைத் தகர்க்கும் சினம்.

13. அபரத்யாக்யான மானம் - இல்லற நெறியைத் தகர்க்கும் செருக்கு.

14 அப்ரத்யாக்யான மாயம் - இல்லற நெறியைத் தகர்க்கும் வஞ்சனை.

15. அப்ரத்யாக்யான லோபம் - இல்லற நெறியைத் தகர்க்கும் பேராசை.

16 பிரத்யாக்யான குரோதம் - துறவற நெறியைக் கெடுக்கும் சினம்.

17. பிரத்யாக்யான மானம் - துறவற நெறியைக் கெடுக்கும் செருக்கு

18. பிரத்யாக்யான மாயம் - துறவற நெறியைக் கெடுக்கும் வஞ்சனை.

19. பிரத்யாக்யான லோபம் - துறவற நெறியைக் கெடுக்கும் பேராசை.

20. மித்தியா தெரிசனம் - அருகபகவானின் போதனைகளை நம்பாததாகிய தீக்காட்சிக்குக் காரணமானது. இது அழிந்த பிறகே சம்யக்துவம் (நற்காட்சி) தோன்றும்

21. சம்யக் மித்யாத்துவம் - நற்காட்சியின் தன்மையும் தீக்காட்சியின் தன்மையும் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமாவது இஃது இனிப்பும், புளிப்பும் சேர்ந்து வேறொருவகை சுவையாவது போன்றது.

**தேசகாதியாவன** : எந்த கர்மமானது ஜீவனுடைய குணங்களை ஓரளவு கெடுக்கின்றதோ அதை தேசகாதி என்கின்றனர். இது இருபத்தாறு வகைப்படும்.

மதிஞானா வரணீயம் - இயல்பாக அறியும் அறிவை மறைப்பது.

2. சுருதஞானா வரணீயம் - நூல் அறிவைப் பெறமுடியாதவாறு மறைப்பது.

3. அவதிஞானா வரணீயம் - முற்பிறப்பை அறியும் அறிவை மறைப்பது.

4. மனப்பர்யயஞானா வரணீயம் - பிறருடைய மனத்திலுள்ளவற்றை அறிய முடியாதவாறு மறைப்பது.

5. சக்சு தர்சனா வரணீயம் - கண்களால் காணும் காட்சியை மறைப்பது.

6. அசக்சு தர்சனா வரணீயம் - மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் அறிதலை மறைப்பது.

7. அவதி தர்சனா வரணீயம் - ஓர் அளவுக்கு உட்பட்டு பிற உருவப் பொருள்களை ஆன்மன்மூலம் நேராக அறியும் அறிவாகிய அவதி ஞானத்தால் காணும் காட்சியைத் தடுப்பது.

8. சம்யக்த்வ பிரக்கிருதி - நற்காட்சியின் தன்மையினை அடியோடு கெடுக்கும் தன்மையின்றிச் சில சலனங்களை - குற்றங்களைத் தோற்றுவிப்பது.

9, சஞ்சுவலன குரோதம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் சினம்.

10. சஞ்சுவலன மானம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் செருக்கு.

11. சஞ்சுவலன மாயம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் வஞ்சனை.

12. சஞ்சுவலன லோபம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் பேராசை.

13. ஹாசியம் - சிரித்து ஏளனம் செய்வதற்குக் காரணமாவது.

14. ரதி - உறவினரிடம் விருப்பத்தை உண்டாக்குவது.

15. அரதி - உறவினரிடம் வெறுப்பை உண்டாக்குவது.

16. சோகம் - பொருள் இழப்பினால் தோன்றும் துயர மனநிலையைத் தோற்றுவிப்பது.

17. பயம் - அச்சம் தோன்றக் காரணமாவது.

18 சுகுப்ஸா - அருவருப்புக்குக் காரணமாவது.

19. ஸ்திரீவேதம் - மகளிருடன் சேரவிழையும் காதலைத் தோற்றுவிப்பது.

20. பும்ஸகவேதம் - ஆடவருடன் சேரவிழையும் உணர்வைத் தோற்றுவிப்பது.

21 நபும்ஸக வேதம் - அலியுடன் சேரவிழையும் உணர்வைத் தூண்டுவது.

22. தானாந்தராயம் - தானம் கொடுக்கவிரும்பினாலும் தடுக்கும் தன்மையது.

23. லாபாந்தராயம் - தொழிலில் லாபம் கிடைக்காமல் தடுப்பது.

24. போகாந்தராயம் - உணவு, வெற்றிலை முதலியவற்றை உண்டு அனுபவிப்பதைத் தடுப்பது.

25. உபபோகாந்தராயம் - மனைவி வீடு முதலியவற்றை அனுபவிக்க விடாது தடுப்பது. (ஒருமுறை அனுபவிக்கக்கூடிய உணவு, வெற்றிலை முதலியன போகப் பொருள்கள் எனவும், மீண்டும் மீண்டும் அனுபவிக்கக்கூடிய மனைவி, வீடு முதலியன உபபோகப் பொருள்கள் எனவும் கூறப்படும்).

26. வீர்யாந்தராயம் - உடல்சக்தி குறைவாக இருப்பதற்குக் காரணமாவது.

அனந்தஞானம் - அளவற்ற அறிவு. அனந்தசுகம் - அளவற்ற இன்பம். பரமாகமம் - சைன ஆகம முறைப்படி முற்றும் உணர்ந்த மகான்கள் அனைத்தையும் கண்டறிந்து உரைத்த தத்துவக் கருத்துக்கள் அடங்கிய நூல்.

## koccaka vorupōku kalippā

### taravu

*pūnāṉkum potuḷiveṟi ticaināṉkum pōyulavat*
*tēṉārntu curumpāṭat tikaḻpiṇṭit tiruniḻal*

*nilavumiḻntu nīrtatumpa nilaṉmālai nittilañcūḻ*
*kulavilaṅku matimūṉṟiṟ kuṭaimūṉṟu muṭaṉiḻaṟṟa*

*paṅkilaku maṇikkarari paṉṉūṟā yiramacaiya*
*vōṅkariyā coṉattumpa rulakutoḷa viruntaṉaiyē.*

### tāḻicai

*kayalpiraḻva teṉappiṟaḻuṅ karuntaṭuṅkaṇ ṇārkalavic*
*ceyālpiṟavi vitteṉṟu ceṟittavarmuṉ ṉuraittaruḷi*

*tēṟāta piṟappikaḻnta cittiyeṉuṅ kaṉṉiyuṭaṉ*
*māṟāta pēriṉpa makiḻvatuniṉ kuṇaṉāmō.*

*aṭumāṟṟa lāruyirmē lāṟātu mikuntaciṉan*
*taṭumāṟṟan tarumeṉṟu tavavavacarak kuraittaruḷi*

*yiriyaviru viṉaippakaiva rikalvāṭṭi yaimpulaveṉ*
*kariyakatak kaṭakkaḷiṟu kāyntatuniṉ ṉaruḷāmō.*

*uḷḷattā levvuyirkku mottoḻukā tavarpiṟavi*
*veḷḷattāḻ pavareṉṟu virittavarmuṉ virittaruḷi*

*aṉpōtu toḻuteḻuvārk kamarulaka maḷittamaiyā*
*ṉiṉpōla varakatiyu niṟuttutaṉiṉ ṉiyalpāmō.*

**arākam**

*karaiyaṟu cuṭarmaṇi karatala naṭuvaṉa*
*teṉamuḻu tuṉaṟu niṉmati*
*naṟaiyalar veṟiyeṉa nakumaṇi yoḷiyeṉa*
*naṇukiyal piṉatu niṉcukam*
*viraiceṟi muḷariyiṉ micaimuṟai peyarala*
*mitiyala viyalu niṉṉaṭi*
*vuraipala tarukuva tuṭaṉmalai vilataru*
*ḷoṭuporu ṭaḻiyatu niṉmoḻi.*

**tāḻicai**

*naṟaiyōṭat tōṭaviḻu naṟumpūmeṉ kaṇaiturantu*
*niṟaiyōṭap porumataṉai nīrāka nōkkiṉaiyē.*

*alaimāṟāk katikkaṭulu ḷaḻuntuyirvēṭ ṭalamaruuṅ*
*kolaimārāk koṭiyaveṅ kūṟṟiṉaiyuṅ kutittaṉaiyē.*

*eḻutaruceñ cuṭarpōṉiṉ ṟilaṅkoḷimaṉ ṭalattiṉaiyē*
*toḻutakuvīṭ ṭiṟaivimaṇan tūṟṟuntun tupiyiṉaiyē.*

**nāṟcīr ōraṭi ampōtaraṅkam**

*aḻarpoḻiyat tēṉpoḻiyu macumpoḻiyā muṉṟiṉaiyē*
*ulakaṭaṅka vuḷḷaṭaṅki yoliyaṭaṅkā veyiliṉaiyē.*

**muccīr ōraṭi ampōtaraṅkam**

*toṉmaraiyai virittōy nī*
*turunayaṅka ḷaḻittōy nī*
*naṉṉeṟiyai vakuttōy nī*
*namaṉaṇukāk katiyōy nī*

**irucīr ōraṭi ampōtaraṅkam**

*vīraṉ nī vimalaṉ nī viṇṇum nī kaṇṇum nī*
*tīraṉ nī cukataṉ nī civaṉum nī tavaṉum nī*

*eṉavāṅku (taṉiccol)*

**curitakam**

*orutaṉik kaṭavuṇiṟ paravutu muyirka*
*liṉṉalveṅ kaṉalakūr puṉṉeṟit talaicceṉ*
*ṟuṟupulak kōṇmāt tiritaru makaṉṟalaip*
*piṟavik kāṅattu maṟaviyuṟ ṟulantāṅ*
*kalamaru tuyariṉai yeṟiyuniṉ*
*ṉilamaru tikiri niṭuvāḷ keṉavē.*

Flowers of four kinds jostling, with their fragrance in four directions spreading,

Bees (beetles) of four kinds humming in harmony after sucking the nectar flood

In the shade salubrious of *Acōka* tree,

Radiating lustre and virtue overflowing

Like a threefold moon adorned with pearl garlands cool,

Three parasols adding to the shade of the *Acōka* tree

*Kavari* Fans beauteous that sparkle on both sides numbering forty laks minus four.

Oscillating above a throne exalted,

Inches four aloft that throne were Thou seated,

For all the folk of the worlds three to worship

After telling the saints in thy proximity

That copulation with damsels whose eyes wide roll like *keayal* fishes tossing

Is the source of birth,

Is it nature thine to have bliss eternal,

With *mukti* the virgin sans birth?

Having uttered to the saints exalted that anger

Even towards the *jīvaṉ* of the inimical who are inclined to kill,

Will confer birth

Is it thine grace

To have debilitated the *viṉai* both (and deprived them of their might)

And to have destroyed the senses five
That were like wrathful elephants in rut?
Having informed the saints that
Those who conform not with deep concern towards beings all,
Will wallow in the ocean of birth
Art thou disposed
To place those who willingly prostrate (before thee) and rise,
In the world of heavenly beings,
In Eternity inattainable just like you?

Your Infinite wisdom which comprehends the worlds three,
As transparent as a gem of lustre flawless
At the centre of one's palm,
Is in its nature,
Like the fragrance of a flower nectarine,
And the clarity of a gem that sparkles.

Your Infinite Pleasure is Thy feet
That walk (so gently) on the lotus fragrant
As not to tread and trample (on that flower)
Thy *Paramākamam* cloth grant languages eighteen.
Without inconsistency before or behind
And doth confer besides compassion for all living beings
And adapts itself to the matters six
Thou did glare and burn to ashes Maṉmataṉ who fought with shafts,
Of flowers with their nectarine petals unfolded
To spoil minds
Thou did trample and transcend Kālaṉ of heat cruel
Who doth willingly hover round
The *jīvaṉs* that drown in the ocean of *katis* four
Where waves are ceaseless
Oh! Thou who hath halos three like the routine rising sun
Oh! Thou who doth possess the *tuntupi*

That announces the wedlock of the *mukti* bride
Oh! Thou who hath a Yard which slips
As heavenly folk doth shower flowers
That in their turn shower nectar there.
Holding the folk of worlds three within Thyself
Oh! Thou who stayeth in the Central world
And hath ramparts three that suppress not the sound divine.
Thou above did proclaim the scriptures ancient
Thou only did demolish the *ekāntavātam*
Thou alone did evolve *anēkāntavātam*
Thou only hath attained the *mukti* inaccessible to Kālan
Thou alone art the possessor of valour Infinite
Thou only hath Flawlessness
Thou alone holdeth the gift of skies
Thou only hath the Eye of wisdom
Thou alone doth possess bravery
Thou only hath conduct virtuous
Thou alone hath auspiciousness
Thou only possesseth penance

Oh! God peerless!
We pray to Thee! May Thy ocean of virtue,
That severs the grief of *jīvans*
Who the path of virtue forget to tread
And drift instead in the wide jungle of birth,
Where the murderous beasts that commit the vices five
And move about in circuit in a path fiery and mean

(May Thy ocean of mercy) last for ages ever

## Explanatory notes

**Four kinds of flowers** : *koṭṭupū, koṭippū, nīrppū, putarppū.*

**Four kinds of peerless** : *karuvaṇṭu, poṉvaṇṭu, nimiṟu, curumpu.*

**Three Parasols** : *cantrātityam* (pearl parasol) , *nittiyavinōtam* (emerald parasol) *cakalapājanam* (gold parasol).

**Three ramparts** - *utayataram* (which confers exaltation), *prititaram* (which gives happiness), *kalyāṇataram* (which causes benefit).

**Five vicayās** - *captam* (sound), *sparicam* (touch), *rūpam* (shape), *rasam* (taste), *kantam* (smell).

**Five kinds of lives** *(uyir)* - *ēkēntiriyam* (living being with a single bodily sense), *tuvintiriyam* (living being with two senses), *tirayēntiriyam* (living being with three senses), *caturentiriam*(living being with four senses), *pañcēntiriyam* (living being with five senses).

**Six *poruḷs*** (matters) - *jīvaṉ, putkalam, tarmam. atarmam, ākācam. kālam.*

***jīvaṉ*** also called *āṉmā* or *uyir* means life. Lives are innumerable and immortal. They are not created by God. As a result of their good or bad deeds they are born in four different *katis* ie. *narakakati* (hellish state), *vilaṅkukati* (animal state), *makkaḷ kati* (state of human beings), *tēvakati* (state of divine beings). After undergoing the four states and relinquishing *iruviṉai* (good and bad deeds), *jīvaṉ* attains *pēriṉpam* (eternal bliss).

**uyirkaḷ** (lives) are of two categories : *viṭṭatu* and *māṟṟatu. viṭṭatu* lives are those that have severed their connections with *iruviṉai* and are eligible to attain *vīṭu* (eternity). *Māṟṟatu* lives are those that alternate in the cycles of birth in heaven or hell and wallow in joy or misery accordingly. They are known also as *Camcāra jīvaṉ* (life with family and worldly bonds). Only the lives of *makkaḷkati* (state of human beings) can reach eternity in the due process. Lives born in other states cannot attain *vīṭu* from those states.

***putkalam*** - This absorbs itself on *uyirkaḷ* (lives) and motivates them towards good or bad deeds. *Putkalam* comprises the five senses and the respective sensory perceptions. It also consists of darkness, light, summer, shade, lustre, earth, water, fire and wind. It confers body to *uyir* (life) and also mind, speech, comport, sorrow, birth, living and death.

***tarmam* and *atarmam*** - These are not to be confused with *puṇṇiyam and pāvam*. They are minute atomic matters that activate and accommodate lives. Bodily functions of uyirkaḷ (lives) are impossible without *tarmam* or *atarmam*. Dynamic functions such as walking or running are caused by *tarmam*. Static functions such as standing, lying and sitting are caused by *atarmam*.

***kālam*** causes changes in matter and helps to realize such changes.There are two kinds of *kālam*. *Viyavakārakālam* also known as *naṭaimuṟai kālam*. This will be known by

change and comparison of action. *Niccayakālam* helps the spontaneous or automatic change in matters like *uyir* (life).

**akāyam** (sky) is not one of the five elements according to Jainism: This accommodates the above mentioned *uyirkaḷ, putkalam, tarmam, atarmam* and *kālam.*

**ēkāntavātaṅkaḷ** - *caivam, vaiṇavam, iraṇṇiyakarppam, piramam, pouttam, kapilam* and *kaṇātaram.*

***Viṉai*** is divided into two kinds - *carvakāti, tēcakāti.*

***carvakāti*** - Whichever *karma* (action) spoils totally the features or qualities of *Jīvaṉ* (life) is known as *Carvakāti.* It is of twenty-one kinds.

1. *kēvala ñāṉa varaṇīyam* - That which conceals the knowledge of *mukkālam* (past, present and future) from all worldly beings.
2. *kēvala tarcaṉā varaṇīyam* - That which prevents *āṉmā* (soul) from visualizing through *Kēvala ñāṉam* (wisdom of the soul) without the assistance of senses or mind.
3. *nittira nittirai* - That which is responsible for excessive sleep.
4. *piracalā piracalai* - That which causes the conditions of sleeping in a sitting posture, flowing salivation from the mouth, shivering of the body.
5. *nittirai* - That which causes sleep.
6. *piracalai* - That which causes meagre sleep or sleeping with eyes partly closed.
7. *styāṉa krunti* - That which is responsible for somnambulism, working and prattling in a state of slumber.
8. *aṉantāṉupanti kurōtam* - Anger which continues through several births.
9. *aṉantāṉupanti māṉam* - Haughtiness which continues through several births.
10. *aṉantāṉupanti māyam* - Deceit which continues through several births.
11. *aṉantāṉupanti lōpam* - The greed or avarice that continues through several births.
12. *apratyākyāṉa kurōtam* - The anger that shatters the household conduct code.
13. apraṭyākyāṉa māṉam - The arrogance that shatters the household conduct code.
14. *apratyākyāṉa māyam* - The deceit that ruins the household ethics.
15. *apratyākyāṉa lōpam* - The greed that spoils the household ethics.
16. *piratyākyāṉa kurōtam* - The anger that vitiates the ascetic or saintly conduct.

17. *piratyākyāṉa māṉam* - The arrogance that mars saintly code.
18. *piratyākyāṉa māyam* - The deceit that ruins saintly conduct.
19. *piratyākyāṉa lōpam* - The avarice that spoils saintly conduct.
20. *mittiyātericaṉam* - That which is responsible for the evil sight which spoils one's belief in the teachings of *Aruka Bakawāṉ*.
21. *camyak mityāttuvam* - That which is responsible for the amalgamation of the features of good and bad sights or phenomena. It is like the mixture of sweetness and sourness remeting in a bitter taste.

***Tēcakāti*** - whichever *karma* (action) spoils partially the features or qualities of *jīvaṉ* (life) is known as *Tēcakāti*. It is of twenty-six kinds.

1. *matiñāṉā varaṇīyam* - That which conceals natural comprehension or knowledge.
2. *curatañāṉā varaṇīyam* - That which conceals the wisdom of (scholarly) works.
3. *avatiñāṉā varaṇīyam* - That which hampers one's knowledge of previous birth.
4. *maṉapparyayañāṉā varaṇīyam* - That which prevents the understanding of what is in other's minds.
5. *cakcu tarcaṉā varaṇīyam* - That which conceals the scenes or objects of sight.
6. *acakcu tarcaṉā varaṇīyam* - That which hides the sensory perceptions of body, mouth, eyes, nose and ears.
7. *avati tarcaṉā varaṇīyam* - Preventing the limited comprehension of matters of other shapes directly through the inner spiritual knowledge of *Aṉma* (soul).
8. *camyaktva pirakkiruti* - That which creates some flutters and crimes without completely spoiling the nature of *Narkātchi*.
9. *cañcuvalaṉa kurōtam* - Anger which harms one's perfectly flawless conduct.
10. *cañcuvalaṉa māṉam* - Haughtiness which mars an absolutely pure conduct.
11. *cañcuvalaṉa māyam* - Deceit which spoils one's very impeccable conduct.
12. *cañcuvalaṉa lōpam* - Avarice which hampers one's very pure conduct.
13. *hāciyam* - Responsible for derisive laughter.
14. *rati* - Creating desire towards one's relatives.
15. *arati* - That which causes hatred towards one's relations.
16. *cōkam* - Creation of an aggrieved state of mind owing to loss of belongings.

17. *payam* - That which causes fear.
18. *cukupsa* - That which causes disgust.
19. *stirīvētam* - That which causes lust for sexual relationship with women.
20. *pumsaka vētam* - That which causes craving for sexual union with men.
21. *napumsakavētam* - That which causes desire to cohabit with eunuchs (*Alikal)*.
22. *tāṉāntarāyam* - The tendency that checks one's desire to confer gifts or charity.
23. *lāpāntarāyam* - The tendency to prevent profit in an enterprise.
24. *Pōkāntarāyam* - Prohibiting the enjoyment of food, chewing betel leaves etc.
25. *Upapōkāntarāyam* - Preventing the enjoyment of one's wife, house etc.
26. *Vīryāntarāyam* - That which is responsible for the weakness of stamina.

### வெண்பா

3. *என்மொழியி னென்னறிவி னென்னன்பின் யான்றொடுத்த*
*புன்மொழி மாலை புனைந்தக்காற் - பொன்மலர்மே*
*லம்மானுக் கிந்திரர்க ளாயிரம்வாய் கொண்டேத்து*
*மெம்மானுக் கென்னியையு மாறு.*

**பதப்பொருள்:** என் - எனது. மொழியின் - சொல்லின். என் - எனது. அறிவின் - அறிவினாலும். என் - எனது. அன்பின் - அன்பினாலும். யான் - நானாகிய. தொடுத்த - கட்டிய. புன் - புன்மையான. மொழிமாலை - சொல்மாலையை. புனைந்தக்கால் - திருவடியில் தரித்தால். பொன்மலர் மேல் - பொற்றாமரை மலர் மேலிருக்கின்ற. அம்மானுக்கு - அருகபரமேட்டிக்கு. இந்திரர்கள் - நூறிந்திரரும். ஆயிரம்வாய் - ஆயிரம் வாயினை. கொண்டு - விகுர்வணையா னிருமித்துக் கொண்டு. ஏத்தும்-துதிக்கும். எம்மானுக்கு - என்சுவாமிக்கு. என் - எவ்விதம். இயையுமாறு - பொருந்தும் விதம் என்றவாறு.

**பொழிப்புரை:** சாதுக்களே! நானாகிய நான் எனது சொல்லினாலும், எனதறிவினாலும், எனதன்பினாலும், தொடுத்த புன்மையான சொல் மாலையை திருவடியிற்றரித்தால் பொற்றாமரைப் பூமேலிருக்கின்ற அருகபரமேட்டிக்கு நூறிந்திரரும், ஆயிரம் வாயினை விகுர்வணையானிருமித்துக் கொண்டு துதிக்கும் என் சுவாமிக்குப் பொருந்தும் விதம் எவ்விதம் என்றவாறு.

**வி-ரை** : இதனால் இறைவனது பெருமையும் தனது சிறுமையும் கூறப்பட்டன. இயையுமாறு- எழுவாய். என் - பயனிலை. இசையாதென்பது குறிப்பெச்சம்,

**நூறிந்திரராவார்** : பவனேந்திரர் நாற்பதின்மர், வியந்தரேந்திரர் முப்பத்திருவர்; சோதிஷ்கேந்திரர் இருவர்; கற்பேந்திரர் இருபத்து நால்வர்; நரேந்திரன் ஒருவன்; மிருகேந்திரன் ஒன்று.

**veṇpā**

*eṉmoḻiyi neṉṉaṟivi neṉṉaṉpiṉ yāṉṟoṭutta*
*puṉmoḻi māli puṉaintakkāṟ - poṉmalarmē*
*lammāṉuk kintirarka lāyiramvāy koṇṭēttu*
*memmāṉuk keṉṉiyaiyu māṟu.*

If the garland of words inconsequential,
Which I have strung with my words, my knowledge and my love
Is laid at the feet of Aruka Paramēṭṭi to wear
Will it be appropriate to My Lord
Whom the hundred Intirars with their thousand mouths doth earnestly worship

## Explanatory notes

Aruka Paramēṭṭi - The God of Jains.

Hundred Intirars - Hundred Intirars according to Jainism are forty Pavanēntrars, thirty two Viyantarēntrars two Cōthiṣ kēntrars, twenty four Kaṟpēntrars, one Narēntraṉ and one Mirukēntiraṉ.

**கட்டளைக் கலித்துறை**

4. *ஆறுரைத் தான்பொரு ளைந்துரைத் தான்கதி நான்குரைத்தான்*
*மாறுரைத் தாரை முருக்கு மறைவைய மூன்றினுக்கும்*
*வேறுரைத் தான்றொல் லறமிரண் டவ்விரண் டாலும்விடு*
*பேறுரைத் தானமக் கொன்றுரை யாத பெருந்தகையே.*

**பதப்பொருள் :** ஆறு - ஆறுவகையென்று உரைத்தான் - சொன்னான். பொருள் - பொருளை. ஐந்து - அத்திகாயத்தை ஐந்து வகையென்று. உரைத்தான் - சொன்னான். கதி- உயிர் சென்று திரியுங்கதியை. நான்கு - நான்கு வகையென்று. உரைத்தான் - சொன்னான். மாறு - மித்தியாத்துவமாக. உரைத்தான் - சொன்னான். முறுக்கும் - கெடுகின்ற. மறை - நான்கு வேதங்களையும். வையமூன்றினுக்கும் - மூவுலகத்தாருக்கும். வேறு - சமத்துவமாக. உரைத்தான்- சொன்னான். தொல் - பழமையான. அறமிரண்டு - இரண்டுவகையறத்தையும் சொன்னான். அவ்விரண்டாலும் - அவ்வறமிரண்டினாலும். விடு - சீவனை விடுக்கும். பேறு - தன்மையை. உரைத்தான் - சொன்னான். நமக்கொன்று - நமக்கொன்றினையும். உரையாத - சொல்லாத. பெருந்தகை - பெரிய குணத்தையுடைய சுவாமிகள் என்றவாறு.

**பொழிப்புரை :** நெஞ்சமே! நமக்கொன்றினையும் சொல்லாத பெருந்தகை மூவுலகத்தாருக்கும், பொருளை யாறு வகையென்று சொன்னான்; அத்திகாயத்தை யைந்து வகையென்று சொன்னான்;

உயிர்சென்று திரியுங் கதியை நான்கு வகையென்று சொன்னான்; மித்தியாத்வமாகச் சொன்னவர்கள் சொல்லைக் கெடுக்கின்ற நான்கு வேதங்களையும் மூவுலகத்தாருக்கும் சமத்துவமாகச் சொன்னான். பழமையான இரண்டுவகையறத்தையும் சொன்னான்.. அவ்வறமிரண்டினாலும் கருமமானது சீவனை விடுக்கின்ற தன்மையைச் சொன்னான் என்றவாறு.

**வி-ரை:** இதனால் சகல தத்துவங்களையும் உரைத்தவ னிவனே யென்பது கூறப்பட்டது. பெருந்தகை - எழுவாய். பொருண் முதலியவைகள் - செயப்படுபொருள். சொன்னான் - பயனிலை.

**அத்திகாயமைந்தாவன** - ஜீவாஸ்திகாயம் (உயிர்), புத்கலரஸ்திகாயம் (புத்கலம்), தர்மாஸ்திகாயம் (தர்மம்), அதர்மாஸ்திகாயம் (அதர்மம்), ஆகாசாஸ்திகாயம் (ஆகாயம்).

**கதிநான்காவன** - நரககதி, திரியகதி (விலங்குகதி), மநுஷ்யகதி (மனிதகதி), தேவகதி.

**உலகம் மூன்றாவன** - சுவர்க்கம், மத்திமம், பாதாளம்.

**நான்கு வேதங்களாவன** - பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம் த்ரவ்யானு யோகம்

1. பிரதமானு யோகம் - அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் சிறப்புற பெற்றவர்களின் வரலாற்றினை எடுத்துக்கூறுவது.

2 கரணானு யோகம் - உலக அமைப்பும் ஏறுகாலம் (உத்சர்ப்பிணி) இறங்குகாலம் (அவசர்ப்பிணி) என்னும் காலப் பிரிவுகளையும், தேவ, மனித, விலங்கு,, நரகர் என்னும் நான்கு கதிகளையும் கூறுவது.

3. சரணானு யோகம் - இல்லறத்தார், துறவறத்தாருடைய ஒழுக்கங்களைக் கூறும் நூல்கள்.

4. திரவ்யானு யோகம் உயிர் முதலான பொருள்களையும், புண்ணிய பாவங்களையும், பந்தம், மோட்சம் ஆகியன் பற்றியும் கூறும் நூல்.

**அறமிரண்டாவன** - இல்லறம், துறவம்

## *kaṭṭaḷaik kalitturai*

*ārurait tāṉporu ḷainturait tāṉkati nāṉkuraittāṉ*
*māṟurat tārai murukku maṟaivaiya mūṉṟiṉukkum*
*vēṟurait tāṉṟol laṟamiraṇ ṭaviraṇ ṭālumviṭu*
*pēṟurait tāṉamak koṉṟurai yāta peruntakaiyē.*

The Great One of high esteem,
Who hath not said anything to us.
Did however tell the folk of worlds three

That matters are of kinds six;
That *Attikāyam* is five in variety its,
That the *katis* in which life drifts are but four in number,
And against the unholy who spoke ill
He did proclaim the *vētās* four
Equally to the folk of worlds three;
Also spoke He of the two *arams* ancient
By means of which *jīvan* is rid of *karma*

## Explanatory notes

**The five *attikāyams*** are *jīvāstikāyam* (uyir) - life, putkalarastikāyam *(putkalam)*, tarmāstikāyam *(tarmam)*, atarmāstikāyam *(atarmam)*, ākācāstikāyam *(ākāyam)*.

**The four *katis*** are narakakati, tiriya kati *(vilaṅku kati)*, Manuṣyakati *(Maṉitakati)*, Tēvakati.

**The three worlds** according to Jainism are *Cuvarkkam* (Heaven the upper world) *Mattimam* (The middle world, i.e. earth) *Pātāḷam* (Hell or the nether world).

**The four vētas** are as follows:

1. *pratamāṉuyōkam* : That which narrates the accounts of those who distinguished themselves by achieving *aṟam* (virtue), *poruḷ* (wealth), *iṉpam* (pleasure) and *vīṭu* (eternity).
2. *karaṇāṉuyōkam* : That which describes the pattern of the world, *utcarppiṇi* (ascending period) *avacarppiṇi* (descending period) of *kālam* (Time and the four *katis*) *(Tēvar, Maṉitar, vilaṅku* and *narakar)*.
3. *caraṇānuyōkam* - The works that stipulate the codes of conduct of householders and ascetics.
4. *tiravyāṉuyōkam* - The work which states the poruḷs like *uyir, puṇṇiyam, pāvam, pantam* and *mōṭcam* (Life, result of good deeds, sin, bond and eternity).

**The two *aṟams*** are *Illaṟam* (Householder's life), *tuṟavaṟam* (asceticism).

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

5. பெருந்தகைநின் றெய்வமொழி தோன்றத் தோன்றிப்
பிறழாநின் றூயமொழி நிற்ப நின்றுன்
னருந்தகைய செய்யாமொழி செல்லச் செல்லு
மகன்ஞால முழுதுமுட னென்றால் வானோர்
பொருந்தகைய முடிநெருக்க வெழுந்த சோதிப்
பொன்துகளைப் பூந்துணரின் மதுநீர் மாற்ற

*விருந்தவெயின் மூன்றுடையாய் நீய லான்மற்*
*றியாவர்படைத் தளித்தழிக்கு மியல்பி னாரே.*

**பதப்பொருள்:** பெருந்தகை - பெருந்தகைமையுடையோன். நின் - நின்னாற் சொல்லப்பட்ட. தெய்வமொழி - பரமாகமம். தோன்ற - உண்டாக. தோன்றி - தானும் தோன்றி. பிறழா - மாறுபாடில்லாத, நின் - உன்னாற் சொல்லப்பட்ட. தூயமொழி - பரமாகமம். நிற்ப - நிலைபெற. நின்று - தானும் நிலைபெற்று நின்று. உன் - நின்னாற் சொல்லப்பட்ட. அரும்- அருமையாகிய. தகைய - குணத்தையுடைய. செய்யாமொழி - அப்பரமாகமம். செல்ல - நீங்க. செல்லும் - நீங்கும். அகன் - பரந்த. ஞாலமுழுதும் - உலகமெல்லாம். உடன் - உடனே. என்றால் - என்று சொல்லப்பட்டால். வானோர் - தேவர்களுடைய. பொரும் - இருளையோட்டுகின்ற. தகைய - தன்மையையுடைய. முடி - மகுடங்கள், நெருக்க - ஒன்றை ஒன்று தாக்க. எழுந்த - அதனால் உண்டாகிய. சோதி - விளக்கமான. பொன்துகளை - பொற்பொடியை. பூந்துணரின் - அம்முடியிற்றரித்த பூங்கொத்தினின்றுமிழ்ந்த. மது - தேனாகிய. நீர்- ஜலமானது. மாற்ற - தணிக்க. இருந்த - வீற்றிருந்த. எயின் மூன்றுடையாய்- மும்மதிலையுடையவனே. நீயல்லால் - நீயேயல்லால், நீயேயல்லாமல். மற்றியாவர் - வேறேயெவர். படைத்து - அவ்வுலகத்தை உண்டாக்கி. அளித்து- காத்து. அழிக்கும் - நீக்குகின்ற. இயல்பினர் - தன்மையை உடையவர் என்றவாறு.

**பொழிப்புரை:** பெருந்தகையே! இருளை ஓட்டுகின்ற தன்மையையுடைய வானவர்களுடைய முடிகள் ஒன்றையொன்று தாக்க அதனாலுண்டாகிய விளக்கமாக பொற்பொடியை அம்முடியிற் தரித்து பூங்கொத்தினின்று உமிழ்ந்த தேனாகிய நீரானது தணிக்க வீற்றிருந்த மும்மதிலை உடையவனே! அகன்ற உலகமெல்லாம், உன்னாற் சொல்லப்பட்ட பரமாகமம் உண்டாகத் தானுந்தோன்றி மாறுபாடில்லாத உன்னாற் சொல்லப்பட்ட பரமாகமம் நிற்ப, அவ்வுலகம் நிலைபெற்று நின்று, நின்னாற் சொல்லப்பட்ட அருமையாகிய குணத்தையுடைய பரமாகமம் நீங்க உடனே அவ்வுலகம் நீங்குமென்று சொல்லப்பட்டால் இவ்வுலகத்தை உண்டாக்கிக் காத்து நீக்குகின்ற தன்மையுடையவர்கள் நீயல்லாமல் வேறே எவர்கள் என்றவாறு.

**வி-ரை:** இதனால் நீயே கடவுள் என்பது கூறப்பட்டது. இயல்பினார் - எழுவாய். யாவர் - பயனிலை.

பரமாகமம் - சைன ஆகம முறைப்படி அனைத்தையும் கண்டறிந்த முற்றும் உணர்ந்த மகான்களால் அறிந்து உரைத்த தத்துவக் கருத்துக்கள் அடங்கிய நூல்.

## eṉcīrk kaḻineṭil viruttam

*Peruntakainiṉ ṟeyvamoḻi tōṉṟat tōṉṟip*
*piṟaḻāniṉ ṟūyamoḻi niṟpa niṉṟuṉ*
*ṉaruntakaiya ceyyāmoḻi cellac cellu*
*makaññāla muḻutumuṭa ṉeṉṟāl vāṉōr*
*poruntakaiya muṭinerukka veḻunta cōtip*
*poṉtukaḷap pūntuṇariṉ matunīr māṟṟa*
*viruntaveyiṉ mūṉṟuṭaiyāy nīya lāṉmaṟ*
*ṟiyāvarpaṭait taḷittaḻikku miyalpi ṉārē.*

Oh! Exalted One!
This world did originate with thy gospel (*paramākamam*)
It doth exist as long as thy gospel exists,
It'll cease to be when thy gospel leaves
Oh! Thou who hath ramparts three to be seated amidst,
To douse the luminous gold sparks,
That fly as the crowns of divine beings who can dispel darkness,
Knock each other,
To douse the sparks with the nectar spilt,
From the bunches of flowers that adorn those crowns.
Who else but Thou can create, protect and destroy?

## Explanatory note

*Paramākamam* - The Prime work that contains the tenets of Jaina scriptures as comprehended and elucidated by omniscient seers.

**அறுசீர்க் கழிநெடில் விருத்தம்**

6. *இயல்கொண்ட பொருளனைத்து மெஞ்சாம*
*லெப்பொழுது முடனே காணுஞ்*
*செயல்கொண்ட திசைமுழுதுந் திகழ்ந்திலங்குந்*
*திருமுகத்து நின்னை யல்லான்*
*முயல்கொண்ட கறைதுடைத்த முத்தணிந்த*
*மும்மதிமுக் குடையா யிந்த*
*மயல்கொண்ட வகன்ஞாலந் திசைமுகனென்*
*றெவ்வாறு வழங்கு மாறே.*

**பதப்பொருள்:** இயல்கொண்ட பொருளனைத்தும் - குணங்கொண்ட அறுவகைப் பொருளையும். எஞ்சாமல் - குறையாமல். எப்பொழுதும் - முக்காலத்தினும். உடனே - ஒருதன்மையாக காணும்- பார்க்கின்ற. செயல்கொண்ட - செய்கை கொண்ட. திசைமுழுதும்- நான்கு திக்கிலும். திகழ்ந்து - விளங்கி. இலங்கும் - ஒலிக்கின்ற. திருமுகத்து - அதிசயத்தானான்கு முகத்தையுடைய. நின்னையல்லால் - உன்னையல்லாமல். முயல் - முயலை. கொண்ட - தன்னிடத்துக் கொண்ட. கறை - களங்கத்தை. துடைத்து - நீக்கி. முத்து - முத்துமாலைகள். அணிந்த - தரித்த. மும்மதி- மூன்றுமதி. முக்குடையாய் - மூன்று குடையினை உடையவனே. மயல் - மயக்கத்தை. கொண்ட- மனதில் கொண்ட. அகல் - அகன்ற. ஞாலம் - இவ்வுலகத்தார். திசை முகனென்று - விகாரத்தானான் முகம் பெற்றவனைத் திசைமுகனென்று. எவ்வாறு - எவ்விதம். வழங்குமாறு - சொல்லும் விதம் என்றவாறு.

**பொழிப்புரை:** முயலைத் தன்னிடத்துக் கொண்ட களங்கத்தை நீக்கி முத்து மாலைகள் அணிந்த மூன்று மதி போன்ற மூன்று குடைகளையுடையவனே! குணம் கொண்ட அறுவகைப் பொருளையும் குறையாமல் முக்காலத்திலும் ஒரு தன்மையாகப் பார்க்கின்ற செய்கை கொண்ட நான்கு திக்கிலும் விளங்கி ஒளிர்கின்ற அதிசயத்தான் நான்கு முகத்தையுடைய உன்னையல்லாமல்; மயக்கத்தை மனதிற்கொண்ட அகன்ற இவ்வுலகத்தார், விகாரத்தான் நான்முகம் பெற்றவனைத் திசைமுகன் என்று சொல்லும் விதம் எவ்விதம் என்றவாறு.

**வி.ரை** இதனால் உலகத்தாருடைய பேதமை கூறப்பட்டது. வழங்குமாறு - எழுவாய், எவ்வாறு- பயனிலை.

### *arucirk kalinetil viruttam*

*iyalkonta porulanaittu meñcāma*
*leppolutu mutanē kāṇuñ*
*ceyalkonta ticaimulutun tikalntilaṅkun*
*tirumukattu ninnai yallān*
*muyalkonta karaitutaitta muttaninta*
*mummatimuk kutaiyā yinta*
*mayalkonta vakannālan ticaimukanen*
*revvāru valaṅku mārē.*

Oh! Thou who hath parasols three,
That resemble moons three,
Which hath removed their rabbit-shaped stains,
And adorned with strings of pearls
You are but endowed with faces four,
As you are able to see uniformly at all times three
The virtuous matters six proper and true all at once
(By means of Thy discerning wisdom)
And as Thou shine thus in all directions four,
How then doth the dazed folk of this wide world
Call an ugly aberration with fourfaces
As Nānmukan?

## Explanatory notes

The stain in the moon is described as rabbit-shaped here. Three times - Past, present and future.

## கட்டளைக் கலித்துறை

7. வழங்கும் பதினெண் மொழியு மிதமு மதுரமுமாய்
முழங்குங் கலைமகள் காந்தர்கண் டீர்முது நீர்மடுவுங்
கிழங்குந் தவிர.விசும்பிடைப் பூத்தலர் கிண்டிவண்டு
தழங்குங் கமலத்து வந்துல கேழையுந் தந்தவரே.

**பதப்பொருள்:** வழங்கும் - உலகின் வழங்கும். பதினெண் மொழியும் - பதினெண் பாஷையும்.. இதமும் - இதமுள்ளதாயும். மதுரமுமாய் - மதுரமுள்ளதாயும். முழங்கும் - ஒலிக்கின்ற. கலைமகள் - சரசுவதியினுடைய. காந்தர் - நாயகர். முது - பழமையான. நீர் - சலத்தையுடைய. மடுவும் - குளமும். கிழங்கும் - கிழங்கும். தவிர - நீங்க. விசும்பிடை - ஆகாயத்தில். பூத்து-உண்டாய். அலர் - மலர்ந்த. கிண்டி - குடைந்து. வண்டு - வண்டுகள். தழங்கும் - இசைபாடும். கமலத்து - தாமரைமலரில். வந்து - தோன்றி. உலகேழையும் - ஏழுவகைஉலகங்களையும். தந்தவர் - தெரிவித்தவர் என்றவாறு.

**பொழிப்புரை:** உலகத்தவரே! பழமையான நீரையுடைய குளமும் கிழங்கும் தவிர, விசும்பிடை மலர்ந்த வண்டுகள் குடைந்து இசைபாடும் கமலமலரில் தோன்றி, ஏழுவகை உலகங்களையும் தெரிவித்தவர் இதமுள்ளதாயும், மதுரமுள்ளதாயும் உலகின் வழங்கும் பதினெண் மொழியும் ஒலிக்கின்ற கலைமகளுடைய நாயகர் என்றவாறு.

**வி-ரை :** இதனால் உலகைத் தரும் நாதன் இவனெனக் கூறப்பட்டது. உலகேழையுந்தந்தவர்-எழுவாய். கலைமகள் காந்தர் - பயனிலை. கண்டீர் - முன்னிலையசை.

ஏழுவகை உலகமாவன: நாகலோகம், பவணலோகம், நரலோகம், ஜோதிர்லோகம், கல்பலோகம், அகமிந்திரலோகம், மோட்சலோகம்.

பதினெண் பாஷை - பதினெண் தேசத்தார்க்குரிய பாஷை, அவை அங்கம், அருணம், கலிங்கம், காம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராட்டம், வங்கம்.

## kaṭṭalaik kalitturai

*vaḻaṅkum patiṉeṇ moḻiyu mitamu maturamumāy*
*muḻaṅkuṅ kalaimakaḷ kāntarkaṇ ṭīrmutu nīrmaṭuvuṅ*
*kiḻaṅkun tavira vicumpiṭaip pūttalar keṇṭivaṇṭu*
*taḻaṅkuṅ kamalattu vantula kēḻaiyun tantavarē.*

Oh! see the consort of Kalaimakaḷ,
Who doth rumble languages eighteen that are in vogue
Soothingly and sweetly
He who hath emerged from the lotus which blossoms in the sky,

Sans the pond with hoary water and tubers to boot,
The lotus stirred by bees that swarm and sing
Thus hath He emerged and given worlds seven.

## Explanatory notes

Kalaimakaḷ - Goddess of learning.

**The eighteen languages are** : *Aṅkam, Aruṇam, Kaliṅkam, Kāmpōcam, Koṅkaṇam, Kōcalam, Kaucikam, Cintu, Cīṉam, Cōṉakam, Tirāviṭam, Tuḷuvam, Papparam, Makatam, Maraṭṭam, Vaṅkam.*

**The seven worlds are** : *Nākalōkam, Pavaṇalōkam, Naralōkam, Jōtirlōkam, Kalpalōkam, Akamintiralōkam, Mōtcalōkam.*

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

8. *தந்த வுலகிற் பொருளனைத்துந் தமதுண் மையினா லுளவாகு*
*மந்த மிலதன் பிறகுணத்தி னுளவல் லனவா மெனவறைந்தாய்*
*பந்த விருள்கால் சீத்திலங்கும் பகலோய் பகல்கா ணாப்புள்ளி*
*னெந்தை பெருமான் வாய்மையினை யேனோர் காணா ரானாரே.*

**பதப்பொருள்:** தந்த - நீ தெரிவித்த. உலகில் - உலகத்தில். பொருளனைத்தும் - அறுவகைப் பொருளும். தமது - அவற்றினுடைய. உண்மையினால் - நிச்சயநயத்தினால். உளவாகும் - நித்தியமாகுமென்றும். அந்தம் - முடிவு. இல் - இல்லாதனவாகிய. தம் - அப்பொருள்களுடைய. பிறகுணத்தின் - வியவகார நயத்தினால் உளவல்லனவாமென - அனித்தியமாகுமென்றும். அறைந்தாய் - சொன்னாய். பந்தம் - உயிரைப் பந்தித்த. இருள்- கதியாகிய இருட்டைக். கால்சீத்து - முழுதுங்கெடுத்து. இலங்கும் - ஒளிர்கின்ற. பகலோய்- ஞான சூரியனே. பகல் - சூரியனை. காணா - என்றுங்காணாத. புள்ளின் - கூகைபோல. எந்தைபெருமான் - என்சுவாமியாகிய பெருமானை. வாய்மையினை - நினதுவாக்கினை.. ஏனோர் - ஏகாந்த வாதிகள். காணாரானார் - அறியாதவர்களானார்கள் என்றவாறு.

**பொழிப்புரை:** உயிரைப் பந்தித்த கதியாகிய இருளை முழுதுங் கெடுத்து ஒளிர்கின்ற ஞானசூரியனே! என் சுவாமியாகிய பெருமானே! நீ தெரிவித்த உலகத்தின் முடிவில்லாதனவாகிய அறுவகைப் பொருளும் அவற்றினுடைய நிச்சயநயத்தினால் நித்தியமாகுமென்றும், அவற்றினுடைய வியவகாரநயத்தினால் அநித்தியமாகுமென்றும் சொன்னாய் அப்படிச் சொல்லியிருந்தும் நினது வாக்கினைச் சூரியனை என்றுங் காணாத கூகைபோல ஏகாந்தவாதிகள் அறியாதவர்கள் ஆனார்கள் என்றவாறு.

**வி-ரை :** இதனால் ஏகாந்தவாதியர் இழிவு கூறப்பட்டது. ஏனோர் - எழுவாய், வாய்மையினை- செயப்படுபொருள். காணாரானார் - பயினிலை.

**நிச்சயநயம்**- பேதமில்லாதது, உண்மையானது நித்தியமாகும் - அழியாதது. **வியவகாரநயம்** - இது இரு வகைப்படும். 1. ஸத்பூத வியவகாரநயம் 2. அஸத்பூத வியவகார

நயம் ஸத்பூத வியவகாரநயம் - ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டது. அஸத்பூத வியவகார நயம்- வெவ்வேறு பொருள்களை அடிப்படையாகக் கொண்டது. அநித்தியம் - நிலையற்றது. ஏகாந்தவாதிகள் - சமணம் தவிர்த்த மற்ற சமயத்தார்கள். கூகை - கோட்டான் என்னும் பறவை.

## arucirk kalinetil viruttam

*tanta vulakir porulanaittun tamatun maiyinā lulavāku*
*manta milatan pirakunatti nulaval lanavā menavaraintāy*
*panta virulkāl cittilankum pakalōy pakalkā nāppulli*
*nentai perumān vāymaiyinai yēnōr kānā rānārē.*

Oh! Sun of wisdom who hath totally dispelled
The darkness of *kati* that bindeth uyir
Oh! my Lord God!
Though Thou hath proclaimed,
That matters six are eternal according to Thy truth (*niccayanayam*)
And not eternal but mortal by the other concepts (*viyavakāranayam*)
Those who profess *ēkāntavātam* are ignorant of Thy maxim
Like the owl that never doth see the sun.

## Explanatory notes

*niccayanayam* - The concept of eternal truth which is eternal and applies to all without distinction.

*viyavakāranayam* - This is of two kinds.

1. *satpūta viyavakāranayam* : Based on one particular *porul* (matter).
2. *asatpūta viyavakāranayam* : Based on different *poruls* (matters).

*ekāntavātam* : Professing religions other than Jainism.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

9. *ஆனவா றாக மெய்ம்மை யறிவரி துலகிற் பல்லோர்*
*போனவா றல்ல தில்லைப் போநெறி யென்பா ரென்க*
*வானவா வியுள்வண் டார்ப்ப மலர்ந்தபூச் சுமந்த தாளெங்*
*கோனவா மறைகள் சொன்ன நெறியலாற் குறுக லேனே.*

**பதப்பொருள்:** ஆனவாறு - ஆனவகை. ஆக - ஆகத்தக்கது. மெய்ம்மை - உண்மையை. அறிவரிது - அறிதலரிது. உலகில் - உலகத்தில். பல்லோர் - அனேகர்கள். போன - நடந்த.

ஆறல்லது - வழியேயல்லாமல். இல்லை - வேறொன்றில்லை. போநெறி - நமக்குப் போகும்வழி. என்பார் - என்று சொல்பவர். என்க - என்று சொல்லுக. வானம் - ஆகாயமாகிய. வாவியுள் - த்டாகத்தில். வண்டு - வண்டுகள். ஆர்ப்ப - இசைபாட. மலர்ந்த - விரிந்த. பூ- தாமரைப்பூவானது. சுமந்த - தாங்குகின்ற. தாள் - பாதத்தையுடைய. எங்கோன் - எனதுசாமியை. அவாம் - அவாவிச் சொல்லும். மறைகள் - நான்கு வேதங்களும். சொன்ன- சொல்லிய. நெறியல்லால் - வழியல்லாமல். குறுகலேனே - மித்தியாமார்க்கத்தையடையேன் என்றவாறு.

**பொழிப்புரை:** ஆனவகை ஆகத்தக்கது உண்மையை அறிதலரிது; ஆகையால் உலகத்தில் அநேகர்கள் சென்ற வழியே அல்லாமல் செல்லும் மார்க்கம் நமக்கு வேறொன்றும் இல்லையென்று சொல்லுகிறவர்கள் சொல்லுக; ஆகாயமார்க்கத்தில் சுரும்புகள் இசைபாட மலர்ந்த தாமரைப் பூச்சுமந்த பாதத்தையுடைய எமது சுவாமியை விரும்பிச் சொல்லுகின்ற நான்கு வேதங்களும் சொல்லிய மார்க்கத்தை அல்லாமல் மித்தியா மார்க்கத்தை யான் அடையேன் என்றவாறு.

**வி-ரை** : இதனால் தந்துணிவு கூறப்பட்டது. யான் - என்றது எழுவாய்; மித்தியாமார்க்கத்தை- செயப்படுபொருள்; குறுகலேன் - பயனிலை.

செல்லும் மார்க்கம் - செல்லும் வழி. ஆகாய மார்க்கம் - ஆகாய வழி. சொல்லிய மார்க்கம்- சொல்லிய சமயம் (மதம்). மித்தியாமார்க்கம் - பொய்ச்சமயம்.

## *arucirk kalinetil viruttam*

*ānavā rāka meymmai yarivari tulakir pallōr*
*pōnavā ralla tillaip pōneri yenpā renka*
*vānavā viyulvan tārppa malarntapūc cumanta tāleṅ*
*kōnavā maraikal conna neriyalār kuruka lēnē.*

As matters various stand accordingly it is but difficult to find out Truth;
Let those who declare,
That there is no other path,
Than the one trodden by many,
Let them air views theirs;
I won't tread that *mittiyāmarkkam*;
which is alien to the path prescribed by the *vētas* four
That land my Lord's feet carrying the lotus
Which blossoms skyward to the humming of the bees.

## Explanatory note

*mittiyāmārkkam* - False or spurious religions.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

10. *குறுகு முறைபொறி மறையி லதுகுறை யிலது மலர்வெறி யென்னவே*
*யுறுவ தொருசுக நிகழ நிகழ்வதொ ரொழிவிலொ ளியுமை நண்ணுமே*
*கறுவு பகையற வுறவி லருள்புரி கடவுண் மலரடி துன்னியோர்*
*மறுவி றிருவற வமிர்த வருவியின் மயல்கொ ளிருவினை மண்ணவே.*

**பதப்பொருள்:** குறுகு - அடைகின்ற. முறை - கிரமமும். பொறி - கரணமும். மறை - மறைவும். இலது - இல்லாததும். குறை - ஒரு குறையும். இலது - இல்லாததும். மலர் - பூவினுடைய. வெறியென்னவே - வாசனை போலவே. உறுவது - பொருந்துவதாகிய. ஒருசுகம் - ஒப்பற்ற சுகம். நிகழ் - தோன்றும்படி. நிகழ்வது - தோன்றுவதுமாகிய. ஒழிவில்- நீங்காத. ஒளி - முச்சோதி. உமை - உங்களை. நண்ணும் - அடையும். கறுவு - கோபிக்கின்ற. பகை - பகையும். அற - நீங்க. உறவு - நட்பு. இல் - இல்லாத. அருள் - கிருபையை. புரி- செய்கின்ற. கடவுள் - அருக பரமேட்டியினுடைய. மலர் - தாமரைப்பூப்போன்ற. அடி - பாதங்களை. துன்னி - அடைந்து. ஓர்மறுவில் - ஒரு குற்றமுமில்லாத. திரு - செல்வத்தைத் தரும். அறம் - சினதருமமாகிய அமுதம் - நீரையுடைய. அருவியின் - ஆழத்திலே மயல் - அழுக்காக. கொள் - கொண்ட. இருவினை - இருவினையை. மண்ண - கழுவினால் என்றவாறு.

**பொழிப்புரை:** உலகத்தோரே! கோபிக்கின்ற பகையும் நீங்கி நட்பும் இல்லாத அருளைச் செய்கின்ற அருகபரமேட்டியினுடைய தாமரைப் பூப்போன்ற பாதங்களை அடைந்து, ஒரு குற்றமும் இல்லாத செல்வத்தைத் தரும் சினதருமமாகிய நீரையுடைய ஆற்றிலே பந்தித்த அழுக்காகக் கொண்ட இருவினையையுங் கழுவினால்; அடைகின்ற கிரமமும் கரணமும் மறைவும் இல்லாததும், ஒரு குறைவும் இல்லாததும் பூவினுடைய வாசனை போலவே பொருந்துவதாகிய ஒப்பற்ற இன்பம் தோன்றும்படித் தோன்றுவதுமாகிய நீங்காத முச்சோதி உங்களையடையும் என்றவாறு.

**வி-ரை :** இதனால் சினதருமத்தினது பெருமை கூறப்பட்டது. ஒளி - எழுவாய். உம்மை - செயப்படுபொருள். நண்ணும் - பயனிலை.

சினதருமம் - நால்வகைக் கதிகளில் ஏற்படும் துன்பங்களை அகற்றி நிலை பேறான முக்தி இன்பத்தைத் தரக்கூடிய அருகமொழி. பந்தித்தல் - கட்டுதல். இருவினை - தேசகாதி, சர்வகாதி. கிரமம் - ஒழுங்கு; ஒழுங்காய் நடப்போன். கரணம் - ஐம்பொறி. முச்சோதியாவன- மனசோதி, வாக்குச்சோதி, காயசோதி.

## e̲lucīrk ka̲lineṭil viruttam

*ku̲ruku mu̲raipo̲ri ma̲raiyi latuku̲rai yilatu malarve̲ri ye̲n̲navē*
*yu̲ruva torucuka nika̲la nika̲lvato ro̲livilo ḷiyumai naṇṇumē*
*ka̲ruvu pakaiya̲ra vu̲ravi laruḷpuri kaṭavuṇ malaraṭi tu̲n̲n̲iyōr*
*ma̲ruvi r̲iruva̲ra vamirta varuviyi̲n̲ mayalko ḷiruvi̲n̲ai maṇṇavē.*

The *kiramam*[1] and *karaṇam*[2] attainable,
And the threefold light[3] that doth never extinguish,

Which is flawless and unfading,
Which doth emerge as comfort peerless
Like the fragrance of a flower
Will reach you,
If thou wash the dirt of *vinai*[4] both,
In the waters deep of Jaina Code,
That provides wealth unblemished,
And attain the lotus feet of Arukaparamētti,
Who showers His grace,
That dispels fuming enmity and friendship alike.

**Explanatory notes**

1. *kiramam* - order or discipline 2. *karaṇam* - The five senses. 3. **The threefold light** - *Muccōti.* (1) *Manacōti* - The mental light, (2) *Vākkucōti* - The light of speech, (3) *Kāyacōti* - The bodily light. 4. *Iruvinai* - *Tēcakāti* and *Carvakāti.*

**எழுசீர்க் கழிநெடில் விருத்தம்**

11. *மண்ணார் கதிர்மணி மலரார் செங்கையில்*
*வைத்துக் கண்டவ ரொத்தென் றும்*
*மெண்ணா தகலமு முடனே கண்டருள்*
*கின்றாய் நீயலதிலை யென்றாற்*
*பண்ணார் வண்டிறை கொள்ளக் கள்ளவிழ்*
*பனிமா மலர்மிசை வருமாலே*
*கண்ணார் கடலுல கெல்லா மறிவதோர்*
*கரியா தற்கெவ ருரியாரே.*

**பதப்பொருள்:** மண் - ஒப்பனை. ஆர் - பொருந்திய. கதிர் - கிரணத்தையுடைய. மணி - இரத்தினத்தை. மலர் - தாமரைமலர் போல. ஆர் - பொருந்திய. செம் - செம்மையாகிய. கையில் - கரத்தில். வைத்து - நடுவில் வைத்து. கண்டவர் - பார்த்தவரை. ஒத்து - ஒப்பாய். என்றும் - எக்காலத்தும். எண்ணாது - சிந்தியாமல். அகிலமும் - யாவற்றையும். உடனே - ஒருதன்மையாக. கண்டருள்கின்றாய் - பார்க்கின்றாய். நீயலது - நீயல்லாமல். இலை - அப்படிக் காண்கிறவர் வேறொருவரில்லை. என்றால் - என்று சொல்லப்பட்டால். பண்ணார்- இசைபாடுகின்ற. வண்டு - வண்டுகள். இறைகொள்ள - தங்குதல் கொள்ள. கள் - தேனையுடைய. அவிழ் - விரிந்த. பனி - குளிர்ச்சியையும். மா - பெருமையையும் உடைய. மலர்மிசை - தாமரைப்பூ மேல். வரும் - வாராநின்ற. மாலே - அருகனே. கண் - இடமானது ஆர் - பொருந்திய. கடல் - கடல் சூழ்ந்த. உலகெல்லாம் - உலகமெல்லாம். அறிவது - அறிதலிலே. ஓர் - ஒரு. கரியாதற்கு - சாட்சியாதற்கு. எவர் - யாவர். உரியார் - உரிமையை யுடையார் என்றவாறு.

**பொழிப்புரை:** இசைபாடுகின்ற வண்டுகள் தங்குதல் கொள்ளத் தேனையுடைய விரிந்த குளிர்ச்சியையும், பெருமையையும் உடைய தாமரைப் பூமேல் வாராநின்ற அருக பரமனே! ஒப்பனை பொருந்திய கிரணத்தையுடைய இரத்தினத்தைத் தாமரை மலர்போலே பொருந்திய சிவந்த கரத்தின் நடுவில் வைத்துப் பார்த்தவரை ஒப்பாக; எக்காலத்தும் சிந்தியாமலே யாவற்றையும் ஒரு தன்மையாகப் பார்க்கின்றாய்; நீயல்லாமல் அப்படிக் காண்கின்றவர் வேறொருவரில்லை என்று சொல்லப்பட்டால், இடம் பொருந்திய கடல் சூழ்ந்த உலகமெல்லாம் அறிதலிலே ஒரு சாட்சியாகிறதற்கு எவர் உரிமையுடையார் என்றவாறு.

**வி.ரை** - இதனால் ஸர்வஞ்ஞ னிவனே என்று சொல்லப்பட்டது. உரியார் - எழுவாய். எவர்-பயனிலை.

கிரணம் - ஒளி. ஸர்வஞ்ஞன் - நீக்கமற நிறைந்திருப்பவன், அருகன்.

## *eḻucīrk kaḻineṭil viruttam*

*mannār katirmaṇi malarār ceṅkaiyil*
*vaittuk kaṇṭava rotteṉṟu*
*meṉṉā takalamu mutaṉē kaṇṭaruḷ*
*kiṉṟāy nīyalatilai yeṉṟār*
*paṇṇār vaṇṭiṟai koḷḷak kaḷḷaviḻ*
*paṉimā malarmicai varumālē*
*kaṇṇār kaṭalula kellā maṟivatōr*
*kariyā taṟkeva ruriyārē.*

Oh! Lòrd Aruka the Supreme,
Who doth rest on the nectarine lotus cool and glorious
Where the singing bees eagerly sojourn,
As one holding on his palm fair and lotus-like,
A gem of crafted lustre;
Thou doth look at worldly things entire,
Uniformly at all times unaffected by thought any,
If it is stated that none else other than Thou
Can look thus,
Who else is eligible to be cited,
As a witness to comprehend
This world surrounded by seas spacious?

## Explanatory note

*Kiraṇam* - Lustre. In this poem Lord Arukaṉ is celebrated as *Carvakñaṉ* which means The Omniscient one.

### எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

12. *உரிமையால் யாவ னுரைவழி நடப்ப துலகெலா மவனுல காளும்*
*பெருமையா னென்னி னெழுநயம் பகர்ந்த பிண்டியா யலதியா ருரியார்*
*கருமைசால் வினையின் கட்டர ணழிய மட்டவிழ் கமலமா நடவி*
*யருமைசா லுலக மேழினு நடாத்து மாணையா யமரர்நா யகனே.*

**பதப்பொருள்:** உரிமையால் - உரிமையினாலே. யாவன் - எவனுடைய. உரை - தருமவாக்கினது. வழி - நெறியில். நடப்பது - செல்லுகின்றதோ. உலகெலாம் - எல்லாவுலகும். அவன் - அவனே. உலகு - உலகத்தை. ஆளும் - ஆளுகின்ற. பெருமையான் - பெருமையை உடையவன். என்னின் - என்று சொல்லப்பட்டால். எழுநயம் - சத்தபங்க நியாயத்தைப் பகர்ந்த - சொன்ன. பிண்டியாய் - அசோகினையுடையவனே. அல்லது யார்- நீயல்லது எவர்கள். உரியார் - உரிமையுடையவர்கள். கருமை - இருளானது. சால - மிகுந்த. வினையின் - உயிர்களைப் பந்தித்த வினையினுடைய. கட்டு - பந்தமாகிய. அரண் - வலியானது. அழிய - கெட்டு. மட்டு- தேனானது. அவிழ் - வழிகின்ற. கமலம்- தாமரைப்பூவாகிய. மா - யானையை. நடவி - நடத்தி. அருமைசால் - அருமைசான்ற. உலகமேழினும் - ஏழு உலகத்தினும். நடாத்தும் - செலுத்துகின்ற. ஆணையாய் - ஆக்கினையுடையவனே. அமரர் - தேவர்களுக்கு. நாயகனே - நாதனே என்றவாறு.

**பொழிப்புரை:** சத்தபங்க நியாயத்தைச் சொன்ன அசோகினை உடையவனே! இருள் மிகுந்த சீவராசிகளைப் பந்தித்திருந்த வினையினையுடைய பந்தமாகிய வலியானது கெட தேன் வழிகின்ற தாமரைப் பூவாகிய யானையை நடத்திய அருமை சான்ற ஏழு உலகத்தினும் செலுத்துகின்ற ஆக்கினை உடையவனே! தேவர்களுக்கு நாயகனே! எல்லா உலகும் உரிமையினாலே எவனுடைய தருமவாக்கின் வழியே செல்லுகின்றதோ, அவனே உலகத்தை ஆளுகின்ற பெருமை உடையவன் என்று சொல்லப்பட்டால் நீயல்லாது உரிமையுடையவர்கள் எவர்கள் என்றவாறு.

**வி.ரை** - இதனால் இவனே உலகத்திற்கு நாதனென்று கூறப்பட்டது. உரியார் - எழுவாய், எவர்- பயனிலை.

சப்தபங்கநயம் - ஒருபொருளை ஏழுவகையில் ஆராய்ந்து அதன் உண்மையைக் காண்பது. பந்தித்தல் - கட்டுதல். ஏழு உலகம் - நாகலோகம், பவணலோகம், நரலோகம், சோதிர் லோகம், கல்பலோகம். அகமிந்திரலோகம், மோட்சலோகம். ஆக்கினை- அதிகாரம்.

### *eḻucīrk kaḻineṭil viruttam*

*urimaiyāl yāva ṉuraivaḻi naṭappa tulakelā mavaṉula kāḷum*
*perumaiyā ṉeṉṉi ṉeḻunayam pakarnta piṇṭiyā yalatiyā ruriyār*
*karumaicāl viṉaiyiṉ kaṭṭara ṇaḻiya maṭṭaviḻ kamalamā naṭavi*
*yarumaicā lulaka mēḻiṉu naṭāttu māṇaiyā yamararñā yakaṉē.*

On! Thou who doth steer the lotus of overflowing nectar,
As if it were an elephant
Oh! Thou who hath command,
Over the worlds seven!
Oh! Lord of the Heavenly folk,
If it is claimed,
That only he, whose gospel virtuous
All the worlds follow in right earnest,
Hath the glory to rule the world,
Who else but Thou,
Hath that claim?

## Explanatory notes

**Seven codes of justice** - known as *captapaṅka niyāyam.* The Jaina concept of analysing an object in seven angles or ways and arriving at the truth.

**The seven worlds are** : *nākalōkam, pavaṇalōkam, naralōkam, cōtirlōkam, kalpalōkam, akamintiralōkam, mōṭcalōkam.*

### காப்பியக் கலித்துறை

13. *நாயக னிவனென வகிலமு நவில்வதோர் பதநண்ணிப்*
*பாயந லிசையொடு பலவுக நிலவுதல் பெறினும்பேர்*
*தூயன பெரியன வாயிர முடையவர் சுடர்போதிற்*
*போயவ ரடிபுகழ் புலவரோ டலதுரை கலவோமே.*

**பதப்பொருள்:** நாயகன் - நாதன். இவனென - இவனென்று. அகிலமும் - உலகமெல்லாம். நவில்வது - சொல்வதாகிய. ஓர்பதம் - ஒரு வாழ்வை. நண்ணி - அடைந்து. பாய - பரந்த. நல் - நல்ல. இசையொடு - புகழுடன் கூடி. பல - பலபொருள்களும். உக - அழிய. நிலவுதல் - தாம் விளங்குதலை. பெறினும் - ஒருவர் பெற்றாராயினும். பேர் - நாமங்கள். தூயன - பரிசுத்தமுடையனவும். பெரியன - பெருமையுடையனவும். ஆயிரமுடையவர் - ஆயிரம் நாமத்தையுடையவர். சுடர் - ஒளிர்கின்ற. போதில் - தாமரைப்பூவில். போயவர் - நடந்தவருடைய. அடி - பாதங்களை. புகழ் - துதிக்கின்ற. புலவரோடு - அறிவுடையவருடன். அலது - அல்லாமல். உரைகலவோம் - பேசமாட்டோம் என்றவாறு.

**பொழிப்புரை:** இவன் நாயகன் என்று எல்லா உலகமும் சொல்வதாகிய ஒரு வாழ்வை அடைந்து பரந்த நல்ல புகழுடன் கூடி, பல பொருள்களும் கெட ஒருவர் தாம் விளங்குதலைப் பெற்றாராயினும், தூய்மை உடையனவும் பெருமை உடையனவுமான ஆயிரம் நாமங்களை உடைய ஒளிர்கின்ற தாமரைப் பூவில் நடந்தவருடைய பாதங்களைப் புகழ்கின்ற புலவருடன் அல்லாமல் வேறு யாவருடனும் யாம் பேசமாட்டோம் என்றவாறு.

**வி.ரை** : இதனால் மித்யாதிருஷ்டிகள் எத்தன்மையராயினும் அறிவிலரென்பது கூறப்பட்டது. யாம் - எழுவாய்; உரைகலவோம் - பயனிலை.

மித்தியாதிருஷ்டி - உள்ளதை உள்ளபடியே அறியும் மெய்யறிவு இல்லாதவர்.

### *kāppiyak kalitturai*

*nāyaka ṉivaṉeṉa vakilamu navilvatōr patanaṉṉip*
*pāyana licaiyoṭu palavuka nilavutal periṉumpēr*
*tūyaṉa periyaṉa vāyira muṭaiyavar cuṭarpōtiṟ*
*pōyava raṭipukaḻ pulavarō ṭalaturai kalavōmē.*

Even if one attaineth a life
Which makes worlds all hail him as the lord,
And remains with distinction wide to the detriment of *poruḷs* several
We won't talk with anyone else but
Such wise ones as land the feet of the Lord
Who did tread on the lotus luminous,
And who hath a thousand names that spell,
Purity and pride.

## Explanatory note

Persons who are unaware of the greatness of Lord Arukar are called *Mittiyātiruṣṭi* in Jainism. They are considered people without discerning knowledge, however great they are otherwise.

### ஊசல்

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

14. *கலவமயிற் குலமனையீ ராடாமோ வூசல்*
*கருங்குழன்மேற் சுரும்பிரிய வாடாமோ வூசல்*
*உலவுதுணைக் கயல்பிறழ வாடாமோ வூசல்*
*ஒளிருமணி வடமசைய வாடாமோ வூசல்*
*புலவுசுவைத் தொளிருபடை தொடாது முத்தி*
*பொருபகடிப் பகைதுரந்த புனிதர் கோலத்*
*திலதமலர்ப் பதம்பாடி யாடாமோ வூசல்*
*செம்பொனெயில் வளம்பாடி யாடாமோ வூசல்.*

**பதப்பொருள்:** கலவம் - தோகையை உடைய. மயிற்குலம் - மயில்கூட்டங்களை. அனையீர்- ஒப்புடையீர். ஆடாமோ - ஆடுவோம். ஊசல் - ஊஞ்சல். கரும் - கறுத்த குழன் மேல் - அளகமீது. சுரும்பு - வண்டுகள். இரிய - ஓட ஆடாமோ - ஆடுவோம் ஊசல் - ஊஞ்சல். உலவு - திரிகின்ற. துணை - இரண்டாகிய. கயல் சேல்கெண்டைகள் பிறழ - புரள. ஆடாமோ- ஆடுவோம். ஊசல் - ஊஞ்சல். ஒளிரும் - விளங்குகின்ற. மணிவடம் - முத்துவடம் அசைய. ஆடாமோ - ஆடுவோம். ஊசல் - ஊஞ்சல். புலவு - நிணங்களை. சுவைத்து - புசித்து. ஒளிரும் - விளங்குகின்ற. படை - ஆயுதங்களை. தொடாது - தீண்டாமல். முத்தி - பேரின்பத்தை அடையாமல். பொரு - போர் செய்கின்ற. பகடி - ப்ரக்ருதியாகிய. பகை - சத்துருவை. துரந்த - செயித்த. புனிதர் - அருகருடைய. கோலம் - அழகிய. திலதம் - யாவருக்கும் திலதமான. மலர்- தாமரை மலர் போன்ற பதத்தை - பாதத்தை. பாடி - துதித்து ஆடாமோ - ஆடுவோம். ஊசல் - ஊஞ்சல். செம்- சிவந்த. பொன் - பொன்னாலாகிய. எயில் - மும்மதிலினுடைய. வளம்- வளப்பத்தை. பாடி - துதித்து. ஆடாமோ - ஆடுவோம். ஊசல் - ஊஞ்சல் என்றவாறு.

**பொழிப்புரை:** தோகையை உடைய மயிற்கூட்டங்களை ஒப்புடையீர்! ஆடுவோம் ஊஞ்சல்; கருத்த அளகமீது வண்டுகளோட ஆடுவோம் ஊஞ்சல் திரிகின்ற இரண்டாகிய சேற்கெண்டைகள் புரள ஆடுவோம் ஊஞ்சல் நிணங்களைப் புசித்து விளங்குகின்ற ஆயுதங்களைத் தீண்டாமல் பேரின்பத்தை அடையாமல் தடுத்துப் போர் செய்கின்ற ப்ரக்ருதியாகிய சத்துருவை செயித்த அருகருடைய அழகிய, யாவருக்குந் திலதமான தாமரை மலர் போன்ற பாதத்தைத் துதித்து ஆடுவோம் ஊஞ்சல். சிவந்த பொன்னால் ஆகிய மும்மதிலினுடைய வளப்பத்தைத் துதித்து ஆடுவோம் ஊஞ்சல் என்றவாறு

**வி-ரை :** இதனால் இவனே நிருமலனென்று கூறப்பட்டது. நாம் - எழுவாய். ஊசலாடுவோம்- பயனிலை.

அளகம் - கூந்தல் நிணம் - இறைச்சி; புலால் பிரக்கிருதி - தன்மை, இயல்பு. சத்துரு - பகைவர். திலதம் - நெற்றித்திலகம். மும்மதில் - சமவசரணம் - இந்திரன் கட்டளைப்படி குபேரனால் பூமிக்கு மேல் ஐந்தாயிரம் வில் உயரத்தில் பக்தியுடன் கட்டப்பட்ட அறவுரை மண்டபம் (1வில் - 160 செ.மீ).

## *Ūcal*

### *eṉcīrk kaḻineṭil viruttam*

*kalavamayiṟ kulamaṉaiyi rāṭāmō vūcal*
*karuṅkuḻaṉmēṟ curumpiriya vāṭāmō vūcal*
*ulavutuṇaik kayalpiṟaḻa vāṭāmō vūcal*
*oḷirumaṇi vaṭamacaiya vāṭāmō vūcal*
*pulavucuvait toḷirupaṭai toṭātu mutti*
*porupakaṭip pakaituranta puṉitar kōlat*
*tilatamalarp patampāṭi yāṭāmō vūcal*
*cempoṉeyil vaḷampāṭi yāṭāmō vūcal.*

Oh! womenfolk who resemble a flock of peacocks plumed,
Let us swing,
Along with the bees that swarm over the tresses black,
Let us swing,
As the *kayal* fishes sway in pairs,
Let us swing,
Worshipping Lord Arukar's lovely lotus feet,
That are worn like *tilakam* by all,
(The feet of Lord Arukar)
Who did defeat *pirakiruti* the foe,
Who fights against the attainment of bliss eternal,
By eating flesh and without handling weapons bright
Extolling the bounty of the *mummatil* made of gold,
Let us swing

## Explanatory notes

*Kayal* - a kind of fish also known as *keṇṭai*. *Tilakam* - a mark worn on one's forehead for adornment or sentiment. *Pirakiruti* - nature. ***Mummatil*** - The three ramparts built by Kupēraṉ (the lord of wealth) at the behest of *Intiraṉ* (The chief of heavenly beings) at a height of 5000 *vil* (One *vil* measures 160 centimetres).

**கலிவிருத்தம்**

15. *ஊசற்குழை நல்லார்தம துளவாறறி யாதே*
*நேசப்படு நெஞ்சானினை வாரேயினை வாரே*
*பேசப்படு மொருகுற்றமு மில்லார்தமை யொருகாற்*
*பேசப்படு வாரேபிற வாரேயிற வாரே.*

**பதப்பொருள்:** ஊசல் - அசைகின்ற. குழை - குண்டலத்தையுடைய. நல்லார்தமது - மாதர்களுடைய. உளம் - மனத்திலெண்ணும். ஆறு - கபடமார்க்கத்தை. அறியாதே - அறியாமல். நேசப்படும் - மயல்கொள்ளும். நெஞ்சால் - மனத்தால், நினவாரே - அவரை நினைக்கின்றவர்கள். இனைவார்- துக்கமடைவார். பேசப்படும் - சொல்லப்படும். ஒரு குற்றமும் - ஒரு தீங்கும் இல்லார்தமை - இல்லாத அருக பரமேட்டியை. ஒருகால் - ஒருதரம் பேசப்படுவாரே - துதிப்பவரே. பிறவார் - இனிப்பிறவாதவர்களும். இறவார் - இறவாதவர்களும் ஆவார் என்றவாறு.

**பொழிப்புரை:** ஊசலாடுங் குழையை உடைய நல்லோரது மனத்திலெண்ணும் கபடமார்க்கத்தை அறியாமல் மையல் கொள்ளும் மனத்தால் அவரை நினைக்கின்றவர்களே துக்கமடைவர்;

சொல்லப்படும் ஒரு தீங்குமில்லாத அருக பரமேட்டியை ஒருதரம் துதிப்பவரே இனிப்பிறவாதவர்களும் இறவாதவர்களுமாவார் என்றவாறு.

**வி-ரை** : இதனால் பற்றற்றவனது பற்றினைப் பற்ற வேண்டும் என்பது கூறப்பட்டது. நினைவாரே- எழுவாய். இணைவார் - பயனிலை. பேசப்படுவார் - எழுவாய். பிறவாறிறவார் என்றது பயனிலை.

கபடமார்க்கம்-வஞ்சக எண்ணம். மையல் - மயக்கம்; மோகம்.

## *kaliviruttam*

*ūcaṟkuḻai nallārtama tuḷavāṟaṟi yātē*
*nēcappaṭu neñcāṉiṉai vārēyiṉai vārē*
*pēcappaṭu morukuṟṟamu millārtamai yorukāṟ*
*pēcappaṭu vārēpiṟa vārēyiṟa vārē.*

Unaware of the guileful ways of the minds
Of women with dangling earrings,
Those who long for them with minds infatuated
Will come to grief
Those who pray but once to
Lord Arukar, who hath not any flaw alleged (in general)
Will have no birth or death hereafter.

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

*16.* *இறந்துதாம் பொன்றுதலே வீடென் பாரு*
*மிறவாது கல்லாத லியல்பென் பாரும்*
*பிறந்துகோ னுடனொன்றா குதலென் பாரும்*
*பிறவாது சித்தளவென் பாரு மென்க*
*வறஞ்செய்வான் றிகிரியா லகில மாண்ட*
*வறவாழி யசஞ்சலர்தா மறைந்த நூலின்*
*றிறங்கொள்வா னச்சுதா நந்த மல்லாற்*
*செய்தவத்தா லுறநினையார் தேர்கிற் பாரே.*

**பதப்பொருள்:** இறந்துதாம் பொன்றுதலே - கையற நசித்தலே. வீடு - முத்தி. என்பாரும் - என்று சொல்பவரும். இறவாது - சாகாமற். கல்லாதல் - கற்போலாகுதல். இயல்பு என்பாரும்- முத்தித்தன்மை என்று சொல்பவரும். பிறந்து - உலகிற் பிறந்து. கோனுடன் - ஈசுவரனுடன். ஒன்றாகுதல் - கலத்தலே முத்தி. என்பாரும் - என்பவரும். பிறவாது - என்றும் பிறப்பில்லாமல். சித்து - ஞானத்தினுடைய. அளவு - அளவாதலே முத்தி. என்பாரும் - என்பவரும். என்க-

அப்படியே சொல்லுக.. அறம் - தருமம். செய்வான் - செய்யும் பொருட்டு. திகிரியால் - தரும சக்கரத்தினால். அகிலம் - உலகை. ஆண்ட - ஆள்கின்ற அறவாழி - அறக்கடலாகிய. சஞ்சலர்தாம் - சஞ்சலமில்லாத அருகபரமேட்டி. அறைந்த - சொன்ன. நூலின் - பரமாகமத்தினுடைய. திறம் - கூறுபாட்டை. கொள்வான் - கொள்பவனுடைய. அச்சுதம் - கெடாத. ஆனந்தமல்லாற் - சுகமேயல்லாமல். செய் - செய்யப்பட்ட தவத்தால் - தவத்தினாலே. உற -வேறானசுகத்தையடைய. நினையார் - எண்ணார்கள் தேர்கிற்பார் - விவேகமுடையார் என்றவாறு

**பொழிப்புரை** சிலர் கையற நசித்தலே முத்தியென்பவரும், சாகாமல் காயசித்தி செய்தலே முத்தியென்பவரும், உலகத்தில் பிறந்து ஈசுவரனுடன் கலத்தலே முத்தி என்பவரும், என்றும் பிறப்பில்லாமல் ஞானத்தினுடைய அளவாதலே முத்தி என்பவரும், அப்படியே சொல்லுக; தருமத்தைச் செய்யும் பொருட்டுத் தருமச் சக்கரத்தினால் உலகத்தை ஆளுகின்ற அறக்கடலாகிய சஞ்சலமில்லாத அருகபரமேட்டி சொன்ன பரமாகமத்தினுடைய கெடாத சுகத்தையே அல்லாமல் விவேகமுடையவர்கள் வேறான சுகத்தைத் தாங்கள் செய்யப்பட்ட தவத்தினால் அடைய எண்ணார்கள் என்றவாறு.

**வி-ரை :** இதனால் மித்யா த்ருஷ்டிகள் கூறும் முத்திநிலை இழிக்கப்பட்டது. தேர்கிற்பார் - எழுவாய். வேறான சுகத்தை - செயப்படுபொருள். நினையார் - பயனிலை.

கையற நசித்தல் - கையால் தன் உயிரைப் போக்கிக் கொள்ளுதல். காயசித்தி - உடம்பை நரை திரையின்றி நெடுநாள் இருக்கச் செய்யும் வித்தை. பரமாகமம்- சைன ஆகம முறைப்படி முற்றும் உணர்ந்த மகான்கள் அறிந்து உரைத்த தத்துவக் கருத்துக்கள் அடங்கிய நூல்.

### eṇcīrk kaḻineṭil viruttam

*iṟantutām poṉṟutalē viṭeṉ pāru*
*miṟavātu kallāta liyalpeṉ pārum*
*piṟantukō nūṭaṉoṉṟā kutaleṉ pārum*
*piṟavātu cittaḷaveṉ pāru meṉka*
*vaṟañceyvāṉ ṟikiriyā lakila māṇṭa*
*vaṟavāḻi yacañcalartā maṟainta nūliṉ*
*ṟiṟaṅkoḷvā ṉaccutā nanta ṃallāṟ*
*ceytavattā luṟaniṉaiyār tērkiṟ pārē.*

Let those,
Who say that perishing by one's own hand is *mukti*,
And those
Who state that attaining *kāyacitti* is *mukti*,
And those,

Who declare that mingling with God after birth in this world is *mukti,*
And those
Who utter that becoming a component of wisdom without birth is *mukti*
Let them all speak accordingly
The discerning wise however,
Will not desire any pleasure through their penance,
Other than the bliss flawless,
Prescribed in the *paramākamam* of Lord Arukar,
The Ocean of virtue sans fickle grief.

## Explanatory notes

*Mukti* - Eternal bliss. *Kāyacitti* - The process by which youthful longevity is attained and symptoms of old age are avoided.

### நேரிசையாசிரியப்பா

17. *தேர்வதொன் றுடையன் யானே காரெனக்*
*கடிமலர் மாரியோ டிடிமுர சியம்புங்*
*கொடிநுடங் காரெயிற் கிழவனை யொருதனி*
*யிருவினை யிரிய மூவரண் முருக்கிய*
*பொருவி றாளினை யென்ப வருள்புரிந்*
*தறந்தரு நாவினை யமரரு மரசருந்*
*தொடர்ந்தன ரிறைஞ்ச நடந்தனை சென்ற*
*போதும் வாடல தாயின்*
*யாதுகொ லாங்கவை நீயடு மாறே.*

**பதப்பொருள்:** தேர்வது - அறியவேண்டுவது. ஒன்று - ஒன்றினை. உடையன் - உடையேன். யானே - நான். காரென - மேகம் போல். கடி - வாசனை பொருந்திய. மலர்மாரியோடு - பூமாரியுடன். இடி- இடிபோல. முரசு - துந்துபி. இயம்பும் - முழங்குகின்ற. கொடி - கொடிகள். நுடங்கு - அசையப்பட்ட. ஆரம் - முறையாகப் பொருந்திய. எயில் - மும்மதிலையுடைய சமவசரணத்திற்கு. கிழவனை - உரியவானாகிய. ஒரு - ஒப்பற்ற. தனி- உன்னை. இருவினை - இருவினைகளும். இரிய - ஓட. மூவரண் - மும்மலங்களை. முருக்கிய - கெடுத்த. பொருவில்- ஒப்பில்லாத. தாளினை - பாதங்களையுடைய. என்ப - என்று சாதுக்கள் சொல்லுவார். அருள் - கருணையை. புரிந்து - விரும்பி. அறம் - தருமத்தை. தரு - தருகின்ற. நாவினை - நாவினையுடையாய். அமரரும் - தேவர்களும். அரசரும் - சக்ரவர்த்திகளும். தொடர்ந்தனர் - தொடர்ந்து. இறைஞ்ச - வணங்க. நடந்தனை- நடந்தாய். சென்ற - நடக்கப்பட்ட. போதும் - மலரும். வாடலதாயின் - வாடாததாயினால். யாதுகொல்- யாதுதான். அவை - அம்மலங்களை. நீயடுமாறு - கெடுக்கும்விதம் என்றவாறு.

**பொழிப்புரை:** மேகம் பொழிவதுபோல் பொழிகின்ற வாசனை பொருந்திய பூமாரியுடன், இடிபோல் துந்துபி முழங்குகின்ற கொடிகள் அசையப்பட்ட, முறையாகப் பொருந்திய மும்மதிலையுடைய சமவசரணத்திற்கு உரியவனே! ஒப்பற்ற இருவினைகளும் ஓட மும்மலங்களைக் கெடுத்த ஒப்பில்லாத பாதங்களையுடைய என்று சாதுக்கள் சொல்லும் கருணையை விரும்பித் தருமத்தைத் தருகின்ற நாவினை யுடையாய் தேவர்களும் சக்கிரவர்த்திகளும் தொடர்ந்து வணங்க நடந்தாய். நீ நடந்த மலரும் வாடாததாயினால் அம்மலங்களைக் கெடுக்கும் விதம் யாதுதான் என்று நான் அறிய வேண்டுவது ஒன்றினை உடையேன் என்றவாறு

**வி-ரை :** இதனால் இறைவனைப் பழிப்பது போலக் கருமங்களைக் கெடுத்தமை கூறப்பட்டது. யான் - எழுவாய். தேர்வதொன்றுடையன் - பயனிலை.

இருவினை - தேசகாதி, சர்வகாதி, மும்மலம் - காமம், வெகுளி, மயக்கம்.

### *nēricaiyāciriyappā*

*tērvaton̲ ṟuṭaiyan̲ yān̲ē kāren̲ak*
*kaṭimalar māriyō ṭiṭimura ciyampuṅ*
*koṭinuṭaṅ kāreyiṟ kil̲avan̲ai yorutan̲i*
*yiruvin̲ai yiriya mūvaraṇ murukkiya*
*poruvi ṟāḷin̲ai yen̲pa varuḷpurin*
*taṟantaru nāvin̲ai yamararu maracarun*
*toṭarntan̲a riṟaiñca naṭantan̲ai cen̲ṟa*
*pōtum vāṭala tāyin̲*
*yātuko lāṅkavai nīyaṭu māṟē.*

Oh! occupant rightful of *camavacaraṇam*
Amidst the *mummatil* (ramparts three) aligned properly,
Where flowers fragrant shower like pouring clouds
And drums rumble like thunder
Besides which the flags fixed therein sway.
Saints will assert that Thou hath feet peerless
That did dispel *iruvin̲ai* and destroy *mummalam*
Oh! Thou who hath a tongue,
Which hath willingly proclaimed mercy and conferred *tarumam*
I am eager to learn how thy feet with which
Thou walked with kings and divine folk in worshipful company,
And trod on the lotus flower ever so gently as not to make it wither
Did dispel *mummalam.*

## Explanatory notes

*Camavacaraṇam* - The seat of Lord Arukar, *Tarumam* - virtue or code of conduct. *Mummalam* - Lust, Anger, Ignorance. *Iruviṉai* - *Tēcakāti* and *Carvakāti.*

### காலம்

#### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

18. *அடல்விடங்கொள் பாதங்க ளமிர்தீனுங் கால*
*மரியினொடு கரியுமிருந் தறங்கேட்குங் காலம்*
*குடரிடங்கொள் பசியினொடு பிணிநணுகாக் காலம்*
*குறைந்தபொறி நிறைந்தெவருங் குணம்புரியும் காலம்*
*கடல்கிளர்ந்த தெனவுலகு தொடர்ந்திறைஞ்சச் செய்ய*
*கடிக்கமல மடிக்கமல மேந்தத் தொல்லை*
*யிடர்கடந்த கருணைமுகில் விசும்பிலெழுங் கால*
*மெம்மனமுங் காமனம்புக் கிடருழவாக் காலம்.*

**பதப்பொருள்:** அடல் - கொல்லுதலையுடைய. விடம் - நஞ்சத்தை. கொள் - கொண்ட பாதங்கள்- எட்டி முதலாகிய மரங்கள். அமிர்து - அமிர்தத்தை. ஈனும் காலம் - கொடுக்கும் காலம். அரியினொடு - சிங்கத்துடன். கரி - யானை. இருந்து - பகைநீங்கியிருந்து. அறம்- தருமத்தை. கேட்குங்காலம் - கேள்விப்படுங்காலம். குடர் - குடரை. இடம் - இடமாக. கொள் - கொண்ட. பசியினொடு - பசியினுடனே. பிணி - வியாதிகள். நணுகாக்காலம் - அணுகாத காலம். குறைந்த- குறைவுபட்ட. பொறி - பஞ்சேந்திரியமும். நிறைந்து - நிறைவுபட்டு. எவரும் - எவர்களும். குணம் - நன்மையை. புரியுங்காலம் - விரும்புங்காலம். கடல் - சமுத்திரம். கிளர்ந்தென - பொங்கினது போல. உலகு - உலகத்தார். தொடர்ந்து - அடைந்து. இறைஞ்ச - வணங்க. செய்ய- சிவந்த. கடி - வாசனை பொருந்திய கமலம் - தாமரைப் பூவானது. அடி - பாதமாகிய. கமலம்- தாமரைப்பூவை. ஏந்த - தாங்க. தொல்லை- பழமையாகிய. இடர் - துன்பங்களை. கடந்த - கெடுத்த. கருணை - கருணையையுடைய. முகில் - மேகமாகிய அருகபரமேட்டி. விசும்பில் - ஆகாய வீதியில். எழுங்காலம் - நடக்குங்காலம். எம்மனமும் - எமது மனமும். காமன் - மன்மதனது. அம்புக்கு - பூங்கணையினால். இடருழவாக்காலம் - வருந்தாக்காலம் என்றவாறு.

**பொழிப்புரை:** கடல் பொங்கினது போல உலகத்தாரடைந்து இறைஞ்ச, வாசனை பொருந்திய செங்கமலமானது பாதமாகிய கமலங்களைத் தாங்கப் பழமையாகிய துன்பங்களைக் கெடுத்த கருணையையுடைய முகிலாகிய அருக பரமேஷ்டி ஆகாயவீதியில் நடக்குங்காலமானது; கொல்லுதலையுடைய விசத்தைக் கொண்ட எட்டி முதலான மரங்கள் அமிர்தத்தைக் கொடுக்குங்காலமும். சிங்கத்துடன் யானை பகை நீங்கியிருந்து தருமத்தைக் கேள்விப்படுங்காலமும். குடரையிடமாகக் கொண்ட பசியுடன். பிணியணுகாத காலமும், குறைவுபட்ட ஐம்பொறியும் நிறைவு பட்டே வரும் நன்மையை விரும்புங் காலமும், எமது மனதுங் காமனது அம்பினால் வ்ருந்தாக் காலமுமாம் என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகபரமனை நம்பினவருக்குச் சகல நன்மையு முண்டா மென்பது கூறப்பட்டது. எழுங்காலம் - எழுவாய். காலம் என்பனவெல்லாந் தனித்தனி பயனிலைகள்.

## *Kālam*

### *encirk kalinetil viruttam*

*atalvitankol pātanka lamirtinuṅ kāla*
*mariyinotu kariyumirun tarankētkuṅ kālam*
*kutaritankol paciyinotu pininanukāk kālam*
*kuraintapori niraintevaruṅ kunampuriyam kālam*
*katalkilarnta tenavulaku totarntiraiñcac ceyya*
*katikkamala matikkamala mentat tollai*
*yitarkatanta karunaimukil vicumpileluṅ kāla*
*memmanamuṅ kāmanampuk kitarulavāk kālam.*

The time when,
The lethal and toxic trees like etti yield nectar divine,
An elephant in a lion's company doth listen to *aram*
Without hostility mutual,
Hunger acute of the intestine and disease hurt no more,
The imperfect senses five become perfect in pursuit of good,
And our minds are not vitiated by Kāman's flowery shaft,
Is that time,
When Lord Arukar the cloud of mercy doth tread His path celestial,
With His feet flowery borne by the fragrant lotus red,
As the worldly folk like an ocean surging reach Him and worship.

### வஞ்சி விருத்தம்

*19.* *கால னென்றுடல் கால்பறிந்துயிர்*
*மால வந்துழி மாலொழிந்துமுன்*
*மூல மந்திர மூலமேயென*
*வோல மென்பவ ரும்பர்நாதரே.*

**பதப்பொருள்** காலனென்று - கூற்றுவனென்று சொல்லும் அந்தியகாலம். உடல் - தேகமானது கால்பறிந்து - நிலைகுலைந்து. உயிர் - சீவன் மால - மயங்க. வந்துழி - வந்தபோது மால்- மயக்கத்தினின்று. ஒழிந்து - நீங்கி முன் அனாதியாயிருக்கின்ற. மூலமந்திரம் - பஞ்சமந்திரத்தைக் கொண்டு. மூலமேயென - ஆதியேயென்று ஓலமென்பவர் - அடைக்கலமென்று சொல்பவர்கள் உம்பர்நாதர் - தேவேந்திரராவார் என்றவாறு

**பொழிப்புரை:** உடலானது நிலைகுலைந்து உயிர் மயங்கக் கூற்றுவனென்று சொல்லும் அந்தியக்காலம் வந்தபோது மயக்கத்தினின்று நீங்கி, ஆதியென்று அனாதியாய் இருக்கின்ற பஞ்ச மந்திரத்தைக் கொண்டு அடைக்கலம் என்று சொல்பவர் தேவர்களுக்கு நாயகர் என்றவாறு

**வி-ரை :** இதனால் அருக பரமனை அந்தியக்காலத்தில் நினைத்தவர் இந்திரர் ஆவார் என்பது கூறப்பட்டது. ஓலமென்பவர் - எழுவாய். உம்பர்நாதர் - பயனிலை

அனாதி - தோற்றம் இல்லாதது அந்தியக்காலம் - இறுதிக்காலம். பஞ்சமந்திரம் - அ சி.ஆ.உ.சா. அ - அருகரை வணங்குகிறேன். சி - சித்திரை வணங்குகிறேன் ஆ - ஆசாரியரை வணங்குகிறேன். உ- உபாத்தியாயரை வணங்குகிறேன். சா - சாதுக்கள் எல்லோரையும் வணங்குகிறேன்.

### *vañci viruttam*

*kāla ṉeṉṟuṭal kālpaṟintuyir*
*māla vantuḻi mālo̱lintumuṉ*
*mūla mantira mūlamēyeṉa*
*vōla meṉpava rumparnātarē.*

When the twilight time of life's end comes near,
And the body shatters and (the conscious) life ebbs,
And proclaims the proximity of *kālaṉ* (God of death)
Those who from such stupor wake and rise,
And through the *pañcamantiram* sans beginning,
Seek refuge from Lord Arukar as *āti*
Will become the leaders of heavenly folk.

## Explanatory notes

Pañca mantiram *A, Ci, Ā, U, Cā* (The five incantations) (1) *A* - I worship *Arukar,* (2) *Ci* - I worship *Cittar,* (3) *Ā* - I worship *Ācāriyar* (mentor) (4) *U* - I worship *Upāttiyāyar* (teacher) (5) *Cā* - I worship *ellā Cātukkaḷ* (all saints) *Āti* - The source or beginning.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

20. *உம்பர்நா டடைவார் நம்பத மடைவா*
*ரொழிந்தவ ரிழிந்தநாற் கதியிற்*
*றுன்பமே யடைவா ரென்றுநீ விதித்த*
*தொல்விதி கடந்தவ ருளரே*
*வம்புலாய் நிமிர்ந்து வடஞ்சுமந் தடங்கா*
*வனமுலை மடந்தையர் தடங்க*
*ணம்பினா லுடையா வருந்திற லுடையா*
*யமலனே கமலவா கனனே.*

**பதப்பொருள்:** உம்பர்நாடு - உயர்வான முத்தி நாட்டை. அடைவார் - சேர்வார். நம் - நமது. பதம் - பாதங்களை. அடைவார் - சேர்வார். ஒழிந்தவர் - சேராதவர். இழிந்த - இழிவுபட்ட. நாற்கதியில் - நாற்பிறப்பினும் பிறந்து. துன்பமே - துன்பமே அடைவாரென்று - சேர்வார் என்று. நீவிதித்த - நீ நியமித்த, தொல் - பழமையாகிய. விதி - நியதியை. கடந்தவர் - கடந்தவர்கள். உளரே - உண்டோ. வம்பு - கச்சினுள். உலாய் - பரந்து. நிமிர்ந்து - பூரித்து. வடம் - முத்துவடம், முத்துவடங்களை. சுமந்து - தாங்கி. அடங்கா - அடங்காத வனம் - அழகிய. முலை - தனங்களையுடைய. மடந்தையர் - மாதர்களுடைய. தடம் - பரந்த. கண்- கண்ணாகிய. அம்பினால் - பாணத்தினால். உடையா - கெடாத. அரும் - அரிய. திறல் - வலியை. உடையாய்- உடையவனே. அமலனே - நிருமலனே. கமலம் - தாமரைப் பூவாகிய. வாகனனே - வாகனத்தை உடையவனே என்றவாறு.

**பொழிப்புரை** : பரந்து பூரித்து முத்துவடம் தாங்கி கச்சினுள் அடங்காத அழகிய தனங்களையுடைய மாதர்களுடைய பரந்த கண்ணாகிய பாணத்தினால் கெடாத அரிய திறலையுடையவனே! நிருமலனே! கமல வாகனனே! நீ தமது பாதங்களைச் சேர்பவர் உயர்வான முத்தி நாட்டை அடைவார். அடையாதவர் இழிவுபட்ட நாற்பிறப்பினும் பிறந்து துன்பத்தையே பெறுவார் என்று நீ நியமித்த பழைய விதியைக் கடந்தவருண்டோ? என்றவாறு.

**வி-ரை** : இதனால் திருவாக்கின் உறுதி கூறப்பட்டது. கடந்தவர்-எழுவாய். உண்டோ- பயனிலை.

நிருமலன்- குற்றமற்றவன். அருகரின் 1008 பெயர்களுள் ஒன்று.

## *e̲lucīrk ka̲lineṭil viruttam*

*umparnā ṭaṭaivār nampata maṭaivā*
*ro̲lintava ri̲lintanā̲r katiyi̲r*
*r̲un̲pamē yaṭaivā ren̲r̲unī vititta*
*tolviti kaṭantava ruḷarē*
*vampulāy nimirntu vaṭañcuman taṭaṅkā*
*van̲amulai maṭantaiyar taṭaṅka*

*ṇampiṉā luṭaiyā varuntiṟa luṭaiyā*
*yamalaṉē kamalavā kaṉaṉē.*

Oh! Lord Nirumalaṉ! Oh! God astride the Lotus!
Oh! Thou who hath the mettle rare,
As not to be debased by the shafts of the wide eyes
Of women whose swelling breasts beautiful adorned with strings of pearls
Are not containable by brassieres.
Thou hath prescribed a code
That those who attain Thy feet,
Will reach the land of *mukti*
And others (who do not reach Thy feet)
Will wallow in their *nāṟkati* (four stages) birth
And come to grief.

## Explanatory notes

Nirumalaṉ - The impeccable or flawless one. One of the 1008 names of Lord Arukar.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

21. *வாகன மாகம் பூத்த மாமல ராக வேகு*
*மேகனை யுணர்ந்தி லாமை யுணர்தலிவ் விரண்டி னாலும்*
*வேகவெங் கதியும் வீடும் விளைதரு மென்றா லெண்ணில்*
*போகனை யன்றி யாரே புவனகா ரணரா வர்ரே.*

**பதப்பொருள்:** வாகனம் - வாகனமானது. மாகம் - ஆகாயத்தில். பூத்த - உண்டான. மா- பெருமை பொருந்திய. மலராக - தாமரைப் பூவாக. ஏகும் - நடக்கும். ஏகனை - அருகபரமனை. உணர்ந்திலாமை - அறியாமையும். உணர்தல் - அறிதலுமாகிய. இவ்விரண்டினாலும் - இவ்விரு செய்கையினாலும். வேகம் - கடுமையான. வெம் - வெப்பமுடைய. கதியும் - இழிவான கதியும். வீடும் - முத்தியும். விளைதரும் - சீவனுக்குண்டாகும். என்றால் - என்று சாதுக்களால் சொல்லப்பட்டால். எண்ணில்போகனை- அனந்த சுகத்தை உடையவனை. அன்றி - அல்லாமல். யாரே - எவர்கள். புவனம் - உலகத்திற்கு. காரணராவார் - இன்பகாரணராவார்கள் என்றவாறு.

**பொழிப்புரை:** உலகத்தீரே! ஆகாயத்திலுண்டான பெருமை பொருந்திய தாமரைப்பூ வாகனமாக நடக்கும் அருகபரமனை அறியாமையும், அறிதலுமாகிய இவ்விருசெய்கையினாலும் கடுமையான வெப்பமுடைய இழிவான கதியும், முத்தியும் சீவனுக்கு உண்டாகுமென்று சாதுக்களால்

சொல்லப்பட்டால் அனந்த சுகத்தை உடையவனை அன்றி எவர் உலகத்திற்குக் காரணராவரென்றவாறு.

**வி-ரை :** இதனால் உலகத்திற்கு இன்பகாரண னிவனே என்று கூறப்பட்டது. காரணராவார்- எழுவாய். யார் - பயனிலை. அனந்தசுகம் - கடையிலா இன்பம். இது எண்வகை குணங்களுள் ஒன்று.

## *arucirk kalinetil viruttam*

*vākana mākam pūtta māmala rāka vēku*
*mēkanai yunarnti lāmai yunartaliv viranti nālum*
*vēkaveṅ katiyum vitum vilaitaru menrā lennil*
*pōkanai yanri yārē puvanakā ranarā vārē.*

If and when the saints vouch and assure,
That ignorance of *Ēkan* who doth traverse,
Astride the glorious lotus blossomed in the sky,
Will lead to disgrace hot and rigorous,
And awareness (of that *Ēkan*)
Will cause *Vītu* (eternal bliss)
Who else other than that possessor of endless comfort,
Is the source of joy in this world?

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

22. ஆவா ருனக்கு நானடிமை யென்னா வல்லே மெனவுயர்ந்து
போவா ரென்றே யெப்பொழுதும் பூவும் புனலுங் கொண்டேத்தி
யோவா திறைஞ்சு மென்னகத்தே யொருநாள் வந்தா லுலகாளுந்
தேவா திபனே திருமாலே நின்றன் பெருமை சிதைவாமோ.

**பதப்பொருள்:** ஆவார் - அடிமையாகும் அவர். உனக்கு - நினக்கு. நான் - யான். அடிமையென்னா- அடிமையென்று சொல்லி. வல்லேமென - கருமத்தைக் கெடுக்கும் வல்லமை உடையோமென்று. உயர்ந்து போவாரென்றே - முத்தியடைவாரென்றறிந்து. எப்பொழுதும் - முக்காலத்தினும். பூவும் - மலர்களும். புனலும் - சலமும். கொண்டு- கைக்கொண்டு. பூசித்து - ஏத்தித்துதித்து. ஓவாது - நீங்காமல். இறைஞ்சும் - வணங்குகின்ற. என் - எனது. அகத்தே - மனத்திலே. ஒருநாள் - ஒருதினம். வந்தால் - வந்திருந்தால். உலகு - உலகத்தை. ஆளும் - ஆளுகின்ற. தேவாதிபனே - தேவநாதனே. திரு - முத்தி இலக்குமியையுடைய. மாலே - அருகனே. நின்றன் - உனது. பெருமை - மென்மையானது. சிதைவாமோ - கெடுதியாமோ என்றவாறு.

**பொழிப்புரை:** உலகத்தை ஆளுகின்ற தேவநாதனே! முத்தி இலக்குமியை உடைய அருகனே! உனக்கு நான் அடிமை என்று சொல்லி அடிமையாகும் அவர்கருமத்தைக் கெடுக்கும் வல்லமை யுடையோ மென்று முத்தி அடைவார் என்று அறிந்து, முப்பொழுதினும் பூவும், புனலும் கைக்கொண்டு பூசித்துத் துதித்து இடைவிடாமல் வணங்குகின்ற என் மனத்தில் ஒருதினம் வந்திருந்தால் உனது பெருமையானது கெடுதியாமோ என்றவாறு.

**வி-ரை** : இதனால் பழிப்பது போல முத்திக்கு நாதனிவனென்பது கூறப்பட்டது. பெருமை-எழுவாய். சிதைவாமோ - பயனிலை.

## *aṟucīrk kaḻineṭil viruttam*

*āvā ruṉakku nāṉaṭimai yeṉṉā vallē meṉavuyarntu*
*pōvā reṉṟē yeppoḻutum pūvum puṉaluṅ koṇṭētti*
*yōvā tiṟaiñcu meṉṉakattē yorunāḷ vantā lulakāḷun*
*tēvā tipaṉē tirumālē niṉṟaṉ perumai citaivāmō.*

Oh! *Tēvātipaṉ* who ruleth this world,
Oh! Tirumāl, knowing full well,
That those who say 'I am thy vassal'
Will be exalted in *mukti*
As capable of dispelling *karmam*
I do worship Thee at all times without break,
And pray with flowers and water in hand
Will thy glory be wrecked,
If you have just a day's sojourn
At my heart?

## Explanatory notes

*Tēvātipaṉ* - The chief of heavenly beings, Tirumāl - Arukar who possesses the *Tiru* or Ilakkumi (Goddess of wealth) of *mukti*. *Karmam* - The impact of one's deeds or action.

**கட்டளைக் கலித்துறை**

23. *சிதைக்குங் கதிப்பெயர் மாயச் சகடுஞ் சிதைந்துசிந்த*
*வுதைக்குந் திருவடிப் போதிரண் டானற வுண்டுவண்டு*
*துதைக்கு மலருந் தளிருஞ் சுமந்திரு டீங்கிவையம்*
*புதைக்கும் பொழிற்பிண்டி யாயடி யேனைப் புரந்தருளே.*

**பதப்பொருள்**: சிதைக்கும் - உயிர்களைக் கெடுக்காநின்ற. கதிப்பெயர் - நாற்கதியென்னும் பெயரை உடைய. மாயம் - பொய்யாகிய. சகடம் - வண்டியானது. சிதைந்து - உடைந்து சிந்த - அழிய. உதைக்கும் - உதைத்த. திரு - அழகிய. அடி - பாதங்களாகிய, போதிரண்டால்- தாமரைப் பூவிரண்டினாலே. நறவு - தேனை. உண்டு - புசித்து. வண்டு - சுரும்பு. துதைக்கும்- நெருக்குகின்ற. மலரும் - பூக்களையும். தளிரும் - துளிரையும் சுமந்து - தாங்கி. இருள்- இருளானது. தாங்கி- தங்கப்பட்டு. வையம் - உலகத்தை. புதைக்கும் - கவிக்கும். பொழில்- பெருமை பொருந்திய. பிண்டியாய் - அசோகினை உடையவனே அடியேனை - அடிமையான என்னை. புரந்தருள் - ஆண்டருளென்றவாறு.

**பொழிப்புரை**: வண்டு தேனை உண்டு நெருக்குகின்ற மலரையும், தளிரையும் சுமந்து இருளானது தங்க, உலகத்தைக் கவிக்கும் பெருமை பொருந்திய அசோகினை உடையவனே! உயிர்களைக் கெடுக்கா நின்ற நாற்கதி என்னும் பெயரை உடைய மாயச்சகடமானது, உடைந்து சிதைந்து உதைத்த அழகிய பாதங்களாகிய தாமரைப் பூ இரண்டினாலே அடிமையான என்னை நீ ஆண்டருள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் தான் வேண்டும் பொருள் கூறப்பட்டது. நீ - எழுவாய் அடியேனை - செயப்படுபொருள். புரந்தருள் - பயனிலை.

### *kaṭṭaḷaik kalitturai*

*citaikkuṅ katippeyar māyac cakaṭañ citaintucinta*
*vutaikkun tiruvaṭip pōtiraṇ ṭāṉaṟa vuṇṭuvaṇṭu*
*tutaikku malarun taḷiruñ cumantiru ṭūṅkivaiyam*
*putaikkum poḻirpiṇṭi yāyaṭi yēṉaip purantaruḷē.*

Oh! Thou who possesseth the *Acōka* (tree)
Which doth bear leaves tender and flowers nestled close by honey-drunk bees,
And which is famed for its power to cover the world with darkness that stays
Pray protect me, thy slave,
With thy lovely lotus feet both,
Which did kick and break,
The wheel illusory of *nāṟkati*,
The vicious wheel which doth spoil lives.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

24. *புரந்தரரும் வானவரும் புகழ்ந்தடியேங்*
*குற்றேவல் கொள்ளென் றேத்தி*
*நிரந்தரம்வந் தனைசெய்ய விருந்தருளு*
*மருந்தவரே நினைந்தோர்க் கெல்லாந்*

*தரந்தரமன் றெனவொன்றும் பகராது*
*தவிராத வனந்த நான்மை*
*வரந்தருமென் றுலகுரைப்ப தும்மையே*
*வெம்மையெவன் மறந்த வாறே.*

**பதப்பொருள்:** புரந்தரரும் - நூறு இந்திரர்களும் வானவரும் - நால்வகைத்தேவர்களும் புகழ்ந்து- குணங்களையும்பாடி. அடியேம் - அடிமையான எங்களுடைய. குற்றேவல் - சிறிய ஏவல். கொள்ளென்று - ஏற்றுக்கொள்ளென்று. ஏத்தி - துதித்து. நிரந்தரம் - எப்பொழுதும். வந்தனைசெய்ய- வணக்கம் செய்ய. இருந்தருளும் - வீற்றிருக்கின்ற. அரும் - அரிய. தவரே - தவத்தையுடையவரே. நினைத்தோர்க்கெல்லாம் - உம்மை நினைத்தவ ரெல்லோருக்கும். தரமெனத்- தகுதியுள்ளவரென்றும். தரமன்றென - தகுதியில்லவரென்றும். ஒன்றும் - ஒன்றினையும். பகராது - சொல்லாமல். தவிராத - நீங்காத. அனந்த நான்மை - அனந்த சதுட்டயமுளவாக. வரம்- மேன்மையை. என்று - கொடுப்பானென்று. உலகு- சாதுக்களினால். உரைப்பது - சொல்லப்படுவது. உம்மையேல்- உம்மையானால். எம்மை - எங்களை எவன் - என்ன. மறந்தவாறு - மறந்தவிதம் என்றவாறு.

**பொழிப்புரை:** நூறு இந்திரரும் நால்வகைத் தேவரும் அடிமையான் எங்களுடைய சிறிய ஏவலை ஏற்றுக் கொள்ளென்று எப்பொழுதும் குணங்களைப் பாடித் துதித்து வணக்கஞ்செய்ய வீற்றிருக்கின்ற அரிய தவத்தையுடையவரே! உம்மை நினைத்தவர் எல்லோருக்கும் தகுதியுள்ளவர் என்றும் தகுதி இல்லாதவர் என்றும் ஒன்றினையும் சொல்லாமல் நீங்காத அனந்த சதுட்டயமுளவாக மேன்மையைக் கொடுப்பானென்று சாதுக்களினால் சொல்லப்படுவது உண்மையானால் எங்களை நீர் மறந்தவிதம் என்ன? என்றவாறு.

**வி-ரை** : இதனால் வேண்டுவோர் வேண்டியது கொடுப்பனிவனே என்பது கூறப்பட்டது. நீர் மறந்தவிதம் - எழுவாய். எவன் - பயனிலை.

அனந்த சதுட்டயம் - எண் குணத்தில் முதல் நான்கான அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம் ஆகியன. சாது - வீட்டுலகை அடைவதற்காக தன்னளவில் தருமம் காக்கும் சமணத்துறவி.

## *aṟucīrk kaḻineṭil viruttam*

*purantararum vāṉavarum pukaḻntaṭiyēṉ*
*kuṟṟēval koḷḷeṉ ṟetti*
*nirantaramvan taṉaiceyya viruntaruḷu*
*maruntavarē niṉaintōrk kellāṉ*
*tarantaramaṉ ṟeṉavoṉṟum pakarātu*
*tavirāta vaṉanta nāṉmai*
*varantarumeṉ ṟulakuraippa tummaiyē*
*vemmaiyevaṉ maṟanta vāṟē.*

Oh! Lord of penance rare,
Whom the hundred Intiraṉs and *Tēvars* of four kinds
Pray for ever and entreat Thou
To accept their service humble and errands small,
If what the *cātus* speak of You is true,
That for all those who contemplate you
Thou doth provide exalted *aṉanta catuṭṭayam* eternal,
Irrespective of their fitness or otherwise,
How hath Thou forgotten us?

## Explanatory notes

*Aṉanta catuṭṭayam* - The first four qualities of *eṇkuṇam* - (eight qualities) ie. *aṉanta ñāṉam* - eternal wisdom. *aṉanta taricaṉam* - Eternal sight. *aṉanta vīryam* - Eternal vigour. *aṉanta cukam* - eternal comfort. *cātu* - A Jaina ascetic.

**கலிவிருத்தம்**

25. *மறங்கொணேமி விட்டெறிந்து மன்னர்சென்னி சோரியிற்*
*பிறங்கவென்ற வென்றியோ ரனேகபே ருலகெல்லா*
*மிறைஞ்சுவெங்கண் வல்வினைத் தெவ்வர்சிந்த வெந்துபே*
*ரறங்கொணேமி கொண்டுவென்ற சோதியெங்க ளாதியே.*

**பதப்பொருள்:** மறம் - பாவத்தை. கொள் - கொண்ட. தேமி - சக்கரத்தை. விட்டெறிந்து - வீசி. மன்னர் - அரசர்களுடைய. சென்னி - சிரங்கள். சோரியின் - இரத்தத்தினால். பிறங்க- விளங்க. வென்ற - செயித்த. வென்றியோர் - வெற்றியையுடையோர். அனேக பேர் - அனேகர். உலகெலாம்- உலகமெல்லாம். இறைஞ்ச - வணங்க. வெங்கன் - கொடுமையான. வல் - வலி யையுடைய. வினை - இருவினையாகிய தெவ்வர் - பகைவர். சிந்த - கெட. வெந்து - கருகி. பேர் - பெரிதாகிய. அறங்கொணேமி - தருமசக்கரத்தை. கொண்டு - தன்னிடத்திற்கொண்டு. வென்ற -செயித்த. சோதி - சோதியானவர். எங்கள் - எமது. ஆதி- சுவாமியானவர் என்றவாறு.

**பொழிப்புரை:** பாவத்தைக் கொண்ட சக்கரத்தை வீசி அரசர்களுடைய சிரங்கள் இரத்தத்தினால் விளங்க வென்ற வெற்றியை உடையோர் அனேகர்; எமது சுவாமியானவர் உலகம் எல்லாம் இறைஞ்ச பெரிதாகிய தரும சக்கரத்தைத் தன்னிடத்தில் கொண்டு வலிமையுடைய கொடுமையான இருவினையாகிய பகைவர் கருகிச் சிந்த வென்ற சோதியே என்றவாறு.

**வி-ரை :** இதனால் மித்தியா தெய்வம் பழிக்கப்பட்டது. ஆதியானவர் - எழுவாய். சோதி- பயனிலை. சிரங்கள் - தலைகள். இருவினை - தேசகாதி (ஓரளவு கெடுத்தல்). சர்வகாதி (அனைத்தையும் கெடுத்தல்).

## *kaliviruttam*.

*maṟaṅkoṇēmi viṭṭeṟintu maṉṉarceṉṉi cōriyiṟ*
*piṟaṅkaveṉṟa veṉṟiyō raṉēkapē rulakellā*
*miṟaiñcuveṅkaṇ valviṉait tevvarcinta ventupē*
*raṟaṅkoṇēmi koṇṭuveṉṟa cōtiyeṅka ḷātiyē.*

Many were those who hurled the sinful wheel
And did attain victory,
By staining the heads of kings with blood
Our Lord was the *Cōti*
Who for the world entire to worship,
Did conquer the foes of *iruviṉai* strong and harsh,
And spill them as pieces charred.
With the wheel of *tarumam* huge in His hand.

## Explanatory notes

*Cōti* - The divine light ie Lord Arukar. *iruviṉai* - *tēcakāti* - spoiling a few things, *carvakāti* - spoiling all things.

**கலிநிலைத்துறை**

*26.* ஆதியே யாதி யின்றி யகிலமும் பரந்துநின்ற
சோதியே சோதி மூன்றி லெழுதரு சுடரேவான
வீதியே வீதி போகும் வெறிமலர்ப் பாகாவேத
மோதியே நின்னை யல்லாற் பிறரையென் னோதுமாறே.

**பதப்பொருள்:** ஆதியே - முதல்வனே. ஆதியின்றி - உனக்கொரு முதலில்லாமல். அகிலமும்- உலகம் முழுவதும். பரந்து - நிறைந்து. நின்ற - இருந்த. சோதியே - ஒளியே. சோதிமூன்றில் - பிரபாவலய மூன்றினுள். எழுதரு - உதிக்கும். சுடரே - சூரியனே. வானம்- ஆகாயமாகிய. வீதியே - வீதியையுடையவனே வீதி - அவ்வாகாய வீதியில். போகும் - செல்கின்ற. வெறி- வாசனை பொருந்திய. மலர் - பூவாகிய யானைக்கும். பாக - பாகனே. வேதம் - வேதங்களை. ஓதியே - சொன்னவனே. நின்னையல்லாமல் - உன்னை அல்லாமல். பிறரை - அன்னியரை. என் - என்னகாரணம் ஓதுமாறு - சிலர் துதிக்கும் விதம் என்றவாறு.

**பொழிப்புரை:** முதல்வனே! உனக்கொரு முதலில்லாமல் உலகமுழுவதும் நிறைந்திருந்த ஒளியே! பிரபாவலய மூன்றினுள் உதிக்கும் சூரியனே! ஆகாயமாகிய வீதியை உடையவனே! அவ்வாகாய வீதியில் செல்கின்ற வாசனை பொருந்திய பூவாகிய யானைக்குப் பாகனே! வேதங்களைச் சொன்னவனே! உன்னையல்லாமல் அன்னியரை என்னகாரணம் சிலர் துதிக்கும் விதம்? என்றவாறு.

**வி-ரை** : இதனால் பிற தெய்வங்கள் துதிக்கத் தகுதியுடையனவல்ல என்பது கூறப்பட்டது. ஓதுமாறு - எழுவாய்; என் - பயனிலை.

### *kalinilaitturai*

*ātiyē yāti yinri yakilamum parantuninra*
*cōtiyē cōti mūnri lelutaru cutarēvāna*
*vitiyē viti pōkum verimalarp pākāvēta*
*mōtiyē ninnai yallār piraraiyen nōtumārē.*

Oh! *Āti*
Oh! *Cōti* sans beginning spread wide over the world entire,
Oh! *Cuṭar* that doth rise within *Prapavalayam* three,
Oh! Thou who hath the path celestial,
Oh! *Pākan* who doth steer the lotus fragrant
As an elephant in the sky,
Oh! Propounder of *Vētas*
Why do some folk,
Worship Gods other than Thee?

## Explanatory notes

*Āti* - The prime Lord ie Arukan, *Cuṭar* - The sun (Arukar).

### அம்மானை

#### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

27. ஓத நெடும்புவி யொன்றென நின்ற முதற்பொரு ளம்மானை
யொற்றை நெடுந்தரு மச்சுடர் நேமி யுயர்த்தவ னம்மானை
யேத முனிந்தியல் வேத மொழிந்த பரம்பர னம்மானை
யிந்திரர் தந்தொழில் வந்தில னன்பரை யேத்துத லம்மானை
காத மகன்றொரு காதரை சென்று நிமிர்ந்தலர் தோடுதொறுங்
கான முரன்றறு கால்பரு குங்கமழ் கண்ணிறை தண்ணளினப்
போதக மல்லது போதக மேறுவ தொன்றில னம்மானை
போதி லிவன்சர ணல்ல தெவன்சில போற்றுவ தம்மானை.

**பதப்பொருள்:** ஓதம் - கடல்சூழ்ந்த. நெடும் - நீண்ட. புவி - உலகததார். ஒன்றென - ஒன்றென்று சொல்ல. நின்ற - இருந்த. முதல் - ஆதியாகிய. பொருள் - பொருளானவன் ஒற்றை - ஒன்றாகிய. நெடும் - மிகுந்த தருமம் - அறமாகிய. சுடர் - ஒளியையுடைய. நேமி- சக்கரத்தை உயர்த்தவன் - பிடித்தவன் ஏதம் - குற்றங்களை. முனிந்து - கெடுத்து இயல்- நடக்கும் வேதம் - வேதங்களை மொழிந்த - சொன்ன. பரம்பரன் - சுவாமியானவன். இந்திரர்தம் - இந்திரர்களுடைய. தொழில் - செய்கையானது. வந்து - உலகததில் வந்து. இவன் - இந்த அருகனுடைய. அன்பரை - பக்தர்களை. ஏத்துதல் - துதித்தல். காதம் - ஒருகாதம். அகன்று - பரந்து. ஒருகாதரை - ஒன்றரைக்காதம். சென்று - நீண்டு. நிமிர்ந்து- ஒன்றரைக்காதம் கனத்து. அலர் - மலர்ந்த. தோடுதோறும் - எல்லா இதழ்களினும். கானம்- இராகத்தை. முரன்று - பாடி. அறுகால் - வண்டுகள். பருகும் - குடிக்கின்ற. கமழ் - பரிமளிக்கும். கள் - தேனானது. நிறை- நிறைந்த. தண் - குளிர்ச்சி பொருந்திய. நளினப்போது- தாமரைப் பூவினுடைய. அகமல்லது - இடமல்லாமல். போதகமேறுவது - யானையேறுவது. ஒன்றிலன் - வேறொன்றில்லாதவன். போதில்- எப்பொழுதிலும். இவன்.- இவ்அருகனுடைய. சரணல்லது - பாதங்களல்லாமல். எவன் - என்னகாரணம். சில - வேறான சில தெய்வங்களை. போற்றுவது - துதிப்பது அம்மானை என்றவாறு

**பொழிப்புரை:** கடல் சூழ்ந்த நீண்ட உலகத்தார் ஒன்றென்று சொல்ல யிருந்த ஆதியாகிய பொருளானவன், ஒன்றாகிய மிகுந்த அறமாகிய ஒளியையுடைய சக்கரத்தைப் பிடித்தவன். குற்றங்களைக் கெடுத்து நடக்கும் வேதங்களைச் சொன்ன சுவாமியானவன். இந்திரர்களுடைய செய்கையானது உலகத்தில் வந்து இந்த அருகனுடைய பக்தர்களைத துதித்தல், ஒரு காதம் பரந்து ஒன்றரைக்காதம் நீண்டு ஒன்றரைகாதம் கனத்து மலர்ந்த எல்லா விதழ்களினும் இராகததைப்பாடி வண்டுகள் குடிக்கின்ற பரிமளிக்கும் தேனானது நிறைந்த, குளிர்ச்சி பொருந்திய தாமரைப் பூவினுடைய இடமல்லாமல் யானை ஏறுவது வேறொன்றில்லாதவன், எப்பொழுதும் இவ்வருகனுடைய பாதங்களல்லாமல் வேறான சில தெய்வங்களைத் துதிப்பது என்ன காரணம் என்றவாறு.

**வி-ரை :** இதனால் வேறு தெய்வமில்லையென்பது கூறப்பட்டது. போற்றுதல்- எழுவாய் எவன்- பயனிலை. அம்மானை - எண்பத்திரண்டு பெண்கள் அருகருடைய புகழைச் சொல்லி அம்மானை ஆடுங்கிரமம். ஒருகாதம் - பத்துமைல்

## *Ammāṉai*

### *Paṉṉiru cīr āciriya viruttam*

*ōta neṭumpuvi yoṉreṉa niṉra mutarporu ḷammāṉai*
*yoṟṟai neṭuntaru maccuṭar nēmi yuyarttava ṉammāṉai*
*yēta muṉintiyal vēta moḻinta parampara ṉammāṉai*
*yintirar tantoḻil vantila ṉāṉparai yēttuta lammāṉai*
*kāta makaṉṟoru kātarai ceṉṟu nimirntalar tōṭutoṟuṅ*
*kāṉa muraṉṟaṟu kālparu kuṅkamaḻ kaṇṇiṟai taṇṇaḷiṉap*
*pōtaka mallatu pōtaka mēṟuva toṉṟila ṉammāṉai*
*pōti livaṉcara ṉalla tevaṉcila pōṟṟuva tammāṉai.*

He who did remain to be hailed as *Āti*, the sole being,
By the world long surrounded by ocean *ammāṉai*
He who held the lustrous wheel of *Aṟam*, sole and full *ammāṉai*
He who did expound the *vētās*,
That dispel crimes - *ammāṉai*
It is the duteous action of *Intirars*
To arrive at the world to worship the devotees of Arukar *ammāṉai*
He who doth not ride any elephant
Other than the cool lotus blossomed one *kātam* wide
One and half *kātam* long and deep,
With all its petals swarmed by humming bees harmonious,
And full of nectar sucked by those bees - *ammāṉai*
Why do some folk worship a few deities,
Other than the feet of Lord Arukar - ammāṉai

## Explanatory note

ammāṉai - A poetic vocative used in a ballad form called *ammāṉai* in Tamil poetry.

**எண்சீர்க் கழிநெடில் விருத்தம்**

28. *அம்மானை முடிவிலா ஞானந் தன்னா*
*லளவிலாப் பொருண்முழுதும் பரந்து நின்ற*
*பெம்மானை யுலகளவு நிறைந்த சோதிப்*
*பெருமானை யறியாதே பெருமால் கொண்டிங்*
*கிம்மான நிலனாகித் தீயாய்க் காலா*
*யிருசுடரா யெறிபுனலாய் வானாய் மற்று*
*மெம்மானெவ் வுயிர்களுமாய் நின்றா னென்றே*
*யியம்புவார் துணிவென்னே யிருந்த வாறே.*

**பதப்பொருள்:** அம்மானை - தேவாதிதேவனை. முடிவிலா ஞானந்தன்னால் - அனந்த ஞானத்தினால். அளவிலா - அளவில்லாத. பொருண்முழுதும் -அறுவகைப் பொருளினும். பரந்து நின்ற - பரவிய. யெம்மானை - நாயகனை. உலகளவும் - முந்நூற்று நாற்பத்து மூன்று கயிற்றளவும். நிறைந்த - பூரணையாய் நிரம்பிய. சோதி - முச்சோதியையுடைய. பெருமானை- சுவாமியை. அறியாதே - கருத்தனென்றறியாதே. பெரும் - மிகுந்த. மால்கொண்டு - மயக்கங்கொண்டு. இங்கு - இவ்வுலகத்தில். மானம் - அளவுபட்ட. இந்நிலனாகி - இப்பூமியாகியும். தீயாய் - அக்கினியாயும். காலாய் - வாயுவாகியும். இருசுடராய் - சூரிய சந்திரராகியும். எறி - அலையை

வீசாநின்ற. புனலாய் - நீராகியும். வானாய் - ஆகாயமாகியும் மற்றும் - இவையல்லாமலும். எம்மான் - எங்கள் கருத்தன். எவ்வுயிர்களுமாய் - அப்பஞ்சபூதங்களைத் தேகமாகக் கொண்ட உயிர்களுமாகியும். நின்றானென்றே - இருந்தானென்றே. இயம்புவாரது - சொல்லுவார்களுடைய. துணிவு - நிச்சயம் என்னே - என்னவிதம். இருந்தவாறு - இருந்தவிதம் என்றவாறு.

**பொழிப்புரை**: சாதுக்களே! தேவாதிதேவனும் அனந்தஞானத்தினால் அளவில்லாத அறுவகைப் பொருளினும் பரந்து நின்ற நாயகனும், முன்னூற்று நாற்பத்து மூன்று கயிற்றளவும் பூரணையால் நிரம்பிய முச்சோதியை உடைய சுவாமியுமாகிய அருக பரமேட்டியைக் கருத்தனென்றறியாதே. மிகுந்த மயக்கங்கொண்டு இவ்வுலகத்தில் அளவுபட்ட இப்பூமியாகியும், அக்கினியாகியும், வாயுவாகியும், சூரிய சந்திரராகியும், அலையை வீசாநின்ற புனலாகியும், ஆகாயமாகியும், இவையல்லாமலும் எங்கள் கருத்தன் பஞ்சபூதங்களைத் தேகமாகக் கொண்ட உயிர்களுமாகி நின்றான் என்றே சொல்லுவார்களுடைய நிச்சயம் இருந்தவிதம் என்னவிதம் என்றவாறு.

**வி-ரை** : இதனால் மித்தியா திருஷ்டிகள் சுவாமியினது நிலையுணராதவரென்பது கூறப்பட்டது துணிவிருந்தவாறு - எழுவாய். என்னே - பயனிலை.

அனந்தஞானம் - அளவற்ற அறிவு.

***eṇcīrk kaḻineṭil viruttam***

*ammāṉai mutivilā ñāṉan taṉṉā*
*laḷavilāp poruṇmuḻutum parantu niṉṟa*
*pemmāṉai yulakaḷavu niṟainta cōtip*
*perumāṉai yariyātē perumāl koṇṭiṅ*
*kimmāṉa nilaṉākit tīyāyk kālā*
*yirucuṭarā yeṟipuṉalāy vāṉāy maṟṟu*
*memmāṉev vuyirkaḷumāy niṉṟā ṉeṉṟē*
*yiyampuvār tuṇiveṉṉē yirunta vāṟē.*

Not knowing,
That Lord Arukar omnipresent in *poruḷs* innumerable
By means of his wisdom endless
And the holder of *muccōti* which fully covers
The entire world measuring ropes three hundred and fortythree,
Is the *karttar*
Those who in their illusion state,
That the Lord doth exist (diversely)
As earth limited, as five, as wind

As the sun and the moon, as water in the surfy seas,
As the sky and also as *uyirs* embodied in senses five
How doth they affirm this declaration theirs?

## Explanatory notes

*poruḷs* are of six kinds according to Jainism. *karttar* - The cause or creator ie Lord Arukar. *uyirs* - *Jivaṉ*, or lives.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

29. இருந்தாய் வேறே யரியணைமே லெல்லா வுலகுந் தொழவுலகை
யருந்தா வுமிழா திருந்தாயென் றறையா நின்ற மறையானால்
விருந்தார் சுரும்பு கொப்பளிக்கும் வேரித் துவலை மாரியறாப்
பெருந்தா ளசோக மொன்றுடையா யாதோ வுண்மை பேசாயே

**பதப்பொருள்:** இருந்தாய் - வீற்றிருந்தாய் வேறே - தனியே. அரியணைமேல் - சிங்காதனத்தில், எல்லா வுலகும் - மூவுலகும். தொழ - வணங்க. உலகை - அவ்வுலகத்தை. அருந்தா - ஞானத்தாலுட் கொண்டு. உமிழாது - வெளிவிடாமல். இருந்தாயென்று - அடக்கி இருந்தாயென்று. அறையா நின்றது - சொல்லா நின்றது. மறையானால் - வேதமானால். விருந்தாக - உண்கின்ற. சுரும்பு - வண்டுகள் கொப்பளிக்கும் - கொப்பளிக்கின்ற. வேரி - தேனினுடைய. துவலை - துளியாகிய. மாரி - மழை. ஆறா - நீங்காத. பெருந்தாள் - பருத்த அடியையுடைய அசோகம்- அசோகமென்னும். ஒன்றுடையாய் - ஒருமரத்தையுடையவனே! யாதோ- எதுவோ. உண்மை - நிச்சயம். பேசாய் - தெரியச் சொல்லுவாய் என்றவாறு.

**பொழிப்புரை:** விருந்தாக வுண்கின்ற வண்டுகள், கொப்பளிக்கின்ற தேனினுடைய துளியாகிய, மழைநீங்காத பருத்தவடியையுடைய அசோகமென்னும் ஒரு மரத்தை உடையனே! நீ சிங்காதனத்தின்மேல் மூவுலகும் வணங்க வீற்றிருந்தாய். வேதமானது, நீ உலகத்தை ஞானததால் உட்கொண்டு திரும்பவும் வெளிவிடாமல் அடக்கி இருந்தாயென்று சொல்லா நின்றது. ஆனால், உண்மையானது எதுவோ? தெரியச் சொல்லுவாய் என்றவாறு.

**வி-ரை :** இதனாலுலகுண்ணுங் கிரமம் மித்தியா திருஷ்டிகளறியாதவர் என்பது கூறப்பட்டது. உண்மை - எழுவாய். யாதோ - பயனிலை. நீ - எழுவாய். பேசாய் - பயனிலை. மூவுலகமாவன- சுவர்க்கம், மத்திமம், பாதாளம். கிரமம் - முறைமை. மித்தியா திருஷ்டிகள்- மெய்யறிவு இல்லாதவர்கள்.

### *aṟucīrk kaḻineṭil viruttam*

*iruntāy vērē yariyaṇaimē lellā vulakun toḻavulakai*
*yaruntā vumiḻā tiruntāyeṉ ṟaṟaiyā niṉṟa maṟaiyāṉāl*
*viruntār curumpu koppaḷikkum vērit tuvalai māriyaṟāp*
*poruntā ḷocōka moṉṟuṭaiyā yātō vuṇmai pēcāyē.*

Oh! Thou who hath the big-bottomed *Acōka* tree,
Where the shower of honey gargled and spat by the feasting bees,
Never doth cease,
Thou wert seated on a throne for the worlds three to worship
As the scripture doth state
That you did ingest the world by wisdom thine,
And ejected it not
Pray tell us the truth (for us to know)

## Explanatory notes

The three worlds according to Jainism are *cuvarkkam* (Heaven the upper world), *mattimam* (The middle world ie earth), *pātālam* (Hell or the nether world).

### வெண்பா

30. *பேசி லகண்டமுநின் பேரறிவின் பாலதவ்*
*வாசி லறிவுன் னகத்ததான் - மாசிகந்த*
*மெய்ஞ்ஞான வேந்தர்தொழ வீற்றிருந்தாய் நீயல்லா*
*லிஞ்ஞால முண்டார்மற் றியார்.*

**பதப்பொருள்:** பேசில் - சொல்லுங்கால். அகண்டமும் - எல்லா உலகமும். நின் - உனது. பேரறிவின்பாலது- அனந்த ஞானத்து உள்ளடங்கியது. ஆசில் - குற்றமில்லாத. அவ்வறிவு- அனந்தஞானம். உன் - உனது. அகத்தால் - உள்ளத்திலிருப்பதாகையால். மாசு - குற்றத்தினின்றும் இகந்த - நீங்கிய. மெய்ஞானவேந்தர் - நிச்சயஞானத்தையுடைய முனிவர். தொழ - வணங்க வீற்றிருந்தாய் - எழுந்தருளியிருந்தாய். நீயல்லால் - நீயல்லாமல். இருஞாலம்- இவ்வுலகத்தை. உண்டார் - விழுங்கினவர். மற்றியார் - வேறேயெவர். என்றவாறு.

**பொழிப்புரை:** குற்றத்தினின்றும் நீங்கிய நிச்சய ஞானத்தை உடைய முனிவர் வணங்க எழுந்தருளியிருந்தாய். சொல்லுங்கால் எல்லா உலகமும் உனது அனந்த ஞானத்தின் உள்ளடங்கியது, குற்றமில்லாத அவ்வனந்த ஞானம் உனது உள்ளத்திலிருக்கதாகையால், நீயல்லாமல் இவ்வுலகத்தை உண்டவர் வேறே எவர்? என்றவாறு.

**வி-ரை :** இதனால் அனந்த ஞானத்தை உடையவன் இவனே என்பது கூறப்பட்டது. உண்டார்- எழுவாய்; மற்றியார் - பயனிலை. அனந்தஞானம் - அளவற்ற அறிவு; எண்வகை குணங்களுள் ஒன்று.

### veṇpa

*pēci lakaṇṭamuniṉ pērarivin pālatav*
*vāci larivuṉ ṉakattatāṉ - mācikanta*
*meyññāṉa vēntartōḻa vīrriruntāy nīyallā*
*liññāla muṇṭārmaṟ ṟiyār.*

Thou doth gracious remain,
For the flawless saints of true wisdom to worship
To state perforce,
The world entire is within the domain
Of Thy wisdom endless
As such *ananta ñānam* (endless wisdom) is in Thy mind
Who else other than Thee
Did (swallow) ingest the world?

## Explanatory notes

*ananta ñānam* - endless wisdom one of the *enkuṇam* or eight qualities advocated by Jainism. ***eṇkuṇam :*** endless knowledge, endless sight, endless valour, endless pleasure, anonymity, sectlessness, lifelessness, inperishability or immortality.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

31. *யாரே கால மூன்றுமுழு தெல்லா வுலகு முடனளந்தார்*
*நீரே யானா வுலகளந்த நெடுமா லென்ப துண்மையன்றே*
*காரே சிறந்து மலர்கஞலிக் களிவண் டறைய நறவொழுகிப்*
*பாரேழ் கமழும் பூம்பிண்டி நிழலீ ரொருசொற் பகரீரே.*

**பதப்பொருள்**: யாரே - உம்மையன்றி எவர். கால மூன்றும் - முக்காலத்திலும். முழுதும் - அறுவகைப் பொருளையும் எல்லாவுலகும் - உலகம் எல்லாவற்றையும். உடன் - ஒருதன்மையாக. அளந்தார் - பொறியினால் அளந்தவர். நீரேயானால் - நீரானால். உலகளந்த- உலகத்தை அளந்த. நெடுமாலென்பது - நெடுமால் என்று சொல்லுதல். உண்மையன்றே - உண்மையன்று. காரே - கருமையே. சிறந்து - மிகுந்து. மலர் - பூக்கள் கஞலி - நெருங்கி. களி - செருக்கை உடைய. வண்டு - சுரும்புகள். அறைய - மோத. நறவு - தேனானது. ஒழுகி - பெருகி. பாரேழ் - எழுவகையுலகமும். கமழும் - பரிமளியாநின்ற. பூ - அழகிய. பிண்டி - அசோகினுடைய. நிழலீர் - நிழலையுடையீர். ஒருசொல் - அவரிலர் என்னுஞ் சொல்லை. பகரீர் - யான் அறியும்படி சொல்லுவீர் என்றவாறு.

**பொழிப்புரை**: கருமையே மிகுந்து பூக்கள் நெருங்கி செருக்கை உடைய வண்டுகள் மோதத் தேனானது பெருகி எழுவகையுலகமும் பரிமளிக்கப்பட்ட அழகிய அசோகினுடைய நிழலை உடையீர்! முக்காலத்திலும் அறுவகைப் பொருளையும், உலகமெல்லாவற்றையும் ஒரு தன்மையாகப் பேரறிவினால் அளந்தவர் உம்மையன்றி எவர்? நீர்தானேயானால் உலகத்தை அளந்த நெடுமாலென்று சொல்லுதல் உண்மையன்று ஆகையால் இவற்றினுள் அவரிலரென்னுஞ் சொல்லை யான் அறியும்படி சொல்லுவீர் என்றவாறு.

**வி-ரை** : இதனால் நெடுமாலென்பவனும் இவன் என்பது கூறப்பட்டது. நிழலீர் - எழுவாய். ஒருசொல்லை - செயப்படுபொருள். பகரீர் - பயனிலை.

## *arucīrk kalinetil viruttam*

*yārē kāla mūnrumulu tellā vulaku mutanalantār*
*nirē yānā vulakalanta netumā lenpa tunmaiyanrē*
*kārē cirantu malarkañalik kalivan taraiya naravolukip*
*pārēl kamalum pūmpinti nilalī rorucor pakarirē.*

Oh! Thou who hath the shade of the *Acōka* tree,
Exceedingly black with flowers closely clustered
With jortling bees and the overflowing honey
Making the worlds seven fragrant
Who else but Thou,
Hath measured the world entire and *poruls* all
Evenly at all times three (with Thy wisdom great)
If that were true,
It ıs not quite true to state,
That *Netumāl* did measure the worlds

## Explanatory notes

*Poruls* - Six kinds of *porul* according to Jainism, Netumāl - Lord Visnu or Tirumāl who according to the Vaishnavite lore in Hindu mythology, measured the three worlds in three footsteps of his *Visvarūpam* (mega size transformation) from *Vāmanavatāram* (incarnation as a dwarf).

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

32. பகரலாங் குணக்கடல்சேர் முனிவர் சிந்தைப்
பாற்கடற்கண் வளர்ந்தபரந் தாமன் றன்னை
நிகரிலா வினைப்பகைவர் சிந்த வன்று
நெடுவிசும்பின் முகடுருவி நிமிர்ந்த மாலை
மகரவா ருதிவலயத் துலக மேழும்
வந்திறைஞ்ச வருளாழி வலங்கொண் டேந்துஞ்
சிகரமா மணிநீல வண்ண வெற்பைத்
தேராதார் தரந்தம்மைத் தேரா தாரே.

**பதப்பொருள்:** பகரலாம் - சொல்லும் படியான - குணம் - நற்குணமாகிய கடல் - சமுத்திரத்தை சேர் - சேர்ந்த முனிவர் - முனிவர்களுடைய. சிந்தை - மனமாகிய. பாற்கடல்- பாற்கடலிலே.

கண்வளரும் - அமர்ந்திருக்கும் பரம் - சித்தியாகிய. தாமன்றன்னை - இடத்தை உடையவனை. நிகரிலா - ஒப்பில்லாத. வினை - வினைகளாகிய. பகைவர் - சத்துருக்கள். சிந்த - கெடும்படி. அன்று - கருமத்தைக் கெடுத்தவன்று. நெடும்- நீண்ட. விசும்பின் - ஆகாயத்தினுடைய. முகடு- உச்சியை. உருவி - கடந்து. நிமிர்ந்த - வளர்ந்த. மாலை - பெருமையுடையவனை. மகரம் - மகரமச்சம் பொருந்திய வாருதி - கடல்சூழ்ந்த. வலயத்து - வட்டத்தில். உலகமேழும் - எழுவகை உலகமும். உவந்து - ஆனந்தமடைந்து. இறைஞ்ச - வணங்க. அருளாழி - தருமசக்கரத்தை. வலங்கொண்டு - வலது பக்கத்திற்கொண்டு. ஏந்தும்- தாங்குகின்ற. சிகரம் - சிகரத்தையுடைய. மா - பெருமை பொருந்திய. மணி - அழகிய நீலவண்ண - நீலநிறம் பொருந்திய. வெற்பை - மலையை, தேராதார் - கடவுளென்று தெளியாதவர். தம்மை - தங்களுடைய குணத்தை. தேராதாரே - தெளியாதவர்கள் என்றவாறு.

**பொழிப்புரை**: நெஞ்சமே! சொல்லும்படியான நற்குணமாகிய சமுத்திரத்தைச் சேர்ந்த முனிவர்களுடைய மனமாகிய பாற்கடலிலே அமர்ந்திருக்கும் சித்தியாகிய இடத்தை உடையவனே! ஒப்பில்லாத வினைகளாகிய சத்துருக்கள் கெடும்படி கருமத்தைக் கெடுத்தவன்று நீண்ட ஆகாயத்தினுடைய உச்சியைக் கடந்து வளர்ந்து பெருமையை உடையவனே!, மகரமச்சம் பொருந்திய கடல் சூழ்ந்த வட்டத்தில் ஏழுவகை உலகமும் ஆனந்தம் அடைந்து வணங்கத் தருமசக்கரத்தை வலது பக்கத்தில்கொண்டு தாங்குகின்ற சிகரங்களை உடைய பெருமை பொருந்திய அழகிய நீலநிறம் பொருந்திய மலையாகிய நேமிநாதரைக் கடவுளென்று தெளியாதவர் தங்களுடைய குணத்தைத் தெளியாதவர்கள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனைக் கடவுளென்று தெளியாதவர்கள் முத்தி பெறாதவரென்பது கூறப்பட்டது. தேராதவர் - எழுவாய்; தம்மை - செயப்படுபொருள்; தேராதாரே - பயனிலை.

## *eṇcīrk kaḻineṭil viruttam*

*pakaralāṉ kuṇakkaṭalcēr muṉivar cintaip*
*pāṟkaṭaṟkaṇ vaḷarntaparan tāmaṉ ṟaṉṉai*
*nikarilā viṉaippakaivar cinta vaṉṟu*
*neṭuvicumpiṉ makaṭuruvi nimirnta mālai*
*makaravā rutivalayat tulaka mēḻum*
*vantiraiñca varuḷāḻi valaṅkoṇ ṭēntuñ*
*cikaramā maṇinīla vaṇṇa veṟpait*
*tērātār tarantammait tērā tārē.*

Those who hath not realized,
Parantāmaṉ ensconced in the *Pāṟkaṭal* of the minds of saints,
Who belong to the ocean of virtue deemed
And the glorious Māl who did grow to transcend the top of the sky,
To defeat the matchless foes of *iruviṉai*

And (the selfsame) Nēminātar the famed mountain blue,
With supporting peaks,
Who with the wheel of *tarumam* on his right
Doth remain for the worlds seven to rejoice and worship,
In a circle surrounded by oceans teeming with fishes
(Those who hath not realized the Lord such)
Are those who hath not realized their own selves

## *Explanatory notes*

Parantāmaṉ - *Param* - *Citti* or Yogic feat. *Tāmaṉ* - occupant of that place or Holder of that achievment
Nēminātar - Lord Arukaṉ.

### கலி விருத்தம்

*33.* *தேறி னார்தொழுந் தீர்த்தனை வேட்கைநோய்*
*ஆறி னானையெம் மச்சுதா நந்தனை*
*மாறி லாத மலர்மகள் காந்தனைக்*
*கூறி னார்வையங் கூறநின் றார்களே.*

**பதப்பொருள்** தேறினார் - பரமாகமத்தைத் தெளிந்தவர்கள். தொழும் - வணங்குகின்ற. தீர்த்தனை - அருகனை. வேட்கை - இச்சையாகிய. நோய் - வியாதியானது. ஆறினானை- தணிந்தவனை. எம் - எங்களுடைய. அச்சுதம் - கெடாத. ஆனந்தனை - இன்பத்தையுடையவனை. மாறிலாத - மாறுபாடில்லாத. மலர்மகள் - முத்தி நாயகியினுடைய. காந்தனை - நாயகனை. கூறினார் - துதித்தவர்களே. வையம் - உலகத்தார். கூற - துதிக்க. நின்றார்கள் - முத்தியில் நின்றவர்கள் என்றவாறு.

**பொழிப்புரை**: பரமாகமத்தைத் தெளிந்தவர்கள் வணங்குகின்ற அருகனை, இச்சையாகிய நோயானது தணிந்தவனை, எங்களுடைய கெடாத இன்பத்தை உடையவனை, மாறுபாடில்லாத முத்தி நாயகனுடைய நாயகனைத் துதித்தவர்களே உலகத்தார் துதிக்க முத்தியினின்றவர்கள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனைத் துதித்தவர் பெறும் பேறு கூறப்பட்டது. கூறினர் - எழுவாய்; கூறாநின்றார் - பயனிலை.

## *kaliviruttam*

*tēṟi ṉārtoḻun tīrttaṉai vēṭkainōy*
*āṟi ṉāṉaiyem maccutā nantaṉai*
*māṟi lāta malarmakaḷ kāntaṉaik*
*kūṟi ṉārvaiyaṅ kūṟaniṉ ṟārkaḷē*

Those who pray to Lord Arukar,
Who is worshipped by those who hath understood *paramākamam*
Who hath subdued desire,
Who doth possess bliss unsullied,
And who is the consort of the Malarmakaḷ sans change
(Those who praise the Lord such)
Are exalted in *mukti* and worshipped by worldly folk

## Explanatory note

Malarmakaḷ - Ilakkumi ie Muktināyaki here.

### காப்பியக் கலித்துறை

34. *நின்றன நின்றா குணங்களி னின்றியல் பொருள்யாவுஞ்*
*சென்றன சென்ற குணங்களி னென்றனை திருமாலே*
*குன்றலி லின்ப வரம்பெற நின்றவர் கொண்டாரிஃ*
*தொன்றல ரொன்றல் கருங்கதி சென்றிட ருறுவாரே.*

**பதப்பொருள்**: நின்றன - நித்தியமாய். நின்றா - நின்று. குணங்களின் - நிச்சயங்களினால். நின்று- நித்தியமாய்நின்று. இயல் - முக்காலத்தினும் நடக்கின்ற. பொருள் யாவும் - அறுவகைப் பொருளிலும், சென்றன - அநித்தியமாயின. சென்றகுணங்களின் - வியவகார நயங்களினால். என்றனை - என்று சொன்னாய். திரு - அழகிய. மாலே - பெருமையுடையவனே. குன்றலில் - கேடில்லாத, இன்பம் - பேரின்பமாகிய. வரம் - மேன்மையை. பெற - அடைய. நின்றவர் - நன்னெறியில் நின்றவர். கொண்டார் - உண்மையென்றே கொண்டார். இஃது - இதை. ஒன்றலர்- பொருந்தாதவராயினார். ஒன்றல்- இருசொல்லும் பொருந்தலுக்கு. கரும் - கருத்த. கதி - நாற்கதியில். சென்று - போய். இடர்- துன்பத்தை. உறுவார் - அடைவார் என்றவாறு.

**பொழிப்புரை** அழகிய பெருமையை உடையவனே! நீ நித்தியமாய் நின்று முக்காலத்தினும் நடக்கின்ற அறுவகைப் பொருளும் நிச்சய நயங்களினால் நித்தியமாயினவென்றும்; வியவகார நயத்தினால் அநித்தியமாயின வென்றுஞ்சொன்னாய்; இதைக் கேடில்லாத பேரின்பமாகிய மேன்மையை அடைய நன்நெறியில் நின்றவர் உண்மையென்றே கொண்டார்; பெருத்த நாற்கதியிற் சென்று துன்பத்தை அடைபவர் இருமொழியும் ஒன்றுதலுக்குப் பொருந்தாதவராயினார் என்றவாறு.

**வி-ரை** : இதனால் திவ்வியத் தொனியினது தன்மை கூறப்பட்டது. நின்றவர் - எழுவாய். கொண்டார் - பயனிலை. நித்தியம் - அழியாமை.

## *kāppiyak kalitturai*

*ninrana ninrā kuṇaṅkaḷi ninriyal poruḷyāvuñ*
*cenrana cenra kuṇaṅkaḷi nenranai tirumālē*
*kunrili lenpa varampera ninravar koṇṭārik*
*tonrala ronral karuṅkati cenriṭa ruruvārē.*

Oh! Tirumāl!
Thou did remain eternal and declare
That eternal *poruḷs* all functioning at all times three by means of *niccayanayam*
Did become transitory through *viyavakāranayam*
Those who did adopt the path virtuous,
In order to attain flawless bliss eternal,
Did accept (thy declaration) as truth.
Those who would plumb for grief by indulging in *Nārkati*
Did however reject arguments both

## Explanatory note

*Poruḷs* (matter) are of six kinds according to Jainism. They are *Jīvan, Putkalam, Tarmam, Atarmam, Ākāyam, Kālam. Nārkati* - The four stages of birth - *Makkaḷ* (human beings), *Tēvar* (heavenly beings), *Narakar* (The inhalitants of hell) and *Vilaṅku* (animals).

### புயவகுப்பு

### சந்த விருத்தம்

35. *உறவுலகையல ரெனவெடுத்தணு வொன்றிற்றற் கணத்தளந்தியல்*
*ஒழிவில்பலதொழில் களுமுடித்திய லும்பெற்றி க்ரியைக்கியைந்தன*
*வுயிர்பருகுபர சுதனுவச்ரமெ னுஞ்செற்றப் படைக்கலந்தொடல்*
*ஒருவியகிலசக முழுதுமுற்பணி யும்பொற்பிற் சயத்துயர்ந்தன*
*விறல்கொளிருவினை யரசரைச்சுடர் வெண்கட்கத் தினிற்றடிந்தெழு*
*விரிபுடவியுறு படர்கெடக்ருபை யொண்சக்ரத் தினிற்புரந்தன*
*விழைகளபவள றுநறவுக்கொழு குஞ்சித்ரத் தொடைச்சுரும்பிவர்*
*வெறிகுலவுதெரி யலணிமுத்தமு னிந்தொப்பற் றுமிக்கிலங்கின*

மறனிலவுகயல் விழிகணற்கலா நஞ்சித்தத் தினைக்கவர்ந்துறை
மகளிர்வனகல சமுலைகட்கு வருந்தொற்கத் தினைக்கடந்தன
மறுவில்கலைமதி நுதலிசிந்தியெ னுஞ்சுத்தக் கொடிப்புணர்ந்தன
மலர்வெறியினளவறவுண்மிக்கெழு மின்பத்திற் றிளைத்தியைந்தன
அறனிலடல்கெழு கமடனக்ரம சண்டத்துட் குறக்கனன்றெறி
யனலமடுபடை யசனிவெற்பெனு மென்பத்மத் துணர்க்கமர்ந்தன
அகிலதலவர சர்கள்கவித்தநெ டுஞ்சத்ரத் திரயத்தசஞ்சல
னபரிமிதகுண வரநிதித்தலை வன்கொற்றத் திருப்புயங்களே.

**பதப்பொருள்:** உற - பொருந்த. உலகை - உலகத்தை. அலரென் - மலர்போல். எடுத்து - தாங்கியும். அணுவொன்றில் - பரமாணுவொன்றில் தற்கணத்து - அந்தக் கணத்திற்றானே. அளந்து - அவ்வுலகத்தையளந்தும் இயல் - சரித்திரம். ஒழிவில் - நீங்காத. பலதொழில்களும். பல செய்கைகளும். முடித்து - செய்துமுடித்து. இயலும் - மேன்மேலும். பெற்றி - பெற்றியினையுடைய. கிரியைக்கு - செய்கைக்கு. இயைந்தன - பொருந்தின. உயிர் - சீவன்களை. பருகு - உண்கின்ற. பரசு - மழுவும். தனு - வில்லும். வச்ரமெனும் - வச்சிரமென்னும். செற்றப்படைக்கலம் - கொல்லுமாயுதங்களை. தொடல் - பிடித்தலினின்றும் ஒருவி - நீங்கி. அகிலசகமுழுதும் - எல்லாவுலகமும். முன்பணியும் - எதிர்நின்று வணங்குகின்ற பொற்பின் - அழகையுடைய. சயத்துயர்ந்தன - செயத்திலோங்கின. விறல்- வலியை. கொள் - கொண்ட இருவினை - இருவினைகளாகிய. அரசரை - மன்னரை. சுடர் - விளங்குகின்ற. வெண் - சுக்கிலத்தியானமான. கட்கத்தினில்- வாளினால். தடிந்து - கொன்று. எழு - எழுவகையாய். விரி- பரந்த புடவி - உலகத்தில். உறு - பொருந்திய. படர் - துன்பங்கள் கெட - நீங்க. கிருபை - கருணையாகிய. ஒண் சக்ரத்தினிற் - விளங்குகின்ற சக்கரத்தினால். புரந்தன - இரட்சித்தன. விழை - விரும்பப்படுகின்ற. களபவளறு - சந்தனக் குழம்பையும். நறவு - தேனானது. உக்கு - வழிந்து. ஒழுகும் - ஓடாநின்ற. சித்திரம் - விசித்திரமான. தொடை - ஒழுங்காக, சுரும்பு - வண்டுகள். இவர் - ஏறாநின்ற. வெறி - வாசனையானது. குலவு - விளங்குகின்ற. தெரியல் - மாலையையும். அணி - அழகிய. முத்தம் - முத்துக்களையும், முனிந்து - வெறுத்து. ஒப்பற்று - ஒப்பில்லாமல். மிக்கு - மிகுந்து. இலங்கின - விளங்கின. மறன் - பாவமானது. நிலவு - அதிகரிக்கின்ற. கயல் - சேற்கெண்டை போன்ற. விழிகள் - கண்களையுடைய. கலாம் - கலாத்தினாலே. நம்- நமது. சித்தத்தினை - மனத்தை. கவர்ந்து - கிரகித்து. உறை - நம்மிடத்துப் பொருந்தும். மகளிர் - மாதர்களுடைய. வனம் - அழகுபொருந்திய. கலசம்- பொற்கலசம் போன்ற. முலைகட்கு - தனங்களுக்கு. வருந்து - நோகின்ற. ஒற்கத்தினை- சிறுமையை. கடந்தன- கொடுத்தன. மறுவில் - களங்கமில்லாத. கலைமதி - மூன்றாம் பிறைபோன்ற. நுதலி - நெற்றியை உடையவளாகிய. சித்தியெனும் - முத்தியென்று சொல்லப்படும். சுத்தம் - நிர்மலமான. கொடி - கொடிபோன்ற கன்னியை. புணர்ந்தன - தழுவின. மலர் - பூவினுடைய. வெறியின் - வாசனைபோல். அளவற - எண்ணிக்கைகெட. உள் - உள்ளத்தில். மிக்கு - மிகுந்து. எழும் - எழப்பட்ட. இன்பத்தில் - சுகத்தை. திளைத்து - பொருந்தி. இயைந்தன- இசைந்தன. அறனில் - நற்செய்கையில்லாத. அடல்கெழு - வலிபொருந்திய. கமடன் -

கமடனானவன் அக்கிரமம் - கிரமமில்லாத. சண்டத்து - கொடுமையினாலே. உட்குற - யாவரும் நடுங்க கனன்று - வெம்பி. எறி - எறியாநின்ற. அனலம் - அக்கினியும். அடு - கொல்லா நின்ற. படை - ஆயுதங்களும். அசனி - இடியும். வெற்பெனு - மலையுமென்று சொல்லும். மென் - மெல்லிய பத்மத்துணர்க்கு - தாமரை மலர்களுக்கு. அமர்ந்தன - பொருந்தின. அகிலதல - மூன்று லோகத்தினுக்கும். அரசர்கள் - மன்னர்களாகிய இந்திரர்களால். கவித்த - பிடிக்கப்பட்ட. நெடும் - நீண்ட. சத்திரத்திரயத்து - முக்குடையினை உடைய. அசஞ்சலன் - சஞ்சலமில்லாதவன். அபரிமிதம் - அளவில்லாத குணம் - குணங்களாகிய. வ்ரம் - மேலான. நிதி - நிதிக்குத் தலைவன். நாயகனான - அருகபரமேட்டியினுடைய. கொற்றம் - வெற்றியடைந்த திரு - அழகிய. புயங்கள் - தோள்கள் என்றவாறு.

**பொழிப்புரை** மூன்று உலகத்தினுக்கும் மன்னர்களாய் இந்திரர்களால் பிடிக்கப்பட்ட நீண்ட முக்குடையினை உடைய சஞ்சலமில்லாதவனும், அளவில்லாத குணங்களாகிய மேலான கதிக்கு நாயகனான அருகபரமேட்டியினுடைய வெற்றியடைந்த அழகிய தோள்களானவை, உலகத்தை மலர் போல் பொருந்தத் தாங்கியும் பரமாணு வொன்றினால் அந்தக் கணத்தில்தானே அவ்வுலகத்தை அளந்தும், சாரித்திரம் நீங்காத பல செய்கைகளும் செய்து முடித்து, மேன்மேலும் பெற்றிமையையுடைய செய்கைக்குப் பொருந்தின. சீவர்களை யுண்கின்ற மழுவும், வில்லும், வச்சிரமுமென்னும் கொல்லும் ஆயுதங்களைப் பிடித்தலினின்று நீங்கி எல்லா உலகமும் எதிர்நின்று வணங்குகின்ற அழகையுடைய செயத்தில் உயர்ந்தன. வலியைக் கொண்ட இருவினைகளாகிய மன்னரை விளங்குகின்ற சுக்கிலத்தியான வாளினால் கொன்று எழுவகையாகப் பரந்த உலகத்தில் பொருந்திய துன்பங்கள் கெட விளங்குகின்ற கருணையாகிய சக்கரத்தினால் இரட்சித்தன.

விரும்பப்படுகின்ற சந்தனக் குழம்பையும் தேனானது வழிந்து ஓடாநின்ற விசித்திரமான ஒழுங்காக வண்டுகள் ஏறாநின்ற வாசனையானது விளங்குகின்ற மாலையையும், அழகிய முத்துக்களையும் வெறுத்து, ஒப்பில்லாமல் மிகுந்து விளங்கின; பாவமானது அதிகரிக்கின்ற சேற்கெண்டை போன்ற கண்களுடைய கலகத்தினாலே நமது சித்தத்தினைக் கிரகித்து நம்மிடத்துப் பொருந்தும் மாதர்களுடைய அழகு பொருந்திய பொற்கலசம் போன்ற தனங்களுக்கு நோகின்ற சிறுமையைக் கெடுத்தன; களங்கமில்லாத மூன்றாம் பிறைபோன்ற நெற்றியை உடையவளாகிய முத்தியென்று சொல்லப்பட்டு நிருமலமான கொடிபோன்ற கன்னியைத்தழுவின; பூவினுடைய வாசனைபோல, எண்ணிக்கைக் கெட உள்ளத்தில் மிகுந்து எழப்பட்ட சுகத்தைப் பொருந்தியிசைந்தன; நற்செய்கையில்லாத வலிபொருந்திய கமடனானவன், கிரமமல்லாத கொடுமையினாலே யாவரும் நடுங்க வெம்பி எறியாநின்ற, அக்கினியும் கொல்லாநின்ற ஆயுதங்களும் இடியும் மலையும் என்று சொல்லும் மெல்லிய தாமரை மலர்களுக்குப் பொருந்தின என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகன் அநந்த வீரியனென்பது கூறப்பட்டது. புயங்கள் - எழுவாய்; பொருந்தின, உயர்ந்தன என்பன முதலானவை தனித்தனி பயனிலைகள்.

மூன்று உலகம் - சுவர்க்கம், மத்திமம், பாதாளம். பரமாணு - மிகமிகச் சிறியது. இருவினை- தேசகாதி (ஓரளவு கெடுத்தல்), சர்வகாதி (முழுவதும் கெடுத்தல்). சுக்கிலத்தியானம்- ஆன்மாவைப் பற்றிய சிந்தனை. நிருமலம் - தூய்மை. கமடன்- கொடிய மனிதன் அனந்தவீரியம்- கடையிலா வீரியம், பெற்றியினை - தன்மையை.

### *puyavakuppu*

### *canta viruttam*

*uravulakaiyala renavetuttanu vonrirrar kanattalantiyal*
*olivilpalatolil kalumititiya lumperri kriyaikkiyaintana*
*vuyirparukupara cutanuvacrame nuñcerrap pataikkalantotal*
*oruviyakilacaka mulutumurpani yumporpir ceyattuyarntana*

*viralkoliruvinai yaracaraiccutar venkatkat tinirratintelu*
*viriputaviyuru patarketakrupai yoncakrat tinirpurantana*
*vilaikalapavala runaravukkolu kuñcitrat totaiccurumpivar*
*verikulavuteri yalanimuttamu nintoppar rumikkilankina*

*maranilavukayal vilikanarkalā nañcittat tinaikkavarnturai*
*makalirvanakala camulaikatku varuntorkat tinaikkatantana*
*maruvilkalaimati nutalicintiye nuñcuttak kotippunarntana*
*malarveriyinala varavunmikkelu minpattir rilaittiyaintana*

*aranilatalkelu kamatanakrama cantattut kurakkananreri*
*yanalamatupatai yacaniverpenu menpatmat tunarkkamarntana*
*akilatalavara carkalkavittane tuñcatrat tiratattacañcala*
*naparimitakuna varanitittalai vankorrat tiruppuyankalē.*

The handsome shoulders victorious of Lord Arukar,
The unperturbed one and the leader of the state exalted,
Of *kunams* limitless,
Who hath long parasols three held by the Intirars ruling worlds three,
(Those shoulders)
Did sustain but properly the world like a flower,
Measured the world with a *paramānu* at that moment,
Performed deeds many not left out by history,
And did prove equal to tasks more and further mettlesome
They did avoid handling weapons deadly such as,
The *parasu, tanu* and *vacciram* that destroy lives
And remained exalted in victory elegant,

For all the worlds to stand before and worship
They did kill the *Iruviṉai* kings
With the sword of *cukkilattiyāṉam*
And did protect with the wheel of mercy,
The world extended sevenfold
Dispelling the sorrows therein
They did discard,
The sandal lotion sought after (by all)
As well fragrant garland strange with overflowing nectar
And mounted by bees,
Thus did they remain peerless.
They also did treat as mean and mar the longing,
For the breasts that resemble golden pots
Of women with fish like eyes that attract our minds
And cohabit with us.
They did embrace the flawless creeper-like *mukti* maiden,
Whose forehead faultless resembled the crescent moon that waxeth on the third night
They did align properly with pleasures innumerable,
That filled the mind like the fragrance of flowers
The fire and deadly weapons hurled by an evil despot
In fury and without fairness to frighten all,
Did accommodate themselves and align,
In the soft petals of the lotus (of Arukar)
And came to be called thunder and mountains.

## Explanatory notes

The three parasols are : *Muttukuṭai* (Pearl Parasol), *māṇikkak kuṭai* (Ruby Parasol), *poṟkuṭai* (Gold Parasol). *paramāṇu* - Infinitesimally small matter or atom. parasu - axe. *taṉu* - Bow. *vacciram* - a weapon of steel. *iruviṉai* - *tēcakāti* and *carvakāti*. ie spoiling a little and spoiling totally. *cukkilattiyāṉam* - Contemplation of the soul. The seven worlds are : *nākalōkam, pavaṇalōkam, narakalōkam, cōtirlōkam, kalpalōkam, akamintiralōkam, mōṭcalōkam.*

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

36. புயங்க ளாயிரந் திரண்டிரு மருங்கும்
பொங்கி யாயிரம் வரையெனக் குலாவக்
கயங்கொ டாமரைப் போதென மலர்ந்த
கண்க ளாயிரங் களிப்பவிண் ணவர்கோ
னயங்கொ ளாநந்த நாடக மாடி
நாம மாயிரம் பாடவந் தருளுஞ்
சயங்கொ ளாழியங் கடவுளே யெமக்குன்
சரண மாவன வரணமா வனவே.

**பதப்பொருள்:** புயங்களாயிரம் - ஆயிரம் தோள்கள் திரண்டு - கூடி. இருமருங்கும் - இரண்டு பக்கமும். பொங்கி - விளங்கி. ஆயிரம் வரையென - ஆயிரம் மலைகள் போல. குலாவ - பிரகாசிக்க. கயம் - தடாகத்தை. கொள் - இடமாகக் கொண்ட. தாமரைப்போதென- தாமரை மலர்கள் போல். மலர்ந்த - விரிந்த கண்களாயிரம் - ஆயிரம் கண்கள். களிப்ப - ஆனந்தமடைய. விண்ணவர்கோன் - தேவேந்திரன் நயம் - நன்மையை. கொள் - கொண்ட. ஆனந்தநாடகம் - ஆனந்தக்கூத்து. ஆடி - ஆடி. நாமமாயிரம் - ஆயிரத்தெட்டு நாமத்தையும். பாட - துதித்துப்பாட. வந்தருளும் - ஆகாயவீதியில் வரும். சயம் - சயத்தை. கொள் - கொண்ட. ஆழி - தருமச்சக்கரத்தையுடைய. அம் - அழகிய, கடவுளே- நாதனே. எமக்கு - எங்களுக்கு. உன் - உனது. சரணமாவன - பாதங்களானவை. அரணமாவன- காவல்களாவன என்றவாறு.

**பொழிப்புரை:** ஆயிரம் தோள்கள்கூடி இரண்டு பக்கமும் விளங்கி ஆயிரம் மலைகள் போலப் பிரகாசிக்க, தடாகத்தை இடமாகக் கொண்ட தாமரை மலர்கள்போல் விரிந்த ஆயிரங்கண்கள் ஆனந்தமடைய, தேவேந்திரன் நன்மையைக் கொண்ட ஆனந்தக் கூத்தாடி ஆயிரத்தெட்டு நாமத்தையும் துதித்துப்பாட, ஆகாயவீதியில் வரும் சயத்தைக் கொண்ட தருமசக்கரத்தையுடைய அழகியநாதனே! எங்களுக்கு உனது பாதங்களானவை காவல்களாவன என்றவாறு.

**வி-ரை :** இதனால் சீவன்கள் பிழைத்ததற்கு ஆதாரமானவன் இவனே என்பது கூறப்பட்டது. சரணமாவன - எழுவாய் அரணமாவன - பயனிலை. சயம் - வெற்றி.

### *eṇcīrk kaḻineṭil viruttam*

*puyaṅka ḷāyiran tiranṭiru maruṅkum*
*poṅki yāyiram varaiyeṉak kulāvak*
*kayaṅko ṭāmaraip pōteṉa malarnta*
*kaṇka ḷāyiraṅ kaḷippaviṇ ṇavarkō*
*ṉayaṅko ḷānanta nāṭaka māṭi*
*nāma māyiram pāṭavan taruḷuñ*
*cayaṅko ḷāḻiyaṅ kaṭavuḷē yemakkuṉ*
*caraṇa māvaṉa varaṇamā vaṉavē.*

Oh! Lord Handsome,
Who doth bestride the path celestial with the victorious wheel of *tarumam*
As a thousand shoulders gather close like a thousand mountains
To flank and shine on both sides,
And as a thousand eyes expand gleefully like the blossoming of a thousand pond-based lotus flowers
And as Tēventiraṉ doth perform an ecstatic dance beneficial,
Addressing the Lord in prayer by his names one thousand and eight,
(Oh! Lord who doth arrive thus)
Thy feet (we deem) as our fortification secure.

## Explanatory note

Tēventiraṉ - The chief of *Tēvars* (heavenly beings).

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

37. *அரணங் கொடிய மதின்மூன்று மழியக் கனன்றீ ரன்றுள்ள*
*முரணம் பொன்றே நுமக்கங்கு முதன்மூ வருமே நும்மடியிற்*
*சரணம் புகுந்தா ரளித்ததவர் தம்மோ டுலக மூன்றையுமே*
*கரணந் தவிரப் பொருண்முழுதுங் கண்டீர் பெருமை கண்டோமே.*

**பதப்பொருள்:** அரணம் - காவலாகிய, கொடிய - கொடுமையுடைய. மதில் - ஆவரணங்களான. மூன்றும் - முக்குற்றமும். அழிய - கெட. கனன்றீர் - கோபித்தீர். அன்று- கோபிக்குங் காலத்தில். உள்ளம் - மனத்தினின்று. முரண் - வலியாகிய. அம்பொன்றே - ஒரு கணையே. உமக்கு - உமக்கிருந்தது. அங்கு - அவ்விடத்தில். முதன்மூவரும் - மூவுலகத்து இந்திரரும். நும்மடியில்- உமது பாதத்தில். சரணம் - அடைக்கலமென்று. புகுந்தார் - அடைந்தார்கள். அளித்தது - இரட்சித்தது. அவர்தம்மொடு - அம்மூவர்களுடனே. உலக மூன்றையும் - திரிலோகத்தையும். கரணம் - ஐம்பொறிகளும். தவிர - நீங்க. பொருண்முழுதும் - அறுவகைப் பொருளையும். கண்டீர் - பார்த்தீரே. பெருமை - உமதுபெருமையை. கண்டோம் - யாங்கள் பார்த்தோம் என்றவாறு.

**பொழிப்புரை:** காவலாகிய கொடுமையையுடைய ஆவரணங்களான முக்குற்றமும் கெடக் கோபித்தீர். கோபிக்குங் காலத்தில், மனத்தினது வலியாகிய ஒரு கருணையே உமக்கிருந்தது. அவ்விடத்தில் மூவுலகத்து இந்திரரும் உமது பாதத்தில் அடைக்கலமென்று அடைந்தார்கள், அம்மூவர்களுடனே திரிலோகத்தையும் ஐம்பொறிகளும் நீங்க அறுவகைப் பொருளையும் பார்த்தீர்; உமது பெருமையை நாங்கள் பார்த்தோம் என்றவாறு.

**வி- ரை:** இதனால் கருமத்தைக் கெடுத்தமை கூறப்பட்டது. யாங்கள் - எழுவாய், பெருமையை- செயப்படுபொருள். கண்டோம் - பயனிலை; முக்குற்றங்களாவன - காமம், வெகுளி, மயக்கம்.

### *aṟucīrk kaḻineṭil viruttam*

*araṇaṅ koṭiya matiṉmūṉṟu maḻiyak kaṉaṉṟī raṉṟuḷḷa*
*muraṇam poṉṟē numakkaṅku mutaṉmū varumē nummaṭiyiṟ*
*caraṇam pukuntā raḻittatavar tammō ṭulaka mūṉṟaiyumē*
*karaṇan tavirap poruṇmuḻutuṅ kaṇṭīr perumai kaṇṭōmē.*

Thou did flare up in ire,
To destroy the evil ramparts three of vice
Thou did have but one shaft (arrow) of Thy strong will
When thou were indignant thus
The Intirars of the worlds three did surrender for refuge at Thy feet,
Then and there.
Along with those redeemed Thou did survey
The worlds three and *poruḷs* six sans the senses five
We did witness Thy glory great

## Explanatory note

The three vices known as *mukkuṟṟam* are *kāmam* (lust) *vekuḷi* (anger) *mayakkam* (illusion).

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

38. *கண்மூன்று தோற்றியிகல் காமனுடல் பொடியாகக் கனன்றாய் தூய*
*விண்மூன்று மதிக்குடைக்கீழ் வீற்றிருந்தாங் கறமுரைத்தாய் மேவு மாறே*
*எண்மூன்று படக்கிடந்த வெழுமூன்றி னிரட்டிமறை தோன்றச் சிந்தை*
*யுண்மூன்று குற்றமவித் தொருமூன்று பேருலக முணர்ந்த கோவே.*

**பதப்பொருள்**: கண்மூன்று - கேவலக்கியானமாகிய மூன்றாவது கண்ணைத். தோற்றி - தோன்றச் செய்து. இகல் - வலிபொருந்திய, காமன் - மன்மதனுடைய. உடல் - தேகம். பொடியாக - நீறாக. கனன்றாய் - கோபித்தாய். தூய - பரிசுத்தமான. விண் - ஆகாயத்தில். மூன்றுமதி - மும்மதிபோன்ற. குடைக்கீழ் - முக்குடைநிழலில். வீற்றிருந்து - எழுந்தருளியிருந்து. அங்கு - முனிவரிடத்தில். அறம் - கொல்லா விரதத்தை. உரைத்தாய்- சொன்னாய். மேவுமாறு - இரண்டும் பொருந்தும் விதம். எண் - கணக்கு. மூன்றுபட - மூன்று வகைபட. கிடந்த - இருந்த. எழுமூன்றின் - இருபத்தொன்றினுடைய. இரட்டி - இரட்டியாகிய நாற்பத்தி இரண்டு. மறை - வேதங்கள். தோன்ற- அங்கமாய்த் தோன்றச் சொல்லி. சிந்தையுள் - மனத்தில். மூன்று குற்றம் - முக்குற்றத்தையும். அவித்து - கெடுத்து. ஒருமூன்று - மூன்று வகைப்பட்ட. பேருலகம் - பெரிய உலகத்தை. உணர்ந்த - அறிந்த. கோவே - நாயகனே என்றவாறு.

**பொழிப்புரை**: மூவகைக் கணக்குபடக் கிடந்த வேதங்கள் நாற்பத்தி இரண்டும் அங்கமாகத் தோன்றச் சொல்லி, முக்குற்றத்தையும் மனத்தில் கெடுத்து, மூன்று வகைப்பட்ட பெரிய உலகத்தை அறிந்த நாயகனே! நீ கேவலஞானமாகிய மூன்றாவது கண்ணைத் தோன்றச் செய்து வலிபொருந்திய மன்மதனுடைய உடல் பொடியாகக் கோபித்தாய் ஆகாயத்தில் பரிசுத்தமான மும்மதி போன்ற முக்குடை நிழலில் எழுந்தருளி இருந்து முனிவரிடத்தில் கொல்லா விரதத்தைச் சொன்னாய்; இரண்டும் பொருந்தும் விதம் எப்படி? என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனுடைய திவ்விய வாக்கே மாறுபாடு இல்லாதது என்பது கூறப்பட்டது. மேவுமாறு - எழுவாய். என் - பயனிலை. முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம். மூவகையுலகம்- சுவர்க்கம், மத்திமம், பாதாளம். கேவல ஞானம் - பொறிகள் மனம் துணையின்றி ஆன்மாவால் அறியப்படும் முழுதுணர் ஞனம்.

## **aṟucīrk kaḻineṭil viruttam**

*kaṇmūṉṟu tōṟṟiyikal kāmaṉuṭal poṭiyākak kaṉaṉṟay tūya*
*viṇmūṉṟu matikkuṭaikkīḻ viṟṟiruntāṉ kaṟamuraittāy mēvu māṟē*
*eṇmūṉṟu paṭakkiṭanta veḻumūṉṟi niṟaṭṭimaṟai tōṉṟac cintai*
*yuṇmūṉṟu kuṟṟamavit torumūṉṟu pērulaka muṇarnta kōvē.*

Oh! Lord who did comprehend the vast world threefold,
By directing the scriptures forty-two classified in categories three,
To appear as components in mind
To dispel the vices three.
Thou did open thy third eye of *kēvalañāṉam*
And in thy anger did burn to ashes kāman's body strong,
Thou did remain in the sky pure under the shade of parasols three,
Resembling moons three,
And did expound *aṟam* to saints there.

## Explanatory note

*kēvalañāṉam* : Absolute wisdom to comprehend by means of one's soul without the help of senses or mind.

*aṟam* - here means Avoidance of slaughter. Kāmaṉ - Maṉmataṉ, the god of love.

**மடக்கு**

**கட்டளைக் கலிப்பா**

*39.* *கோறன் மாற்றி யுதைப்பது கூற்றையே*
*கூறு கிற்பது மெய்ப்பொருட் கூற்றையே*

*யீறி லின்பத் திருக்கும் பதத்தனே*
*யிலங்கு பூமிசை யேகும் பதத்தனே*
*மாறில் லாதசொன் மாலைநின் மாலையே*
*மலர்ந்து தீர்ப்பது மன்னுயிர் மாலையே*
*சாறு கொண்டளி மூசு மசோகனே*
*சார்ந்த வர்க்கருள் செய்யு மசோகனே.*

**பதப்பொருள்:** கோறல் - கொல்லுதலை. மாற்றி - நீக்கி. உதைப்பது - காலாலுதைப்பது. கூற்றையே - காலனையே. கூறுகிற்பது - சொல்லுவது. மெய்ப்பொருள் - உண்மைப்பொருளினுடைய. கூற்றையே - கூறுபாட்டையே. ஈறிலின்பத்து - அனந்த சுகத்தில். இருக்கும் - வீற்றிருக்கும். பதத்தனே - இடத்தையுடையவனே. இலங்கு - விளங்குகின்ற. பூமிசை - தாமரைப்பூமேல். ஏகும் - நடக்கின்ற. பதத்தனே - பாதத்தை உடையவனே. மாறில்லாத- முன்னோடு பின் மாறுபடாத. சொன்மாலை - பரமாகமமாவது. நின் - உன்னுடைய. மாலையே - பரமாகமே. மலர்ந்து - எங்கும் சென்று. தீர்ப்பது - நீக்குவது. மன் - நிலைபெற்ற, உயிர் - சீவன்களுடைய. மாலையே - மயக்கத்தையே. சாறு - தேனை. கொண்டு - உண்டு. அளி - வண்டுகள். மூசும் - மொய்க்கின்ற அசோகனே - பிண்டி மரத்தை உடையவனே. சார்ந்தவர்க்கு- அடைந்தவர்க்கு. அருள் - கிருபையை. செய்யும்- பண்ணுகின்ற. அசோகனே - சோகமில்லாதவனே என்றவாறு.

**பொழிப்புரை:** அனந்த சுகத்தில் வீற்றிருக்கும் இடத்தையும், விளங்குகின்ற தாமரைப் பூமேல் நடக்கின்ற பாதத்தையும் உடையவனே! தேனை உண்டு வண்டுகள் மொய்க்கின்ற பிண்டி மரத்தை உடையவனே! அடைந்தவருக்குக் கிருபையைப் பண்ணுகின்ற சோகமில்லாதவனே! நீ கூற்றனையே கொல்லுதலை மாற்றி காலாலுதைப்பதும், உண்மைப் பொருளினையுடைய கூறுபாட்டைச் சொல்லுவதும், உன்னுடைய முன்னோடு பின் மாறுபடாத பரமாகமமாவதும், நிலைபெற்ற சீவன்களுடைய மயக்கத்தையே எங்குஞ் சென்று நீக்குவதும் என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகனுடைய தன்மை கூறப்பட்டது. நீ - எழுவாய்; கூற்றை, கூறுபாட்டை, மயக்கத்தை - தனித்தனி செயப்படுபொருள்கள். உதைப்பது, சொல்லுவது, நீக்குவது - தனித்தனி பயனிலைகள். அனந்தசுகம் - அளவற்ற அறிவு, பேரறிவு. கூற்றம் - யமன். பரமாகமம் - முற்றும் உணர்ந்த மகான்கள் அறிந்து உரைத்த தத்துவக் கருத்துக்கள் அடங்கிய நூல்.

## Maṭakku

### kaṭṭalaik kalippā

*kōṟaṉ māṟṟi yutaippatu kūṟṟaiyē*
*kūṟu kiṟpatu meypporuṭ kūṟṟaiyē*
*yīṟi liṉpat tirukkum patattaṉē*
*yilaṅku pūmicai yēkum patattaṉē*
*māṟil lātacoṉ mālainiṉ mālaiyē*
*malarntu tīrppatu maṉṉuyir mālaiyē*

*cāru koṇṭaḷi mūcu macōkaṉē*
*cārnta varkkaruḷ ceyyu macōkaṉē.*

Oh! Thou ensconced in a seat of blissful comfort endless,
Oh! Lord who hath feet that on the established lotus tread,
Oh! Thou who hath the *Acōka* tree swarmed by honey-drunk bees
Oh! Acōka (Lord sans sorrow) who doth shower thy grace on those who reach Thee,
It was only Kālaṉ whom Thou did kick with thy feet without killing,
It is only Truth Absolute in import which Thou utter,
It is Thy consistent *paramākamam* alone which is never contradictory
It is but Thou who doth dispel the illusion of *jīvaṉs* secure

## Explanatory note

*Acōka* : There is a pun on the word *Acōka* in this poem. It means the *Acōka* tree of Lord *Arukaṉ* in the first instance and 'One who has no sorrow' in the next usage which glorifies *Arukaṉ* thus.

*Paramākamam* : The prime gospel of Jainism comprehended and expounded only by great seers and saints. *Jīvaṉs* - Lives.

**எண்சீர்க் கழிநெடில் விருத்தம்**

*40.* சோக மேதருந் துன்ப வெங்கதித்
தொடர்ப டுத்துல கிடர்ப டுக்குமிடம்
மோக மன்னனைத் தலைய ரிந்துமுன்
னிடுவ னென்னைவிட் டருளு மொய்த்தபோர்
வேக வெங்கணைக் காம னைச்செறா
மெய்யெ லாமுடன் றழுவு கேவலப்
போக மங்கையைத் தழுவி யின்பமே
புரியு மன்பரே புவன நாதரே.

**பதப்பொருள்** சோகமே - சோகத்தையே. தரும் - கொடுக்கக்கூடிய. துன்ப - துன்பமான. வெம்- வெப்பத்தையுடைய. கதி - நற்கதியாகிய. தொடர் - சங்கிலியினால். படுத்து - கட்டி. உலகு - உலகத்தை. இடர் - துன்பத்தில். படுக்கும் - அழுத்துகின்ற. இடம் - இந்த. மோகமன்னனை - மோகனீயம் என்னும் அரசனை. தலையரிந்து - தலையறுத்து. முன்னிடுவன் - முன்னே வைக்கின்றேன். என்னை - என்றனை. விட்டருளும் - விட்டுப்போகும். மொய்த்தபோர் - நெருங்கியுத்தம் செய்யும். வேகம் - வேகம் பொருந்திய. வெம் - வெப்பமான. கணை - பாணங்களையுடைய. காமனை - மன்மதனை. செரு - கோபித்து. மெய்யெலாம் - தேகமெல்லாம். உடன் - ஒரு தன்மையாக. தழுவு - தழுவுகின்ற, கேவலம் - முத்தியாகிய. போகமங்கையை -

இன்ப மாதை. தழுவி - அணைத்து. இன்பமே புரியும் - சுகத்தையே விரும்புகின்ற. அன்பரே- ஆசையுடையவரே. புவனம் - உலகத்திற்கு. நாதரே - நாயகரே என்றவாறு.

**பொழிப்புரை**: நெருங்கி யுத்தம் செய்யும் வேகம் பொருந்திய பாணங்களையுடைய மன்மதனது தேகமெல்லாம் ஒரு தன்மையாகத் தழுவுகின்ற முத்தியாகிய இன்பமாதை அணைத்துச் சுகத்தையே விரும்புகின்ற ஆசையை உடையவரே! உலகத்திற்கு நாயகரே! கோபத்தையே கொடுக்கின்ற துயரமான வெப்பத்தையுடைய நாற்கதியாகிய சங்கிலியினாலே உலகத்தைக் கட்டித் துன்பத்தில் அழுத்துகின்ற இந்த மோகனீய மென்னும் அரசனைத் தலைஅறுத்து முன்னே வைக்கின்றேன்; என்றனை விட்டுப் போகும் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனுடைய அருள்பெற்றார் முத்தியை உடையவர் என்பதுகூறப்பட்டது. நீர் - எழுவாய். என்னை - செயப்படுபொருள். விட்டருளும் - பயனிலை. மோகனீயம் - உண்மைப்பொருளை அறிய முடியாதவாறு மயங்கச்செய்வது.

### *eṇcīrk kaḻineṭil viruttam*

*cōka mētarun tuṉpa veṅkaṭit*
*toṭarpa ṭuttula kiṭarpa ṭukkumiṭam*
*mōka maṉṉaṉait talaiya rintumuṉ*
*ṉiṭuva ṉeṉṉaiviṭ ṭaruḷu moyttapōr*
*vēka veṅkaṇaik kāma ṉaicceṟā*
*meyye lāmutaṉ ṟaḻuvu kēvalap*
*pōka maṅkaiyait taḻuvi yiṉpamē*
*puriyu maṉparē puvaṉa nātarē.*

Oh! Thou who doth flare up against Kāmaṉ
Who with his shafts hot and fast fight in quarters close,
Hath (however) a longing to embrace and enjoy the *mukti* maiden pleasurable,
Who in a way hugs the body all over.
Oh! Lord of the universe,
I shall sever and place before you the head of the king called *mōkaṉīyam*
Who binds the world with the chains of *nāṟkati*
Which is the grievously hot source of anger,
Oh! relieve me of it

## *Explanatory notes*

Kāmaṉ - Maṉmataṉ the God of love, *mōkaṉīyam* - Lust, Desire for earthly pleasure, *Nāṟkati* - The four stages of birth.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

41. *நாதனுக் கமிழ்து நன்சுவை யகவு நற்கனி மருத்துவர் நாணு*
*நோய்தனைத் தணிக்கு நன்மருந் துழலு நோன்பகை யெறிதருந் திகிரி*
*வேதனைக் கடலின் றனிப்புணை நெஞ்சம் வேண்டிய வெலாந்தரு நிதிய*
*மாதலிற் பரமன் மூலமந் திரமைந் தெழுத்தல தொன்ற றியேனே.*

**பதப்பொருள்:** நாதனுக்கு - நாதனுக்கு. அமிழ்தும் - அமிர்தமும் நல் - நல்ல. சுவை - மதுரத்தை. உதவும் - கொடுக்கின்ற. நல - நல்ல. கனி - பழமும். மருதுதுவர் - வைத்தியர். நாணும் - வெட்குகின்ற. நோய்தனை - பிணியை. தணிக்கும் - நீக்குகின்ற. நல் - நல்ல மருந்து- அவிழ்தமும். உழலும் - நாற்கதியில் சுழலுகின்ற. நோன் - வலிபொருந்திய. பகை- பிறவிப்பகையை. யெறிதரும் - அறுக்கின்ற, திகிரி - சக்கரமும். வேதனை - துன்பமாகிய., கடலின் - சமுத்திரத்திற்கு. தனி - ஒப்பற்ற. புணை - தெப்பமும். நெஞ்சம் - மனமானது. வேண்டியவெலாம் - விரும்பினவை எல்லாம். தரும் - கொடுக்கின்ற. நிதியம் - நிதியும். ஆதலில் - ஆகையினால் பரமன் - அருக பரமேட்டியினுடைய. மூலமந்திரம் - மூலமந்திரமாகிய. ஐந்தெழுத்தல்லது - ஐந்தக்கரமே அல்லாமல். ஒன்று - வேறொன்று உண்டென. அறியேன் - யான்தெளியேன் என்றவாறு.

**பொழிப்புரை**. அருகபரமேட்டியினுடைய மூலமந்திரம், நாவினுக்கு அமிர்தமும் நல்ல மதுரத்தைக் கொடுக்கின்ற நல்ல பழமும் வைத்தியர் வெட்குகின்ற பிறவி நோயை நீக்குகின்ற நல்ல அவிழ்தமும், நாற்கதியிற் சுழல்கின்ற வலிபொருந்திய பிறவிப் பகையை அறுக்கின்ற சக்கரமும், துன்பமாகிய சமுத்திரத்திற்கு ஒப்பற்ற தெப்பமும், மனமானது விரும்பின வெல்லாம் கொடுக்கின்ற நிதியும் ஆகையினாலே அம் மூலமந்திரமாகிய ஐந்தக்கரமே அல்லாமல் வேறொன்றையும் யான் தெளியேன் என்றவாறு

**வி-ரை** : இதனால் மூலமந்திரத்தினது பெருமை கூறப்பட்டது யான் - எழுவாய். ஒன்றையும்- மெய்ப்பொருள். அறியேன் - பயனிலை. மூலமந்திரமாகிய ஐந்தக்கரம் நமோ அரஹந்தாணம்- அருகரை வணங்குகிறேன், நமோ சித்தாணம் - சித்தரை வணங்குகிறேன். நமோ ஆயிரியாணம்- ஆசாரியரை வணங்குகிறேன். நமோ உவஜ்ஜாயாணம் - உபாத்தியாயரை வணங்குகிறேன். நமோ லோயே சவ்வ சாஹூணம் - எல்லா சாதுக்களையும் வணங்குகிறேன்.

## e<u>l</u>ucīrk ka<u>l</u>ineṭil viruttam

*nātaṉuk kami<u>l</u>tu naṉcuvai yakavu na<u>r</u>kaṉi maruttuvar nāṇu*
*nōytaṉait taṇikku naṉmarun tu<u>l</u>alu nōṉpakai ye<u>r</u>itarun tikiri*
*vētaṉaik kaṭaliṉ <u>r</u>aṉippuṇai neñcam vēṇṭiya velāntaru nitiya*
*mātali<u>r</u> paramaṉ mūlaman tiramain te<u>l</u>uttala toṉ<u>r</u>a <u>r</u>iyēṉē.*

I am not aware of anything else,
Except the *mūlamantiram* five fold,
(As that *aintakkaram* of Lord Arukar)

Is nectar divine to the tongue and fruit delicious as well,
Besides being medicine beneficial to heal the disease of birth
That physicians shy away from,
It is also the wheel that severs,
The birth-cycle hostile and strong,
Of wallowing in *naṟkati*
It is but the float peerless for the ocean of grief,
And it is indeed a treasure as well,
Which doth grant all that our minds seek

## Explanatory notes

*mūlamantiram* : The prime incantation in Jainism *mūlamantiram* also known as *aintakkaram* in Jainism enjoins a fivefold worship as follows.

1. *Namō Arahantāṇam* - I worship Arukar
2. *Namō Cittāṇam* - I worship the *Cittars* (ascetics)
3. *Namō Āyiriyāṇam* - I worship the *Āccārya* (spiritual mentor)
4. *Namō Uvajjāyāṇam* - I worship the teacher
5. *Namō Lōyē Cavva Cākūṇam* - I worship all *Cātus* (saints).

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

42. *அறிவரிய குணத்தருக னசரீரி யாசிரிய னுவாத்தி கோதஞ்*
*செறிவரிய முனிவரெனுந் திருநாம முதலெழுத்தோ ரைந்துஞ் சேர்ந்து*
*பிறிவரிய வோங்கார முன்னுரைப்பர் பின்னுமதன் பெருமை யோரார்*
*பொறிவழியில் வருநாதர் பொருளில்வறும் பெயர்புனையும் புவனத் தாரே.*

**பதப்பொருள்:** அறி - அறிவு. அரிய - அரிதாகிய. குணத்து - குணங்களையுடைய. அருகன்- அருகனும். அசரீரி - சித்தனும். ஆசிரியன் - ஆசாரியனும். உவாத்தி - உபாத்தியாயனும். கோதம் - குரோதமானது. செறிவரிய - இல்லாத. முனிவரனும் - சாதுக்களும். எனும் - என்று சொல்லப்படும். திருநாமம் - திருப்பெயரினுடைய. முதலெழுத்தோரைந்தும் - ஆதியெழுத்துக்கள் ஐந்தும். சேர்ந்து - கூடி. பிறிவரிய - பிரிதற்கரிய. ஓங்கார - ஓங்காரத்தை. முன்னுரைப்பர் - முன்னே சொல்லுவார். பின்னும் - பின்பும். அதன் - அவ்வோங்காரத்தினுடைய. பெருமை - உற்பத்தியினது மேன்மையை. ஓரார் - அறியார். பொறி - பொறியினுடைய. வழியில் - மார்க்கத்தில். வரும் - திரிகின்ற. நாதர் - தெய்வங்களுக்கு. பொருள்இல் - பொருள் இல்லாமல். வறும் - வறுமையாகிய. பெயர் - நாமத்தையும். புனையும் - அலங்கரித்துச் செல்லும். புவனத்தார் - உலகத்தார் என்றவாறு.

**பொழிப்புரை**: ஐம்பொறியினுடைய மார்க்கத்தில் திரிகின்ற தெய்வங்களுக்குப் பொருளில்லாமல் வறுமையாகிய நாமத்தை அலங்கரித்துச் செல்லும் உலகத்தார் அறிதற்கு அரிதாகிய குணங்களையுடைய அருகனும், சித்தரும், ஆசாரியனும், உபாத்தியாயனும் குரோதமானது இல்லாத சாதுக்களும் என்று சொல்லப்படும் திருப்பெயரினையுடைய ஆதியெழுத்துக்கள் ஐந்தும் கூடிப்பிரிதற்கரிதாகிய ஓங்காரத்தை முன்னே சொல்லுவார் பின்னும் அவ்வோங்காரத்தினுடைய உற்பத்தியினது பெருமையை அறியார் என்றவாறு.

**வி-ரை** : இதனால் ஓங்காரம் பஞ்சபரமேட்டி ஸ்வரூபம் என்பது கூறப்பட்டது. புவனத்தார்- எழுவாய். பெருமையை - செயப்படுபொருள். ஓரார் - பயனிலை.

### *aṟucīrk kaḻineṭil viruttam*

*aṟivariya kuṇattaruka ṉacariri yāciriya ṉuvātti kōtañ*
*ceṟivariya muṉivareṉun tirunāma mutaleḻuttō raintuñ cērntu*
*piṟivariya vōṅkāra muṉṉuraippar piṉṉumataṉ perumai yōrār*
*poṟivaḻiyil varunātar poruḷilvaṟum peyarpuṉaiyum puvaṉat tārē.*

The worldly folk
Who in poor figurative names without substance glorify the deities,
That tread the path of the senses five,
Will first utter *Oṅkāram* which doth comprise the five letters initial,
Of Arukar whose virtues are too rare to comprehend,
Of the *Cittar*, *Āccāryar* and *Upāttiyāyar*
And of the *Cātu* sans malice
But then they (the worldly folk)
Will little realize that origin glorious of *Oṅkāram*

## Explanatory notes

This poem asserts that the sacred incantation *Ōm* known as *Oṅkāram* is formed out of the first five letters of *Pañcaparamēṭṭi* or *Aintakkaram* (The five holy beings to be worshipped). This is also the *Mūlamantiram* or prime incantation in Jainism.

*Arukar* - The supreme God of Jainism, *Cittar* - ascetic, *Āccāryar* - spiritual mentor *Upāttiyāyar* - teacher *Cātu* - saint.

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

43. புவன நாதரென் றும்மை யாவரும்
புகல்வ ரும்மிடத் திகல்கொள் சிந்தையுங்

கவன மாவும்வெம் படையு மில்லைநீர்
　　காவல் செய்யுமா றியாவ தாயிரந்
தவனர் கூடிநின் றனைய வாயிரந்
　　தண்ம திக்குழா மன்ன சோதிகண்
டவனி நாடுகண் குளிர வாடகப்
　　போது மீதுலா மாதி நாதரே.

**பதப்பொருள்:** புவனம் - மூவுலகத்திற்கும். நாதரென்று - நாயகரென்று. உம்மை யாவரும் - எவர்களுமும்மை. புகல்வர் - சொல்லுவார்கள். உம்மிடத்து - உம்மிடத்தில். இகல்கொள் - பகை கொள்கின்ற. சிந்தையும் - மனமும். கவனம் - வேகத்தையுடைய, மாவும் - குதிரையும். வெம் - வெப்பத்தையுடைய. படையும் - ஆயுதங்களும். இல்லை - இல்லை ஆகையால். நீர் - நீரானவர். காவல் - காவல். செய்யுமாறு - செய்யும் விதம். யாவது - எவ்விதம்? ஆயிரந்தவனர்- ஆயிரம் சூரியர்கள். கூடி - ஒரு கூட்டமாகக் கூடி. நின்றனைய - இருந்த தொத்த பிரபாவலயத்தில். ஆயிரம் - ஆயிரம். தண்மதி - சந்திரருடைய. குழாமன்ன - கூட்டத்தினொளியை யொத்த. சோதி - காயசோதியை. கண்டு - பார்த்து. அவனி - உலகத்தார். நாடு - காண்கின்ற. கண் - கண்கள். குளிர் - குளிர்ச்சியடைய. ஆடகப்போது மீது - பொற்றாமரைப் பூமேலே. உலாம் - உலாவியிருக்கின்ற. ஆதிநாதரே - ஆதிநாயகரே என்றவாறு.

**பொழிப்புரை:** ஆயிரஞ் சூரியர்கள்ஒரு கூட்டமாகக் கூடி இருந்ததொத்த பிரபாவலயத்தில், ஆயிரஞ் சந்திரருடைய கூட்டத்தின் ஒளியொத்த காயசோதியைப் பார்த்து, உலகத்தார் கண்டு களிக்கின்ற கண்கள் குளிர்ச்சியடையப் பொற்றாமரைப் பூமேல் உலாவியருள்கின்ற ஆதிநாயகரே! உம்மை மூவுலகத்திற்கும் நாயகர் என்றே எவர்களும் சொல்லுவார்கள். உம்மிடத்தில் பகை கொள்ளுகின்ற சிந்தையும், வேகத்தையுடைய குதிரையும், வெப்பத்தையுடைய ஆயுதங்களும் இல்லையாகையால், நீர் காத்தலைச் செய்யும் விதம் எவ்விதம் என்றவாறு.

**வி-ரை:** இதனால் பழிப்பதுபோல் பற்றற்றவனென்பது கூறப்பட்டது. காவல் செய்யுமாறு - எழுவாய். யாவது- பயனிலை.

## eṉcīrk kaḻineṭil viruttam

*puvaṉa nātareṉ ṟummai yāvarum*
　　*pukalva rummiṭat tikalkoḷ cintaiyuṅ*
*kavaṉa māvumvem paṭaiyu millainīr*
　　*kāval ceyyumā ṟiyāva tāyiran*
*tavaṉar kūṭiniṉ ṟaṉaiya vāyiran*
　　*taṇma tikkuḻā maṉṉa cōtikaṇ*
*ṭavaṉi nāṭukaṇ kuḷira vāṭakap*
　　*pōtu mītulā māti nātarē.*

Oh! Ātinātar who doth graciously stroll on the lotus golden
For the folk of the world to see with their eyes gladdened and cooled

At the sight of that *kāyacōti*
Which is as luminous as a constellation of a thousand moons,
Amidst the *prapāvalayam* of a thousand suns clustered
All will proclaim Thee as the Lord of the worlds three,
How doth Thou perform the task of protection,
When Thou hath not a mind hostile,
Or a horse fleetfooted or weapons hot?

## Explanatory notes

Ātinātar - The prime Lord Arukar.
*kāyacōti* - The shape of light ie The luminous body of Arukar
*prapāvalayam* - Halo or luminous circle.

### வஞ்சித்துறை

44. *ஆதி நாள்புண*
*ரேதில் வல்வினை*
*கோதில் வாமனை*
*யோதி லோடுமே.*

**பதப்பொருள்:** ஆதிநாள் - ஆதியிலேதானே. புணர் - சீவனுடன் கலந்த. ஏதில் - அன்னியமான. வல் - வலிமைபொருந்திய. வினை - வினையானாலும். கோதில் - குற்றமில்லாத. வாமனை - அருகனை. ஓதில் - துதித்தால். ஓடும் - நீங்கும் என்றவாறு.

**பொழிப்புரை:** குற்றமில்லாத அருகனைத் துதித்தால், ஆதியிலே சீவனுடன் கலந்த அன்னியமான வலிமை பொருந்திய வினையானாலும் நீங்கும் என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகன் வினைப்பகைவன் என்பது கூறப்பட்டது. வினை - எழுவாய். ஓடும் - பயனிலை.

### *vañcitturai*

*āti nālpuṇa*
*rētil valviṉai*
*kōtil vāmaṉai*
*yōti lōṭumē*

Even the *viṉai* alien and strong,
Which hath mingled with *jīvaṉ* in the beginning itself.

Will take to its heels and leave,
If (we) pray to Arukar flawless

## Explanatory note

*viṉai* - *tēcakāti* and *carvakāti* *jīvaṉ* - Life.

### கலித்தாழிசை

45. ஓடுஞ் சகடத் துருளி னுழன்றுசுழன்
றாடுங் கதியிலிளைப் பாறுந் திறமென்னோ
வாடுங் கதியிலிளைப் பாறுஞ் சுரும்பினங்கள்
பாடும் பொழிற்பிண்டிப் பண்ணவனைப் பாடவே
பாடாத வன்றடவிப் பல்பிறவி பாடுமினே.

**பதப்பொருள்**: ஓடும் - ஓடுகின்ற, சகடத்து - வண்டியினுடைய. உருளின் - சக்கரம் போல. உழன்று - அலைந்து. சுழன்று - சுற்றி. ஆடும் - பிறந்து இறக்கும். கதியில் - நாற்கதியில். இளைப்பு - வந்த இளைப்பு. ஆறும் திறம்- ஆறும் விதம். என் - எப்படி. ஆரும் - அப்படிப் பிறந்திருக்கும். கதியில் - நாற்கதியில். இளைப்பாறும் - வந்த இளைப்பு நீங்கும். சுரும்பினங்கள்- நால்வகை வண்டுகளும். பாடும் - பாடுகின்ற. பொழில் - பெருமைபொருந்திய. பிண்டி - அசோகினையுடைய. பண்ணவனை - அருகனை. பாடவே- துதிக்கவே. பாடாத - துதியாத. அன்று - அந்த நாளிலோ வெனில். அடவி - காடுபோல. பலபிறவி - எழுவகைப் பிறப்புண்டாகும். பாடுமின் - ஆகையினால் துதியுங்கள் என்றவாறு..

**பொழிப்புரை**: ஒடுகின்ற வண்டியினுடைய சக்கரம் போல் அலைந்து சுற்றிப் பிறந்திருக்கும் நாற்கதியில் வந்து இளைப்பாறும் விதம் எப்படி எனின், நால்வகை வண்டுகளும் பாடுகின்ற பெருமை பொருந்திய அசோகினையுடைய அருகனைத் துதிக்கவே அப்படிப் பிறந்து இறக்கும் நாற்கதியில் வந்த விளைப்பு நீங்கும். துதியாத அந்நாளிலோ வெனில் காடுபோல எழுவகைப் பிறப்பு முண்டாகும் ஆகையால் துதியுங்கள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனைத் துதித்தவர் பெறும் இன்பமும் துதியாதவர் பெறுந் துன்பமும் கூறப்பட்டது. நீங்கள் - எழுவாய்; பண்ணவனை - செயப்படுபொருள், பாடுமின் - பயனிலை.

எழுவகைப் பிறப்பின் பிரிவுகள் . 1. சூஷ்மேகேந்திரியம் - நுண்ணுயிர்களில் சிறியது. 2. பாதரேகேந்திரியம் - நுண்ணுயிர்களில் பெரியது. 3. த்வீந்திரியம் - நந்து, சிப்பி, சங்கு முதலியன. 4. த்ரீந்திரியம் - எறும்பு, கறையான், தேள் முதலியன. 5. சதுரிந்திரியம் - அந்து, விலங்கு, பறவை முதலியன. 6. சக்ஞி பஞ்சேந்திரியம் - மனமுடையது. மனிதர், விலங்கு, பறவை. 7. அசக்ஞி பஞ்சேந்திரியம் - மனமில்லாதது. சாரைப்பாம்பு முதலியன.

### kalittāḻicai

*ōṭuñ cakaṭat turuḷi ṉuḻaṉṟucuḻaṉ*
*ṟaṭuṅ katiyiliḷaip pāṟun tiṟameṉṉō*

*vāṭuṅ katiyililaip pāṟuñ curumpiṉaṅkaḷ*
*pāṭum poliṟpiṇṭip paṇṇavaṉaip pāṭavē*
*pāṭāta vaṉṟaṭavip palpiṟavi pāṭumiṉē.*

The only way to take rest,
For the fatigue of rolling like a cartwheel
In the spin and toss of birth and death in *nāṟkati*
Is to worship Arukar,
Who hath the glorious Acōka sung by the swarming bees.
The day when Arukar is not worshipped,
The sevenfold birth is sure to occur
Hence sing His glory.

## Explanatory notes

The **seven kinds of birth** according to Jainism are as follows:
l) *cūshmēkēntiram* (2) *pātarēkēntiriyam* (3) *tuvintiriyam* (4) *trintiriyam* (5) *caturintiriyam* (6) *acaknipañcēntiriyam* (7) *caknipañcēntiriyam*

### கட்டளைக் கலித்துறை

46. *பாடுவ துன்னடித் தாமரை பல்வினை மாசறநின்*
*றாடுவ துன்னடி வாரப் புனலடி யேன்றலைமேற்*
*சூடுவ துன்னடிச் சேட மலரென் றுணைக்கரங்கள்*
*கூடுவ துன்னடி கோமா னெனக்கோர் குறையிலையே.*

**பதப்பொருள்**: பாடுவது - யான்துதிப்பது. உன் - உனது. அடித்தாமரை - பாதத்தாமரை. பல்வினை- பலவினைகளான. மாசு - அழுக்கானது. அற - நீங்க. நின்றாடுவது - நின்று குளிப்பது. உன் - உனது. அடிவாரம் - பாதத்தில்பட்ட. புனல் - சலத்திலே தானும். அடியேன்- அடிமையான நான். தலைமேல் - சிரசின்மீது. சூடுவது - தரிப்பது. உன் - உன்னுடைய. அடி - பாதத்தில். சேட - தரித்த. மலர் - பூக்களை. என் - என்னுடைய. துணைக்கரங்கள்- இருகைகளும். கூடுவதும் - குவிவதும். உன் - உனது. அடி - பாதத்தில். கோமான் - அருகனே! எனக்கு - என்றனுக்கு. ஓர் குறையும் - ஒரு குறையும். இலை - இல்லை என்றவாறு.

**பொழிப்புரை**: அருகனே! உனது பாதத்தாமரையையே யான் துதிப்பதும், உனது பாதத்திற்பட்ட சலத்திலே தான் பலவினைக்ளான அழுக்கானது நீங்க நான் நின்று குளிப்பதும், உன்னுடைய பாதத்தில் தரித்த பூக்களையே அடிமையான நான் சிரத்தின் மீது தரிப்பதும், உனது பாதத்திற்கே என்னுடைய இருகைகளும் குவிவதும் ஆகையாலே எனக்கு ஒரு குறையும் இல்லை என்றவாறு.

**வி-ரை** : இதனால் உதீசித்தேவர் தான்பெற்ற இன்பங் கூறப்பட்டது. ஒரு குறை - எழுவாய். இலை - பயனிலை. தரித்தல் - அணிதல். தரிப்பது - அணிவது.

### *kaṭṭaḷaik kalitturai*

*pāṭuva tuṉṉaṭit tāmarai palviṉai mācaraṉiṉ*
*rāṭuva tuṉṉaṭi vārap puṉalaṭi yēṉralaimēr*
*cūṭuva tuṉṉaṭic cēṭa malareṉ ṟuṇaikkaraṅkaḷ*
*kūṭuva tuṉṉaṭi kōmā ṉeṉakkōr kuṟaiyilaiyē.*

Oh! *Kōmāṉ,*
It is Thy lotus feet which I worship,
It is the (blessed) water which hath touched Thy feet,
In which I bathe to wash away the (sinful) dirt of *viṉai* several,
It is the flowers laid at Thy feet,
Which I as a slave humble wear on my head
My hands join and fold,
Only to worship Thy feet
I have no complaint whatsoever.

## Explanatory note

*Kōmāṉ* - A person of exalted state. Here it refers to Lord Arukaṉ

### காப்பியக் கலித்துறை

47. *இலைவயங்கு கனைகடகத் திமையவர்க ளமையலரா யேத்தவானோர்*
*தலைவயங்கு பிணிமகரக் கடலலறக் கடைந்தமிர்த மளித்தகோவே*
*மலைவயங்கு திருமார்பின் மலர்மடந்தை வீற்றிருப்ப மகிழ்வையாகிற்*
*சிலைவயங்கு தோளனங்கன் றிறலழித்த விசயமென்னோ விசையுமாறே.*

**பதப்பொருள்**: இலை - இலைபோல. வயங்கு - விளங்குகின்ற. கனை - சத்திக்கும். கடகத்து- கங்கணங்களையுடைய. இமையவர்கள் - தேவர்கள். அமையலராய் - அடங்காதவர்களாய். ஏத்த -துதிக்கவே. வானோர்தலை - அந்தத் தேவர்களிடத்தில். வயங்கு - விளங்குகின்ற. பிணி- நோயாகிய. மகரம் - மகரமீன் பொருந்திய. கடல் - சமுத்திரமானது. அலற - ஒலிக்க. கடைந்து- கலக்கி. அமிர்தம் - முத்தியை. அளித்த - கொடுத்த. கோவே - நாதனே! மலை - மலைபோல், வயங்கு - விளங்குகின்ற. திரு - அழகிய. மார்பின் - மார்பிலே. மலர்மடந்தை - முத்தி லட்சுமி. வீற்றிருப்ப - வீறியிருப்ப. மகிழ்வையாகில் - நீ மகிழ்வையானால். சிலை - கரும்பு வில்லானது. வயங்கு - விளங்குகின்ற. தோள் - கையையுடைய. அனங்கன் - மன்மதனது. திறல் - வலியை. அழித்த - கெடுத்த. விசயம்- செயமானது. என்னோ - எப்படி, இசையுமாறு - பொருந்தும் விதம் என்றவாறு.

**பொழிப்புரை** இலை போல் விளங்குகின்ற சத்திக்குஞ் கங்கணங்களையுடைய தேவர்கள் அடங்காதவர்களாகித் துதிக்கவே, அந்தத் தேவர்களிடத்தில விளங்குகினற பிறவி நோயாகிய மகரமீன் பொருந்திய சமுத்திரமானது, ஒலிக்கக்கடைநது முத்தியைக் கொடுத்த நாதனே! மலைபோல விளங்குகின்ற அழகிய மார்பிலே முத்திலக்குமி வீற்றிருக்க வைதது நீ மகிழ்வாயானால கரும்பு வில்லானது விளங்குகின்ற கையையுடைய மன்மதனது வலியை கெடுத்த செயமானது பொருந்தும் விதம் எப்படி? என்றவாறு

**வி-ரை** : இதனால் பழிப்பது போல் விருப்பற்றவனென்பது கூறபபடடது இசையுமாறு - எழுவாய. என் - பயனிலை. சத்திக்கும் - ஒலிக்கும்

## *kāppiyak kalitturai*

*ilaivayaṅku kaṉaikaṭakat timaiyavark ḷamaiyalarā yētta vāṉōr*
*talaivayaṅku piṉimakarak kaṭalalaṟak kaṭaıntamirta maḻittakovē*
*malaivayaṅku tirumārpiṉ malarmaṭantai viṟṟiruppa makiḻvaiyākiṟ*
*cilaivayaṅku tōḷaṉaṅkaṉ ṟiralaḻitta vicayameṉṉō vicaiyumāṟē.*

Oh! Lord our king,
Who did confer *mukti* on the Tēvars,
Wearing leaf- shaped bracelets resonant,
*Who restlessly prayed (to Thee)*
By churning noisily the ocean of birth teeming with *makara* fishes,
That malady of birth prevalent among Tēvars
If Thou art happy to accommodate,
The Muktilakṣmi seated on thy mountainous chest beautiful
How doth Thy victory against Aṉaṅkaṉ
With the sugarcane bow in his hand
That victory which did render him powerless,
How does it accord?

## Explanatory notes

*mukti* - Eternal state, *makaram* - a kind of fish, also used to denote fishes in general, Tēvars - Heavenly beings, *Aṉaṅkaṉ* - The bodiless one. The term refers to Maṉmataṉ the god of love burnt to ashes on incurring the wrath of God. Later on a tearful request from Irati, the consort of Maṉmataṉ, he was made visible to her alone which remaining slapeless to the eyes of all others.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

48. *இசைபெருக வருள்பெருக மதிமலர விணையில்சுக மூழி நிலவத்*
*திசைமருவு துகிலிறைவர் செழுநெறியில் வருசதுரர் சேர நினையார்*
*நசைபெருக வினைபெருக நவைநலிய வுயிர்கள்பல தேய வொழியா*
*வசைபெருக மயல்பெருக மதுநறவு தசைநுகரு மாய நெறியே.*

**பதப்பொருள்** இசை - புகழானது பெருக - வளரவும் அருள் - ஜீவகாருண்யமானது. பெருக- வளரவும். மதி - அறிவானது மலர - பெருகவும் இணையில் - ஒப்பில்லாத சுகம்- பேரின்பமானது. ஊழி - நீடூழிகாலம் நிலவ - விளங்கவும். திசை - திக்குகளையே. மருவு - பொருந்திய. துகில் - வஸ்திரமாகத் தரிதத இறைவர் - அருகருடைய செழும் - செழித்த நெறியில் - மார்க்கததில. வருசதுரர் - நடக்கும் யோகியர்கள். சேர - அடைய நினையார் - எண்ணார்கள் நசை - ஆசையானது. பெருக - வளரவும் வினை - தீவினையானது பெருக - வளரவும் நவை - குறறங்களால் வரும் பிணிகள் நலிய - வருந்தவும் உயிர்கள்பல - பல சீவன்கள் தேய - குறையவும். ஒழியா - நீங்காத. வசை - நிந்தையானது பெருக - வளரவும் மயல் - மயக்கமானது. பெருக - வளரவும் மது - தேனையும். நறவு - கள்ளையும். தசை - நிணஙகளையும். நுகரும் - உண்ணப்படுகின்ற மாய நெறி - பொய்யான மார்க்கத்தை என்றவாறு.

**பொழிப்புரை.** புகழ் வளரவும ஜீவகாருணயம வளரவும், அறிவு பெருகவும், ஒப்பில்லாத பேரின்பம் நீடூழிக்காலம் விளங்கவும், திக்குகளையே பொருந்திய வஸ்திரமாகத் தரித்து: அருகரது செழித்த மார்க்கத்தில் நடககும் யோகியர்களானவர்கள் ஆசை வளரவும், தீவினை வளரவும், குற்றங்களால் வரும் பிணிகள வருந்தவும், பல ஜீவன்கள் குறையவும், நீங்காத நிந்தையானது வளரவும், மயக்கமானது வளரவும், தேனையும் கள்ளையும் நிணங்களையும் உண்கின்ற பொய்யான மார்க்கததை அடைய எண்ணார்கள என்றவாறு

**வி-ரை :** இதனால் சினசமயததினது நன்மையும அன்னிய சமயததினது தீமையுங் கூறப்பட்டன. சதுரர் - எழுவாய் மாயநெறியை - செயபபடுபொருள நினையார் - பயனிலை வஸ்திரம்- ஆடை நிந்தை - குற்றம் நிணம் - கொழுப்பு. மார்க்கம் - சமயம்.

## *aṟucīrk kaḻineṭil viruttam*

*icaiperuka varuḷperuka matimalara viṉaiyilcuka mūḻi nilavat*
*ticaimaruvu tikiliṟaivar ceḻuneṟiyil varucaturar cēra niṉaiyār*
*nacaiperuka viṉaiperuka navainaliya vuyirkaḷpala tēya voḻiyā*
*vacaiperuka mayalperuka matunaṟavu tacainukaru māya neṟiyē.*

The ascetics who doth wear the directions as garments theirs,
And who doth (also) tread the religious path prosperous of Lord Arukar,
In order to increase repute spread compassion, develop knowledge
And to make bliss eternal and peerless last for aeons,

Will never contemplate the path illusory,
Wherein desires wax and evil deeds multiply,
And where ailments caused by vices doth hurt,
And where *jīvaṉs* decrease and ceaseless slander doth increase,
And stupor spreads,
And where eating flesh and drinking honey as well as toddy doth flourish

## Explanatory notes

In Jainism the ascetics called *Tikamparars* are supposed to wear the eight directions as their garments *jīvaṉs* - lives.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

*49. மாயஞ் செய்யுங் கரியநெடு மாலு மணுகா மலரடியாய்*
*சீயஞ் சுமந்த மணியணைமேற் றிகழுஞ் சுடரே தீவினையேன்*
*காயஞ் சுமந்து தடுமாறிக் கதியொன் றறியா திழிகதியிற்*
*போயஞ் சியபின் னீயஞ்ச லென்னா தொழிகை போதாதே.*

**பதப்பொருள்**: மாயம் - வஞ்சனையை, செய்யும் - பண்ணுகின்ற கரிய - கருதத. நெடும் - மிகுந்த. மாலும் - மயக்கததைச் செய்யும் வினையும் அணுகா - தொடராத. மலர் - தாமரை மலர் போனற அடியாய் - பாததததையுடையவனே! சீயம் - சிங்கமானது சுமநத - தாங்கிய மணி - மணிகளிழைத்த. அணைமேல் - ஆசனத்தின் மீது திகழும் - விளங்குகின்ற சுடரே - ஞான சூரியனே! தீவினையேன் - தீயவினையை உடைய நான். காயம் - தேகத்தை, சுமந்து - தாங்கிக்கொண்டு தடுமாறி - மயங்கி. கதியொன்றும் - பிறவாத கதி ஒன்றையும அறியாது - அறியாமல், இழிகதியில - இழிவான நாறகதியில் போய் - பிறந்து பிறந்து அஞ்சியபின் - பயந்தபின்பும் நீயஞசல - நீ பயப்படேல் என்னாது - என்று சொல்லாமல் ஒழிகை - கருணையினன்று நீங்குகை போதாது - உனது தலைமைக் கேலாது என்றவாறு

**பொழிப்புரை**: வஞ்சனையைப் பண்ணுகினற கருதத, மிகுந்த மயக்கததைச செய்யும் வினையும் தொடராத தாமரை மலர் போன்ற பாதத்தையுடையவனே! சிங்கமானது தாங்கிய மணிகளிழைத்த ஆசனததின் மீது விளங்குகின்ற ஞானசூரியனே! தீவினையையுடைய நான், காயத்தைச் சுமந்துகொணடு மயங்கிப் பிறவாத கதியொன்றை அறியாமல், இழிவான நாறகதியிற் பிறந்து பிறந்து வருத்தத்திற் பயந்த பினபு நீ பயபபடேலென்று சொல்லாமற் கருணையினின்று நீங்குதலுனது தலைமைக்கேலாது என்றவாறு.

**வி-ரை** : இதனால் தனது குறை கூறப்படடது. நீயொழிகை - எழுவாய். போதாது - பயனிலை

### arucirk kalinetil viruttam

*māyañ ceyyuṅ kariyanetu mālu maṇukā malaratiyāy*
*ciyañ cumanta maṇiyaṉaimēṟ ṟikaḻuñ cuṭarē tīviṉaiyēṉ*
*kāyañ cumantu taṭumāṟik katiyoṉ ṟariyā tiḻikatiyiṟ*
*pōyañ ciyapiṉ nīyañca leṉṉā toḻikai pōtātē.*

Oh! Thou whose lotus feet,
The dark deceiving *māl* of magnitude cannot approach,
Oh! Sun of wisdom seated on a throne borne aloft by a lion,
Even after I a sinful one,
Not aware of the means of avoiding birth,
Doth carry this mortal frame in a daze
And born over and over again in the *Nāṟkati* deplorable
Even after I dread such births repeated in sequence,
Thou do not tell me 'Fear not'
This merciless attitude thine does not behove Thy suzerainty

## Explanatory notes

*Māl* means *viṉai* which in Jainism denotes *iruviṉai* - *tēcakāti* and *carvakāti*. Spoiling to a certain extent and spoiling totally. *Nāṟkati* - The four stages of birth *Tēvar, Maṉitar, Narakar, Vilaṅku.*

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

50. போதின்மிசைப் பிறந்திருந்து நடந்து பின்னும்
புலவர்மனப் போதுதொறும் புரிந்து வாழு
மாதிமுதற் கடவுளுக்குக் குணப்பேர் தூய
வாயிரத்தெட் டுடையவர்க்கைந் துள்வா மென்ப
கோதில்புகழ்ச் சத்தியோ சாதன் வாம
னகோரனீ சானன்றற் புருட னென்று
சாதமுதற் கலியாண மைந்தின் வானோர்
தாமன்பா லிட்டதிரு நாமந் தானே.

**பதப்பொருள்:** போதின்மிசை - தாமரைப்பூமேல் தோன்றி, பிறந்திருந்தும் - வீற்றிருந்தும். நடந்து- தருமம கண்டங்களில் உலாவியும். பின்னும் - திரும்பவும். புலவர் - விவேகிகளுடைய.

மனப்போதுதோறும்- இதயக்கமலந்தோறும். புரிந்து - விரும்பி. வாழும்- வாழுகின்ற. ஆதிமுதல்- ஆதிமுதலாகிய. கடவுளுக்கு - சுவாமிக்கு. குணப்பேர் - குணங்களைக் கூறும் பெயர். தூய - பரிசுத்தமான. ஆயிரத்தெட்டு - ஆயிரத்தெட்டை. உடையவர்க்கு - உடையரான அருகருக்கு. ஐந்து - மேலும் ஐந்து நாமங்கள். உளவாம் - உண்டாயிருக்கின்றன. என்ப - என்று சாதுக்கள் சொல்வர். கோதில் - குற்றமில்லாத. புகழ்- கீர்த்தியையுடைய. சத்தியோசாதன் - சத்தியோசாதன் என்றும். வாமன் - வாமனென்றும் அகோரன் - அகோரனென்றும். ஈசானன் - ஈசானன் என்றும். தற்புருடனென்று - தற்புருடனென்றும். சாதமுதல் - பிறப்பு முதலாக உண்டாகிய. கலியாண மைந்தின் - பஞ்ச கல்யாணத்தினால். வானோர் - தேவர்கள். தாம் - தாங்கள். அன்பால் - அன்பினாலே. இட்ட- வைத்த. திரு அழகிய. நாமத்தான் - பெயர்களென்றவாறு.

**பொழிப்புரை:** தாமரைப் பூமேல் தோன்றி வீற்றிருந்தும் தருமகண்டங்களிலுலாவியும், திரும்பவும் விவேகிகளுடைய இதயக் கமலந்தோறும், விரும்பி வாழ்கின்ற ஆதி முதலாகிய சுவாமிக்கு, பரிசுத்தமான குணங்களைக் கூறும் ஆயிரத்தெட்டு பெயரை உடையவருமாகிய அருகருக்குப் பிறப்பு முதலாக உண்டாகிய பஞ்ச கல்யாணத்தில் வானவர் தங்கள் அன்பினாலே இடப்பட்ட அழகிய பெயர்கள் குற்றமில்லாத புகழையுடைய சத்தியோசாதனென்றும், வாமனென்றும், அகோரனென்றும் ஈசானனென்றும், தற்புருடனென்றும் ஐந்து நாமங்களுண்டாயிருக்கின்றனவென்று சாதுக்கள் சொல்லுவார் என்றவாறு.

**வி-ரை :** இதனால் பஞ்ச கல்யாண முடையவன் அருகனே யென்பது கூறப்பட்டது. சாதுக்கள்- எழுவாய். உளவாமென்ப - பயனிலை.

பஞ்சகல்யாணம் - 1. கர்ப்பாவதரண கல்யாணம் (அருகன் பிறக்கும் வரை உள்ள காலத்தில் நடக்கும் நிகழ்ச்சி) 2. ஜன்மாபிசேகக் கல்யாணம் (புனிதநீராட்டு) 3. தீட்சை கல்யாணம் (துறவு ஏற்றல்) 4. கேவலோற்பத்திக் கல்யாணம் (வாலறிவாகிய அளவற்ற அறிவின் தோற்றம் 5. பரிநிர்வான கல்யாணம் (முக்திவிழா).

## eṉcīrk kaḻineṭil viruttam

*pōtiṉmicaip piṟantiruntu naṭantu piṉṉum*
*pulavarmaṉap pōtutoṟum purintu vāḻu*
*mātimutaṟ kaṭavuḷikkuk kuṇappēr tūya*
*vāyirattet ṭuṭaiyavarkkain tuḷavā meṉpa*
*kōtilpukaḻc cattiyō cātaṉ vāma*
*ṉakōraṉī cāṉaṉṟaṟ puruṭa ṉeṉṟu*
*cātamutaṟ kaliyāṇa maintiṉ vāṉōr*
*tāmaṉpā liṭṭatiru nāman tāṉē.*

The *Cātus* declare,

That to the primal God absolute who did emerge from the lotus
Strolled over continents virtuous

And did return to reside in the lotuses of scholars hearts
To that Lord Arukar.
Who hath pure attributive names a thousand and eight
There are five more names as well.
Those appellations conferred (on Arukar)
By the heavenly folk in their affection are *Cattiyōcātaṉ* of flawless fame,
*Vāmaṉ, Akōraṉ, Īcāṉaṉ* and *Taṟpuruṭaṉ*
These names having originated from His *Pañcakalyāṇam*
Starting from (and before) the birth of Arukar

## Explanatory notes

**Pañca kalyāṇam** - The five sequential events related to Arukar are

(1) *Karpāvatāraṇa kalyāṇam* - The events that happened upto the birth of Arukaṉ.
(2) *Jeṉmāpicēkak kalyāṇam* - The sacred bathing ceremony for consecration (Baptism)
(3) *Tiṭcaikalyāṇam* - Initiation into asceticism
(4) *Kēvalōṟpattik kalyāṇam* - The emergence of boundless wisdom known as *kēvalañāṉam*.
(5) *Parinirvāṇa kalyāṇam* - The celebration of the attainment of *mukti* (the eternal state)

**அறுசீர்க் கழிநெடில் விருத்தம்**

51. *நாம்பரவுந் திறமென்கொ னாவாயி ரம்படைத்தும் வான வேந்தர்*
*தாம்பரவு மாறறியா துண்மயங்குந் தண்மலர்ப்பூம் பாதம் பாதம்*
*பூம்பதும வாரணத்தான் பூரணவா ரணம்பயந்த புனிதன் செய்ய*
*தேம்பதும வடிபணிவா ரடிபரவி யடிபரவிச் சேரு நெஞ்சே.*

**பதப்பொருள்:** நாம்பரவுந் - நாம் துதிக்கும். திறம் - வகை. என்கொல் - எப்படி? நாவாயிரம் - ஆயிரம் நாவினை. படைத்தும் - விகுர்வணையாற் பெற்றும். வானவேந்தர் - இந்திரர்கள். தாம்பரவும் - தாங்கள் புகழ்கின்ற. ஆறு - விதத்தை. அறியாது - அறியாமல். உண்மயங்கும்- மனமயங்கப்பட்ட. தண் - குளிர்ச்சி. மலர் - தாமரைப்பூப்போன்ற. பூம் - பொலிவினையுடைய. பாதம் - பாதங்கள். பாதம் - பாதங்கள். பூம் - அழகிய. பதுமம் - தாமரைப் பூவாகிய. வாரணத்தான் - யானையை உடையவன். பூரணம் - நிறைவான. ஆரணம் - வேதங்களை. பயந்த - தந்த. புனிதன் - நிருமலனுடைய, செய்ய - சிவந்த. தேம் - வாசனைபொருந்திய. பதுமம் - தாமரைப் பூப்போன்ற. அடி - பாதங்களை. பணிவார் - வணங்குமடியாருடைய. அடி- பாதங்களை. பரவி - துதித்து. சேரு - அவ்வடியாருக்கடியாருடைய பாதங்களைத் துதித்துச் செல்லுவோம். நெஞ்சே - மனமே என்றவாறு.

**பொழிப்புரை**: நெஞ்சமே! இந்திரர்கள் ஆயிரம் நாவினை விகுருவணையாற் பெற்றும் தாங்கள் புகழ்கின்ற விதத்தை அறியாமல் மனமயங்கப்பட்ட குளிர்ச்சியாகிய தாமரைப்பூப்போன்ற பொலிவினையுடைய பாதங்கள் பாதங்கள் நான் துதிக்கும் வகை எப்படி? அழகிய தாமரையாகிய யானையை உடையவனும் நிறைவான வேதங்களைத் தந்த நிருமலனாகிய அருகபரமேட்டியினுடைய சிவந்த வாசனை பொருந்திய தாமரைப் பூப்போன்ற பாதங்களை வணங்கும் அடியாருடைய பாதங்களைத் துதித்து அவ்வடியாருக் கடியாருடைய பாதங்களைத் துதித்து யாம் செல்லுவோம் என்றவாறு.

**வி-ரை** : இதனால் வழிபடும் உபாயம் கூறப்பட்டது. பரவுந்திறம் - எழுவாய். என்கொல் - பயனிலை. நாம் - எழுவாய். சேறும் - பயனிலை.

## aṟucīrk kaḻineṭil viruttam

*nāmparavun tiṟameṉko ṉāvāyi rampaṭaittum vāṉa vēntar*
*tāmparavu māṟaṟiyā tuṇmayaṅkun taṇmalarppūm pātam pātam*
*pūmpatuma vāraṇattāṉ pūraṇavā raṇampayanta puṉitaṉ ceyya*
*tēmpatuma vaṭipaṇivā raṭiparavi yaṭiparavic cēru neñcē.*

Oh! human mind,
How are we to pray and worship,
The lotus feet cool and elegant (of Arukaṉ)
The laudatory and proper worship of which.
Even the thousand-tongued Intirars know not for certain,
(Hence) Let us pray and worship,
The feet of the devotees who render obeisance,
To the lotus feet, red and fragrant (of Arukaṉ)
Who doth sport the lotus as an elephant,
And who is a *Nirmalaṉ* hath provided the scriptures sound
(Let us also pay obeisance)
To the feet of the devotees of such devotees (of Arukaṉ)

## Explanatory notes

*Intirars* - The heavenly beings, *Nirmalaṉ* - The flawless one, ie Arukaṉ.

### பதினான்குசீர்க் கழிநெடில் விருத்தம்

52. *நெஞ்சத் தருளுடை யவர்கட் கணுகுத*
*லெளிதா யருவினை யவர்கட்கு*

நினைவிற் குறுகலு மரிதா யொளியொடு
நீளா வடைபவர் மீளாதோர்

தஞ்சத் தொடுபகை பசிநோய் மறலிகள்
சாரா திறுதியில் பேரின்பந்
தள்ளா வெள்ளமொ டெல்லா வுலகமும்
விழையத் திகழ்தரு தனிநாடா

வஞ்சத் தினிஅழல் வோத்தி னிகன்
மானக் கமடன்முன் னெறியுங்கார்
மலையைச் சொரிதரு கனலைப் பொழிதரு
மழையைக் கொலைதரு படையைப்பா

ரஞ்சத் தெறுமிடி யுருமைத் திருமல
ராகக் கொண்டருள் பெரியோனே
யலரே கொண்டுநின் னடியே தொழுமெனை
யருளா தொழுகுத லமையாதே.

**பதப்பொருள்**: நெஞ்சத்து - மனத்திலே அருளுடையவர்கட்கு - ஜீவகாருண்ய முடையவர்களுக்கு. அணுகுதல் - சேருதல். எளிதாய் - சுலபமுடையதாய். அரும் - அரிதான. வினையவர்கட்கு - தீவினையுடையவர்களுக்கு. நினைவின் - எண்ணத்தினாலும். குறுகலும் - சேருதலும். அரிதாய - அருமை உடையதாய். ஒளியோடு- முச்சோதியுடன். நீளா - சென்று. அடைபவர்- சேருமவர். மீளாது - மீளப்படாமலும். தஞ்சத்தோடு - எளிமையுடனே. பகை - வெறுப்பும். பசி - பசியும். நோய் -வியாதியும். மறலிகள் - காலன் முதலானவர்களும். சாராது- சேரப்படாமலும். பேரின்பம் - அனந்த சுகமாகிய. தள்ளா - நீக்கப்படாத. வெள்ளமொடு - சமுத்திரத்துடன். எல்லா உலகும் - உலகமெல்லாம். விழைய - விரும்ப. திகழ்தரு - விளங்குகின்ற. தனி - ஒப்பற்ற. நாடா - முத்தியை உடையவனே, வஞ்சத்தினின் - கபடத்தினாலும். அழல் - கோபிக்கின்ற. வோத்தினின்- வைரத்தினாலும். இகன் - பகைகொன்றும்.. மானம் - வலியையுடைய. கமடன்- கமடனானவன். முன் - எதிரினின்று. எறியும் - எடுத்தெறிந்த. கார் - மேகஞ்சூழ்ந்த. மலையை- வெற்பையுஞ். சொரிதரு - சொரிந்த. கனலை - நெருப்பையும் பொழிதரு - பொழிந்த, மழையை - மழையையும். கொலைதரு - கொல்லும்படியான. படையை - ஆயுதங்களையும். பார் - பூமியிலுள்ளார். அஞ்ச - நெருங்க. தெறும் - கொல்லுகின்ற. இடியுருமை - இடியேற்றையும். திரு - அழகிய. மலராக - பூவினங்களாக. கொண்டருள் - ஏற்றுக் கொண்ட. பெரியோனே- மேலானவனே. அலரே - மலர்களையே. கொண்டு - கைக்கொண்டு. நின் - உன்னுடைய. அடியே - பாதங்களையே. தொழும் - வணங்கின்ற. எனை - என்னை. அருளாது - இரட்சியாமல். ஒழுகுதல் - போகுதல். அமையாது - உனது தலைமைக் கேலாது என்றவாறு.

**பொழிப்புரை**: மனத்திலே ஜீவகாருண்ய முடையவர்களுக்குச் சேருதல் சுலபமுடையதாயும், அரிதான தீவினையை உடையவர்களுக்கு நினைவினாற் சேருதலும் அருமையுடையதாயும்,

முச்சோதியுடன் சென்று சேருமவர் மீளப்படாமலும், எளிமையுடனே வெறுப்பும் பசியும் வியாதியும் காலன் முதலானவர்களும் சேரப்படாமலும், முடிவில்லாத அநந்தசுகமாகிய நீக்கப்படாத சமுத்திரத்துடன் உலகமெல்லாம் விரும்ப விளங்குகின்ற ஒப்பற்ற முத்தி நாட்டையுடையவனே! கபடததினாலும் கோபிக்கின்ற வைரத்தினாலும் பகை கொள்ளும் வலியையுடைய கமடனானவன் எதிரினின்று எடுத்தெறிந்த மேகஞ்சூழ்ந்த மலையையும், சொரிந்த நெருப்பையும், பொழிந்த மழையையும், கொல்லும்படியான ஆயுதங்களையும், பூமியில் உள்ளார் நடுங்கக் கொல்லுகின்ற இடியேற்றையும், அழகிய பூவினங்களாக ஏற்றுக்கொண்ட பெரியோனே! மலர்களையே கைக்கொண்டு உன்னுடைய பாதங்களை வணங்குகின்ற என்னை இரட்சியாமல் போகுதல் உனது தலைமைக் கேலாது என்றவாறு.

**வி-ரை** : இதனால் தனது குறை கூறப்பட்டது. ஒழுகுதல் - எழுவாய் அமையாது - பயனிலை. சீவகாருண்ணியன் - கிருபையுள்ளோன், அருள் உடையோன் கமடாசுரன் - கொடிய மனிதன்.

### *Patiṉāṉkucīrk kaḻineṭil viruttam*

*neñcat taruḷuṭai yavarkaṭ kaṉukuta*
*leḷitā yaruviṉai yavarkaṭku*
*niṉaiviṟ kuṟukalu maritā yoḷiyoṭu*
*nīḷā vaṭaipavar mīḷātōr*

*tañcat toṭupakai pacinōy maṟalikaḷ*
*cārā tiṟutiyil pēriṉpan*
*taḷḷa veḷḷamo ṭellā vulakamum*
*viḻaiyat tikaḻtaru taṉināṭā*

*vañcat tiṉiṉaḻal vōtti ṉiṉikaṉ*
*māṉak kamaṭaṉmuṉ ṉeṟiyuṅkār*
*malaiyaic coritaru kaṉalaip poḻitaru*
*maḻaiyaik kolaitaru paṭaiyaippā*

*rañcat teṟumiṭi yurumait tirumala*
*rākak koṇṭaruḷ periyōṉē*
*yalarē koṇṭuniṉ ṉaṭiyē toḻumeṉai*
*yaruḷā toḻukuta lamaiyātē.*

Oh! Native of the *mukti* land,
Which doth remain the entire word's desired destination,
Which hath (in itself) an ocean of comfort endless and unremoved
Which is easy of access to those with compassion in minds theirs,

Which is hard even to contemplate for the sinners evil,
Whence those who reached with *muccōti* never return,
And to which simple hatred, hunger, disease and *kālaṉ* never align.
Oh! Great one, who did absorb and accept,
As flowers lovely,
The cloudy mountains hurled by an evil despot from the side opposite,
The showered fire, the poured rain,
The weapons deadly
And the killing thunder that makes
The people of the world tremble
When I do worship Thy feet with flowers,
If Thou walk away without protecting me,
It does not behove Thy leadership.

## Explanatory notes

*mukti* - The eternal state of liberation, Kālaṉ - God of death *muccōti* - The threefold light (1) *maṉacōti* - The mental light. (2) *vākkucōti* - The light of speech. (3) *kāyacōti*- The bodily light.

**காப்பியக் கலித்துறை**

53. *மைச்சந்த மாமுகில்கா ளுலகளந்த முகில்வண்ணன் மருவுநீல*
*வுச்சந்த மலைகுறுகி வலங்கொண்டு பணிந்துநீ ரும்பர்நாடு*
*நிச்சந்தம் வினைகெடவா டியதீர்த்த நெடுவாரி முகந்துபோந்தென்*
*மெய்ச்சந்த மழியவரு நோய்தீர வினையேன்மேல் வீசுவீரே.*

**பதப்பொருள்:** மை - கருத்த. சந்தம் - அழகையுடைய. மா - பெருமைபொருந்திய. முகில்கள்- மேகங்களே! உலகு - உலகத்தை. அளந்த - பரமாணுவாலளந்த. முகில் - மேகம் போன்ற, வண்ணன் - நிறத்தையுடைய நேமிநாத சுவாமி. மருவு - பொருந்திய. நீலம் - நீலநிறமான. உச்சந்தமலை - ஊர்ச்சயந்தகிரியை. குறுகி - அடைந்து. வலங்கொண்டு - வலஞ்செய்து. பணிந்து- வணங்கி. நீர் - நீங்கள். உம்பர் - தேவர்களும். நாடு - உலகத்தாரும். நிச்சம் - தினந்தோறும். தம் - தங்களுடைய. வினை - தீவினைகள். கெட - நீங்க. ஆடிய - குளிர்கின்ற. தீர்த்தம் - சலமானது. நெடு - மிகுந்த. வாரி - சமுத்திரத்தில். முகந்து - மொண்டு கொண்டு. போந்து - வந்து என் - எனது. மெய்ச்சந்தம் - மெய்யழகு. அழிய - கெட. வரு - வருகின்ற. நோய் - வியாதியானது. தீர - நீங்க. வினையேன்மேல் - தீவினையையுடையோனாகிய என்மீது. வீசுவீர் - அந்த நீரைப் பொழியுங்கள் என்றவாறு.

**பொழிப்புரை** கருத்த அழகையுடைய பெருமைபொருந்திய மேகங்களே! நீங்கள் உலகத்தைப் பரமாணுவால் அளந்த முகில் வண்ணனாகிய நேமிநாதசுவாமி பொருந்திய நீலநிறமான ஊர்ச்சயந்த கிரியை அடைந்து வலஞ்செய்து வணங்கி தேவர்களும் உலகத்தாரும் தினந்தோறும் தங்களுடைய தீவினைகள் நீங்கக்குளிக்கின்ற சலமனாது மிகுந்த சமுத்திர வெள்ளத்திலே மொண்டு கொண்டுவந்து எனது மெய்யழகு கெட வருகின்ற வியாதியானது நீங்கத் தீவினையையுடையோனாகிய என்மீது அந்நீரைப் பொழியுங்கள் என்றவாறு

**வி-ரை.:** இதனால் அடியவருடைய பெருமை கூறப்பட்டது. நீர் - எழுவாய். நீரை - செயப்படுபொருள. வீசுவீர் - பயனிலை பரமாணு - மிகமிகச் சிறிய பொருள். ஊர்ச்சயந்தகிரி- நேமிநாதர் வீடுபேறு அடைந்த இடமாகும். இது குஜராத் மாநிலத்தில் உள்ளது.

### *kāppiyak kalitturai*

*maiccanta māmukilkā ḻulakaḷanta mukilvaṉṉaṉ maruvunīla*
*vuccanta malaikuṟuki valaṅkoṇṭu paṇintunī rumparnāṭu*
*niccantam viṉaiketavā ṭiyatīrtta neṭuvāri mukantupōnteṉ*
*meyccanta maḻiyavaru nōytīra viṉaiyēṉmēl vīcuvīrē.*

Oh! glorious clouds dark and beautiful,
Reach *ūrccayantakiri* the blue mountain where doth belong,
The cloud complexioned Lord Nēminātar,
Who did measure the world with *paramāṇu*
Go round (the mountain) and worship,
And draw water from the swelling ocean
Where *Tēvars* and worldly folk bathe to rid themselves of *tīviṉai*
Bring that water and shower it on me, the sinner of *tīviṉai*
To dispel the disease which spoils my body beautiful

## Explanatory notes

*uccantamalai* or *ūrccayantakiri* is the place where Nēminātar attained *viṭu* or *mōkṣam* (eternal liberation and bliss). It is in the state of Gujarat. *paramāṇu* - atom.

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

54. *வீசுடல மெறிதிரையின் மேவுகடன் மருவுபுணை*
*வேகவினை வனமடைய வீழவுட னெறியுமழு*
*வாசையவிர் பொறியரவி னாவிசெல வதிருமிடி*
*யாறுதுரு நயமயல்க ளாயவிருள் பருகுசுடர்*

*மாசிலருண் முனிவர்மன வாவிநடு வலருமலர்*
*வானவர சர்கள்முடியின் மாமகுட சிகையின்மணி*
*யேசரிய சிவகதியி லேறுமவர் குறுகுநெறி*
*யேடவிழு நளினமிசை யேகுமவ ரடியிணையே.*

**பதப்பொருள்**: வீசு - வினையைக் கெடுக்கின்ற. உடலம் - தேகமாகிய. எறி - அடிக்கின்ற. திரையின் - அலையினாலே. மேவு - பொருந்திய கடல் - பிறவிக் கடலுக்கு. மருவு - பொருந்திய புணை - தெப்பமாம். வேகம் - வெப்பத்தையுடைய. வினைவனம் - தீவினைக்காடு. அடைய- முழுவதும் விழ - அழிய. உடன் - ஒரு தன்மையாக. எறியும்- வெட்டுகின்ற. மழு - கோடாலி யாம். ஆசை - இச்சையாகிய. அவிர் - விளங்குகின்ற. பொறி - புள்ளிகளுடைய. அரவின் - பாம்பினுடைய ஆவி - உயிரானது. செல - நீங்க. அதிரும் - முழங்குகின்ற. இடி - இடியாம். ஆறு - ஆறுவகைப்பட்ட. துருநயம் - ஏகாந்தவாத மென்னும். மயல்களாய - மயக்கங்களான. இருள் - இருட்டை. பருகு - போக்குகின்ற. சுடர் - சூரியனும். மாசில் - குற்றமில்லாத. அருள்- ஜீவகாருண்ணியத்தையுடைய. முனிவர் - முனிவர்களுடைய மனம் - மனமாகிய. வாவி - தடாகத்தினது. நடு - மத்தியில். அலரும் - அலருகின்ற. மலர் - பூவாம். வானவரசர்கள்- இந்திரருடைய. முடியின் - சிரத்தில் தரிக்கும். மா - பெருமை பொருந்திய. மகுடம் - கிரீடத்தினுடைய. சிகையில் - உச்சியிலிருக்கின்ற. மணி - இரத்தினமாம். ஏசரிய - இகழ்வில்லாத. சிவகதியில் - முத்தியில். ஏறும் அவர் - சேருகின்றவர்கள். குறுகும் - அடைகின்ற. நெறி - வழியாம் ஏடவிழும் - இதழ்விரிகின்ற நளினமிசை - தாமரைப்பூமேல் யேகுமவர் - நடக்கின்றவராகிய அருகருடைய. அடியிணை - இருபாதங்களும் என்றவாறு.

**பொழிப்புரை**: இதழ்விரிகின்ற தாமரைப்பூமேல் நடக்கின்றவராகிய அருகருடைய இருபாதங்களும்; வினையைக்கெடுக்கின்ற தேகமாகிய அடிக்கின்ற திரையினாலே பொருத்தப்பட்ட பிறவிக் கடலுக்குப் பொருந்திய தெப்பமாம், வெப்பத்தையுடைய தீவினைக் காடு முழுவதும் அழிய ஒரு தன்மையாக வெட்டுகின்ற கோடாலியாம், விளங்குகின்ற புள்ளிகளையுடை ஆசையாகிய பாம்பினது உயிர் நீங்க முழங்குகின்ற இடியாம், ஆறுவகைப்பட்ட ஏகாந்தவாத மென்னும் மயக்கங்களான இருட்டைப் போக்குகின்ற சூரியனாம், குற்றமில்லாத சீவகாருண்ணியத்தையுடைய முனிவர்களுடைய மனமாகிய தடாகத்தினது மத்தியில் மலர்கின்ற பூவாம், இந்திரருடைய சிரத்தில் தரிக்கும் பெருமை பொருந்திய கிரீடத்தினுடைய உச்சியில் இருக்கின்ற இரத்தினமாம், இகல்வில்லாத முத்தியிற் சேருகின்றவர்கள் அடைகின்ற வழியாம் என்றவாறு.

**வி-ரை** ; இதனால் அருகனது பாதத்தை நினைத்தவர்க்கு வரும் பயன் கூறப்பட்டது. அடியிணை- எழுவாய், புணை, மழு முதலியன தனித்தனி பயனிலை. ஏகாந்தவாதங்களாவன- சைவம், வைணவம், இரணியகர்ப்பம், பிரமம், பௌத்தம், கபிலம், கணாதரம். சீவகாருண்யன்- கிருபையுள்ளோன்; அருள் உடையோன்.

## **eṇcīrk kaḻineṭil viruttam**

*vīcuṭala meṟitiraiyiṉ mēvukaṭaṉ maruvupuṇai*
*vēkaviṉai vaṉamaṭaiya viḻavuṭa ṉeṟiyamaḻu*
*vācaiyavir poṟiyaravi ṉāvicela vatirumiṭi*
*yāṟuturu nayamayalka ḷāyaviruḷ parukucuṭar*
*mācilaruṇ muṉivarmaṉa vāvinaṭu valarumalar ·*
*vāṉavara carkaḷmuṭiyiṉ māmakuṭa cikaiyiṉmaṇi*
*yēcariya civakatiyi lēṟumavar kurukuneṟi*
*yēṭaviḻu naḷiṉamicai yēkumava raṭiyiṇaiyē.*

Lord Arukar's feet both,
which doth tread on the lotus of petals unfolded,
Is the float proper,
For the ocean of birth,
Formed by the waves of the mortal frame (human body)
which doth debase *viṉai*
It is the axe which fells uniformly
The forest entire of *tīviṉai* hot.
It is the thunder which rumbles to kill,
The speckled snake of desire.
It is the sun which doth dispel the darkness,
Of the illusions of *ēkāntavātam* sixfold
It is the flower that blossoms at the centre of the pond,
*Of the minds of saints of compassion flawless*
It is the gem which doth adorn the crowns worn by Intirars.
It is also the path to *mukti* impeccable
For those who seek to attain it.

## Explanatory notes

*ēkāntavātam* : *Caivam, Vaiṇavam, Iraṇiyakarppam, Piramam, Pouttam, Kapilam Kaṇātaram.* These religions profess *ēkāntavātam* or absolutism which is not accepted by Jainism.

## பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

55 இணைவள ரிளமுலை வெற்பாலே யிடைதளர் பவர்பவ ளத்தூடே
யெழுதரு நகைபெறி லத்தாலே யெழுபுவி யொடுநிலை பெற்றார்போ
லணைவுறு மகிழ்வொடு பித்தேறா வயர்பவ ரிறைமையை மெச்சாதே
யகல்வன கதிகள்பெ றிற்பேரா வகதியை யெனையது நச்சேனீள்
பணைதிசை முழுதுநெ ருக்காநேர் படரொளி யுலகுற விப்பாலோர்
பனிபடு கடலையொ துக்காவூர் பணிநில மிடைதர முற்றாவார்
பிணையல்கள் சொரிவிரை மட்டாலேழ் பெருநில நனைதர முட்டாதோர்
பெருகிய செயலையின் மெய்ப்பாலோர் பிறவிக ளறவமர் புத்தேளே.

**பதப்பொருள்** இணை - இரண்டும் ஒத்து வளர் - பூரிக்கின்ற. இளம் - இளமைபொருந்திய. முலை - தனங்களாகிய வெற்பாலே - மலைகளாலே. இடை - இடுப்பானது தளர்பவர் - வருந்தும் தங்களுடைய பவளததூடு - பவளமாகிய வாயினின்று. எழுதரு - உண்டாகின்ற நகை - சிரிப்பை. பெறின் - தாங்கள் பெற்றால், அத்தாலே - அந்தச் சிரிப்பினாலே. எழுபுவியொடு- ஏழு உலகுடனே. நிலை - பேரின்ப நிலைமையும் பெற்றார்போல் - அடைந்தவரைப்போல். அணைவுறு - பொருந்திய. மகிழ்வொடு - மகிழ்ச்சியுடன் பித்தேறா- பித்தேறி, அயர்பவர் - மயங்குவாருடைய இறைமையை - சுவாமித்துவத்தை. மெச்சாதே - புகழாமல். அகல்வன - நீங்குவனவாகிய கதிகள் - மார்க்கங்களை. பெறின் - யான்பெற்றால். பேரா - எக்காலத்தும் நீங்கப்படாத அகதியை - முததியை. எனையது - எத்தன்மையதென்று. நச்சேன் - விரும்பேன். நீள் - நீண்ட. பணை - கிளைகள். திசைமுழுதும் - எட்டுதிக்கையும் நெருங்கா - நெருங்கி. நேர் - நேரே. படர்- போய் ஒளியுலகு - சோதிட உலகததை. உற - அடைய. இப்பாலோர் - கீழ்ப்பாலான வேரானது பனிபடு - குளிர்பொருந்திய. கடலை - சமுத்திரத்தை. ஒதுக்கா - அடக்கி ஊர்- ஊர்கின்ற. பணிநிலம் - பவணருலகததை. இடைதா- சேரா முற்றாவார் - சூழ்வாருடைய பிணையல்கள் - மாலைகள். சொரி - பொழிகின்ற. விரை - வாசனைபொருந்திய. மட்டால்- தேனினால். எழு - எழுவகைப்பட்ட. பெரும் - பெருமையையுடைய. நிலம் - பிரகாரங்கள். நனைதர - நனைய முட்டாது - முட்டுப்படாமல். பெருகிய - வளர்ந்த. செயலையில்- அசோக நிழலில். மெய்ப்பாலோர் - உண்மைத தன்மையோருடைய. பிறவிகள் - பிறப்புகள். அற - நீங்க. அமர் - அமர்ந்த புத்தேளே - கடவுளே என்றவாறு

**பொழிப்புரை**: நீண்ட கிளைகள் எட்டு திக்கையும் நெருங்கி நேரே போய் சோதிட லோகத்தை அடையக் கீழ்ப்பாலான வேரானது குளிர்ச்சி பொருந்திய சமுத்திரத்தை அடக்கி ஆளுகின்ற பவணருலகத்தைச்சேர, முட்டுப்படாமல் வளர்ந்த அசோக நிழலிலே எழுவகைப்பட்ட பெருமை பொருந்திய பிரகாரங்கள் முழுவதும் சூழ்பவருடைய மாலைகள் பொழிகின்ற வாசனை பொருந்திய தேனினாலே நனைய நிச்சய ஞானத்தோருடைய பிறப்புக்கள் நீங்க அமர்ந்த கடவுளே! இரண்டும் ஒத்துப் பூரிக்கின்ற இளமை பொருந்திய தனங்களாகிய மலைகளாலே இடுப்பானது வருத்த மாதர்களுடைய பவளமாகிய வாயினின்று உண்டாகின்ற சிரிப்பைத் தாங்கள் பெற்றால் அந்தச் சிரிப்பினாலே ஏழுலகுடனே பேரின்ப நிலையையும் அடைந்தவரைப் போலப் பொருந்திய மகிழ்ச்சியுடன் பித்தேறி மயங்குவார்களுடைய சுவாமித்துவத்தை புகழாமல் நீங்குவனவாகிய மார்க்கங்களை யான்பெற்றால் எக்காலத்து நீங்கப்படாத முத்தியை எத்தன்மையது என்று விரும்பேன் என்றவாறு

**வி-ரை :** இதனால் மித்தியா தெய்வங்கள் பழிக்கப்பட்டன. ஓரென்றவிரண்டும் அசை. யான்- எழுவாய் அகதியை - செயப்படுபொருள் நச்சேன் - பயனிலை ப்ராகாரம் ஏழாவன - மானஸ்தம்பம், ஜலகாதிகை, புஷ்பவனம், சைத்தியவிருக்ஷம், துவஜபூமி, சித்தார்தத விருக்ஷம், ஸ்தூபஹர்மாவலி.

1. **மானஸ்தம்பம்** - சமவசரணத்தின் நுழைவாயில் அமைந்த மனத்தூய்மைக் கம்பம்.

2. **ஜலகாதிகை** - தெளிந்த நீரையுடைய அகழிகள் உள்ள பூமி

3. **புஷ்பவனம்** - பலவகை மலர்களும் பூத்துக் குலுங்கும் பூமி

4. **சைத்திய விருட்சம்** - உயர்வைக் கொடுக்கக்கூடிய மதிலும், அம்மதிலின் நாற்புறமும் மூன்று நிலைகளையுடைய கோபுரமும் நடன மாளிகைகளும், செண்பகம், தேமா, அசோகு போன்ற மரங்களும் அமைந்த பூமி.

5. **துவஜபூமி** - மகிழ்ச்சியைத் தரக்கூடிய மதிலும், அதன் நாற்புறமும் ஐந்து நிலைகளையுடைய கோபுரமும், அதன் வீதிகளில் இருபக்கமும் உள்ள நடன மாளிகைகளும், சுற்று மதில்களும் உடையதுமான பூமி

6. **சித்தார்த்த விருட்சம்** - நன்மையை உண்டாக்கும் மதிலும் அதன் நாற்புறமும், ஏழு நிலையினையுடைய கோபுரமும் நடன மாளிகைகளும், கற்பக விருட்சமும் பிறவும அமைந்துள்ள பூமி.

7. **ஸ்தூப ஹர்மாவலி** - பளிங்குச் சுவராலான மதிலும் அதன் உளளே மானிடர், தேவர் முதலிய பன்னிரு கணங்களுககும் மததியில் அருக பெருமான் அமர்ந்திருக்கும் பூமி

## *Pannirucir āciriya viruttam*

*iṇaivaḷa rilamulai veṟpālē yiṭaitaḷar pavarpava ḷattūṭē*
*yeḻutaru nakaipeṟi lattālē yeḻupuvi yoṭunilai peṟṟārpō*
*laṇaivuṟu makiḻvoṭu pittēṟā vayarpava riṟaimaiyai meccātē*
*yakalvaṉa katikaḷpe ṟiṟpēṟā vakatiyai yeṉaiyatu naccēṉiḷ*
*paṇaiticai muḻutune ṛukkāṉēr paṭaroḷi yulakuṟa vippālōr*
*paṉipaṭu kaṭalaiyo tukkāvūr paṇinila miṭaitara muṟṟāvār*
*piṇaiyalkaḷ corivirai maṭṭālēḷ perunila nanaitara muṭṭāṭōr*
*perukiya ceyalaiyiṉ meyppālōr piṟavika ḷaṟavamar puttēḷe.*

Oh! God, who doth sit in order to rid the truly wise ones of their birth cycles,
In the shade of the *Acōka* tree of the interrupted growth,
The tall branches of which span all the directions eight closely,

And go up straight to the luminous world.
The roots (of the *Acōka* tree) reach down to the world of *pavaṇar*
Which doth restrain and rule over the oceans.
(The *Acōka* tree)
The seven glorious *prakāram* of which are drenched;
By the fragrant honey showered by the garlands of those who through there,
If I could but attain the means of avoiding without flattery,
The (professed) Godliness of those,
Who are dazed in an intoxication of delight,
As if they have attained bliss eternal and the seven worlds,
If they happen to be favoured with,
The laughter that emanates from the coral mouths,
Of women whose waists suffer on account of their breasts youthful and mountainous
(If I attain such means)
I won't desire even *mukti* eternal
Without knowing its nature true.

## Explanatory notes

This poem deplores the faith in the spurious deities known as *mittiyā teyvaṅkaḷ*. *prakārams*- corridors of temples and holy places. The seven *prakārams* are:

1. ***māṉastampam*** - The most signifying mental purity, located at the entrance of *camavacaraṇam*.
2. ***jalakātikai*** - A land with moats containing clear water.
3. ***puṣpavaṉam*** - A land where flowers of various kinds blossom.
4. ***caittiya viruṭcam*** - A place which has exalted ramparts with three - tiered towers on the four sides of the ramparts, dance chambers and trees like *Ceṇpakam, Tēma* and *Asōku*.
5. ***tuvajapūmi*** - A place surrounded by pleasant ramparts with five - tiered towers on all four sides and dance chambers on both sides of the streets.
6. ***cittārtta viruṭcam*** - A place surrounded by benevolent ramparts with seven - tiered towers on all four sides, dance chambers, *kaṟpaka viruṭcam* (a tree which can provide whatever we desire) and other objects.

7. ***stūpa harmāvali*** - The place where Arukatēvan̲ is seated in a throne at the centre of *kantakuṭi* hall in *Tirimēkalāpiṭam* surrounded by twelve kinds of *kōṣta pūmi* accommodating groups of human beings, *Tēvar* (divine beings) etc. The entire place is surrounded by *Srinilayam* which is a compound wall built with crystal slabs.

## சித்துவித்தை

### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

56. *புத்தே ளுலகைப் பொன்னுலக மாக்கி வடகற் குன்றினையும்*
*பொற்குன் றாகப் பேதித்துப் போந்தோம் பூலோ கத்தினுக்கும்*
*வைத்தோங் குளிகை யதுநினக்கு வகுத்தோம் வறியோ நின்பாலே*
*வந்தோம் வருக நன்பாலுஞ் சோறு மெனவே மயங்கியிடுஞ்*
*சித்தோ நஞ்சித் துலகனைத்துஞ் சேவித் தேவற் றனைச்செய்யத்*
*தேவா திபனாய் மூவாது செம்பொற் புரிசை நடுவிருக்கு*
*மத்தா வுனக்குக் குளிர்பிண்டி யம்மா னாணை தருகின்றோ*
*மருந்து மருந்து மூன்றவையு மகத்தே காட்டித் தருவோமே.*

**பதப்பொருள்**. புத்தேளுலகை - தேவருலகை,. பொன்னுலகம் - பொன் உலகமாக. ஆக்கி - செய்து. வடகற்குன்றினையும் - வடக்கிருக்கும் கன்மலையையும். பொற்குன்றாக - பொன்மலையாக. பேதித்து - பேதப்படுத்தி. போந்தோம் - வந்தோம். பூலோகத்தினுக்கும் - மண்ணுலகத்திற்கும். வைத்தோம் - வைத்திருக்கின்றோம். குளிகை - இரசகுளிகையை. அது - அக்காரியத்தை. நினக்கு - உனக்கு. வகுத்தோம் - சொன்னோம். வறியோம் - வறுமையையுடையோம் நின்பாலே - உன்னிடத்தில். வந்தோம் - மனங்கொண்டு வந்தோம். வருக - உண்டாகுக நன் - நல்ல. பாலும்-பாலும். சோறுமெனவே - சோறுமென்று. மயங்கியிடும்-மயக்கமடையும். சித்தோம் - சித்தர்கள். நம் - நமது. சித்து - சித்துவித்தையை. உலகனைத்தும்-மூவுலகும். சேவித்து - வணங்கி. ஏவற்றனை - ஏவலை. செய்ய - பண்ண. தேவாதிபனாய் - தேவர்கணாதன் ஆகி. மூவாது - கெடாமல். செம்பொன் - செம்பொன்னாலாகிய. புரிசை மும்மதிலினுடைய. நடு - மத்தியில். இருக்கும் - வீற்றிருக்கின்ற. அத்தா - அப்பா. உனக்கு - நினக்கு. குளிர் - குளிர்ச்சி பொருந்திய. பிண்டி - அசோகினையுடைய. அம்மான் - அருகருடைய. ஆணை - ஆணைப்படி. தருகின்றோம் - கொடுக்கின்றோம். அருந்து - நீ புசி. மருந்து மூன்று-இரத்தினத்திரையமாகிய மும்மருந்தையும். அவையும் - அம்மருந்துகளையும். அகத்தே - உன்மனத்திலேதானே. காட்டித்தருவோம் - நாங்கள் காட்டிக் கொடுப்போம் என்றவாறு.

**பொழிப்புரை**: அப்பா! நாங்கள் தேவருலகைப் பொன்னுலகமாகச் செய்து வடக்கிருக்கும் கன்மலையையும் பொன்மலையாகப் பேதப்படுத்தி வந்தோம், மண்ணுலகத்திற்கும் இரசகுளிகையை வைத்திருக்கின்றோம். அக்காரியத்தை உனக்குச் சொன்னோம். வறுமையையுடையோம், உன்னிடத்தில் மனங்கொண்டு வந்தோம், நல்ல பாலுஞ்சோறும் உண்டாகுக வென்று மயக்கமடையும் சித்தர்களும் உலகனைத்தும் வணங்கி ஏவல்செய்யத், தேவர்கணாதனாகிச் செம்பொன்னாலாகிய மும்மதிலினுடைய மத்தியிற் கெடாமல் வீற்றிருக்கும் குளிர்ச்சி பொருந்திய அசோகினையுடைய

அருகனுடைய ஆணைப்படி நமது சித்துவித்தையை உனக்குக் கொடுக்கின்றோம். இரத்தினத்திரயமாகிய மும்மருந்தையும் நீபுசிக்கும் அம்மருந்துகளையும் உன் மனத்திலேதானே காட்டிக்கொடுக்கின்றோம் என்றவாறு

**வி-ரை** : இதனால் சித்துவித்தையால் பயனின்றென்பது கூறப்பட்டது. யாங்கள் - எழுவாய். மருந்தவையும் - செயப்படுபொருள். காட்டிததருவோம் - பயனிலை. இரசக்குளிகை- இரும்பைப் பொன்னாக்கும் மருந்து. மும்மதிலினினுடைய மத்தி - சமவசரணம் (அறவுரை மண்டபம்) இரத்தினத்திரயமாகிய மும்மருந்து - நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம்.

## *Cittu vittai*

### paṉṉirucīr āciriya viruttam

*puttē ḷulakaip poṉṉulaka mākki vaṭakaṟ kuṉṟiṉaiyum*
*poṟkuṉ ṟākap pētittup pōntōm pūlō kattiṉukkum*
*vaittōṅ kuḷikai yatuniṉakku vakuttōm vaṟiyō niṉpālē*
*vantōm varuka naṉpālum cōṟu meṉavē mayaṅkiyituñ*
*cittō nañcit tulakaṉaittuñ cēvit tēvaṟ ṟaṉaicceyyat*
*tēvā tipaṉāy mūvātu cempoṟ puricai naṭuvirukku*
*mattā vuṉakkuk kuḷirpiṇṭi yammā ṉāṇai tarukiṉṟō*
*maruntu maruntu mūṉṟavaiyu makattē kāṭṭit taruvōmē.*

Oh! Father,

We did transform the world of Tēvars into a golden world,

And changed the granite mountain in the north into a different mountain of gold

For the earthly world we provided the *iraca-kuḷikai*

And did tell you that,

Stricken are we with poverty and hath come to you of our own volition,

We do confer our alchemy to you

As ordered by Arukar worshipped by the world entire

And the dazed cittars who state 'Let there be milk, and rice'

'Arukar' who doth sit at the centre of *mummatil* made of sterling gold.

And who doth possess the *Acōka* tree cool.

We identify the *mummaruntu* known as *irattiṉattiraiyam*

Only in Thy mind.

## Explanatory notes

*Tevars* - Heavenly beings.
*iracakuḷikai* - The alchemic medicine for transmuting baser melals or substances into gold.
*mummatil* - Three ramparts of gold surrounding the camavacaranam
*mummaruntu* - Three medicines, known as Irattiṉatiraiyam are *narkāṭci* (good vision), nallaṟivu (good knowledge) and *nalloḻukkam* (good conduct).

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

57 *தருமத் திகிரிப் படையிற் புவனத் திரயந் தனையாள்வாய்*
*கருமக் கடலைச் சுவறக் கடையுங் கடவுட் கணநாதா*
*வொருமைப் படவுற் றுனபொற் கமலச் சரணத் துளம்வைக்கும்*
*பெருமைத் திருவைத் தரின்மற் றடிமைத் திறனிற் பிழையேனே.*

**பதப்பொருள்:** தருமம் - தருமமாகிய. திகிரிப்படையின் - சக்கராயுதத்தினால். புவனத்திரயந்தனை. மூன்று உலகத்தையும். ஆள்வாய் - ஆள்பவனே. கருமம் - வினையாகிய. கடலை - சமுத்திரத்தை. சுவற - வற்ற. கடையும் - கடைகின்ற. கடவுட்கணம்- முனிவர் கணங்களுக்கு. நாத - நாயகனே! ஒருமைப்பட - ஒன்றுபட. உற்று - பொருந்தி. உன- உன்னுடைய. பொன் - பொன்னாலாகிய. கமலம் - தாமரை மலர்போன்ற. சரணத்து - பாதங்களில். உளம் - மனத்தை. வைக்கும் - இருத்தும்படியான. பெருமை - பெருமையை உடைய. திருவை - செல்வத்தை. தரின் - கொடுத்தால். அடிமை - அடிமை செய்யும். திறனில் - முயற்சியினின்றும். பிழையேன்- நான் தப்பிப் போகேன் என்றவாறு.

**பொழிப்புரை** தருமமாகிய சக்கராயுதத்தினால் மூன்று உலகையும் ஆள்பவனே! வினையாகிய சமுத்திரத்தை வற்றக்கடைகின்ற முனிவர்கணங்களுக்கு நாயகனே! ஒன்று படப்பொருந்திய பொன்னாலாகிய தாமரை மலர் போன்ற உன்னுடைய பாதங்களில் மனத்தை இருத்தும் படியான பெருமையை உடைய செல்வத்தை நீ கொடுத்தால், அடிமை செய்யும் முயற்சியினின்று நான் தப்பிப் போகேன் என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகனுடைய அருள் பெற்றவர்க்கு குறைவின்றென்பது கூறப்பட்டது. நான்- எழுவாய். பிழையேன் - பயனிலை.

### aṟucīrk kaḻineṭil viruttam

*tarumat tikirip paṭaiyiṟ puvaṉat tirayan taṉaiyāḷvāy*
*karumak kaṭalaic cuvaṟak kaṭaiyuṅ kaṭavuṭ kaṇanātā*
*vorumaip paṭavuṟ ṟuṉapoṟ kamalac caraṇat tuḷamvaikkum*
*perumait tiruvait tariṉmaṟ ṟaṭimait tiraṉiṟ piḻaiyēṉē.*

Oh! Thou who ruleth worlds three with the weapon of *tarumacakkaram,*
Oh! Lord of the retinue of saints,
Who doth churn the ocean of *viṉai* to drain and dry
Of Thou grant me the glorious weal,
If settling my mind on Thy uniformly aligned feet,
Which doth resemble golden lotus
I shall never fail in my service as a slave to Thee.

## Explanatory note

*Tarumacakkaram* - The wheel of *Tarumam* or virtue.

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

58. *பிழைபிறங்க நீண்டநசை பெருகவந்து வாழ்ந்தவர்கள்*
*பிறகுநின்று வான்கவிகள் பிணையுமைந்தர் போன்றுமத*
*மழைசொரிந்து காய்ந்தகரி வரதுரங்க மேந்துபிடி*
*மணிதயங்கு பூண்டுகில்கள் வருகவென்று வேண்டலிலன்*
*விழைவமைந்த பூந்தொடையன் மிஞிறுபொங்க வார்ந்துதிசை*
*வெறிபரந்து தேன்றுவலை விரவுதென்றல் சூழ்ந்துவெயில்*
*குழைவடங்க ணான்றுபுடை யிருள்செறிந்து தூங்குகுளி*
*ரெழில்கொள்பிண்டி வேந்தநினை யெண்குணங்கள் வேண்டுவனே.*

**பதப்பொருள்**: பிழை - குற்றங்கள். பிறங்க - விளங்க நீண்ட - மிகுந்த நசை - ஆசையானது. பெருக - வளர. வந்து - பொருளை நாடி வந்து. வாழ்ந்தவர்கள்- வாழ்வடைந்தவர்களுடைய. பிறகு நின்று - பின்னேநின்று. வான் - மேலான. கவிகள் - பாட்டுகள் பிணையும்- பிணைகின்ற. மைந்தர் போன்று - புலவர்களைப்போல. மதம் - மதமாகிய. மழை - மழையை. சொரிந்து - பொழிந்து. காய்ந்த - கோபிக்கும் கரி - யானைகளும். வரம் - சிரேட்டமான. துரங்கம் - குதிரைகளும். ஏந்து - தரிக்கப்பட்டு பிடி - ஒரு பிடி கொண்ட. மணி - இரத்தினங்கள். தயங்கு- விளங்குகின்ற. பூண் - ஆபரணங்களும். துகில்கள் - வஸ்திரங்களும். வருகவென்று- உண்டாகவென்று. வேண்டல் - விரும்புதல் இலன் - ஒருகாலுஞ் செய்கின்றிலேன் விழைவ - கண்டோருக்கு விரும்பாததை. அமைந்து - கொடுக்கும் பூந்தொடையன் - பூமாலைகளிலே. மிஞிறு - வண்டுகள். பொங்க - மிகவும். ஆர்ந்து - பொருந்தப்பட்டு. திசை - திக்குகளில். வெறி - வாசனை. பரந்து - பரவப்பட்டு. தேன் - தேனினுடைய. துவலை - துளிகள். விரவு - கலந்த. தென்றல் - தென்றல்காற்று. சூழ்ந்து - சூழப்பட்டு. வெயில் - சூரியன் ஒளி போன்ற. குழை - தளிர்களும். வடங்கள் - மணிமாலைகளும். நான்று - தொங்கப்பட்டு. புடை - பக்கங்களில். இருள் - இருளானது. செறிந்து - நெருங்கப்பட்டு. தூங்குகுளிர் - குளிர்ச்சி

தங்கிய. எழில் - அழகை. கொள் - கொண்ட. பிண்டி - அசோக மரத்துக்கு வேந்த - நாதனே! நின் - உன்னிடத்தில். எண் குணங்கள் - எனக்குரிய எண் குணங்களையே. வேண்டுவனே - விரும்புதல் செய்கின்றேன் என்றவாறு.

**பொழிப்புரை.** கண்டோருக்கு விருப்பத்தைக் கொடுக்கும் பூமாலைகளிலே வண்டுகள் மிகவும் பொருந்தப்பட்டு, திக்குகளில் வாசனை பரவப்பட்டு, தேனினுடைய துளிகள் கலந்த தென்றல் காற்று சூழப்பட்டு,சூரியன் ஒளி போன்ற தளிர்களும் மணிமாலைகளும் தொங்கப்பட்டு, மேகங்களில் இருளானது நெருங்கப்பட்டு, குளிர்ச்சி தங்கிய அழகைக் கொண்ட அசோக மரத்துக்கு நாதனே! உன்னிடத்தில் எனக்குரிய எண்குணங்களையே விரும்புதல் செய்கின்றேன். இவ்வுலகத்தில் குற்றங்கள் விளங்கப் பேராசையானது பெருகப் பொருளை நாடி வந்து வாழ்வடைந்தவர்களுடைய பின்னே நின்று மேலான பாட்டுக்களைப் பிணைக்கின்ற புலவர்களைப் போல, மதமாகிய மழையைச் சொரிந்து கோபிக்கும் யானைகளும் சிரேட்டமான குதிரைகளும் தரிக்கப்பட்ட ஒரு பிடி கொண்ட மணிகள் விளங்குகின்ற ஆபரணங்களும், வஸ்திரங்களும் உண்டாகுகவென்று விரும்புதல் ஒரு காலத்திலும் செய்கின்றிலேன் என்றவாறு.

**வி-ரை** : இதனால் இகத்திலுண்டாஞ் சுகத்தில் வெறுப்பும், பரத்திலுண்டாஞ் சுகத்தில் விருப்புங் கூறுதல் போல, நித்தியமும் அநித்தியமுங் கூறப்பட்டன. யான்வேண்டல் - எழுவாய், இலேன்- பயனிலை, யான் - எழுவாய்; குணங்களை - செயப்படுபொருள்; வேண்டுவன் - பயனிலை; அமைத்தவென்பது அமைந்த வென மெலித்தல் விகாரம் ஆயிற்று.

சிரேட்டமான - சிறந்த; மேன்மையான வஸ்திரம் - ஆடை இகம் - இம்மைப்பிறப்பு. பரம் - மறுமை. நித்தியம் - அழியாதது. அநித்தியம் - நிலையற்றது; அழியக்கூடியது.

## *eṇcīrk kaḻineṭil viruttam*

*piḻaipiṟaṅka niṉṟanacai perukavantu vāḻntavarkaḷ*
*piṟakuniṉṟu vāṅkavikaḷ piṇaiyumaintar pōṉṟumata*
*maḻaicorintu kāyntakari varaturaṅka mēntupiṭi*
*maṇitayaṅku pūṇṭukilkaḷ varukaveṉṟu vēṇṭalilaṉ*
*viḻaivamainta pūntoṭaiyaṉ miñiṟupoṅka vārntuticai*
*veṟiparantu tēṉṟuvalai viravuteṉṟal cūḻntuveyil*
*kuḻaivaṭaṅka ṉāṉṟupuṭai yiruḷceṟintu tūṅkukuḷi*
*reḻilkoḷpiṇṭi vēntaniṉai yeṇkuṇaṅkaḷ vēṇṭuvaṉē.*

Oh! Lord royal of the *Acōka* tree of cool beauty,
Wherein bees are much aligned to the garlands
That evoke desire in those who see them,
Where fragrance spreads over directions (all),
Where breeze mingled with honeydrops doth surround,

Where tender leaves bright as sunlight and strings of gems are hung,
Where darkness closes in on the clouds
I shall never desire or entreat,
Rutting elephants in rage, winsome horses, garments or jewels made of a fistful of gems
Like the poets who stand behind and compose poems exalted,
On those who prospered in their pursuit of wealth,
Marked by increasing greed and obvious crime
I shall only desire the *enkuṇaṅkaḷ* (as a boon from Thee)

## Explanatory notes

This poem deplores the transitory pleasure of worldly wealth and exalts the eternal bliss and virtues.

*eṇkuṇaṅkaḷ* - The eight virtues. They are *kaṭaiyilā aṟivu* - endless knowledge, *kaṭaiyilāk kāṭchi* - endless vision, *kaṭaiyilā vīriyam* - endless vigour, *kaṭaiyilā Iṉpam* - endless pleasure, *nāmamiṉmai* - anonymity, kōttiramiṉmai - absence of sect, āyuḷiṉmai - negation of life, Aḻiyā viyaḻpu - imperishability.

### ஆசிரியத்துறை

59. வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனடி
பூண்டுகிடந்தாற் புறத்திறுத்த வெங்கூற்றம் போகும்போலும்
பூண்டு கிடந்தாற் புறத்திறுத்த பின்னரும்
மீண்டது போகுமெனில் வீரனடிபேணாது விடுவதென்னே.

**பதப்பொருள்**: வேண்டுதல் - விருப்பமும். வேண்டாமை - வெறுப்பும். இல்லாத - இயல்பாகவே இல்லாத. வீரன் - அனந்தவீரியனாகிய அருகனுடைய. அடி - பாதங்களை. பூண்டு - மனத்திற்கொண்டு கிடந்தால் - திரிகரணங்களையும் அடக்கி இருந்தால். புறதது - பக்கத்தில் வந்த. வெம் - வெப்பமான. கூற்றம் - வினையாகிய கூற்றமானது. போகும் போலும் - போகுமோ. பூண்டு கிடந்தால் - அப்படி அடங்கியிருந்தால். புறத்திறுத்த பின்னரும்- பக்கத்தில் வந்தபின்பும். மீண்டு - தானேதிரும்பி. அது - அவ்வினைக்கூற்றம். போகுமெனில் - போகுமேயானால். வீரன் - அருகன் உடைய. அடி - பாதங்களை. பேணாது- ஆதரியாமல். விடுவது - நீங்குவது. என் - என்ன காரணம் என்றவாறு.

**பொழிப்புரை**: விருப்பமும் வெறுப்பும் இயல்பாகவே இல்லாத அநந்த வீரியனாகிய அருகனுடைய பாதங்களை மனத்திற் கொண்டு திரிகரணங்கள்ளயும் அடக்கியிருந்தால் பக்கத்தில் வந்த வெப்பமான வினையாகிய கூற்றானது போகுமோ? அப்படி அடக்கியிருந்தால் பக்கத்திலே வந்த பின்பும் தானே திரும்பி அந்த வினைக் கூற்றம் போகுமேயானால், அருகனுடைய பாதங்களை ஆதரியாமல் நீக்குவது என்ன காரணம்? என்றவாறு.

**வி-ரை** : இதனால் எதிரே வந்த வினைத்துன்பங்களை நீக்குபவனே சுவாமியென்னு மித்தியா திருஷ்டிகளுடைய பேதமை பழிக்கப்பட்டது. விடுவது - எழுவாய். என் - பயனிலை திரிகரணங்களாவன:- மனோவந்தக்கரணம், வாக்கந்தக் கரணம், காயவந்தக்கரணம் (மனம், சொல், உடம்பு)

## *āciriyatturai*

*vēṇtutal vēṇṭāmai yillāta vīraṇati*
*pūṇṭukiṭantār purattiṟutta veṇkūṟṟam pōkumpōlum*
*pūṇṭu kiṭantār purattiṟutta piṉṉarum*
*mīṇṭatu pōkumeṉil vīraṉatipēṉātu viṭuvateṉṉē.*

If (we) harbour in our minds the feet of Arukar of endless vigour,
Who hath neither desire nor hatred
And keep under control the *tirikaraṇams*
Will the nearing *kūṟṟam* of hot *viṉai* go away?'
If thus the *kūṟṟam* of *viṉai* leaves after coming near,
On our controlling *tirikaraṇams* and accommodating Arukar's feet in our minds,
Why then should (one) avoid Arukar's feet in disfavour?

## Explanatory notes

*tirikaraṇams* - Three actions, *kūṟṟam* - The god of death. *viṉai* - *tēcakāti* and *carvakāti* ie spoiling to a certain extent and spoiling totally.

### கட்டளைக் கலித்துறை

60. விடுவது வெவ்வினை விட்டாற் பெறுவது வீடுவந்து
படுவது பேரின்ப வெள்ளமென் றாலென்றன் பாவிநெஞ்சங்
கெடுவது தான்றனக் காவதெண் ணாதுகெட் டேன் பரமன்
வடுவதில் லாநெறிச் செல்லா தொதுங்கு மனையகத்தே.

**பதப்பொருள்** : விடுவது - நம்மை விடடுப் போவது வெம் - வெப்பம் பொருந்திய, வினை - நல்வினை, தீவினைகளிரண்டும் விடடால - அவவினைகள நம்மை விட்டால், பெறுவது - நாம் பெற்றுக்கொளவது வீடு - முததியாம், வநது படுவது - அதனால் வந்து உண்டாவது பேரின்ப- பெரியவின்பமாகிய வெள்ளமென்றால் - சமுததிரமென்று சாதுக்களால் சொல்லப்பட்டால், என்- என்னுடைய பாவிநெஞ்சம் - பாவியாகிய மனமானது கெடுவதுந்தான் - தான் கெட்டுப்போவதும், தனக்காவதும் - தனக்காகுவதும் எண்ணாது - நினையாமல் கெட்டேன் - அய்யய்யோ! பரமன்- அருகபரமனுடைய வடுவதில்லா - குறறமில்லாத நெறி - மார்க்கத்தில் செல்லாது - நடவாமல் ஒதுங்கும - நடக்கின்றதும மனையகததே - இலலறத்திலேதானே என்றவாறு.

**பொழிப்புரை** : உலகத்திலே வெப்பம் பொருந்திய நல்வினை தீவினைகள் இரண்டும் நம்மை விட்டுப்போவது, அவ்வினைகள் நம்மை விட்டால் நாம் பெற்றுக்கொள்வது முத்தியாம். அதனால் வந்து உண்டாகுவது பெரிய இன்பமாகிய சமுத்திரமென்று சாதுக்களால் சொல்லப்பட்டால், என்னுடைய பாவியாகிய மனமானது தான் கெட்டுப்போவதும் தனக்காகுவதும் நினையாமல் அய்யய்யோ! அருகபரமனுடைய குற்றமில்லாத மார்க்கத்தில் நடவாமல் இல்லறத்திலேதானே நடக்கின்றது என்றவாறு

வி-ரை : இதனால் நெஞ்சைப் பழித்தல்போல மிததியாமார்க்கம் பழிக்கப்பட்டது. நெஞ்சம் - எழுவாய். ஒதுங்குவதும் - பயனிலை. மித்தியாமார்க்கம் - சைவம், வைணவம், இரணியகர்ப்பம், பிரமம், பௌத்தம், கபிலம், கணாதம் முதலிய சமயங்கள்.

## *kaṭṭalaik kalitturai*

*viṭuvatu vevviṉai viṭṭāṟ peṟuvatu viṭuvantu*
*paṭuvatu pēriṉpa veḷḷameṉ ṟāleṉṟaṉ pāvineñcaṅ*
*keṭuvatu tāṉṟaṉak kāvateṉ ṉātukeṭ ṭēṉparamaṉ*
*vaṭnvatil lāneṟic cellā totuṅku maṉaiyakattē.*

If the hot *viṉai* both leave us
What we attain is *mukti,*
Which doth cause an ocean of *pēriṉpam*
If this is what the *Cātus* assert,
Lo! My sinful mind not realising its debasement,
Or what is in store for itself,
Treads not the flawless path of Arukar
But walks instead in the way of *illaṟam.*

## Explanatory notes

*Viṉai* both : *nalviṉai* and *tīviṉai* - good and bad deeds. *pēriṉpam* - Heavenly bliss. *mukti* - liberation and eternal bliss. *Cātus* - saints. *illaṟam* - householder's life.

குறம்

பன்னிருசீர் ஆசிரியவிருத்தம்

61. மனைக்கு விளக்க மிகப்பெரி தின்னும் வருந்தல் பெருந்திருவே
வந்தொரு துன்ப மகன்ற தினித்துயர் வாரல நெஞ்சினுளே
நினைக்கிற தொன்றுள தத்திசை சொல்லுவ னித்திசை மேலதுகாண்
நிச்சய மேயது கூடும னங்களை நீறுப டுத்திகல்கூர்

*வினைப்பகை செற்றுடன் முற்றுமு ணர்ந்தற வாணையு லோகமெலாம்*
*விளங்க வளங்கெழு பூமிசை வந்தவ னெண்பெறு வெற்பினில்வாழ்*
*இனக்குற மக்களு ரைப்பன பொய்யல பொய்ப்பன புன்சமயத்*
*தேதிலர் தம்மொழி யிட்டு வினாவிடெ னைத்துமு ரைத்திடவே.*

**பதப்பொருள்**: மனைக்கு - வீட்டிற்கு. விளக்கம் - விருத்தியுண்டாகும். மிகப்பெரிது - மிகவும் அதிகமாக. இன்னும் - மேலும். வருந்தல் - நீ வருந்தல். பெரும் - பெருமையுடைய. திருவே - இலக்குமியே. வந்தொருதுன்பம் முன்னொரு துன்பம் வந்து. அகன்றது - நீங்கிற்று. இனித்துயர்- இனிமேல் துன்பங்கள். வாரல் - ஒருக்காலும் வாரா. நெஞ்சினுள் - உன் மனத்திலே. நினைக்கிறது- எண்ணுகிறது ஒன்றுளது - ஒன்றுண்டு அத்திசை - நினைக்கின்ற திசையை. சொல்லுவன் - சொல்லுகிறேன். இத்திசைமேலது - இப்பூமியின் கண்ணதே. காண் - நன்றாக வறி. நிச்சயமே - உண்மையாகவே. அது - அந்தநினைவு. கூடும் - கைகூடும் அனங்கனை - மன்மதனை. நீறுபடுத்த - நீறு செய்து. இகல்கூர் - வலிமிகுந்த. வினை - வினையாகிய பகை - சத்துருவை. செற்று - செயித்து. உடன் - ஒருதன்மையாக. முற்றும் - முழுவதும். உணர்ந்து - அறிந்து. அறம் - தருமமாகிய. ஆணை - ஆக்கினை உலோகமெல்லாம் - உலகமெல்லாம். விளங்க - பிரகாசிக்க. வளம் - வளப்பமானது. கெழு- பொருந்திய. பூமிசை - தாமரைப் பூமேல் வந்தவன் - வந்தவனாகிய அருகனுடைய. எண் - எண்ணிக்கை. பெறு - பெற்ற. வெற்பினில் - மலைகளில் வாழ் - வாழ்கின்ற. இனம் - கூட்டத்தையுடைய. குறமகள் - குறப்பெண்கள். உரைப்பன - சொல்லுவன. பொய்யல - பொய்ப்பனவல்ல. பொய்ப்பன - பொய்படுவனவாம். புன் - அற்பமாகிய. சமயத்து - சமயத்திலிருக்கும். ஏதிலர்தம் - அன்னியருடைய மொழி - வசனங்கள். இட்டு - சங்கையிட்டு. வினாவிடு - கேள். எனைத்தும் - எதன்மைப்பட்டதையும். உரைத்திட - நான்சொல்ல வென்றவாறு.

**பொழிப்புரை**: பெருமையை உடைய இலக்குமியே! மிகவும் அதிகமாக இவ்வீட்டிற்கு மேலும் விருத்தியுண்டாகும் நீ வருந்தேல், உன்மனத்தில் முன்னொரு துன்பம் வந்து நீங்கிற்று. இனிமேல் துன்பங்கள் ஒருகாலும் வாரா. நீ நினைக்கிறது ஒன்றுண்டு, நினைக்கிற திசையைச் சொல்லுகின்றேன், இப்பூமியின் கண்ணதே நன்றாக வறி, அந்த நினைவு உண்மையாகவே கைகூடும்; மன்மதனை நீறு செய்து வலிமிகுந்த வினையாகிய சத்துருவைச் செயித்து ஒரு தன்மையாக முழுவதும் அறிந்து தருமமாகிய ஆக்கினை உலகமெல்லாம் பிரகாசிக்கக வளப்பமானது பொருந்திய தாமரைப் பூமேல் வந்தவனாகிய, அருகனுடைய எண்ணிக்கை பெற்ற மலைகளில் வாழ்கின்ற கூட்டத்தையுடைய குறப்பெண்கள் சொல்லுவன பொய்ப்பன அல்ல, அற்பமாகிய சமயத்திலிருக்கும் அன்னியருடைய வசனங்கள் பொய்ப்படுவனவாம். ஆகையால் எத்தன்மைப்பட்டதையும் யான் உரைத்திட சங்கையிட்டுக்கேள், எத்தன்மைப்பட்டதையும் நான் சொல்ல வென்றவாறு.

**வி-ரை** : இதனால் மித்தியா மார்க்கம் பழிக்கப்பட்டது. நீ - எழுவாய் வினவிடு - பயனிலை. நன்றாகவறி - நன்றாகப்பார். சத்துரு - பகைவன். ஆக்கினை - கட்டளை. சங்கை - அச்சம்; அளவு; ஐயம்; மதிப்பு; வழக்கம். மித்தியாமார்க்கம் - சமணம் தவிர்த்த மற்ற சமயங்கள்.

## Kuṟam

### paṉṉirucīr āciriya viruttam

*maṉaikku viḷakka mikapperi tiṉṉum varuntal peruntiruvē*
*vantoru tuṉpa makaṉṟa tiṉittuyar vārala neñcinuḷē*
*niṉaikkiṟa toṉṟuḷa tatticai colluva ṉitticai mēlatukāṉ*
*niccaya mēyatu kūṭuma ṉaṅkaḷai.nīṟupa ṭuttikalkūr*
*viṉaippakai ceṟṟutaṉ muṟṟumu ṉarntaṟa vāṉaiyu lōkamelām*
*viḷaṅka vaḷaṅkaḷu pūmicai vantava ṉeṉpeṟu veṟpiṉilvāḻ*
*iṉakkuṟa makkaḷu raippaṉa poyyala poyppaṉa puṉcamayat*
*tētilar tammoḻi yiṭṭu viṉāviṭe ṉaittumu raittiṭavē.*

Oh! glorious Ilakkumi,
Do not grieve,
This abode will attain much more prosperity and flourish
In thy mind there was grief once earlier and left thereafter,
No further visitation of grief will be there hence,
There is but one thought in Thy mind,
State I shall that direction (of your thought)
Know that well and truly on this earth,
Your thought (desire) will be fulfilled for certain
The predictions (utterances) of the *kuṟa* girls
Who doth reside in the mountains numerous,
That are associated with Arukar,
Who did burn to ashes Maṉmataṉ and conquered thus
The enemy of *viṉai* strong.
To establish uniformly the rule of *aṟam* fully realized
And who did appear on the lotus fertile,
The predictions of such *kuṟa* girls will never be belied
Only the assertions of strangers who profess religions mean,
Will go wrong and prove false
Hence listen with reverence to whatever I state

## Explanatory notes

*Ilakkumi* - Lakshmi, the goddess of wealth. *Kuṟa* girls - gypsy girls who belong to a nomadic group called *Kuṟavar.* Maṉmataṉ - Kāmaṉ the god of love. *Aṟam* - virtue.

### காப்பியக் கலித்துறை

62. *உரந்திகழும் வல்லவன்றன் சிலையையிறுத் துயர்ஞான மகளைவேட்டு*
*வரந்திகழும் புகழ்ச்சோதி வளநாடு கைப்படுத்த வரதர்கண்டீர்*
*பரந்தியலுஞ் சுடர்மௌலிப் பல்லவரும் பண்ணவரும் விண்ணாடாளும்*
*புரந்தரருந் தொழவுறையும் பொன்னெயில்விட் டென்னிதய நண்ணினாரே.*

**பதப்பொருள்:** உரம் - வலியானது. திகழும் - விளங்குகின்ற வல்லவன்றன் - கரும்பு வில்லையுடைய மன்மதனது. சிலையை - தனுவை இறுத்து - ஒடித்து. உயர் - உயர்ந்த. ஞானம்- ஞானமாகிய. மகளை - கன்னிகையை. வேட்டு - கல்யாணம் பண்ணி. வரம் - மேன்மையானது. திகழும் - விளங்குகின்ற புகழ் - கீர்த்தியையுடைய சோதி - சோதி மயமான. வளம் - வளப்பத்தையுடைய. நாடு - முத்தி நாடடை. கைப்படுத்த - கைப்பற்றின. வரதர் - மேலானவர். பரந்து - பரவி. இயலும் - நடக்கின்ற. சுடர் - பிரகாசம் பொருந்திய.. மௌலி - கிரீடங்களையுடைய. பல்லவரும் - பல மன்னர்களும். பண்ணவரும் - முனிவர்களும். விண்ணாடு - கற்பங்களை. ஆளும் - ஆளுகின்ற. புரந்தரரும் - இந்திரர்களும். தொழ - வணங்க. உறையும் - வீற்றிருக்கும். பொன் - பொன்னாலாகிய. எயில் - மும்மதில் சூழ்ந்த சமவ சரணத்தை. விட்டு - விட்டு. என் - என்னுடைய. இதயம் - மனத்தை. நண்ணினார் - பொருந்தினவர் என்றவாறு

**பொழிப்புரை:** பரவி நடக்கின்ற பிரகாசம் பொருந்திய கிரீடங்களையுடைய பல மன்னவர்களும், முனிவர்களும் கற்பங்களை ஆளுகின்ற இந்திரர்களும் வணங்க வீற்றிருக்கும் பொன்னாலாகிய மும்மதில்சூழ்ந்த சமவசரணத்தை விட்டு என்னுடைய மனததைப் பொருந்தினவரானவர், வலி யானது விளங்குகின்ற கரும்பு வில்லையுடைய மன்மதனுடைய தனுவை ஒடித்து, உயர்ந்த ஞானமாகிய கன்னிகையைக் கல்யாணம் பண்ணி, மேன்மையானது விளங்குகின்ற கீர்த்தியை உடைய சோதிமயமான வளப்பத்தையுடைய முத்திநாட்டைக் கைப்பற்றின மேலானவர் என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகருடைய பெருமை கூறப்படடது நணணினார் - எழுவாய். வரதர்- பயனிலை. தனு - வில் சமவசரணம் - பூமியிலிருந்து ஐந்தாயிரம் வில் உயரத்திற்கு மேல் பன்னிரெண்டு யோசனை அளவுள்ளதாய்ச் சௌதருமேந்திராதி தேவர்களால் நிருமிக்கப்பட்ட ஜினாலயம். இதற்கு பூமியில் இருந்து இருபதினாயிரம் படிகள் உள்ளன என்பர். (ஒருவில் = 160 செ மீட்டர். ஒரு யோசனை = 10 மைல்)

### *kāppiyak kalittuṟai*

*urantikaḻum vallavaṉṟaṉ cilaiyaiyiṟut tuyarñāṉa makaḷaivēṭṭu*
*varantikaḻum pukaḻccōti vaḷanāṭu kaippaṭutta varatarkaṇṭīr*
*parantiyaluñ cuṭarmaulip pallavarum paṇṇavarum viṇṇāṭāḷum*
*purantararun toḻavuṟaiyum poṉṉeyilviṭ ṭeṉṉitaya naṇṇiṉārē.*

Behold *varatar* (the exalted one)
Who did snap the sugarcane bow of Maṉmataṉ the mighty,
And did wed the maiden of wisdom profound,
And captured besides the famed and luminous *mukti* land opulent
(Such a Lord)
Who is worshipped by kings who doth bestride with sparkling crowns,
Saints and *Intirars* who rule over the heaven
Did (condescend to) leave the *camavacaraṇam* surrounded by *mummatil*
And occupied my heart

## Explanatory notes

Varatar - The exalted Arukar. Maṉmataṉ - God of love. *camavacaraṇam* - a Jiṉālayam or a Jaina temple or hall erected by heavenly beings situated at a height of 5000 *vil* from the earth and with a dimension of 12 *yōcaṉai*. One has to climb 20000 steps from the earth to reach it. It is surrounded by *mummatil* or three ramparts.

One *vil* =160 cms. One *yōcaṉai* = 10 miles.

### காப்பியக் கலித்துறை

63. *நண்போ டன்பு நல்லருள் பேணி யுயிர்க்கெல்லாங்*
*கண்போல் வாழீர் கைதவ மொன்றும் விடுகில்லீர்*
*வண்போ தேறும் வாமனை நாளும் பணியீரிப்*
*புண்பே ரென்றுங் காப்பது நன்றோ புலவீரே.*

**பதப்பொருள்**: நண்போடு - சிநேகத்துடனே. அன்பும் - தயவையும். நல் - நல்ல. அருள் - கருணையையும். பேணி - காத்து. உயிர்க்கெல்லாம் - ஐவகைப்பட்ட எல்லா உயிர்க்கும். கண்போல்- கண்ணைப்போல். வாழீர் - வாழமாட்டீர்கள். கைதவமொன்றும் - எல்லா வஞ்சனைகளையும். விடுகில்லீர் - விடமாட்டீர்கள். வண் - வளப்பமான. போது - தாமரைப்பூவில். ஏறும் - இருந்து வாழ்கின்ற. வாமனை - அருகனை. நாளும் - எக்காலமும். பணியீர் - வணங்கமாட்டீர்கள். புண் - அற்பமாகிய. பேரென்றும் - இச்சொல்லைநீர். காப்பது - காப்பாற்றிக்கொள்ளுதல். நன்றோ - நன்மையோ. புலவீரே - அறிவுடையவரே என்றவாறு.

**பொழிப்புரை**: அறிவுடையவரே! நீங்கள் சிநேகத்துடனே தயவையும் நல்ல கருணையையுங் காத்து; ஐவகைப்பட்ட எல்லா உயிர்க்கும் கண்ணைப்போல் வாழமாட்டீர்கள்; எல்லா வஞ்சனைகளையும் விடமாட்டீர்கள்; வளப்பமான தாமரைப் பூவிலிருந்து வாழ்கின்ற அருகனை எக்காலமும் வணங்க மாட்டீர்கள்; அற்பமாகிய இச்சொல்லை நீர் காப்பாற்றிக் கொள்ளுதல் நன்மையோ என்றவாறு.

**வி-ரை :** இதனால் நன்னெறிக்கண் சேரும் உபாயம் கூறப்பட்டது. நீர்காப்பது - எழுவாய்; நன்றோ- பயனிலை. ஐவகைப்பட்ட உயிர்கள்:

1. ஓரறிவு உயிர் - நிலம், நீர், காற்று, நெருப்பு, புல், மரம் முதலியவற்றை உடலாக உடைய உயிர்கள்.
2. ஈரறிவு உயிர் - நந்து, சிப்பி, சங்கு முதலியன.
3. மூவறிவு உயிர் - எறும்பு, கரையான், தேள் முதலியன.
4. நாலறிவு உயிர் - அந்து, தும்பி, வண்டு முதலியன,
5. ஐயறிவு உயிர் - பறவை, விலங்கு, மனிதர் முதலியன.

## *kāppiyak kalitturai*

*nanpō tanpu nallaruḷ pēṇi yuyirkkellāṅ*
*kaṇpōl vāḻīr kaitava monṟum viṭukillīr*
*vanpō tērum vāmanai nāḷum paṇiyīrip*
*punpē renṟuṅ kāppatu nonṟō pulavīrē.*

Oh! the wise ones,
Thou wont live like eyes for the (fivefold) living beings all,
Providing friendship, mercy and grace
Thou won't abandon deceits any
Thou won't ever worship Arukar who doth reside in the fertile lotus
Is it good for you, to preserve this mean word (about you)

## Explanatory notes

The *uyirs* or living beings are fivefold ie. *ōrarivuyir* - living beings with one sense. *īrarivuyir* - living beings with two senses. *mūvarivuyir* - living beings with three senses. *nālarivuyir* - living beings with four senses. *aiyarivuyir* - living beings with five senses.

### எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

64. *புலவர் மொழிந்த மொழிகமழ் தொங்கல் பூநிரை கொண்டு தியானவாள்*
*வலவன் வலங்கொ ளடியின் வணங்கி வாழ்கென நெஞ்சு தாழுமே*
*லிலவ மலர்ந்த வணியித ழின்சொ லேழையர் செங்கண் வேல்கள்போற்*
*கொலவல வெங்கண் மறலி வளைந்த கோள்வலை யுய்ந்து போவனே.*

**பதப்பொருள்**: புலவர் - சாதுக்கள். பொழிந்த - உபதேசித்த. மொழி - பதங்களாகிய. கமழ்- பரிமளிக்கின்ற தொங்கல் - மாலையாகிய. பூநிரை - பூக்களின் வரிசையை கொண்டு- வாக்கிற் கொண்டு. தியானம் - சுக்கிலத்தியானமாகிய. வாள் - வாளைத்தரித்த. வல்லவன் -

வல்லவனுடைய. வலங்கொள் - வெற்றிகொண்ட. அடியின் - பாதங்களில். வணங்கி - தொழுது. வாழ்கென - வாழ்கவென்று. நெஞ்சு - மனமானது. தாழுமேல் - பொருந்தினால் இலவம் - இலவம்பூப்போல. மலர்ந்த - விரிந்த. அணி - அழகிய. இதழ் - அதரத்தையும். இன் - இனிமையான. சொல் - சொற்களையுமுடைய. ஏழையர் - மாதர்களுடைய. செம் - சிவந்த. கண் - கண்களாகிய. வேல்கள் - வேல்களைப் போல். கொல் - கொல்ல. வல் - வல்லமையுடைய. வெங்கண் - கொடுமைபொருந்திய. மறலி - காலன். வளைந்த - சூழக்கட்டிய. கோள் - குற்றமாகிய. வலை - வலையினின்றும். உய்ந்துபோவென் - யான் பிழைத்துப் போவேன் என்றவாறு.

**பொழிப்புரை:** சாதுக்கள் உபதேசித்த பதங்களாகிய பரிமளிக்கின்ற மாலையாகிய பூநிறையை வாக்கிற்கொண்டு சுக்கிலத்தியானமாகிய வாளைத்தரித்த வல்லவனுடைய வெற்றி கொண்ட பாதங்களில் வணங்கி வாழ்க வென்று மனமானது பொருந்தினால், இலவம்பூப்போல விரிந்த அழகிய அதரத்தையும் இனிமையான சொற்களையும் உடைய மாதர்களுடைய சிவந்த கண்களாகிய வேல்கள் போலக் கொல்ல வல்லமையுடைய கொடுமை பொருந்திய காலன் சூழக் கட்டிய குற்றமாகிய வலையினின்றும் யான் பிழைத்துப் போவேன் என்றவாறு.

**வி-ரை:** இதனால் அருகனை வணங்கினவரே கூற்றங் குதித்து உய்வார் என்பது கூறப்பட்டது. யான் - எழுவாய். உய்ந்து போவேன் - பயனிலை.

சுக்கிலத்தியானம் - நான்கு வகை தியானங்களில் இறுதியானதும் தலைசிறந்ததும் சுக்கிலத்தியானமாகும். இது முழுதும் ஆன்மனைப் பற்றிய சிந்தனையாகும். பிறவா நிலையினை எய்த இருக்கும் மாமுனிகள் இதனைக் கைக்கொள்வர். அவர்களுக்கே இது அமையும். அதரம்- உதடு; கீழுதடு. காலன் - எமன்.

## *e̲lucirk ka̲lineṭil viruttam*

*pulavar mo̲linta mo̲likama̲l toṅkal pūnirai koṇṭu tiyā̲navāḷ*
*valavan̲ valaṅko ḷaṭiyin̲ vaṇaṅki vā̲lken̲a neñcu tā̲lumē*
*lilava malarnta vaṇiyita li̲n̲co lē̲laiyar ceṅkan̲ vēlkaḷpō̲r*
*kolavala veṅkaṇ ma̲rali vaḷainta kōḷvalai yuyntu pōvan̲ē.*

If (my) mind aligns itself with the victorious feet,
In hailing worship of the Mighty One,
Who doth sport the sword of *cukkilattiyān̲am,*
(If my mind worships thus)
With strings of fragrant *patam* flowers,
Preached by scholars saintly,
I shall escape from the net of vice,
Spread around by Kālan̲ the cruel one,

Who can kill like the lances sharp,
That resemble the red eyes of women,
Whose words are sweet and lips are as beautiful
As the silk cotton flower unfolded

## Explanatory notes

*patam* - word or term.
*cukkilattiyāṉam* - The ultimate and highest form of meditation according to Jainism contemplating completely on the soul. Kālaṉ - The God of death.

### எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

65. போவார் போநெறி பலவா மந்நெறி போனா லவரொடு புகழ்வேண்டுந்
தாவா வுயர்கதி யொழியப் புகுவது தவிரா வெந்துயர் நரகாநின்
றேவா திங்ஙன முழல்வேன் மற்றுன தொருவா வறநெறி பெறநல்காய்
கோவா நிலவுமிழ் தரளக் குளிர்வட நிரைமுக் குடையமர் கோமானே.

**பதப்பொருள்:** போவார் - போகுமவர்கள். போம் - போகப்பட்ட. நெறி - மார்க்கங்கள். பலவாம்- அநேகமாகும். அந்நெறி - அந்த மார்க்கங்களில். போனால் - சென்றால். அவரோடு- அந்நெறிகளில் சென்றவருடனே. புகழ்வேண்டும் - மித்தியா தெய்வங்களைப் புகழ வேண்டும். தாவா - கெடாத. உயர் - உயர்ந்த. கதி - முத்தியானது. ஒழிய - நீங்க. புகுவது- இழிவான கதிகள் என்னை வந்தடைவது. தவிரா - நீங்காவாகும். வெந்துயர் - வெபபமாகிய துன்பத்தைத் தரும். நரகா - நரகுண்டாக. நின்று - அந்நெறிகளில் நின்று. ஓவாது - நீங்காமல். இங்ஙனம் - இப்படி. உழல்வேன் - உழல்பவனாகிய. மற்று - எனக்கு. உனது - உன்னுடைய. ஒருவா - நீங்காத. அறநெறி - நன்மார்க்கங்களை. பெற - யான் பெறும்படி. நல்காய் - நீ கொடுத்தருள்வாய். கோவா - கோவை செய்யாத. நிலவு - பிரகாசத்தை. உமிழ்- வீசாநின்ற. தரளம் - முத்துக்களின். குளிர் - குளிர்ந்த வடம் - சரங்களையுடைய. முக்குடை - முக்குடை நிழலில். அமர் - அமர்ந்த. கோமானே - அருகனே! என்றவாறு.

**பொழிப்புரை:** பிரகாசத்தை வீசாநின்ற கோவை செய்யாத குளிர்ந்த சரங்களினது பத்திகளையுடைய முக்குடை நிழலில் அமர்ந்த அருகனே! போகுமவர்கள் போகப்பட்ட மார்க்கங்கள் அனேகமாகும். அந்த மார்க்கங்களில் சென்றால் அந்நெறிகளில் சென்றவருடனே மித்தியா தெய்வங்களைப் புகழ வேண்டும். கெடாத உயர்ந்த முத்தியானது நீங்க இழிவான கதிகள் என்னை வந்தடைதல் நீங்காவாகும், வெப்பமாகிய துன்பத்தைத் தரும் நரகுண்டாக அந்நெறிக்கணின்று நீங்காமல் இப்படி உழல்பவனாகிய எனக்கு உன்னுடைய நீங்காத நன்மார்க்கங்களை யான் பெறும்படி நீ கொடுத்தருள்வாய் என்றவாறு.

**வி-ரை :** இதனால் மித்தியா மார்க்கங்களின் இழிவும் தனது குறையும் கூறப்பட்டன. நீ - எழுவாய். அறநெறி - செயப்படுபொருள். நல்காய் - பயனிலை. மார்க்கங்கள் - வழிகள்.

### *eḻucīrk kaḻineṭil viruttam*

*pōvar pōneṟi palavā maṉṉeṟi pōṉā lavaroṭu pukaḻvēṇṭun*
*tāvā vuyarkati yoḻiyap pukuvatu tavirā ventuyar narakāṉiṉ*
*ṟēvā tiṅṅaṉa muḻalvēṉ maṟṟuṉa toruvā vaṟaneṟi peṟanaḷkāy*
*kōvā nilavumiḻ taraḷak kuḷirvaṭa niraimuk kuṭaiyamar kōmāṉē.*

Oh! Lord Arukar,
Who doth sit in the shade of the three parasols,
That are adorned with rows of pearls unstringed, which doth emit lustre,
There are paths many (in this world)
For those who tread them
If I tread paths such along with them
I have to eulogize the *mittiyāteyvaṅkaḷ*
The flawless *mukti* exalted will leave me then
The *katis* deplorable will be my lot inevitable
I shall wallow in the hell of grief infernal
Pray confer me grace Thine.
To enable me attain Thy never-leaving paths virtuous

## Explanatory notes

*katis* - The stages of birth. *mukti* - The stage of liberation or eternal bliss.

### கைக்கிளை

### வெண்பா

66. *கோமான் குளிர்முக் குடையான்பொற் கோகனக*
*வாமான்றேர் மேலொருகால் வாரான்கொ - லேமாண்*
*சிலைக்கரும்பு நாணொலிக்குந் தேங்கோதை நல்லார்*
*முலைக்கரும்பு நோயுடையேன் முன்.*

**பதப்பொருள்:** கோமான் - அருகன். குளிர் - குளிர்ந்த முக்குடையான் - மூன்று குடையை உடையவன். பொன் - பொன்னாலாகிய. கோகனகம் - தாமரைப்பூவாகிய. வாவும் - தாவுகின்ற மான் - குதிரைகட்டிய. தேர்மேல் - தேரின் மீது. ஒருகால் - ஒருதரம். வாரான் -வாரானோ. கொலே - பூங்கணையினால் பிரயோகிக்கப்படும். மாண் - மாட்சிமை பொருந்திய. சிலைக்கரும்பு- கரும்பு வில்லிற் பூட்டும். நாண் - நாரியினுடைய. ஒலிக்கும் - ஓசைக்கும். தேம் - வாசனை

பொருந்திய. கோதை - மாலையினையுடைய. நல்லார் - மாதர்களுடைய. முலைக்கு - முலைக்காக. அரும்பும் - உண்டாகுகின்ற. நோய் - வியாதியை. உடையேன் - உடையனாகிய என்னுடைய. முன் - எதிரில் என்றவாறு.

**பொழிப்புரை:** கோமானுங் குளிர்ந்த மூன்று குடையையுடையனுமாகிய அருகனானவன், மன்மதனாலே பூங்கனையைப் பிரயோகிக்கப்படும் மாட்சிமை பொருந்திய கரும்பு வில்லிற் பூட்டும் நாரியினுடைய ஓசைக்கும், வாசனை பொருந்திய மாலையை உடைய மாதர்களுடைய முலைக்கு உண்டாகுகின்ற வியாதியை உடையனாகிய என்னுடைய எதிரில் பொன்னால் ஆகிய தாவுகின்ற குதிரை கட்டிய தாமரைப்பூவாகிய தேரின் மீது ஒருதரம் வாரானோ என்றவாறு.

**வி-ரை :** இதனால் தனது குறை கூறப்பட்டது. ஒலிக்கும் - வேற்றுமை மயக்கம் முக்குடையான் - எழுவாய் வாரான்கொல் - பயனிலை.

## *Kaikkiḷai*

## *veṇpā*

*kōmāṉ kuḷirmuk kuṭaiyāṉpoṟ kōkaṉaka*
*vāmāṉṟēr mēlorukāl vārāṉkō - lēmāṇ*
*cilaikkarumpu nāṇolikkun teṅkōtai nallār*
*mulaikkarumpu nōyuṭaiyēṉ muṉ.*

Won't Arukaṉ, the lord and possessor of parasols three,
Appear but once in the chariot of lotus
Harnessed with gallopping horses made of gold
Before me afflicted with the disease.
Of longing for the sound of the string of the sugarcane bow,
Made glorious by the flowery shafts shot from it by Maṉmataṉ,
And also for the breasts of women sporting garlands fragrant.

## Explanatory note

Maṉmataṉ - Kāmaṉ, the god of love.

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

67. *முன்னைப் பிறப்பெண்ணில் பல்கோடி யெல்லா*
*முயன்றின்று பெற்றேன் முதற்போதி யென்றே*
*பின்னைப் பிறந்துற்ற யானில்லை யென்னும்*
*பெரும்பித்த ரோபுத்த ராவார் தெளிந்தீர்*

*பொன்னிற் பிறக்குங் கலத்திற் சலத்திற்*
*பொங்குந் தரங்கிற் பெறும்பைக டோறுந்*
*தன்னிற் றிகழ்ந்தாவி நிற்குங்கொ லென்னுந்*
*தனிப்புத்தர் பாதங்கள் சாரீர் விரைந்தே.*

**பதப்பொருள்:** முன்னை - முன்னே. பிறப்பு - யான் பிறந்த பிறப்பினை. எண்ணில் - எண்ணுங்கால். பல்கோடி - பலகோடி சனனத்திலும். எல்லாம் - எல்லா வினைகளையும். முயன்று - செய்தனுபவித்து. இன்று - இப்பொழுது. பெற்றேன் - அடைந்தேனென்று சொல்லி. முதற் போதியென்றே - மதிஞானியென்னும் பெயரை. பின்னை - பின்பு. பிறந்து- உலகிற் பிறந்து. உற்ற- ஞானத்தை அடைந்த. யானில்லை - யானேயில்லை. என்னும் - என்றுசொல்லும். பெரும்- பெரிதாகிய. பித்தரோ - பித்தமுடையவரோ. புத்தராவார் - புத்தராவார்கள். தெளிந்தீர் - வேதமுணர்ந்தவர்களே! பொன்னில் - பொன்னினின்றும். பிறக்கும் - உண்டாகுகின்ற. கலத்தின்- ஆபரணங்களைப் போலவும். சலத்தில் - நீரினின்றும் பொங்கும் - எழுகின்ற. தரங்கின் - நீர்த்திரைகள் போலவும். பெறும் - எடுக்கின்ற. பைகடோறும் - தேகந்தோறும். தன்னில் - எடுத்த வெடுத்த தேகத்திலே. திகழ்ந்து - நிறைந்து. ஆவி - உயிர்; சீவனானது. நிற்கும் - இருக்கும். கொலென்னும் - என்று சொல்லும். தனி - ஒப்பற்ற. புத்தர் - புத்தியை உடைய அருகனது. பாதங்கள் - சரணங்களை. சாரீர் - நீங்கள் அடையுங்கள். வரைந்து - வீணாக நாட்போக்காமல் என்றவாறு.

**பொழிப்புரை:** முன்னே யான் பிறந்த பிறப்பினை எண்ணுங்கால் பலகோடி சனனத்திலும் எல்லா வினைகளையும் செய்து அனுபவித்து இப்பொழுது மதிஞானி யென்னும் பெயரை அடைந்தேனென்று சொல்லிப் பின்பு உலகிற் பிறந்து ஞானத்தையடைந்த நானே யில்லை யென்று சொல்லும் பெரிதாகிய பித்தமுடையவரோ புத்தராவார்கள்; வேதமுணர்ந்தவர்களே! பொன்னிலே உண்டாகின்ற ஆபரணங்களைப் போலவும். நீரிலே எழுகின்ற திரைகள் போலவும், எடுக்கின்ற தேகந்தோறும் எடுத்த, எடுத்த தேகத்திலே நிறைந்து, சீவனானது இருக்கும் என்று சொல்லும் ஒப்பற்ற புத்தியையுடைய அருகரது சரணங்களை நீங்களடையுங்கள் வீணாள் போக்காமல் என்றவாறு.

**வி-ரை :** இதனால் புத்ததெய்வம் பழிக்கப்பட்டது நீங்கள் - எழுவாய். பாதங்களை - செயப்படுபொருள். சாரீர் -பயனிலை.

திரை - அலை. மதிஞானம் - ஐம்பொறிகளின் வாயிலாக ஆன்மன் அறியும் அறிவு.

## eṇcirk kaḻineṭil viruttam

*muṉṉaip piṟappeṇṇil palkōti yellā*
*muyaṉṟiṉṟu peṟṟēṉ mutaṟpōti yeṉṟē*
*piṉṉaip piṟantuṟṟa yāṉillai yeṉṉum*
*perumpitta rōputta rāvār teḷintīr*
*poṉṉiṟ piṟakkuṅ kalattiṟ calattiṟ*
*poṅkun taraṅkiṟ peṟumpaika ṭōṟun*

*tannir rikalntāvi nirkunko lennun*
*tanipputtar pātankal cārir viraintē.*

Oh! discerning ones,
Will not those of rank insanity,
Who state first that in their previous births of billions innumerable,
They did experience the impact of their *vinai*
And attained the appellation of Buddha, the profoundly wise one
And then counterstate when born again,
That it was not the same self that was born earlier?
Hence, hurry and take refuge in the feet of Arukar of wisdom peerless,
Who did proclaim,
That life doth last and continue through births all,
And pervade the (human) body respectively,
Like the jewels made anew by melting gold,
And like the ebb and flow of the waves of the sea

## Explanatory notes

This poem deplores the Buddhist theory regarding births and reincarnation. *vinai* - good or bad deeds.

**எழுசீர்க் கழிநெடில் விருத்தம்**

*68. விரையார் மலர்மிசை வருவார் திருவறம்*
*விழைவார் கொலையினை விழையார்பொய்*
*யுரையார் களவினை யொழுகார் பிறர்மனை*
*யுவவார் மிகுபொரு ளுவவார்வெஞ்*
*சுரையா லுணர்வினை யழியா ரழிதசை*
*துவ்வார் விடமென வெவ்வாறும்*
*புரையார் நறவினை நுகரா ரிரவுணல்*
*புகழார் குரவரை யிகழாரே.*

**பதப்பொருள்:** விரை - வாசனையானது. ஆர் - பொருந்திய. மலர்மிசை - தாமரைப்பூமேல். வருவார் - வரும் அருகபரமனுடைய. திரு - அழகிய. அறம் - இல்லறதர்மத்தை. விழைவார்- விரும்புமவர். கொலை - சீவகாதையை. விழையார் - விரும்பார். பொய் - பொய்யினை. உரையார் - சொல்லார் களவினை - களவினிடத்தில். ஒழுகார் - நடவார். பிறர் -

அன்னியருடைய. மனை - இல்லாளை. உவவார் - விரும்பார். மிகுபொருள் - மிகுந்த பொருள்களை உவவார் - விரும்பார். வெம் - கொடுமையான. சுரையால் - கள்ளினாலே. உணர்வினை - தங்களறிவை. அழியார் - கெடுக்கார். அழி - அழிகின்ற. தசை - நிணத்தை. துவ்வார் - புசியார். விடமென - நஞ்சுபோல். எவ்வாறும் - எவ்விதத்தினாலும். புரையார் - குற்றம் பொருந்திய. நறவினை - தேனை. நுகரார் - புசியார். இரவு - இராத்திரியில். உணல்- உண்ணுதல் புகழார் - துதியார். குரவரை - பெரியோரை. இகழார் - நிந்தியார் என்றவாறு.

**பொழிப்புரை**: வாசனை பொருந்திய தாமரைப்பூமேல் வரும் அருகபரமனுடைய அழகிய இல்லற தருமத்தை விரும்புவார், சீவகாதையை விரும்பார் பொய்யினைச் சொல்லார், களவினிடத்தில் நடவார். அன்னியருடைய இல்லாளை விரும்பார். மிகுந்த பொருள்களை விரும்பார், கொடுமையான கள்ளினாலே தங்களறிவைக் கெடுக்கார். அழிகின்ற நிணத்தைப் புசியார், நஞ்சுபோல எவ்விதத்தினாலும் குற்றம் பொருந்திய தேனைப் புசியார். இராத்திரியில் உண்ணுதலைத் துதியார். பெரியோரை நிந்தியார் என்றவாறு

**வி-ரை** : இதனால் அருகசமயத்தோர் பெருமை கூறுமுகத்தான் மித்தியாமார்க்கத்தோர் செய்கை பழிக்கப்பட்டது. திருவறம் விழைவார் - எழுவாய்; கொலையினை - செயப்படுபொருள்; விழையார் (முதல்) - பயனிலை.

சீவகாதை - உயிர்க்கொலை. அன்னியருடைய இல்லாள் - அடுத்தவருடைய மனைவி. நிணம்- இறைச்சி, புலால். மித்தியா மார்க்கத்தார் - சமணம் தவிர்த்த பிற சமயத்தார்.

## *eḻucīrk kaḻineṭil viruttam*

*viraiyār malarmicai varuvār tiruvaṟam*
*viḻaivār kolaiyiṉai viḻaiyārpoy*
*yuraiyār kaḷaviṉai yoḻukār piṟarmaṉai*
*yuvavār mikuporu ḷuvavārveñ*
*curaiyā luṇarviṉai yaḻiyā raḻitacai*
*tuvvār viṭameṉa vevvāṟum*
*puraiyār naṟaviṉai nukarā riravuṇal*
*pukaḻār kuravarai yikaḻārē.*

Those who doth opt for *illaṟam* ordained by the *tiruvaṟam*
Of Arukar the prime Lord who arrives on the lotus
Will not desire slaughter (of living beings)
Will not utter falsehood
Will not steal,
Will not lust for others wives even in thoughts theirs,
Will not be voracious for wealth abundant,

Will not consume the evil alcohol which deranges kinds,
Will not eat meat which spoils well-being
Will avoid stale honey as poison.
Will not praise eating at night
And will never speak ill of elders.

## *Explanatory notes*

*illaram* - Householder's code of conduct. *tiruvaram* - The Supreme Jaina code of conduct.

### கலி விருத்தம்

*69. இகழ்வார்களை வெகுளாரிட ருழவார்பிற விகழார்*
*புகழ்வார்களை யருளார்மகிழ் புரியார்பிறர் மகிழார்*
*திகழ்வான்முடி மிசைவாழ்சின வரன்யானெனு நினைவி*
*னிகழ்வாரிரு திறமார்துற வரசாணிரு மலரே.*

**பதப்பொருள்**. இகழ்வார்களை - நிந்திப்பவர்களை. வெகுளார் - கோபியார் இடர் - துன்பம்வரினும் உழவார்- அதிலுழந்து கொள்ளார். பிற - அன்னியமானவைகளை. இகழார்- நித்தியார். புகழ்வார்களை - புகழ்பவரை. அருளார் - விரும்பார். மகிழ் - மகிழ்ச்சியை. புரியார்- செய்யார். பிறர் - அன்னிய சமயத்தாரை மகிழார் - இச்சியார் திகழ் - விளங்குகின்ற. வான் - கற்பத்தினுடைய. முடி -சிகரமான அகமிந்திர லோகத்தினுக்கு. மிசை- மேலிருக்கும் சித்த சேத்திரத்தில். வாழ் - வாழ்கின்ற. சினவரன் - சினேந்திரன். யான் - நானாகுவேன். எனும்- என்னும். நினைவின் - எண்ணத்துடனே. நிகழ்வார் - நன்னெறியின் நடப்பவராகிய. இருதிறம் - பாகியபரிக்கிரகம், அந்தரங்கபரிக்கிரகம் என்னும் இருவகைப் பற்றினையும். ஆர் - பொருத்தமான. துறவு - துறத்தலாகிய. அரசு - அரசாட்சியை. ஆள்- ஆள்கின்ற. நிருமலர் - துறவறத்தவர்கள் என்றவாறு

**பொழிப்புரை**. விளங்குகின்ற கற்பத்தினுடைய சிகரமான அகமிந்திரலோகத்தினுக்கு மேலிருக்கும் சித்த சேத்திரத்தில் வாழ்கின்ற சினேந்திரன் நானாகுவேன் என்னும் எண்ணத்துடனே நன்னெறியில் நடப்பவராகிய, பாகியா பரிக்கிரகம், அந்தரங்க பரிக்கிரகம் என்னும் இருவகைப் பற்றினையும் துறத்தலென்னும் பொருத்தமான அரசாட்சியை ஆள்கின்ற துறவறத்தவர்கள், தம்மை நிந்திப்பவரைக் கோபியார், துன்பம் வரினும் அதில் உழந்து கொள்ளார். அன்னியமானவைகளை நிந்தியார், புகழ்பவரை விரும்பார், மகிழ்ச்சியைச் செய்யார், அன்னிய சமயத்தாரை இச்சியார் என்றவாறு.

**வி-ரை** : இதனால் சினமுனிவர் பெருமை கூறுமுகத்தான் மித்தியா மார்க்க முனிவர் செய்கை பழிக்கப்பட்டது. நிருமலர் - எழுவாய்; இகழ்வார்களை முதலிய செயப்படுபொருள்; வெகுளார்- முதலிய - பயனிலை, கற்பம் - தேவர் உலகம். அகமிந்திரலோகம் - ஏழுவகை உலகங்களுள் ஆறாவது உலகமாகிய சித்தர்கள் வசிக்கும் உலகம். சித்தர்கள் - பிறவா நிலை எய்திய பெரியோர்கள்.

**பாகியா பரிக்கிரகம்:**

1. தனம் - பணம், பொன், வெள்ளி முதலியன
2. தான்யம் - நெல், கோதுமை, முதலிய தானியங்கள்
3. ஷேத்திரம் - நிலம், இடம் முதலியன.
4. வாஸ்த்து - வீடு முதலியன.
5. படுக்கை - கட்டில், மெத்தை போன்ற பொருட்கள்
6. வாகனம் - வண்டி, கார் போன்ற பொருட்கள்
7. குப்யம் - பட்டு முதலான விலையுயர்ந்த ஆடைகள்
8. பாண்டம் - குடம், தட்டு முதலான பாத்திரங்கள்
9. சதுஷ்பாதம் - பசு, எருமை, குதிரை போன்ற நான்கு கால்களை உடைய உயிரினங்கள்.
10. திவிபாதம் - வேலைக்காரன், வேலைக்காரி.

இந்த பத்து விதமான பொருட்களைத் தன் தேவைக்கு மேல் வைத்துக் கொள்ளாமல் முக்கியத் தேவைக்கு மட்டும் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். இதனை புறப்பற்று என்பர்.

**அந்தரங்க பரிக்கிரகம் :**

1 மித்யாத்வம் - உண்மையில்லாத தத்துவங்களில் விருப்பம்.
2. ஸ்திரிவேதம் - ஆண்களிடம் சிற்றின்பம் நுகரும் விருப்பம்.
3. புருஷவேதம் - பெண்களிடம் சிற்றின்பம் நுகரும் விருப்பம்
4. நபும்ஸகவேதம் - அலிகளிடம் இன்பம் நுகரும் விருப்பம்.
5. ஹாஸ்யை - பரிகாசம் செய்வதில் விருப்பம்.
6. ரதி - சில நுகர் பொருள்கள் மீது விருப்பு.
7. அரதி - சில நுகர்பொருள்கள் மீது வெறுப்பு.
8. சோகம் - துயரப்படுதல்,
9. பயம் - அச்சம் கொள்ளுதல்.
10. ஜுகுப்ஸை - அருவருப்பு கொள்ளல்
11. குரோதம் - கோபப்படுதல்.
12. மானம் - செருக்கு கொள்ளல்
13. மாயை - வஞ்சகம் கொள்ளல்
14. உலோபம் - கடும் பற்று கொள்ளல்

என அகப்பற்று பதினான்கு வகைப்படும்.

## *kaliviruttam*

*ikaḻvārkaḷai vekuḷārita ruḷavārpiṟa vikaḷār*
*pukaḻvārkaḷai yaruḷārmakiḻ piriyārpiṟar makiḻār*
*tikaḻvāṉmuṭi micaivāḻciṉa varanyāṉeṉu niṉaivi*
*ṉikaḷvāriru tiṟamārtuṟa varacāṉiru malarē.*

The flawless ascetics, who tread the virtuous path,
And think of themselves as the Ciṉēntiraṉ,
Of the *cittalōkam* above *akamintiralōkam*
And hold appropriate reign by renouncing bonds both internal and external
Will not be angry towards those who slander them,
Will not grieve over adversity,
Will not rebuke strangers any,
Will not happily approve flatterers
Will not cause pleasure
And will not desire the followers of other religions

## *Explanatory notes*

Ciṉēntiraṉ - a Jaina saint or *Cittar.* *Cittalokam* - The world of *cittars* or ascetics noted for their renunciation, miraculous powers and self-control. *Akamintiralōkam* - the world of *Intirars* or heavenly beings. The external and internal bonds are known as *Pākiyā parikkirakam* and *Antaraṅkaparikirakam* respectively.

***Pakiyāparkkirakam*** - External bonds or *puṟappaṟṟu*

| | | | |
|---|---|---|---|
| 1. | *taṉam* | - | Money, Gold, Silver etc |
| 2. | *tāṉyam* | - | Paddy, Wheat and such foodgrains |
| 3. | *kṣēttiram* | - | Land, site etc |
| 4. | *vāsttu* | - | House etc. |
| 5. | *paṭukkai* | - | Cot, mattresses |
| 6. | *vākaṉam* | - | Vehicles |
| 7. | *kupyam* | - | Costly silk and other garments |
| 8. | *pāṉṭam* | - | Vessels like pots and plates |
| 9. | *catuṣpātam* | - | Quadruped animals like cows, horses and buffaloes |
| 10. | *tivipātam* | - | Menial servants who are bipeds. |

***Antaraṅkaparikiṛakam*** - Internal Bonds or *Akappaṟṟu*

| | | | |
|---|---|---|---|
| 1. | *mityātvam* | - | eagerness to pursue spurious concepts |
| 2. | *stirīvētam* | - | desire for sexual intercourse with men |
| 3. | *puruṣavētam* | - | desire for sexual intercourse with women |
| 4. | *napumsaka vētam* | - | desire for having sex with eunuchs |
| 5. | *hāsyai* | - | inclination to deride others |
| 6. | *rati* | - | desire for some consumer goods. |
| 7. | *arati* | - | hatred towards some consumer objects |
| 8. | *cōkam* | - | feeling sorrowful or depressed |
| 9. | *payam* | - | Fear |
| 10. | *jukupsai* | - | Feeling of disgust |
| 11. | *kurōtam* | - | Becoming angry |
| 12. | *māṉam* | - | Haughtiness |
| 13. | *māyai* | - | Deceit |
| 14. | *ulōpam* | - | Excessive or acute desire. |

**வெண்கலிப்பா**

70. *மலர்தலை மணிவிசும்பின் வண்டார்ப்பப் பூத்திலங்கு*
*மிலகிதழா யிரத்தெட்டி னெழில்கொண்ட மலரின்மிசை*
*அலகையில் வினைதெறூஉ மடலாழி முன்னடப்ப*
*வுலகமடிப் படுத்தாய்க்கென் னுள்ளமடிப் படாதாக*
*விலையமிழ் பெருஞ்செல்வ மிரந்தோர்க்கு வரையாத*
*தலைவநின் றலைவண்மைக் கென்னிரவு தகாதாகக்*
*கொலையின்றி யுலகாளுங் குடைவேந்த நின்குடைக்கீ*
*ழலைவென்க ணுறநின்ற வறச்செங்கோல் சேய்த்தாமோ*
*வாதலி, னெகிழ்தக்க தாக்கியென் நெஞ்சத் துவந்தீ*
*நகுதக்கார் நெஞ்ச நடுக்கிவெங் கூற்றம்*
*புகுதப் பொறிகலங்கும் போது.*

**பதப்பொருள்:** மலர் - பரந்த. தலை - இடத்தையுடைய. மணி - அழகிய. விசும்பின் - ஆகாயத்தில். வண்டு - சுரும்புகள். ஆர்ப்ப - இசைபாட. பூத்து - மலர்ந்து. இலங்குமிலகு- மிகவும் விளங்குகின்ற. இதழாயிரத்தெட்டின் - ஆயிரத்தெட்டிதழினாலே. எழில் - அழகை. கொள்- கொண்ட. மலர்மிசை - தாமரைப் பூமேல். அலகையில் - அளவில்லாத. வினை- வினைகளை. தெறூஉம் - கெடுக்கும். அடல் - வெற்றியையுடைய. ஆழி - தருமச்சக்கரம். முன்னடப்ப - முன்னே நடக்க. உலகம் - மூவுலகத்தாரையும். அடிப்படுத்தாய்க்கு - வணங்கப் பண்ணினவுனக்கு. என் - எனது. உள்ளம் - மனமானது. அடிப்படாதாக - வணங்காதிருக்கினும். இலையமிழ் -

கேடில்லாத பெரும் - மிகுந்த. செல்வம் - செல்வத்தை. இரந்தோர்க்கு - யாசித்தவர்க்கு. வரையாத - நீங்காத. தலைவ - நாயகனே. நின் - உன்னுடைய. தலை - தலைமையான வண்மை - உதாரத்துவத்துக்கு. என் - என்னுடைய. இரவு - இரப்பு. தகாதாக - தகாததாயிருக்கினும். கொலையின்றி - கொலையில்லாமல். உலகு- உலகத்தை. ஆளும் - ஆளுகின்ற. குடை - முக்குடையை உடைய. வேந்தர் - நாதனே நின் - உனது. குடைக்கீழ் - குடைநிழற்கீழ். அலைவு - வருத்தம். என்கண் - என்னிடத்தில். உற - பொருந்த நின்ற - நின்றன. அறம் - தருமமாகிய. செங்கோல் - ஆக்கினையானது. சேய்த்தாமோ - தூரமாமோ. ஆதலின் - ஆகையால். நெகிழ்தக்கது - நெகிழத்தக்கதாக. ஆக்கி- செய்து. என் - எனது. நெஞ்சத்து - மனத்தில். உவந்து - விரும்பியிருந்து. ஈ - நானிரப்பதை நீ கொடு. நகுதக்கார் - நகைக்கத்தக்கவருடைய. நெஞ்சம் - மனத்தை. நடுங்கி- நடுங்கப்பண்ணி வெம் - கொடுமையான. கூற்றம் - காலன். புகுத - வர. பொறி - ஐம்பொறிகளும். கலங்கும்போது - கலங்குகின்ற காலத்தில் என்றவாறு.

**பொழிப்புரை**: பரந்த இடத்தையுடைய அழகிய ஆகாயத்தில் அளவில்லாத வினைகளைக் கெடுக்கும் வெற்றியையுடைய தருமச்சக்கரம் முன்னே நடக்க, சுரும்புகள் இசைபாட மலர்ந்து, மிகவும் விளங்குகின்ற ஆயிரத்தெட்டிதழினாலே அழகைக் கொண்ட தாமரைப் பூமேல் நடந்து, மூவுலகத்தாரையும் வணங்கப் பண்ணின நாயகனே! உனக்கு எனது மனமானது வணங்காதிருக்கினும், கேடில்லாத பெரும் செல்வத்தை யாசித்தவருக்கு நீங்காத உன்னுடைய தலைமையான உதாரத்துவத்துக்கு என்னுடைய இரப்புத் தகாததாயிருக்கினும், கொலையில்லாமல் உலகத்தை ஆளுகின்ற முக்குடையை உடைய நாதனே! உனது குடைநிழற்கீழ் வருத்தம் என்னிடத்திற் பொருந்தி நின்றன, உன்னுடைய தருமமாகிய ஆக்கினையானது தூரமாகுமோ? ஆகையால் என் நெஞ்சத்தை நெகிழத்தக்கதாகச் செய்து, எனது மனத்திலும் வந்திருந்து, நகைக்கத்தக்கவர்களுடைய மனத்தை நடுங்கப்பண்ணி கொடுமையை உடைய காலன், ஐம்பொறிகளும் கலங்க வரும்போது நான் இரப்பதை நீ கொடு என்றவாறு

**வி-ரை** : இதனால் தன்னுடைய பேதமையும் அருகருடைய அருளுடைமையுங் கூறப்பட்டன. நீ - எழுவாய். இரப்ப - செயப்படுபொருள். ஈ - பயனிலை.

காலன் - எமன். ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

## *veṇkalippā*

*malartalai maṇivicumpiṉ vaṇṭārppap pūttilaṅku*
*milakitaḻā yirattetti ṉeḻilkoṇta malariṉmicai*
*alakaiyil viṉaiteṟūu maṭalāḻi muṉṉaṭappa*
*vulakamaṭip paṭuttāykkeṉ ṉuḷḷamaṭip paṭātāka*
*vilaiyamiḻ peruñcelva mirantōrkku varaiyāta*
*talaivaniṉ ṟalaivaṇmaik keṉṉiravu takātākak*
*kolaiyiṉṟi yulakāḷuṅ kuṭaivēnta niṉkuṭaikkī*
*ḻalaiveṉka ṇuṟaniṉṟa vaṟacceṅkōl cēyttāmō*
*vātali, ṉekiḻtakka tākkiyeṉ neñcat tuvantī*

*nakutakkār neñca naṭukkiveṅ kūṟṟam*
*pukutap poṟikalaṅkum pōtu.*

Oh! Lord who hath made the inhabitants of worlds three
Worship Thee,
By walking on the lotus beautified with petals a thousand and eight blossomed,
With the *viṉai* defeating and victorious *tarumaccakkaram* rolling ahead,
And the bees humming in harmonious music
Though my mind does not worship Thee
Thou confer wealth flawless and prefect on those who beg it of you.
Oh! King with three parasols who doth rule the world sans killing,
Even if what I beg is beneath Thy (dignified) generosity,
Will Thy edict of *aṟam* be far away
To make me suffer with grief under the shelter of Thy parasol?
Hence when Kālaṉ the cruel who makes the minds of deplorable ones tremble,
Arrives and the senses five falter,
Do please melt my mind,
And grant me what I beg of you

## Explanatory notes

*Viṉai* - *tēcakāti* and *carvakāti* - somewhat bad deeds and totally bad deeds. *tarumaccakkaram* - The wheel of virtue, a weapon of Arukar. *Aṟam* - code of conduct. Kālaṉ - God of death.

**வண்டுவிடுதூது**

**எண்சீர்க் கழிநெடில் விருத்தம்**

71. *பொறிவரிய வண்டினங்கா ளுமக்கு மாமென்*
*பொருந்தியவெந் துயர்நோய்க்கு மருந்து மாகுஞ்*
*செறிவரிய வுமைத்தொழுதேன் வினைய கற்றுஞ்*
*செம்பொனெயி லகங்குறுகித் தேன்யாழ் செய்யும்*
*வெறிகமழு மலர்மாரி யூடு போகி*
*வீசுசா மரைவெள்ளங் கடந்து புக்கென்*

*னறிவர்மா மணியரங்கின் மீது தொங்கு*
*மலர்த்தாம வாசங்கொண் டணைகு வீரே.*

**பதப்பொருள்**: பொறி - புள்ளிகளுடனே. வரிய - வரிகளையுடைய. வண்டினங்கள் - வண்டுக்கூட்டங்களே! உமக்கு - உங்களுக்கு. ஆம் - ஆகும். என் - என்னை. பொருந்திய- சேர்ந்த. வெம் - கொடுமையான. துயர் - துன்பம் செய்யும். நோய்க்கும் - வியாதிக்கும். மருந்தும் - அவிழ்தமும். ஆகும் - ஆம். செறிவரிய - நெருங்குவதற்கரிய உமை - உங்களை. தொழுதேன் - வணங்கினேன். வினை - வினைகளை. அகற்றும் - கெடுக்கும். செம் - சிவந்த. பொன் - பொன்னாலாகிய. எயில் - மும்மதில்சூழ்ந்த. அகம் - சமவசரணத்தை. குறுகி - நீங்களடைந்து. தேன் - வண்டுகள். யாழ் - வீணையின் பாடல்போல். செய்யும் - பாடுதலைச் செய்யும். வெறி - வாசனை. கமழும் - வீசாநின்ற. மலர் - தேவர்கள் சொரியும் பூக்களாகிய. மாரியூடு - மழைக்குள்ளே. போகி - புகுந்துபோகி. வீசு - இந்திரர்கள் வீசுகின்ற. சாமரைவெள்ளம் - சாமரைக்கூட்டங்களை கடந்து - தாண்டி. புக்கு - அப்புறம்போய். என் - என்னுடைய. அறிவர் - சுவாமியாகிய அருகனுடைய. மா - பெருமை பொருந்திய. மணி - அழகிய. அரங்கில் - சபையிலே. மீது - மேலே. தொங்கும் - தொங்குகின்ற, அலர்தாமம் - பூமாலையினுடைய. வாசம் - வாசனையை. கொண்டு - வாங்கிக்கொண்டு. அணைகுவீர் - இவ்விடத்தைச் சேருங்கள் என்றவாறு.

**பொழிப்புரை**: புள்ளிகளுடன் வரிகளையுடைய வண்டுக்கூட்டங்களே! உங்களுக்குமாகும், என்னை சேர்ந்த கொடுமையான துன்பஞ்செய்யும் வியாதிக்கும் அவிழ்தமாகும். ஆகையால் நெருங்குதற்கரிய உங்களை வணங்குகின்றேன். நீங்கள் சிவந்த பொன்னாலாகிய மும்மதில் சூழ்ந்த வினைகளைக் கெடுக்கும் சமவசரணத்தை அடைந்து, வண்டுகள் வீணையின் பாடல் போலப் பாடுதலைச் செய்யும் வாசனை வீசாநின்ற தேவர்கள் சொரியும் பூக்களாகிய மழைக்குள்ளே புகுந்து போகி, இந்திரர்கள் வீசுகின்ற சாமரைக் கூட்டங்களைக் கடந்து அப்புறம் போய் என்னுடைய சுவாமியாகிய அருகருடைய பெருமை பொருந்திய அழகிய சபையின் நடுவே, மேலே தொங்குகின்ற பூமாலையினுடைய வாசனையை வாங்கிக்கொண்டு இவ்விடத்தைச் சேருங்கள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகருடைய சிறப்பு கூறப்பட்டது. நீங்கள் - எழுவாய், இவ்விடத்தை- செயப்படுபொருள்; அணைகுவீர் - பயனிலை.

சமவசரணம் - இது பூமியில் இருந்து ஐந்தாயிரம் வில் உயரத்திற்கு மேல் பன்னிரெண்டு யோசனை அளவுள்ளதாய்ச் சௌதர்மேந்திராதி தேவர்களால் நிருமிக்கப்பட்ட ஜினாலயம். இதற்குப் பூமியில் இருந்து இருபதினாயிரம் படிகள் உள்ளன என்பார்.

## Vaṇṭuviṭu tūtu
## eṇcīrk kaḻineṭil viruttam

*poṟivariya vaṇṭiṉaṅkā ḷumakku māmeṉ*
*poruntiyaven tuyarnōykku maruntu mākuñ*
*ceṟivariya vumaittoḻutēṉ viṉaiya kaṟṟuñ*
*cempoṉeyi lakaṅkuṟukit tēṉyāl ceyyum*

*veṟikamaḻu malarmāri yūṭu pōki*
*vīcucā maraivel̤l̤aṅ kaṭantu pukkeṉ*
*ṉaṟivarmā maṇiyaraṅkiṉ mītu toṅku*
*malarttāma vācaṅkoṇ ṭaṇaiku vīrē.*

Oh! swarms of bees spotted and striped as well,
I do worship you who are rare of access (or proximity)
Go Thou to the *camavacaraṇam* surrounded by the *mummatil* made of sterling gold,
Pass through the shower of fragrant flowers poured by *Tēvars,*
Go beyond the bunches of *cāmarams* waved by Intirars
To the glorious and beautiful hall of Arukar,
Collect the fragrance of the Lotus garland that hangs therein,
And bring it here.
It will be a remedy for the cruel disease that afflicts me
And it will also do you good

## Explanatory notes

*mummatil* - The three ramparts. *camavacaraṇam* - The *Jinālayam* or a hall of spiritual discourse, erected at a height of 5000 *vils* from the earth by *Tēvars* (heavenly beings). *cāmaram* - Beautifully designed fans shaped like flyflappers and made of the hair or fur of animal. Intirars - *Tēvars* or heavenly beings.

**கலி விருத்தம்**

72. *அணையோ மினியா டகநாண் மலர்மே*
*லிணையோ தரியார் தமரே சுவர்காண்*
*பிணையோ பெருநீ லமலர்ந் தனவோ*
*கணையோ வெனநின் றவர்கா தலையே.*

**பதப்பொருள்:** அணையோம் - சேரோம். இனி - இனிமேல். ஆடகம் - பொன்னாலாகிய. நாள்- அன்றலர்ந்த. மலர்மேல் - தாமரைப்பூமேல். இணை - ஒப்பு. ஓதரியார் - சொல்லுதற்கு அரியரான அருகபரமனுடைய. தமர் - அடியார்களை. ஏசுவர் - நிந்திப்பார்கள் ஆகையால். கண் - கண்ணானது. பிணையோ - மானோ. பெரு - பெரிதாகிய. நீலம் - கருங்குவளை. மலர்ந்தனவோ - பூத்தனவோ. கணையோ - பாணமோ. என - என்று சொல்ல. நின்றவர் - நின்ற மாதர்களுடைய. காதலை - ஆசையை என்றவாறு.

**பொழிப்புரை**: மானோ! பெரிதாகிய கருங்குவளை மலர்ந்தனவோ? பாணமோ? கண்ணானதென்று சொல்ல நின்ற மாதர்களுடைய ஆசையைப் பொன்னாலாகிய அன்றலர்ந்த தாமரைப் பூவின் மேல் இருக்கின்ற ஒப்புச் சொல்லுவதற்கு அரியரான அருகபரமனுடைய அடியார்கள் நிந்திப்பார்கள் ஆகையால் இனிமேல் நாங்கள் சேரோம் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அடியார்கள் சிறப்பு கூறப்பட்டது. நாங்கள் - எழுவாய். காதலை- செயப்படுபொருள். அணையோம் - பயனிலை.

### *kaliviruttam*

*aṇaiyō miṉiyā ṭakanāṉ malarmē*
*liṉaiyō tariyār tamarē cuvarkāṇ*
*piṉaiyō peruní lamarn taṉavō*
*kaṇaiyō veṉanin ṟavarkā talaiyē.*

The (ardent) devotees of Arukar the incomparable
Who doth rest on the golden lotus just blossomed,
Will rebuke the desire for women,
Whose eyes make one wonder,
Whether they are (like) the deer or the blossomed *kuvaḷai* flowers blue,
Or the arrow sharp
Hence never will we entertain such desire

## Explanatory note

*kuvaḷai* - dark blue flower.

மறம்

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

73. *காதுசிலை வல்லமைக ளெம்மையவர் பண்டே*
*கண்டறிவர் தங்கள்வலி கொண்டுமக ளெண்ணார்*
*கோதிலரு கன்றிரு வறத்தவர்க ளேடா*
*குலங்கெடவு மாடுவர்க ளோவுறவு கூறுஞ்*
*சாதிகுல மென்றிவை யிரண்டுமல பேசுஞ்*
*சத்தமல தென்னுமொரு புத்தனுரை கொண்டோ*
*வேதியர்க ணீதிகெட வோதுமறை கொண்டோ*
*வெற்றிமுடி மன்னனிது சொற்றதுரை யாயே.*

**பதப்பொருள்**: காது - மோதுகின்ற. சிலை - தனுசில் வல்லமைகள்-. வல்லமைத்தொழில்களை. எம்மை - எங்களுடைய. அவர் - அந்த அரசகுலத்தோர்கள். பண்டே- முன்னாலே. கண்டறிவர்- பார்த்திருப்பார்கள். தங்கள் - தங்களுடைய. வலிகொண்டு - பலத்தைக்கொண்டு. மகள் - எங்கள் பெண்ணை. எண்ணால் - எண்ணத்தினால். கோதில் - குற்றமில்லாத. அருகன் - அருகபரமனுடைய. திரு - அழகிய. அறத்தவர்கள் - தருமத்தையுடையவர்கள். ஏடா - தோழனே! குலம் - சினசமயம். கெடவும் - மாறுபட. ஆடுவார்களோ - செய்வார்களோ. உறவு- உறவை. கூறும் - சொல்லப்பட்ட. சாதி - பிறப்பினாலாவது சாதியென்றும். குலமென்றும் - வமிச பரம்பரையிலாவது குலமென்றும் சொல்வதாகிய. இவை இரண்டும்- இவ்விரண்டும். அல- வேறல்ல. பேசும் - சொல்லப்படும். சத்தமலது - சொல்லேயல்லாமல். என்னும் - என்று சொல்லும் ஒரு புத்தன் - ஒரு புத்தனுடைய. உரை கொண்டே - சொல்லைக் கொண்டே. வேதியர்கள் - பிராமணர்கள். நீதிகெட - நீதிஅழிய ஓதும் - சொல்லப்படும். மறை கொண்டோ - வேதத்தைக் கொண்டோ. வெற்றி - செயம் பொருந்திய. முடி - மகுடந் தரித்த. மன்னன் - அரசன் இது - இப்பெண் காரியம். சொற்றது- சொன்னதும். உரையாய் - சொல்லாய் என்றவாறு.

**பொழிப்புரை**: தோழனே! அந்த அரச குலத்தோர்கள் முன்னமே மோதுகின்ற தனுசில் எங்களுடைய வல்லமைத் தொழில்களைப் பார்த்திருப்பார்கள். அப்படியிருக்கத் தாங்கள் பலத்தைக் கொண்டு எங்கள் பெண்ணை செயம்பொருந்திய மகுடந்தரித்த அரசன் இப்போது பெண் காரியத்தை எண்ணத்தினால் கருதிச் சொன்னது யாதோ? அது குற்றமில்லாத அருகபரமனுடைய அழகிய தருமத்தை உடையவர்கள் சினசமயம் மாறுபட உறவைச் செய்வார்களோ? ஆனால் சொல்லப்பட்ட பிறப்பினாகுவது சாதியென்னும், வமிச பரம்பரையாலாவது, குலமென்றுஞ் சொல்வதாகிய இவ்விரண்டும் சொல்லப்படும் சொல்லேயல்லாமல் வேறே சாதிகுலமில்லை யென்று சொல்லுமொரு புத்தனுடைய சொல்லைக் கொண்டே மித்தியாதிருட்டிப் பிராமணர்கள் நீதியழியச் சொல்லப்படும் வேதநெறியைக் கொண்டோ இப்பொழுது சொன்னது; நீ இதனைச் செய்வாய்! என்றவாறு.

**வி-ரை** : இதனால் மித்தியாதிருட்டிகள் பழிக்கப்பட்டார்கள். ஏடா! - எழுவாய். இதனை - செயப்படுபொருள். உரையாய் - பயனிலை. மித்தியா திருஷ்டி - மெய்யறிவு இல்லாதவர்.

## *Maṟam*

### *eṇcīrk kaḻineṭil viruttam*

*kātucilai vallamaika ḷemmaiyavar paṇṭē*
*kaṇṭaṟivar taṅkaḷvali koṇṭumaka ḷeṇṇār*
*kōtilaru kaṉṟiru vaṟattavarka ḷēṭa*
*kulaṅkeṭavu māṭuvarka ḷōvuṟavu kūṟuñ*
*cātikula meṉṟivai yiraṇṭumala pēcuñ*
*cattamala teṉṉumoru puttaṉurai koṇṭō*
*vētiyarka ṇītikeṭa vōtumaṟai koṇṭō*
*veṟṟimuṭi maṉṉaṉitu coṟṟaturai yāyē.*

Oh! Comrade,
Our prowess in archery the royal folk would have already witnessed,
They will (hence) not dare to have damsel ours,
By mettle theirs in conquest.
Will the followers of *Tiruvaram* of the flawless Arukar
Have kinship any in violation of *Jinacamayam*?
Then how doth the crowned victorious king long and negotiate for our damsel?
Is it based on what Buddha said
That the caste at birth and the lineage traditional are mere words and nothing else
Or on what the Brahmins chant from their scriptures unjustly,
Do tell me.

## *Explanatory notes*

*Tiruvaram* - The Jaina code of conduct laid down by Arukar. *Jinacamayam* - Jainism.

**கட்டளைக் கலித்துறை**

74. *உரையோம் பயன்செய்த வற்கென்று வைத்தற மோதும்வஞ்சத்*
*துரையோ டுறாத சுகதர்கண் டீர்பொங்கு தூங்கொலிநீர்*
*திரையோ டுருண்டெழு சங்கஞ் சொரிந்த செழுந்தரள*
*நிரையோ டுறங்குந் துறைமயி லாபுரி நின்றவரே.*

**பதப்பொருள்**: உரையோம் - சொல்லோம். பயன் - பின்னும் அனுபவிக்கும் பயனை. செய்தவர்க்கு - வினை செய்தவனுக்கு. என்றுவைத்து - என்று சொல்லி வைத்து. அறம் - தருமத்தை. ஓதும் - சொல்லுகின்ற. வஞ்சத்துரையோடு - கெட்டநெறியுடனே. உறாத - பொருந்தாத. சுகதர் - நல்லநடையையுடைய புத்தர் பொங்கு - மிகவும். தூங்கு - தங்கிய. ஒ- சத்தம் பொருந்திய. நீர் - சமுத்திரத்தினுடைய. திரையோடு - அலையுடனே. உருண்ட- உருண்டு வந்த. வெண் - வெளுமையாகிய. சங்கம் - சங்குகள். சொரிந்த - தாமீன்ற. செழும்- செழித்த. தரளம் - முத்துக்களுடைய. நிரையொடு - வரிசைகளுடனே. உறங்கும் - துயிலும் படியான. துறை - துறையையுடைய. மயிலாபுரி - மயிலாபுரியில். நின்றவர் - நிலைபெற்று வாழ்பவர் என்றவாறு.

**பொழிப்புரை**: மிகவும் தங்கிய சத்தம் பொருந்திய சமுத்திரத்தினுடைய அலையுடனே உருண்டு வந்த வெண்மையாகிய சங்குகள் தாமீன்ற செழித்த முத்துக்களுடைய வரிசைகளுடனே துயிலும் படியான துறையையுடைய மயிலாபுரியில் நிலைபெற்று வாழ்பவராகிய நேமிநாதசுவாமியானவர்,

வினைசெய்தவனுக்குப் பின்னும் அனுபவிக்கும் பயனை யாஞ்சொல்லேமென்று சொல்லி வைத்துத் தருமத்தைச் சொல்லுகின்ற கபட நெறியுடனே பொருந்தாத நல்ல நடையையுடைய புத்தர் என்றவாறு.

**வி-ரை** : இதனால் புத்தமதம் பழிக்கப்பட்டது. மயிலாபுரிநின்றவர் - எழுவாய். சுகதர் - பயனிலை. கபடம் - வஞ்சகம்.

### *kaṭṭaḷaik kalitturai*

*uraiyōm payanceyta varkenru vaittara mōtumvañcat*
*turaiyō ṭurāta cukatarkaṉ ṭirponku tūnkolinīr*
*tiraiyō ṭuruṇṭelu cankañ corinta celuntaraḷa*
*niraiyō ṭurankun turaimayi lāpuri ninravarē.*

Our Lord Nēminātar,
Who hath settled on the shores of Mayilāpuri,
Where the luxuriant pearls born of oysters rolling along with the waves,
Of the vast water spread of the roaring sea,
Lie asleep in rows.
(Our Lord Nēminātar thus settled)
Is not the deceitful Buddha,
Who doth declare,
"We will never state that one reaps the consequences
Of the *vinai* one had sown in the earlier births"

## Explanatory notes

This poem deplores the Buddhist theory negating the impact of *vinai* in the cycle of human births. Nēminātar - One of the Jaina *Tirttankarars.*

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

75. *மயிலாபுரி நின்றவ ரரியாசன வும்பரின்*
*மலர்போதி லிருந்தவ ரலர்பூவி னடந்தவ*
*ரயிலார்விழி மென்கொடி மிடைதீபை நயந்தவ*
*ரமராபதி யிந்திர னணிபாட லுகந்தவர்*
*கயிலாய மெனுந்திரு மலைமேலுறை கின்றவர்*
*கணநாயகர் தென்றமிழ் மலைநாயகர் செம்பொனி*

*னெயிலாரில குஞ்சின கிரியாள்பவர் சம்பைய*
*ரெனையாள நினைந்துகொல் வினையேனு ளமர்ந்ததே.*

**பதப்பொருள்**: மயிலாபுரி - மயிலாபுரியில். நின்றவர் - நிலைபெற்று வாழ்பவர் அரியாசனம்- சிங்காசனத்தினுடைய. உம்பரின் - மேலே. மலர் - மலர்ந்த. போதில் - தாமரைப்பூவில். இருந்தவர் - வீற்றிருந்தவர். அலர் - மலர்ந்த. பூவினை - அத்தாமரைப்பூவுடனே. நடந்தவர்- தருமகண்டம் முழுவதும் சென்றவர். அயில் - வேல் போல. ஆர் - பொருந்திய. விழி - கண்களையுடைய. மென் - மெல்லிய. கொடி - கொடிபோன்ற மாதர்கள். மிடை - நெருங்கிய. தீபை - தீபங்குடியை. நயந்தவர் - விரும்பினவர். அமராபதி - கற்பங்களில் வாழும். இந்திரர்- இந்திரர்களுடைய. அணி - அழகிய. ஆடல் - நடனத்தை. உகந்தவர் - இச்சித்தவர். கயிலாயமெனும் - கயிலாயமென்று சொல்லப்படும். திருமலைமேல் - திருமலையின்மீது. உறைகின்றவர் - வாழ்பவர். கணம் - பன்னிரெண்டு கணங்களுக்கும். நாயகர் - நாதரானவர். தென் - தெற்கிலிருக்கும். தமிழ்மலை - பொதியமலைக்கு. நாயகர் - நாதரானவர். செம்பொன்னின்- செம்பொன்னாலாகிய. எயிலார் - மும்மதில் சூழ்ந்த சமவசரணத்தையுடையவர் இலகும் - விளங்குகின்ற. சினகிரி - சினகிரியை. ஆள்பவர் - ஆளுமவர். சம்பையர் - சம்பையென்னும் தலத்தையுடையவர். எனை - என்றனை. ஆள்- ஆளும்படி. நினைந்துகொல் - எண்ணித்தானோ. வினையேன் - வினையையுடைய வடியேனது. உள் - மனத்தில் அமர்ந்தது - பொருந்தினது என்றவாறு.

**பொழிப்புரை**: மயிலாபுரியில் நிலைபெற்று வாழ்பவரும், சிங்காதனத்தினுடைய மேலே மலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருந்தவரும், அலர்ந்த தாமரைப் பூவுடனே தருமகண்டம் முழுவதுஞ் சென்றவரும், வேல்போலப் பொருந்திய கண்களையுடைய மெல்லிய கொடி போன்ற மாதர்கள் நெருங்கிய தீபங்குடியை விரும்பி நெருங்கினவரும், கற்பங்களில் வாழும் இந்திரர்களுடைய அழகிய நடனத்தை இச்சித்தவரும், கயிலாயமென்று சொல்லப்படும் திருமலையின் மீது வாழ்பவரும், பன்னிரெண்டு கணங்களுக்கும் நாதரானவரும், தெற்கிலிருக்கும் பொதியமலைக்கு நாதரானவரும். செம்பொன்னாலாகிய மும்மதில் சூழ்ந்த சமவசரணத்தையுடையவரும், விளங்குகின்ற சினகிரியை ஆள்பவரும், சம்பையென்னும் தளத்தையுடையவருமாகிய அருகபரமேட்டி என்றனையாளும்படி யெண்ணித் தானோ வினையையுடைய அடியேனதுமனத்தில் மலர்ந்தது என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகபரமனுடைய கருணை கூறப்பட்டது. அருகன் அமர்ந்தது - எழுவாய், ஆளநினைந்து கொல் - பயனிலை. கற்பம் - அமரர் நாடு. இச்சித்தல் - விரும்புதல்.

## eṇcīrk kalinetil viruttam

*mayilāpuri ninṟava rariyācaṉa vumpariṉ*
*malarpōti liruntava ralarpūvi ṉaṭantava*
*rayilārviḻi meṉkoṭi miṭaitīpai nayantava*
*ramarāpati yintira ṉaṇipāṭa lukantavar*
*kayilāya meṉuntiru malaimēluṟai kiṉṟavar*
*kaṇanāyakar teṉṟamiḻ malaināyakar cempoṉi*

*ṉeyilārila kuñciṉa kiriyāḷpavar campaiya*
*reṉaiyāḷa niṉaintukol viṉaiyēṉu ḷamarntatē.*

Lord Arukar (Nēminātar)
Who hath settled at Mayilāpuri,
Who doth sit on the lotus blossomed above the throne,
Who did traverse *Tarumakaṇṭam* entire mounted on his lotus,
Whose desired destination was Tīpaṅkuṭi eagerly sought by lance-eyed and slim waisted women.
Who did like the graceful dance of the *Intirars* reṣiding in *kaṟpalōkam,*
Who is the Chief of *Kaṇams* twelve and the southern Potikaimalai as well,
Who doth reside at Kailāyam, the mountain beautiful,
Who doth possess (and occupy) the *camavacaraṇam* surrounded by *mummatil* made of sterling gold,
Who doth rule the established *Ciṉakiri,*
Who doth grace *campai* city by his appearance therein,
(Arukar of such features and glory)
Is it not for absorbing in His grace my humble self
Suffering from the affliction of *viṉai's* hold,
He hath occupied my mind graciously?

## Explanatory notes

Nēminātar - One of the most important *tīrttaṅkarars.* Mayilāpuri - The abode of Nēminātar. *Tarumakaṇṭam* - The entire world of virtue, *Kaṟpalōkam* - The land of Amarars. Potikaimalai - The mountain range made famous for its association with *Akattiyar* who is supposed to have originated Tamil grammar; He was a great saint and savant. *Kaṇams* - Classified divisions of birth. Kailāyam - A legendary mountain claimed as the abode of Lord *Civaṉ* by the Hindus and mentioned as the abode of Nēmiṉātar here.

**எழுசீர்க் கழிநெடில் விருத்தம்**

*76. அமரநா டாளு மரசரை யந்தப் புரத்தினோ டாணையா லழைத்து*
*குமரிமூ வெயில்சூழ் கோயிலோ வாத சேவகங் கொள்வது குணனே*
*தமர்களே பிறர்க ளெனுந்திர மின்றித் தம்முயி ரெனவுயி ரளிக்கு*
*நுமரெலா நும்மை யென்சொலார் சொல்லீர் நான்மறை நூன்மொழிந் தவரே.*

**பதப்பொருள்** அமரர்நாடு - கற்பங்களை. ஆளும் - ஆளுகின்ற அரசரை - இந்திரர்களை. அந்தப்புரத்தினோடு - அவர்களுடைய தேவியர்களுடனே. ஆணையால் - ஆக்கினையினாலே. அழைதது - அழைப்பித்து. குமரி - அழிவில்லாத மூவெயில் - மும்மதில் சூழ்ந்த. கோயில் - சமவசரணத்தில். ஓவாத - நீங்காத. சேவகம் - பணிவிடையை. கொள்வது - ஏற்றுக்கொள்வது. குணனே - நன்காகுமோ. தமர்கள் - சுற்றத்தார்கள். பிறர்கள்- அன்னியர்கள். எனும் - என்று சொல்லப்படும். திறமின்றி - வகையில்லாமல். தம்முயிரென- தங்களுயிர்போல. உயிர் - சகலசீவன்களையும். அளிக்கும் - இரட்சியாநின்ற. நுமரெலாம் - உம்முடைய வடியார்களெல்லாம். நும்மை - உம்மை. என்சொலார் - என்ன சொல்லமாட்டார்கள். சொல்லீர் - உத்தரஞ் சொல்வீராக. நான்மறை - நான்கு வேதங்களாகிய. நூல் - பரமாகமத்தை. மொழிந்தவரே - சொன்னவரே! என்றவாறு.

**பொழிப்புரை**: நாலுவேதங்களாகிய பரமாகமத்தைச் சொன்னவரே! கற்பங்களை யாளுகின்ற இந்திரர்களை ஆக்கினையினாலே அவர்களுடைய தேவிமார்களுடனே அழைப்பித்து அழிவில்லாத மும்மதில் சூழ்ந்த சமவசரணத்தில் நீங்காத பணிவிடையை ஏற்றுக் கொள்வது நன்காகுமோ? சுற்றததாரென்றும், அன்னியரென்றுஞ் சொல்லப்படுகின்ற வகையில்லாமல், தங்களுயிர்போல சகல சீவன்களையும் இரட்சியாநின்ற உம்முடைய அடியார்கள் எல்லோரும் உம்மை என்ன சொல்லமாட்டார்கள்? உத்தரம் சொல்வீராக என்றவாறு

**வி.ரை** : இதனால் அருகனுடைய பெருமை கூறப்பட்டது நூன்மொழிந்தவரேநீர் - எழுவாய். சொல்வீர் - பயனிலை. நாலுவேதங்களாகிய பரமாகமம் - முற்றும் உணர்ந்த மகான்கள் அறிந்து உரைதத தததுவக் கருத்துக்கள் அடங்கிய நூல். அவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் சிறப்புறப் பெற்றவர்களின் (தீர்த்தங்கரர்கள்) வரலாற்றினைக்கூறும் பிரதமானுயோகம். உலக அமைப்பும் ஏறுகாலம், இறங்குகாலம் என்ற பிரிவுகளையும் தேவ, மனித, விலங்கு, நாகர் என்னும் நான்கு கதிகளைக் கூறும் கரணானுயோகம் இல்லறத்தார் துறவறத்தார் ஒழுக்கங்களைக் கூறும் சரணானுயோகம். உயிர் முதலான பொருள்களையும், புண்ணிய பாவங்களையும் பந்தம், மோட்சம் பற்றிக் கூறும் திரவ்யானுயோகம் என நான்காகும். ஆக்கினை - கட்டளை. உத்தரம் - உயர்ச்சி

## *eḻucīrk kaḻineṭil viruttam*

*amaranā ṭāḻu maracarai yantap purattinō ṭāṇaiyā laḻaittu*
*kumarimū veyilcūḻ kōyilō vāta cēvakaṅ koḷvatu kuṇaṉē*
*tamarkaḷē piṟarka ḷeṉuntira miṉṟit tammuyi reṉaviyi raḷikku*
*numarelā nummai yencolār collīr nāṉmaṟai nūṉmoḻin tavarē.*

Oh! Lord Arukar, who did proclaim the fourfold scripture of
*paramākamam*,
Is it proper and good for thee to summon Intirars who rule over
*Amararnāṭu* and their consorts
By edict Thine and accept their service humble and ceaseless,

At *camavacaraṇam* surrounded by the *mummatil* imperishable?
Will not Thy devotees who do not discriminate
Between their kin and strangers and treat all lives alike,
And protect them like their own,
Gainsay (this action of Yours)?

## Explanatory notes

*paramākamam* - The four Jaina scriptures; The four scriptures of *paramākamam* are *piratamāṉuyōkam* which deals with the lives and spiritual contributions of *Tīrttaṅkarars, karaṇāṉuyōkam* deals with the structure of the world, the ascending and descending periods of time and *nāṟkati* (the four stages of birth). *caraṇāṉuyōkam* - prescribes the code of conduct for householders and ascetics. *tiravyāṉuyōkam* describes matters like *uyir* (life) and the aspects of *puṇṇiyam* (the impact of good deeds) *pāvam* (sin) *pantam* (bonds) and *mōṭcam* (eternity or eternal bliss)

### தவம்

### கலி வெண்பா

77. *நூன்மொழியு மாறு நுழைந்து நுமக்குறுதிப்*
*பான்மைய வாகப் பலநாடி - யான்மொழியக்*

*கேண்மி னமரங்காள் கேடின்றி நிற்பதுயிர்*
*காண்மி னுடம்பு கவினிளமை - கேண்மையுடன்*

*வல்லாண்மை செல்வமென் றிவ்வெல்லாம் வானத்து*
*வில்லாகு மென்றே விழையன்மின் - றொல்லை*

*முரணார் வினைப்பகைவர் மூளுங்கால் வாமன்*
*சரணார விந்தங்க ளல்லா - லரணாய்நீ*

*ரெண்ணும் பொருள்சுற்றம் யாக்கையென் றின்னவெல்லாம்*
*நண்ணுஞ் சரணாக நாடன்மி - னெண்ணிறந்த*

*வூழிக ளெல்லா முலவாத் தடுமாற்றத்*
*தாழிக ளைந்தி னனந்தமுறை - சூழுங்*

*கறங்கி னுழலுங் கதிதோறுந் துன்பம்*
*பிறங்கும் பிறப்பஞ்சி வாழ்மின் - சிறந்த*

*பிறப்பிறப்பு மூப்புப் பிணிகளெனுந் துன்ப*
*முறப்புணர யானுழக்குங் காலை - யறத்திறஞ்சேர்ந்*

*தியானா மொருவனே யல்ல தெனக்குமற்*
*றேனோர் துணையல்ல ரென்றறிமி - னீனமில்சீர்ச்*

*சேதனமா லாவி யசேதனமா லிவ்வுடம்*
*பாதலினால் வேறாய வவ்விரண்டுஞ் - சேர்தலினால்*

*மன்னுமொன் றாய்விடினும் வாளுந் தடறும்போற்*
*பின்ன மெனவே பிரித்துணர்மின் - றுன்னும்*

*புழுப்பிண்ட மாகிப் புறஞ்செய்யுந் தூய்மை*
*விழுப்பொருளை வீறழிப்ப தாகி - யழுக்கொழுகு*

*மொன்பது வாயிற்றா மூன்குரம்பை மற்றிதனா*
*லின்பமதா மென்னா திழித்துவர்மின் - றுன்பந்*

*துளக்கமாம் யோகந் துவர்டக்க மின்மை*
*விளக்கமிறீக் காட்சி யிவற்றாற் - கிளப்பரிய*

*வீறில்வினை யீரைந் திறத்தி னெமதுயிர்க்க*
*ணூறு மெனவே யுணர்ந்துய்ம்மின் - வீறுசால்*

*குத்தி சமிதி யறஞ்சிந்தை கோதிலா*
*மெய்த்தவமீ ராறடக்க மென்றிவையா - லொத்தெழுந்த*

*மாறாத ஞான தியானத்தால் வல்வினைக*
*ளூறாது மாறும்வகை யுள்ளுமின்கள் - கூறும்*

*பரிச கசயந் தவமடக்க மூன்றால்*
*விரிதரு ஞான தியானத் - தருவினைகள்*

*தத்த நிலையோ டநுபாகந் தாங்குறைந்*
*தொத்த வுதிர்ப்பா மெனத்தெரிமின் - வைத்த*

*வடியேழ் கயிற்றிடைக ளொன்றுடனைந் தொன்று*
*முடியேழ் கயிற்றிரட்டி யோக்கம் - படியளவாந்*

*தொல்லுலகு பல்லுயிருந் தோற்றற்கும் வீட்டற்கு*
*மெல்லையிட மென்றியைந்து நோக்குமின்கள் - சொல்லி*

*னரிய பொருண்முதலாஞ் சாதனங்க ளைந்தும்*
*பிரிவின் றுடன்பெற்றாற் பின்னுந் - தெரிவுடைய*

*ஞானத் தெளிவொழுக்க மாகிய நல்லறந்*
*தானற் கரிதாந் தகைநினைமின் - மானந்தீர்ந்*

*திம்மை குறியா திதமு மதுரமுமா*
*மெய்ம்மை யருள்சுரந்து வீறமைந்து - பொய்ம்மை*

*கறுவிகந்த செவ்விதினற் காட்சியர்பாற் றோன்று*
*முறுதி மொழியரிதென் றோர்மின் - மறுவிலிவ்*

*வீரா று சிந்தைகளு மின்பவுல கெய்துவார்க்*
*கோரா றெனப்பரம னோதியவாற் - பேரா*

*துளங்கொண் டிவையிவை பேணித் துளங்காது*
*வைகலு மொழுகுதல் சூதே.*

**பதப்பொருள்:** நூல் - பரமாகமம். பொழியும் - சொல்லும். ஆறு - மார்க்கத்தில். நுழைந்து- புகுந்து. நுமக்கு - உங்களுக்கு. உறுதி - மறுமைக்கு உறுதியாகிய. பான்மையவாய் - பான்மையானவைகளை. பல - வெகுவாய். நாடி - ஆராய்ந்து. யான் மொழிய - நான்சொல்ல. கேன்மின் - கேளுங்கள். நமரங்காள் - பந்துக்களே! கேடின்றி - நாசமில்லாமல். நிற்பது - இருப்பது. உயிர் - சீவன்கள். காண்மின் - அதனையறியுங்கள். உடம்பு - தேகமும். கவின்- அழகும். இளமை - யௌவனமும். கேண்மை - சுற்றமும். உடன் - அதினுடன். வல்லாண்மை- வீரமும். செல்வமுமென்று - செல்வமுமென்று சொல்லப்பட்ட. இவ்வெல்லாம்- இவைகளெல்லாம். வானத்து - மேகத்திலிட்ட. வில் - விற்போல். ஆகுமென்றே - ஆகுமென்றெண்ணி. விழையன்மின் - அவற்றை விரும்பா தொழியுங்கள். தொல்லை - பழவினையை உடைய. முரணார் - வலிபொருந்திய. வினை - நூற்று நாற்பத்தெட்டு வகைப்பட்ட கருமமாகிய. பகைவர்- சத்துருக்கள். மூளுங்கால் - எதிர்க்குங்கால் வாமன் - அருகனுடைய. சரணாரவிந்தங்கள் - பாதத்தாமரைகளை. அல்லால் - அல்லாமல். அரணாய்- காவலாக. நீர் - நீங்கள். எண்ணும் - எண்ணிய. பொருள் - தனமும். சுற்றம் - பந்துக்களும். யாக்கையென்று - தேகமுமென்று சொல்லப்பட்ட. இன்னவெலாம் - இவையெல்லாம். நண்ணும்- பொருந்திய. சரணாக - அடைக்கலமாக நாடன்மின் - எண்ணாதிருங்கள். எண்ணிறந்த - கணக்கிறந்த. ஊழிகளெல்லாம்- எல்லா ஊழிக்காலங்களிலும். உலவா - கெடாத. தடுமாற்றத்து - சமுசாரத்தில். ஆழிகள் ஐந்தின்- பஞ்சபரிவர்த்தனையினாலே. அனந்தமுறை - அனந்தவாரம். சூழும் - சுழலுகின்ற. கறங்கின்-காற்றாடிபோல். உழலும் - உழலுகின்ற. கதிதோறும் - நாற்கதிகளிலேயும். துன்பம் - துயரமானது. பிறங்கும் - மிகுகின்ற. பிறப்பு - பிறப்பினுக்கு. அஞ்சி - பயந்து. வாழ்மின் - வாழுங்கள். சிறந்த - மேம்பட்ட. பிறப்பு - சனனமும். இறப்பு - சாவும். மூப்பு - தளர்ச்சியும். பிணிகளென்றும் - வியாதிகளென்று சொல்லப்படும். துன்பம் - துயரம். உற - மிகவும். புணர் - அடைய. யான்- நான். உழங்குங்காலை - உழைத்துக்கொள்ளுங் காலத்தில். அறத்திறம் - சினதரும வகையை. சேர்ந்து - அடைந்து. யானாம் - நானாகிய. ஒருவனேயல்லாது -

ஒருவனேயல்லாமல். எனக்கு- என்றனுக்கு. ஏனோர் - அன்னியர்கள். துணையல்லரென்று- துணையானவரல்லவரென்று. அறிமின் - அறியுங்கள். ஈனமில் - குற்றமில்லாத. சீர் - சிறப்பையுடைய. சேதனம் - அறிவையுடையது. ஆவி - உயிரானது. அசேதனம் - அறிவில்லாதது. இவ்வுடம்பு - இவ்வுடல். ஆதலினால் - ஆகையினால் வேறாய்- வெவ்வேறு குணங்களையுடைய. அவ்விரண்டும் - சீவனும், உடலும். சேர்தலினால் - ஒன்றாய்ச் சேருகையினால் மன்னும் - நிலைபெற்ற. ஒன்றாய்விடினும் - ஒன்றானாலும். வாளும் - கத்தியும். தடறும்போல் - கூடும்போல. பின்னமெனவே - வேறென்றே. பிரித்து - பகுதது. உணர்மின் - அறியுங்கள். துன்னும் - நெருங்கிய. புழு - புழுக்களையுடைய. பிண்டமாகி - உருவாகி. புறம் - புறத்தை. செய்யும் - சுத்தம் செய்கின்ற. தூய்மை - தூயனாம் விழுப்பொருளை - மிகவும் மேம்பட்டபொருள்களை வீறழிப்பதாகி - பெருமையை யழித்தலையுடைத்தாகி யழுக்கொழுகும் - மலங்கள் கழல்கின்ற. ஒன்பது வாயிற்றாம் - நவதுவாரங்களையுடைத்தாகும். ஊன் - மாமிசமாகிய. குரம்பை - தேகம். மற்றிதனால் - இத்தேகத்தினால். இன்பமதாம் - இன்பமுண்டாகும். என்னாது - என்னாமல். இழித்து - நிந்தித்து. உவர்மின் - வெறுத்துவிடுங்கள். துன்பம் - மூன்றுவிபாக துக்கமும். துளக்கமாய்- சலனமாகிய யோகம் - திரிகரணங்களும். துவர் - நான்கு கஷாயங்களும். அடக்கமின்மை- பன்னிரெண்டவ்விரதங்களும். விளக்கமில் - தெளிவில்லாத. தீக்காட்சி - மித்தியாத்துவமும். இவற்றால் - இவற்றினாலே. கிளப்பரிய - சொல்லற்கரிய. ஈறில் - முடிவில்லாத. வினை - வினையானது. யீரைந்திறத்தின் - பத்துவகையஸ்வரத்தினாலே. எமது - எம்முடைய. உயிர்ககண் - சீவனிடததில். ஊறுமெனவே - அடையுமென்றே உணர்ந்து - எண்ணி. உய்மின் - பிழையுங்கள் வீறு - மேன்மையானது. சால் - மிகுந்த. குத்தி - திருகுத்தியும். சமிதி - பஞ்ச சமிதியும். அறம் - தசதருமமும். சிந்தை - துவாதசாநுப் பிரேக்ஷையும். கோதிலார் - குற்றமில்லாத. மெய் - உண்மையாகிய. தவம் - பாகியாப்பியந்தர தபசுக்களும். ஈராறடக்கமென்று - பிராணி சமயம், விஷய சமயங்களுமென்று. இவையால் - இவற்றினால் ஒத்து - பொருந்தி எழுந்த - தோன்றிய. மாறாத -நீங்காத. ஞானம் - தத்துவ ஞானத்தினாலும் தியானத்தால் - தருமதியானத்தினாலும். வல் - வலிமையையுடைய. வினைகள் - இருவினைகளும். ஊறாது - அடையாமல். மாறும்வகை - நீங்கும் திறத்தை. உள்ளுமின்கள்- நினையுங்கள். கூறும் - சொல்லப்பட்ட பரிசகசயம் - இருபத்திரெண்டு பரீஷகசயமும் தவம் - தபசுக்களும். அடக்கம் - விரதங்களும் மூன்றால் - இம்மூன்றினால். விரிதரு - மிகுந்த. ஞான - ஞானத்தினாலும். தியானத்து - தியானத்தினாலும். அரும் - அரிதாகிய வினைகள் - இருவினைகளும் தத்தம் - அந்தந்த நிலையோடு - கருமத்தினையுடைய திதிபந்த சத்தியுடனே. அனுபாகந்தாம் - அனுபாகபந்த சத்திகளும். குறைந்து - கணந்தோறுங்குறைவுபட்டு. ஒத்த - கரணத்திரயத்துக்கும் ஒத்த. உதிர்ப்பாமென - உதிர்ச்சியாகுமென்று. தெரிமின் - அறியுங்கள்.' வைத்த - வைக்கப்பட்ட. அடி - உலகத்தினடி. ஏழுகயிறு - ஏழுகயிற்று அகலமும். உடன் - அதினுடன். ஐந்து - ஐந்து கயிற்றகலமும். ஒன்று - ஒருகயிற்றகலமும். முடி - சிகரமும். எழுகயிற்றிரட்டி - பதினான்கு கயிறு. ஒக்கம்- உயர்ச்சியும். படி - பூமியினுடைய அளவாம் - பிரமாணமாகும். தொல் - பழமையாகிய. உலகு - இவ்வுலகமானது. பல் - பலவாகிய. உயிரும் - சீவன்களும். தோற்றற்கும் - பிறப்பதற்கும். வீட்டற்கும் - முததியடைதற்கும். எல்லை - அளவுபட்ட. இடமென்று - தானமென்று. இயைந்து - பொருந்தி. நோக்குமின்கள் - எண்ணுங்கள். சொல்லின் - சொல்லுங்கால். அரிய - அரிதாகிய. பொருண்முதலாம் - திரவிய முதலாகிய சாதனங்கள் - சாதனவத்துக்கள். ஐந்தும் - ஐந்தையும். பிரிவின்றி - குறைவில்லாமல். உடன் - ஒருதன்மையாக. பெற்றால் - அடைந்தால். பின்னும் - மீளவும். தெரிவுடைய - தெளிவையுடைய. ஞானம் - நன்ஞானமும். தெளிவு - நற்காட்சியும்.

ஒழுக்கம் - நல்லொழுக்கமும். ஆகிய - ஆன. நல்லறந்தான் - சினதருமந்தான். நற்கு - நன்மையாக. அரிதாம் - அருமையுடைத்தாகிய. தகை - பெருமையை. நினைமின் - எண்ணுங்கள் மானம்- அபிமானத்தினின்று தீர்ந்து - நீங்கி. இம்மை - இகப்பிரயோசனத்தை. குறியாது - எண்ணாமல். இதமும் - உயிர்களிடத்திலிதமும். மதுரமுமாம் - இன்பமுமாம். மெய்மை - உண்மையான. அருள் - கிருபை. சுரந்து - உண்டாகி. வீறு - பெருமை. அமைந்து - பொருந்தி. பொய்மை - பொய்யும். கறுவு - பகையும். இகந்த - நீங்கிய. செவ்விதின் - செம்மையினாலே. நற்காட்சியர்பால் - சம்யக் திருட்டிகளிடத்தில். தோன்று - உண்டாக நின்ற. உறுதிமொழி - உபதேசமொழிகள். அரிதென்று - அருமையென்று ஓர்மின் - அறியுங்கள். மறுவில் - குற்றமில்லாத. இவ்வீராறு சிந்தைகளும்- இந்தத் துவாதசாநுப் பிரேட்சைகளும். இன்பவுலகு - முத்தியை. எய்துவார்க்கு - அடைபவருக்கு. ஓராறென - ஒரு மார்க்கமென்று. பரமன் - அருகபரமன் ஓதியவால் - சொன்னபடியால். பேராது - நீங்காமல். உளங்கொண்டு - மனத்திற்கொண்டு. இவையிவை - இப்படி சொன்னவைகள். பேணி - பாதுகாத்து துளங்காது - அதிசாரமில்லாமல் வைகலும் - நாடோறும் ஒழுகுதல் - நடத்தல். சூதே - உபாயமே! என்றவாறு.

**பொழிப்புரை** பந்துக்களே! உங்களுக்கு மறுமைக்கு உறுதியாகிய பான்மைகளைப் புரமாகமஞ்சொல்லும் மார்க்கத்தில் புகுந்து வெகுவாய் ஆராய்ந்து நான் சொல்லக்கேண்மின். சீவனானது நாசமில்லாமல் இருக்கப்பட்டது. நீங்கள் அதனை அறியுங்கள். தேகமும், அழகும், யௌவனமும், சுற்றமும், அதினுடன் வீரமும், செல்வமும் என்று சொல்லப்பட்ட இவையெல்லாம் மேகத்திலிட்டவிற்போல் ஆகுமென்றெண்ணி அவற்றைவிரும்பா தொழியுங்கள் பழமையையுடைய வலிமை பொருந்திய **நூற்றுநாற்பத்தெட்டு கரும**மாகிய சத்துருக்கள் எதிர்க்குங்கால் அருகனுடைய பாதத்தாமரைகளே யல்லாமல் நீங்கள் உங்களுக்குக் காவலாய் எண்ணப்பட்ட தனமும், பந்துக்களும், தேகமும் என்று சொல்லப்பட்ட இவையெல்லாம் பொருந்திய அடைக்கலமாக எண்ணாதிருங்கள். கணக்கிறந்த எல்லா ஊழிக்காலத்திலுங்கெடாத சமுசாரததிற் பஞ்ச பரிவர்த்தனைகளினாலே அனந்தவாரஞ்சூழுகின்ற காற்றாடிபோலுழலுகின்ற நாற்கதிகளிலேயும் துயரமானது மிகுகின்ற பிறப்பினுக்குப் பயந்துவாழுங்கள்.

மேம்பட்ட பிறப்பு இறப்புத் தளர்ச்சியும் வியாதிகளுமென்று சொல்லப்பட்ட துயரமானது மிகவுமடைய, நான் அவற்றிலிலுழந்து நிற்குங் காலத்தில் சினதரும வகையையடைந்து நானாகிய ஒருவனேயல்லாமல் எனக்கு அன்னியர் துணையானவரல்லர் என்றறியுங்கள். குற்றமில்லாத சிறப்பையுடைய உயிரானது அறிவையுடையது இவ்வுடம்பானது அறிவில்லாததாகையினால் வெவ்வேறு குணங்களுடைய அவ்வுயிருடலென்றும் இரண்டுஞ் சேருகையினால் நிலைபெற்றொன்றாயிருப்பினும் வாளும் கூடும்போல் வேறென்றே பகுத்து அறியுங்கள் நெருங்கிய புழுக்களையுடைய பிண்டமாகியப் புறத்தைச் சுத்தஞ்செய்கின்ற மேன்மைப் பொருள்களினுடைய பெருமையை யழித்தலை யுடைத்தாகி மலங்கள் கழலுகின்ற நவதுவாரத்தை யுடைத்தாகும் மாமிசமாகிய தேகம்; இத்தேகத்தினாற் சுகமுண்டாகு மென்னாமல் நிந்தித்து வெறுத்து விடுங்கள். மூன்று விபாகதுக்கமுஞ் சலனமாகிய திரிகரணங்களும் நான்கு கஷாயங்களும் பன்னிரண்டு விரதங்களும் தெளிவில்லாத மித்தியாத்துவமுமிவற்றினாலே யெம்முடைய சீவனிடத்தில் அடையுமென்றே எண்ணிப் பிழையுங்கள்.

பெருமை மிகுந்த திரிகுப்தியும், பஞ்சசமிதியும், தசதருமமும், துவாதசாநுப்பிரேட்சையுங், குற்றமில்லாத உண்மையையுடைய பாகியாப்பியந்தா தபசுக்களும், பிராணிசம்யமம் விஷயசம்யமென்று சொல்லப்பட்ட விரதங்களும், இவற்றினொடு பொருந்தியுண்டான நீங்காத

தத்துவ ஞானத்தினாலும் தருமத்தியானத்தாலும் வலிமையுடைய வினைகள் தம்மையடையாமல் நீங்கும்படியான வகையை நினையுங்கள். சொல்லப்பட்ட இருபத்திரெண்டு பரிசகசயமுந் தவங்களும் விரதங்களும் இவ்வகை மூன்றினோடு மிகுந்த ஞானத்தினாலும் அருமையாகிய வினைகளும் தத்தம் கருமத்தினுடைய திதிபந்தசத்தியுடனே அனுபாக பந்த சததியுங் கணந்தோறும் குறைவுபட்டுக் கரணததிரயத்துக்கு மொத்தவுதிர்ச்சியாகுமென்றறியுங்கள். வைக்கப்பட்ட உலகத்தின் அடி ஏழுகயிற்றகலமும், மத்திகளிலொரு கயிற்றகலமும் அதினுடன் ஐந்துகயிற்றகலமுஞ் சிகரத்திலொரு கயிற்றகலமும், பதினான்கு கயிற்றுயர்ச்சியும், பூமியினுடைய பிரமாணமாகும்

பழமையாகிய இவ்வுலகமானது பலவாகிய சீவன்கள் பிறத்தற்கும் முத்தியடைதறகும் அளவுபட்ட விடமென்றே பொருந்தி நோக்குங்கள். சொல்லுங்கால் அரிதாகிய திரவிய முதலாகிய சாதனவஸ்த்துக்களைந்தையும் பிரிவில்லாமல் ஒருதன்மையாக அடைந்தால் பின்னுந தெளிவுடைய நன்ஞானமும் நற்காட்சியும் நல்லொழுக்கமுமான சினதருமந்தான் நன்மையாக அருமையை யுடைத்தாகும் பெருமையையெண்ணுங்கள். அபிமானத்தினின்று நீங்கி இகத்துலுண்டான பிரயோசனத்தை யெண்ணாமல் உயர்களிடத்திலிதமு மதுரமுமாகும் உண்மையான கிருபையுண்டாகிப் பெருமை பொருந்திப பொய்யும் பகையும் நீங்கிய செம்மையினாலே சம்மியத் திருஷ்டிகளிடத்தில் உண்டாகா நின்ற உபதேசமொழிகள் அருமையென்றறியுங்கள். குற்றமில்லாத இந்தத் துவாதசாநுப் பிரேட்சைகளும் முத்தியை அடைபவருக் கொருமார்க்கமென்று அருகபரமன் சொன்னபடியால், இப்படிச் சொன்னவைகளை நீங்காமல் .மனதிற்கொண்டு பாதுகாதது அசைவில்லாமல் நாடோறு நடக்குதல் உபாயமாம் என்றவாறு.

**வி-ரை :** இதனால் ஜீவன் நித்தியமாதலும், அந்தஜீவன் ஆசையினால் வினைகட்படுதலும், அவ்வினையாற் பிறப்பிறப்புண்டாதலும், அவற்றால் துன்பமெய்தலும், அவ்வினையைக் கெடுத்தால் முத்தியெய்தி இன்பம் அடைதலும், அவ்வினையைக் கெடுததற்கு உபாயமுங் கூறப்பட்டன. ஒழுகுதல் - எழுவாய். சூது - பயனிலை

பரமாகமம் - சைன ஆகம முறைப்படி முற்றும் உணர்ந்த மகான்களால் அறிந்து உரைத்த தத்துவக் கருத்துக்கள் அடங்கிய நூல். அவை நான்கு வேதங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. 1. பிரதமானு யோகம் 2 கரணானு யோகம் 3 சரணானு யோகம் 4 திரவ்யானு யோகம்

**எட்டு கருமங்களும் அவற்றின் நூற்றுநாற்பத்தெட்டு உட்பிரிவுகளும்.**

I. ஞானாவரணீயம் - உயிரின் இயல்பான மெய்யறிவை மறைப்பது.

II. தர்சனாவரணீயம் - உயிரின் காட்சியை, நம்பிக்கையை மறைப்பது

III. வேதனீயம் - இன்பதுன்பங்களை அளிப்பது

IV. மோகனீயம் - உண்மைப்பொருளை அறிய முடியாதவாறு மயங்கச் செய்வது

V. ஆயுள் - வாழ்நாளை வரையறை செய்வது

VI. நாமம் - உடல் உறுப்புகளையும் நிறங்களையும் தோற்றுவிப்பது

VII. கோத்திரம் - உயர்ந்த, தாழ்ந்த குலங்களில் பிறக்கச் செய்வது.

VIII. அந்தராயம் - இலாபம் (பயன்) அனுபவிக்கமுடியாதவாறு தடுப்பது.

இந்த எட்டு கருமத்தின் உட்பிரிவுகள் நூற்று நாற்பத்தெட்டாகும். அவை பின்வருமாறு:

**I. ஞானா வரணீய கருமத்தின் உட்பிரிவுகள் - 5**

1 மதி ஞானா வரணீயம் - இயல்பாக அறியும் அறிவை மறைப்பது.

2. சுருதி ஞானா வரணீயம் - நூல் அறிவை பெறமுடியாதவாறு தடுப்பது

3. அவதி ஞானா வரணீயம் - முற்பிறப்பை அறியும் அறிவை மறைப்பது.

4. மனப்பர்யய ஞானா வரணீயம் - பிறருடைய மனத்தில் உள்ளவற்றை அறிய முடியாதவாறு தடுப்பது.

5. கேவல ஞானா வரணீயம் - உலகில் உள்ள எல்லாவற்றையும் மூன்று கால ஞானத்தையும் அறிய முடியாதவாறு மறைப்பது.

**II. தர்சனாவரணீய கருமத்தின் உட்பிரிவுகள் - 9**

6. சக்சு தர்சனா வரணீயம் - கண்களால் காணும் காட்சியை மறைப்பது

7. அசக்சு தர்சனா வரணீயம் - மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் அறிதலை மறைப்பது.

8 அவதி தர்சனா வரணீயம் - ஐம்பொறிகளின் உதவியின்றி ஆன்மாவினால் கால, எல்லை வரையறைக்குட்பட்டுப் பிறவற்றைப் பற்றி ஓரளவிற்கு அறியும் அறிவாகிய அவதி ஞானத்தால் காணும் காட்சியைத் தடுப்பது.

9 கேவல தர்சனா வரணீயம் - ஐம்பொறிகள், மனம் இவற்றின் துணையின்றி நேரடியாகப் பெறப்படும் கேவல ஞானத்தால் காணும் காட்சியைத் தடுப்பது.

10. நித்திரை - தூக்கம் வரக் காரணமாக இருப்பது.

11. நித்திரா நித்திரை - அதிகத் தூக்கம்வரக் காரணமாயிருப்பது.

12. பிரசலை - சிறிது தூக்கம் (அரைத்தூக்கம்) வரக் காரணமாயிருப்பது.

13. பிரசலா பிரசலை - உட்கார்ந்து கொண்டே தூங்குதல்

14 ஸ்த்யான க்ருந்தி - தூக்கத்தில் வேலை செய்தல், நடத்தல், வாய் பிதற்றுதல் முதலியவற்றுக்குக் காரணமானது.

**III. வேதனீய கருமத்தின் உட்பிரிவுகள் - 2**

15. சாதா வேதனீயம் - ஐம்புலன்கள், மனம் ஆகிய இவற்றால் உண்டாகும் இன்பத்திற்குக் காரணமாக இருப்பது.

16. அசாதா வேதனீயம் - பலவகைத் துன்பங்களுக்குக் காரணமாக இருப்பது.

## IV. மோகனீய கருமத்தின் உட்பிரிவுகள் - 28

மோகனீய கருமம் - தர்சன மோகனீய கருமம், சாரித்திர மோகனீய கருமம் என இருவகைப்படும். இவற்றுள் தர்சன மோகனீயம் மூன்று வகைப்படும். சாரித்திர மோகனீயம் இருபத்தைந்து வகைப்படும். ஆக, மோகனீய கருமம் இருபத்து எட்டாகும்.

### தர்சன மோகனீய கருமம் - 3

17. மித்யாத்வம் - அருகபகவானின் போதனைகளை நம்பாததாகிய தீக்காட்சிக்குக் காரணமானது. இது அழிந்த பிறகே சம்யக்த்துவம் (நற்காட்சி) தோன்றும்.

18. சம்யக் மித்யாத்வம் - நற்காட்சியின் தன்மையும் தீக்காட்சியின் தன்மையும் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமாவது. இஃது இனிப்பும் புளிப்பும் சேர்ந்து வேறொருவகைச் சுவையாவது போன்றது.

19. சம்யக்த்வ பிரக்கிருதி - நற்காட்சியினை அடியோடு கெடுக்கும் தன்மையின்றிச் சில சலனங்களை, குற்றங்களைத் தோற்றுவிப்பது.

### சாரித்திர மோகனீயம் - 25

20. அனந்தானுபந்தி குரோதம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய சினம்.

21. அனந்தானுபந்தி மானம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய செருக்கு

22. அனந்தானுபந்தி மாயம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய வஞ்சனை

23. அனந்தானுபந்தி லோபம் - பல பிறவிகளில் தொடரக்கூடிய பேராசை

இவை நான்கும் மெய்க்காட்சியைக் கெடுக்கும் வினைகளாகும்.

24. அப்ரத்யாக்யான குரோதம் - இல்லற நெறியைத் தகர்க்கும் சினம்.

25. அப்ரத்யாக்யான மானம் - இல்லற நெறியைத் தகர்க்கும் செருக்கு.

26. அப்ரத்யாக்யான மாயம் - இல்லற நெறியைத் தகர்க்கும் வஞ்சனை.

27. அப்ரத்யாக்யான லோபம் - இல்லற நெறியைத் தகர்க்கும் பேராசை.

28. பிரத்யாக்யான குரோதம் - துறவற நெறியைக் கெடுக்கும் சினம்.

29. பிரத்யாக்யான மானம் - துறவற நெறியைக் கெடுக்கும் செருக்கு.

30 பிரத்யாக்யான மாயம் - துறவற நெறியைக் கெடுக்கும் வஞ்சனை.

31 பிரத்யாக்யான லோபம் - துறவற நெறியைக் கெடுக்கும் பேராசை

32. சஞ்சுவலன குரோதம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் சினம்.

33 சஞ்சுவலன மானம் - மிகவும் தூய்மையான ஒழுக்கததைக் கெடுக்கும் செருக்கு.

34. சஞ்சுவலன மாயம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் வஞ்சனை.

35 சஞ்சுவலன லோபம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் பேராசை

36. ஹாஸ்யம் - சிரித்து ஏளனம் செய்தலுக்குக் காரணமாவது.

37 ரதி - உறவினரிடம் விருப்பத்தை உண்டாக்குவது.

38 அரதி - உறவினரிடம் வெறுப்பை உண்டாக்குவது.

39. சோகம் - பொருள இழப்பினால் தோன்றும் துயர மனநிலையைத் தோற்றுவிப்பது.

40 பயம் - அச்சம் தோன்றக் காரணமாவது

41. ஜுகுப்சை - அருவருப்புக்குக் காரணமாவது.

42. பும்வேதம் - ஆடவருடன் சேரவிழையும் உணர்வைத் தோற்றுவிப்பது

43. ஸ்திரீவேதம் - மகளீருடன் சேர விழையும் காதலைத் தோற்றுவிப்பது.

44. நபும்ஸகவேதம் - அலியுடன் சேரவிழையும் உணர்வைத் தோற்றுவிப்பது

விருப்பு, வெறுப்பு ஆகிய எண்ணங்களுக்குக் காரணமாய் இருத்தலைக் கஷாயம் என்கின்றனர். மேலே கூறிய 36 முதல் 44 வரை உள்ள ஒன்பதும் மெல்லிதான கஷாயமாகும்.

### V. ஆயுள் கருமம் - 4

45 நரகாயுள் கருமம் - உயிர் நரகத்தில் இருக்கக் காரணமாவது.

46 திரியக்காயுள் கருமம் - உயிர் விலங்கினத்தில் இருக்கக் காரணமாவது

47. மனித ஆயுள் கருமம் - உயிர் மனிதப் பிறவியில் இருக்கக் காரணமாவது.

48. தேவ ஆயுள் கருமம் - உயிர் தேவப் பிறவியில் இருக்கக் காரணமாவது.

### VI. நாமகருமம் - 93

உடலும் உடல் உறுப்புகளும் தோன்றக் காரணமானது நாமகருமம். இது நாற்பத்து இரண்டு துணைத்தலைப்புகளில் மொத்தம் தொண்ணூற்று மூன்று உட்பிரிவுகளை உடையது.

**கதிநாம கருமம்:** உயிர் அடுத்தடுத்துப் பிறவி எடுத்தற்குக் காரணமானது. இது நான்கு வகைப்படும்.

49. மனுஷ்யகதி நாம கருமம் - உயிர் மனிதப்பிறவி எடுத்தற்குக் காரணமாவது.

50. திர்யக்கதி நாம கருமம் - உயிர் விலங்கினத்தில், தாவர இனத்தில் பிறத்தற்குக் காரணமாவது.

51 தேவகதி நாம கருமம் - உயிர் பவணர், வியந்தரர், ஜோதிஷ்கர், வைமாநிகர் முதலான தேவர்களாகப் பிறப்பதற்குக் காரணமாவது.

52. நரககதி நாம கருமம் - உயிர் நரகப் பிறவி எடுத்தற்குக் காரணமாவது.

**ஜாதி நாம கருமம்** : ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு இனத்தில் உயிர் சேருவதைக் குறிப்பிடுவது ஜாதி நாமகருமம். இது ஐந்து வகைப்படும்.

53. ஏகேந்திரிய ஜாதி நாம கருமம் - உயிர் ஓரறிவுடைய இனத்தில் பிறப்பதற்குக் காரணமாவது.

54 த்வீந்திரிய ஜாதி நாம கருமம் - உயிர் ஈரறிவுடைய இனத்தில் பிறப்பதற்குக் காரணமாவது

55 திரீந்திரிய ஜாதி நாம கருமம் - உயிர் மூவறிவுடைய இனத்தில் பிறப்பதற்குக் காரணமாவது.

56. சதுரிந்திரிய ஜாதி நாம கருமம் - உயிர் நான்கறிவுடைய இனத்தில் பிறப்பதற்குக் காரணமாவது.

57. பஞ்சேந்திரிய ஜாதி நாம கருமம் - உயிர் ஐந்தறிவுடைய இனத்தில் பிறப்பதற்குக் காரணமாவது

**சரீர நாம கருமம்**: உயிர் தங்கவும் உடல் உண்டாவதற்கும் காரணமானது. இது ஐந்து வகைப்படும்.

58. ஔதாரிக சரீர நாம கருமம் - உயிருக்கு பருஉடல் (மனித உடல் அல்லது விலங்கு உடல்) அமையக் காரணமாவது

59. வைக்ரீயிக சரீர நாம கருமம் - உயிருக்குப் பலவித (தேவர் அல்லது நரகர்) வடிவங்களைப் பெறக்கூடிய உடல் உண்டாவதற்குக் காரணமாவது.

60. ஆஹாரக சரீர நாம கருமம் - கண்ணுக்குத் தெரியாத, மிக நுண்ணிய உடல் தோன்றக் காரணமாவது.

61 தைஜச சரீர நாம கருமம் - உடலில் 'மேனி' உண்டாவதற்குக் காரணமாவது.

62. கார்மண சரீர நாம கருமம் - கருமத்தால் ஆகிய நுண்ணிய சரீரத்தைப் பெறுவதற்குக் காரணமாவது.

**அங்கோ பாங்க நாம கருமம்.** தலை, கை, கால், தோள், வயிறு, முதுகு, இதயம் முதலான உறுப்புகளும் (limbs) நெற்றி, மூக்கு, விரல் முதலான துணை உறுப்புகளும் (minor limbs) தனித்தனியாகக் காண்பதற்குக் காரணமான கருமம். இது நான்கு வகைப்படும்

63 ஔதாரிக சரீர அங்கோ பாங்க நாம கருமம் - பரு உடலில் உறுப்புகளும் துணை உறுப்புகளும் தனித்தனியாக அமையக் காரணமாவது.

64 வைக்ரீயிக சரீர அங்கோ பாங்க நாம கருமம் - தேவர் வடிவம் பெறக் கூடிய உடலில் உறுப்புகளும், துணை உறுப்புகளும் தனித்தனியாக அமையக் காரணமாவது

65. ஆஹாரக சரீர அங்கோ பாங்க நாம கருமம் - கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய உடலில் உறுப்புகளும், துணை உறுப்புகளும் தனித்தனியாக அமையக் காரணமாவது.

66. நிர்மாண நாம கருமம் - தகுந்த இடத்தில் சரியான அளவு உறுப்புகளும், துணை உறுப்புகளும் தோன்றக் காரணமாவது குறிப்பாக அந்தந்த ஜாதி நாம கருமத்திற்கு ஏற்றவாறு கண், மூக்கு முதலியவைகள் தகுந்த இடத்தில் தகுந்த அளவு அமைவதற்குக் காரணமாவது

**பந்தன நாம கருமம்** - உடல் உண்டாவதற்குக் காரணமான கருமத்தினால் தகுந்த புத்கலங்கள் ஒன்றாகச் சேர்ந்து அமைவதற்குக் காரணமாவது பந்தன நாம கருமம். இது ஐந்து வகைப்படும்.

67 ஔதாரிக பந்தன நாம கருமம் - பருவுடல் தோன்றக் காரணமான புத்கலங்கள் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமாவது.

68. வைக்ரீயிக பந்தன நாம கருமம் - தேவர் உடலுக்கு தகுந்த புத்கலங்கள் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமாவது.

69. ஆஹாரக பந்தன நாம கருமம் - நுண்ணிய உடலில் தகுந்த புத்கலங்கள் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமாவது.

70. தைஜச பந்தன நாம கருமம் - ஒளி பொருந்திய உடலுக்குத் தகுந்த புத்கலங்கள் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமாவது.

71 கார்மண பந்தன நாம கருமம் - கருமத்தாலான நுண்ணிய உடலில் தகுந்த புத்கலங்கள் ஒன்றாகச் சேருவதற்குக் காரணமாவது.

**சங்காத நாம கருமம்:-** ஔதாரிகம் முதலான மேற் கூறப்பட்ட உடல்களில் இடைவெளியின்றி அமைப்புகள் ஒன்றோடொன்று கூடியிருப்பதற்குக் காரணமாவது சங்காத நாம கருமம். இது ஐந்து வகைப்படும்.

72. ஔதாரிக சங்காத நாம கருமம் - பருஉடலில் புத்கலப் பிரதேசங்கள் இடைவெளியின்றி ஒன்றோடொன்று கூடியிருத்தலுக்குக் காரணமாவது.

73 வைக்ரீயிக சங்காத நாம கருமம் - தேவர் உடலில் புத்கலப் பிரதேசங்கள் இடைவெளியின்றி ஒன்றோடொன்று கூடியிருத்தலுக்குக் காரணமாவது

74 ஆஹாரக சங்காத நாம கருமம் - நுண்ணிய உடலில் புத்கலப் பிரதேசங்கள் இடைவெளியின்றி ஒன்றோடொன்று கூடியிருத்தலுக்குக் காரணமாவது.

75. தைஜச சங்காத நாம கருமம் - தைஜச (மேனி) உடலில் புத்கலப் பிரதேசங்கள் இடைவெளியின்றி ஒன்றோடொன்று கூடியிருத்தலுக்குக் காரணமாவது.

76 கார்மண சங்காத நாம கருமம் - கருமததால் ஆகிய நுண்ணிய உடலில் புத்கலப் பிரதேசங்கள் இடைவெளியின்றி ஒன்றோடொன்று கூடியிருத்தலுக்குக் காரணமாவது.

**சம்ஸ்தான நாம கருமம்**: ஔதாரிகம் முதலான உடலில் உருவம் அமைவதற்குக் காரணமானது சம்ஸ்தான நாம கருமம் இது ஆறு வகைப்படும்.

77. சம சதுரஸ்ய சம்ஸ்தான நாம கருமம் - உடலின் உருவம் உந்திக்கு (கொப்பூழ்) மேலும் கீழும் சமமாக அமைய உதவுகிறது.

78 நிக்ரோத பரிமண்டல சம்ஸ்தான நாமகருமம் - உடலின் மேல் உருவம் (உந்திக்குமேல்) பருத்தும், கீழ் உருவம் சிறுத்தும் இருக்கக் காரணமாவது

79. சுவாதி சம்ஸ்தான நாம கருமம் - உடலின் மேல் உருவம் சிறுத்தும் கீழ் உருவம் பருத்தும் விளங்கக் காரணமாவது சுவாதி நட்சத்திரம் போன்றது.

80. குப்ஜக சம்ஸ்தான நாம கருமம் - முதுகு கூன் உண்டாதற்குக் காரணமாவது.

81. வாமன சம்ஸ்தான நாம கருமம் - குள்ளமாகப் பிறத்தற்குக் காரணமாவது.

82. ஹுண்டக சம்ஸ்தான நாம கருமம் - கால் பெரியதாய், கை சிறியதாய், உடல் பெரியதாய், தலை சிறியதாய் ஒரு சீராக இல்லாமல் உருவம் அமையக் காரணமாவது.

**சம்ஹனன நாம கருமம்** - எலும்புக்ள் ஒன்றோடொன்று இணைந்து இருப்பதற்குக் காரணமானது இது ஆறு வகைப்படும்.

83. வஜ்ர விருஷப நாராச சம்ஹனன நாம கருமம் - வச்சிராயுதத்தைப் போன்ற இரண்டு எலும்புகளின் இணைப்பின் இடையில் பந்துகிண்ண மூட்டுப் போலப் பிணைந்திருப்பதற்குக் காரணமாவது

84. வஜ்ர நாராச சம்ஹனன நாம கருமம் - வச்சிராயுதத்தைப் போன்ற இரண்டு எலும்புகளின் இணைப்பின் இடையில் பந்து இன்றிக் கிண்ணம் மட்டும் இருத்தற்குக் காரணமாவது.

85. நாராச சம்ஹனன் நாம கருமம் - வச்சிராயுதம் போன்றதும் இன்றிப் பந்தும் இன்றிக் கிண்ணம் மட்டும் இட்டுப் பிணைந்திருப்பதற்குக் காரணமாவது.

86 அர்த்த நாராச சம்ஹனன நாம கருமம் - வச்சிராயுதம் போன்றதும் பந்தும் இன்றி ஒரு பக்கத்தில் ஓர் எலும்பில் மட்டும் கிண்ணமும் மற்ற எலும்புகளில் கிண்ணம் இன்றியும் பிணைந்திருத்தற்குக் காரணமாவது.

87 கீலக சம்ஹனன் நாம கருமம் - கீழ்மூட்டு இன்றி எலும்புகளின் இணைப்புகள் ஒன்றோடொன்று இணைந்திருத்தற்குக் காரணமாவது

88 அசம்பிராப்த ஸ்ரீபாடிக சம்ஹனன நாமகருமம் - உள் எலும்புகளின் இணைப்பின்றி நரம்பு, இறைச்சி, முதலியவற்றால் பிணைந்திருப்பதற்குக் காரணமாவது.

**வர்ண நாம கருமம்**- நிறம் அமையக் காரணமான இந்தக் கருமம் ஐந்து வகைப்படும்.

89. சுக்கில நாம கருமம் - உடல் வெண்மை நிறமாக இருப்பதற்குக் காரணமாவது.

90. கிருஷ்ண நாம கருமம் - உடல் கருமை நிறமாக இருப்பதற்குக் காரணமாவது.

91. நீல நாம கருமம் - உடல் நீல நிறமாக இருப்பதற்குக் காரணமாவது.

92. ரக்த நாம கருமம் - உடல் சிவப்பு நிறமாக இருப்பதற்குக் காரணமாவது

93. ஹரித் நாம கருமம் - உடல் மஞ்சள் நிறமாக இருப்பதற்குக் காரணமாவது.

**கந்த நாம கருமம்** - வாசனை உண்டாவதற்குக் காரணமான இந்தக் கருமம் இருவகைப்படும்.

94. சுகந்த நாம கருமம் - உடல் நல்ல மணம் உண்டாவதற்குக் காரணமாவது.

95. துர்கந்த நாம கருமம் - உடலில் கெட்ட நாற்றம் உண்டாவதற்குக் காரணமாவது.

**ரச நாம கருமம்** - சுவை உண்டாவதற்குக் காரணமான இந்தக் கருமம் ஐந்து வகைப்படும்.

96. திக்த நாம கருமம் - உறைப்புச் சுவை தோன்றக் கார்ணமாவது.

97. கடுக நாம கருமம் - கசப்புச் சுவை தோன்றக் காரணமாவது.

98. கஷாய நாம கருமம் - துவர்ப்புச் சுவை தோன்றக் காரணமாவது.

99. ஆம்ல நாம கருமம் - புளிப்புச் சுவை தோன்றக் காரணமாவது.

100. மதுர நாம கருமம் - இனிப்புச் சுவை தோன்றக் காரணமாவது.

**ஸ்பரிச நாம கருமம்** - தொட்டு உணரும் தன்மை உண்டாவதற்குக் காரணமான இது எட்டு வகைப்படும்.

101. கர்கச நாம கருமம் - உடல் கெட்டியாக அமைவதற்குக் காரணமாவது.

102 மிருது நாம கருமம் - உடல் மென்மையாக இருப்பதற்குக் காரணமாவது.

103 குரு நாம கருமம் - உடல் இரும்புபோல அதிக எடை உள்ளதாக அமைவதற்குக் காரணமாவது.

104. இலகு நாம கருமம் - உடல் பஞ்சுபோல் எடை அற்றதாக இருப்பதற்குக் காரணமாவது.

105. ஸ்நிக்த்த நாம கருமம் - உடலில் வழவழப்பான தன்மை தோன்றக் காரணமாவது.

106. ருக்ஷ நாம கருமம் - உடல் சுரசுரப்பாக இருக்கக் காரணமாவது.

107 சீத நாம கருமம் - உடல் குளிர்ச்சியாக இருக்கக் காரணமாவது.

108. உஷ்ண நாம கருமம் - உடல் சூடாக இருப்பதற்குக் காரணமாவது.

**ஆனுபூர்வி நாம கருமம்** - உயிர் ஓர் உடலை விட்டு மற்றோர் உடலில் தங்குவதற்குச் செல்லும் வழி 'விக்ரக' கதி எனப்படும். அந்த விக்ரக கதியில் உயிர் முன்பு இருந்த உடலின் உருவமே கொண்டிருக்கும். ஒரு மனிதன் தேவனாகப் பிறக்க வேண்டுமென்றால் அந்த மனிதன் இறந்த பின்னும் தேவனாகத் தோன்றுவதற்கு முன்னும் உள்ள இடைக்காலத்தில் உயிரானது மனித உருவத்திலேயே இருக்கும். தேவனாகப் பிறந்தபின் மனித உடல் மாறித் தேவ உருவம் பெறும். இதனை ஆனுபூர்வி நாம கருமம் என்பர் இது நான்கு வகைப்படும்.

109 நரககதி ஆனுபூர்வி நாம கருமம் - மனித வடிவைத் தரித்த உயிர் நரகத்திற்குச் செல்லும் வழியிலும் மனித உருவமாகவே இருத்தற்குக் காரணமாவது.

110. திர்யக்கதி ஆனுபூர்வி நாம கருமம் - விலங்கு கதியில் பிறக்கச் செல்லும் மனித உயிரானது வழியிலும் மனித உருவமாகவே இருத்தற்குக் காரணமாவது.

111 மனுஷ்யகதி ஆனுபூர்வி நாம கருமம் - மனிதப் பிறவி எடுக்கச் செல்லும் உயிரானது முன்பு அடைந்திருந்த உருவமே வழியிலும் இருத்தற்குக் காரணமாவது

112. தேவகதி ஆனுபூர்வி நாம கருமம் - தேவகதியினைப் பெறச் செல்லும் உயிரானது முன்பு அடைந்திருந்த உருவமே வழியிலும் இருத்தற்குக் காரணமாவது. (தேவன் விலங்காக, மனிதனாகப் பிறக்க முடியும் நரகத்தில் பிறக்க முடியாது; நரக உயிர் விலங்காக, மனிதனாகப் பிறக்க முடியும்; தேவனாகப் பிறக்க இயலாது. மனிதரும் விலங்குகளும் நான்கு கதிகளிலும் பிறக்கக் கூடும். ஆனால் மனிதப் பிறவியில்தான் முக்தி கிடைக்கும். வேறெந்தப் பிறவியிலிருந்தும் நேராக வீடுபெற முடியாது).

113 அகுருலகு நாம கருமம் - உடல் இரும்புக் குண்டுபோல் கனமாகிக் கீழ்விழும் தன்மையோ, பஞ்சு போல் இலேசாகி மேல் எழும் தன்மையோ இல்லாமல் இருப்பதற்குக் காரணமாவது.

114. உபகாத நாம கருமம் - தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணமான உறுப்புக்களைக் கொண்டிருப்பது (கலைமானின் கொம்பு போல்)

115. பரகாத நாம கருமம் - தன்னால் பிறருக்கு இடையூறு நேரக்கூடிய உறுப்புகளைக் கொள்வதற்குக் காரணமாவது (சிங்கத்தின் கூரிய நகம் போல்).

116 ஆதாப நாம கருமம் - உடல் மிக வெப்பமாக இருப்பதற்குக் காரணமாவது (சூரியன்).

117. உத்யோத நாம கருமம் - உடலில் ஒளி தோன்றக் காரணமாவது (மின்மினிப்பூச்சி).

118. உத்ஸ்வாச நாம கருமம் - மூச்சு விடுவதற்குக் காரணமாவது.

**விஹாயோககதி நாம கருமம்:**- விண்ணில் பறப்பதற்கும், மண்ணில் நடப்பதற்கும் காரணமான இந்த கருமம் இருவகைப்படும்.

119 பிரசஸ்த விஹாயோககதி நாம கருமம் - விலங்குகள் அழகாக நடப்பதற்கும், பறவைகள் அழகாகப் பறப்பதற்கும் காரணமாவது.

120 அப்பிரசஸ்த விஹாயோககதி நாம கருமம் - விலங்குகள் அழகின்றி நடப்பதற்கும். பறவைகள் அழகின்றிப் பறப்பதற்கும் காரணமாவது.

121 த்ரச நாம கருமம் - புழு, பூச்சி, ஈ, எறும்பு முதலான பிறவிகளில் பிறப்பதற்குக் காரணமாவது (ஓரறிவுக்கு மேற்பட்ட உயிரினங்களில் பிறக்கக் காரணமாவது).

122. ஸ்தாவர நாம கருமம் - ஓரறிவு உயிராகப் பிறப்பதற்குக் காரணமாவது.

123. பாதர சரீர நாம கருமம் - பிறரைத் தடுக்கவும் பிறரால் தடுக்கப்படவும் கூடிய உடலைப் பெறுவதற்குரியது (மரம், செடி, கொடி முதலியன).

124. சூட்சும சரீர நாம கருமம் - கண்ணுக்குத் தெரியாத மிகவும் நுண்ணுடலைப் பெறுவதற்குக் காரணமாவது.

125. பர்யாப்தி நாம கருமம் - சக்தி முழுவளர்ச்சி பெறக். காரணமாவது.

126. அபர்யாப்தி நாம கருமம் - சக்தி முழுவளர்ச்சி பெறாமைக்குக் காரணமாவது.

127 பிரத்யேக நாம கருமம் - ஓர் உடலை ஓர் உயிர் அனுபவிக்கக் காரணமான கருமம். ஓர் உடலில் ஓர் உயிரே இருக்கும். வனஸ்பதி காயமாகிய புளியமரம் போன்றவற்றில் அந்த வனஸ்பதி காயிக உயிர் ஒன்றே இருக்கும்.

128. சாதாரண நாம கருமம் - ஓர் உடலில் பல உயிர்கள் அனுபவிக்கக் காரணமாவது இந்த கருமம். ஒரே உடலில் பல உயிர்கள் சேர்ந்து இருக்கும். வனஸ்பதி காயமாகிய வாழை, முருங்கை முதலிய மரங்களில் பல உயிர்கள் கூடி அந்த வாழை, முருங்கை முதலானவற்றிலேயே இருக்கும். அந்த மரத்திற்குரிய உயிர் இறக்கும் போது அந்தப் பல உயிர்களும் இறக்கும். அது பிறக்கும் இடத்தில் அந்தப் பல உயிர்களும் பிறக்கும். அவைகட்கும் சாதாரண நாம கருமத் தோற்றம் உண்டு.

129. ஸ்திர நாம கருமம் - தாதுக்களும் உபதாதுக்களும் நிலையாக இருத்தற்குக் காரணமாவது.

தாது - சாறு, இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, எலும்பிலுள்ள ஊன், விந்து முதலியன

உபதாது - வாதம் (உடம்பிலிருந்து வெளிப்படும் காற்று) பித்தநீர், சளி, நரம்பு, தசைநார், மேல்நார், உமிழ்நீர் முதலியன

130 அஸ்திர நாம கருமம - தாதுக்களும் உபதாதுக்களும் நிலையற்ற தன்மையை அடைவதற்குக் காரணமாவது.

131 சுப நாம கருமம் - காண்பதற்கு இனிய கவர்ச்சியான உறுப்புகள் தோன்றக் காரணமாவது

132. அசுப நாம கருமம் - விகாரமான உறுப்புகள் உண்டாவதற்குக் காரணமாவது.

133. சுபக நாம கருமம் - முன்பின் தெரியாத ஒருவரைக் கண்டபோதே அன்பு தோன்றக் காரணமாவது.

134 துர்பக நாம கருமம் - கண்டவுடனே ஒருவர்மீது வெறுப்பு உண்டாவதற்குக் காரணமாவது.

135 சுஸ்வர நாம கருமம் - பிறரைக் கவரும் வண்ணம் இனிமையான குரல் உண்டாவதற்குக் காரணமாவது.

136. துஸ்வர நாம கருமம் - கேட்பாரின் மனத்தில் வெறுப்புத் தோன்றும் வகையில் இனிமையற்ற கரகரப்பான குரல் உண்டாவதற்குக் காரணமாவது.

137 ஆதேய நாம கருமம் - ஒளிமிக்க உடல் தோன்றக் காரணமாவது.

138 அநாதேய நாம கருமம் - ஒளியற்ற உடல் தோன்றக் காரணமாவது

139. யசஸ்கீர்த்தி நாம கருமம் - புகழ் பெறக் காரணமாவது

140 அயசஸ் கீர்த்தி நாம கருமம் - கெட்ட குணம், பழி ஆகியவை தோன்றக் காரணமாவது.

141. தீர்ததங்கர நாம கருமம் - தீர்த்தங்கரர் தன்மை பெறக் காரணமாவது.

## VII. கோத்திர கருமம் - 2

கோத்திர கருமம் உயர்ந்த, தாழ்ந்த குலத்தில் பிறப்பதற்குக் காரணமாவது, இது இருவகைப்படும்.

142 உச்சைர் கோத்திர கருமம் - உயர்ந்த குலத்தில் பிறக்க காரணமாவது.

143. நீசைர் கோத்திர கருமம் - தாழ்ந்த குலத்தில் பிறக்கக் காரணமாவது.

## VIII. அந்தராய கருமம் - 5

இன்பம் அனுபவிக்க வொட்டாது தடுக்கும் அந்தராய கருமம் ஐந்து வகைப்படும்.

144 தானாந்தராயம் - தானம் கொடுக்க விரும்பினாலும் தடுக்கும் தன்மையது.

145. லாபாந்தராயம் - தொழிலில் லாபம் கிடைக்காமல் தடுப்பது

146. போகாந்தராயம் - உணவு, வெற்றிலை முதலியவற்றை உண்டு அனுபவிப்பதைத் தடுப்பது.

147 உபபோகாந்தராயம் - மனைவி, வீடு முதலியவற்றை அனுபவிக்கவிடாது தடுப்பது. (ஒருமுறை அனுபவிக்கக்கூடிய உணவு, வெற்றிலை முதலியன போகப் பொருள்கள் எனவும், மீண்டும் மீண்டும் அனுபவிக்கக்கூடிய மனைவி, வீடு முதலியன உபபோகப்பொருள்கள் எனவும் கூறப்படும்).

148. வீர்யாந்தராயம் - உடல் சக்தி குறைவாக இருப்பதற்குக் காரணமாவது.

**ஸமிதிகள் ஐந்தாவன:**

1 ஈர்யா ஸமிதி - சாதுகள் நடந்து செல்லும் போது உயிர்களுக்குத் துன்பம் வராமல் நடக்கவேண்டும்.

2 பாஷா ஸமிதி - சாதுகள் முக்திப் பாதைக்கான அறவுரைகளை உரைப்பது.

3. ஏஷணா ஸமிதி - சாதுகள் உணவை மேற்கொள்ளும் முறை பற்றியது.

4 ஆதானநிட்சேபணா ஸமிதி - சாதுக்கள் வைத்துக் கொள்வதற்காக அனுமதிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்துவதில் கவனமாக இருத்தல் பற்றியது.

5 உத்சர்க்க ஸமிதி - உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களைப் பிற உயிர்களுக்குத துன்பம் நேராதவாறு பார்த்து அப்புறப்படுத்துவது பற்றியது.

**பஞ்ச பரிவர்த்தனை**

பஞ்ச - ஐந்து, பரிவர்த்தனை - மாற்றங்கள்.

1 திரவ்ய பரிவர்த்தனை - பொருள் மாற்றம்.

2. க்ஷேத்ர பரிவர்த்தனை - இடமாற்றம்.

3. கால பரிவர்த்தனை - கால மாற்றம்.

4. ப்பாவ பரிவர்த்தனை - உணர்வு மாற்றம்.

5. பவ பரிவர்த்தனை - பிறவி நிலைமாற்றம்.

**விபாகதுக்கம் - மூன்று**

வினையின் உதயத்தால் அடையும் துன்பத்திற்கு விபாக துக்கம் என்று பெயர். இவை சரீர (உடல்) துக்கம். மானஸ (மனது) துக்கம் சுகதுக்கம் என்பன.

**கரணம் - மூன்று**

கரணம் - ஒருவிதி நிலை. மனோ வந்தக் கரணம், வாக்கந்தக் கரணம், காயவந்தக் கரணம்.

**கஷாயம் - நான்கு**

விருப்பு வெறுப்பு ஆகிய எண்ணங்களுக்குக் காரணமாயிருத்தலைக் கஷாயம் என்பர்.

அவை சினம், செருக்கு, வஞ்சனை, பேராசை என்பனவாம்.

1 அன்ந்தானுபந்தி - பல பிறவிகளில் தொடரக்கூடிய கஷாயம்.

2. அப்ரத்யாக்யானம் - இல்லற நெறியைத் தகர்க்கும் கஷாயம்.

3. பிரத்யாக்யானம் - துறவற நெறியை கெடுக்கும் கஷாயம்.

4 சஞ்சுவலனம் - மிகவும் தூய்மையான ஒழுக்கத்தைக் கெடுக்கும் கஷாயம்.

**ஆஸ்ரவம் - பத்து**

ஆஸ்ரவம் - வினை உயிருடன் சேர வருதல்.

1 ஹீநாஸ்ரவம் - குறைந்த அளவு வினை உயிருடன் சேர வருதல்

2. அவதிகாஸ்ரவம் - ஓர் அளவுக்கு உட்பட்டு வினை உயிருடன் சேர வருதல்.

3. ஈர்யா பாதாஸ்ரவம் - நடந்து செல்வதால் வரும் வினை உயிருடன் சேர வருதல்.

4. கஷாயாஸ்ரவம் - சினம், செருக்கு, வஞ்சனை, பேராசை இவைகளின் காரணமாக வரும் வினை உயிருடன் சேர வருதல்.

5. ஞானாஸ்ரவம் - நல்லறிவைப் பெறுவதற்குக் காரணமான வினை உயிருடன் சேர வருதல்.

6. அஞ்ஞானாஸ்ரவம் - தீய அறிவு உண்டாவதற்குக் காரணமான வினை உயிருடன் சேர வருதல்.

7. புண்ணியாஸ்ரவம் - புண்ணியத்திற்குக் காரணமான வினை உயிருடன் சேர வருதல்.

8. பாவாஸ்ரவம் - பாவத்திற்குக் காரணமான வினை உயிருடன் சேர வருதல்.

9. திரவ்யாஸ்ரவம் - சீவப் பொருட்களுக்குக் காரணமான வினை உயிருடன் சேர வருதல்.

10. பவராஸ்ரவம் - நால்வகைப் பிறவிக்குக் காரணமான வினை உயிருடன் சேர வருதல்.

**விரதம் பன்னிரெண்டு**

இல்லறத்தார்கள் கடைபிடிக்க வேண்டிய விரதங்கள் பன்னிரெண்டு. இவைகளை அணுவிரதம் ஐந்து, குணவிரதம் மூன்று, சிட்சாவிரதம் நான்கு என மூவகைப்படுத்துவர்.

**அணுவிரதம்** - 1. கொல்லாமை, 2. பொய்யாமை, 3. கள்ளாமை, 4. பிறன்மனை விரும்பாமை, 5. மிகுபொருள் விரும்பாமை.

1. **கொல்லாமை** - இயங்குந்தன்மை வாய்ந்த எவ்வுயிரையும் கொல்லா தொழிதலும் பிறரை ஏவி அவ்வுயிர்களைக் கொல்லுமாறு செய்யாதிருத்தலும் ஆகும்.

2. **பொய்யாமை** - தீவினைப் பயன்களுக்குக் காரணமாக விளங்குவதும் தனக்கும் பிறர்க்கும் துன்பத்தை விளைவிப்பதுமாகிய பொய்யினைப் பேசாதிருத்தல்.

3. **கள்ளாமை** - ஒருவர் தாமாகக் கொடுக்காத பொருளைத் தமக்கு உரியதாகக் கவர்ந்து கொள்ளாமலிருப்பதுவும் பிறர் பொருளைத் திருடி வருமாறு தூண்டி ஒருவரையும் ஏவாமலிருப்பதும் ஆகும்.

4. **பிறர்மனை விரும்பாமை** - தந்தையும், தாயும், குருவும், சுற்றமும் ஆகிய பலர் முன்னிலையில் நடைபெற்ற வாழ்க்கையை விட்டு, பிறவழிகளில் இன்பந் துய்ப்பதாகிய செயலை உள்ளத்தாலும் நினையாது ஒழுகுவது.

5. **மிகுபொருள் விரும்பாமை** - நிலம், வீடு முதலிய பொருள்களில் பேராசை கொள்ளாமல், தன்னிடம் உள்ள பொருள்களிலேயும் மிகுதியான பற்று கொள்ளாமல், அவாவினைக் குறைத்து வாழ்வதும், தங்களுக்குத் தேவையான பொருள்களைக் காட்டிலும் மிகுதியான பொருள்களை விரும்பி ஈட்டுமாறு பிறரை ஏவாமலிருப்பதும் ஆகும்.

**குணவிரதம்** - 1. திக்விரதம் 2. அனர்த்ததண்டவிரதம் 3. போகோப போக பரிமான விரதம்.

1. **திக்விரதம்** - எண்திசைகள், கீழ், மேல் ஆகிய பத்து திக்குகளிலும் இவ்வளவு தூரத்திற்கு மேல் இறக்கும் வரையில் செல்வதில்லை என எல்லை வரையறை செய்து கொண்டு ஒழுகுவது.

2. **அனர்த்த தண்ட விரதம்** - பிறருக்குத் துன்பம் கொடுக்கும் தீய சிந்தனை, கொலைக்குக் காரணமான உரைகள். பயன் இல்லாச் செயல்கள், பிற உயிர்களின் கொலை அல்லது துன்பத்திற்குக் காரணமான மண்வெட்டி, அரிவாள், நெருப்பு முதலியன கொடுப்பது, தீய வினைகள் வந்தடைவதற்கேதுவாகிய நூல்களைப் படித்தல் ஆகியவற்றைத் தவிர்த்து வாழ்வது,

3. **போகோப போக பரிமான விரதம்** - ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் உணவு, சந்தனம் முதலிய போகப்பொருளும். பலமுறை பயன்படுத்தப்படும் அணிகலன்கள், ஆடைகள் முதலான பொருட்களையும் குறிப்பிட்ட அளவிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வரையறை செய்துகொள்வது.

**சிட்சாவிரதம்** - 1. தேசவிரதம், 2. சாமயிகம், 3 புரோஷதோபவாசம், 4 அதிதிசம்விபாகம்.

1. **தேசவிரதம்** - இறக்கும் வரையில் பின்பற்ற ஏற்றுக்கொண்ட திசைவிரத எல்லையினுள்ளேயும், ஓரிடத்திற்கு வெளியே குறிப்பிட்ட காலம் வரையில் செல்வதில்லை என வரையறை செய்து கொள்வது

2. **சாமாயிக விரதம்** - மனம், மொழி, மெய் இவற்றால் வரும் வினைகளைத் தடுத்து நிறுத்த ஆன்ம சிந்தனை செய்தல். இதை காலை, பகல், மாலை ஆகிய நேரங்களில் குறைந்தது நாற்பத்தெட்டு நிமிட நேரத்திற்கு அமைதியான சூழ்நிலையில் செய்ய வேண்டும்

3. **புரோஷதோபவாசம்** (பேசாத உபவாசம்) - சதுர்த்தசி, அட்டமி, பௌர்ணமி ஆகிய நாட்களில் உண்பன, பருகுவன, தின்பன, நக்குவன ஆகிய நால்வகை உணவுகளையும் சிறிதும் பற்றின்றி நீக்கியிருத்தல்.

4. **அதிதி சம் விபாகம்** - (தூயோருக்கு உதவுதல்) உணவு, மருந்து, தங்குமிடம், நூல், பொருட்கள் ஆகியவற்றை தூயோருக்கு அளிதது உபசரித்தல் இப்பன்னிரெண்டு விரதங்களையும் கடைபிடிப்பது விரதம் எனவும் கடைப்பிடிக்காமல் விடுவது அவிரதம் எனவும் கூறப்படுகிறது.

**திரிகுப்தியாவன** (குப்தி - அடக்குதல்)

1. மனோகுப்தி - மனதை அடக்குதல்.

2 வாக்குப்தி - பேச்சை அடக்குதல்.

3. காயகுப்தி - உடலை அடக்குதல்.

**தச தருமம்** ( பத்துத் தருமங்கள்).

1. உத்தம க்ஷமை - முற்றிலும் கோபமின்மை.

2. உத்தம மார்த்தவம் - செருக்கு கொள்ளாதிருத்தல்.

3. உத்தம ஆர்ஜவம் - கபடம் செய்யாதிருத்தல்.

4. உத்தம சௌசம் - பேராசையை நீக்கி ஆத்மனை தூய்மையாக்குதல்.

5. உத்தம சத்தியம் - முற்றிலும் உண்மை பேசுதல்.

6 உத்தம சம்யமம்- ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்குதல்.

7. உத்தமத் தவம் - அறநூல்களில் கூறியவாறு தவநிலைகளை மேற்கொள்ளுதல்.

8. உத்தமத் துறவு - எல்லாவகைப் பற்றுகளையும் துறத்தல்.

9. உத்தமத் தியாகம் - பதில் உபகாரத்தை எதிர்பாராமல் அறிவு முதலியவற்றைத் தானம் செய்தல்.

10. உத்தம பிரமசரியம் - பெண்ணாசையை முற்றிலும் விடுதல்.

**துவாதசானுப்ரேட்சை (பன்னிரெண்டு சிந்தனைகள்)**

1. அநித்தியானுப்ரேட்சை - (நிலையாமைச் சிந்தனை) இவ்வுலகத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் மின்னலைப் போன்று அழியும் தன்மை வாய்ந்தது எனச் சிந்தித்தல்.

2. அசரணானுப்ரேட்சை - (அரணின்மைச் சிந்தனை) பசியோடு உள்ள புலியின் முன் அகப்பட்ட மான்குட்டியைக் காப்பாற்ற இயலாதது போன்று இறக்கும் உயிரை எவராலும் காப்பாற்ற முடியாது. ஆகவே நற்செயலை செய்து அந்த இறப்பினையே ஒழித்திட முயலவேண் டுமென சிந்தித்தல்.

3. சம்சாரானுப்ரேட்சை - (பிறவித் துன்பச் சிந்தனை) நரகம் முதலான நான்கு பிறவிகளில் உண்டாகும் பிறவித் துன்பத்தை அடிக்கடி நினைத்தல் பிறவித் துன்புச் சிந்தனையாம்.

4. ஏகத்துவானுப்ரேட்சை - (தனிமைச் சிந்தனை) தான் செய்த வினையைத் தானே அனுபவித்தல் வேண்டும். பிறப்பிலும், இறப்பிலும் தான் ஒருவனேத் தவிர வேறு எந்த உறவினரும் உதவிக்கு வரமாட்டார் எனச் சிந்தித்தல்.

5. அந்நியத்வானுப்ரேட்சை - (உறவின்மைச் சிந்தனை) உயிரும், உடலும் பாலும், நீரும் போல வெவ்வேறானதாகும். மனைவி, மக்கள், உற்றார், உறவினர் ஆகியவர்களும் வேறானவர்களே எனச் சிந்தித்தல்.

6 அசுசித்வானுப்ரேட்சை - (உவர்ப்புச் சிந்தனை) இவ்வுடல் இரத்தம், மாமிசம் போன்ற ஏழு வகையான தூய்மையற்ற தாதுப்பொருட்களால் நிரம்பியுள்ளது. இதை எவ்வித வாசனைத்திரவியங்களாலும் மணமுள்ளதாக ஆக்க இயலாது என இவ்வுடலின் உண்மை நிலையைச் சிந்தித்தல்.

7. ஆஸ்ரவானுப்ரேட்சை (ஊற்றுச்சிந்தனை) உண்மைக்கு மாறானதும் தீயதுமான எண்ணங்களால் வினை ஆன்மாவைத் தொடர்கிறது. அதுதான் இந்தப் பிறவிக்கு மூல காரணம் என எண்ணுதல்.

8. சம்வரானுப்ரேட்சை - (செறிப்புச்சிந்தனை) ஆன்மாவை வினைகள் தொடரா வண்ணம் தடுப்பது சம்வரம் ஆகும். அதனால் தான் ஆன்மா நன்மையைப் பெறமுடியும் என எண்ணுதல்.

9 நிர்ஜரானுப்ரேடசை - (உதிர்பபுச் சிந்தனை). தவம் முதலியவற்றால் ஆன்மாவைப் பிணைந்துள்ள வினைகளை விலக்குதல் நிர்ஜரை என உணர்ந்து அதன் பயனால் தான் ஆன்மா தூய நிலையை அடைய முடியும் என்று எண்ணுதல்.

10 லோகானுப்ரேட்சை - (உலகச் சிநதனை) உலகத்தின் நிலையை உள்ளது உள்ளபடி சிந்தித்துப் பார்த்தல்

11 போதிதுர்லபானுப்ரேட்சை - நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மும்மணியின் நல்லறிவைப பெறுதல் மிகவும் அரிது எனச் சிந்தித்தல்.

12. தர்மஸ் வாக்யா தத்வானுப்ரேட்சை - (அறச்சிந்தனை) அருகப் பெருமானது அறவுரைகளே உயிர்களுக்கு நன்மை தரும் என்றும், அவற்றை மறந்தால் துன்பமேநேரும் என்றும் சிந்திததல்

**பாஹ்யதபம் (புறத்தவம்) ஆறாவன-**

1. அனசனம் - கருமங்களும் ஆசைகளும் விலகவும், ஐம்பொறிகளும் மனமும் கட்டுப்படவும், ஓரறிவு முதலான உயிர்களைப் பாதுகாக்கவும்,தியானம் பெருகவும், நால்வகை உணவைத் துறப்பது (அசனம் - உணவை உட்கொள்ளுதல், அனசனம்- உணவைத் துறத்தல்)

2 ஆவமோதரியம் - நாளடைவில் சிறிது சிறிதாக உணவைக்குறைததல்

3 விருத்தி பரிசங்யானம் - முனிவர்கள் உணவை ஏற்கச் செல்லுங்கால் அவ்வுணவின் மீது ஏற்படும் பற்றுத் தொலைவதற்காக 'இன்றைக்கு இத்தனை தெருவுக்கு மேலும், இத்தனை வீட்டுக்கு மேலும் செல்வதில்லை' என்றும் 'இன்று இததனை பொருள்களுக்கு மேல், இத்தனை நாழிகைக்கு மேல் உண்பதில்லை' என்றும் "நியம விரதம்" மேற்கொள்வது

4. சுவை பரித்தியாகம் - சுவை துன்பத்திற்கிடமானது என்பதையறிந்து நெய், எண்ணெய் முதலிய சுவைகளைத் தியாகம் செய்தல்

5 விவித்த சய்யா - கொடிய விலங்குகள் வசிக்கும் காட்டில் தங்குதல்.

6 காயக்லேசம் - வெய்யில் மிகும் கோடைக் காலத்திலும், மழை மிகும் மாரிக் காலத்திலும், குளிர் மிகும் பனிக்காலத்திலும் கலங்காமல் தவம் செய்து உடலைச் சுருக்குதல்.

**அந்தரங்க தபஸு (அகத்தவம்) ஆறாவன-**

1. பிராயச்சித்தம் - தாம் அறியாது செய்த குற்றங்களை விலக்கல்.

2 விநயம் - நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மும்மணிகளையும் மேற்கொண்டு ஒழுகுவாரிடத்தும் பணிவாய் இருத்தல்.

3. வையாவ்விருத்தியம் - பிறருக்கு நேர்ந்த துன்பத்தைக் களைதல்.

4. ஸ்வாத்யாயம் - கருமங்கள் நீங்குவதற்குக் காரணமான சாத்திரங்களைப் படித்தல்; பிறருக்கு உபதேசித்தல்

5. வ்யுத்ஸர்க்கம் - கழிவுப் பொருள்களைக் கழிக்கும் போது மனிதர்கள் நடமாடாத புழு பூச்சிகள், வளைகள் இல்லாத இடங்களில் கழிதல்.

6. தியானம் - நால்வகைத் தியானங்களில் ஆர்த்தத்தியானம் ரௌத்திரத்தியானம் இரண்டையும் விளக்கித் தருமத் தியானம், சுக்கிலததியானம் இரண்டையும் மேற்கொள்ளுதல்.

**விஷய சம்யமம்** - மெய், வாய், கண், மூக்கு, செவி மனம் என்பனவற்றின் வாயிலாக ஏற்படும் உணர்வுகளை அடக்குதல்.

**பிராணி சம்யமம்** - மண், நீர், நெருப்பு, காற்று, மரம் ஆகிய ஓரறிவு உயிர்களுக்கும், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து அறிவு கொண்ட நகரும் உயிர்கள் என்னும் பிராணிகளுக்கும் துன்பம் தராது போற்றுவது

**பரிசக சயம் - துன்பம் பொறுத்து வெல்லுதல் - 22**

வீடு பேற்றை விரும்புவோர் தியானம் குலையாது, விரதம் கெடாது, தவம் சிதையாது பார்த்துக்கொள்ளவேண்டும். இவற்றை மேற்கொள்ளும்போது இடையூறு நேரும் இதற்குப் பரிசகம் (துன்பம்) என்று பெயர். இத்துன்பத்தைக் கண்டு மனம் தளரவும் கூடாது; துன்பத்தைப் போக்கவும் முற்படக் கூடாது, ஏற்றுப் பொறுதல் வேண்டும். இவ்வாறு பொறுத்து வெல்லுவதனைப் 'பரிசக சயம்' என்பர். மனம் தொடர்பாக உண்டாகும் பதின்மூன்று துன்பங்கள் 'அப்யந்தர பரிசகம்' (அகத்துன்பம்) எனவும், உடல் தொடர்பாக வரும் ஒன்பது துன்பங்கள் பாஹ்ய பரிசகம் (புறத்துன்பம்) எனவும் கூறப்படும். ஆக, பரிசக சயம் இருபத்தி இரண்டாகும்.

1. பிபாசா பரிசக சயம் - நீர் வேட்கையை வெல்லுதல்.

2. க்ஷுத் பரிசக சயம் - பசியை வெல்லுதல்.

3. ரோக பரிசக சயம் - நோயை வெல்லுதல்.

4 யாசநா பரிசக சயம் - இரத்தலை வெல்லுதல்.

5. அலாப பரிசக சயம் - ஏமாற்றத்தை வெல்லுதல்.

6 நிஷத்யா பரிசக சயம் - இருத்தல் துன்பத்தை வெல்லுதல்.

7 சர்யா பரிசக சயம் - ஓரிடம் விட்டு ஓரிடம் போதலால் வரும் துன்பத்தை வெல்லுதல்.

8. சய்யா பரிசக சயம் - கிடததலால் வரும் துன்பம்.

9. நாக்ன்யா பரிசக சயம் - உடுத்தாமையால் வரும் துன்பம்.

10. அதர்சன பரிசக சயம் - காணாமையால் வரும் துன்பத்தை வெல்லுதல்.

11. ப்ரக்ஞா பரிசக சயம் - அறியார் துன்பத்தை வெல்லுதல்.

12. அஞ்ஞான பரிசக சயம் - ஞானமின்மை உணர்வை வெல்லுதல்.

13. அரதி பரிசக சயம் - புலனாசைத் துன்பத்தை வெல்லுதல்.

14. உஷ்ண பரிசக சயம் - வெப்பத்தை வெல்லுதல்

15 சீத பரிசக சயம் - குளிரை வெல்லுதல்.

16. மல பரிசக சயம் - மாசுணர்வை வெல்லுதல்

17. சத்கார, புரஸ்கார பரிசக சயம் - புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் பொறுந்தல்.

18. ஆக்ரோச பரிசக சயம் - விருப்பமற்ற சொல்லை வெல்லுதல்

19 வத பரிசக சயம் - கொலையுணர்வை வெல்லுதல்

20. தம்சமசக பரிசக சயம் - ஈ, கொசு, எறும்பு முதலியவை கடிப்பதால் ஏற்படும் துன்பங்களைப் பொறுததல்

21 த்ருஷ்ண ஸ்பரிச பரிசக சயம் - உடல் தினவு, காலில் தைக்கும் முள், புல் முதலிய வற்றைப் பொறுத்தல்

22. ஸ்திரி பரிசக சயம் - பெண்ணாசையை வெல்லுதல்.

**கரணத் திரயமாவன**

1. அதப் பிரவிருத்திக்கரணம் - முதல் கட்ட செயல்பாடு

2. அபூர்வக் கரணம் - இதற்கு முன் நடைபெறாத செயல்பாடு.

3. அநிவிருததிக் கரணம் - அந்தச் செயல்பாடானது மாற்ற முடியாத செயல்பாடு

**சாதன வத்துக்கள் ஐந்து**

1. மானுஷ்ய தேகம் - மனித உடல்

2 கர்ம்ம பூமி - வினையை வேரறுக்குமிடம்.

3. மோட்சமடையும் காலம் - முக்தியைப் பெறக்கூடிய காலநிலை.

4 சுப்பரிணாமம் - நல்ல எண்ணம்.

5. முடிந்த பவங்கள் - பிறவியின் முடிவு.

நன்ஞானம் - ஒருவர் உயிர், புத்கலம், தருமம், அதருமம், ஆகாயம், காலம் ஆகியவற்றின் தன்மையை உள்ளது உள்ள படியே உணர்ந்து கொள்வதாகும்.

நற்காட்சி - இது பொருட்களின் இயற்கையாய் அமைந்த அவற்றின் உண்மையான பண்புகளை அறிந்து நம்புதல் ஆகும்.

நல்லொழுக்கம் - வினைகள் தன்னை வநது சேராது தடுத்து, தங்கிய வினைகளை நீக்கி அதற்கேற்ற அறவழியில் நடப்பது

சினதருமம் - நால்வகை கதிகளில் ஏறபடும் துன்பங்களை அகறறி நிலைப்பேறான மோடச இன்பததைத தரக்கூடிய அருகநெறி.

அபிமானம் - செருக்கு இகம் - இப்பிறப்பு பிரயோசனம் - பலன்

## *Tavam*

## *kaliveṇpā*

*Nūṉmoḻiyu māṟu nuḻaintu numakkurutip*
*pāṉmaiya vākap palanāṭi - yāṉmoḻiyak*

*kēṇmi ṉamaraṅkāḷ kēṭiṉṟı niṟpatuyir*
*kāṇmi ṉuṭampu kaviṉiḷamai - kēṇmaiyuṭaṉ*

*vallāṇmai celvameṉ ṟivvellām vāṉattu*
*villāku meṉṟē viḻaiyaṉmiṉ - ṟollai*

*muraṇār viṉaippakaivar mūḻuṅkāl vāmaṉ*
*caraṇāra vintaṅka ḷallā - laraṇāyni*

*reṇṇum poruḷcuṟṟam yākkaiyeṉ ṟiṉṉavelām*
*naṇṇuñ caraṇāka nāṭaṇmi - ṉeṇṇiṟanta*

*vūḻika ḷellā mulavāt taṭumāṟṟat*
*tāḻika ḷainti ṉaṉantamuṟai - cūḻuṅ*

*karaṅki ṉuḻaluṅ katitōṟun tuṉpam*
*piṟaṅkum piṟappañci vāḻmiṉ - ciṟanta*

*piṟappiṟappu mūppup piṇikaḷeṉun tuṉpa*
*muṟappuṇara yāṉuḻakkuṅ kālai - yaṟattiṟañcērn*

*tiyāṉā moruvaṉē yalla teṉakkumaṟ*
*ṟēṉōr tuṇaiyalla reṉṟaṟimi - ṉiṉamilcirc*

*cētaṉamā lāvi yacētaṉamā livvuṭam*
*pātaliṉāl vēṟāya vavvitaṇtuñ - cērtaliṉāl*

*maṉṉumoṉ ṟāyviṭiṉum vāḷun taṭarumpōṟ*
*piṉṉa meṉavē pirittuṇarmiṉ - ṟuṉṉum*

*puḷuppiṉṭa mākip puṟañceyyun tūymai*
*viḻupporuḷai vīṟaḻippa tāki - yaḻukkoḻuku*

*moṉpatu vāyiṟṟā mūṉkurampai maṟṟitaṉā*
*liṉpamatā meṉṉā tiḻittuvarmiṉ - ṟuṉpaṉ*

*tuḷakkamām yōkan tuvaraṭakka miṉmai*
*viḷakkamīṟik kāṭci yivaṟṟaṟ - kiḷappariya*

*vīṟilviṉai yīrai tiṟatti ṉematuyirkka*
*ṇūṟu meṉavē yuṇarntuymmiṉ - vīrucāl*

*kutti camiti yaṟañcintai kōtilā*
*meyttavamī ṟāṟaṭakka meṉṟivaiyā - lotteḻunta*

*māṟāta ñāṉa tiyāṉattāl valviṉaika*
*ḷūṟātu māṟumvakai yuḷḷumiṉkaḷ - kūṟum*

*parica kacayaṉ tavamaṭakka mūṉṟāl*
*viritaru ñāṉa tiyāṉat - taruviṉaikaḷ*

*tatta nilaiyō taṉupākaṉ tāṅkuṟain*
*totta vutirppā meṉatterimiṉ - vaitta*

*vaṭiyēḻ kayiṟṟiṭaika ḷoṉṟuṭaṉain toṉṟu*
*muṭiyēḻ kayiṟṟiraṭṭi yōkkam - paṭiyaḷavāṉ*

*tollulaku palluyirun tōṟṟaṟkum·vīṭṭaṟku*
*mellaiyiṭa meṉṟiyaintu nōkkumiṉkaḷ - colli*

*ṉariya poruṇmutalāñ cātaṉaṅka ḷaintum*
*piriviṉ ṟuṭaṉpeṟṟāṟ piṉṉun - terivuṭaiya*

*ñāṉat teḷivoḻukka mākiya nallaṟan*
*tāṉaṟ karitāṉ takainiṉaimiṉ - māṉantīrn*

*timmai kuṟiyā titamu maturamumā*
*meymmai yaruḷcurantu vīṟamaintu - poymmai*

*kaṟuvikanta cevvitiṉaṟ kāṭciyarpāṟ ṟōṉṟu*
*muṟuti moḻiyariteṉ ṟōrmiṉ - maṟuviliv*

*vīrāṟu cintaikaḷu miṉpavula keytuvārk*
*kōrā ṟeṉapparama ṉōtiyavāṟ - pēṟā*

*tuḷaṅkoṉ ṭivaiyivai pēṉit tuḷaṅkātu*
*vaikalu moḻukutal cūtē.*

Oh! Kinsfolk ours,
Do listen to what I state,
On the values that provide security for your next birth,
As prescribed by the path and code of *paramākamam*
Be Thou aware that *uyir* alone is imperishable and eternal
The human body, beauty, youth and relations
Besides valour and pelf are all but transitory
Like the rainbow which doth appear on the sky and vanish
Hence desire them not,
Do not delude yourselves with the thought that,
When the mighty foes a hundred and forty eight of your *viṉai* past,
Confront you,
Except the protective lotus feet of Arukar,
Your wealth, body and kinsfolk
Which you consider as your refuge secure,
Will protect you
In the ocean of birth unspoilt over aeons many,
Do live with the apprehension of birth miserable,
Which doth revolve innumerable times like a fan,
In the *nāṟkati* impelled by the *pañcaparivarttaṉai,*
When the pangs of birth four,
Birth, death, disease and oldage afflict me but acutely,
And when I suffer most from ills those,
(Let me) realize that I am a lonely self
And none else will come to my support
(Let me) know this and seek (salvation) in *tiruvaṟam*
*Uyir* alone which is specially flawless hath intelligence

The body is inanimate sans knowledge
Though these two (units) of contradictory nature
Are mingled as one.
Do distinguish and realize,
That they are different ones.
Like a sword and its sheath.
This human body (of ours)
Is but a mass of flesh with holes nine,
Through which *malams* dirty flow and leak,
A mass infested thickly with worms
Which destroys the greatness of the fine things
That doth cleanse the exterior.
Hence deride and hate (this body)
Without contemplating any pleasure through it.
Beware of the possibility of the endless *viṉai*
Reaching *uyir* through the *āsravam* tenfold,
By means of the *karaṇams* three, *kacāyams* four
*Avaviratams* twelve and the *tīkkāṭci* hazy
And try to escape from *viṉai* such
Do contemplate the means of making the *viṉais* mighty,
Leave without reaching us,
Through *kupti* three *camiti* five, *aṟam* ten
*Cintai* twelve, penances internal and external twelve,
And *aṭakkam* twelve
Besides the never-leaving *tattuvañāṉam* and *tarumattiyāṉam*
Learn that the *viṉais* rare whose *stiti* and *aṉupākam* alliance with *uyir*,
Along with the *paricakaceyams* twentytwo of special mention,
Penances and vows five,
By means of wisdom profound and meditation,
(The duration of such an alliance)
Will decrease every second,
And shed according to one's thought, word and deed.

This world (of ours)
Is seven *kayiṟu* wide at the bottom,
One *kayiṟu* wide at the centre,
Five *kayiṟu* wide above it,
And one *kayiṟu* wide at the top,
Seven *kayiṟu* in its length entire,
And a height of fourteen *kayiṟu*
Do see this hoary world properly as a venue suitable,
For the *uyir* various,
To be born to die and to attain *mukti*
Do realize, as mentioned, That *tiruvaṟam* glorious and beneficial
Acquired by the simultaneous attainment of *cātaṉam* objects five
Such as wealth and the like,
Besides *naṟkāṭci, naṉñāṉam* and *nalloḻukkam*
(Such *tiruvaṟam*)
Is of value rare
Do know that the virtuous counsel fortifying *uyir*,
Of the visionaries of *naṟkāṭci*,
Who are people of rectitude sans arrogance,
Who contemplate not the benefits worldly,
Who are gentle and sweet towards *uyir* all,
Who are glorious with grace genuine,
And who are devoid of falsehood and hostility,
(The spiritual counsel of such visionaries)
Is but rare for us to learn and cxherish
Lord Arukar hath asserted.
That their flawless thought, twelve
Pave the peerless path to the the world of *mukti*,
Where lasting and perfect pleasure is enjoyed
Hence it'll be but benificial for us,
To reflect over thoughts these ceaselessly and cherish,
And abide by them day by day in tireless zeal.

## Explanatory notes

**The eight *karumāms* and their 148 subdivisions.**

***Karumāms***

1. *ñāṉāvaraṇīyam* - That which conceals the natural and true wisdom of *uyir*.
2. *tarcaṉāvaraṇīyam* - That which conceals the vision or sight and trust of uyir.
3. *vētaṉīyam* - That which confers joys and sorrows
4. *mōkaṉīyam* - Causing illusions to prevent one's realization of reality.
5. *āyuḷ* - Determining the span of life
6. *nāmam* - Causing the appearance of human organs and complexions.
7. *kōttiram* - Causing one's birth in higher or lower communities.
8. *antarāyam* - Preventing the enjoyment of profits or benefits.

The 148 sub-divisions of the eight karumams are as follows:

**I. The 5 subdivisions of *ñāṉāvaraṇīyam***

1. *mati ñāṉā varaṇīyam* - Concealment of naturally discerning knowledge
2. *curuti ñāṉā varaṇīyam* - Prevention of the acquisition of bookish knowledge
3. *avati ñāṉā varaṇīyam* - Concealment of one's perception or awareness of one's previous birth.
4. *maṉapparyaya ñāṉā varaṇīyam* - Prevention of one's capacity to read the minds of others
5. *kēvala ñāṉā varaṇīyam* - The act of preventing all beings of this world from the knowledge of the past, present and future.

**II. The 9 sub divisions of *Tarcaṉā varaṇīyam***

6. *cakcu tarcaṉā varaṇīyam* - Concealment of what one sees with one's own eyes.
7. *acakcu tarcaṉā varaṇīyam* - Concealment of the sensory perceptions of body, mouth, eyes, nose, and ears.

| | | | |
|---|---|---|---|
| 8. | *avati tarcanā varaṇīyam* | - | Prevention of what could be seen by means of *avatiñāṉam* i.e. the limited knowledge of other things through one's soul. Without the help of five senses and subject to the restrictions of time and boundary (of space) |
| 9. | *kēvala tarcanā varaṇīyam* | - | Preventing the vision that could be obtained through *kēvalañāṉam* directly without the assistance of mind or the five senses. |
| 10. | *nittirai* | - | That which causes sleep. |
| 11. | *nittirā nittirai* | - | That which causes excessive slumber |
| 12. | *piracalai* | - | That which causes a little or perfunctory sleep |
| 13. | *piracalā piracalai* | - | Slumber in a sitting posture |
| 14. | *styāṉa krunti* | - | Sleep-walking and working or prattling in sleep. |

**III. The 2 sub divisions of *vētaṉīyam***

| | | | |
|---|---|---|---|
| 15. | *Cātā vētaṉīyam* | - | That which causes pleasure through one's mind and five senses. |
| 16. | *Acātā vētaṉīyam* | - | That which is responsible for various sorrows |

**IV. The 28 subdivisions of *mōkaṉiya karumam* fall under 2 categories, i.e. *tarcaṉa mōkaṉīyam* and *cāritra mokaṉīyam*.**

**The 3 sub divisions of *Tarcaṉa Mōkaṉiyam***

| | | | |
|---|---|---|---|
| 17. | *mityātvam* | - | That which causes *tīkkaṭci* which does not believe in Arukar's teachings *naṟkāṭci* will appear only after this illusion is removed. |
| 18. | *camyak mityātvam* | - | That which causes a blend of *tīkkāṭci* and *naṟkāṭci* like a mixture of sourness and sweetness. |
| 19. | *camyaktva pirakkiruti* | - | That which does not entirely spoil *naṟkāṭci* but causes some vices and vacillations. |

**The 25 subdivisions of *cārittira mōkaṉīyam***

| | | | |
|---|---|---|---|
| 20. | *aṉantāṉupanti kurōtam* | - | Anger that continues through several births |
| 21. | *aṉantāṉupanti māṉam* | - | Haughtiness which continues through many births |
| 22. | *aṉantāṉupanti māyam* | - | The deceit which continues through many births |

| | | | |
|---|---|---|---|
| 23. | *anantāṉupanti lōpam* | - | The greed which continues through many births. |
| | These 4 viṉais spoil *meykkāṭci* | | |
| 24. | *apratyākyāṉa kurōtam* | - | Anger which shatters the code of conduct of a householder. |
| 25. | *apratyākyāṉa māṉam* | - | Haughtiness which shatters the code of conduct of a householder |
| 26. | *apratyākyāṉa māyam* | - | Deceit which shatters the code of conduct of a householder |
| 27. | *apratyākyāṉa lōpam* | - | Greed which shatters a householder's code of conduct |
| 28. | *piratyākyāṉa kurōtam* | - | Anger which shatters the code of asceticism. |
| 29. | *piratyākyāṉa māṉam* | - | Haughtiness which ruins the code of asceticism |
| 30. | *piratyākyāṉa māyam* | - | Deceit which spoils the code of asceticism. |
| 31. | *piratyākyāṉa lōpam* | - | Greed which spoils the code of asceticism. |
| 32. | *cañcuvalaṉa kurōtam* | - | Anger which debases a very virtuous conduct. |
| 33. | *cañcuvalaṉa māṉam* | - | Haughtiness which spoils virtuous conduct |
| 34. | *cañcuvalaṉa māyam* | - | Deceit which spoils virtuous conduct. |
| 35. | *cañcuvalaṉa lōpam* | - | Greed which ruins virtuous conduct. |
| 36. | *hāsyam* | - | That which is responsible for derisive laughter |
| 37. | *rati* | - | That which causes desire towards relations |
| 38. | *arati* | - | That which causes hatred towards relations |
| 39. | *cōkam* | - | That which causes the sorrowful attitude arising out of loss of property |
| 40. | *payam* | - | That which is responsible for fear |
| 41. | *jukupcai* | - | The cause of disgust |
| 42. | *pumvētam* | - | That which causes desire for cohabitation with men |
| 43. | *stirivētam* | - | That which causes desire for sexual intercourse with women |
| 44. | *napumsaka vētam* | - | That which causes desire for intercourse with eunuchs. |

The 9 subdivisions mentioned above from 36 to 44 are known as *kacāyams* that are responsible for the likes and dislikes of human beings. These are mild *kacāyams*.

**V. The 4 subdivisions of *āyuḷ karumam***

| | | |
|---|---|---|
| 45. | *narakāyuḷ karumam* | - That which is responsible for the stay of *uyir* in hell |
| 46. | *tiriyakkāyuḷ karumam* | - The cause of *uyir* to be in the animal state. |
| 47. | *maṉita āyaḷ karumam* | - The cause of *uyir* to be in human embodiment. |
| 48. | *tēva āyuḷ karumam* | - The cause of *uyir* to be in the state of Tēvars (heavenly beings) |

**VI. *Nāmakarumam* - 93**

*Nāmakarumam* is responsible for the appearance of human body and organs. This has 93 subdivisions under 42 subheadings.

***Katināma karuman*** - This is responsible for the 4 consecutive stages of birth of *uyir.*

| | | |
|---|---|---|
| 49. | *maṉuṣyakati nāma karumam* | - That which causes human birth of *uyir* |
| 50. | *tiryakkati nāmakarumam* | - That which causes *uyir* to be born as animals or plants |
| 51. | *tēvakati nāma karumam* | - That which causes *uyir* to be born as *Tēvars* like *Pavanar, Viyantarar, Jōtishkar, Vaimāṉikar* etc. |
| 52. | *narakakati nāma karumam* | - That which is responsible for *uyir* to be born as *Narakar* in hell. |

***Jāti nāma karumam*** indicates the alignment of *uyir* with one category of living beings during each birth in the birth series. This *karumam* has 5 categories.

| | | |
|---|---|---|
| 53. | *ēkēntiriya jāti nāma karumam* | - That which is responsible for *uyir* to be born with one sense |
| 54. | *tvīntiriya jāti nāma karumam* | - That which causes *uyir* to be born with two senses. |
| 55. | *tirīntiriya jāti nāma karumam* | - That which causes uyir to be born with three senses |
| 56. | *caturīntiriya jāti nāma karumam* | - That which causes *uyir* to be born with four senses |
| 57. | *pañcēntiriya jāti nāma karumam* | - That which is responsible for *uyir* to be born with five senses |

***Carīra nāma karmam*** - This is responsible for the creation of body and the stay of uyir therein. This is of five kinds.

| | | |
|---|---|---|
| 58. | *autārika carīra nāma karumam* | - That which is responsible for either the animal or human body for *uyir* |
| 59. | *vaikrīyika carīra nāma karumam* | - That which provides various bodily shapes of *Tēvar, Narakar* etc to *uyir* |

60. *āhāraka carīra nāma karumam* - That which causes a very minute and invisible body to appear.

61. *taijaca carīra nāma karumam* - That which provides a shape and complexion to the body

62. *kārmaṇa carīra nāma karumam* - That which is responsible for the attainment of a minute body made of *karumam*.

***Aṅkō Pāṅka nāma karumam*** - This is responsible for the formation and separate appearance of limbs such as head, hand, foot, shoulder, stomach, back and heart and minor limbs like forehead, nose finger etc. This *karumam* is of four categories.

63. *autārika carīra aṅkō pāṅka nāma karumam* - That which is responsible for the separate *pāṅka nāma karumam* formation of limbs and minor limbs in human or animal or human body.

64. *vaikrīyika carīra aṅkō pāṅka nāma karumam* - That which provides limbs and minor limbs separately in the body of Tēvar (heavenly being)

65. *āhāraka carīra aṅkō pāṅka nāma karumam* - That which is responsible for the formation of limbs and minor limbs in a very minute and invisible body.

66. *nirmāṇa nāma karumam* That which causes the formation of limbs and minor limbs of appropriate size in the right place, especially according to the respective *cātinama karumam* in the formation of eyes, nose etc.

***Pantaṉa nāma karumam*** **(Five kinds)**

67. *autārika pantaṉa nāma karumam* - That which causes the mingling of *putkalams* responsible for the emergence of animal or human body.

68. *vaikrīyika pantaṉa nāma karumam* - That which is responsible for the mingling of *putkalam* suitable for the body of *Tēvar.*

69. *āhāraka pantaṉa nāma karumam* - That which causes the mingling of the relevant *putkalam* in a minute body.

70. *taijaca pantaṉa nāma karumam* - That which causes the appropriate *putkalams* to mingle in a resplendent body.

71. *kārmaṇa pantaṉa nāma karumam* - That which is responsible for the mingling of suitable *putkalams* in a minute body made of *karumam.*

***caṅkāta nāma karumam*** is responsible for the alignment of structures without any gap in the above - mentioned bodies.

72. *autārika caṅkāta nāma karumam* - That which causes the alignment of *putkalam* regions in human or animal body without any gap.

73. *vaikrīyika caṅkāta nāma karumam* - That which causes the alignment of *putkalam* regions in the bodies of *Tēvars* without any gap.

74. *āhāraka caṅkāta nāma karumam* - That which is responsible for the alignment of *putkalam* regions in a minute body without any gap.

75. *taijaca caṅkāta nāma karumam* - That which causes the alignment of *putkalam* regions in a resplendent body without any gap.

76. *kārmaṇa caṅkāta nāma karumam* - That which is responsible for the alignment of *putkalam* regions without any gap in a minute body made of *karumam.*

***Camstāṉa nāma karumam*** : This is responsible for the formation of a figure or shape in bodies like *autārikam* etc. This is of six kinds.

77. *cama caturasya camstāṉa nāma karumam* - That which causes the equal formation of the body shape above and below the navel.

78. *nikrōta parimaṇṭala camstāṉa nāma karumam* - That which causes the shape of the body fat above the navel and thin below it.

79. *cuvāti camstāṉa nāma karumam* - That which forms the shape of the body thin above the navel and fat below it.

80. *kupjaka camstāṉa nāma karumam* - That which makes one hunch backed.

81. *vāmaṉa camstāṉa nāma karumam* - That which causes one's birth as a dwarf.

82. *huṇṭaka camstāṉa nāma karumam* - That which causes a lopsided growth of limbs in a body such as big legs, small hands, large body and a small head.

**Camhaṉaṉa nāma karumam** : This is responsible for the proper alignment of bones. This is seven kinds.

83. *vajra viruṣapa nārāca camhaṉaṉa nāma karumam* - That which is responsible for the alignment like a socket and ball joint between two bones resembling *vacciṛāyutam.*

84. *vajra nārāca camhaṉaṉa nāma karumam* - That which is responsible for the alignment like a socket joint without a ball between two bones resembling *vacciṛāyutam.*

85. *nārāca camhaṉaṉa nāma karumam* - That which causes the alignment of bones like a mere socket joint without a ball and unlike *vacciṛāyutam.*

86. *artta nārāca camhaṉaṉa nāma karumam* - That which causes the alignment of bones without a ball and with a socket in one bone on one side and without a socket also in the other bones.

87. *kīlaka camhaṉaṉa nāma karumam* - That which is responsible for the mutual alignment of bones without a lover joint.

88. *acampirāpta srīpāṭika camhaṉaṉa nāma karumam* - That which causes the alignment of flesh and nerves without any joint of inner bones.

**Varṇa nāma karumam** : This is responsible for the complexion of body. This is of five kinds.

89. *cukkila nāma karumam* - That which causes white complexion in a body.

90. *kiruṣṇa nāma karumam* - That which causes black complexion in a body.

91. *nīla nāma karumam* - That which causes blue complexion in a body

92. *rakta nāma karumam* - That which causes crimson complexion on a body.

93. *harit nāma karumam* - That which causes yellow complexion in a body.

**Kanta nāma karumam** : This is responsible for the origin of smell. This is of two kinds.

| | | | |
|---|---|---|---|
| 94. | *cukanta nāma karumam* | - | That which is responsible for a pleasant smell in the body. |
| 95. | *turkanta nāma karumam* | - | That which makes the body foul smelling or odorous. |

***Raca nāma karumam*** : This is responsible for the origin of taste. This is of five kinds.

| | | | |
|---|---|---|---|
| 96. | *tikta nāma karumam* | - | That which causes a pungent or hot teste. |
| 97. | *kaṭuka nāma karumam* | - | That which causes a bitter taste |
| 98. | *kaṣāya nāma karumam* | - | That which causes astringent taste |
| 99. | *āmla nāma karumam* | - | That which causes sour taste |
| 100. | *matura nāma karumam* | - | That which causes sweet taste. |

***Sparica nāma karumam*** - This causes the feeling and sensation of touch. This is of eight kinds.

| | | | |
|---|---|---|---|
| 101. | *karkaca nāma karumam* | - | That which causes tough or hard body structure |
| 102. | *mirutu nāma karumam* | - | That which causes soft body structure |
| 103. | *kuru nāma karumam* | - | That causes body to acquire heavy weight like iron. |
| 104. | *ilaku nāma karumam* | - | That causes weightlessness to body to make it as light as cotton. |
| 105. | *sniktta nāma karumam* | - | That which causes soft smoothness in the body. |
| 106. | *ruṣa nāma karumam* | - | That which causes roughness to the body |
| 107. | *cīta nāma karumam* | - | That which makes body cool. |
| 108. | *uṣṇa nāma karumam* | - | That which makes body warm. |

***Āṉupūrvināma karumam*** - The path of transmigration of *uyir* from one body to another is known as *vikraka kati*. During such intervening *vikraka kati uyir* will have only the shape its previous birth. This is called *āṉupūrvi nāma karmam*.

| | | | |
|---|---|---|---|
| 109. | *narakakati āṉupūrvi nāma karumam* | - | That which causes the human shaped uyir to retain its human shape on its way to hell for its next birth. |
| 110. | *tiryakkati āṉupūrvi nāma karumam* | - | That which causes human uyir retain its human shape on its way to *vilaṅkukati* (to be born as an animal) |
| 111. | *maṉuṣyakati āṉupūrvi nāma karumam* | - | That which causes *uyir* to retain the shape of its previous birth before its birth as a human being. |

112. *tēvakati āṉupūrvi nāma karumam* - That which causes *uyir* to retain the shape of its previous birth on its way to *tēvakati*. It is to be noted here that *Tēvars* cannot be born as *Narakars* and vice-versa. Human beings and animals can be born in all four stages of *nāṟkati*. One can attain *mukti* only from the stage of his birth as a human being.

113. *akurulaku nāma karumam* - That which prevents body from becoming heavy like an iron ball and going down or becoming weightless like cotton and going up.

114. *upakāta nāma karumam* - That which causes the possession of suicidal limbs (like the antless of a deer)

115. *parakāta nāma karumam* - That which causes the possession of limbs harming others (claws of a lion)

116. *ātāpa nāma karumam* - That which causes exessive bodily heat (sun)

117. *utyōta nāma karumam* - That which makes the body resplendent

118. *utsvāca nāma karumam* - That which causes breathing.

***Vihāyōkakati nāma karumam*** - This causes the movements of walking on earth and flight in the sky. This is of two kinds.

119. *piracasta vihāyōkakati nāma karumam* - That which enables animals to walk gracefully and birds fly beautifully.

120. *appiracasta vihāyōkakati nāma karumam* - That which causes animals walk in an ugly fashion and birds fly awkwardly.

121. *traca nāma karumam* - That which causes birth as beings endowed with more than one sense ie. worms, insects, flies and ants.

122. *stāvara nāma karumam* - That which causes birth as a being with one sense.

| | | |
|---|---|---|
| 123. | *pātara carīra nāma karumam* | - That which causes birth with a body which can prevent others and preventable by others, i.e. trees, plants, creepers etc. |
| 124. | *cūṭcuma carīra nāma karumam* | - That which causes the formation of a very minute and invisible body. |
| 125. | *paryāpti nāma karumam* | - That which causes complete growth of energy. |
| 126. | *aparyāpti nāma karumam* | - That which causes lack of complete growth of energy. |
| 127. | *piratyēka nāma karumam* | - That which is responsible for one *uyir* experiencing (the occupation of) one body. There will be only one *uyir* in one body. In a *vaṉspati kāyam* object like a tamarind tree there will only be *vaṉaspati kayika uyir.* |
| 128. | *cātāraṇa nāma karumam* | - That which is responsible for many *uyirs* experiencing (the occupation of) one body. In the *vaṉaspati kayam* objects like, plantain and drumstick trees there will be many *uyirs* in combination. Where the trees die all the *uyirs* therein will die. The *uyirs* will be born at the place of birth, i.e. the tree which belongs to this category. |
| 129. | *stīra nāma karumam* | - That which causes the stable or settled existence of *tātus* and their ancillary materials (*upatātus*) |
| | *tātu* | - juice, blood, flesh, fat, bone, bonemarrow and semen. |
| | *upatātu* | - gas which emanates from body, biles, phlegm, nerves, tissues, upper, ligament or tissue and saliva. |
| 130. | *astira nāma karumam* | - That which causes instability of *tātus* and *upatātus* |
| 131. | *cupa nāma karumam* | - That which is responsible for the appearance of handsome and pleasing limbs. |

132. *acupa nāma karumam* - That which causes the appearance of ugly limbs.

133. *cupaka nāma karumam* - That which causes affection towards a total stranger.

134. *turpaka nāma karumam* - That which rouses hatred even at the sight of a person

135. *cusvara nāma karumam* - That which causes a sweet voice capable of attracting others

136. *tusvara nāma karumam* - That which causes a harsh voice which is jarring to the listeners.

137. *ātēya nāma karumam* - That which causes a resplendent body.

138. *anātēya nāma karumam* - That which causes a body without lustre

139. *yacaskīrtti nāma karumam* - That which is responsible for the attainment of fame.

140. *ayacas kīrtti nāma karumam* - That which is responsible for the origin of evil, revenge etc.

141. *tīrttaṅkara nāma karumam* - That which is responsible for the attainment of the stature of *Tīrtaṅkarars.*

VII. ***Kōttira karumam* - 2.** This causes birth in higher and lower *kōttirams* or communities. This is of two kinds.

142. *uccair kōttira karumam* - That which is responsible for birth in a higher community.

143. *nīcair kōttira karumam* - That which is responsible for birth in a lower community.

VIII. ***Antarāya karumam* - 5** This prevents enjoyment of pleasure. This is of five kinds.

144. *tāṉāntarāyam* - That which prevents charitable disposition.

145. *lāpāntarāyam* - That which prevents profit in an enterprise.

146. *pōkāntarāyam* - That which prevents the pleasure of eating and chewing betel leaves etc.

147. *upapōkāntarāyam* - That which prevents the enjoyment of wife, house etc. (Objects enjoyable once like food, betel leaves etc. are known as *pōkāpporuḷ* whereas objects of recurring enjoyment like wife, house etc are known as *upapōkapporuḷ*.

148. *vīryāntarāyam* - That which is responsible for the lack of energy or poor energy in one's body.

**The five *camitis***

1. *īryā samiti* - When the ascetics walk they should walk without hurting any form of life.
2. *pāṣā samiti* - The utterance by ascetics of precepts leading to *mukti*.
3. *ēṣaṇā samiti* - That which prescribes the code of eating by ascetics.
4. *ātāṉaniṭcēpaṇā samiti* - That which deals with the careful usage of the articles permitted for the ascetics' possession.
5. *utcarkka samiti* - The removal of excreta from the body without causing hardship to other forms of life.

***Pañca Parivarttaṉai*** - The five changes.

1. *tiravya parivarttaṉai* - The change of matter
2. *kṣētra parivarttaṉai* - The change of place
3. *kāla parivarttaṉai* - The change of time
4. *ppāva parivarttaṉai* - The change of feeling or sensation
5. *pava parivarttaṉai* - The change in the state of birth.

***Vipākatukkam*** **-3** - The sorrows incurred on account of the origin of *viṉai* are three in number. They are bodily sorrow, mental anguish, and *cukatukkam* (pleasure and pain).

***Karaṇam*** **- 3** - They are *maṉam* (mind), *vākku* (speech), *kāyam* (body)

***Kaṣāyam*** **- 4** - This is responsible for one's likes or dislikes such as anger, haughtiness, deceit and greed.

1. *aṉantāṉupanti* - The *kacāyam* that continues through many births.
2. *apratyākyāṉam* - The *kacāyam* that shatters the code of conduct of a householder.

3. *piratyākyāṉam* - The *kacāyam* that spoils the code of asceticism.
4. *cañcuvalaṉam* - The *kacāyam* that debases a very pure conduct

**Āsravam - 10.** This is the movement of *viṉai* towards joining *uyir* or alignment with *uyir.*

1. *hīnāsravam* - A small measure of *viṉai* moving towards *uyir* for alignment.
2. *avatikāsravam* - A limited movement of *viṉai* for alignment with *uyir.*
3. *īryā pātāsravam* - The *viṉai* caused by walking moving for alignment with *uyir.*
4. *kaṣāyāsravam* - The *viṉai* caused by anger haughtiness, deceit and greed moving towards *uyir* for alignment.
5. *ñāṉāsravam* - The *viṉai* which causes beneficial knowledge moving for alignment with *uyir.*
6. *aññāṉāsravam* - The *viṉai* responsible for evil knowledge moving for alignment with *uyir.*
7. *puṇṇiyāsravam* - The *viṉai* responsible for *puṇṇiyam* moving for alignment with *uyir.*
8. *pāvāsravam* - The *viṉai* responsible for sin moving towards *uyir* for alignment.
9. *tiravyāsravam* - The *viṉai* responsible for the wealth needed for sustenance of life moving towards *uyir* for alignment.
10. *pavarāsravam* - The *viṉai* responsible for the four kinds of birth moving towards *uyir* for alignment.

**Viratam - vows** - 12 in number to be observed by householders of which five are *aṇuviratam*, three are *kuṇaviratam* and four are *ciṭcāviratam.*

**Aṇuviratam - 5**

1 *kollāmai* - Avoidance of killing all living beings that function and not inciting others to kill such living beings.
2. *poyyāmai* - Not uttering lies, that cause evil and suffering to oneself and others.
3. *kaḷḷāmai* - Avoidance of stealing things that have not been given willingly and not inciting anyone to steal the belongings of others.

4. *piṟarmaṉai virumpāmai* - Avoidance of deviation from the coded life ordained in the presence of father, mother, mentor and relations. Refraining from the desire for carnal pleasure through objectionable or irregular sources.

5. *mikuporuḷ virumpāmai* - Avoidance of greed or avarice in respect of one's own as well as others' belonging and not inciting others towards such greedy tasks.

***Kuṇaviratam*** **- 3**

1. *tik viratam* - Restriction of one's movement to the 8 directions and 2 directions (upward and downward). As long as one lives one should not attempt to go beyond these 10 directions.

2. *aṉarta taṇṭa viratam* - Avoidance of evil thoughts that cause misery to others, speeches that incite murder, useless acts, providing weapons or fire that cause death and pain and reading works that are responsible for generating evil deeds.

3. *pōkōpōka parimāṇa viratam* - Restriction of the use of food, sandal paste and such articles that are used only once and articles like jewels and garments that are used several times.

***Ciṭcā viratam - 4***

1. *tēca viratam* or *niyama viratam* - Strict observance of the *tikviratam* undertaken already and restriction of one's movement in respect of both place and time.

2. cāmāyika viratam - Spiritual Meditation thrice a day ie., morning, daytime and evening, to check the *viṉai* of thoughts, speech and deeds generated by *maṉam* (mind), *moḻi* (word of mouth) and *mey* (body).

3. *purōcatōpavācam* - (vow of silence and fasting) Avoidance of eatables, munchables, drinks and lickables (the four kind of food) during full moon, *aṭṭami* (the eight day) and *caturttaci* (the fourteenth day).

4. *atiti camvipākam* - (Helping the pure people) Helping virtuous people with food, medicine, shelter, books and other articles. Jainism calls the observance of these 12 vows as *viratam*. Failure to observe them is known as *aviratam* (non - observance of vows).

The non-observance of the above mentioned 12 *viratam* vows is known as *aviratam*.

***Tirikupti* - *kupti* means controlling. This is of three kinds.**

1. *maṉōkupti* - Controlling one's mind
2. *vākkupti* - Controlling one's tongue or speech

3. *kāyakupti* - Controlling one's body (restricting bodily desires)

**_Taca tarumam_ - 10 _tarumaṅkaḷ_ or virtues**

1. *uttama kṣamai* - Being totally devoid of anger
2. *uttama mārttavam* - Not being haughty
3. *uttama ārjavam* - Not practising deceit
4. *uttama caucam* - Removal of greed and purification of soul.
5. *uttama cattiyam* - Utterance of whole truth
6. *uttama camyamam* - Controlling one's mind and five senses.
7. *uttamat tavam* - Adopting ascetic states as prescribed by scriptures.
8. *uttamat tuṟavu* - Renouncing all bonds.
9. *uttamat tiyākam* - Gifting away knowledge etc without expecting anything in return.
10. *uttama piramacariyam* - Complete renunciation of desire for women.

**_Tuvātacānuprēṭcai_ (12 thoughts)**

1. *anityāṉuprēṭcai* - Contemplation of transitorines. Thinking that all objects in this world are impermanent like lightning.
2. *acaraṇāṉuprēṭcai* - Contemplation of lack of protection. As the fawn of a deer cornered by a tiger cannot be saved, a dying *uyir* cannot be saved. Hence good deeds must be done to avoid death of *uyir.*
3. *camcārāṉuprēṭcai* - (Contemplation of the misery of birth) Reflecting over the misery of birth in the four stages of birth in hell and other places.
4. *ēkattuāṉuprēṭcai* - (Contemplation of loneliness) Thinking over the sole experience of one's *viṉai* by oneself as no relative will come to one's help.
5. *anniyatvāṉuprēṭcai* - (Contemplations of the absence of relationship or kinship) One's body and life are separate like water and milk. One's wife, children and relations are but strangers.

| | | | |
|---|---|---|---|
| 6. | *acucitvāṉuprēṭcai* | - | (Contemplation of astringence) The human body is made of seven impure *tātus* like blood, flesh etc. No perfume on earth can make them fragrant. This is the real nature of human body. |
| 7. | *āsravāṉupr ēṭcai* | - | (Contemplation of a fountain) *Viṉai* follows soul on account of false and evil thoughts. This is the root cause of birth. |
| 8. | *camvarāṉupr ēṭcai* | - | (Contemplation density) Prevention of *viṉai* from the pursuit of soul is known as *camvaram* and this alone will enable soul to be benefitted. |
| 9. | *nirjarāṉupr ēṭcai* | - | (Contemplation of shedding or discarding) Realising that the *viṉai*'s binding on *uyir* can be removed only by means of penance. This process known as *nirjarai* purifies the soul. |
| 10. | *lōkāṉupr ēṭcai* | - | (Contemplation of worldliness) Reflecting over the exact and true nature of this world. |
| 11. | *pōtiturlapāṉuprēṭcai* | - | Contemplation of *naṟkāṭci, nalñāṉam* and *nalloḻukkam,* and their rarity of attainment. |
| 12. | *tarmasvākyā tatvāṉuprēṭcai-* | | (Contemplation of virtue) Realisation of the nature of the precepts of Arukar as they only can benefit *uyir.* Those who forget the precepts of Arukar will come to grief. |

**Pāhyatapam (External penance) - 6. This is of six kinds**

| | | | |
|---|---|---|---|
| 1. | aṉacaṉam | - | Relinquishing food to remove *karumam* and desire, to control one's mind and five senses, to protect all kinds of *uyir* and to increase meditation. |
| 2. | *āvamōtariyam* | - | Gradual reduction of food day by day. |
| 3. | *virutti paricaṅyāṉam* | - | Observance of restriction in eating by ascetics who decide not to go beyond a certain number of streets and houses to seek food. They also decide not to eat more than a specified number of items and not to eat beyond a stipulated time. |
| 4. | *cuvaiparittiyākam* | - | Realising that taste is responsible for one's misery and relinguishing tasty articles like ghee, oil etc. |

5. vivikta cayyā - Staying in forests where wild and cruel animals live.

6. kāyaklēcam - Performing penance during scorching summer, rainy winter and bitterly cold dewy season and shrinking one's body unmindful of the suffering.

***Antaraṅka tapasu*(Internal penance) - 6 This is of six kinds.**

1. *pirāyaccittam* - Atonement for one's unintentional sins.
2. *vinayam* - Politeness towards those who observe the three gems of *naṟkāṭci, nalñāṉam* and *nalloḻukkam.*
3. *vaiyāvruttiyam* - Removing the grievances of others
4. *svātyāyam* - Reading the scriptures that can remove *karumam* and preaching them to others.
5. *vyutsarkkam* - Easing oneself in places where human beings do not walk and insects and holes are not found.
6. *tiyāṉam* - Of the four kinds of meditation *ārttattiyāṉam* and *routirattiyāṉam* should be explained and *tarumattiyāṉam* and *cukkilattiyāṉam* should be observed.

*Viṣaya camyamam* - Controlling the sensations arising out of one's body, mouth, eyes, nose, ear and mind.

*Pirāṇi camyamam* - Protecting the *uyirs* with one sense such as soil, water, fire, wind and trees and the animate *uyirs* with two, three, four and five senses such as animals without harming any *uyir.*

*Paricaka cayam* - Endurance of hardslip and victory over grief.

Those who seek *vīṭupēṟu* (Eternal bliss or state of liberation) should see to it that their meditation is not spoilt, vows are not violated and penance is not marred. While observing them there may be obstacles. Such hurdles are known as *paricakam* which means grief. One should not be discouraged and try to remove this *paricakacayam.* The 9 bodily obstacles are known as *pāya paricakam* (external handship) and the 13 mental hurdles are called *apyantara paricakam* (internal pain). Conquering these external and internal difficulties is known as *paricakacayam.* This is of 22 kinds

1. *pipācā paricakacayan* - Conquering thirst
2. *kṣūt paricakacayam* - Conquest of hunger
3. *rōka paricaka cayam* - Victory over disease

4. *yācanā paricaka cayam* - Conquering the habit of begging
5. *alāpa paricaka cayam* - Victory against disappointment
6. *niṣatyā paricaka cayam* - Conquering the pain of existence
7. *caryā paricaka cayam* - Conquering the misery of migration.
8. *cayyā paricaka cayam* - Conquering the grief of lying.
9. *nākṉyā paricaka cayam* - Conquering the difficulty of being unclad.
10. *atarcaṉa paricaka cayaṉ* - Conquering the pain of not seeing
11. *prakñā paricaka cayam* - Conquering the misery of the ignorant.
12. *aññāṉa paricaka cayam* - Conquering the consciousness of ignorance
13. *arati paricaka cayam* - Conquering the grief of sensual desires.
14. *uṣṇa paricaka cayam* - Conquering heat
15. *cīta paricaka cayam* - Conquering cold.
16. *mala paricaka cayam* - Conquering the awarness of dirt.
17. *catkāra puraskāra paricaka cayam* - Endurance of both flattcry and derision
18. *ākrōcà paricaka cayam* - Conquering undesirable words (speech)
19. *vata paricaka cayam* - Conquering the inclination to slaughter
20. *tamcamacaka paricaka cayam* - Bearing with the pain caused by the biting of flies, mosquitoes and ants.
21. *truṣṇa sparica paricaka cayam* - Enduring body itch, the thorn which pricks the feet and grass.
22. *stirī paricaka cayam* - Conquering lust or desire for women.

**Karaṇattirayam - Method of action - This is of three kinds**

1. *atap piraviruttik karaṇam* - The first stage of action
2. *apūrvak karaṇam* - Unprecedented action
3. *aniviruttik karaṇam* - An action which cannot be changed by itself.

***Cātaṉavattu* - Objects of process or medium objects. There are five in number.**

1. *māṉuṣya tēkam* - The human body
2. *karma pūmi* - The place which severs *viṉai* or where *viṉai* uprooted.
3. *mōṭcamaṭaiyum kālam* - The time opportune for the attainment of *mukti*.
4. *cuppariṇāmam* - Good thought or goodwill

5. *mutinta pavankal* - The end of birth.

*Nannānam* - Actual realization of the nature of *uyir, putkalam, tarumam, atarumam, ākāyam* and *kālam.*

*Narkātci* - Realisation of the real features and qualities of objects (*porulkal)* and believing them.

*Nallolukkam* - Prevention of *vinais* from reaching oneself removing them and abiding by a virtuous path accordingly.

*Cinatarumam* - The code of Arukar which removes the pains of birth in *nārkati* (four stages) and ensures mōtcam (eternal bliss)

*Apimānam* - Arrogance. *ikam* - The present birth in this world. *pirayōcanam* - use or benefit.

## மடக்கு

### விருத்தம்

78. *சூதும்போ தார்முலைகட் கேதங்கூர் சீறிடையிற்*
*சுடரும்பூ ணார்களுடன் படர்வண்டார் காவுமளி*
*யூதும்போ தாரமளி மீதுந்தீ ராவமர*
*ருலகந்தாள் பாடவெறி யிலகும்பூ வேறியிறை*
*போதும்போ தாவியல்வ னேதும்போ தாவியல்வன்*
*பொழியும்பூ வாளிமற மொழியும்பூ வாளிமறங்*
*காதும்பே ராழியுடன் போதும்பே ராழியுடன்*
*கழுமும்பே ரோதையனே குழுமும்பே ரோதையனே.*

**பதப்பொருள்:** சூதும் - சொக்கட்டான் காயும் போது - தாமரை முகையும் போல். ஆர் - பொருந்திய முலைகட்கு - தனங்களுக்கு. ஏதங்கூர் - வருத்தப்படுகின்ற சீறிடையில் - சிற்றிடையில் சுடரும் - பிரகாசியா நின்ற. பூணார்களுடன் - மேகலாபரணமுடைய மாதர்களுடன். படர் - பரந்த வண்டு - சுரும்புகள். ஆர் - பொருந்திய. காவும் - கற்பகச் சோலையும் அளி- வண்டுகள் ஊதும் - பாடுகின்ற போது - மலர்கள். ஆர் - பொருந்திய அமளிமீதும் - சயனத்தினும் தீரா - இவற்றினீங்காத. அமரர் - தேவர்களும். உலகம் - உலகத்தாரும். தாள் - பாதத்தை. பாட - துதிக்க வெறி - வாசனை. இலகும்- விளங்குகின்ற. பூ - தாமரைப் பூவில். ஏறி - அமர்ந்து. இறைப்போதும் - கணப்பொழுதும். போதா - வீண்போகாமல் இயல்வன் - எங்குஞ்சஞ்சரிப்பான். ஏதும் - எப்பொருளும். போதா - ஒவ்வாத. இயல்வன் - குணமுடையவன். பொழியும் - பிரயோகியாநின்ற. பூ - மலராகிய. வாளி - பாணங்களையுடைய மன்மதனது. மறம்- வீரத்தினின்று. ஒழியும் - நீங்கிய. பூவாளி - பொலிவினையுடைய. மறம் - பாவத்தை. காதும் - மோதி. பேர் - நடக்கின்ற. ஆழியுடன் - தருமச்சக்கரத்துடன். போதும் - வருவான். பேர் - பெரிதான. ஆழி - சமுத்திரம்போல். உடன் - ஒரு தன்மையாக. கழுமும் - பொருந்துகின்ற. பேரோதையன் - திவ்வியத் தொனியை உடையவன். குழுமும் - கூட்டமாகிய. பேர் - ஆயிரத்தெட்டு நாமத்தினாலே. ஓது - ஓதப்படும். ஐயன் - சுவாமி என்றவாறு.

**பொழிப்புரை** பெரிதான சமுத்திரம்போல் .ஒரு தன்மையாகப் பொருந்துகின்ற திவ்வியத் தொனியையுடையவனும், கூட்டமாகிய ஆயிரத்தெட்டு நாமங்களினாலே ஓதப்படும் சுவாமியுமான அருகபரமன், சொக்கட்டான்காயும், தாமரைமுகையும் போலப் பொருந்திய தனங்களுக்கு வருத்தப்படுகின்ற சிற்றிடையில் பிரகாசியா நின்ற மேகலாபரணமுடைய மாதர்களுடன், பரந்த சுரும்புகள் பொருந்திய கற்பகச்சோலையினின்றும்,வண்டுகள் பாடுகின்ற மலர்கள் பொருந்திய சயனத்தினின்றும், நீங்காத தேவர்களும் உலகத்தாரும் பாதத்தைத் துதிக்க வாசனை விளங்குகின்ற தாமரைப்பூவில் அமர்ந்து, கணபபொழுதும் வீண் போகாமல் எங்கும் சஞ்சரிப்பான். எப்பொருளும் ஒவ்வாத குணமுடையவன் பிரயோகியா நின்ற மலராகிய பாணங்களையுடைய மன்மதனது வீரத்தினின்று நீங்கிய பொலிவினையுடையவனாய்ப் பாவத்தை மோதி நடக்கின்ற தருமச்சக்கரத்துடன் வருவான் என்றவாறு.

**வி-ரை** . இதனால் அருகனுடைய பெருமை கூறப்பட்டது ஐயன் - எழுவாய்; போதும் - பயனிலை. திவ்வியத்தொனி - அருக தேவனின் வாயிலிருந்து வெளிவரும் வளமிக்க ஒலி. ஆயிரத்தெட்டுநாமங்கள் - அருக பரமனுக்கு ஆயிரத்தெட்டு திருப்பெயர்கள் உண்டு என்று சொல்லப்படுகிறது

## *Maṭakku*
## *viruttam*

*cūtumpō tārmulaikaṭ kētaṅkūr ciṟiṭaiyiṟ*
*cuṭarumpū ṇārkaḷuṭaṉ paṭarvaṇṭār kāvumaḷi*
*yūtumpō tāramaḷi mītuntī rāvamara*
*rulakantāḷ pāṭaveṟi yilakumpū vēṟiyiṟai*
*pōtumpō tāviyalva nētumpō tāviyalvaṉ*
*poḻiyumpū vāḷimaṟa moḻiyampū vāḷimaṟaṅ*
*kātumpē rāḻiyuṭaṉ pōtumpē rāḻiyuṭaṉ*
*kaḻumumpē rōtaiyaṉē kuḻumumpē rōtaiyaṉē.*

Arukar, the prime Lord,
Who like an ocean vast doth give out a certain sound divine,
And Who is hailed by appellations a thousand and eight
Whose glorious feet are worshipped by the worldly folk and Tēvars
Who in the company of their consorts
Whose slim waists adorned with golden girdles suffer
Under the weight of their breasts resembling big lotus buds and dice cubes
Leave not the *Kaṟpaka* garden swarming with bees

And their bed covered with flowers around which bees hum their music,
(Such Arukar, the prime Lord)
Seated on the lotus fragrant will go round everywhere,
Without wasting even a fraction of a second,
He is of nature not alignable with anything
He doth possess the eminent mettle of having destroyed
The power of Manmatan's flowery shaft
He will arrive with the *Tarumacakkaram* which
Rolls along destroying evil and sinful deeds.

## Explanatory notes:

Tevars - heavenly beings. *Karpaka* - A divine tree capable of granting the desired objects. Manmatan - The god of love. *Tarumacakkaram* - The wheel of virtue.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

79. *ஓதா துலகிற் பொருளனைத்து முடனே யுணர்ந்தா னுணர்ந்தவற்றை*
*வேதா கமங்க ளாறேழால் விரித்தான் விமலன் விரித்தளவே*
*கோதார் நெஞ்சத் தவர்பிறழக் கொண்டே தாமே கண்டார்போற்*
*பேதா பேதம் பேதமெனப் பிணங்கா நின்றார் பிரமித்தே.*

**பதப்பொருள்**: ஓதாது - ஒருவாறுஞ் சொல்லப்படாமலே. உலகில் - உலகத்திலுள்ள பொருளனைத்தும் - அறுவகைப் பொருளையும். உடனே - ஒருதன்மையாகவே. உணர்ந்தான் - அறிந்தவன் உணர்ந்தவற்றை - தானறிந்த எல்லாவற்றையும். வேதாகமங்கள் - வேதாகமம் என்னும் பெயரினையுடைய. ஆறேழால் - நாற்பத்திரெண்டு அங்கத்தினால். விரித்தான் - சொன்னவன் விமலன் - அருகன். விரித்தளவே - சொன்ன மட்டுமே. கோது - குற்றமானது. ஆர் - பொருந்திய. நெஞ்சத்தவர் - மனமுடையவர்கள். பிறழ - மாறுபாட்டை. கொண்டு - தாங்கள் கொண்டு. தாமே - தாங்களே கண்டாற்போல் - செய்தவர்கள்போல. பேதாபேதம்- பேதமாயும் அபேதமாயும் இருப்பதை, பேதமென - பேதமும் அபேதமும் வேறு வேறென்று. பிணங்காநின்றார் - மாறுபடுகின்றார்கள். பிரமித்தே - மயங்கியே என்றவாறு.

**பொழிப்புரை** உலகத்திலுள்ள அறுவகைப்பொருளையும் ஒருவராலும் சொல்லப்படாமலே ஒரு தன்மையாகவே யறிந்தவனும், தானறிந்த எல்லாவற்றையும் வேதாகமம் என்னும் பெயரினையுடைய நாற்பத்திரெண்டு அங்கத்தினால் சொன்னவனுமாகிய அருகன், சொன்னமட்டுமே குற்றம் பொருந்திய மனமுடையவர்கள் மாறுபாடாகக் கொண்டு தாங்களே செய்தவர்கள் போலப் பேதமாயும், அபேதமாயும் இருப்பதை யறியாமல் மயங்கிப் பேதமும் அபேதமும் வேறுவேறென்று மாறுபடுகின்றார்கள் என்றவாறு.

**வி-ரை :** இதனால் மித்தியா திருட்டிகளுடைய சாத்திரம் பழிக்கப்பட்டது. நெஞ்சத்தவர் - எழுவாய் பிணங்காநின்றார் - பயனிலை அறுவகைப்பொருள் - சீவன் (உயிர்), புதகலம், தருமம், அதர்மம், ஆகாயம், காலம் என்பன.

வேதாகமம் நாற்பத்திரெண்டு, அவை அங்காகமம் - 12, பூர்வாகமம் -14 பகுசுருத ஆகமம் - 16, ஆக 42 ஆகும்.

### *arucīrk kaḻineṭil viruttam*

*ōtō tulakiṟ poruḷaṉaittu muṭaṉē yuṇarntā ṉuṇarntavaṟṟai*
*vēta kamaṅka ḷāṟēḷāl virittāṉ vimalaṉ virittaḷavē*
*kōtār neñcat tavarpiṟaḻak koṇṭē tāmē kaṇṭārpōṟ*
*pētā pētam pētameṉap piṇaṅkā niṉṟār piramittē.*

Lord Arukar,
Did comprehend all the matters sixfold and true
By means of His discerning wisdom not acquired by learning
And did expand and expound what He understood,
In scriptures with sections fortytwo,
Those with perverted minds,
Take amiss (what Arukar hath expounded)
As if they have discerned it themselves,
And not aware of the truth which changes and as well remain un-
changed,
Indulge in contradiction in illusion theirs

## Explanatory notes :

The sound wisdom of Jaina scriptures (*Vētākamam*) is here contrasted with the faulty perception of the followers of other religions ie *Mittiyā tiruṭṭi. Vētākamam 42, Aṅkākamam - 12, Pūrvākamam-14, Pakusuruta ākamam - 16.*

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

80. *பிரமனே காமனைவென் கண்ட வென்றிப்*
*பெருமானே கருவினிலை வினையை வென்ற*
*சரமனே சகமுழுதும் வணங்கச் செல்லுஞ்*
*சதுமுகனே நின்முகப்பேர் தரியார் மீது*

*கரமனே கம்படைத்துப் படைக ளேந்திக்*
*கண்ணனே கம்பரப்பிக் கனல்கள் சிந்திச்*
*சிரமனே கஞ்சுமந்து செருச்செய் தோடுந்*
*தேவரோ வீரரெனத் தேர்கிற் பாரே.*

**பதப்பொருள்**: பிரமனே - பிரும்மாவே. காமனை - மன்மதனை வென்கண்ட - செயித்த. வென்றி - வெற்றியையுடைய. பெருமானே - கருத்தனே. கருவின் - கருப்பத்திற் பிறக்க நிலை- நிலைத்த. வினையை - கருமத்தை வென்ற - செயித்த. சரமனே - சரம தேகத்தையுடையவனே! ச்கமுழுதும் - உலகமுழுவதும். வணங்க - பணிய செல்லும் - நடக்கப்பட்ட. சதுமுகனே - நான்முகனே நின்முகம் - உனது மார்க்கங்களாக, பேர் - நாமங்களை. தரியார் - தரியாதவர்களாகி மீது - தேகத்தின்மீது. கரம் - கைகளை. அநேகம் - பலவாக படைதது - பெற்று. படைகள் - ஆயுதங்களை ஏந்தி - அந்தக் கயிற்றறுத்து கண - கண்களை அநேகம் - பலவாக பரபபி - விழிதது. கனல்கள் - நெருப்புகளை சிந்தி - இறைத்து. சிரம் - தலைகளை அநேகம் - பலவாக. சுமந்து - தாங்கி செரு - யுதததைை. செய்து - பண்ணி. ஓடும்- ஓடுகின்ற. தேவரோ- தேவர்களையோ. வீரரென - வீரரென்று. தேர்கிற்பார்- தெளிவார்கள் என்றவாறு

**பொழிப்புரை**: பிரமனே! மன்மதனைச் செயிதத வெறறியையுடைய கருததனே! கருப்பத்திற் பிறக்க நிலைத்த கருமத்தை வென்ற சரமதேகத்தையுடையவனே! உலக முழுதும் பணிய நடக்கப்பட்ட நான்முகனே! உனது மார்க்கங்களாகப் பெயரைத் தரியாதவர்களாகி, தேகத்தின் மீது பலவாகக் கைகளைப் பெற்று, ஆயுதங்களை அந்த கயிற்றறுத்துப் பலவாகக் கண்களை விழித்து, நெருப்புகளை யிறைதது்ப் பலவாகத தலைகளைத் தாங்கி யுத்தத்தைப் பண்ணியோடுகின்ற தேவர்களையோ வீரரென்று சாதுக்கள் தெளிவார்கள் என்றவாறு.

**வி-ரை** . இதனால் மித்தியா தெய்வம் பழிக்கப்பட்டது சாதுக்கள் - எழுவாய்; தேவரை - செயப்படுபொருள்; தேர்கிற்பார் - பயனிலை

## eṇcīrk kaḻineṭil viruttam

*piramaṉē kāmaṉaiveṉ kaṇṭa veṉrip*
*perumaṉē karuviṉilai viṉaiyai veṉra*
*caramaṉē cakamuḻutum vaṇaṅkac celluñ*
*catumukaṉē niṉmukappēr tariyār mītu*
*karamaṉē kampaṭaittup paṭaika ḷēntik*
*kaṇṇaṉē kamparappik kaṉalkaḷ cintic*
*ciramaṉē kañcumantu ceruccey tōṭun*
*tēvarō vīrareṉat tērkiṟ pārē.*

Oh! Piramaṉ,
Oh! Lord who hath destroyed and conquered Maṉmataṉ

Oh! Lord who hath body imperishable,
And who hath conquered the congenital *vinai* that lasts,
Oh! Nāṉmukaṉ, who doth bestride,
For all the worldly folk to worship,
Will the *Cātus* ever consider as warriors brave,
The *Tēvars* who bear not names that suit Thy path virtuous,
Who doth possess hands many in their bodies
And hold lethal weapons in those hands,
And with eyes many and heads manifold
Wage war and then flee

## Explanatory note :

The quarrelling deities projected with many heads and corresponding number of eyes and hands in religions other than Jainism are ridiculed here.

**காப்பியக் கலித்துறை**

81. *பாரே ழுடையாயைப் பாரளந்து படைத்துண்டா யென்குவேனோ*
*காரேர் கருமக் கடல்கடந்த கைவலத்தா யென்குவேனோ*
*போரேறு காமன் பொருசிலையி னாணறுத்தா யென்குவேனோ*
*நேரே யெழுபிறப்பும் நீதலைவன் யானடிமை யென்குவேனோ.*

**பதப்பொருள்**: பார் - பூமி ஏழுடையாயை - எழுடைய நின்னை. பார் - அந்தப் பூமியை. அளந்து - பரமாணுவாலளந்து. படைத்து - யாவர்க்கும் தெளியவுரைத்து. உண்டாய் - ஞானத்தினால் விழுங்கினாய். என்குவேனோ - என்று சொல்லுவேனோ. கார் - கருமையை. ஏர் - ஏற்ற கருமக்கடல் - வினைக்கடலை. கடந்த - தாண்டிய. கைவலத்தாய் - முத்தியையுடையவனே! என்குவேனோ - என்று சொல்லுவேனோ. போர் - யுத்தத்திற்கு. ஏறு - சிங்கம் போன்ற. காமன்- மன்மதன். பொரு - சண்டை பண்ணாநின்ற. சிலையின் - தனுவினுடைய. நாண் - நாரியை. அறுத்தாய் - அறுத்தனை. என்குவேனோ - ஏன்று சொல்லுவேனோ. நேரே - நேராக. எழுபிறப்பும்- ஏழு பிறப்பினும். நீதலைவன் - நீயே கருத்தன் யான் - நானே. அடிமை - அடிமையானவன். என்குவேனோ - என்று சொல்லுவேனோ என்றவாறு.

**பொழிப்புரை** : பூமி ஏழையுடைய நின்னை அந்தப் பூமியைப் பரமாணுவினால் அளந்து யாவர்க்குந் தெளிய வுரைத்து ஞானத்தினால் விழுங்கினாய் என்று சொல்லுவேனோ; கருமையை ஏற்ற வினைக் கடலைத் தாண்டிய முத்தியையுடையவனே என்று சொல்லுவேனோ; யுத்தத்திற்குச் சிங்கம் போன்ற மன்மதன் சண்டை பண்ணாநின்ற தனுவினுடைய நாரியை அறுத்தனை யென்று சொல்லுவேனோ; நேராக எழுபிறப்பினும் நீயே கருத்தன்; யானே அடிமையானவனென்று சொல்லுவேனோ! என்றவாறு

**வி-ரை** : இதனால் சீவராசிகளுக்கு ஆதாரமானவனிவனே என்பது கூறப்பட்டது. யான் - எழுவாய். நினை - செயப்படுபொருள். ·என்குவேனோ - பயனிலை.

பூமி ஏழு - 1. ப்ராசாத சைத்ய பூமி 2. காதிகா பூமி 3. வல்லி பூமி 4. வன பூமி, 5 த்வஜ பூமி, 6. கற்பகவிருட்ச பூமி, 7. க்ருஹாங்கண பூமி. பரமாணு - மிகமிகச் சிறியது. கண்களுக்குப் புலப்படாதது. தனு - வில். நாரி - இழுத்துக்கட்டும் நரம்பு. எழுபிறப்பு - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

## *kāppiyak kalitturai*

*Pārē lutaiyāyaip pāralantu pataittuntā yenkuvēnō*
*Kārēr karumak katalkatanta kaivalattā yenkuvēnō*
*pōrēru kāman porucilaiyi nānaruttā yenkuvēnō*
*nērē yelupirappum nitalaivan yānatimai yenkuvēnō.*

Shall I state that Thou, the possessor of worlds seven,
Did measure those worlds all with *Paramāṇu*
And did absorb by wisdom Thine after expounding them to all?
Shall I say that Thou art the One
Who did attain *mukti* after transcending
The ocean of *vinai* dark? Shall I call you the One who did sever
The string of the battling bow of the lion like Manmatan?
Shall I declare that Thou art the Leader,
In all my births seven,
And I am the slave?

## Explanatory notes :

The seven worlds or kinds of earth according to Jainism are 1) *Prācāta caitya pūmi* 2) *Kātikā pūmi* 3) *Valli pūmi* 4) *Vana pūmi* 5) *Tvaja pūmi* 6) *Karpakavirutca pūmi* 7) *Kruhāṅkana pūmi.*

*Paramāṇu* - The infinitesimally small atom which is invisible Seven births : *Tevar, manitar, vilaṅku, paravai, ūrvana* and *nīrvālvana*, i.e. Heavenly beings, human beings, animals, birds, reptiles and aquatic creatures.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

82. ஓரேழு பங்கவுரை வரம்பில்குணந் தோறுமொரு பொருளுக் கோதிப்
பாரேழுந் தொழவிருந்த பண்ணவனைப் பணியாதே யனந்த கால

*மீரேழு தலத்திலிரு நெறிவழியி லைங்கொட்டிற் கதிக ணான்கி*
*னேரேழு பிறவிகளி னிருவினையி னொருவினையே னின்ற வாறே.*

**பதப்பொருள்** : *ஓரேழு - ஏழுவகையான. பங்கவுரை - நியாய மொழியை. வரம்பில்- அளவில்லாத. குணந்தோறு - குணங்கடோறும். ஒரு பொருளுக்கு - ஒரு திரவியத்துக்கு. ஓதி- உபதேசித்து. பாரேழும் - ஏழுவகைப்பட்ட உலகமும். தொழ- வணங்க, இருந்த - வீற்றிருந்த. பண்ணவனை - சுவாமியை பணியாதே - வணங்காமலேதான். அனந்தகாலம் - அனந்த காலமாக. ஈரேழு - பதினாலான. தலத்தில் - மார்க்கணாஸ்தானத்திலும். இருநெறி - இல்லறந்துறவறமாகிய. வழியில்- மார்க்கத்திலும். ஐங்கொட்டில் - பஞ்சவிடயங்களிலும். கதிகணான்கில் - நான்கு பிறப்பிலும். நேர் - உண்டாகாநின்ற. ஏழுபிறவிகளின் - ஏழு பிறப்பிலும். இருவினையின் - இருவினையினாலே. ஒருவினையேன் - ஒரு வினையையுடையயான். நின்றவாறே - நின்ற விதமே என்றவாறு.*

**பொழிப்புரை** : ஒரு பொருளுக் களவில்லாத குணங்கள் தோறும் ஏழுவகையான நியாய மொழியை உபதேசித்தே ஏழு வகைப்பட்ட உலகமும் வணங்க வீற்றிருந்த சுவாமியை வணங்காமலே தான்; அனந்த காலமாகப் பதினான்கான மார்க்கணாஸ்தானத்திலும் இல்லறம் துறவறமாகிய மார்க்கத்திலும், பஞ்சவிடயங்களிலும், நான்கு பிறப்பிலும் உண்டாகாநின்ற எழுபிறப்பிலும், இரு வினையினாலே ஒரு வினையையுடைய யானின்றவிதம் என்றவாறு.

**வி-ரை**: இதனால் அருகனைப் பணியாதார் பிறவியறுக்கமாட்டார் என்பது கூறப்பட்டது. நின்றவிதம்- எழுவாய் பணியாதே - பயனிலை

**எழுவகையான நியாயமொழி** : 1. ஒருவன் தந்தையால் நோக்கும் போது மகனாக இருக்கிறான். 2. மனைவியால் நோக்கும்போது கணவனாக இருக்கிறான் 3. மகனால் நோக்கும்போது தந்தையாக இருக்கிறான். 4. அண்ணனால் நோக்கும்போது தம்பியாக இருக்கிறான், 5. தம்பியால் நோக்கும்போது அண்ணனாக இருக்கிறான். 6. மாமனால் நோக்கும் போது மருமகனாக இருக்கிறான் 7. மருமகனால் நோக்கும்போது மாமனாக இருக்கிறான். இவ்வாறே பொருளை ஆய்ந்து தெளிதல் வேண்டும்.

**ஏழுவகைப்பட்ட உலகம்** - நாகலோகம், பவணலோகம், நரலோகம், சோதிர்லோகம், கல்பலோகம், அகமிந்திர லோகம், மோட்சலோகம். அனந்தம் - அளவற்றது.

**மார்க்கணை பதினான்கு** : உயிர்களை இருவகையாகப் பிரிப்பர். ஒன்று நாற்கதிகளில் பிறந்து சுழலும் பிறவி உயிர், மற்றது பிறவா நிலை பெற்று விட்ட முக்தி உயிர். இந்தப் பிறவி உயிர்களை உடல், இந்திரியம், அறிவு முதலிய பல நோக்குகளில் அவைகளின் வேறுபாடுகளை பலவகைப்படுத்திக் கூறுவர். இவ்வாறு வேறுபடும் உயிர்களை சில அடிப்படையில் பகுத்து ஆய்வு செய்வர். இதையே மார்க்கணை என்பர். மார்க்கணை எனில் ஆய்தல், நோக்குதல் எனலாம். இவ்வடிப்படைப்பகுப்பு

பதினான்கு வகையாகும். அவை. 1. கதி, 2. இந்திரியம், 3. காயம், 4 யோகம், 5. வேதம் (உணர்வு). 6. கஷாயம், 7. ஞானம், 8. சம்யமம், 9. தரிசனம், 10. லேஸ்யா, 11. பவ்ய, 12. சம்யத்வ, 13 சஞ்ஞி, 14. ஆகாரமார்கணா என்பனவாகும்.

1. **கதி** - நான்கு, அவை - மக்கள், தேவர், நரகர், விலங்கு.

2. **இந்திரியம் ஐந்து** : அவை - கண், காது, நா, தோல், மூக்கு.

3. **காயம்** - உடம்பு.

4. **யோகம்** - மன, வசன, காயங்களின் செயல்பாடு

5. **வேதம்** - ஆண், பெண், அலி இவர்களிடம் சேர விழையும் உணர்வைத் தோற்றுவிப்பது.

6. **கஷாயம்** - சினம், செருக்கு, வஞ்சனை, பேராசை.

7. **ஞானம் - ஏழு** - அவை 1 மதி ஞானம் - பொறியறிவு. 2. சுருத ஞானம் - நூலறிவு 3 அவதி ஞானம் - ஐம்பொறிகளின் உதவியின்றி ஆன்மாவினால் கால, எல்லை வரையறைக்கு உட்பட்டுப் பிறவற்றைப் பற்றி ஓரளவிற்கு அறிதல். 4. மனப்பர்ய ஞானம் - அவதி ஞானம் போன்று ஐம்பொறிகளின் உதவியின்றி ஆன்மாவினால் பெறப்படும் நேரடி அறிவு. இது கால, எல்லை வரையறையுடன் பிறர் எண்ணும் எண்ணங்களை அறிதலாகும். 5. கேவல ஞானம் - ஐம்பொறிகள் மனம் இவற்றின் ஈடுபாடின்றி ஆன்மாவினால் நேரடியாகப் பெறப்படுவது. 6 குமதி - தவறான (மாறான) புத்தி. 7. குசுருதி - உண்மைக்குப் புறம்பான நேர் அறிவு.

8 **சம்யமம்** - கட்டுப்பாடு. அவை பிராணிஸம்யமம், விஷய சம்யமம் எனப்படும். **பிராணிசம்யம்** - மண், நீர், நெருப்பு, காற்று, மரம் ஆகிய ஓரறிவு உயிர்களுக்கும், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து அறிவு கொண்ட நகரும் உயிர்கள் என்னும் பிராணிகளுக்கும் துன்பம் தராது போற்றுவது.

**விஷய சம்யமம்** - மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்பவற்றின் வாயிலாக ஏற்படும் உணர்வுகளை அடக்குதல்.

9. **தரிசனம்** - ஐந்து அவை 1. சக்சு தரிசனம் - கண்களால் காணும் காட்சி. 2 அசக்சு தரிசனம் - மெய், வாய், மூக்கு, செவி ஆகியவற்றால் அறிதல். 3. அவதி தரிசனம் - அவதி ஞானத்தால் காணும் காட்சி. 4. கேவல தரிசனம் - கேவல ஞானத்தால் காணும் காட்சி.

10. **லேஸ்யா** - கோபம் முதலிய கஷாயங்களின் தொடர்புடன் மன, வசன, காய, யோகங்களின் செயல்பாடாலுண்டாகும் எண்ணத்திற்கு லேஸ்யா என்றுபெயர் அவை: கிருஷ்ண, நீல, காபோத, பீந, பத்ம, சுக்ல என்பதாம். 1. கிருஷ்ண -

கருப்பு வண்ணம், கொடிய எண்ணம், நீல - நீல வண்ணம், அதைவிட குறைந்த எண்ணம் 3. காபோத - புறாவின் கழுத்து வண்ணம், நடுத்தரமான எண்ணம். 4 பீந - மஞ்சள் வண்ணம், கொடியது இல்லா எண்ணம் 5. பத்ம - தாமரை மலர் வண்ணம், ஓரளவு நல்ல எண்ணம். 6. சுக்ல - வெண்மை வண்ணம், மிகத்தூய எண்ணம் (எண்ணததின் மதிப்பு வண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது),

11 **பவ்ய** - இது பவ்யம், அபவ்யம் என இருவகைப்படும். முக்தி அடைவதற்கு தகுதி உள்ளது பவ்யம், தகுதி இல்லாதது அபவ்யம்.

12. **சம்யக்தவ** - நற்காட்சி,

13 **சஞ்ஞி** - இது சஞ்ஞி, அசஞ்ஞி என இருவகைப்படும். கருத்தை ஏற்றுக் கொள்வது சஞ்ஞி. கருத்தை ஏற்றுக்கொள்ளாதது அசஞ்ஞி.

14 **ஆகார** - ஆன்மா வினைகளை ஏற்றுக்கொள்ளுதல்

**பஞ்சவிடயங்கள்** . சப்தம் (ஓசை) ஸ்பரிசம் (தொடுஉணர்வு) ரூபம் (உருவம்) ரசம் (சுவை) கந்தம் (நாற்றம்).

## *aṟucīrk kaḻineṭil viruttam*

*ōrēḻu paṅkavurai varampilkuṉan tōṟumoru poruḷuk kōtip*
*pārēḻun toḻavirunta paṉṉavaṉaip paṇiyātē yaṉanta kāla*
*mīrēḻu talattiliru neṟivaḻiyi laiṅkoṭpiṟ katika ṇāṉki*
*nērēḻu piṟavikaḷi ṉiruviṉaiyi ṉoruviṉaiyē ṉiṉṟa vāṟe.*

Without worshipping Lord Arukaṟ,
Who did explain the nature of a *poruḷ* of features innumerable,
By means of *niyāya* precepts of interpretation sevenfold,
And did remain seated for all the worlds seven to worship,
I did confine myself to my birth marked by *viṉai* both,
Over a period of time endless,
Through the *mārkaṇā* places fourteen, codes of *iruneṟi*
Through enjoyment of five senses and births seven.
As scheduled by *nāṟkati,*
Thus did I exist in my *viṉai* sole and single

## Explanatory notes:

**The seven *niyāya* precepts of interpretation are as follows:**

1. A person is a son to his father
2. He is a husband to his wife
3. He is a father to his son
4. He is the younger brother of the elder one
5. He is the elder brother of the younger one
6. He is a nephew to his uncle
7. He is an uncle to his nephew.

One should analyse a matter through such a sevenfold perception and arrive at a conclusion.

***Mārkkaṇā stāṉams*** - *14* - *uyir* or life is of two kinds, i.e. *uyir* which wallows in the birth-cycle of *nāṟkati* and *uyir* which has ridden itself of birth and attained *mukti.* The *uyir* which is born over and over again is divided on the basis of factors like body, organs, knowledge etc. This categorization is known as *mārkāṇā* which means perception. It is of 14 kinds pertaining to different factors:

1. *kati* 2. *intiriyam* 3. *kāyam* 4. *yōkam* 5. *vētam* 6. *kacāyam* 7. *ñāṉam* 8. *camyamam* 9. *taricaṉam* 10. *lēsyā* 11. *pavya* 12. *camyatva* 13. *caññi* 14. *ākāra mārkāṇā.*

1. ***Kati*** - 4 in number. They are *Makkaḷ* (Human), *Tēvar* (Divine beings), *Vilaṅku* (animal), *Narakar* (occupants of the nether world).

2. ***Intiriyam*** - Senses.

3. ***Kāyam*** - Human body.

4. ***Yōkam*** - The functioning of mind, speech organs and body.

5. ***Vētam*** - That which stimulates desire for intercourse with male, female and eunnchs.

6. ***Kaṣāyam*** - Anger, Arrogance, Deceit and Greed.

7. ***Ñāṉam*** - 7 in number. 1. They are *mati ñāṉam* - Knowledge by means of senses, 2. curuta ñāṉam - knowledge by reading books, 3. *avatiñāṉam* - Partial or limited comprehension through one's soul without the help of the five senses subject to the limits of time and boundary of space. 4. *maṉappariya ñāṉam* - Similar to *avati ñāṉam* in comprehension through one's soul without the assistance of the five senses. This enables one to attain the capacity to read the thoughts of others subject to the limitation of time. 5. *kēvala ñāṉam* - Direct attainment of wisdom through one's soul without the assistance of the mind or five senses. 6. *kumati* - Perverted knowledge. 7. *kucuruti* - Knowledge in deviation of truth.

8. ***Camyamam*** - (Restriction or control) - 2 in number

1. *Pirāṇi camyamam* - That which protects from misery earth, water, fire, wind and tree that are endowed with single sense and the moving beings and animals that are endowed with two, three, four and five senses. 2. *Viṣaya camyamam* - Checking or controlling the feelings generated by one's body, mouth, eyes, nose, ears and mind.

9. ***Taricaṉam*** - 5 in number

1. *Cakcu taricaṉam* - Sight as seen by one's eyes, 2. *acakcu taricaṉam* - Realisation or knowledge by means of body, mouth, eye, nose and ears. 3. *avati taricaṉam* - That which is seen through Avatiñāṉam. 4. *kēvala taricaṉam* - Realisation or sight through *kēvala ñāṉam*.

10. ***Lēsyā*** - Thoughts triggered by the functioning of mind, speech, body and *yōka* in relation with *kacāyams* like anger. *Lēsyā* thoughts are as follows : 1. *Krishṇa* - Black colour - evil thoughts. 2. *nīla* - blue colour - lesser thoughts. 3. *kāpōta* - The colour of pigeon's neck - middle or mediocre thoughts. 4. *pīna* - Yellow colour - harmless thoughts 5. *patma* - the colour of lotus - thoughts good to a certain extent. 6. *Cukla* - White colour - very pure thoughts (It is to be noted here that the value of one's thoughts is determined on the basis of colour).

11. ***pavya*** - 2 in number. 1. *pavyam* - eligibility to attain *mukti* (eternal freedom and bliss) 2. *apavyam* - the state of being unfit to attain *mukti* .

12. ***camyaktva*** - Good spectacle.

13. ***caññi*** - 2 kinds - *caññi* is acceptance of an opinion *acanni* is non-acceptance of an opinion.

14. ***ākāra*** - The acceptance of *viṉai* (deeds) by *āṉmā* (soul).

*Iruṉeri* - Two codes - 1. Code of a house holder's life 2. Code of asceticism.

*Pañcēntiryam* - fivesenses ie *captam* (sense of hearing), *sparicam* (touch), *rūpam* (shape), *racam* (taste) and *kantam* (smell).

### காப்பியக் கலித்துறை

83. நில்லாத செல்வத்து நிற்பேமை நீயஞ்ச லென்னாவிடிற்
புல்லா தருட்கென்று புத்தேளிர் சொல்லும் புகழ்ச்சோதியே
யெல்லா வுயிர்க்கு மளிக்கின்ற நின்னேமி யின்றென்கொலோ
வில்லா லலைத்தென்கண் மாரன்செய் வெந்நோய் விலக்காததே.

**பதப்பொருள் :** நில்லாத - அநித்தியமான. செல்வத்து - செல்வத்தில். நிற்பேமை- நிற்குமெங்களை. நீயஞ்சல் - நீயச்சப்படாதே. என்னாவிடில் - என்று சொல்லாவிட்டால் புல்லாது- பெருமையணையாது. அருட்கு - கிருபைக்கு என்று - என்று. புத்தேளிர் - தேவர்கள். சொல்லும் - சொல்லுகின்ற. புகழ் - புகழையுடைய, சோதியே - சோதியாகிய அருகனே! எல்லாவுயிர்க்கும் -

*ஐவகைப்பட்ட உயிர்களும் அளிக்கின்ற - இரட்சிக்கின்ற நின் - உன்னுடைய நேமி - தருமச்சக்கரமானது. இன்று - இப்பொழுது என்கொலோ - என்ன காரணமோ? வில்லால்-கரும்புவில்லினால். அலைத்து- அலைவு படுத்தி. என்கண்- என்னிடத்தில் மாரன் - மன்மதன் செய் - செய்கின்ற வெம் - வெப்பமாகிய. நோய் - வியாதியை. விலக்காதது - நீக்காதது என்றவாறு.*

**பொழிப்புரை** : அநிததியமான செல்வத்தில் நிற்கும் எங்களை நீ பயப்படாதே யென்று சொல்லாவிட்டால் நினது கிருபைக்குப் பெருமையணையாதென்று தேவர்கள் சொல்லுகின்ற புகழையுடைய சோதியாகிய அருகனே! ஐவகைப்படட உயிர்களும் இரட்சிக்கின்ற உனது தருமச் சக்கரமானது மன்மதனானவன் இப்பொழுது கரும்பு வில்லினாலே என்னையலைவு படுத்தி என்னிடத்திற் செய்கின்ற வெப்பமாகிய வியாதியை நீக்காதது என்ன காரணமோ என்றவாறு

**வி-ரை** : இதனால் அருகனது பெருமையும் தனது எளிமையுங் கூறப்படடன. நீங்காதது - எழுவாய். என்கொல் - பயனிலை. அநிததியம் - நிலையற்றது. ஐவகைப்பட்ட உயிர் - ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர்.

## *kāppiyak kalitturai*

*nillāta celvattu niṟpēmai nīyañca leṉṉāviṭiṟ*
*pullā taruṭkenru puttēḻir collum pukaḻccōtiyē*
*yellā vuyirkku maḷikkiṉṟa niṉṉemi yiṉṟeṉkolō*
*villā lalaittenkaṉ mārancey vennōy vilakkātatē.*

Oh! Lord Arukar,
Thou who doth remain as luminary glorious
And whose grace it doth not behove according to *Tēvars*,
If Thou do not exhort us wallowing in transitory wealth,
To be fearless.
Why doth Thy *Tarumacakkaram* which protects,
The *uyirs* fivefold,
Fail to protect me from the hot malady,
Which makes me restless,
And is caused by Maṉmataṉ now with his sugarcane bow

## Explanatory note :

*Uyir* with one to five senses are known as Fivefold *uyir* ie *aivakaiuyir.*

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

*84. விலங்காய்ப் பிறந்து தடுமாறி வீழ்வார் தம்மைத் தேவரிவர்*
*கலங்காக் கருணை யாற்பிறந்து காப்பா ரென்பீர் பிறவாது*
*நிலங்காப் பார்வன் பிலங்காப்பார் நெடுவான் காப்பார் விலங்குகளைம்*
*புலங்காப் பார்தம் மொழிகேட்டுப் புவிகாப் பாரைப் போற்றீரே.*

***பதப்பொருள்*** *: விலங்காய் - மிருகங்களாகி. பிறந்து - உலகிற்பிறந்து தடுமாறி - சமுசாரத்தில் வீழ்வார்தம்மை - விழுமவர்களை. தேவர் - தேவர்களென்றும் இவர் - இந்தத் தேவர்கள் கலங்கா - மயக்கமில்லாத கருணையாங் - கிருபையினாலே பிறந்து - அவதரித்து. காப்பார் - சீவன்களை இரட்சிப்பார்கள். என்பீர் - என்று சொல்லுமவரே. பிறந்து - என்றும் பிறக்காமல் நிலம் - பூமியை. காப்பார் - காவல் செய்வார் வன் - வலிமை பொருந்திய. பிலம் - பாதாளத்தை. காப்பார் - காவல் செய்வார். நெடு - நீண்ட. வான் - சுவர்க்கத்தை காப்பார் - காவல் செய்வார். விலங்குகள் - மிருகங்கள் போன்ற. ஐம்புலம் - பஞ்சவிடயங்களை. காப்பார் - காவல்செய்வார் தம் - அத்தன்மையுடையவருடைய. மொழி - தருமமொழியை கேட்டு - மனதிற் பொருந்தக்கேட்டு புவி - உலகத்தில் வாழுஞ்சீவன்களை காப்பாரை - காவல்செய்யும் அருகபரமேட்டியை. போற்றீர்- போற்றுங்கள் என்றவாறு.*

**பொழிப்புரை** : மிருகங்களாகி உலகிற் பிறந்து சமுசாரததில் விழும் அவர்களைத் தேவர்கள் என்றும், இந்தத் தேவர்கள் மயக்கமில்லாத கிருபையினாலே அவதரித்துச் சீவன்களை இரட்சிப்பார்களென்றுஞ் சொல்லுமவரே[1] என்றும் பிறக்காமற் பூமியைக் காவல்செய்வார், வலிமை பொருந்திய பாதலத்தைக் காவல் செய்வார், நீண்ட சுவர்க்கத்தைக் காவல் செய்வார் மிருகங்கள் போன்ற பஞ்சவிடயங்களைக் காவல் செய்வார் இத்தன்மையை யுடையவருடைய தருமமொழியை மனத்திற்பொருந்தக்கேட்டு உலகததில் வாழுஞ் சீவன்களைக் காவல் செய்யும் அருகபரமேட்டியைப் போற்றுங்கள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகபரமனது பெருமை கூறப்பட்டது. என்பீர் - எழுவாய், காப்பாரை - செயப்படுபொருள். போற்றீர் - பயனிலை சமுசாரம் - நால்வகைப்பிறப்பு (நரககதி, தேவகதி, மக்கள்கதி, விலங்குகதி) பஞ்சவிடயங்கள் - சப்தம் (ஓசை) ஸ்பரிசம் (தொடுஉணர்வு) ரூபம் (உருவம்) ரசம் (சுவையுணர்வு) கந்தம் (நாற்றம்). 'தருமமொழி - நால்வகைக் கதிகளில் ஏற்படும் துன்பங்களைப் போக்கி நிலை பேறான மோட்ச இன்பத்தை தரக்கூடிய அருகமொழி.

## **aṟucīrk kaḻineṭil viruttam**

*vilaṅkāyp piṟantu taṭumāṟi vīḻvār tammait tēvarivar*
*kalaṅkāk karuṇai yāṟpiṟantu kāppā reṉpīr piṟavātu*
*nilaṅkāp pārvaṉ pilaṅkāppār neṭuvāṉ kāppār vilaṅkukaḷaim*
*pulaṅkāp pārtam moḻikēṭṭup puvikāp pāraip pōṟṟīrē.*

Oh! folk who state,
That the *Tēvars* who are born as animals and wallow in birth,
Are incarnations by (God's) unfaltering grace,
Ordained to protect *uyir* (like God)
Listen to the counsel virtuous,
Of those who guard this world by their code of virtue,
And those who as well guard the wretched hell and heaven long
And those who check the beastly senses five,
(Listen to such wise folk)
And hail Arukar, the prime Lord who doth protect this world.

## Explanatory note :

The virtuous counsel mentioned here is *Arukamoḻi* or the collective aphorisms of Arukar or *Tīrttaṅkarars.*

### வெண்பா

85 *போற்று மிதுவென்கொல் பொய்ந்நூல் களைப்புலவீர்*
*சாற்று மனந்த சதுட்டயத்தா - னேற்றுந்*
*துளக்கப் படாத சுருதியா லல்லா*
*லளக்கப் படுமோ வறம்.*

**பதப்பொருள்** : போற்றும் - நீங்கள் போற்றுகின்ற இது - இச்செயல். என்கொல் - என்ன காரணம். பொய் - பொய்யாகிய நூல்களை - சாத்திரங்களை. புலவீர் - அறிவுடையவரே சாற்றும் - சொல்லப்பட்ட அனந்த சதுட்டயதகான் - அனந்த சதுட்டயங்களையுடைய அருகபரமனை. ஏற்றும் - அரங்கமேற்றிய. துளக்கப்படாத -அசைக்கப்ப்டாத. சுருதியாலல்லால் - வேதத்தாலல்லாமல். அளக்கப்படுமோ - மற்றொன்றினாலளவு காணப்படுமோ. அறம் - தருமமானது என்றவாறு.

**பொழிப்புரை** : அறிவுடையவரே! நீங்கள் பொய்யாகிய சாத்திரங்களைப் போற்றுகின்ற இச்செயல் என்ன காரணம்? சொல்லப்பட்ட அனந்த சதுட்டயங்களை உடைய அருகபரமன் அரங்கமேற்றிய அசைக்கப்படாத வேதத்தால் அல்லாமற் தருமமானது மற்றொன்றால் அளவு காணப்படுமோ? என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகபரமனோதிய தருமமே மெய்யான சாத்திரமென்பது கூறப்பட்டது. புலவீர்- எழுவாய். அளக்கப்படுமோ - பயனிலை. அனந்த சதுட்டயம் - எண்வகை குணங்களில் முதல் நான்கான அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம் என்பன.

### *Venpā*

*pōṟṟu mituveṉkol poynnūl kaḷaippulavīr*
*cāṟṟu maṉanta cattuṭṭayattā - nēṟṟun*
*tuḷakkap paṭāta curutiyā lallā*
*laḷakkap paṭumō vaṟam.*

Oh! learned ones,
Why doth thou cherish scriptures false
Can *tarumam* ever be measured,
By anything else other than,
The unshakable scriptures devoid of contradiction,
Proclaimed by Arukar who hath *Aṉantacatuṭṭayam*
(To His divine credit)

## Explanatory notes :

*Tarumam* : The code of virtue laid down by Arukar.

***aṉantacatuṭṭayam*** **: The first four virtues of *Eṇkuṇam* or eightfold virtues.**

1. *aṉanta ñāṉam* (endless wisdom).
2. *aṉanta taricaṉam* (endless vision).
3. *aṉanta vīriyam* (endless vigour).
4. *aṉanta cukam* (endless pleasure).

**கட்டளைக் கலித்துறை**

86. அறமா முயிர்க்கொலை யென்னின்மற் றாருயி ரோம்புதலோ
மறமா வதுமறஞ் செய்தவ ரெய்துவர் வானமென்றாற்
பிறமா நரகற மெய்தவர்க் கோபிண்டி வாமன்மெய்ந்நூற்
றிறமா றுகொண்ட சின்னூற்றின் ணர்காளொன்று செப்புமினே.

**பதப்பொருள் :** அறமாம் - தருமமாகும் உயிர் - சீவனை. கொலை - கொல்லுதல். என்னின் - என்றுசொன்னால். ஆர் - நிறைந்த. உயிர் - சீவனை. ஓம்புதலோ - இரட்சித்தலோ. மறமாவது - பாவமாவது. மறம் - பாவத்தை செய்தவர் - பண்ணினவர்கள். எய்துவர் - அடைவார்கள். வானம் - சொர்க்கத்தை. என்றால் - என்று சொன்னால். பிறமா - கொடிய நரகு - நரகமானது. அறம் - தருமத்தை எய்தவர்க்கோ - பண்ணினவர்க்கோ பிண்டி - அசோகிலமர்ந்த வாமன்-அருகனுடைய. மெய் - உண்மை விளங்கா நின்ற. நூல் -

*பரமாகமத்தினுடைய திறம்- வகைக்கு மாறுகொண்ட - மாறுகொண்ட. சின்னூல் - அற்ப நூலின்கண். திண்ணார்காள் - உறுதியுடையவரே! என்று - ஒரு துணிவு செப்புமின் - சொல்லுங்கள் என்றவாறு.*

**பொழிப்புரை** : அசோகிலமர்ந்த அருகப் பரமனுடைய உண்மை விளங்கா நின்ற பரமாகமத்தினுடைய வகைக்கு மாறுபாடு கொண்ட அற்ப நூலின்கண் உறுதியுடையவரே! சீவனைக் கொல்லுதல் அறமாகுமென்று சொன்னால், நிறைந்த சீவனை இரட்சித்தலோ பாவமாவது? பாவத்தைப் பண்ணினவர்கள் சுவர்க்கததை அடைவார்களென்று சொன்னால் கொடிய நரகமானது தருமத்தைப் பண்ணினவருக்கோ? இரண்டிலொரு துணிவு சொல்லுங்கள் என்றவாறு

**வி-ரை** : இதனால் மித்தியாதிருட்டிகள் நூல் பழிக்கப்பட்டது சின்னூற்றிண்ணார்காள் - எழுவாய் ஒன்றை - செயப்படுபொருள் செப்புமின் - பயனிலை பிற என்பது அசை

பரமாகமம் - சைன ஆகம முறைப்படி அனைததையும் கண்டறிந்த முற்றும் உணர்ந்த மகான்களால் அறிந்து உரைத்த தத்துவக் கருததுக்கள் அடங்கிய நூல்.

## *kaṭṭalaik kalitturai*

*aṟamā muyirkkolai yeṉṉiṉmaṟ ṟāruyi rōmputalō*
*maṟamā vatumaṟañ ceytava reytuvar vāṉameṉṟār*
*piṟamā narakaṟa meytavark kōpiṇṭi vāmaṉmeynnūṟ*
*ṟiṟamā ṟukoṇṭa ciṉṉūṟṟiṉ ṉārkāḷoṉṟu ceppumiṉē.*

Oh! folk who have staunch faith,
In mean scriptures that contradict the *paramākamam,*
Of Arukar, the prime Lord seated in the shade of *Acōka* tree
If it is averred that slaughtering lives is *aṟam*
Is protection of dear life a sin?
If it is asserted that sinners will reach heaven,
Is cruel hell the destination of the virtuous?
Do tell but firmly,
One of the two as your conclusion avowed.

## Explanatory notes:

*Aṟam* - code of virtue. *paramākamam* - The *Jaina* scriptures which contains sound spiritual wisdom and philosophical tenets laid down by omniscient saints.

## எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

*87. மின்னிடை மடவார் குழைதொடர்ந் தகன்று விடந்தரு படைவிழிக் குடைந்து*
*வென்னிடு மவர்கள் வீரரே லுலகில் வீரரல் லாதவ ருளரே*
*கொன்னுடை நெடுவே லரசரு மமரா குலமுநின் னடிமுதல் வணங்கி*
*நின்னுடை யடியே யருளென விருந்த நிமலனே நீயலா விடினே.*

**பதப்பொருள்** : *மின் - மின்னல்போன்ற இடை - இடுப்பையுடைய. மடவார் - மாதர்களுடைய. குழை - குண்டலத்தையுடைய காதளவும் தொடர்ந்து - தாவி. அகன்று - பரந்து. விடம்தரும் - விடம் பொருந்திய. படை - வாள் போன்ற. விழிக்கு - கண்களுக்கு உடைந்து - தோற்று வென்னிடுமவர்கள் - முதுகுகாட்டி ஓடுமவர்கள் வீரரேல் - வீரர்களானால் உலகில் - உலகத்தில். வீரரல்லாதவர் - வீரரல்லாதவர்கள். உளரே - உண்டோ. கொன் - அச்சந்தருதலை. உடை - உடைத்தாகிய. நெடு - நீண்ட. வேல் - வேலினையுடைய அரசரும் - சக்கிரவர்த்திகளும் அமரர்- தேவர்களுடைய குலமும் - கூட்டமும். நின் - உன்னுடைய. அடிமுதல் - பாதத்தடியில். வணங்கி - இறைஞ்சி. நின்னுடைய - உன்னுடைய. அடி - பாதத்தை. எமக்கு - எங்களுக்கு. அருளென - கொடுமென்று சொல்ல. இருந்த - வீற்றிருந்த நிமலனே - நிருமலனே. நீயல்லாவிடில்- நீயல்லாவிட்டால் என்றவாறு.*

**பொழிப்புரை** : அச்சந்தருதலை யுடைத்தாகிய நீண்ட வேலினையுடைய சக்கிரவர்த்திகளும், தேவர்களுடைய கூட்டமும் உன்னுடைய பாதத்தடியில் வணங்கி உம்முடைய பாதத்தை எங்களுக்குக் கொடுமென்று சொல்லி வீற்றிருந்த நிருமலனே! நீயல்லா விட்டால் மின்னலை யொத்த இடுப்பையுடைய மாதர்களது குண்டலததையுடைய காதளவுந் தாவிப்பரந்து விடம் பொருந்திய வாள்போன்ற கண்களுக்குத் தோற்று முதுகுகாட்டி ஓடுமவர்கள் வீரர்களானால் உலகத்தில் வீரர்களல்லாதவர்களுண்டோ? என்றவாறு.

**வி—ரை** : *இதனால் வினையினீங்காதவை மித்தியா தெய்வங்களென்று அத்தெய்வம் பழிக்கப்பட்டது. வீரரல்லாதவர் - எழுவாய். உளரே - பயனிலை.*

*நிருமலன் - அருகதேவனின் ஆயிரத்தெட்டு திருப்பெயர்களில் ஒன்று.*

## *eḻucīrk kaḻineṭil viruttam*

*miṉṉiṭai maṭavār kuḻaitoṭarn takaṉṟu viṭantaru paṭaiviḻik kuṭaintu*
*veṉṉiṭu mavarkaḷ vīrarē lulakil vīraral lātava ruḷarē*
*koṉṉuṭai neṭuvē laracaru mamara kulamuniṉ ṉaṭimutal vaṇaṅki*
*niṉṉuṭai yaṭiyē yaruḷeṉa virunta nimalaṉē nīyalā viṭiṉē.*

Oh! Flawless Lord, who is seated
With kings sporting fearsome lances
And the congregation of *Tēvars*
Worshipping Thy feet glorious,
And entreating you to bestow Thy feet (to them)
If those (deities) other than you.
Those who are vanquished by the eyes of women
Whose waists are like lightning,
And whose venomous eyes are spread wide upto their ears,
If such (deities) are called warriors brave,
Is there anyone who is not a warrior?

## Explanatory notes :

The deities glorified by followers of religions other than Jainism are condemned here. Flawless Lord is the translation of *Nirmalan̲*, which is one of the 1008 appellations of Arukar.

### கலிவிருத்தம்

*88. விட்டகல்வ தேகருமம் வெய்யவினை காண்முன்*
*கட்டழலு ணுங்குல மடங்கமடி யக்கார்*
*மட்டவிழு மாமலரின் வந்தவர தர்க்கென்*
*னிட்டமிட மாயின தினித்தொடர்வி லேமே.*

***பதப்பொருள்*** *: விட்டு - என்னைவிட்டு அகல்வதே - நீங்குவதே. கருமம் - காரியமாகும் வெய்ய - வெப்பமான. வினைகாண் - வினைகளே. முன் - ஆதியில் கட்டழல்உள் - மிகுந்த நெருப்பினுள். நும் - உம்முடைய். குலமடங்க - குலமுழுதும். மடிய - கெட கார் - சலத்தில் மட்டு - தேனானது. அவிழும் - விரியா நின்ற. மா- பெருமையுடைய மலரின் - தாமரைப்பூவில். வந்த - திருவுலாவந்த. வரதற்கு - கருத்தனுக்கு. என் - என்னுடைய இட்டம் - அன்பே. இடமாயினது - இடமாயிற்று. இனி - மேலே. தொடர்விலேன் - உம்மோடு தொடர்ச்சியில்லே னாதலால் என்றவாறு.*

**பொழிப்புரை** : வெப்பமான வினைகளே! மிகுந்த நெருப்பினுள் ஆதியில் உம்முடைய குலமுழுதும் கெடச் சலத்திலே தேனானது விரியாநின்ற பெருமையையுடைய தாமரைப்பூவில் திருவுலாவந்த கருத்தனுக்கு என்னுடைய அன்பே இடமாயிற்று. இனி உம்மோடு தொடர்ச்சியில்லை. ஆதலாலென்னை விட்டகல்வதே காரியமாகும் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனிடத்தில் தனது மனமடைந்த பெற்றி கூறப்பட்டது. அகல்வதே - எழுவாய். கருமம் - பயனிலை.

வரதன். கருததன் - அருகதேவனின் ஆயிரத்தெட்டு திருப்பெயர்களில் சில.

***kaliviruttam***

*viṭṭakalva tēkarumam veyyaviṉai kāṇmuṉ*
*kaṭṭaḻalu ṇuṅkula mataṅkamaṭi yakkār*
*maṭṭaviḻu māmalariṉ vantavara tarkkeṉ*
*ṉiṭṭamiṭa māyiṉa tiṉiṭṭoṭarvi lēṉē.*

Oh! *viṉais* evil (of hot temper)
In the beginning (of Time) when Thy entire race,
Did perish in fire fierce
My mind did become the abode,
Of *karuttaṉ* who did arrive in a procession
Astride the glorious lotus flower,
No further contact is there with you,
Hence to leave me is what you have to do now.

## Explanatory note:

*Karuttaṉ* - One of the 1008 appellations of Arukar.

**கலிவிருத்தம்**

89. தொடர்படு சடையுட னிருந்து தோகையர்க்
கிடர்படு மனத்தவ ரிறைமை கேட்பரோ
படர்படு கதிப்பெயர்ப் பவ்வ நான்கையுந்
திடர்பட வெகுண்டவர்க் குரிய செல்வரே.

**பதப்பொருள்** : தொடர்படு - தொடர்ச்சிப்பட்ட. சடையுடன் - சடையுடனே இருந்து - வீற்றிருந்து. தோகையர்க்கு - மாதர்களுக்கு இடர்படு - துன்பப்படும் மனத்தவர் - மனத்தையுடையவர்களுடைய. இறைமை - சுவாமித்துவத்தை கேட்பரோ - ஒருவர் சொல்லக் கேட்பார்களோ? படர்படு - பரவிய கதி -நான்கு கதியென்று. பெயர் - பெயரையுடைய. பவ்வ நான்கையும் - நான்கு கடலையும். திடர்பட - மேடாக. வெகுண்டவர்க்கு - கோபித்தவர்க்கு. உரிய -அடியையென்னும். செல்வர் - செல்வத்தையுடைய சாதுக்கள் என்றவாறு.

**பொழிப்புரை :** பரவிய நான்குகதியென்ற பெயரையுடைய நான்கு கடலையும் மேடாகக் கோபித்த அருகருக்குரிமை யென்னுஞ் செல்வத்தையுடைய சாதுக்கள், தொடர்ச்சிபட்ட சடையுடனே வீற்றிருந்து மாதர்களுக்குத் துன்பப்படும் மனத்தையுடையவருடைய சுவாமித்துவத்தை ஒருவர் சொல்லக் கேட்பார்களோ என்றவாறு.

**வி-ரை :** இதனால் அருகருடைய அடியார் மித்தியா தெய்வங்களை மதியார் என்பது கூறப்பட்டது. செல்வர் - எழுவாய். இறைமையை - செயப்படுபொருள். கேட்பரோ - பயனிலை.

சாதுக்கள் - அருகர், சித்தர், ஆசாரியார், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளில் ஐந்தாம் இடத்தை வகிப்பவர்கள். இவர்கள் இருபத்தெட்டு மூலகுணங்களையும், பத்து தருமங்களையும், பன்னிரெண்டு சிந்தனைகளையும், இருபத்துரெண்டு துன்பமும் பொறுத்து வெல்லுதலையும் கடைபிடித்துத் துறவு நெறியைக் காத்து முக்தி நெறியில் செல்வர்.

### *kaliviruttam*

*toṭarpaṭu caṭaiyuṭa ṉiruntu tōkaiyark*
*kiṭarpaṭu maṉattava riṟaimai kēṭparō*
*paṭarpaṭu katıppeyarp pavva nāṉkaiyun*
*tiṭarpaṭa vekuṇṭavark kuriya celvarē.*

Will the ascetics who devoutly belong to the plentiful grace of Arukar
Who did in His wrath silt up the oceans four of *nāṟkati*,
Ever listen to the words,
Of the spurious saints with flowing locks,
Who doth suffer from pangs of longing for women?

## Explanatory notes:

The devotees of Arukar will not crave for either the devotees or deities of religions other than Jainism. *nāṟkati* - The four stages of birth ie Heavenly beings, Humanbeings, Inhabitants of hell and animals.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

90. *செல்வ ரென்று தாந்தம்மைத் தேறிக் கல்வித் திருவுடைய*
*மல்லன் மதியோர் வறுமையைக்கண் டிகழு மடவார் பாலணுகோ*
*மல்லல் வினைவெங் கலிகடிந்திட் டகிலம் புரக்குந் தனிச்செங்கோற்*
*றெல்லை மறைநா யகன்றருமச் சுடர்மா மணிகைக் கொண்டோமே.*

***பதப்பொருள் :*** *செல்வரென்றுதாம் - தாங்கள் செல்வத்தையுடையோமென்றும் தம்மை - தங்களை. தேறி -தெளிந்து கல்வி -கல்வியாகிய. திருவுடைய -*

*செல்வத்தையுடைய. மல்லன் - வளப்பம் பொருந்திய. மதியோர் - புத்தியையுடையவரது. வறுமையை - தரித்திரத்தை கண்டு - பார்த்து. இகழும் - நிந்திக்கா நின்ற. மடவார்பால் - பேதமையுடையவரிடத்தை அணுகோம் - சேரோம். அல்லல் -துன்பத்தைத்தரும். வினை - வினையாகிய. வெம் - வெப்பம் பொருந்திய. கலி -வறுமையை. கடிந்திட்டு - நீக்கி. அகிலம் - யாவற்றையும் புரக்கும் -அளிக்கின்ற. தனி - ஒப்பற்ற. செங்கோல் -ஆக்கினையாகிய. தொல்லை - பழமையையுடைய. மறை - வேதத்தைச் சொன்ன நாயகன் - அருகபரமனுடைய. தருமம் - தருமமாகிய. சுடர் - பிரகாசியாநின்ற. மா-பெருமை பொருந்திய. மணி - இரத்தினத்திரயத்தைக் கைக்கொண்டோம் - கையிற்கொண்டோம் ஆகையால் என்றவாறு.*

**பொழிப்புரை** : துன்பத்தைத் தரும் வினையாகிய வெப்பம் பொருந்திய வறுமையை நீக்கி யாவற்றையும் அளிக்கின்ற ஒப்பற்ற ஆக்கினையாகிய பழமையையுடைய வேதத்தைச் சொன்ன அருகபரமனுடைய தருமமாகிய பிரகாசியாநின்ற பெருமை பொருந்திய இரத்தினத்திரயத்தைக் கையிற்கொண்டோம் ஆகையால், தாங்கள் செல்வததையுடையோமென்று, தங்களைத் தெளிந்து கல்வியாகிய செல்வத்தையுடைய வளப்பம் பொருந்திய புத்தியை யுடையவரது தரித்திரத்தைப் பார்த்து நிந்திக்காநின்ற பேதமையுடையவரிடம் யாஞ்சேரோம் என்றவாறு

**வி-ரை** : இதனால் மித்தியாதிருட்டிகள் எவ்வளவு செல்வந்தராயினும் சம்மியத் திருட்டிகட்கிணையாகா ரென்பது கூறப்பட்டது. யாம் - எழுவாய். மடவாரை - செயப்படுபொருள், அணுகோம் - பயனிலை.

இரத்தினத்திரயம் - நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம். சம்மிய திருட்டிகள் - நற்காட்சியுடையவர்கள்

## *aṟucīrk kaḻineṭil viruttam*

*celva reṉṟu tāntammait tēṟik kalvit tiruvuṭaiya*
*mallaṉ matiyōr vaṟumaiyaikkaṇ ṭikaḻu maṭavār pālaṇukō*
*mallal viṉaiveṅ kalikaṭintiṭ ṭakilam purakkun taṉic ceṅkōṟ*
*ṟellai maṟainā yakaṉṟarumac cuṭarmā maṇikaik koṇṭōmē.*

In our hands have we held the luminous mummaṇi exalted,
Which was propounded by Arukar,
Who did utter scriptures ancient
And who doth bear the sceptre peerless,
Which dispels the grievous viṉai of penury
And protects the world by its virtue
Hence never will we approach the ignorant folk
Who conceited with their possession of wealth
Scoff at the poverty of those rich in learning

## Explanatory note:

*Mummaṇi* known as *irattinat tirayam* consists of three cardinal principles of *naṟkaṭci* (good vision), *naṉñāṉam* (Good wisdom) and *nallolukkam* (good conduct).

### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

91. *கொண்டல் வண்ணனைப் பண்ணவர் தலைவனைக் கொலைகடிந் துயிரோம்புங்*
*கொற்ற நேமியங் கடவுளை மகரவெல் கொடியவன் றனைக்காய்ந்து*
*தொண்டர் சிந்தையிற் றுணிபுநன் மதியெனத் தோன்றுதண் சுடரோனை*
*தூய நான்மறைத் தலைவனை யறிவனைத் தொழாதவர் தொலைபாத*
*சண்ட வெந்துயர் நரகினில் வெருவுறு விலங்கினிற் பசியாலே*
*தளர்ந்து நல்லறி விழந்தமா னிடத்தினிற் றாழ்ந்தினி வரும்பேர்ப்*
*பண்டை வல்வினை பெரும்பகை துரந்திடத் துரந்திடத் தடுமாறிப்*
*பரிவு கொண்டொரு நிலையிலா வருந்துவர் வருந்திலர் பணிவாரே.*

**பதப்பொருள்** : கொண்டல் - மேகம் போன்ற வண்ணனை - நிறத்தையுடையவனை. பண்ணவர்- கடவுளர்களுடைய. தலைவனை - நாயகனை. கொலை - கொல்லுதலை கடிந்து - நீக்கி. உயிர் - சீவனை. ஓம்பும் - இரட்சியாநின்ற. கொற்றம் - வெற்றிபொருந்திய. நேமி - தருமச்சக்கரத்தையுடைய. அம் - அழகிய. கடவுள் - சுவாமியை மகரம் - மகரமீனெழுதிய. வெல் - யாவற்றையுஞ்செயித்த. கொடியவன்றனை - கொடியையுடைய மன்மதனை. காய்ந்து - கொன்று. தொண்டர் - அடியவருடைய. சிந்தையில் - மனத்தில். துணிபு - துணிந்து. நல் - நல்ல. மதியென - புத்தியென்று சொல்ல. தோன்றும் - உதிக்கின்ற. தண்சுடரோனை- சந்திரனை. தூய - பரிசுத்தமான. நான்மறை - நான்கு வேதத்திற்கும். தலைவனை -முதல்வனை. அறிவனை-ஞானியை. தொழாதவர் - வணங்காதவர். தொலையாத - நீங்காத. சண்ட - மிகுந்த. வெம் - வெப்பமாகிய துயர் - துன்பத்தைத்தரும். நரகினில் - நரகத்திலும். வெருவுறு - பயப்படுகின்ற. விலங்கினில்- மிருகத்திலும். பசியாலே - பசியினாலே தளர்ந்து - சோர்ந்து. நல்- நல்ல. அறிவு- ஞானத்தை. இழந்த - நீங்கிய. மானிடத்தினில் - மனிதர்களிலும். தாழ்ந்து - பிறந்து இனிவரும் - மேல்வரப்பட்ட. பேர் - மிகுதியையுடைய. பண்டை - அனாதியிற்கட்டிய வல் - பலத்தையுடைய வினை - தீவினையாகிய. பெரும் - பெரிய. பகை - பகைவன் துரந்திடத்துரந்திட - செலுத்தச்செலுத்த. தடுமாறி - மயங்கி. பரிவுகொண்டு - துன்பங்கொண்டு. ஒருநிலை - ஒரு நிலையும். இலா - இல்லாமல். வருந்துவர் - துன்புறுவார்கள். வருந்திலர் - துன்புறார் பணிவார் - வணங்குமவர் என்றவாறு

**பொழிப்புரை** : மேகம்போன்ற நிறத்தையுடையவனை, கடவுளர்களுடைய நாயகனை, கொல்லுதலை நீக்கிச் சீவனை இரட்சியா நின்ற வெற்றி பொருந்திய தருமச்சக்கரத்தையுடையஅழகிய சுவாமியை, மகர மீனெழுதிய யாவற்றையுஞ் செயித்த கொடியையுடைய மன்மதனைக்கொன்று அடியவருடைய மனதில் நல்லபுத்தியென்று சொல்லத்துணிந்து உதிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய சந்திரனை, பரிசுத்தமான நான்கு வேதத்திற்கு முதல்வனை, ஞானியை வணங்குமவர் துன்புறார், வணங்காதவர்கள், நீங்காத மிகுந்த வெப்பமாகிய துன்பத்தைத் தரும் நரகத்திலும் பயப்படுகின்ற மிருகத்திலும், பசியினாலே சோர்ந்து நல்ல ஞானததையிழந்த மனிதர்களிலும் பிறந்து மேல்வரப்பட்ட மிகுதியையுடைய அநாதியிற்கட்டிய வலியையுடைய தீவினையாகிய பெரிய பகைவன் செலுத்தச்செலுத்த மயங்கித் துன்பங்கொண்டொரு நிலையுமில்லாமல் துன்புறுவார்கள் என்றவாறு.

**வி-ரை** : இதனால் சகல சீவாதாரன் அருகனே என்பது கூறப்பட்டது வணங்குமவர், வணங்காதவர் - எழுவாய். துன்புறார், துன்புறுவார் - பயனிலை

மகரமீன் - சுறாமீன்.

**நான்குவேதம்** : 1. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் சிறப்புறப் பெற்றவர்களின் வரலாற்றினைக் கூறும் **பிரதமானுயோகம்**. 2. உலக அமைப்பும், ஏறுகாலம், இறங்கு காலம் (உத்சர்ப்பிணி - அவசர்ப்பிணி) எனும் காலப் பிரிவுகளையும், தேவ, மனித, விலங்கு, நரகர் என்னும் நான்கு கதிகளையும் கூறும் **கரணானுயோகம்**. 3. இல்லறத்தார், துறவறத்தார் ஒழுக்கங்களைக் கூறும் **சரணானுயோகம்**. 4. உயிர் முதலான பொருள்களையும், புண்ணிய பாவங்களையும் பந்தம், மோட்சம் முதலியனபற்றியும் கூறும் **திரவ்யானுயோகம்**

## *Panniru cir āciriya viruttam*

*Kontal vannanaip pannavar talaivanaik kolaikatin tuyirōmpun*
*korra nēmiyan katavulai makarvel kotiyavan ranaikkāyntu*
*tontar cintaiyir runipunan matiyenat tōnrutan cutarōnai*
*tūya nānmarait talaivanai yarivanait tolātavar tolaipāta*
*canta ventuyar narakinil veruvuru vilankinir paciyālē*
*talarntu nallari vilantamā nitattinir rālntini varumpērp*
*pantai valvinai perumpakai turantitat turantitat tatumārip*
*parivu kontoru nilaiyilā varuntuvar varuntilar panivārē.*

Those who worship,
The cloud-hued One,
The leader of saints divine,
The Lord beautiful who doth sport the victorious *Tarumacakkaram*
Which protects life and avoids slaughter,

The cool moon-like (Lord) who doth boldly appear,
In the minds of the discerning devotees
And who hath in His ire destroyed Maṉmataṉ of *Makara* banner,
The Chief of the pure scriptures four,
And the scholar profound
(Those who worship Lord Arukar of such attributes)
Will never come to grief.
Those who worship not,
Will drown but deeply in hell of dire grief,
In birth as beasts frightening,
In human state devoid of wisdom suffering from hunger acute,
And with the evil *viṉai* past harassing them in hostile pursuit,
Will suffer in daze without stability.

## Explanatory notes:

Maṉmataṉ - God of Love. *Makara* - fish or shark.
**The four vētas** or scriptures are (1) *piratamāṉuyōkam*, (2) *karaṇāṉuyōkam* (3) caraṇāṉuyōkam (4) tiravyāṉuyōkam.

### களி

### சந்த விருத்தம்

*92. பண்டயன்றலை மண்டையிற்றிரு மாலரற்கு நிறைத்திடும்*
*பழையமந்திர மன்றுமந்திர யானமோதிய போதியா*
*னுண்டமந்திர மன்றுவேதியர் வேதமந்திர மோதிநின்*
*றுண்ணுமந்திர மன்றெனாவிடை நண்ணுமந்திர மந்திரத்*
*தண்டர்தம்பதி கண்களாயிர முங்கரங்களு மாடநின்*
*றாடிநெஞ்சு களிப்பவஞ்ச மொளிப்பவைம் பெருநூறுவாய்க்*
*கொண்டமந்திர மெமக்கனந்த சுகத்தையேதரு மந்திரம்*
*கொற்றமுக்குடை நற்றவன்றமர் கூறுமந்திர மஞ்சுமே.*

**பதப்பொருள்** : *பண்டு - ஆதியில். அயன் - பிரமனுடைய. தலைமண்டையில் - கபாலத்தில். திருமால் - விஷ்ணு. அரற்கு - அரனுக்கு. நிறைத்திடும் - நிறைந்த. பழைய மந்திரமன்று - பழங் கள்ளன்று மந்திரயான - அக்கள்ளின் விதியை. ஓதிய- சொன்ன. போதியான் - அரசு நிழலையுடைய புத்தன். உண்ட - குடித்த. மந்திரமன்று- கள்ளன்று. வேதியர் - பிராமணர். வேதமந்திரம் - வேதமந்திரத்தை.*

ஓதிநின்று -ஓதிக்கொண்டு. உண்ணும் - குடிக்கின்ற. மந்திரமன்று- கள்ளன்று. என் - என்னுடைய. நாவிடை - நாவிலே. நண்ணுமந்திரம் -பொருந்து மந்திரம். அந்தரத்து - விமானத்தில் வாழும். அண்டர்தம் - தேவர்களுடைய. பதி - நாயகனான இந்திரன். கண்களாயிரமும் -ஆயிரம் கண்களும். கரங்களும் - ஆயிரம்கைகளும். ஆட - ஆடும்படி. நின்று - எதிரே நின்று. ஆடி - நடித்து. நெஞ்சு - மனம். களிப்ப- சந்தோஷிக்க. வஞ்சம் - கபடம். ஒளிப்ப - ஒளிக்க. ஐம்பெருநூறு - ஐநூறு. வாய் - வாயிலும். கொண்டமந்திரம்- செபித்துக் கொண்டமந்திரம் எமக்கு - எங்களுக்கு. அனந்த சுகத்தையே - அனந்த சுகத்தை. தருமந்திரம் - கொடுக்கும் மந்திரம். கொற்றம் - வெற்றியையுடைய. முக்குடை - மூன்று குடையையுடைய நற்றவன் - நல்ல தவத்தையுடைய அருகனுடைய. தமர் - அடியார்கள். கூறும்- சொல்லும் மந்திரமஞ்சும் - பஞ்சமந்திரமும் என்றவாறு.

**பொழிப்புரை** : என் நாவிலே பொருந்து மந்திரம் விமானத்தில் வாழுந்தேவர்களுடைய நாயகனான இந்திரன் ஆயிரங்கண்களும் ஆயிரம் கைகளும் ஆடும்படி எதிரே நின்று நடித்து மனமானது சந்தோஷிக்க கபடமொளிக்க ஐநூறு வாயிலும் செபித்துக் கொண்ட மந்திரம், எங்களுக்கு அனந்த சுகத்தைக் கொடுக்கும் மந்திரம், வெற்றியையுடைய மூன்று குடையையுடைய நல்ல தவத்தையுடைய அருகனது பக்தர்கள் சொல்லும் பஞ்சமந்திரமும், ஆதியில் பிரம்மனுடைய தலைமண்டையில் விஷ்ணு அரனுக்கு நிறைந்த பழங்கள்ளன்று, கள்ளின் விதியைச் சொன்ன அரசநிழலையுடைய புத்தன் குடித்த கள்ளன்று, பிராமணர் வேதமந்திரத்தை ஓதிக்கொண்டு குடிக்கின்ற கள்ளன்று என்றவாறு.

**வி-ரை** : இதனால் பஞ்சமந்திரத்தினது பெருமை கூறப்பட்டது. மந்திரமஞ்சும் - எழுவாய். கள்ளன்று - பயனிலை.

அனந்தசுகம் - அளவற்ற இன்பம். மூன்றுகுடை - முத்துக்குடை, பொற்குடை, மாணிக்கக்குடை. பஞ்சமந்திரம் - அ சி ஆ உ சா. (அருகரை வணங்குகிறேன். சித்தரை வணங்குகிறேன். ஆசாரியரை வணங்குகிறேன். உபாத்தியாயரை வணங்குகிறேன், சாதுக்கள் எல்லோரையும் வணங்குகிறேன்).

## *Kaḷi*

### *canta viruttam*

*Paṇṭayaṉṟalai maṇṭaiyiṟṟiru mālaraṟku niṟaittiṭum*
*paḻaiyamantira maṉṟumantira yāṉamōtiya pōtiyā*
*ṉuṇṭamantira maṉṟuvētiyar vētamantira mōtiniṉ*
*ṟuṇṇumantira maṉṟeṉāviṭai naṇṇumantira mantirat*
*taṇṭartampati kaṇkaḷāyira muṅkaraṅkaḷu māṭaniṉ*
*ṟāṭineñcu kaḷippavañca moḷippavaim perunūṟuvāyk*
*koṇṭamantira memakkaṉanta cukattaiyētaru mantiram*
*koṟṟamukkuṭai naṟṟavaṉṟamar kūṟumantira mañcumē.*

The incantation which doth settle on my tongue
Is not the stale toddy which Tirumāl long ago
Did pour on Piramaṉ's skull and offer to Civaṉ
Is not also the toddy drunk under the *Pōti* tree's shade
By Buddha who did stipulate its code
Nor is it the toddy which the brahmin's drink
While they their scriptures chant.
It is perforce the *pañcamantiram,*
Which Intiran, the *Tēvar's* chief, living in upper space
Did receive dancing in jubilation,
With his eyes and hands a thousand each
And his mouths five hundred chanting it with reverence
It is the *mantiram* which doth provide *aṉantacukam* to us
It is the *pañcamantiram* uttered by the devotees,
Of the saintly Arukar who doth possess the victorious parasols three.

## Explanatory notes:

Tirumāl - Lord Viṣṇu the God of protection in Hinduism. Piramaṉ - The God of creation in Hinduism. Civaṉ - The God of destruction in Hinduism. Pōti - The tree under which Lord Buddha attained enlightenment. *Tēvars* - The heavenly beings. *Pañcamantiram* - The five incantations in Jainism:

1. *A* - I worship Arukar 2. *Ci* - I worship the *Cittars* (ascetics with miraculous power). 3. *Ā* - I worship the *acāriyar* (spiritual mentor). 4. *U* - I worship the *upātyāya* (teacher). 5. *Cā* - I worship the *Cātus* (saints). *Aṉantacukam* - unlimited or endless pleasure.

**எண்சீர்க் கழிநெடில் விருத்தம்**

93. *அஞ்சன நெடுங்கயல் கொடுங்குழை நெருக்கு*
*மானன மரம்பையர்க ளாயிரவ ராடுங்*
*கஞ்சமல ராயிர மருங்குடைய தெய்வக்*
*காமர்நளி னத்தமரர் கைதொழ நடந்தாய்*
*வெஞ்சின மடங்கலொடு குஞ்சரமு நண்பாய்*
*மேவியொழு கப்புவனி காவல்புரி வீரா*
*நெஞ்சனிறை வல்லரண் முருங்கவோ ரனங்கன்*
*நின்றுமலை யாநிலைமை யென்றுபெறு வேனே.*

**பதப்பொருள்** : அஞ்சனம் - மையெழுதிய. நெடும் - நீண்ட. கயல் - சேற்கெண்டைகளாகிய க்ண்கள். கொடும் - பளுவினால் கொடுமையான. குழை- குண்டலம் பொருந்திய காதை. நெருக்கும் - நெருங்காநின்ற. ஆனனம் - முகத்தையுடைய அரம்பையர்கள் - தேவமாதர்கள் ஆயிரவர் - ஆயிரமென்னு மிலக்கமுடையவர்கள். ஆடும் - ஆடுகின்ற. கஞ்சமலர் - தாமரைமலர்கள். ஆயிரம்- ஆயிரங்கள் மருங்கு - பக்கத்தில். உடைய - உடைத்தாகிய தெய்வம் - தெய்வத் தன்மையையுடைய. காமர் - அழகிய. நளினத்து - தாமரைப்பூவில். அமரர்- தேவர்கள். கை - கைகளைக் கூப்பி. தொழ - வணங்க. நடந்தாய் - நடந்தவனே! வெம் - வெப்பம்பொருந்திய சினம் - கோபத்தையுடைய. மடங்கலொடு - சிங்கத்துடனே. குஞ்சரமும்- யானையும் நண்பாய் - சினேகமாய் மேவி - பொருந்தி. யொழுக - நடக்க. புவனி - உலகத்தை. காவல் - காத்தலை. புரி - செய்கின்ற வீரா- அனந்த வீரியனே! நெஞ்சம் - மனத்தின் கண். நிறை - கற்பாகிய வல் - வலி மையையுடைய. அரண் - மதில் முருங்க - அழிய. ஓரனங்கன்- ஒரு மன்மதன். நின்று - எதிர்நின்று. மலையா - சண்டை பண்ணாத. நிலைமை - நிலையான தன்மையை. யென்று- எப்பொழுது. பெறுவேன் - அடைவேன் என்றவாறு.

**பொழிப்புரை** : மைதீட்டிய நீண்ட சேற்கெண்டையாகிய கண்கள், கனமான குண்டலம் பொருந்திய காதை நெருங்குகின்ற முகத்தையுடைய தேவமாதர்கள் ஆயிரவர் நடிக்கப்பட்ட, தாமரை மலர்கள் ஆயிரம் பக்கத்திலுடைத்தாகிய தெய்வத் தன்மையையுடைய அழகிய தாமரைப் பூவில், தேவர்கள் கைகளைக் கூப்பி வணங்க நடந்தவனே! வெப்பம் பொருந்திய கோபத்தையுடைய சிங்கத்துடனே யானையும் சினேகமாய் பொருந்தி நடக்க வுலகத்தைக் காத்தலைச் செய்யாநின்ற அனந்த வீரியனே! மனத்தின்கண் கற்பாகிய வலியையுடைய மதிலழிய ஒரு மன்மதன் எதிர்நின்று சண்டை பண்ணாத நிலையான தன்மையை எப்பொழுது அடைவேன் என்றவாறு.

**வி-ரை** : இதனால் காமங்கடத்தலே முத்திக்கு நெறியென்பது கூறப்பட்டது. யான் - எழுவாய். நிலைமையை - செயப்படுபொருள். என்று பெறுவேன் - பயனிலை.

அனந்தவீரியம் - அளவற்ற வலிமை,

## eṉcīrk kaḻineṭil viruttam

*añcaṉa neṭuṅkayal koṭuṅkuḻai nerukku*
*māṉaṉa marampaiyarka ḷāyirava rāṭuṅ*
*kañcamala rāyira maruṅkuṭaiya teyvak*
*kāmarnaḷi ṉattamarar kaitoḻa naṭantāy*
*veñciṉa maṭaṅkaloṭu kuñcaramu naṇpāy*
*mēviyoḻu kappuvaṉi kāvalpuri vīrā*
*neñcaṉiṟai vallaraṇ muruṅkavō raṉaṅkaṉ*
*niṉṟumalai yānilaimai yeṉṟupeṟu vēṉē.*

Oh! Thou who did tread on the lotus divine,
As heavenly damsels with long *kayal* like eyes adorned with mascara,
That extend up to their ears where pendents oscillate
As a thousand damsels with faces such,
Stand on lotus flowers on both sides and dance
And as *Tēvars* with folded hands walk ahead worshipping Thee.
Oh! Lord of eternal vigour,
Who doth guard this world,
With the cruel lion furious and the elephant walk in intimate company,
When shall I attain,
The stable and unruffled attitude of not fighting,
Against Ma̱nmata̱n who doth confront me in a war,
To upset my strong will?

**Explanatory notes** :

*Kayal* - a kind of fish. Ma̱nmata̱n - God of love also known as Kāma̱n.

### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

*94.* *பெறுவ தெண்டிசை கைதொழ வருளறந் தருதனிச் செங்கோலாற்*
*பிறங்கு மூவுல கொருங்குட னாள்வதொர் பெருமையைப் பெறாதிங்கு*
*மறுவ ரும்பெருந் துயர்தரு வினைப்பழம் பகைவர்கை யகப்பட்டு*
*வருந்து கின்றதுன் றிருந்தடி நினைகுவ தருமையின் வெறிவீச*
*வறுப தந்தொடர்ந் தெழுநரம் பெனமுர லிசைகுழு கும்மென்ன*
*வலங்கு தண்மதுத் திவலையொ டிழிதரு மலர்மழை வலையத்து*
*ளுறுவர் வந்தனை செய்விருந் தருளிய வும்பர்நா யகனேயென்*
*னுள்ள மாமலர் மிசையினு மொருபொழு துலாவெழுந் தருள்வாயே.*

**பதப்பொருள்** : பெறுவது - அடைவது எண்டிசை - எட்டுத்திக்குமுள்ளார். கை- கைகளைக்கூப்பி. தொழ - வணங்க. அருள் - அருளாகிய.. அறம் -. தருமத்தை. தரு- கெடுக்கின்ற. தனி - ஒப்பற்ற. செங்கோலால் - ஆக்கினையால். பிறங்கு - விளங்குகின்ற. மூவுலகு- மூன்றுலகம். ஒருங்கு - ஒன்றாக உடன் - ஒருதன்மையாய். ஆள்வது - ஆளுவதுமாகிய. ஓர் பெருமையின் - ஒப்பற்ற பெருமையை. பெறாது- அடையாமல் இங்கு - இவ்விடத்தில். மறு - குற்றங்கள் வரும் - வருகின்ற. பெரும் - மிகுந்த. துயர் - துன்பத்தை. தரு - கொடுக்கின்ற. வினை - வினைகளாகிய. பழம் - பழமைபொருந்திய. பகைவர் - சத்ருக்களுடைய. கை - கையிலே.

அகப்பட்டு- உட்பட்டு வருந்துகின்றது. - துன்புறுகின்றது. உன் - உன்னுடைய. திருந்து - திருத்தமாகிய அடி - பாதங்களை. நினைகுவது - நினைவது அருமையின்- அருமையாகையால் வெறி - வாசனை வீச - கமழ. அறுபதம் - வண்டினங்கள். தொடர்ந்து - பின்தொடர்ந்து எழு நரம்பென - சத்தசுரம்போல. முரல் - சப்திக்கின்ற இசை - இராகமானது. குமுகுமுமென - குமுகும் மென்றொலிக்க. அலங்கு - அசைகின்ற. தண் - குளிர்ந்த. மதுத்திவலையொடு - தேன்துளியுடனே. இழிதரு -இரங்குகின்ற. மலர்மழை - புட்பமாரியினுடைய. வலையத்துள் - வட்டத்தினுள் உறுவர் - முனிவர்களை. வந்தனை- வணக்கத்தை. செய - பண்ண. இருந்தருளிய - வீற்றிருந்த உம்பர் - தேவர்களுக்கு. நாயகனே - நாதனே. என் - என்னுடைய உள்ளம் - இதயமாகிய. மா - பெருமைபொருந்திய மலர்மிசையிலும்- தாமரைப்பூமேலும் ஒருபொழுது - ஒருகணம். உலா - திருவுலா எழுந்தருள்வாய்- எழுந்தருளென்றவாறு.

**பொழிப்புரை** : வாசனைவீச வண்டினங்கள் பின்தொடர்ந்து சத்தசுரம்போலச் சப்திக்கின்ற இராகமானது குமுகுமுகும் மென்றொலிக்க அசைகின்ற குளிர்ந்த தேன்துளியுடனே இறங்குகின்ற புடபமாரியினுடைய வட்டத்தினுள் முனிவர்கள் வணக்கத்தைப்பண்ண வீற்றிருந்த தேவர்களுக்கு நாதனே! இவ்விடத்தில் எட்டுதிக்குமுள்ளார் கைகளைக் கூப்பி வணங்கப்பெறுவது மருளாகிய தருமததைக் கொடுக்கின்ற வொப்பற்ற ஆக்கினையினாலே விளங்குகின்ற மூன்றுலகு மொன்றாக ஒரு தன்மையா யாள்வதுமாகிய ஒப்பற்ற பெருமையை அடையாமல் குற்றங்கள் வருகின்ற மிகுந்த துன்பத்தைக் கொடுக்கின்ற வினைகளாகிய பழமை பொருந்திய பகைவர் கையிலகப்பட்டு உன்னுடைய திருத்தமாகிய பாதங்களை நினைகுவதருமையாகையால் என் மனமானது துன்புறுகின்றது. ஆகையால் என்னடைய உள்ளமாகிய பெருமை பொருந்திய தாமரைப்பூமேலும் ஒருகணந் திருவுலா வெழுந்தருள்வாய் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனை மனத்தில் வையாதவர்கள் கருமங்கெடுத்து வீடுபெற மாட்டார்களென்பது கூறப்பட்டது நாயகனே நீ - எழுவாய். உலாவெழுந்தருள் - பயனிலை.

சத்தசுரம் - ஏழுவகை இசை, சப்திக்கின்ற - ஒலிக்கின்ற.

## *Pannirucir aciriya viruttam*

*Peruva tenticai kaitola varulaṟan tarutaṉic ceṅkōlāṟ*
*piṟaṅku mūvula koruṅkuta ṉāḷvator perumaiyaip peṟātiṅku*
*maṟuva rumperun tuyartaru viṉaippaḷam pakaivarkai yakappaṭṭu*
*varuntu kiṉṟatuṉ ṟiruntaṭi niṉaikuva tarumaiyiṉ veṟivica*
*vaṟupa tantoṭarn teḻunaram peṉamura licaikumu kummeṉṉa*
*valaṅku taṇmatut tivalaiyo ṭiḻitaru malarmaḻai valaiyattu*
*ḷuṟuvar vantaṉai ceyviruṉ taruḷiya vumparnā yakaṉēyeṉ*
*ṉuḷḷa māmalar micaiyiṉu morupoḻu tulāveḻun taruḷvāyē.*

Oh! Chief of the *Tēvars,*
Seated for the saints to worship,
In the circle of the showering flowers,
That fall wafting (their) fragrance,
Along with honey drops cool
As the swarming bees that follow hum their music in *svarās* seven
Without attaining the pride,
Of ruling the worlds three but uniformly,
Wielding the peerless sceptre of *arul̥aṟam,*
For all in directions eight to worship with hands folded
And being trapped in the hands of the foes,
Those old enemies that are our *vinais* guilty and harmful
Thy graceful feet can scarce be contemplated.
Hence it doth pain my mind.
Do please therefore arrive as in Thy procession
In the lotus of my mind as well,
Just for a second.

## Explanatory notes:

Seven *Svarās* - The seven notes of the musical scale *ca, ri, ka, ma, pa, ta, ni*
*arul̥aṟam* - The Jaina code of virtue and conduct.

### வஞ்சி விருத்தம்

*95.* *அருவினை விடும்பகவர் சித்தர்க*
*ளொருதுறவு தந்தருளு முத்தமர்*
*சுருதிகள் பயந்தருள்செய் சுத்தர்க*
*டிருமுனிவர் தங்கள்பெயர் செப்பவே.*

*பதப்பொருள் : அரு - வெல்லுதற்கரிதாகிய. வினை - வினையானது. விடும் - சீவனைவிடும். பகவர் - அருகரும் சித்தர்கள் - சித்தர்களும். ஒரு - ஒப்பற்ற. துறவு- தவத்தை. தந்தருளும்- கொடுக்கின்ற. உத்தமர் - ஆசிரியரும். சுருதிகள் - வேதங்களை. பயந்து - ஓதுவித்து. அருள்செய்- இரட்சியாநின்ற. சுத்தர்கள் - உபாத்தியாயர்களும். திரு - சித்திருவையுடைய. முனிவர்தங்கள் - சாதுக்களுமாகிய பஞ்சபரமேட்டிகளுடைய. பெயர் - நாமங்களை. செப்பவே- சொல்லவே என்றவாறு.*

**பொழிப்புரை** : அருகரும், சித்தர்களும் ஒப்பற்ற தவத்தைக் கொடுக்கின்ற ஆசாரியரும் வேதங்களை ஓதுவித்து இரட்சியாநின்ற உபாத்தியாயர்களுஞ் சித்தித் திருவையுடைய சாதுக்களுமாகிய பஞ்சபரமேட்டிகளுடைய நாமங்களைச் சொல்லவே வெல்லுதற்கரிதாகிய வினையானது சீவனைவிடும் என்றவாறு.

**வி-ரை** : இதனால் பஞ்சமந்திரமே முத்திக்குக் காரணமென்பது கூறப்பட்டது வினை - எழுவாய் சீவனை - செயப்படுபொருள். விடும் - பயனிலை.

அருகர், சித்தர், ஆசாரியார், உபாத்தியாயர், சாதுக்கள் - பஞ்சபரமேட்டிகள். நாமம் - பெயர்

### *vañci viruttam*

*aruvinai vitumpakavar cittarka*
*loruturavu tantarulu muttamar*
*curutikal payantarulcey cuttarka*
*tirumunivar tankalpeyar ceppavē.*

If one utters the glorious appellations,
Of Arukar, *Cittar* and the *Acāriyar*
Who doth provide penance peerless,
And the protective *Ūpātyāyars* who elucidate the import of *ākama*
If thus the names of the *pañcaparamēttis* are uttered daily.
The *vinais* invincible will leave *jīvan.*

## Explanatory notes:

*Cittar* - ascetics with miraculous powers. *Acāriyar* - spiritual mentor or guide. *Upātyāyar* - Teacher or mentor who expounds scriptures. *akāma* - scriptures. *Pañcaparamēttis* - The first letters in the names of the *pañcaparamettis* form the *Pañcamantiram* ie Arukar, *Cittar, Acāriyar, Upātyāyar, Cātu.* Jīvan - Life.

### கலித்தாழிசை

*96.* *பல்லுருவ மெல்லாம் படைத்தேனுக் கெட்டாத*
*வெல்லுருவாய் நீண்ட வெழிலுருவம் யாதரோ*
*வெல்லுருவாய் நீண்ட வெழிலுருவ முக்குடைக்கீழ்த்*
*தொல்லுலக மூன்றுந் தொழச்சூழ் வினையென்னும்*
*வல்லிருள் துறந்திடுவ தன்றே.*

***பதப்பொருள்** : பல் - பலவாகிய. உருவமெல்லாம் - உருவங்களெல்லாம் படைத்தேனுக்கு - எடுத்த எனக்கு. எட்டாத - அடையக்கூடாத. எல் -*

*பிரகாசியாநின்ற. உருவாய் - உருவமாய் நீண்ட - உயர்ந்த எழில்- அழகாகிய. உருவம் - உருவமானது யாது - யெதுதான் எல் - பிரகாசமாகிய உருவாய் - உருவமாகி நீண்ட - வளர்ந்த. எழில்-அழகிய. உருவம் - உருவமானது முக்குடைக்கீழ் - முக்குடை நிழலில் தொல் - பழமையாகிய உலகமூன்றும் - மூன்று உலகமும். தொழ - வணங்க. சூழ் - சீவனைப்பற்றிய. வினையென்னும் - வினையாகிய வல் - வலிய இருள் - இருட்டை துறந்திடுவதன்றே - ஓட்டுவதன்றோ என்றவாறு.*

**பொழிப்புரை** : *பலவாகிய உருவங்களெல்லாம் எடுத்த எனக்கு அடையக்கூடாத பிரகாசியாநின்ற உருவமாய் உயர்ந்த அழகிய உருவமானது யாதுதான்; பிரகாசமாகிய உருவமாகி வளர்ந்த அழகிய உருவமானது. முக்குடை நிழலிற் பழமையாகிய மூன்றுலகமும் வணங்கச் சீவனைப் பற்றிய வினையாகிய வலிய இருட்டை ஓட்டுவதன்றோ என்றவாறு*

**வி—ரை** : *இதனால் சித்தருடைய உருவங் கிடைத்தல் அரிதென்பது கூறப்பட்டது உருவம் - எழுவாய். யாது - பயனிலை உருவம் - எழுவாய். இருட்டை - செயப்படுபொருள் துறந்திடுவதன்றே - பயனிலை*

## *kaliltāḻicai*

*palluruva mellām paṭaittēṉuk keṭṭāta*
*velluvāy niṉṟa veḻiluruvam yātarō*
*velluruvāy niṉṟa veḻiluruva mukkuṭaikkīḻt*
*tollulaka mūṉṟun toḻaccūl viṉaiyeṉṉum*
*valliruḷ tuṟantiṭuva taṉṟē.*

For me,
Having taken shapes several (in births as many)
Which is the shape tall and elegant,
The shape that doth conquer *viṉai*
And which I cannot attain till date?
It is but the shape of Arukar, tall and elegant
The shape under the shade of parasols three
Worshipped by the ancient worlds three
That which did extend itself as a shape long and victorious,
To dispel the dense darkness of the *viṉai*
Which surrounds life.

## Explanatory notes:

Three parasols - *mukkuṭai* - Pearl parasol, ruby parasol and gold parasol. Three worlds - *mūvulakam* - Heaven or the upper world; the earth or the middle world and hell (nether world).

### சந்த விருத்தம்

97. இடுகிடை தளர்வார் செற்றன வினையன விளையர்தோள் வெற்றமு
மிதயமு நிறையுமோ டப்பொரு தெறிவன முளரிநாண் மொட்டினை
யடுவன விவையெனா நச்செழி லயில்விழி மயிலனார் கச்சணி
யணிமுலை பரசிமா லுற்றுள மலமரு செயலெலாம் விட்டன
முடுகிய லிவுளிதேர் வெற்புறழ் முரணிய மறவர்கால் செற்றதொர்
முரிதிரை யுவரிபோன் மொய்த்திகன் முருகுதொ றொழுகுசோ ரிப்புனல்
கடுகிய கதிகளா கத்தெறு கறுவுகொ டமர்செயா தொத்தெழு
கருணைகொ டுலகமாள் கொற்றவர் கடிமலர் கடவுதாள் பற்றியே.

**பதப்பொருள் :** இடுகு - சிறுகிய இடை - மருங்குல் தளர் - சோர். வார் - கச்சினை செற்றன- செயித்தன. இனையன - இவைகள். இளையர் - காமுகருடைய. தோள் - தோளினுடைய. வெற்றமும் - வெற்றியும் இதயமும் - மனமும். நிறையும்- கற்பும். ஓட - நீங்க. பொருது - மோதி. எறிவன -அடிப்பன முளரி - தாமரையினுடைய நாண் - அன்றலரும். மொட்டினை - மொக்கினை. அடுவன- செயிப்பன இவையெனா - இவையென்று நச்சு - விடம் பொருந்திய. எழில் - அழகையுடைய. அயில் - வேல்போன்ற. விழி - கண்களையுடைய மயிலனார் - மயில்போன்ற மாதர்களுடைய. கச்சு - கச்சினை. அணி -அணிந்து. அணி - ஆபரணம் பொருந்திய முலை- தனங்களை. பரசி - துதித்து. மால் - மயக்கத்தை. உற்று - பொருந்திய உளம் - மனமானது. அலமரு - சுழல்கின்ற. செயலெலாம் - செய்கையெல்லாம். விட்டனம் - நீங்கினோம். முடுகு - முடுகுகின்ற இயல் - இயல்பையுடைய இவுளி - குதிரையும். தேர் - இரதமும். வெற்பு - மலையை. உறழ் - ஒத்தயானையும். முரணிய - வலியையுடைய. மறவர் - வீரர்களும். கால் செற்றது - கோபித்துச் சூழ்ந்து கொண்டு. முரி-உடையாநின்ற. திரை - அலையையுடைய. உவரிபோல் - சமுத்திரம் போல். மொய்த்து - நெருங்கி. இகல்-யுத்தமானது. முறுகுதொறு - மிகுந்தோறும். ஒழுகு - நடக்கப்பட்ட. சோரி- இரத்தமாகிய. புனல் - சலமானது. கடுகிய - முடுகிய. கதிகள் -வெள்ளமாக வோடுதல். ஆக - உண்டாக. தெறு - கொல்லுகின்ற. கறுவு - வைரத்தை. கொடு-கொண்டு. அமர் - யுத்தத்தை. செயாது - பண்ணாமல். ஒத்து - பொருந்தி. எழு - எழுகின்ற. கருணை - கிருபையை. கொடு - கொண்டு. உலகம் - உலகத்தை. ஆள் - ஆள்கின்ற. கொற்றவர் - வெற்றியையுடைய வருகபரமனது. கடி - வாசனை பொருந்திய. மலர் - தாமரைப்பூவை. கடவு - நடத்துதலைச் செய்யும். தாள்- பாதத்தை. பற்றியே - பிடித்தே என்றவாறு

*பொழிப்புரை :* முடுகுகின்ற இயல்பையுடைய குதிரையும், இரதமும், மலையையொத்த யானையும், வலிமையுடைய வீரர்களும், காற்றாற் கோபித்துச் சூழ்ந்து கொண்டு உடையும் அலையையுடையசமுத்திரம் போல் நெருங்கி, யுத்தமானது மிகுந்தோறும் நடக்கப்பட்ட இரத்தமாகிய சலமானது, முடுகிய வெள்ளமாக ஓடுதலுண்டாகக் கொல்லுகின்ற வைரத்தைக் கொண்டு யுத்தம் பண்ணாமற் பொருந்தி எழுகின்ற கிருபையைக் கொண்டு உலகத்தை யாளுகின்ற வெற்றியையுடைய அருகபரமனது வாசனை பொருந்திய தாமரைப்பூவை நடத்துதலைச் செய்யும் பாதத்தைப் பிடித்தே, சிறுகிய மருங்குல் சோரக் கச்சினைச் செயித்த இவைகள்; தாமரையினுடைய அன்றலரும் மொக்கினை செயிப்பன; இளையவர்களுடைய தோளினது வென்றியும், மனமுங், கற்பு நீங்க மோதியடிப்பன; இவையென்று விடம் பொருந்திய அழகையுடைய வேல் போன்ற கண்களையுடைய மயில் போன்ற மாதர்களுடைய கச்சினை அணிந்த ஆபரணம் பொருந்திய தனங்களைத் துதித்து மயக்கத்தைப் பொருந்தி மனமானது சுழல்கின்ற செய்கை எல்லாவற்றையும் யாம் விட்டோ மென்றவாறு.

*வி-ரை :* இதனால் அருகனைத் துதித்து நம்புபவரே காமனை வென்றவரென்பது கூறப்பட்டது. யாம் - எழுவாய். எல்லாவற்றையும் - செயப்படுபொருள். விட்டனம்- பயனிலை.

வைரம் - பகைமை. மருங்குல் - இடை. கச்சு - முலை. கச்சு - மார்பை இழுத்துக்கட்டும் துணி

## *canta viruttam*

*iṭukiṭai taḷarvār ceṟṟaṉa viṉaiyaṉa viḷaiyartōḷ veṟṟamu*
*mitayamu niṟaiyumō ṭapporu teṟivaṉa muḷarināṇ moṭṭiṉai*
*yaṭuvaṉa vivaiyeṉā nacceḻi layilviḻi mayilaṉār kaccaṇi*
*yaṇimulai paracimā luṟṟuḷa malamaru ceyalelām viṭṭaṉa*
*muṭukiya livuḷitēr veṟpuṟaḷ muraṇiya maṟavarkāḷ ceṟṟator*
*muritirai yuvaripōṉ moyttikaṉ murukuto ṟoḻukucō rippuṉal*
*kaṭukiya katikaḷā katteṟu kaṟuvuko ṭamarceyā totteḻu*
*karuṇaiko ṭulakamāḷ koṟṟavar kaṭimalar kaṭavutāḷ paṟṟiyē.*

Holding Lord Arukar's graceful feet which did tread
On the flower (lotus) fragrant,
Holding the feet of Arukar the prime Lord,
Who doth victoriously rule over this world,
By means of His innate grace appropriate,

Without waging war any in hostility,
Marked by flooding blood and carnage,
With the fleet-footed cavalry, mountainous elephants and chariots
And the doughty infantry as well
Charging like the rising waves of a rough ocean crossed by storm,
(Holding such feet of Arukar)
I have relinquished temptations all that make me restless in mind
The flutter caused by the bejewelled and brassiered breasts of women,
Whose eyes flare up in anger at the brassieres as the slim waists hurt,
And knock in order to melt and dispel the might,
Of the brawny shoulders, mind and fidelity of youth
And that which defeat the just blossomed lotus
(Such eyes of women)
The beautiful eyes venomous are sharp like spears

## Explanatory note :

This poem declares that only those who depend on the grace of Arukar's feet can conquer the wiles of Manmatan and the consequent lust.

### அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

98. *பற்றற் றவர்கள் வந்துன்னைப் பற்றி லவர்கள் பற்றற்றே*
*நிற்றற் கியைந்து பற்றாது நின்றா யிதுவ்வு நெறியாமோ*
*கொற்றக் கவிகை யொருமூன்றுங் குளிர்வெண் டிங்க ணிலாவெறிக்கு*
*முற்றத் தமரர் முடிகள்வெயி லெறிக்கு மெயிலாய் மொழியாயே.*

***பதப்பொருள் :*** *பற்று - வினைப்பற்று. அற்றவர்கள் - நீங்கினவர்கள். வந்து - உன்னிடத்தில் வந்து. உன்னைப் பற்றில் - உன்னைப் பற்றினால். அவர்கள் - உன்னைப் பற்றினவர்கள் பற்றற்றே- வினைப்பற்று நீங்கியே. நிற்றற்கு -நிற்றலுக்கு. இயைந்து - பொருந்தி. பற்றாது - நீயவரைப் பற்றாமல். நின்றாய் - நின்று விட்டாய். இதுவும் - இத்தன்மையும். நெறியாமோ - நன்னெறியாமோ? கொற்றம் - வெற்றி பொருந்திய. கவிகையொடு மூன்றும் - மூன்று குடையும் குளிர் - குளிர்ந்த. வெண்- வெண்மையாகிய திங்கள் - சந்திரன்போல். நிலா - பிரகாசத்தை. எறிக்கும் - வீசாநின்ற முற்றத்து - முன்வாயிலிலே. அமரர் - தேவர்களுடைய. முடிகள் - கிரீடங்களினாலே. வெயிலில் - இளஞ்சூரியன்போல். எறிக்கும் - விளங்காநின்ற எயிலாய் - மும்மதிலையுடையவனே! மொழியாய் - செல்லென்றவாறு*

**பொழிப்புரை** : வெற்றி பொருந்திய மூன்று குடையுங் குளிர்ந்த வெண்ணிலாவாகிய சந்திரன்போல் பிரகாசத்தை வீசாநின்ற முன்வாயிலிலே,தேவர்களுடைய கிரீடங்களினாலே இளஞ்சூரியன் போல் விளங்காநின்ற மும்மதிலையுடையவனே! வினைப்பற்று நீங்கினவர்கள் உன்னிடத்தில் வந்து உன்னைப் பற்றினால் அவர்கள் வினைப்பற்று நீங்கியே நிற்றலுக்குப் பொருந்தி, நீயவரைப் பற்றாமனின்று விட்டாய்; இத் தன்மையும் உன் நெறியாமோ? நீ சொல் என்றவாறு

**வி—ரை** : இதனால் அருகனுடைய அவாவற்ற குணமும் அவ்னை நினைத்தவர் பெரும்பேறும் கூறப்பட்டன நெறி - எழுவாய் ஆமோ - பயனிலை. நீ - எழுவாய். சொல் - பயனிலை.

## aṟucīrk kaḻineṭil viruttam

*paṟṟaṟ ṟavarkaḷ vantuṉṉaip paṟṟi lavarkaḷ paṟṟaṟṟē*
*niṟṟaṟ kiyaintu paṟṟātu niṉṟā yituvu neṟiyāmō*
*koṟṟak kavikai yorumūṉṟuṅ kuḷirveṇ ṭiṅka ṇilāveṟikku*
*muṟṟat tamarar muṭikaḷveyi leṟikku meyilāy moḻiyāyē.*

Oh! Lord Arukar,
Who hath the *mummatil* illuminated by the gems,
That sparkle in the crowns of *Tēvars,*
In the front yard where,
The victorious parasols three shine like the cool white moon,
If those devoid of the bonds of *viṉai*
Bind you in their hold,
You keep aloof without holding them
To suit their aloofness from *viṉai*
Is this nature of yours Thy code? Do tell me.

## Explanatory notes :

*mummatil* here refers to *camayacaraṇam* - the hall of spiritual discourse. Three parasols - *mukkuṭai* - Pearl parasol, gold parasol and ruby parasol.

**வெண்பா**

99. மொழிவழி வாராத மூர்க்கர் நிரையப்
பழிவரு வெஞ்சிறையிற் பட்டார் - மொழிவழி
வந்தார்கள் வானநா டாள்கின்றா ரன்னதோ
வெந்தாய்வேந் தாகு மியல்பு.

**பதப்பொருள்** : மொழி - திவ்வியத்தொனியாகிய ஆணையினுடைய. வழி - மார்க்கத்தில் வாராத - நடவாத மூர்க்கர் - மூடர்கள். நிரையம் - நரகமாகிய. பழி- நிந்தை. வரு - வருகின்ற. வெம் - வெப்பமான. சிறையில் - சிறைச்சாலையில். பட்டார் - அகப்பட்டார்கள். மொழிவழி - ஆணையினுடைய மார்க்கத்தில் வந்தார்கள் - நடந்தவர்கள். வானநாடு - கற்பங்களை. ஆள்கின்றார் - ஆள்கின்றார்கள் அன்னதோ - அன்ன தன்மைத்தோ? எந்தாய் - யென் கருத்தனே! வேந்தாகும் - அருகனாகும் இயல்பு - தன்மையென்றவாறு

**பொழிப்புரை** : என் கருத்தனே! திவ்விய தொனியாகிய ஆணையினுடைய மார்க்கத்தில் நடவாத மூர்க்கர்கள் நிந்தை வருகின்ற வெப்பமான நரகமாகிய சிறைச்சாலையில் அகப்பட்டார்கள் ஆணையினுடைய மார்க்கத்தில் நடந்தவர்கள் கற்பங்களை யாள்கின்றார்கள்; ஆகையால் அருகனாகுமியல்பு அன்னதன்மைத்தோ என்றவாறு.

**வி-ரை** : இதனால அருகனுடைய திவ்வியத் தொனியினது சிறப்புக் கூறப்பட்டது மூர்க்கர் - எழுவாய் பட்டார் - பயனிலை வந்தார்கள் - எழுவாய். வானநாடு - செயப்படுபொருள். ஆள்கின்றார் - பயனிலை இயல்பு - எழுவாய். அன்னதோ - பயனிலை.

திவ்வியத்தொனி -அருகதேவனின் வாயிலிருந்து வரும் வளமிக்க ஒலி. கற்பம் தேவருலகு.

### veṇpā

*moḻivaḻi vārāta mūrkkar niraiyap*
*paḻivaru veñciṟaiyiṟ paṭṭār - moḻivaḻi*
*vantārkaḷ vāṉanā ṭāḷkiṉṟā raṉṉatō*
*ventāyvēn tāku miyalpu.*

Oh! my Lord *Karttar,*
The vicious fools who did not abide by Thy utterance divine
Were trapped in hell scandalous and miserable
Those who did tread the virtuous *Tiruvaṟam* path,
According to the uttered edict Thine,
Rule over the realms of heaven
Is this Thy kingly code?

## Explanatory notes :

*Karttar* - creator or motherlike Lord. The divine utterance known as *Tivviyattoṉi* is considered as the sonorous voice that directly emanates from the mouth of *Arukatēvaṉ* *Tiruvaṟam* or *Paramākamam* is the supreme code of conduct in Jainism.

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

*100. இயல்பினா நிலநீர்தீக் காலாகாய மிரவிமதி யியமான னாகிநின்ற*
*மயலிலா வெண்மூர்த்தி யனந்தமூர்த்தி வரம்பிகந்த மாசிலா ஞானமூர்த்தி*
*செயலினாம் வினைமூர்த்தி யவர்கள்சிந்த மும்மூர்த்தி யாயுயர்ந்த தெய்வமூர்த்தி*
*பெயரினா மாயிரத்தெண் மூர்த்தியல்லாற் பிறமூர்த்தி களையென்னோ பேணுமாறே.*

**பதப்பொருள்** : *இயல்பின் - இயல்பாக. ஆம் - ஆகிய. நிலம் - பூமியும் நீர் - சலமும். தீ- அக்கினியும். கால் - வாயுவும் ஆகாயம் - ஆகாயமும். இரவி - சூரியனும் மதி - சந்திரனும் இயமானன் - சீவனும் ஆகி - ஆய். நின்ற - நிலைபெற்று நின்ற மய்லிலா - மயக்கமில்லாத எண்மூர்த்தி - எட்டு மூர்த்தத்தையுடையவர். அனந்தம்- அனந்தமயமான மூர்த்தி - மூர்த்தத்தையுடையவர். வரம்பு - அளவு இகந்த - நீங்கிய மாசிலா - குற்றமில்லாத ஞானம் - ஞானமயமான மூர்த்தி - மூர்த்தத்தையுடையவர் செயலின் - செய்கையினாலே. ஆம் - ஆகிய வினை - வினையென்னும். மூர்த்தியவர்கள் - மூர்த்தத்தையுடையவர்கள். சிந்த - கெட. மும்மூர்த்தியாய் - முச்சோதியுருவமாய். உயர்ந்த - மேம்பட்ட தெய்வமூர்த்தி- தெய்வீகமூர்த்தியுடையவர். பெயரினாம் - பெயரினாலாகிய. ஆயிரத்தெண்மூர்த்தி- ஆயிரத்தெட்டு மூர்த்தத்தையுடையவர் அல்லால் - அல்லாமல். பிற - அன்னியமாகிய. மூர்த்திகளை - உருவையுடையவர்களை என்னோ - என்னகாரணமோ பேணுமாறு - ஆதரிக்கும் விதம் என்றவாறு*

**பொழிப்புரை** : இயல்பாக ஆகிய பூமியுஞ், சலமும், அக்கினியும், வாயுவும், ஆகாயமும், சூரியனும், சந்திரனும், சீவனுமாகி நிலைபெற்று நின்ற மயக்கமில்லாத எட்டு மூர்த்ததததையுடையவர், அனந்தமயமான மூர்த்தத்தையுடையவர்; அளவு நீங்கிய குற்றமில்லாத ஞானமயமான மூர்த்தத்தையுடையவர்; செய்கையினாலேயாகிய வினையென்னும் மூர்த்தத்தையுடையவர்கள் கெட, முச்சோதி உருவமாய் மேம்பட்ட தெய்வீக மூர்த்தத்தையுடையவர்; பெயரினாலாகிய ஆயிரத்தெட்டு மூர்த்தத்தையுடையவரை அல்லாமல் அன்னியமாகிய உருவையுடையவர்களை ஆதரிக்கும் விதம் என்ன காரணமோ என்றவாறு.

**வி—ரை** : *இதனால் மித்தியா தெய்வம் பழிக்கப்பட்டது. பேணுமாறு - எழுவாய் என்னோ - பயனிலை மூர்த்தி - அருகன். சோதி - ஒளி முச்சோதி- மனசோதி, வாக்குச்சோதி, காயசோதி. ஆயிரத்தெண்மூர்த்தி - ஆயிரத்து எட்டுத் திருப்பெயர்களைக் கொண்ட அருகன்.*

## aṟucīrk kaḻineṭil viruttam

*iyalpiṉā nilanīrtīk kālākāya miravimati yiyamāṉa ṉākiniṉṟa*
*mayalilā veṇmūrtti yaṉantamūrtti varampikanta mācilā ñāṉamūrtti*
*ceyaliṉām viṉaimūrtti yavarkaḷcinta mummūrtti yāyuyarnta teyvamūrtti*
*peyariṉā māyiratteṇ mūrttiyallāṟ piṟamūrtti kaḷaiyeṉṉō pēṇumāṟē.*

He is a deity eightfold sans illusion any,
As earth, water, fire, wind, sky, sun, moon and *jīvaṉ* by nature,
He doth remain in endless shapes many,
He hath the shape of wisdom immeasurable and flawless
He is of the shape divine of *muccōti,*
Which doth dispel the *viṉai,*
Of those who did attain the shape of *viṉai*
By their *triyōkam* deeds
Without hailing such Arukar,
Of appellations a thousand and eight,
What is the reason,
For worshipping deities of other shapes alien?

## Explanatory notes:

This poem deplores the worship of deities other than Arukar. *jīvaṉ* - Life or *uyir, muccōti* - Three lights (l) *maṉacōti* - Mental light. (2) *vākkucōti* - Light of speech or word. (3) *kāyacōti* - Light of the body. *triyōkam* - Thought, word and deed.

**பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்**

101. *பேணுந் தகைய வானின்மிசை யோனி மிசையோ ராயிரத்திற்*
*பெருகுந் தொண்ணூற் றேழினொடு மருவு மிருபத் தொருமூன் றுங்*
*காணுந் தகைய மண்ணினிடை நானூற் றைம்பத் தோரெட்டுங்*
*கனக பவணத் தேழ்கோடி மிசையொன் பதிற்றெட் டிலக்கமுஞ்சீர்*
*மாணுந் தகைய பஞ்சவர்கள் வயங்கு மிருநால் வியந்தரர்கண்*
*மருவும் விமானத் தெண்ணிலவு மாகி வடபொற் குன்றென்னச்*
*சேணின் றிலங்கு சினகரமுஞ் செயற்கை வரம்பில் கோயில்களுஞ்*
*செம்பொ னெயிலு முடையாரென் சிந்தை யமர்வ தறியேனே.*

***பதப்பொருள்*** : *பேணும் - யாவரும் ஆதரிக்கப்படும். தகைய - பெருமையுடைய. வானின்மிசை- கற்பங்களில் யோனிமிசை - எண்பத்து நான்கு லட்சத்தின் மேல். ஓராயிரத்தில் - ஒரு ஆயிரத்துடனே. பெருகும் - பெருகிய. தொண்ணூற்றேழினொடு- தொண்ணூற்றேழுடனே. மருவும் - பொருந்திய. இருபத்தொரு மூன்றும் - இருபத்து மூன்றும். காணும் - பார்க்கப்படும். தகைய- அழகையுடைய. மண்ணினிடை - பூமியில். நானூற்றைம்பத்தோரெட்டும் - நானூற்று ஐம்பத்தெட்டும். கனக - பொன்னாலாகிய. பவணத்து - பவணலோகத்தில்.*

*ஏழுகோடிமிசை - ஏழுகோடிக்கு மேல் ஒன்பதிற்றெட்டிலக்கமும் - எழுபத்திரண்டு லட்சமும் சீர் - சிறப்பானது. மாணும் - பொருந்தும் தகைய - குணத்தையுடைய. பஞ்சவர்கள் - சோதிடர்கள். வயங்கும் - விளங்குகின்ற இருநால் - எண்மராகிய வியந்தரர்கள் - வியந்தரர்களும். மருவும் - பொருந்திய விமானத்து - விமானங்களில் எண் - கணக்கு. இலவுமாகி - இல்லாதனவாகி வட - வடக்கின் கண்ணிருக்கும். பொற்குன்றென்ன - மகாமேருபோல் சேண் -ஆகாயத்தில் நின்று - நிலைபெற்று. இலங்கு - விளங்குகின்ற சினகரமும் - கோயில்களும் செயற்கை - செயற்கைபடுதலையுடைய வரம்பில் - அளவில்லாத. கோயில்களும் - சினலாலயங்களும். செம் - சிவந்த பொன் - பொன்னாலாகிய எயிலும் - சமவசரணமும். உடையார் - உடைய வருகபரமன் என - என்று சிந்தை - மனத்தில். அமர்வது - தங்குவதை அறியேன் - தெரியேன் என்றவாறு*

**பொழிப்புரை** : யாவரும் ஆதரிக்கப்படும் பெருமையையுடைய கற்பங்களில் எண்பத்து நாலு லட்சதது தொண்ணூற்றேழாயிரத்து இருபத்தி மூன்றும், பார்க்கப்படும் அழகையுடைய பூமியில் நானூற்றைம்பத்தெட்டும், பொன்னாலாகிய பவண லோகத்தில் ஏழுகோடியும், எழுபத்திரண்டு லட்சமும், சிறப்பானது பொருந்துங் குணத்தையுடைய சோதிடர்களும், விளங்குகின்ற எணமராகிய வியந்தரர்களும் பொருந்திய விமானங்களில் கணக்கில்லாதனவாகி, வடக்கின் கண்ணிருக்கும மேருவைப்போல் ஆகாயத்தில் நிலைபெற்று நின்று விளங்குகின்ற கோயில்களுஞ் செய்கைபடுதலையுடைய அளவிலலாத கோயில்களுஞ் சிவந்த பொன்னாலாகிய சமவசரணமுமுடைய அருகபரமன் எனது மனததிற் தங்குவதை யானறியே னென்றவாறு.

**வி-ரை** : இதனால் பவ்விய சீவர்களுடைய மனததிலெப்போதும் வாசம் பண்ணுவர் அருகரென்பது கூறப்பட்டது. யான் - எழுவாய், அமர்வதை - செயப்படுபொருள். அறியேன் - பயனிலை சமவசரணம் - அறவுரை மண்டபம்.

## *pannirucīr āciriya viruttam*

*pēṇun takaiya vāṉiṉmicai yōṉi micaiyō rāyirattiṟ*
*perukun toṇṇūṟ ṟēliṉoṭu maruvu mirupat torumūṉṟuṅ*
*kāṇun takaiya maṇṇiṉiṭai nāṉūṟ ṟaimpat tōreṭṭuṅ*
*kaṉaka pavaṉat tēḻkōṭi micaiyoṉ patiṟṟeṭ ṭilakkamuñcīr*
*māṇun takaiya pañcavarkaḷ vayaṅku mirunāl viyantararkaṇ*
*maruvum vimāṉat teṇṇilavu māki vaṭapoṟ kuṉṟeṉṉac*
*cēṇiṉ ṟilaṅku ciṉakaramuñ ceyaṟkai varampil kōyilkaḷuñ*
*cempo ṉeyilu muṭaiyāreṉ cintai yamarva taṟiyēṉē.*

Arukar, the prime Lord,
Who hath (for Himself) temples,
Eighty four lakh ninety seven thousand and twenty three,

In the *karpakalōkam* adorable of Tēvars,
Four hundred and fifty eight on the earth visible,
Seven crore and seventy two lakhs in *pavaṇalōkam*,
And *vimāṉams* innumerable associated with,
The fivefold astrologers of attributes glorious
And the *Viyantarars* eight,
Besides the temples natural
That stand stably in the sky
Like the golden Mēru mountain in the north,
And the man-made temples countless,
With the *camavacaraṇam* made of sterling gold to boot,
(Lord Arukar who hath these temples all to abide)
How doth He (condescend to) stay in my mind?

## Explanatory notes :

*Karpakalōkam* - The world of *Tēvars*. *Pavaṇalōkam* - A world made of gold and also one of the seven worlds according to Jainism. *vimāṉam* - The structure on the top of the sanctum sanctorum in temples. Mēru - A legendary mountain in the northern part of India. *camavacaraṇam* - A hall of discourse.

### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

102. அறிவன் காதற் பெருங்கிழத்தி யகில மீன்ற தாயென்று
மழியாக் கன்னி யறம்வளர்த்த வன்னை யாறு சமயத்தின்
பிறிவு தன்பாற் றோன்றியவள் பிறங்கு புவனத் தனிவிளக்குப்
பிறழா முத்தி நாயகிநம் பிறவிப் பகைத்தி யுயிர்க்கெல்லாஞ்
செறியுங் கருணை சுரந்தளிக்குந் தெய்வச் செவிலி கற்புடைய
செஞ்சொற் பாவை யானந்த வல்லி ஞானச் செழுங்கொழுந்து
பொறியைம் புலத்தின் வேட்கைநோய் தீர்க்கு மருந்தென் றருந்தவர்கள்
போற்றும் பதத்தான் செய்யபதம் போற்றா ருணர்வு பொங்காதே.

**பதப்பொருள் :** அறிவன் - அருகனுடைய. காதல் - இச்சைக்கு. பெரும் - மிகுந்த. கிழத்தி - உரிமையானவள். அகிலம் - யாவற்றையும். ஈன்ற - பெற்ற. தாய் - தாயானவள் யென்றும் - எக்காலமும். அழியா - கெடாத. கன்னி - கன்னிகையானவள். அறம் - தருமத்தை. வளர்த்த - வளரப் பண்ணின. அன்னை-

*செவிலித்தாயானவள் ஆறு - ஆறுவகையாகிய. சமயத்தின் - ஏகாந்தவாதத்தினது. பிறிவு - பிரிவு. தன்பால் - தன்னிடத்தில், தோன்றியவள் - உண்டாயினவள். பிறங்கும்- விளங்குகின்ற. புவனம் - புவனத்திற்கு தனி - ஒப்பற்ற விளக்கு - தீபமானவள், பிறழா - மாறுபடாத. முத்தி - சித்தியாகிய. நாயகி - நாயகியானவள். நம் - நம்முடைய. பிறவி - பிறப்புக்கு. பகைத்தி - பகையானவள். உயிர்க்கெல்லாம் - சீவன்களுக்கெல்லாம் செறியும் - நெருங்கிய. கருணை - கிருபையை. சுரந்து - ஊறி அளிக்கும் - கொடுக்கும் தெய்வம் - தெய்வத்தன்மையுடைய. செவிலி - உயிர்ப்பாங்கியானவள். கற்புடைய - கற்பினையுடைய. செம் - செம்மையாகிய. சொல் - சொல்லையுடைய. பாவை - பாவையானவள். ஆனந்தம்-இன்பமயமான. வல்லி - கொடியானவள். ஞானம் - ஞானமயமான. செழும் - செழுமையாகிய. கொழுந்து - துளிராகியவள். பொறி - ஐந்திந்திரியங்கட்கும். ஐம்புலத்தின் - பஞ்சவிடயங்களில் உண்டாகிய. வேட்கை -ஆசையாகிய. நோய் - வியாதியை தீர்க்கும் - தீர்க்கின்ற மருந்து - மருந்து. யென்றும் - இப்படிஎன்று சொல்லி. அரும் - அரிதாகிய. தவர்கள் - தவத்தையுடையவர்கள், போற்றும் - துதிக்கின்ற. பதத்தான் - பாதத்தையுடைய சித்தருடைய. செய்ய - சிவந்த. பதம் - பாதத்தை. போற்றார் - துதியாதவருக்கு. உணர்வு - அறிவானது. பொங்காது - மிகாது என்றவாறு.*

**பொழிப்புரை :** அருகபரமனுடைய விருப்பத்திற்கு மிகுந்த உரிமையானவள், யாவற்றையும் பெற்ற தாயானவள், எக்காலமும் கெடாத கன்னிகையானவள் தருமத்தை வளரப் பண்ணின செவிலித்தாயானவள். அறுவகையாகிய ஏகாந்தவாதத்தினது பிரிவு தன்னிடத்திலுண்டாயினவள். விளங்குகின்ற புவனதிற்குத் தனித்தீபமானவள் மாறுபடாத சித்தியாகிய நாயகமானவள். நம்முடைய பிறப்புக்குப் பகையானவள் சீவர்களுக்கெல்லாம் நெருங்கிய கிருபை சரந்து கொடுக்குந் தெய்வத்தன்மையுடைய உயிர்ப்பாங்கியானவள். கற்பினையுடைய செம்மையாகிய சொல்லையுடைய பாவையானவள். இன்பமயமான கொடியானவள். ஞானமயமான செழுமையாகிய தளிராகியவள் ஐம்பொறிகளுக்கும் பஞ்சவிடயங்களிலுண்டாகிய ஆசையாகிய வியாதியைத் தீர்க்கின்ற மருந்தென்று சொல்லி அரிதாகிய தவத்தையுடையவர்கள் துதிக்கின்ற பாதத்தையுடைய சித்தருடைய சிவந்த பாதத்தைத் துதியாதவருக்கு அறிவானது மிகாது என்றவாறு,

**வி-ரை :** இதனால் சித்தத்திருவினது பெருமையுஞ் சித்தருடைய பாதமே சித்தியென்பதும் கூறப்பட்டது. உணர்வு - எழுவாய். பொங்காது - பயனிலை. புவனம் - உலகம்

அறுவகையாகிய ஏகாந்தவாதம் - 1. சைவம் 2. வைணவம், 3 பிரம்மம் 4. பௌத்தம் 5 கபிலம் 6 கௌாதரம் ஆகிய சமயங்கள்.

ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி.பஞ்சவிசயங்கள் - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை.

## *pannirucir āciriya viruttam*

*arivan kātar peruṅkilatti yakila minra tāyenru*
*maliyāk kanni yaramvalartta vannai yāru camayattin*
*pirivu tanpār ronriyaval piraṅku puvanat tanivilakkup*
*piralā mutti nāyakinam piravip pakaitti yuyirkkellāñ*

*ceṟiyuṅ karuṇai curantaḷikkun teyvac cevili kaṟpuṭaiya*
*ceñcoṟ pāvai yāṉanta valli ñāṉac ceḻuṅkoḻuntu*
*poṟiyaim pulattiṉ vēṭkainōy tīrkku maruntēṉ ṟaruntavarkaḷ*
*pōṟṟum patattāṉ ceyyapatam pōṟṟā ruṇarvu poṅkātē.*

(The *muktināyaki* eternal sans change)
She is entitled to Arukar's affection deep,
She is the mother who hath begotten all,
She is the imperishable one at all times,
She is the foster mother promoting virtue,
She hath generated in herself the religious divisions six,
Of *ēkāntavātam,*
She is the beacon light nonpareil
For all the worlds three,
Inimical she is to birth,
She is the companion divine,
Showering grace to lives all as a fountain
She is a perfect maiden graceful in speech
A creeper she is of pleasure all over,
She is a leaf of wisdom lush and tender,
A remedy she is to dispel
The malady of desire arising out of the senses five,
For those who worship not the fair feet of *Cittars*
Who hath attained *mukti* (the grace of *Muktinayaki*)
There will be no improvement of knowledge

## Explanatory notes:

***ēkāntavātam*** **- The six religious divisions, i.e.**
1. *Caivam* 2. *Vaiṇavam* 3. *Pirammam* 4. *Pouttam* 5. *Kapilam* 6. *Keṇātaram*
**Five senses** - Body, mouth, eye, nose, ear.
***Pañcavicayaṅkaḷ*** **(Five sensations)** - Touch, taste, light, smell, sound.
Cittars - saints or ascetics.

## சம்பிரதம்

### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

103. *பொங்கு நாவலம் பொழிலினைச் சிமிழினு ளடக்குவன் வடமேருப்*
*பொருப்பை யூசியின் றுளையிடைப் போக்குவ னோக்கிலிப் புவனத்து*
*ளெங்கும் யாவையுஞ் செயுஞ்செயும் விச்சைக ளிவைசில பொருளோமற்*
*றேழு லோகமு மலோகமுந் தம்முளே யடக்கிநின் றடங்காது*
*கொங்கு வீசுசெம் பங்கயப் பூமிசை நடந்தவர் தடந்தாளுட்*
*கொண்ட தொண்டர்த மருளினால் வந்தது குறிக்கோண்மின் குபதத்தே*
*தங்கு மார்வமிக் குடைய்வப் பாதகத் தோர்கண முதலாகுஞ்*
*சமய வாதிகள் செவியினி லறம்புகச் சாற்றுவன் காணீரே*

**பதப்பொருள் :** பொங்கு - விளங்குகின்ற. நாவலம் பொழிலினை - சம்பூ தீபத்தை *சிமிழினுள்- பரணிக்குள்ளே அடக்குவன் - அடக்குவேன் வட - வடக்கின்கணிருக்கும், மேருப்பொருப்பை- மேருமலையை ஊசியின் - ஊசியினுடைய. துளையிடை - காதிலே. போக்குவன் - நுழைப்பேன். நோக்கில்- பார்க்குமிடத்து. இப்புவனத்துள் - இப்பூமியில். எங்கும் - எவ்விடத்தினும் யாவையும்- சகலபொருள்களையும் செயுஞ்செயும் - பண்ணப்பட்ட பண்ணப்பட்ட. விச்சைகள் - வித்தைகள். இவை சிலபொருளோ - இவைகள் சில காரியமோ? ஏழுலோகமும் - எழுவகை உலகமும் அலோகமும் - அலோகமும். தம்முள்ளே - தமக்குள்ளே அடக்கி - அடக்கிக்கொண்டு. நின்று - நிலைபெற்று நின்று. அடங்காது - அடங்காமல். கொங்கு - வாசனையை வீசு - வீசுகின்ற செம் - சிவந்த. பங்கயம்பூமிசை - தாமரைப் பூமேல் நடந்தவர்- நடந்தவருகருடைய தடம்- பெருமை பொருந்திய. தாள் - பாதத்தை உளம் - மனதில் கொண்ட - உறுதியாகக்கொண்ட தொண்டர்தம் -அடியோர்களுடைய. அருளினால் - கிருபையினாலே. வந்தது - உபதேசமானது குறிக்கோண்மின் - அறிந்து கொள்ளுங்கள் குபதத்தே - குச்சித பதத்திலே. தங்கும் - பொருந்திய ஆர்வம் - ஆசை. மிக்குடைய - மிகுதியுடைய. அப்பாதகத்தோர் - அப்பாவிகளான புத்தர்களுடைய. கணம் - கூட்டம். முதலாகும் - முதலாகிய. சமயவாதிகள் - ஏகாந்தவாதிகளுடைய செவியினில் - காதினில். அறம்- சினதருமம். புக - நுழைய. சாற்றுவன் - யான் சொல்லுவேன். காணீர் - பாருங்கள் என்றவாறு.*

**பொழிப்புரை :** உலகத்தாரே! விளங்குகின்ற சம்புதீபத்தைப் பரணிக்குள்ளே யடக்குவேன். வடக்கின் கண்ணிருக்கும் மேருமலையை ஊசியினுடைய காதிலே நுழைப்பேன். இப்புவனத்தில் பார்க்குமிட மெவ்விடத்தினுஞ் சகல பொருள்களையும் பண்ணப்பட்ட வித்தைகள் எனக்கு ஒரு பொருட்டோ? ஏழுவகை உலகமும், அலோகமும் தமக்குள்ளே யடக்கிக் கொண்டு நிலைபெற்று நின்றடங்காமல் வாசனையை வீசுகின்ற சிவந்த தாமரைப்பூமேல் நடந்த அருகருடைய பெருமை பொருந்திய பாதத்தை மனதில் உறுதியாகக் கொண்ட அடியார்களுடைய கிருபையினாலே

உபதேசமானதை அறிந்து கொள்ளுங்கள். குச்சித பதத்திலே பொருந்திய ஆசை மிகுதியுடைய அந்தப் பாவிகளான புத்தர்களுடைய கூட்ட முதலாகிய ஏகாந்த வாதிகளுடைய காதினிற் சின தருமம் நுழைய யான் சொல்லுவேன் பாருங்கள் என்றவாறு.

*வி-ரை : இதனால் மித்தியாவாதிகள் அறிவிலரென்பதும், சினதருமத்தின் பெருமையே மிகுந்ததென்பதும் கூறப்பட்டன. யான்சொல்லுவன் - எழுவாய், காணீர் - பயனிலை. புவனம் - உலகம். அகமிந்திரலோகம், மோட்சலோகம். அலோகம் - காணப்படாத உலகம். பரணி - சிறுபெட்டி. குச்சிதபதம் - இழிவானபதவி. ஏகாந்தவாதிகள் - சமணம் தவிர்த்த பிறசமயத்தார்கள். மித்தியாவாதிகள் - சமணம் தவிர்த்த பிற சமயத்தார்கள் சின தருமம் - நால்வகைக் கதிகளில் ஏற்படும் துன்பங்களை அகற்றி நிலைப்பேறான மோட்ச இன்பத்தைத் தரக்கூடிய அருகமொழி.*

## *Campiratam*
### *paṉṉiru cīr āciriya viruttam*

*poṅku nāvalam poḻiliṉaic cimiḻiṉu ḷaṭakkuvaṉ vaṭamērup*
*poruppai yūciyiṉ ṟuḷaiyiṭaip pōkkuva ṉokkilip puvaṉattu*
*ḷeṅkum yāvaiyuñ ceyuñceyum viccaika ḷivaicila poruḷōmaṟ*
*ṟeḻu lōkamu malōkamun tammuḷē yaṭakkiniṉ ṟaṭaṅkātu*
*koṅku vīcucem paṅkayap pūmicai naṭantavar taṭantāḷuṭ*
*koṇṭa toṇṭarta maruḷiṉāl vantatu kuṟikkōṇmiṉ kupatattē*
*taṅku mārvamik kuṭaiyavap pātakat tōrkaṇa mutalākuñ*
*camaya vātikaḷ ceviyiṉi laṟampukac cāṟṟuvaṉ kāṇīrē.*

Oh! inhabitants of the world,
I shall confine the *Nāvalam* island entire in a *cimiḻ*,
I shall pass the Mēru mountain of the north through the ear of a needle,
It just does not matter to me a whit even,
To practise the art of making all things that I see wheresoever,
Do please know,
That these talents I could acquire by chance
On account of the grace of the devotees,
Who did hold firm in their minds the feet of Arukar
Who doth contain in Himself the worlds seven and the *alōkaṃs* as well
And whose glorious feet did tread on the lotus of fragrance abundant

This *Cinatarumam* I din into the ears,
Of those who follow the footsteps evil,
Of the *Ekāntavātis* who profess religions like Buddhism
Do please witness.

**Explanatory notes** :

*Nāvalam* an island, also known as *Campu Tīpam (Indiya). cimil* - a small and round box. Meru - a legendary mountain supposed to exist in the northern part of India. Seven worlds : Nākalōkam, Pavanalōkam, Naralōkam, Cōtirlōkam, Kalpalōkam, Akamintiralōkam, Mōṭchalōkam. *alōkam* - The invisible world *akāntavātis* - Those who follow religions other than Jainism. *Cinatarumam* - The gospel of Arukar which dispels the misery of the fourfold birthcycle and confers the eternal state of *Mokṣam*.

### எழுசீர்க் கழிநெடில் விருத்தம்

104. காணுங் கண்ணுள வேனுங் கண்கொடு
காணார் கடைதபு ஞானத்தார்
பேணும் பொருளுள வேனும் புலனவை
துவ்வார் பெருகிய போகத்தார்
பூணும் புரவியு மேறும் பாகனு
மொழியப் புண்டரி கத்திண்டேர்
சேணின் றடியிணை தோயா வகைதனி
யூர்வார் செயலிவை தெரியாவே.

**பதப்பொருள்** : காணும் - பார்க்கின்ற. கண் - கண்கள். உளவேனும் - உளவாயிருந்தாலும் கண்கொடு - கண்ணைக்கொண்டு. காணார் - ஒன்றையும் பாரார் கடைதபு - முடிவில்லாத. ஞானத்தார் - ஞானத்தையுடையவர். பேணும் - ஆதரிக்கின்ற. பொருள் - பொருள்கள். உளவேனும் - உளவாயிருந்தாலும். புலனவை - விடயங்களை. துவ்வார் - அனுபவியார். பெருகிய - அனந்தமயமான. போகத்தார் - சுகத்தையுடையவர். பூணும் - பூண்டிருக்கும். புரவியும்- குதிரைகளும். ஏறும் - ஏறிநடத்தும். பாகனும் - சாரதியும். ஒழிய - நீங்க. புண்டரீகம் - தாமரைப்பூவாகிய. திண் - பலம்பொருந்திய. தேர் - தேரின்மேல். சேண் - ஆகாயத்தில். நின்று- நிலைபெற்று நின்று. அடியிணை - இரண்டு பாதங்களும். தோயாவகை - பொருந்தாத விதமாக. தனி - ஒப்பற்ற. ஊர்வார்- நடத்துவார். செயலிவை - இச்செயல்கள். தெரியா - நம்மனோருக்குத்தெரியா என்றவாறு

**பொழிப்புரை** : முடிவில்லாத ஞானத்தையுடையவர் பார்க்கின்ற கண்களுளவாயிருந்தாலுங் கண்ணைக்கொண் டொன்றையும் பாரார். அனந்தமான சுகத்தையுடையவர், ஆதரிக்கின்ற பொருள்களுளவாயிருந்தாலும் விடயங்களை

*அனுபவியார் பூண்டிழுக்கும் குதிரைகளும் ஏறிநடத்தும் பாகனும் நீங்கத் தாமரைப் பூவாகிய பலம்பொருந்திய தேரின் மேலிரண்டு பாதங்களும் பொருந்தாத விதமாக ஆகாயத்தினின்று மொப்பற நடத்துவாராகையால் இச்செயல்கள் நம்மனோருக்குத் தெரியா வென்றவாறு*

**வி-ரை** : இதனால அருகனுடைய அதிசயங்கள் கூறப்பட்டன. இவை - எழுவாய். தெரியா - பயனிலை

அனந்த சுகம் - அளவற்ற இன்பம்.

### eḻucīrk kaḻineṭil viruttam

*kāṇuṅ kaṇṇuḷa vēṇuṅ kaṇkoṭu*
*kāṇār kaṭaitapu ñānattār*
*pēṇum poruḷuḷa vēṇum pulanavai*
*tuvvār perukiya pōkattār*
*pūṇum puraviyu mēṟum pākaṉu*
*moḻiyap puṇṭari kattiṉṭēr*
*cēṉiṉ ṟaṭiyiṉai tōyā vakaitaṉi*
*yūrvār ceyalivai teriyāvē.*

He who hath wisdom endless,
He who sees not with His eyes though he hath eyes to see,
He who hath endless pleasure,
He who enjoys not mean pleasure through His senses,
Though there are things aplenty to cherish
Such Lord Arukar,
Will ride on the chariot of the lotus flower
In a peerless manner without his feet touching it,
And also without the pulling horses or the driver
This miracle of Arukar,'
Will not be visible to folks like us.

## Explanatory note :

This poem states Arukar's performance of miracles.

## மதங்கியார்

### சந்த விருத்தம்

105. *தெரிந்த வறமழை பொழிந்த வருண்முகில்*
*சிவந்த மரைமலர் சுமந்ததாள்*
*விரிஞ்ச னருமறை புகழ்ந்து நடனவின்*
*மதங்கி நடனவி றடங்கண்மால்*
*புரிந்து கொலைகள வியைந்து புவியுடன்*
*மலைந்து கருமையோ டகன்றுநேர்*
*சரிந்து தவம்விழ நிமிர்ந்து பிறழ்வன*
*தழங்கு பரசுத னிகர்த்தவே.*

***பதப்பொருள்*** : *தெரிந்த - தெரியப்பட்ட. அறமழை - தருமமாகிய மழையை. பொழிந்த - சொரிந்த. அருண் - கருணையையுடைய. முகில் - மேகமானவனும். சிவந்த - சிவந்த நிறமுடைய. மரைமலர் - தாமரைப் பூவானது. சுமந்த - தாங்கிய தாள் - பாதத்தையுடைய விரிஞ்சன் - பரமேட்டியுமான வருகனுடைய அரும் - அரிதாகிய மறை - வேதத்தை. புகழ்ந்து - துதித்து. நடம் - நாட்டியத்தை. நவில்- செய்கின்ற மதங்கி - மதங்க ஸ்திரீயினுடைய. நடம் - நடனத்தை. நவில் - காட்டுகின்ற. தடம் - விசாலமான. கண் - நேத்திரங்கள் மால் - ஆசையை. புரிந்து - செய்து. கொலை - கொல்லுதலும். களவு - திருட்டும். இயைந்து - பொருந்திய. புவியுடன் - உலகத்தாருடன் மலைந்து - சண்டைசெய்து. கருமையொடு - கருத்தநிறத்துடன். அகன்று - பரந்து. நேர் - நேராக. சரிந்து - சோர்ந்து. தவம் - தவமானது. விழ - கீழ்ப்பட நிமர்ந்து - நீண்டு. பிறழ்வன - பிரகாசிப்பன. தழங்கு - சப்தியாநின்ற. பரசுதல் - அருகனைத் துதித்தலை. நிகர்த்த- ஒத்தன என்றவாறு.*

***பொழிப்புரை*** : *தெரியப்பட்ட தருமமாகிய மழையைச் சொரிந்த கருணையையுடைய மேகமானவனுஞ் சிவந்த நிறமுடைய தாமரைப்பூவானது தாங்கிய பாதத்தையுடைய பரமேட்டியுமான அருகனுடைய அரிதாகிய வேதத்தைத் துதித்து நாட்டியத்தைச் செய்கின்ற மதங்க ஸ்திரீயினுடைய நடனத்தைக் காட்டுகின்ற விசாலமான நேத்திரங்கள் ஆசையைச் செய்து கொல்லுதலும் திருட்டும் பொருந்தி உலகத்தாருடன் சண்டை செய்து கருத்த நிறத்துடன் பரந்து நேராகச் சோர்ந்து தவமானது கீழ்பட நீண்டு பிரகாசிப்பன எப்படியிருந்த வென்றால், சப்தியா நின்ற அருகனைத் துதித்தலை யொத்தன; என்றவாறு.*

***வி-ரை*** : *இதனால் மதங்கஸ்திரீயின் தன்மை கூறப்பட்டது. கண்கள் - எழுவாய். பிறழ்வன - பயனிலை.*

*மதங்கஸ்திரீ - பதினாறு வயதுப்பெண். சப்தியாநின்ற - ஒலியாகிநின்ற.*

## *Mataṅkiyār*
## *cantaviruttam*

*terinta vaṟamaḻai poḻinta varuṇmukil*
*civanta maraimalar cumantatāḷ*
*viriñca ṉarumaṟaı pukaḻntu naṭaṉaviṉ*
*mataṅki naṭaṉavi ṟaṭaṅkaṇmāl*
*purintu kolaikaḷa viyaintu puviyuṭaṉ*
*malaintu karumaiyō ṭakaṉṟunēr*
*carintu tavamviḻa nimirntu piṟaḻvaṉa*
*taḻaṅku paracuta ṉikarttavē.*

The roving eyes of the *mataṅki*,
Who doth dance in praise of the scriptures rare,
Of the prime Lord Arukar,
Who hath His glorious feet borne by the lotus red,
And who doth resemble the cloud of grace,
Which showers the rain of virtue
Such wide eyes dancing of *mataṅki*,
Stretching, rolling and widening
Did appear like,
Creating an illusion,
Aligning with slaughter and theft,
Waging a war with the worldly folk
Widening with blackness,
And downcast to spoil penance,,
(The eyes with, rolling movements such)
Did look like worshipping Lord Arukar

## Explanatory notes:

*Mataṅki* - a sixteen year old girl.

## சந்த விருத்தம்

106. நிகரின் முனிவ ரரசர் கந்தியர் நிரைசெய் பவண ரவர்த மங்கையர்
நெறிகொள் சுடரி னிலகு பஞ்சவர் நெடிய விழியி னிவர்கள் வஞ்சியர்
புகரி லமர ரவர்ம டந்தையர் பொழில்கள் பலவு நிலவி யந்தரர்
பொருவி லவர்கள் துணைவி லங்குகள் புகலு மினைய பலக ணந்தொழ
மகர வரிகொ ளணையி னும்பரின் மறுவில் கவிகை நிலவி நின்றொளிர்
வலய முழுவதும் வெயிலில் வண்டரு மலர்கள் பொதுளு மிருளில் வெண்டிரை
யிகல்செய் கவரி யசைய வண்டறை யிணர்கொண் மழையி னடுவு துந்துபி
யிமிழ விசையொ டினிதி ருந்தன னெமது பிறவி தொறும்வ ணங்கவே

**பதப்பொருள் :** நிகரில் - ஒப்பில்லாத. முனிவர் -முனிவர்களும். அரசர் - மன்னர்களும். கந்தியர் - ஆரியாங்கன்னிகளும். நிரை - வரிசையை. செய் - செய்கின்ற பவணர் - பவணர்களும் அவர்தம் - அந்த பவணர்களுடைய. மங்கையர்- நாயகியர்களும். நெறிகொள்- ஆகாய வீதியைக்கொண்ட சுடரின் - காந்தியினாலே. இலகு - விளங்குகின்ற பஞ்சவர் - சோதிடர்களும் நெடிய - நீண்ட விழியின் - கண்களையுடைய. இவர்கள் - இச்சோதிடர்களுடைய வஞ்சியர் - நாயகியர்களும் புகரில் - குற்றமில்லாத. அமரர் - தேவர்களும். அவர் - அத்தேவர்களுடைய. மடந்தையர் - நாயகியர்களும் பொழில்கள் பலவும் - பூமியெங்கும். நிலவு - திரிகின்ற. வியந்தரர் - வியந்தரர்களும். பொருவில் - ஒப்பில்லாத. அவர்கள் - அவ்வியந்தரர்களுடைய துணை - நாயகியர்களும். விலங்குகள் - மிருகங்களும் புகலும் - சொல்லப்பட்ட. இனைய - இத்தன்மையவாகிய. பலகணம் - பன்னிரண்டுகணங்களும். தொழ - வணங்க. மகரம் - பூந்தாதுக்கள் பொருந்திய. அரி - சிங்கம். கொள் - கொண்ட அணையில்- ஆசனத்தினுடைய. உம்பரின் - மேலே. மறுவில் - குற்றமில்லாத. கவிகை - முக்குடையும். நிலவு - விளங்கி. நின்று நிலைபெற்று நின்று. ஒளிர் - பிரகாசியானின்ற. வலயமுழுதும்-பிரபாவலயமூன்றும். வெயிலில் - சூரியனைப்போல். வண் - வளப்பமான. தரு- அசோக மரமும். மலர்கள் - பூக்கள். பொதுளும் - நெருங்கும். இருளில் - களங்கமில்லாத. வெண் - வெளுமையான. திரை - அலையுடன். இகல்செய் - பகைகொள்ளும். கவரி - கவரித்திரள்கள். அசைய - எப்பக்கமுமசைய. வண்டு - வண்டுகள் அறை - மோதாநின்ற இணர் - பூங்கொத்துக்களை. கொள் - கொண்ட மழையின் - மழையினுடைய நடுவு - மத்தியில். துந்துபி - தேவதுந்துபி. இமிழ - சத்திக்க. இசையொடு - கீர்த்தியுடனே இனிது - இன்பமாக. இருந்தனன் - வீற்றிருந்தான். எமது - எங்களுடைய. பிறவிதோறும் - பிறப்புகள்தோறும். வணங்கவே - தொழவே என்றவாறு.

**பொழிப்புரை** : நாங்கள் எங்களுடைய பிறப்புகள் தோறும் வணங்கவே ஒப்பில்லாத முனிவர்களும், மன்னர்களும், ஆரியாங்கன்னிகளும், வரிசையைச் செய்கின்ற பவணர்களும், அந்தப்பவணர்களுடைய நாயகியர்களும், ஆகாய வீதியைக் கொண்ட காந்தியினாலே விளங்குகின்ற சோதிடர்களும், நீண்ட கண்களையுடைய அந்த சோதிடர்களுடைய நாயகியர்களும், குற்றமில்லாத தேவர்களும், அத்தேவர்களுடைய நாயகியர்களும், பூமியெங்கும் திரிகின்ற வியந்தரர்களும், ஒப்பில்லாத அவ்வியந்தரர்களுடைய நாயகியர்களும், மிருகங்களும், சொல்லப்பட்ட இத்தன்மையாகிய பன்னிரண்டு கணங்களும் வணங்கப் பூந்தாதுக்கள் பொருந்திய சிங்கம் கொண்ட ஆசனத்தினுடைய மேலே குற்றமில்லாத முக்குடையும் விளங்கி நின்று பிரகாசிக்கின்ற பிரபாவலய மூன்றுஞ் சூரியனைப்போல் வளப்பமான பூக்கள் நெருங்கும் அசோக மரமும் விளங்கக் களங்கமில்லாத வெளுமையான அலையுடனே பகைகொள்ளும் கவரித்திரள்கள் எப்பக்கமும் அசைய, வண்டுகள் மோதுகின்ற பூங்கொத்துக்களைக் கொண்ட மழையினுடைய மத்தியில் தேவதுந்துபி சத்திக்க, கீர்த்தியுடனே இன்பமாக அருகபரமன் வீற்றிருந்தான் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனது பெருமையும் தேவர்களெண் சிறப்பு செய்யுந் தன்மையுங் கூறப்பட்டன. அருகபரமன் - எழுவாய். வீற்றிருந்தான் - பயனிலை. (நாங்கள் வணங்க வேண்டி அருகன் வீற்றிருந்தான்.)

ஆரியாங்கன்னி - பெண்துறவி. பவணர் - நாகலோக வாசி. காந்தி - ஒளி. பிரபாவலயம் தீர்த்தங்கரர்களின் பின்னால் விளங்கும் ஒளிமண்டலம். சத்திக்க - ஒலிக்க

## *canta viruttam*

*nikarin̲ mun̲iva raracar kantiyar niraicey pavaṇa ravarta maṅkaiyar*
*ner̲ikoḷ cuṭari n̲ilaku pañcavar neṭiya viḻiyi n̲ivarkaḷ vañciyar*
*pukari lamara ravarma ṭantaiyar poḻilkaḷ palavu nilavi yantarar*
*poruvi lavarkaḷ tuṇaivi laṅkukaḷ pukalu min̲aiya palaka n̲antoḷa*
*makara variko ḷaṇaiyi n̲umparin̲ mar̲uvil kavikai nilavi nin̲r̲oḷir*
*valaya muḻuvatum veyilil van̲taru malarkaḷ potulu miruḷil ven̲tirai*
*yikalcey kavari yacaiya van̲tar̲ai yin̲arkon̲ maḻaiyi n̲aṭuvu tuntupi*
*yimiḻa vicaiyo ṭin̲iti runtan̲a n̲ematu pir̲avi torumva n̲aṅkavē.*

Peerless saints who perform penance,
Kings, *Āriyāṅkan̲n̲is, Pavaṇars* generous and spouses theirs,
The five astrologers divine who sparkle in the celestial path,
And their wives,
The flawless *Tēvars* who reside at *Kar̲pakalōkam*
And their consorts as well,
The *Viyantara tēvars* roving in the skies,

And their spouses.
The animals that have given up slaughter
For all these twelve *kaṇams* to worship
Arukar the prime Lord was seated at *camavacaraṇam*
On a throne borne by a lion,
Under the flawless *mukkuṭai,*
Surrounded by the luminous *prapāvalayam* threefold,
With the lush profusely flowering *Acōka* tree towering high,
As bunches of *kavari* fans oscillating on all sides,
Flowers showering amidst jostling bees,
With *tuntupi* giving out music divine,
For us to worship during birth each,
(Lord Arukar was seated)

**Explanatory notes**:

*Āryāṅkaṉṉais* - female ascetics. *camavacaraṇam* - Hall of religious discourse. *Pavaṇar* - resident of *Nākalōkam. Karpakalōkam* - The world of *Tēvars* or Heaven. *mukkuṭai* - Three parasols - (Pearl, Gold and Ruby). *prapāvalayam* - The halo which surrounds *Tirttaṅkarars. kavari* - a kind of deer the hair of which is used in making ornamental fans used in royal courts. *tuntupi* - a divine musical instrument.

## கட்டளைக் கலித்துறை

*107. வணங்கப் படுந்தெய்வ நீயல்ல தியார்நின் வரம்பிகந்த*
*குணங்கட் கியார்குற்றங் கூறவல் லார்குறி யாறிரண்டு*
*கணங்கட் கிறைநின் குணமெங் கடவுட்கு மாமென்றுதாம்*
*பிணங்கப் புகுவர்பின் கொண்டா டுவதவர் பேய்த்தனமே.*

**பதப்பொருள்** : வணங்கப்படும் - எல்லாரும் துதிக்கப்படுவதாகிய. தெய்வம் - சுவாமி நீயல்லது - நீயல்லாமல். யார் - எவர்களிருக்கின்றார்கள். நின் - உனது. வரம்பிகந்த- அனந்தமான. குணங்கட்கு - எண் குணங்களுக்கும். யார் - எவர்கள். குற்றம் - குற்றங்கள் கூற - சொல்ல வல்லார் - வல்லார்கள். குறி - குறித்த. ஆறிரண்டு - பன்னிரண்டு கணங்கட்கு - கூட்டங்களுக்கு இறை - இறைவனே. நின் - உனது. குணம் - குணங்கள் எம் - எங்களுடைய கடவுட்கும் - சுவாமிக்கும். ஆமென்று - ஆகுமென்று தாம் - அவர்கள். பிணங்க - மாறுபட புகுவர் - புகுவார்கள் பின்-பின்பு. கொண்டாடுவது - கொண்டாடுதல். அவர் - அவர்களுடைய பேய்த்தனம் - பேய்த்தன்மை என்றவாறு

**பொழிப்புரை** : குறித்த பன்னிரெண்டு கணங்களுக்கும் இறைவனே! நீயல்லாமல் எல்லாருந் துதிக்கப் படுவதாகிய சுவாமி எவர்களிருக்கின்றார்கள். உனது அனந்தமான எண் குணங்களுக்கும் எவர்கள்தாம் குற்றம் சொல்ல வல்லவர்கள், அப்படி யிருக்க உனது குணங்கள் எங்களுடைய சுவாமிக்கு ஆகுமென்றே அவர்கள் மாறுபடப் புகுவார்கள், பின்பு கொண்டாடுதல் அவர்களுடைய பேய்த்தன்மை என்றவாறு

**வி-ரை** : இதனால் அருகருடைய குணமகிமையும் மித்தியா தெய்வங்களுடைய குணவீனமும் கூறப்பட்டன. யார் - எழுவாய். கூறவல்லார் - பயனிலை

அனந்தம் - அளவற்றது எண்குணங்கள் - அனந்தஞானம், அனந்த தரிசனம், அனந்தவீரியம், அனந்தசுகம், நிராகர்மம், நிராகோத்திரம், நிராயுஷியம், சகல சம்மியத்துவம் இவைமுறையே கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு என்பனவாம்

## *kaṭṭalaik kalitturai*

*vaṇaṅkap paṭunteyva nīyalla tiyārniṉ varampikanta*
*kuṇaṅkaṭ kiyārkuṟṟaṅ kūṟaval lārkuṟi yāriraṇṭu*
*kaṇaṅkaṭ kiṟainiṉ kuṇameṅ kaṭavuṭku māmeṉṟutām*
*piṇaṅkap pukuvarpiṉ koṇṭā ṭuvatavar pēyttaṉamē.*

Oh! Lord of the *kaṇams* twelve,
Who else but Thou is God deserving worship by all?
Who are competent to find fault
With Thy *eṇkuṇam* boundless?
(When the truth is such)
Others attributing Thy qualities,
To their gods and claiming credit.
Is but their devilish nature.

## Explanatory note:

*eṇkuṇams* - Eight qualities : Endless wisdom, Endless vision, Endless vigour, Endless pleasure, Anonymity, non-sectarianism, lifelessness, Imperishability.

### பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

*108. தனஞ்சுமந் தலமரு மிடையவர் தடங்கணின் கடைதெற மெலியலர்*
*சரண்புகுந் தடிதொழி னலர்தரு சரந்துரந் ததிர்பொரு பகையிலர்*

*மனஞ்சலம் படுகழு கொடுபிண வனந்தொறும் படர்தரு மயலிலர்*
*வனந்தரும் பதிதொறு மிடுபலி வருந்தியுண் டல்மரு பசியிலர்*
*சினஞ்செய்வன் பகைவரு மெனவலி சிதைந்துவெம் படைபல சுமவலர்*
*சிரங்களெண் டிசைநிரை கொளவரை செயும்புயம் பலகொடு திரியலர்*
*அனந்தல்கொண் டமளியின் மிசையறி வழிந்துகண் படுவதொ ரசைவிலர்*
*அகண்டமங் கையின்மணி யெனவுண ரபங்கர்சங் கரர்சின ரனகரே.*

**பதப்பொருள் :** *தனம் - முலைகளை. சுமந்து - தாங்கி. அலமரும் - வருந்தாநின்ற. இடையவர்- இடையையுடையவரது. தடம் - விசாலமான கணின்கடை - கடைக்கண்கள். தெற - வருத்த. மெலியலர் - இளையாதவர். சரண் - அடைக்கலம். புகுந்து - அடைந்து. அடி - பாதத்தை தொழின் - வணங்கினால். அலர்தரு - மிகுந்த. சரம் - பாணத்தை. துரந்து - ஏவி. எதிர் - எதிராக. பொரு - சண்டைபண்ணும். பகையிலர் - பகையில்லாதவர். மனம் - மனமானது சலம்படும்- சலனப்படும் கழுகொடு- பேயுடனே பிணம் - பிணத்தையுடைய. வனந்தொறும்- சுடலைதோறும். படர்தரு - திரியாநின்ற. மயலிலர் - மயக்கமில்லாதவர் வனம்- அழகை. தரு- கொடாநின்ற. பதிதொறும் - நாடுகடோறும். இடு -இடப்பட்ட பலி - பிச்சையை வருந்தி- வருந்திவாங்கி. உண்டு - புசித்து. அலமரு - சுழலாநின்ற. பசியிலர் - பசியில்லாதவர். சினம் - கோபத்தை செய் - பண்ணாநின்ற. வன் - கடினமான. பகை - பகைவன். வருமெனவருவானென்று. வலி - பலமானது. சிதைந்து - நைந்து. வெம் - வெப்பமான. படை - ஆயுதங்கள் பல - அநேகமாக. சுமவலர் - தாங்காதவர். சிரங்களை - தலைகளை எண்டிசை- எட்டுதிக்கிலும். நிரைகொள - வரிசைகொள்ள. வரைசெய்யும் - மலைபோலக்காட்டும் புயம் - புசத்தை. பல்கொடு - அனேகங்கொண்டு திரியலர் - திரியாதவர் அனந்தல் கொண்டு- நித்திரை கொண்டு. அமளியின்மிசை - சயனத்தின்மேல். அறிவழிந்து- அறிவுகெட்டு. கண்படுவது - படுப்பதாகிய. ஓர் - ஒரு அசைவிலர் - சோர்வில்லாதவர். அகண்டம் - அகலமும். அங்கையில்- உள்ளங்கையில். மணியென - இரத்தினம்போல். உணர் - அறிகின்ற. அபங்கர் - பங்கமில்லாதவர். சங்கரர் - சுகத்தைப் பண்ணுமவர். சினர் - வினையைச் செயித்தவர். அனகர் - பாபமில்லாத வருகபரமன் என்றவாறு.*

**பொழிப்புரை :** சகலமும் உள்ளங்கையிலிருக்கின்ற இரத்தினம் போல அறிகின்ற பங்கமில்லாதவர், சுகத்தைப் பண்ணுமவர் வினையைச் செயித்தவர், பாபமில்லாதவராகிய அருகபரமனானவர் முலைகளைத் தாங்கி வருந்தாநின்ற இடுப்பையுடையவரது விசாலமான கடைக்கண்கள் வருத்த இளையாதவர், அடைக்கலமடைந்து பாதத்தை வணங்கினால் மிகுந்த பாணங்களை ஏவி யெதிர்நின்று சண்டை பண்ணும் பகையில்லாதவர், மனமானது சலனப்படும் பேயுடனே பிணத்தையுடைய சுடலைதோறும் திரியாநின்ற மயக்கமில்லாதவர், அழகைக் கொடாநின்ற நாடுகள் தோறும் இடப்பட்ட பிச்சையை வருந்தி வாங்கிப் பொசிததுச் சுழலாநின்ற பசியில்லாதவர், கோபத்தைப் பண்ணாநின்ற கடினமான பகைவன் வருவானென்று பலஞ்சிதைந்து வெப்பமான ஆயுதங்கள் அனேகமாகத் தாங்காதவர், எட்டு திக்கிலும் வரிசைகள் கொள்ள மலை போலக்

காட்டும் புசத்தை அநேகங்கொண்டு திரியாதவர், சயனத்தின் மேலே நித்திரையைக் கொண்டு அறிவு கெட்டு படுப்பதாகியவோர் சோர்வில்லாதவர் என்றவாறு.

**வி-ரை** : இதனால் அருகனுடைய குணப்பெருமையும் மித்தியா தெய்வங்களினுடைய குணக்குற்றமும் கூறப்பட்டன. அனகர் - எழுவாய். மெலியலர் முதலாகியவைகள் தனித்தனி பயனிலைகள்.

### *paṉṉirucīr āciriya viruttam*

*taṉañcuman talamaru miṭaiyavar taṭaṅkaṇiṉ kaṭaiteṟa meliyalar*
*caraṇpukun taṭitoḻi ṉalartaru caranturan tetirporu pakaiyilar*
*maṉañcalam paṭukaḻu koṭupiṉa vaṉantoṟum paṭartaru mayalilar*
*vaṉantarum patitoṟu miṭupali varuntiyuṇ ṭalamaru paciyilar*
*ciṉañceyvaṉ pakaivaru meṉavali citaintuvem paṭaipala cumavalar*
*ciraṅkaḷeṉ ṭicainirai koḷavarai ceyumpuyam palakoṭu tiriyalar*
*aṉantalkoṇ ṭamaḷiyiṉ micaiyaṟi vaḻintukaṇ paṭuvato racaivilar*
*akaṇṭamaṅ kaiyiṉmaṇi yeṉavuṇa rapaṅkarcaṅ kararciṉa raṉakarē.*

He who hath the wisdom to discern
The worlds all and all things therein,
Like a gem on His palm,
He who doth provide pleasure,
He who hath conquered likes and dislikes,
Prime Lord Arukar sans *viṉais* both
He who doth remain unperturbed,
By the furtive look of the wide-eyed women whose slim waists.
Suffer in carrying their breasts,
He who doth not wage war in hostility,
Shooting arrows in confrontation,
Against those who seek worshipful refuge at His feet.
He who doth not roam dazed in burning ghats,
Where corpses and demons are aplenty
He who doth not suffer from hunger acute,
To make him beg for food in lands lovely
He who doth not carry weapons of war in anger or debility,
In anticipation of the arrival of foes

He who roams not with a row of heads and matching shoulders mountainous
Facing all directions eight
*Anakar* who doth not slumber in fatigue senselessly.

## Explanatory notes:

This poem glorifies Arukar and deplores the Gods projected by other religions.
*Anakar* - The God who is free from all sins.

### வெண்பா

109. *அகன னமல னலர்கமல மேந்துந்*
*தனகமல பாதங்க டந்து - நினகமல*
*நீக்குமா றென்றக்கா னெஞ்சமே வல்வினையை*
*யாக்குமா றென்னோ வகன்று.*

**பதப்பொருள்** : அனகன் - பாபமில்லாதவன். அமலன் - நிருமலமானவன் அலர்ற- மலர்ந்த கமலம் - தாமரைப்பூவானது. ஏந்தும் - தாங்குகின்ற. தன் - தன்னுடைய கமலம் - தாமரைமலர் போன்ற பாதங்கள் - பாதங்களை. தந்து - கொடுத்து நின்- உன்னுடைய. அகம் - இடத்திலிருக்கும். மலம் - வினையை நீக்கும் - நீக்குகின்ற ஆறு - நெறியானது துறவறம். என்றக்கால்- என்று சொன்னால். நெஞ்சமே - மனமே. வல் - வலிமையான. வினையை - கருமத்தை. ஆக்குமாறு- மீட்டுஞ் செய்யும் விதம் என்னோ - என்னகாரணம். அகன்று - அந்தத் துறவறத்தை நீங்கி என்றவாறு.

**பொழிப்புரை** : மனமே பாபமிலலாதவனும் நிருமலமானவனுமாகிய அருகன் மலர்ந்த தாமரைப்பூவானது தாங்குகின்ற தன்னுடைய தாமரை மலர் போன்ற பாதங்களைக் கொடுத்து உன்னுடைய விடத்திலிருக்கும் வினையை நீக்குகின்ற நெறியானது துறவறமென்று சொன்னால் அந்தத் துறவறத்தை நீங்கி, வலிமையான கருமதசை மீட்டுஞ் செய்யும்விதம் என்ன காரணம் என்றவாறு.

**வி-ரை** : இதனால் துறவறத்தின் பெருமை கூறப்பட்டது ஆக்குமாறு - எழுவாய். என் - பயனிலை.

### veṇpā

*akaṉa ṉamala ṉalarkamala mēntum*
*taṉakamala pātaṅka ṭantu - niṉakamala*
*nīkkumā ṟeṉṟākkā ṉeñcamē valviṉaiyai*
*yākkumā ṟeṉṉō vakaṉṟu.*

Oh! mind,
Even after it is asserted,
That ascetic renunciation is but the code,
Provided by the lotus-borne flowery feet of Arukar,
Who is without any evil deeds and flaws
To dispel your *viṉai*
What is the reason for abandoning that ascetic code,
And adopting the path of *vinai* powerful?

**வஞ்சிப்பா**

*110.* *அகன்றலை விசும்புதொட நிவந்துயர் சிமையந்தூங்குங்*
*கல்பொரு கறங்கருவி வெல்கொடியின் மிசைநுடங்கும்*
*போக்கறு சுடர்வெள்ளி மாக்கயிலை மிசைநாப்பண்*
*பொன்னியல் புகழ்நிலத்துப் பன்னிரு புகைப்பரப்பின்*
*முழுமணியின் முறைவகுத்த வெழுநிலத்தின் மிசையரங்கின்*
*நாற்றிசை மணிப்படுகான் மேக்குயர் நெடுவீதித்*
*துணிமான விருள்நீக்கு மணிமானத் தூணத்துக்*
*கண்டவர் கருத்தளவாம் வண்டுசூழ் மலர்க்கிடங்கி*
*னடர்பைம்பொன் னவிர்மணியிற் சுடர்மாலைத்தோரணத்*
*தெண்டிசைக் கிழவர்முத லொண்சுடரோ டுரகர்க்குஞ்*
*சேயுயர் நெடுவரையிற் போயிலகு பொலன்றூபை*
*நெடுநிலை வியன்வாயிற் கொடிநிரைத்த வருகுமிசை*
*கருவியோ டிசைத்தேனுஞ் செருவறியா வொருமும்மை*
*மின்னிவர் மணிச்சூட்டிற் பொன்னெயிற் புடையரங்கின்*
*மழைதவழ் பன்மாடத் திழைவளர் முலைமகளிர்*
*பாடலின் பலபாணி யாடலின் கனசாலை*
*பல்பிறப்பு வெளிப்படுக்கும் புள்ளிமிழ் பூம்பொய்கை*
*கொய்பூவிற் கொடிப்பந்தரிற் செய்குன்றிற் செழும்பொனியல்*
*பல்காவிற் பளிக்கறையி லெல்லொளிப் பல்பீடத்*
*திலங்குமணிக் காலாயிரம் வயங்குமணி மண்டபத்*
*தருமறை முதல்வர் தொழுதறிந் தெடுத்த*
*தொல்வேதப் பேரொலியிற் பல்பலி நல்வேள்வியிற்*

தேங்கமழ் வெறிகலந்து கான்றுகமழ் பூம்பொய்கை
மண்ணோடு விண்புதைய விண்ணோடு மண்பொதுளித்
தொடியோடு தொடிதேய்ப்ப முடியோடு முடிநெருக்க
வெழுதருபொற் றுகளுவப்பி னவிழ்தருகண் ணீரவிப்ப
வேத்தொலியி னிசையொலியிற் கூத்தொலியின் முழவொலியிற்
கார்க்கட லுடன்கலந்த தீர்த்தமலி திருமுன்றில்
விசும்புமாசு துடைப்பன்ன பசும்பொன்னின் பதாகைநிரை
நீர்திகழ் நெடுவரையிற் சீர்திகழ் செழுங்கோயிற்
றத்தொளிப் பஃறாமச் சித்திர மணிக்கூடத்துப்
பைந்துணர்ப் பல்போதி னந்தளி ரசோகின்கீழ்
வண்டாளத் தண்கோதைக் கந்தகுடி மணியரங்கிற்
சுரியுளைப் பேழ்வாய வரிசுமந்த மணியணைமிசை
யொண்கதிர் மதிமூன்றின் வெண்குடை மிசைநிழற்ற
வெழுசுடர் மண்டிலத்தி னொருசுடர் மின்னிலங்கத்
தண்கதிர் நிலாக்கற்றை வெண்கவரி நெடுவெள்ள
மென்காலோ டிருமருங்கும் பொங்குபு புடைபெயரத்
தேன்றுவலை யளிமுழக்கிற் பூம்புயல்கள் கால்வீழ்ப்ப
வந்தர மழையுருமிற் றுந்துபி சூழ்ந்தொலிப்ப
விருட்பகையிற் றிசைநான்கி னருட்டிகிரி வினையகற்றப்
பெருந்தொடர்ப் பிறப்பெறியு மருந்தவத் தரசர்முதல்
மாறிகந்த விலங்கிறுதி யாறிரண்டு கணஞ்சூழச்
செம்மையிற் றிரியாது வெம்மைதீர் வெயின்மண்டிலம்
பல்கோடி கதிரொளியி னொல்காத வுயிர்வரையி
னாயிரத்தெட் டிலக்கணத்தொடு சேயிலகு திருமூர்த்தி
யலகிறந்த வொளிமூன்றி னுலகனைத்து முடன்விழுங்கிக்
கடையிகந்த காட்சியொடு கடையிகந்த வாலறிவி
னீறிகந்த வின்பத்தின் மாறிகந்த பெருவலியி
னோவாத பெருந்திருவின் கோவாகி வீற்றிருந்
தோராறு முதற்பொருளின் மூவாறு மொழிப்பொதுமை
யொருமொழியி னுயிர்பரந்த மருண்மருவா வருண்முதல்வனை
மூவிலையொரு நெடுவேலின் மேவாத வினையவுணர்
குண்றுபட நூழிலாட்டி வென்றட்ட விறல்வெகுளியை

மூவெயிலின் முரண்முருக்கி மூவர்சர ணடையநின்றனை
சுரும்புநாண் வில்லிபட நெருப்புமிழ் நெடுநோக்கினை
கோள்வலிய கொடுங்கூற்றைத் தாள்வலியின் விழவுதைத்தனை
பரிவில்கே வலக்கிழத்தி பிரிவில்லா வொருபாகனை
யான்றமெய் யறம்வளர்க்கும் மூன்றுகண் முனித்தலைவனை
யாலநெடு நிழலமர்ந்தனை காலமூன்று முடனளந்தனை
தாழ்சடை முடிச்சென்னிக் காசறுபொன் னெயிற்கடவுளை
மன்னியபே ருலகனைத்தும் நின்னுள்ளே நீயொடுக்கினை
நின்னின்று நீவிரித்தனை நின்னருளி னீகாத்தனை
யெனவாங்
காதி பகவனை யருகனை
மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே.

**பதப்பொருள் :** அகல் - பரந்த. தலை - இடத்தையுடைய விசும்பு - ஆகாயத்தை. தொட - தொடும்படி. நிவந்து - மேனோக்கி. உயர் - உயர்ந்த. சிமையம் - சிகரத்தில். தூங்கும் - தங்கிய. கல் - கல்லுகளை. பொரு - மோதி கறங்கு - சத்திக்கின்ற. அருவி - அருவியாறு. வெல்கொடியின்- வெற்றிக்கொடிபோல் மிசை- மேலே. நுடங்கும் - அசைகின்ற. போக்கறு - குற்றமற்ற சுடர் - பிரகாசியாநின்ற வெள்ளி - வெள்ளியாலாகிய. மா - பெருமை பொருந்திய. கயிலைமிசை - கைலாய மலைமேல். நாப்பண் - மத்தியில். பொன் - பொன்னால். இயல் - இயன்ற. புகழ் - கீர்த்தியையுடைய. நிலத்து - பூமியில். பன்னிருபுகை - பன்னிரண்டு யோசனை. பரப்பின் - அகலத்தின். முழுமணியின் - இந்திர நீலமணியினால். முறை - கிரமமாக. வகுத்த - ஏற்படுத்திய. ஏழுநிலத்தின் மிசை - ஏழு நிலத்திலும். அரங்கின் - சபைபோல். நாற்றிசை - நான்கு திக்கிலும். மணிபடு - மணிகளழுத்திய. கால் -தூண்கள். மேக்கு - மேலே. உயர் - உயர்ந்த. நெடும் - நீண்ட. வீதி - வீதிகளில் துணி - துணிவு கொண்ட. மான - அபிமானமாகிய இருள் - அஞ்ஞானமென்னும் இருளை. நீக்கும் - போக்காநின்ற. மணி - மணியழுத்திய. மானதூணத்து - மானஸ்தம்பத்தினாலும். கண்டவர் - பார்த்தவர்களுடைய கருத்து- மனத்துக்கு. அளவாம் - அளவாகிய. வண்டு - சுரும்புகள். சூழ் -சூழ்ந்த. மலர்- தாமரை மலர் பொருந்திய. கிடங்கின் - அகழியினாலும். அடர் - தகடுபடச்செய்த. பைம் - பசுமையாகிய. பொன் - பொன்னும் அவிர் - விளங்குகின்ற. மணியும் - மணியும்போல். சுடர் - பிரகாசியாநின்ற மாலை- ஒழுங்காகிய. தோரணத்து - தோரணத்தையும். எண்டிசை கிழவர்முதல் - வியந்தரர் முதலாக. ஒண் - பிரகாசமாகிய. சுடரோடு - சோதிடருடனே. உரகர்க்கும் - பவணருக்கும். சேயுயர் - மிகவுமுயர்ந்த. நெடு - நீண்ட. வரையின் - மலைபோல் போய் - எங்குஞ்சென்று. இலகு - விளங்குகின்ற. பொலன் - பொன்னாலாகிய. தூபை - தூபிகளையுமுடைய நெடுநிலை - நீண்ட நிலையையுடைய வியன் -

பெருத்த. வாயில் - வாசல்களின். கொடி - கொடிகள். நிரைத்த - வரிசையாகக் கட்டிய. அருகுமிசை - பக்கத்தில். கருவியோடு - கூட்டத்துடன். இசை - இராகத்தைப் பாடுகின்ற. தேனும் - வண்டுகளும். செரு - யுத்தத்தை. அறியா - அறியாத. ஒரு மும்மை-ஒரு மூன்று மின் - மின்னலைப்போல். இவர் - பிரகாசியாநின்ற. மணி-இரத்தினங்களிழைத்த சூட்டின் - சிகரத்தையுடைய. பொன்- பொன்னாலாகிய. எயில் - மதிலினுடைய. புடையரங்கில் - பக்கத்திடத்தில். மழை- மேகங்கள். தவழ் - ஊர்கின்ற. பன்மாடத்து - பல மாடங்களிலே. இழை - ஆபரணங்கள். வளர் - பொருந்திய. முலை - தனத்தையுடைய. மகளிர் - தெய்வப் பெண்களின். பாடலின் - பாடலினாலும். பல - பலவாகிய. பாணி - கைகள் ஆடலின் - ஆடலினாலும் விளங்கிய. கனசாலை - பெரிய சபைகளினாலும். பல்பிறப்பு - முற்சனனங்களை வெளிப்படுக்கும் - தெரியப்படுத்தும். புள் - வண்டுகள். இமிழ்- சத்திக்கின்ற. பூ - மலர்களுடைய. பொய்கை- தடாகங்களினாலும் கொய் - பறிக்கப்படுகின்ற. பூவின் - பூவினுடைய. கொடி - கொடிகளாலாகிய பந்தரில் - பந்தலினாலும். செய்குன்றில் - செய்குன்றினாலும். செழும்- செழுமையாகிய. பொன்னியல் - பொன்னாலியன்ற, பல் - பலவாகிய. காவில் - சோலைகளில். பளிக்கு - பளிங்கினால் செய்த. அறையில் - வீட்டுகளினாலும். எல் - சூரியனைப்போல ஒளி - காந்தியையுடைய பல - மூன்றாகிய. பீடத்து - மேகலா பீடத்தினாலும். இலங்கும்- விளங்காநின்ற. மணி- நவமணிகளாற் செய்த. காலாயிரம் - ஆயிரம் கால்களினால் வயங்கு- பிரகாசியாநின்ற. மணி - அழகிய மண்டபத்து - இலக்குமி மண்டபத்துள். அரும் - அரிதாகிய. மறை முதல்வர் - கணதரர்கள். தொழுது - வணங்கி. அறிந்து - பொருளறிந்து. எடுத்த - எடுத்துச்சொன்ன. தொல் - அனாதியாகிய. வேதம் - வேதத்தினுடைய. பேரொலியில்- பெரிதான ஒலியிலும். பல் - எட்டுவிதமான. பலி - அருச்சனை செய்யும். நல் - நல்ல. வேள்வியில் - வேள்வியிலும்மனம்வைத்து. தேம் - தேனானது. கமழ் - வாசியானின்ற. வெறி- வாசனையானது கலந்து - நிரம்பி. கான்று - ஒளியைக்கக்கி. கமழ் - விளங்காநின்ற. பூ- மலர்களையுடைய, பொய்கை - தடாகங்களையுடைய. மண்ணோடு - பூமியுடனே. விண் - ஆகாயமும். புதைய - மறைய விண்ணோடு - தேவர்களுடனே. மண் - மண்ணுலகத்தாரும். பொதுளி- நெருங்கி. தொடியொடு - வாகுவலயத்துடனே. தொடி - வாகுவலயங்கள். தேய்ப்ப- தேய்க்க. முடியொடு - கிரீடங்களுடனே முடி - கிரீடங்கள். நெருங்க - நெருக்குபட. எழுதரு- அதனாலெழப்பட்ட. பொற்றுகள் - பொற்பொடிகள். உவப்பின் - அவர்கட்குண்டாகிய சந்தோசத்தினால். அவிழ்தரு - உண்டாகாநின்ற. கண்ணீர்- ஆனந்தக்கண்ணீரானது. அவிப்ப - தணிக்க. ஏத்தொலியின் - ஜெயகோடணையினாலும். இசையொலியின் - பாட்டினொலியினாலும். கூத்தொலியின் - நடன ஒலியினாலும். முழவொலியின் - வாத்திய ஒலியினாலும். கார்கடலுடன்- கருங்கடலொலியுடனே. கலந்த - ஒப்பாகக்கலந்த. தீர்த்தம் - விழவு. மலி - நிறைந்த. திரு - அழகிய. முன்றில் - முன் வாயிலில். விசும்பு - ஆகாயத்தினது. மாசு - தூசியை. துடைப்பன்ன - துடைக்கக் கட்டியதுபோல். பசும் - பசுமையாகிய. பொனின் - பொன்னாற்செய்த. பதாகை நிரை- கொடி வரிசைகள். நீர் - அருவிநீர்.

திகழ் - விளங்குகின்ற. நெடு - நீண்ட. வரையில் - மலைபோல். சீர் - சிறப்பானது. திகழ் - பிரகாசிக்கின்ற செழும் - செழித்த. கோயில் - கோயிலையுடைய. தத்தொளி- விட்டுவிட்டு விளங்குகின்ற. பல-பலவாகிய. தாமம் - மாலைகளையுடைய. சித்திரம்- விசித்திரம் செய்த. மணி - அழகிய. கூடத்து - கூடத்தில். பைம் - பசுமையாகிய. துணர் - கொத்துக்களையுடைய. பல்போதின் - பலமலர்களினாலே. அம்- அழகுபெற்ற. தளிர் - தளிரையுடைய. அசோகின்கீழ் - அசோகமரநிழலில். வண்- வளப்பமாகிய. தரளம் - முத்தாலாகிய. தண் - குளிர்ந்த. கோதை - மாலைகளையுடைய. கந்தகுடி- கந்தகுடி என்னும் மணியரங்கில் - அழகியவிடத்தில். சுரி - சுரித்துக்கொண்டிரா நின்ற. உளை- பிடரிமயிரையும். பேழ்வாய் - பிளப்பு வாயையுமுடைய. அரி - சிங்கமானது. சுமந்த - தாங்கிய. மணி- இரத்தினமழுத்திய. அணைமிசை - ஆசனத்தின்மீது. ஒண் - பிரகாசியாநின்ற. கதிர் - கிரணங்களையுடைய. மதிமூன்றின் - மும்மதிபோன்ற. வெண் - வெண்மையாகிய. குடை - முக்குடையானது. மிசை - மேலே. நிழற்ற - நிழலைச்செய்ய. எழு - உதிக்கின்ற சுடர்மண்டிலத்தின்- சூரிய மண்டலம்போல். ஒரு - ஒப்பற்ற. சுடர் - பிரபாவலயம். மின் - மின்னலைப்போல் இலங்க - விளங்க. தண்கதிர் - சந்திரனுடைய நிலா - பிரகாசத்தினது கற்றை - கற்றைபோன்ற. வெண் - வெண்மையாகிய. கவரி - சாமரத்தினது நெடுவெள்ளம் - மிகுந்த வெள்ளமானது. மென் - மென்மையாகிய. காலோடு - காற்றுடனே. இருமருங்கும்- இருபக்கமும். பொங்குபு - மிகுந்து புடை - பக்கங்களில் பெயர - அசைய தேன்- தேனாகிய. துவலை - திவலைகளை அளி - வண்டுகளினது. முழக்கின் - முழக்கத்துடன் பூம்புயல்கள் - புட்பமேகங்கள். கால்வீழ்ப்ப - பெய்ய. அந்தரம்- ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மழையுருமின் - மேகத்திடிபோல் துந்துபி - துந்துபியானது சூழ்ந்து- எங்குஞ்சூழ்ந்து. ஒலிப்ப - சத்திக்க இருட்பகையின் - சூரியனைப்போல். திசைநான்கின் - நான்குதிக்கிலும் அருட்டிகிரி - தருமசக்கரமானது. வினை - தீவினைகளை. அகற்ற - நீக்க பெருந்தொடர் - அனாதியிற்றானே தொடர்ந்து வந்த. பிறப்பு - பிறப்பினை. எறியும் - கெடுக்கின்ற அரும் - அரிதாகிய. தவத்தரசர் - தவசிரேட்டர்கள். முதல் -முதலாக மாறு - பகைமை. இகந்த- நீங்கிய விலங்கு - மிருகங்கள் இறுதி - இறுதியாக. ஆறிரண்டு- பன்னிரண்டாகிய கணம் - கணங்கள். சூழ - சூழ்ந்திருக்க. செம்மையின் - செம்மையினின்றும். திரியாது - மாறாமல். வெம்மை - வெப்பமானது தீர் - தீர்ந்த வெயின்மண்டிலம் - சூரியமண்டலத்தில். பல்கோடி - பலகோடி கதிரொளியின்- சூரியனொளிபோல் ஒல்காத - அசையாத உயர் - உயர்ந்த வரையின் - மலையினிருந்த. ஆயிரத்தெட்டிலக்கணத்தோடு - ஆயிரத்தெட்டிலக்கணத்துடனே. சேயிலகு - மிகவும் விளங்குகின்ற. திரு - அழகிய மூர்த்தி- உருவத்தையுடையவனே. அலகிறந்த - கணக்கிறந்த. ஒளிமூன்றின் - முச்சோதியினாலே உலகனைத்தும்- உலகமுழுதையும். உடன் - ஒருதன்மையாக விழுங்கி - உட்கொண்டு. கடையிகந்த- அனந்தமான. காட்சியொடு - தரிசனத்துடனே. கடையிகந்த - அனந்தமான வால்- பரிசுத்தமான அறிவின் - ஞானத்தினாலும் ஈறிகந்த - அனந்தமான இன்பத்தின் - இன்பத்தினாலும். மாறிகந்த -திரிவில்லாத. பெருவலியின் - அனந்த வீரியத்தினாலும்.

ஓவாத - நீங்காத. பெரும் - பெரிதாகிய. திருவின் - செல்வத்திற்கு. கோவாகி - சுவாமியாகி. வீற்றிருந்து - வீறியிருந்து. ஒராறு முதற்பொருளின் - அறுவகைப்பொருளையும். மூவாறுமொழி - பதினெண்மொழிக்கும். பொதுமை- பொதுமையாக. ஒரு மொழியின் - ஒரு மொழியாகிய மாகத பாசையினாலே. உயிர்- சீவன்களிடத்தில். பரந்த - கலந்த. மருள் - வினையானது. மருவா - பொருந்தாமற். கெட - நீங்க. அருள் - உபதேசம் பண்ணும். முதல்வனை - ஆதியை. மூவிலை - மூன்றிலையையுடைய. ஒரு - ஒன்றாகிய. நெடு - நீண்ட. வேலின் - வேலி னாலே. மேவாத - அடங்காத. வினை - வினைகளாகிய. அவுணர் - அசுரர்கள். குன்றுபட - குன்றுதலடைய. நூழிலாட்டி - பொடிபடுத்தி. வென்று - செயித்து. அட்ட - கொன்ற. விறல் - வலியுடைய. வெகுளியை - கோபமுடையவனே. மூவெயிலின் - மும்மதிலினுடைய. முரண் - வலியை. முருக்கி - கெடுத்து. மூவர்- மூவுலகவிந்திரரும். சரண் - உனது பாதத்தில். அடைய - சேர்ந்து வணங்க. நின்றனை - நின்றவனே. சுரும்பு - வண்டுகளாகிய. நாண் - நாரிபொருந்திய. வில்லி - கரும்பு வில்லையுடைய மன்மதன். பட - நீறுபட. நெருப்பு - அக்கினியை. உமிழ் - கக்காநின்ற. நெடுநோக்கினை - மிகுந்தநோக்கினையுடையவனே கோள்- குற்றத்தில். வலிய - பலத்தையுடைய. கொடும் - கொடுமையாகிய. கூற்றை - காலனை. தாள்வலியின் - முயற்சிவலியால். விழ - கெட. உதைத்தனை - உதைத்தவனே. பரிவில் - துன்பமில்லாத. கேவலக்கிழத்தி - முத்திநாயகி. பிரிவில்லா- நீங்காத. ஒருபாகனை - ஒருபாகத்தையுடையவனே. ஆன்ற - பொருந்திய. மெய்யறம்- உண்மை தருமத்தை. வளர்க்கும் - வளர்க்கின்ற. மூன்றுகண் - மூன்று கண்ணினையுடைய. முனித்தலைவனை - முனிவர்க்குச் சாமியே. ஆல - ஆலமரத்தினுடைய. நெடுநிழல் - மிகுந்த நிழலில். அமர்ந்தனை - அமர்ந்தவனே. காலமூன்று - முக்காலத்தையும். உடன் - ஒரு தன்மையாக. அளந்தனை - அளந்தவனே. தாழ் - பொருந்திய. சடை - சடையை. முடி - முடித்த. சென்னி - தலையையுடைய. காசறு - குற்றமற்ற. பொன் - பொன்னாலாகிய. எயில் - மதிலையுடைய. கடவுளே - கருத்தனே. மன்னிய - நிலைபெற்ற. பேருலகனைத்தும்- பெரியவுலகமுழுதும். நின்னுள்ளே - உனக்குள்ளே. நீயொடுக்கினை - நீயொடுக்கினாய். நின்னின்றும் - உன்னின்றும். நீவிரித்தனை - நீதெரிவித்தாய் நின்னருளின் - உன்னருளினாலே. நீகாத்தனை - நீயளித்தாய். என - என்றுசொல். ஆதி -ஆதியாகிய. பகவனை - பகவானை. அருகனை - அருகபரமனை. மாதுயர்- மிகுந்ததுன்பமானது. நீங்க - தீர. வழுத்துவம் - யாங்கள் துதிப்போம். பலவே - பலவாகவே என்றவாறு.

**பொழிப்புரை** : நெஞ்சமே! பரந்தவிடத்தையுடைய ஆகாயத்தைத் தொடும்படி மேனோக்கியுயர்ந்த சிகரத்திற்றங்கிய கல்லுகளை மோதி சத்திக்கின்ற அருவியாறு, வெற்றிக்கொடிபோல் மேலே அசைகின்ற குற்றமற்ற பிரகாசியாநின்ற வெள்ளியாலாகிய பெருமை பொருந்திய கயிலாயமலை மேன் மத்தியிற் பொன்னாலி யன்ற கீர்த்தியையுடைய பூமியிற் பன்னிரண்டு யோசனை அகலத்தில் இந்திர நீலமணியினாற் கிரமமாக வேற்படுத்திய வெழுநிலத்திலும் சபைபோல நான்கு

திக்கிலும் மணிகள் அழுத்திய தூண்கள்மேலே, யுயர்ந்த நீண்ட வீதிகளிற் றுணிவு கொண்ட அபிமானமாகிய அஞ்ஞானமென்னும் இருளைப் போக்காநின்ற மணியழுத்திய மானத்தம்பத்தினாலும், பார்த்தவர்களுடைய மனதுக்கு அளவாகிய சுரும்புகள் சூழ்ந்த தாமரை மலர் பொருந்திய அகழியினாலும், தகடுபடச்செய்த பசுமையாகிய பொன்னும் விளங்குகின்ற மணியும் போல் பிரகாசியாநின்ற ஒழுங்காகிய தோரணத்தையும், வியந்தரர் முதலாகப் பிரகாசமாகிய சோதிடருடனே பவணருக்கும் மிகவுமுயர்ந்த நீண்ட மலைபோல் எங்குஞ்சென்று விளங்குகின்ற பொன்னாலாகிய தூபிகளையுமுடைய நீண்ட நிலையையுடைய பெருத்த வாசல்களின் கொடிகள் வரிசையாகக் கட்டிய பக்கத்திற் கூட்டத்துடன் இராகத்தைப் பாடுகின்ற வண்டுகளும், யுத்தத்தை அறியாத மின்னலைப்போல பிரகாசியாநின்ற மணிகளிழைத்த கொத்தையுடைய பொன்னாலாகிய வொரு மூன்று மதிலினுடைய பக்கத்திடத்தின் மேகங்களூர்கின்ற பல் மாடங்களில் ஆபரணங்கள் பொருந்திய தனத்தையுடைய தெய்வப் பெண்களின் பாடலினாலும், பலவாகிய கைகள் ஆடலினாலும் விளங்கிய பெரிய சபைகளினாலும் முற்சனனங்களைத் தெரியப்படுத்தும் வண்டுகள் சத்திக்கின்ற மலர்களையுடைய தடாகங்களினாலும் பறிக்கப்படுகின்ற பூவினுடைய கொடிகளாலாகிய பந்தலினாலும் செய்குன்றினாலும் செழுமையாகிய பொன்னாலியன்ற பலவாகிய சோலைகளிற் பளிங்கினாற் செய்த வீட்டுகளினாலும் சூரியனைப்போலகாந்தியையுடைய மூன்றாகிய மேகலா பீடத்தினாலும் விளங்கானின்ற நவமணிகளாற் செய்த ஆயிரங்கால்களினாற் பிரகாசியா நின்ற அழகிய இலக்குமி மண்டபத்தில், அரிதாகிய கணதரர்கள் வணங்கிப் பொருளறிந்தெடுத்துச் சொன்ன அனாதியாகிய வேதத்தினுடைய பெரிதான வொலியினாலும் எட்டுவிதமான வஞ்சனை செய்யும் நல்ல வேள்வியினாலும் மனம் வைத்துத் தேனானது வாசியாநின்ற வாசனையானது நிரம்பி யொளியைக் கக்கி விளங்காநின்ற மலர்களையுடைய தடாகங்களையுடைய பூமியுடனே ஆகாயமும் மறைய, தேவர்களுடனே மண்ணுலகத்தாரும் நெருங்கி வாகுவலயத்துடன் வாகுவலயங்கடேய்க்க, கிரீடங்களுடனே கிரீடங்கள் நெருக்குபட அதனாலே எழப்பட்ட பொற்பொடிகள் அவர்கட் குண்டாகிய சந்தோசத்தினாலே யுண்டாகாநின்ற வானந்தக் கண்ணீரானது தணிக்க, ஜெயகோஷணையினாலும், பாட்டினொலியினாலும், நடனவொலியினாலும், வார்த்திய வொலியினாலும், கருங்கடலொலியுடனே யொப்பாகக் கலந்த விழவுநிறைந்த வழகிய முன் வாயிலில், ஆகாயத்தினது தூசியைத் துடைக்கக் கட்டியது போலப் பசுமையாகிய பொன்னாற் செய்த கொடி வரிசைகள் அருவிநீர் விளங்குகின்ற நீண்ட மலைபோல சிறப்பானது பிரகாசிக்கின்ற செழித்த கோயிலையுடைய விட்டுவிட்டு விளங்குகின்ற பலவாகிய மாலைகளையுடைய விசித்திரம் செய்த வழகிய கூடத்தில், பசுமையாகிய கொத்துக்களையுடைய பல மலர்களினாலே அழகுபெற்ற தளிரையுடைய அசோக மரநிழலில், வளப்பமான முத்தாலாகிய குளிர்ந்த மாலைகளையுடைய கந்தகுடியென்னும் அழகிய விடத்தில், சுரித்துக்கொண்டிராநின்ற பிடரிமயிரையும் பிளப்புவாயையுமுடைய சிங்கமானது தாங்கிய இரத்தின மழுத்திய வாசனத்தின் மீது பிரகாசியானின்ற கிரணங்களையுடைய மும்மதி போன்ற வெண்மையாகிய

முக்குடையானது மேலே நிழலைச் செய்ய உதிக்கின்ற சூரிய மண்டிலம் போல ஒப்பற்ற பிரபாவலயம் மின்னலைப்போல விளங்க, சந்திரனது பிரகாசத்தின் கற்றைபோன்ற வெண்மையாகிய சாமரத்தினது மிகுந்த வெள்ளமானது மென்மையாகிய காற்றுடனே இருபக்கமுமிகுந்து பக்கங்களில் அசையத் தேனாகிய திவலைக்ளை வண்டுகளினது முழக்கத்துடன் புஷ்ப மேகங்கள் பொழிய, ஆகாயத்திற் சஞ்சரிக்கு மேகத்திடிபோல துந்துபியான தெங்குஞ் சூழ்ந்து சத்திக்கச், சூரியனைப் போல நான்கு திக்கிலும் தருமச் சக்கரமானது தீவினைகளை நீக்க, அனாதியில்தானே தொடர்ந்து வந்த பிறப்பினைக் கெடுக்கின்ற அரிதாகிய தவச்சிரேட்டர்கள் முதலாக பகையை நீங்கிய மிருகங்கள் இறுதியாகப் பன்னிரண்டாகிய கணங்கள் சூழ்ந்திருக்கச், செம்மையினின்று மாறாமல் வெப்பமானது தீர்ந்த சூரியமண்டலத்தில் பலகோடிச் சூரியனொளி போல அசையாத வுயர்ந்த மலையினிருந்த ஆயிரத்தெட்டு இலக்கணத்துடனே மிகவும் விளங்குகின்ற அழகிய உருவத்தை உடையவனே! கணக்கிறந்த முச்சோதியினாலே உலகமுழுவதையும் ஒரு தன்மையாக உட்கொண்டு அனந்தமான தரிசனத்துடனே அனந்தமான பரிசுத்தமர்ன ஞானத்தினாலும் அனந்தமான இன்பத்தினாலும் திரிவில்லாத அனந்தவீரியத்தினாலும் நீங்காத பெரிதாகிய செல்வத்திற்குச் சுவாமியாகி வீற்றிருந்து அறுவகைப் பொருளையும் பதினெண்மொழிக்கும் பொதுமையாக மாகத பாஷையினாலே சீவன்களிடத்திற் கலந்த வினையானது பொருந்தாமல் கெட உபதேசம் பண்ணும் ஆதியே! முன்றிலையுடைய ஒன்றாகிய நீண்ட வேலினாலே யடங்காத வினைகளாகிய வசுரர்கள் குன்றுதலையுடைய பொடிபடுத்தி செயித்துக்கொண்ட வலியுடைய கோபமுடையவனே! மும்மதிலி னுடைய வலியைக் கெடுத்து மூவுலக இந்திரரும் உனது பாதத்தில் சேர்ந்து வணங்க நின்றவனே! வண்டுகளாகிய நாரிபொருந்திய கரும்பு வில்லையுடைய மன்மதன் நீறுபட அக்கினியைக் கக்குகின்ற மிகுந்த நோக்கினையுடையவனே! குற்றத்திற் பலத்தையுடைய கொடுமையாகிய காலனை முயற்சிவலியாற் கெட வுதைத்தவனே! துன்பமில்லாத முத்திநாயகி நீங்காத வொருபாகத்தை யுடையவனே! பொருந்திய உண்மை தருமத்தை வளர்க்கின்ற மூன்று கண்ணினையுடைய முனிவர்க்குச் சாமியே! ஆலமரத்தினுடைய மிகுந்த நிழலில் அமர்ந்தவனே! முக்காலத்தையும் ஒரு தன்மையாக அளந்தவனே! பொருந்திய சடையை முடித்த குற்றமற்ற பொன்னாலாகிய மதிலையுடைய கருத்தனே! நிலைபெற்ற பெரிய உலகம் முழுதும் உனக்குள்ளே நீ ஒடுக்கினாய், உன்னிடத்தினின்று நீ தெரிவித்தாய், உன்னருளினாலே நீ காத்தாய் என்று சொல்லி யாதியாகிய பகவானை யருக பரமனை மிகுந்த துன்பமானது தீர யாம் பலவாகத் துதிப்போம் என்றவாறு.

**வி-ரை :** இதனால் சமவசரணப் பெருமையும் அருகனது குணப்பெருமையும் கூறப்பட்டன. யாம் - எழுவாய். அருகனை - செயப்படுபொருள் துதிப்போம் - பயனிலை.

சந்திக்கின்ற - ஒலிக்கின்ற. ஒருயோசனை - 10 மைல். அஞ்ஞானம் - புறச்சமயம், மாறுபட்ட கொள்கையுள்ள சமயம். மானத்தம்பம் - சமவசரணத்தின் (அறவுரை மண்டபத்தின்) நான்கு திக்கிலும் உள்ள தூண்கள். சுரும்பு - வண்டு. அகழி -

கோட்டையைச் சுற்றியுள்ள கிடங்கு. சோதிடர் - சோதிர் லோகத்தில் வாழ்பவர்கள். பவணர் - பவணலோகத்தில் வாழ்பவர்கள். மூன்று மதிலுடையது - சமவசரணம். சனனம் - பிறப்பு. காந்தி - ஒளி. நவமணிகள் - கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வைரம். கணதரர் - அருகர். வாசி - மணம். வாகுவலயம் - தோளணி. செயகோஷம் - வெற்றியார்ப்பு. கந்தகுடி- அருகன் கோட்டம், சுரித்துக்கொண்டு - கோபம்கொண்டு. முக்குடை - முத்துக்குடை, பொற்கடை, மாணிக்கக்குடை. பிரபாவலயம் - தீர்த்தங்கரர்களின் பின்னால் விளங்கும் ஒளி மண்டலம். சிரேஷ்டர்கள் - தலைசிறந்தவர்கள். ஆயிரத்தெட்டு இலக்கணம்- அருகபெருமானின் ஆயிரத்தெட்டு திருப்பெயர்கள். சோதி - ஒளி. முச்சோதி - மனசோதி, வாக்குச்சோதி, காயசோதி. அனந்தம் - அளவற்றது. வீரியம் - வலிமை. அறுவகைப்பொருள் - உயிர் (ஜீவன்), புத்கலம், தருமம், அதருமம், ஆகாயம், காலம் என்பன.

பதினெண்மொழி - தமிழ்நூல்களில் வடமொழி நீங்கலாக எண்ணப்பட்ட சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துருவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கு, கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், கோசலம், தமிழ் என்ற பதினெட்டு பாஷைகள்.

## vañcippā

*akanralai vicumputoṭa nivantuyar cimaiyantūṅkuṅ*
*kalporu karaṅkaruvi velkoṭiyin micainuṭaṅkum*
*pōkkaru cuṭarveḷḷi mākkayilai micaināppaṉ*
*ponniyal pukaḻnilattup pannīru pukaipparappin*
*muḻumaṇiyin muraivakutta veḷunilattin micaiyaraṅkin*
*nārricai maṇippaṭukān mēkkuyar neṭuvītit*
*tuṇimāna viruḷnīkku maṇimānat tūṇattuk*
*kaṇṭavar karuttaḷavam vaṇṭucūl malarkkiṭaṅki*
*naṭarpaimpon navirmaṇiyir cuṭarmālait tōraṇat*
*tenṭicaik kiḻavarmuta loncuṭarō turakarkkuñ*
*cēyuyar neṭuvaraiyir pōyilaku polanrūpai*
*neṭunilai viyanvāyir koṭiniraitta varukumicai*
*karuviyō ṭicaittēnuñ ceruvariyā vorumummai*
*minnivar maṇiccūṭṭir ponneyir puṭaiyaraṅkin*
*maḷaitavaḷ panmāṭat tiḷaivaḷar mulaimakaḷir*
*pāṭalin palapāṇi yāṭalin kaṇacālai*
*palpirappu veḷippaṭukkum puḷḷimiḻ pūmpoykai*
*koypūvir koṭippantarir ceykunrir ceḷumponiyal*

*palkāviṟ paḷikkaṟaiyi lelloḷip palpīṭat*
*tilaṅkumaṇik kālāyiram vayaṅkumaṇi maṇṭapat*
*tarumaṟai mutalvar toḻutarin teṭutta*
*tolvētap pēroliyiṟ palpali nalvēḷviyiṟ*
*teṅkamaḻ veṟikalantu kāṉṟukamaḻ pūmpaykai*
*maṇṇōṭu viṇputaiya viṇṇōṭu maṇpotuḷit*
*toṭiyōṭu toṭitēyppa muṭiyōṭu muṭinerukka*
*veḻutarupoṟ ṟukaḷuvappi ṉaviḻtarukaṇ ṇīravippa*
*vēttoliyi ṉicaiyoliyiṟ kūttoliyiṉ muḻavoliyiṟ*
*kārkaṭa luṭaṉkalanta tīrttamali tirumuṉṟil*
*vicumpumācu tuṭaippaṉṉa pacumpoṉṉiṉ patākainirai*
*nīrtikaḻ niṭuvaraiyiṟ cīrtikaḻ ceḻuṅkōyiṟ*
*ṟattoḷip pakṟāmac cittira maṇikkūṭattup*
*paintuṇarp palpōti ṉantaḷi racōkiṉ kīḻ*
*vaṇṭāḷat taṉkōtaik kantakuṭi maṇiyaraṅkiṟ*
*curiyuḷaip pēḻvāya varicumanta maṇiyaṇaimicai*
*yoṇkatir matimūṉṟiṉ veṇkuṭai micainiḻaṟṟa*
*veḻucuṭar maṇṭilatti norucuṭar miṉṉilaṅkat*
*taṇkatir nilākkaṟṟai veṇkavari neṭuveḷḷa*
*meṉkālō ṭirumaruṅkum poṅkupu puṭaipeyarat*
*tēṉṟuvalai yaḷimuḻakkiṟ pūmpayalkaḷ kālvīḻppa*
*vantara maḻaiyurumiṟ ṟuntupi cūḻntolippa*
*viruṭpakaiyiṟ ṟicaināṅki ṉaruṭṭikiri viṉaiyakaṟṟap*
*peruntoṭarp piṟappeṟiyu maruntavat taracarmutal*
*māṟikanta vilaṅkiṟati yārirantu kaṇañcūḻac*
*cemmaiyiṟ ṟiriyātu vemmaitīr veyiṉmaṇṭilam*
*palkōṭi katiroḷiyi ṉolkāta vuyirvaraiyi*
*ṉāyiratteṭ ṭilakkaṇattoṭu cēyilaku tirumūrtti*
*yalakiṟanta voḷimūṉṟi ṉulakaṉaittu muṭaṉviḷuṅkik*
*kaṭaiyikanta kāṭciyoṭu kaṭaiyikanta vālaṟivi*
*ṉīṟikanta vinpattin māṟikanta peruvaliyi*
*ṉōvāta peruntiruviṉ kōvāki viṟṟirun*
*tōrāṟu mutaṟ poruḷiṉ mūvāṟu moḻippotumai*
*yorumoḻiyi ṉuyirparanta maruṇmaruvā varuṇmutalvaṉai*
*mūvilaiyoru neṭuvēliṉ mēvāta viṉaiyavuṇar*

*kunrupaṭa nūlilāṭṭi venraṭṭa viralvekuḷiyai*
*mūveyilin muranmurukki mūvarcara naṭaiyaninranai*
*curumpunān villipaṭa neruppumil neṭunōkkinai*
*kōḷvaliya koṭuṅkūrrait tāḷvaliyin viḷavutaittanai*
*parivilkē valakkiḷatti pirivillā vorupākanai*
*yānramey yaramvaḷarkkum mūnrukan munittalaivanai*
*yālaneṭu niḷalamarntanai kālamūnru muṭanaḷantanai*
*tāḷcaṭai muṭiccennik kācarupon neyirkaṭavuḷai*
*manniyapē rulakanaittum ninnuḷḷē nīyoṭukkinai*
*ninninru nīvirittanai ninnaruḷi nīkāttanai*
*yenavāṅ*
*kāti pakavanai yarukanai*
*mātuyar nīṅka vaḷuttuvam palavē.*

Oh! mind,
In the glorious Mount Kailash,
Where its peak rises upwards to scrape the sky wide,
And the riverine waterfalls batter on the stones resoundingly,
Like a banner of victory fluttering,
At the centre of such Mount Kailash,
Which doth sparkle as if made of silver,
On the earth famed in its nature as of gold,
In an area of *yōcanai* twelve,
At the *araṅku* of seven lands designed but properly,
With sapphires divine
At the centre of the land which leads
To the long roads on directions four,
The towering *mānastampam* pillars rising upwards
Studded with ninefold gems that dispel
The arrogance and ignorance alike of the onlookers
The moat with its bed called *kātikapūmi*,
Which appears deep to those who just see it
But only knee deep to those who have ventured to wade

And filled with flowers like lotus swarmed around by bees
The row of festoons that hang sparkling,
Like gold and gems in the streets there,
Beside the golden ramparts three,
Towering high even to the *Tēvars* of *Pavaṇa*, *Viyantara* and *Jōtiṣa* clans
With tall *stūpis* like lengthy mountains,
Plated with gold,
With peaks that sparkle like lightning sans the heat of war,
With wide entrances that have door frames lengthy,
And banners tied in a neat row,
With bees humming music.
Besides such golden ramparts three with peaks studded with gems
Huge *araṅkus,*
Where in many *māṭams* bejewelled damsels divine,
Sing and perform dances of various kinds
Flowery ponds,
Where birds that identify births previous
Doth chirp and chatter,
Canopies spread over with flowering creepers
Hills made of sterling gold,
Crystalline chambers amidst green groves,
Surrounded by all these.
In the *Ilakkumivara maṉṭapam* elegant,
Located on the mēkalāpīṭam threefold shining like the sun,
And supported by a thousand pillars studded with gems ninefold,
The loud and resounding chant of scriptures ancient,
By the *Kaṇatarars* who doth worshipfully elucidate them
As *Tēvars* and the earthly folk jostle closely,
Willing to offer the eight pure articles for worship,
With the earth full of honey dewed, fragrant and luminous flowery ponds
And the sky as well concealed (by the jostling crowd)

The bracelets and crowns rubbing to cause particles of gold to rise,
That are quelled to subside by the tears of joy
Of the *Tēvars* and earthly folk.
Thus the hailing, singing, dancing and instrumental sounds
*Mingle in an ocean-like chorus*
In the front entrance filled with festivity
In the long mountain-like temple of great renown,
Where golden banners in a row flutter,
As if dusting the sky,
At the *citiramaṇikūṭam* hall where varied garlands,
Hang sparkling intermittently.
And under the shade of the *Acōkā* tree
Which hath tender leaves dense with fresh bunches of flowers
In the *Kantakuṭi maṇṭapam* of great beauty,
Adorned with cool garlands of fertile pearls
On the gem-studded throne,
Borne by a lion with a curly mane and gaping mouth
With the parasols three liminous like *mummati* providing shade,
With the *prapāvalayam* bright like the rising sun,
With white *kavaris* like cool moonbeams fanning breeze on both sides,
Flowers showering heavily as the honey drunk bees hum music,
With the celestial *tuntupi* rumbling like clouds.
With the ocean of virtue dispelling deeds evil,
On directions four like the sun.
Right from the rare saints who hath conquered birth
Which doth follow living beings from times sans beginning,
To the animals that are devoid of hostility,
With all the *kaṇams* twelve surrounding in attendance
Oh! prime Lord Arukar of handsome shape,
Who doth remain glorious with features a thousand and eight,
And who doth shine like billions many of suns
Unchanged in splendour but without heat

And who also doth remain unshakable like a mountain tall and towering.
Oh! *Ātimūrtti* ,
Who did absorb and discern worlds all uniformly by means of the *muccōti* countless,
Who did remain the Lord of great wealth irremovable,
Comprising besides *anantataricanam,*
*anantañānam, anantacukam* and *anantavīriyam* as well,
And who did expound the gospel of virtue,
Laced with *meypporuḷs* six,
In an emerald dialect common to eighteen languages,
To dispel the *vinais* that hath bound the *uyirs*
And to extricate the *uyirs* from any further binding of *vinai*
Oh! Lord, who hath indignation mighty,
To pound and disfigure the devils of *vinais* uncontrollable,
With a trident long and conquer them.
Oh! the Great One who did stand for the Intirars of the worlds three to worship,
By destroying the combined might of the *mummatil*
Of lust, anger and illusion
Oh! Lord who did stare long and stern,
To emit fire and destroy *Kāman* with the sugarcane bow
Oh! He who as a reward for penance
Did kick and mar *Kālan* the strong and cruel
Oh! Lord who hath *Muktikanni*
As an integral part irremovable of His being,
Oh! Chief of saints, who hath eyes three promoting virtue,
Oh! Lord seated in the lengthy shade of the banyan tree,
Oh! He who is aware of past, present and future all at once,
Oh! God with short locks matted,
Who doth have ramparts of gold,
Thou did confine the established and vast world on earth,
In Thyself

Thou did inform from Thyself
Thou did protect by grace Thine
Thus declaring,
Let us pray in various ways
The *Ātipakavaṉ,* Lord Arukaṉ
For our acute sufferings and woes to vanish

## Explanatory notes :

This poem picturesquely describes the magnificance of *camavacaraṇam*, the hall of discourse and the glory of Lord Arukar.

*yōcaṉai* - 10 miles or 16 kilometres, *araṅku* - assembling or meeting place, *māṉastampam* - The pillars on the four sides of *camavacaraṇam* (the hall of discourse), *kātikāpūmi* - The moat surrounding the fort. *Pavaṉars* - residents of *paramalōkam*

*Jōtiṭar* - residents of *Cōtirlōkam. stūpis* - tall pillars or masts. *māṭam* - latticed upper storey. *mēkalāpīṭam* - basement shaped like a *mekalai* or girdle. *kaṇatarars* - Arukar. *cittiramaṇikūṭam* - Hall adorned with paintings and gems. *maṇṭapam* - hall. parasols three - *Mukkuṭai* - gold, pearl and ruby parasols. *mummati* - three moons. *prapāvalayam* - The halo surrounding Arukar. *kavari* - A kind of deer whose hair is used in making ornamental fans. *tuntupi* - A divine musical instrument. *ātimūrti* - The prime and foremost Lord ie Arukar. *muccōti* - 1. *maṉacōti* - The mental light or thought (2) *vākkucōti* - The light of speech or word (3) *kāyacōti* - The light of body or deed. *aṉantataricaṉam* - Endless vision. *Aṉantañāṉam* - endless wisdom. *aṉantacukam* - endless pleasure. *aṉantavīriyam* - endless vigour.

Six *meypporuḷs* - *uyir (jēvaṉ), putkalam, terumam, atarumam, ākāyam* and *kālam.* Eighteen Languages - *Ciṅkaḷam, Cōṉakam, Cāvakam, Cīṉam, Tuḷuvam, Kuṭakam, Koṅkaṇam, Kaṉṉaṭam, Kollam, Teluṅku, Kaliṅkam, Vaṅkam, Kaṅkam Makatam, Kaṭāram, Kavuṭam, Kōcalam* and Tamil. *uyirs* - lives. Intirars - Tēvars or heavenly folk. *mummatil* - The three ramparts. Kāmaṉ - Maṉmataṉ the god of love. Kālaṉ - The god of death. Muktikaṉṉi - The goddess of *Mukti* or liberation. Ātipakavaṉ - The prime Lord. (This term Ātipakavaṉ has been used by Tiruvaḷḷuvar to denote God).

### வெண்பா

*111.* *பலவாம் பருவமெல்லாம் பாரளிக்குங் காலை*
*யுலவா வொன்றாக வுரைத்தார் - பலரெனினுங்*
*காவலராந் தேவ ரொருவரே யாங்கவர்தாட்*
*பூவலரா நாஞ்சூடும் பூ.*

**பதப்பொருள் :** பலவாம் - பலவாகிய. பருவமெல்லாம் - உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணி யென்னும் எல்லாக் காலத்திலும். பார் - பூமியை. அளிக்கும் - இரட்சிக்கின்ற. காலை - காலத்தில். உலவா- மாறுபடாமல். ஒன்றாக - ஒரு தன்மையாக. உரைத்தார் - தத்துவமுரைத்தார். பலரெனினும் - பலரானாலும், காவலராம் - சுவாமிகளாகிய. தேவரொருவரே - தன்மையாலொருவரே. ஆங்கவர்- அந்ததேவருடைய. தாள் - பாதமாகிய. பூ - பொலிவினையுடைய. அலராம் - மலராகும். நாம்- நாமெல்லோரும். சூடும் - சிரத்திற்றரிக்கும். பூ - மலரானது என்றவாறு.

**பொழிப்புரை :** சாதுக்களே! உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணியென்னும் பலவாகிய வெல்லாக் காலத்திலும், பூமியைக் காக்காநின்ற காலத்தின் முன்னோடு பின்மாறுபடாமல் ஒரு தன்மையாக தத்துவமுரைத்தவர் பலரானாலுஞ், சுவாமிகளாகிய தேவர் தன்மையா லொருவரே. ஆகையினால் எல்லோரும் சிரத்திற் தரிக்கும் பூவானது அத்தேவருடைய பாதமாகிய பொலிவினையுடைய மலராகும் என்றவாறு.

**வி-ரை :** இதனால் எக்காலத்திலும் சுவாமி ஒருவரே யென்றும்; அவரே தத்துவத் தலைவரென்றும், அவரது தாள் மலரே யாவருந் தரிக்கத் தக்கதென்றும் கூறப்பட்டன. சூடும்பூ - எழுவாய். அலராம் - பயனிலை.

## *veṇpā*

*palavām paruvamellām pāraḷikkuṅ kālai*
*yulavā vonṟāka vuraittār - palareṉiṉuṅ*
*kāvalarāṉ tēva roruvarē yāṅkavartāṭ*
*pūvalarā nāñcūṭum pū.*

At all times and aeons many,
Of *utcarppiṇi* and *Avacarppiṇi*,
While protecting this world,
Though many did preach tenets but uniformly,
Without contradictions any,
*It is Arukar the god and protector of uyirs* all
Who is sole and unique in nature.
Hence the flowers that all of us place on our heads and cherish
Are the lotus feet of Lord Arukar.

* * * * *

## இணைப்பு - 1

## துணை நூற் பட்டியல்

### அ. சுவடிகள்

**நூலுக்குரிய சுவடி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்கலம்பகம் | ஓலை. டி. 287 | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை-5. |

**ஒப்பிட உதவிய சுவடிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்கலம்பகம் | ஓலை. டி. 289 | அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம், சென்னை- 5. |
| 2. | திருக்கலம்பகம் | தாள். ஆர். 702 | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் சென்னை - 5. |

### ஆ. அச்சுநூல்கள்


1. அண்ணாதுரை, மா., — **பாரதிதாசன் திருக்குறள் உரைத்திறன்,** பூங்கொடி வெளியீடு, ஈரோடு, 1992.
2. அப்பாசாமி சாஸ்திரியார், கு. — **நவபதார்த்த ஸ்வரூபம்,** சாது அச்சுக் கூடம், இராயப்பேட்டை, சென்னை, 1931.
3. அரங்கநாத முதலியார், ஆ, (பதி.), — **திருக்குறள்,** சுவர்ண விலாஸ், திருவல்லிக் கேணி, சென்னை, 1933
4. அரங்கநாத முதலியார், பூண்டி, (பதி.), — **கச்சிக் கலம்பகம்,** கழக வெளியீடு, சென்னை, (இரண்டாம் பதிப்பு) 1956.
5. அருணாசல தேசிகர், சோ., (பதி.), — **நந்திக் கலம்பகம்,** தில்லை நிலையம், சென்னை, (இரண்டாம் பதிப்பு), 1997.
6. அருணாசலம், மு., — **தமிழ்ப் புலவர் வரலாறு-2, சேக்கிழார்,** காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், 1972.
7. அருணாசலம், மு., — **தமிழ் இலக்கிய வரலாறு,** - பதினோராம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், 1971.

8. அனந்தநாத நயினார், (பதி.), **திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்தமும்**, ஸ்ரீ ஆதிமூலம் அச்சியந்திர சாலை, சென்னை, 1932

9. அஜிததாஸ், கனக; (பதி.), **கிரியா கலாபம்**, ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1995,

10. அஜிததாஸ், கனக, தன்யகுமார், சிரே, **ஜைனம் ஓர் அறிமுகம்**, ஜைன இளைஞர் மன்றம், சென்னை (மூன்றாம் பதிப்பு), 1995.

11. ஆர்ஜவசாகர் முனிவர், பூஜ்யஸ்ரீ, **மோக்ஷம் தரும் தச தருமம்**, சுருதகேவலி பத்திரபாகு சுவாமி சேவா தளம், சென்னை, 1995.

12. ஆறுமுக நாவலர் (பதி.), **திருத்தொண்டர் புராணம்**, சைவசித்தாந்த நிலையம், குவலாலம்பூர், மலேஷியா, (ஒன்பதாம் பதிப்பு), 1993.

13. இராகவையங்கார், மு, (பதி.), **திருக்கலம்பகம் - மூலமும் உரையும்**, செந்தமிழ்ப் பிரசுரம்-22, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1911.

14. இராமநாதப் பிள்ளை, அ, சிதம்பரனார் (பதி.), **திருமூலர் திருமந்திரம் பாகம்1**, கழக வெளியீடு, சென்னை, 1992

15. இராமநாதப் பிள்ளை, ப., இராமசாமிப் புலவர், சு. (பதி.), **திருத்தொண்டர் மாக்கதை**, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்தநூற்பதிப்புக் கழகம், சென்னை. 1977.

16. இராமஸ்வாமி ஐயங்கார், என், (பதி.), **பெரிய திருமொழி**, ஜீவோதயம் அச்சகம், சென்னை, 1993.

17. உமாஸ்வாமி ஆசாரியார், **தத்வார்த்த சூத்ரம் (மூலமும் மல்லிநாத ஜெயின் சாஸ்திரி உரையும்)**, ஸன் பிரிண்டர்ஸ், சென்னை, 1997.

18. கந்தையாப் பிள்ளை, ந. சி., (தொ. ஆ.), **தமிழ்ப் புலவர்அகராதி** ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

19. கபூர்சந்த் பாட்நீ, சுரேந்திரநாத் ஜெயின், **த்ரவ்ய ஸங்க்ரஹம்**, ஜெயின் நற்காட்சி சங்கம், சென்னை, 1993.

20. கிருட்டின மூர்த்தி, கோ. **சமண அறநெறிகள்**, பல்லவி பதிப்பகம், சென்னை, 1998.

21. கோபாலய்யர், டி.வி., தேவாரம் (ஞானசம்பந்தர்), Institute Francais Dindologie, பாண்டிச்சேரி, 1984.

22. கோபாலய்யர், டி.வி., தேவாரம் (அப்பர், சுந்தரர்), Institute Francais Dindologie, பாண்டிச்சேரி, 1984.

23. கோவிந்தராசனார் கா. ரா. (பதி.), பன்னிரு பாட்டியல், கழக வெளியீடு, சென்னை, 1978

24. சம்பந்தபத்ர சாஸ்திரியார் இல்லறத்தார் ஒழுக்கம், சோதி பவர் பிரஸ், திண்டிவனம், 1971

25. சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, ஆசியன் எஜுகேஷன் சர்வீஸ், புதுடெல்லி, 1986.

26. சுந்தரமூர்த்தி, கு, (பதி.)., தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருப்பனந்தாள் அறக்கட்டளை வெளியீடு, சிதம்பரம், 1985.

27. சுப்பிரமணிய முதலியார், C.K., சேக்கிழார், சாது அச்சுக்கூடம், சென்னை, 4ஆம் பதிப்பு, 1954.

28. சுப்பிரமணியன், ச.வே. பகவதி, கு, (பதி.), தமிழ் இலக்கியக் கொள்கை-8, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

29. செயராமன், ந. வீ., சிற்றிலக்கிய புலவர் அகராதி, நாதன் அண்ட் கம்பெனி, சென்னை, 1983.

30. தன்யகுமார், எஸ்.(பதி.), திருக்கலம்பகம் மூலமும் உரையும் மதுரைத் தமிழ்ச் சமணர்கள் சங்கம், மதுரை, 1995.

31. தன்யகுமார்,எஸ்.(தொ.ஆ.) திருக்குறள் கடவுள் வாழ்த்து, திருமதி A. புண்ணியகலா அறக்கட்டளை, பொன்னூர், 1997.

32. தேவராஜன் நயினார், D, க்ஷேத்ர வரலாறு, காஞ்சிபுரம்.

33. நடராஜன், அ.லெ., பகவான் மகாவீரர் வரலாறு, புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், 1968.

34. பாலசுப்பிரமணியன், வெ., கலம்பகத்திறன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993.

35. பாலுசாமி, நா., (பதி), **வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-4**, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 1987.

36. பூபாலன், து. (பதி.), **குணஸ்தானம்**, ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்றம், சென்னை, 1996.

37. மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி, **சிரமண பெளிகுளம்**, மேகலை எண்டர்பிரைசஸ், சென்னை, 1980.

38. மல்லிநாத் ஜெயின் சாஸ்திரி, (பதி.), **பகவான் விருஷபதேவர்**, தன்யகுமார் பிரஸ், சென்னை, 1995.

39. ப. மாணிக்கம், வ.சு.ப. (பதி.), **தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம் (பகுதி - 1)**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1974.

40. முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் (பதி.), **திருமந்திரம்**, காசிமடம், திருப்பன்ந்தாள், 1991.

41. வர்த்தமானசாகரசுவாமிகள், **தமிழ்நாடு விஜயம்**, ஸ்ரீ ஆசாரிய நிர்மலஸாகர சங்கம், சென்னை.

42. விமலானந்தம், மது. ச. , **தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.

43. வெங்கடசாமி ரெட்டியார் கி. , (பதி.), **நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்**, திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, (இரண்டாம் பதிப்பு), 1981.

44. வெள்ளை வாரணம், தா. ம. , (பதி), **திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால்**, திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடு, ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள், (5-ம் பதிப்பு) 1983.

45. ஸ்ரீசந்திரன், ஜெ. (பதி.), **பஞ்சபரமேஷ்டிகளும் ஜைனதத்துவமும்**, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, (இரண்டாம் பதிப்பு), 1993.

46. Dharam Dlwaker, & Diwaker, S.C., **Glimpses of Jainism**, Shri Bharatvarshiya Digambai Jain Mahasabha, Rajastan, (Third Edition), 1983.

47.John Samuel, G., Shu Hikosaka (Eds.), **Encyclopaedia of Tamil Literature** (Vol. I) Institute of Asian Studies, Chennai, 1990.

48. John Samuel,G., Shu Hikosaka (Eds), **Encyclopaedia of Tamil Literature** (Vol. II) Institute of Asian Studies, Chennai, 1992.

49. Subramaniam, A.V., **Literary Genres in Tamil**, Institute of Asian Studies, Chennai, 1993.

50.Vaiyapuri Pillai, S., **History of Tamil Language and Literature,** New century Books house private L.T.D, Chennai, (2nd Edition), 1988.

51. Zvelabil, Kamil V., Brill, E.J. **Lexicon of Tamil Literature,** Leiden, 1995.


* * * * *

## இணைப்பு - 2

## செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| | | | |
|---|---|---|---|
| அகன்றலை விசும்பு | 110 | உம்பர் நாடடைவர் | 20 |
| அஞ்சன நெடுங்கயல் | 93 | உரந்திகழும் | 62 |
| அடல்விடங் கொண் | 18 | உரிமையால் | 12 |
| அணையோ மினி | 72 | உரையோம் பயன் | 74 |
| அம்மானை முடிவில்லா | 28 | உறவுலகை | 35 |
| அமரநா டாளும் | 76 | ஊசற்குழை | 15 |
| அரணங் கொடிய | 37 | என்மொழியின் | 3 |
| அருவினை விடும் | 91 | ஓடுஞ்சகட | 45 |
| அறமா முயிர்கொலை | 86 | ஓதநெடும்புவி | 27 |
| அறிவரிய குணத்தரு | 42 | ஓதாதுலகில் | 79 |
| அறிவன் காதல் | 102 | ஓரேழுபங்கவுரை | 82 |
| அனக னமலன் | 109 | கண்மூன்றுதோன்றி | 38 |
| ஆதினாள் புணர் | 44 | கலவமயில் | 14 |
| ஆதியே யாதியின்றி | 26 | காணுங்கண் | 104 |
| ஆவாருனக்கு | 22 | காதுசிலை | 73 |
| ஆறுரைத்தான் | 4 | காலனென்றுடல் | 19 |
| ஆனவாறாக | 9 | குறுகுமுறை | 10 |
| இகழ்வார்களை | 69 | கொண்டல்வண்ண | 91 |
| இசைபெருக | 48 | கோமான்குளிர் | 66 |
| இடுகிடைதளர | 97 | கோறன்மாற்றி | 39 |
| இணைவளரிள | 55 | சிதைக்குங்கதி | 23 |
| இயல்கொண்ட | 6 | சூதும்போதார் | 78 |
| இயல்பினான் | 92 | செல்வரென்று | 90 |
| இருந்தாய்வேறே | 29 | சோகமேதரும் | 40 |
| இலைவயங்கு | 47 | தந்ததுலகில் | 8 |
| இறந்துதாம் | 16 | தருமத்திகிரி | 57 |

| | |
|---|---|
| தனஞ்சுமந்து | 108 |
| தெரிந்தற மழை | 105 |
| தேர்வதொன்று | 17 |
| தேறினார்தொழு | 33 |
| தொடர்படுசடை | 89 |
| நண்போ டன்பு | 63 |
| நாதனக்கமிழ் | 41 |
| நாம்பரவும் | 51 |
| நாயக னிவனென | 13 |
| நிகரின் முனிவர் | 106 |
| நில்லாத செல்வத்து | 83 |
| நின்றனநின்ற | 33 |
| நூன்மொழியு | 77 |
| நெஞ்சத்தருளுடை | 52 |
| பகரலாங்குணக்கடல் | 32 |
| பண்டயன்றலை | 100 |
| பதினறுவர் | 1 |
| பல்லுருவ | 96 |
| பலவாம் பருவமெல்லாம் | 111 |
| பற்றற்றவர்கள் | 98 |
| பாடுவ துன்னடி | 46 |
| பாரேழுடையாயை | 81 |
| பிரமனே காமனை | 80 |
| பிழைபிறங்க | 58 |
| புத்தேள் உலகை | 56 |
| புயங்களாயிரம் | 36 |
| புரந்தரரும் | 24 |
| புலவர் மொழிந்த | 64 |
| புவன நாதரென்று | 43 |
| பூ நான்கும் | 2 |
| பெருந்தகை நின் | 5 |
| பெறுவ தெண்டிசை | 94 |
| பேசி லகண்ட | 30 |
| பேணுந் தகைய | 101 |
| பொங்கு நாவல | 103 |
| பொறிவரிய | 71 |
| போதின் மிசை | 50 |
| போவார் போநெறி | 65 |
| போற்றுமிது | 85 |
| மண்ணார் கதிர் | 11 |
| மயிலாபுரி நின்ற | 75 |
| மலர்தலை | 70 |
| மறங்கொ ணேமி | 25 |
| மனைக்குவிளக்க | 61 |
| மாயஞ் செய்யும் | 49 |
| மின்னிடை மடவார் | 88 |
| முன்னைப் பிறப்பு | 67 |
| மைச்சந்த மாமுகில் | 53 |
| மொழிவழி வாரா | 99 |
| யாரே காலம் | 31 |
| வணங்கப் படுந் | 107 |
| வழங்கும்பதி | 7 |
| வாகன மாகம் | 21 |
| விட்டகல்வதே | 88 |
| விடுவது வெவ்வினை | 60 |
| விரையார் மலர்மிசை | 68 |
| விலங்காய்ப் பிறந்து | 81 |
| வீசுடல மெறிதிரை | 54 |
| வேண்டுதல் | 59 |

## இணைப்பு - 3

## சொல்லடைவு

### சமயச் சொற்கள்

(எண் - பாடல் எண்)


அகமிந்திரலோகம் 1, 7, 69

அகுருலகு நாம கருமம் 77

அசக்சு தர்சனா வரணீயம் 2, 77

அசக்ஞி பஞ்சேந்திரியம் 45

அசஞ்சலன் 35

அசம்பிராப்த ஸ்ரீபாடிக சம்ஹனன நாம கருமம் 77

அசரணானுப்ரேட்சை 77

அசாதாவேதனீயம் 77

அசிதர் 1

அசுசித்வானுப் ரேட்சை 77

அசுபநாம கருமம் 77

அஞ்ஞான பரிசகசயம் 77

அஞ்ஞானாஸ்ரவம் 77

அணுவிரதம் 77

அதப்பிரவிருத்திகரணம் 77

அதர்சன பரிசகசயம் 77

அதிதி சம்விபாகம் 77

அதர்மாஸ்திகாயம் 4

அந்தரங்கபரிக்கிரகம் 69

அந்தராய கருமம் 77

அந்தராயம் 77

அந்நியத்வானுப்ரேப்சை 77

அநந்தர் 1

அநந்த ஞானம் 24

அநந்த வீர்யம் 24

அநாதேய நாம கருமம் 77

அநித்யானுப்ரேட்சை 77

அநிவிருத்திகரணம் 77

அநேகாந்த வாதம் 2

அப்பிரசஸ்த விஹாயோக கதி நாம கருமம் 77

அப்ரத்யாக்யான குரோதம் 2, 77

அப்ரத்யாக்யானம் 77

அப்ரத்யக்யான மாயம் 2, 77

அப்ரத்யாக்யான மானம் 2, 77

அப்ரத்யாக்யான லோபம் 2, 77

அபர்யாப்திநாம கருமம் 77

அபரிமிதம் 35

அபிநந்தர் 1

அபூர்வக்கரணம் 77

அயசஸ்கீர்த்திநாம கருமம் 77

அர்த்த நாராச சம்ஹனன நாம கருமம் 77

அரதி 2, 69, 77

அரதி பரிசகசயம் 77

அருகதேவன் 87, 88

அருக பரமன் 21,72, 77, 84, 85, 90, 97, 101, 106, 110

அருகபரமேட்டி 1, 3, 10, 15, 16, 18, 35, 41, 51

அருகமொழி 103

அருகர் 14, 19, 48, 50, 54, 57, 62, 76, 89, 101

அருகன் 11, 15, 27, 32, 33, 38, 39, 40, 42, 44, 59, 60, 61, 63, 65, 66, 71, 73, 77, 78, 79, 82, 88, 92, 94, 98, 100, 104, 105, 106, 108, 110.

அலாபபரிசகசயம் 77
அவசர்ப்பிணி 1, 4
அவதிகாஸ்ரவம் 77
அவதி ஞானம் 2
அவதிஞானா வரணீயம் 2, 77
அவதி தர்சனா வரணீயம் 2, 77
அவஸர்ப்பிணி 110
அனசனம் 77
அனந்தசுகம் 2, 21, 24, 39, 85, 104, 107
அனந்த சதுட்டயம் 85
அனந்த ஞானம் 2, 28, 30, 85, 107
அனந்த தரிசனம் 107
அனந்த நன்மை 24
அனந்தல் 108
அனந்தவாரம் 77
அனந்த வீரியம் 85, 93, 107
அனந்தாநுபந்தி 77
அனந்தானுபந்தி குரோதம் 2, 77
அனந்தானுபந்தி மாயம் 2, 77
அனந்தானுபந்தி மானம் 2, 77
அனந்தானுபந்தி லோபம் 2, 77
அனர்ந்த தண்டவிரதம் 77
அனுபாகபந்தசத்தி 77
அஸ்திர நாம கருமம் 77
ஆக்ரோச பரிசக சயம் 77
ஆகாசாஸ்திகாயம் 4
ஆதாப நாம கருமம் 77
ஆதானநிட்சேபணா ஸமிதி 77
ஆதிநாதர் 43
ஆதேய நாம கருமம் 77
ஆம்ல நாம கருமம் 77
ஆலோகம் 2
ஆலோக ஆகாயம் 2
ஆவமோதரியம் 77
ஆனுபூர்வி நாமகருமம் 77
ஆஹாரக சங்காத நாம கருமம் 77
ஆஹாரக சரீர அங்கோபாங்க நாம கருமம் 77
ஆஹாரக சரீர நாம கருமம் 77
ஆஹாரக பந்தன நாம கருமம் 77
ஆஹீநாஸ்ரவம் 77
ஆஸ்ரவானுப்ரேட்சை 77
ஆஸ்வரம் 77
இகப்பிரயோசனம் 77
இலகு நாம கருமம் 77
இன்ப காரணன் 21
ஈர்யா பாதாஸ்ரவம் 77
ஈர்யாஸமிதி 77
ஈரறிவுயிர் 63
உச்சந்தமலை 53
உச்சைர் கோத்திரகருமம் 77
உத்சர்க்கஸமிதி 77
உத்சர்ப்பிணி 1, 4, 111
உத்தம ஆர்ஜவம் 77
உத்தம சத்தியம் 77
உத்தம சம்யமம் 77
உத்தம சௌசம் 77
உத்தமத்தவம் 77
உத்தமத்தியாகம் 77
உத்தமத்துறவு 77
உத்தம பிரமசரியம் 77
உத்தமமார்த்தவம் 77
உத்தம க்ஷமை 77
உத்யோத நாம கருமம் 77
உத்ஸ்வாச நாம கருமம் 77
உபகாத நாம கருமம் 77

உபபோகாந்தராயம் 2, 77
உஷ்ண நாம கருமம் 77
உஷ்ண பரிசகசயம் 77
ஊர்ச்சயந்தகிரி 53
ஏகத்வானுப்ரேட்சை 77
ஏகாந்தவாதம் 54, 102
ஏகாந்தவாதி 8
ஏகேந்திரியம் 2
ஏகேந்திரிய ஜாதி நாம கருமம் 77
ஏஷணாஸமிதி 77
ஔதாரிக சங்காத நாம கருமம் 77
ஔதாரிக சரீர அங்கோ பாங்க நாம கருமம் 77
ஔதாரிக சரீர நாம கருமம் 77
ஔதாரிக பந்தன நாம கருமம் 77
க்ருஹாங்கண புமி 81
கடுக நாம கருமம் 77
கடையிலா அறிவு 58
கடையேலா இன்பம் 58
கடையிலாக் காட்சி 58
கடையிலா வீரியம் 58
கதிநாம கருமம் 77
கந்த நாம கருமம் 77
கபடமார்க்கம் 15
கர்கச நாம கருமம் 77
கர்ப்பாவதரண கல்யாணம் 50
கர்மபூமி 77
கரணத்திரயம் 77
கரணானு யோகம் 4, 76, 79, 91
கல்பலோகம் 7, 55
கல்யாணதரம் 2
கற்பக விருட்சபூமி 81
கற்பேந்திரர் 3
கனகப் பிரபை 2
கஷாய நாம கருமம் 77
கஷாயம் 77, 82
கஷாயாஸ்ரவம் 77
காதிகா பூமி 81
காயக்லேசம் 77
காயகுப்தி 77
காயவந்தக்கரணம் 59, 77
கார்மண சங்காத நாம கருமம் 77
கார்மண சரீர நாம கருமம் 77
கார்மண பந்தனநாம கருமம் 77
கால பரிவர்த்தனை 77
கிருஷ்ணநாம கருமம் 77
கீலக சம்ஹனன நாம கருமம் 77
குணவிரதம் 77
குந்துநாதர் 1
குப்யம் 69
குப்ஜக சம்ஸ்தான நாம கருமம் 77
குருநாம கருமம் 77
கேவலக்கிழத்தி 110
கேவலஞானம் 38
கேவல ஞானா வரணீயம் 2, 77
கேவல தர்சனாவரணீயம் 2
கேவலம் 40
கேவலோற்பத்திக் கல்யாணம் 50
கோத்திரகருமம் 77
சக்ஞி பஞ்சேந்திரியம் 45
சகல சம்மியத்துவம் 107
சகல சீவன் 76
சகலபாஜனம் 2
சங்காத நாம கருமம் 77
சஞ்சுவலன குரோதம் 21, 77
சஞ்சுவலனம் 77

சஞ்சுவலன மாயம் 2, 77
சஞ்சுவலன மானம் 2
சஞ்சுவலன லோபம் 2, 77
சத்கார புரஸ்கார பரிசகசயம் 77
சதுட்டயம் 24
சதுரிந்திரியம் 2, 45
சதுரிந்திரிய ஜாதி நாம கருமம் 77
சதுஷ்பாதம் 69
சப்தபங்க நயம் 12
சத்த பங்க நியாயம் 12
சந்திரபிரபர் 1
சந்திராதித்யம் 2
சம்சார சீவன் 2
சம்சாரானுப் ரேட்சை 77
சம்பவர் 1
சம்பிரதம் 103
சம்புதீபம் 1, 103
சம்மியத் திருட்டிகள் 90
சம்யக்த்வ பிரக்ருதி 2, 77
சம்யக்துவம் (நற்காட்சி) 2, 82
சம்யக் மித்யாத்துவம் 2, 77
சம்யமம் 82
சம்வரானுப்ரேட்சை 77
சம்ஸ்தான நாம கருமம் 77
சம்ஹனன நாம கருமம் 77
சமசதுரஸ்ய சம்ஸ்தான நாம கருமம் 77
சமயக்திருட்டி 77
சமவசரணம் 14, 56, 71, 76, 101
சமுசாரம் 84
சய்யா பரிசகசயம் 77
சர்யா பரிசகசயம் 77
சரணாரவிந்தம் 77
சரணானுயோகம் 4, 76, 79, 91
சரீர நாம கருமம் 77
சாதனவத்துக்கள் 77
சாதாரண நாம கருமம் 77
சாதா வேதனீயம் 77
சாமாயிக விரதம் 77
சாரித்திர மோகனீய கருமம் 77
சிக்ஷா விரதம் 77
சித்தார்த்த விருக்ஷம் 55
சிரேயாஞ்சர் 1
சின்னூற்றிண்ணர் 86
சினகரம் 101
சினகிரி 75
சினசமயம் 48, 73, 101
சினதருமம் 10, 77, 103
சினாலயம் 101
சினேந்திரன் 69
சீதநாம கருமம் 77
சீத பரிசகசயம் 77
சீதளர் 1
சுக்கிலத்தியானம் 35
சுக்கிலநாம கருமம் 77
சுகதர் 74
சுகதன் 2
சுகந்த நாம கருமம் 77
சுகுப்ஸா 2
சுப்பரிணாமம் 77
சுபக நாம கருமம் 77
சுப நாம கருமம் 77
சுபார்சுவ நாதர் 1
சுமதிநாதர் 1
சுருதஞானாவரணீயம் 2, 77
சுவாதி சம்ஸ்தான நாம கருமம் 77
சுவாமித்துவம் 55

சுவைபரித்தியாகம் 77

சுஸ்வர நாம கருமம் 77

சூட்சும சரீர நாம கருமம் 77

சூஷ்மேந்திரியம் 46

சைத்தியவிருக்ஷம் 55

சோதிர்லோகம் 55

சோதிஷ்கேந்திரர் 3

சௌதர்மேந்திராதிதேவர் 71

ஞானாவரணீயம் 77

ஞானாஸ்ரவம் 77

த்ரச நாம கருமம் 77

த்ருஷ்ணஸ்பரிச பரிசகசயம் 77

த்வஜபூமி 81

த்வீந்திரியம் 45

த்வீந்திரிய ஜாதிநாம கருமம் 77

தசதருமம் 77

தம்சமசக பரிசகசயம் 77

தர்சன மோகனீய கருமம் 77

தர்சனாவரணீயம் 77

தர்மஸ்வாக்யா தத்வானுப்ரேட்சை 77

தர்மாஸ்தி காயம் 4

தான்யம் 69

தானாந்தராயம் 2, 77

திக்த நாம கருமம் 77

திக்விரதம் 77

திர்யகதி ஆனுபூர்விநாம கருமம் 77

திர்யகதிநாம கருமம் 77

திரவ்ய பரிவர்த்தனை 77

திரவ்யானுயோகம் 4, 76, 79, 91

திரவ்யாஸ்ரவம் 77

திரிகுப்தி 77

திரீந்திரியம் 2, 45

திரீந்திரிய ஜாதிநாம கருமம் 77

திரியக்காயுள் கருமம் 77

திரியகதி 4

திரிலோகம் 37

தீட்சை கல்யாணம் 50

தீர்த்தங்கர நாம கருமம் 77

துர்கந்த நாம கருமம் 77

துர்பக நாம கருமம் 77

துவாதசானுப் பிரேக்ஷை 77

துஸ்வர நாம கருமம் 77

தேச விரதம் 77

தேவ ஆயுள் கருமம் 77

தேவகதி ஆனுபூர்விநாம கருமம் 77

தேவகதி நாம கருமம் 77

தைஜச சங்காத நாம கருமம் 77

தைஜசசரீர நாம கருமம் 77

தைஜச பந்தன நாம கருமம் 77

நபும்ஸக வேதம் 2, 69, 77

நரககதி 4, 84

நரககதி ஆனுபூர்வி நாம கருமம் 77

நரககதி நாம கருமம் 77

நரகலோகம் 55

நரகாயுள் கருமம் 77

நரலோகம் 7

நாக்ன்யா பரிசகசயம் 77

நாராச சம்ஹனனை நாம கருமம் 77

நிக்ரோத பரிமண்டல சம்ஸ்தான நாமகருமம் 77

நிர்மாண நாம கருமம் 77

நிர்ஜரானுப் ரேட்சை 77

நிராகர்மம் 107

நிராகோத்திரம் 107

நிராயுஷியம் 107

நிஷத்யா பரிசகசயம் 77

நீசைர் கோத்திர கருமம் 77
நீலநாம கருமம் 77
ப்பாவ பரிவர்த்தகை 77
ப்ரக்ஞா பரிசக சயம் 77
ப்ரக்ருதி 14
ப்ராசாத சைத்யபூமி 81
பச்சையிருவர் 1
பஞ்ச பரமேட்டி 42, 89, 95
பஞ்சபரிவர்த்தனை 77
பஞ்சமந்திரம் 19, 92, 95
பஞ்சவிடயங்கள் 84
பஞ்சேந்திரிய ஜனதிநாம கருமம் 77
பத்மபிரபர் 1
பந்தன நாம கருமம் 77
பர்யாப்தி நாம கருமம் 77
பரகாத நாம கருமம் 77
பரமாகமம் 76
பரமாணு 35, 53, 81
பரமேட்டி 105
பரிநிர்வான கல்யாணம் 50
பரிசகசயம் 77
பரிசகம் 77
பவணர் 106, 110
பவணருலகம் 55
பவணலோகம் 7, 55, 101
பவபரிவர்த்தனை 77
பவராஸ்ரவம் 77
பவனேந்திரர் 3
பாகியாபரிக்கிரகம் 69
பாதரசரீர நாம கருமம் 77
பார்சுவநாதர் 1
பாவாஸ்ரவம் 77
பாஷா ஸமிதி 77
பாஹ்யதபம்(புறத்தவம்) 77
பாஹ்யேந்திரியம் 45
பிபாசா பரிசகசயம் 77
பிரசலா பிரசலை 2, 77
பிரசலை 77
பிரசஸ்த விஹாயோககதி நாம கருமம் 77
பிரத்யாக்யான குரோதம் 2, 77
பிரத்யாக்யானம் 77
பிரத்யாக்யான மாயம் 2, 77
பிரத்யாக்யான மானம் 2, 77
பிரத்யாக்யான லோபம் 2, 77
பிரத்யேக நாம கருமம் 77
பிரதமானு யோகம் 4, 9, 76, 79
பிரபா மூர்த்தி 2
பிரபாவலயம் 2, 26, 43, 110
பிராணி சம்யமம் 77
பிரீதிதரம் 2
பிரேட்சை 77
புண்ணியாஸ்ரவம்
புத்கலரஸ்திகாயம் 4
புத்கலம் 2, 79
பும்ஸக வேதம் 2, 77
புருஷ வேதம் 69
புரோஷதோபவாசம் 77
புவனத்திரயம் 57
புவனநாதர் 43
புஷ்பதந்தர் 1
புஷ்பவனம் 55
போகாந்தராயம் 2, 77
போகோப போக பரிமாணவிரதம் 77
போதித்துர்லபானுப்ரேட்சை 77
மகரவாருதிவலயம் 32
மத்திம லோகம் 1

மதங்கஸ்திரீ 105
மதிஞானாவரணீயம் 2, 77
மதுர நாம கருமம் 77
மநுஷ்ய கதி 4
மனுஷ்யகதி ஆனுபூர்விநாம கருமம் 77
மனுஷ்யகதி நாம கருமம் 77
மல்விநாதர் 1
மலபரிசகசயம் 77
மலர்மகள் காந்தன் 33
மனப்பர்யய ஞானாவரணீயம் 77
மனித ஆயுள் கருமம் 77
மனோகுப்தி 77
மனோவந்தக் கரணம் 59, 77
மாஸை (மனது) துக்கம் 77
மானஸ்தம்பம் 55, 110
மானுஷ்ய தேகம் 77
மித்யாத்வம் 4, 69, 77
மித்தியாதிருஷ்டி 13, 16, 28, 29, 73, 79, 86
மித்தியாதெய்வம் 25, 80, 87, 89, 100, 107, 108
மித்தியா மார்க்கம் 9, 60, 61
மிருது நாம கருமம் 77
முக்குடை 35, 38, 92, 96, 106
முகிலிருவர் 1
முச்சோதி 10, 28
முடிந்தபவம் 77
மும்மதில் 14
முனிசுவிரதர் 1
மோகனீய கருமம் 77
மோகனீயம் 40, 77
மோட்சசீவன் 2
யசஸ்கீர்த்தி நாம கருமம் 77
யாசநாபரிசககசயம் 77
ரக்த நாம கருமம் 77
ரச நாம கருமம் 77
ருஷநாம கருமம் 77
ரோக பரிசகசயம் 77
லாப்பாந்தராயம் 77
லோக ஆகாயம் 2
லோகானுப்ரேட்சை 77
வ்யுத்ஸர்க்கம் 77
வதபரிசகசயம் 77
வர்த்தமானர் 1
வர்ண நாம கருமம் 77
வஜ்ர நாராச சம்ஹனன நாம கருமம் 77
வஜ்ர விருஷப நாராச சம்ஹனன நாம கருமம் 77
வாக்கந்தக்கரணம் 59, 77
வாக்குசோதி 10
வாக்குப்தி 77
வாசு பூச்சியர் 1
வாமன சம்ஸ்தானநாம கருமம் 77
விகுர்வணை 3, 51
விநயம் 77
விபாகதுக்கம் 77
வியந்தரர் 101, 106, 110
வியந்தரேந்திரர் 3
வியவகார காலம் 2
வியவகாரநயம் 8, 34
விருத்தி பரிசங்யானம் 77
விருஷபர் 1
விவிக்தசய்யா 77
விஹாயோககதி நாம கருமம் 77
விஷயசம்யமம் 77
வீர்யாந்தராயம் 77
வைக்ரீயிக சங்காத நாம கருமம் 77

வைக்ரீயிக சரீர அங்கோ பாங்க நாம கருமம் 77
வைத்ரீயிகசரீர நாம கருமம் 77
வைக்ரீயிக பந்தன நாம கருமம் 77
வையாவ்ருத்தியம் 77
க்ஷுத்பரிசகசயம் 7
க்ஷேத்திரம் 69
க்ஷேத்ர பரிவர்த்தனை 77
ஜலகாதிகை 55
ஜன்மாபிசேகக்கல்யாணம் 50
ஜாதிநாம கருமம் 77
ஜினாலயம் 71
ஜீவகாருண்யம் 2, 48, 52,54
ஜீவன் 2, 39
ஜீவாஸ்திகாயம் 4
ஜுகுப்சை 69, 77
ஜெயகோடணை 110
ஜோதிர்லோகம் 7
ஸ்தாவரநாம கருமம் 77
ஸ்தியான கிருந்தி 2, 77
ஸ்திர நாம கருமம் 77
ஸ்திரீபரிசகசயம் 77
ஸ்திரீ வேதம் 2, 69, 77
ஸ்தூபஹார்மாவலி 55
ஸ்பரிச நாம கருமம் 77
ஸ்பரிசம் 2
ஸ்நிக்த்த நாம கருமம் 77
ஸ்வாத்யாயம் 77
ஸத்பூதவியவகாரநயம் 8
ஸமிதி 77
ஸர்வக்ஞன் 11
ஹரித் நாம கருமம் 77
ஹாசியம் 2
ஹாஸ்யம் 77
ஹாஸ்யை 69
ஹீனாஸ்ரவம் 77
ஹுண்டக சம்ஸ்தான நாம கருமம் 77


## பொதுச்சொற்கள்


அக்கிரமம் 35
அக்கினி 28, 35, 100
அகண்டம் 30
அகதி 55
அகம் 71
அகழி 110
அகிலசகம் 35
அகிலம் 11, 13, 16, 26, 90
அகோரன் 50
அங்கம் 38
அச்சம் 69
அச்சுதம் 16
அச்சுதானந்தன் 33
அசரீரி 42
அசனி 35
அகம்பு 2
அசேதனம் 77
அசோகம் 29
அசோகன் 55, 110
அசோகி 86
அக்கிரமம் 35
அக்கினி 28, 35, 100

அகண்டம் 30
அகதி 55
அகம் 71
அகழி 110
அகிலசகம் 35
அகிலம் 11, 13, 16, 26, 90
அகோரன் 50
அங்கம் 38
அச்சம் 69
அச்சுதம் 16
அச்சுதானந்தன் 33
அசரீரி 42
அசனி 35
அகம்பு 2
அசேதனம் 77
அசோகம் 29
அசோகன் 55, 110
அசாகி 86
அசோகு 12, 23, 45
அஞ்சனம் 93
அஞ்ஞானம் 77
அடக்கம் 77
அடர் 110
அடல் 18, 35, 70
அடி 18, 23, 37, 49, 59, 64, 94, 108
அடிமை 22, 81
அடியார் 72
அடைக்கலம் 19, 77, 108
அணை 49, 106, 110
அத்தன் 56
அத்தி காயம் 4
அதர்மம் 2, 79
அதரம் 64
அதிசயம் 104
அந்தம் 8
அந்திய காலம் 19
அந்து 45
அநித்தியம் 8, 34, 83
அம்பு 37
அம்போதரங்கம் 2
அம்மானை 27
அம்மை 1
அமர் 97
அமரர் 17, 78, 87, 98, 106
அமலன் 30, 109
அமராபதி 75
அமிர்தம் 47
அமிர்து 18
அமிழ்து 41
அமுதம் 10
அயன் 92
அயில் 75, 97
அரங்கம் 85
அரசர் 17, 35, 106
அரசு 69
அரண் 12, 17, 93
அரணம் 36, 37, 77
அரம்பையர் 93
அரவு 54
அரன் 92
அராகம் 2
அரி 18, 106, 110
அரியணை 29
அரியாசனம் 2
அருட்கடல் 16
அருவருப்பு 69

அருவி 10, 110
அருள் 39, 54, 57, 63, 77, 94
அருளாழி 32
அல்லல் 90
அலகை 70
அலர் 35, 109
அலி 69
அலை 28, 54, 67, 74, 106
அலைவு 70
அலோகம் 103
அவனி 43
அவிழ்தம் 71
அழகு 35, 53, 58, 70, 77, 96
அழியாவியல்பு 58
அளகம் 14
அளவு 61
அளி 39, 110
அளறு 35
அறநெறி 65
அறம் 16, 18, 61, 74, 76, 94, 102, 103
அறவாழி 16
அறன் 35
அறிவன் 102
அறிவு 48, 82
அறுகால் 27
அறுசீர்க்கழிநெடில் விருத்தம் 21, 24, 29, 30, 37, 38, 42, 47, 49, 51, 57, 79, 82, 84, 90, 98, 100
அறுபதம் 94
அறை 110
அன்னியர் 68, 76
அனகம் 108
அனங்கன் 61
அனலம் 35
அனாதி 19
ஆக்கினை 76, 90, 94
ஆகாசம் 2
ஆகாயம் 21, 28, 32, 38, 70, 79, 100, 110
ஆகாயமார்க்கம் 9
ஆகாய வீதி 18, 16
ஆசனம் 49, 106, 110
ஆசாரியர் 19, 89, 95
ஆசிரியத்துறை 59
ஆசிரிய விருத்தம் 27, 55, 56, 61, 91, 92, 101, 102, 103
ஆசிரியன் 42
ஆசு 30
ஆசை 40, 48, 54, 58, 72, 102
ஆடகப்போது 43
ஆடகம் 72
ஆடல் 110
ஆடை 58
ஆணை 12, 76
ஆதி 26, 110
ஆபரணம் 50, 67, 97, 110
ஆயிரம் 36
ஆயுதம் 14, 35, 43, 52, 80, 108
ஆயுள் 77
ஆரணம் 51
ஆலமரம் 110
ஆவரணம் 37
ஆவி 54
ஆழி 36, 70, 77, 78
ஆறு 77, 109
ஆன்மா 38
ஆனந்தம் 32
ஆனனம் 93
இகல் 38, 43, 61, 106

இகழ் 54
இச்சை 33, 102
இசை 48, 110
இடம் 69, 77
இடர் 18, 34, 36, 40, 69, 89
இடி 35, 52, 54
இடை 55, 87, 97, 108
இணர் 106
இணை 48
இதயக்கமலம் 50
இதயம் 97
இதழ் 54
இந்திரர் 3, 27, 35, 54, 75, 76
இந்திரநீலமணி 110
இந்திரன் 27, 92
இந்திரியம் 82
இம்மை 1
இமையவர் 47
இயமானன் 100
இயல் 35
இரசகுளிகை 56
இரணியகர்ப்பம் 2, 54, 60
இரத்தம் 97
இரத்தினத்திரயம் 90
இரத்தினம் 54, 56, 110
இரதம் 97
இரவு 68, 70
இராகம் 27
இருசுடர் 28
இருட்டு 96
இரும்பு 56
இருள் 54, 58
இல்லாள் 68
இலக்குமி 22, 61, 110
இலவம் 64
இலை 47
இவுளி 97
இழை 110
இளமை 77
இளைப்பு 45
இறப்பு 77
இறை 107
இறைச்சி 14
இன்பம் 35, 40, 76
ஈசானன் 50
ஈசுவரன் 16
உச்சி 32, 54
உடம்பு 77
உடல் 19, 38, 77, 82
உடலம் 54
உண்மை 69, 77
உணர்வு 102
உத்தமர் 95
உத்தரம் 76
உதடு 64
உதயதரம் 2
உதாரத்துவம் 70
உதிர்ச்சி 77
உதீசித் தேவர் 46
உபதேசம் 103, 110
உபதேசமொழி 77
உபாத்தியாயர் 19, 89, 95
உபாயம் 51, 77
உம்பர் 2, 53
உம்பர் நாடு 20
உம்பர்நாதர் 19
உயர்ச்சி 76
உயிர் 19, 35, 39, 54, 77, 79, 86, 91
உரகர் 110

உரிமை 12
உருவம் 96
உருள் 45
உலகம் 1, 31, 35, 40, 43, 52, 57, 70, 102, 103
உலகு 40
உலா 94
உலோபம் 69
உவரி 97
உவாத்தி 42
உள்ளம் 70
உற்பத்தி 42
உறுதி 77
உறுதிமொழி 77
ஊசல் 14, 15
ஊசி 103
ஊழி 48, 77
எட்டி 18
எண் 38
எண்குணம் 1, 58, 107
எண்சீர்க் கழிநெடில் விருத்தம் 14, 16, 18, 28, 32, 36, 40, 43, 50, 54, 58, 67, 71, 73, 75, 80
எண்ணிக்கை 35
எண்வகைக்குணம் 21
எம்மான் 28
எமன் 64
எயில் 5, 12, 17, 71, 110
எருமை 69
எழில் 58, 70, 96
எழுசீர்க் கழிநெடில் விருத்தம் 20, 41, 65, 68, 87, 104
எறி 28
எறும்பு 45
ஏகன் 21
ஏடு 54
ஏதம் 27, 78
ஏழுஉலகம் 55
ஏழையர் 64
ஏறு 81
ஐந்தெழுத்து 41
ஐம்பொறி 18, 37
ஐயம் 61
ஐயறிவுயிர் 63
ஐயன் 78
ஒப்பனை 11
ஒளி 52, 100, 106, 110
ஒளியுலகு 55
ஒற்கம் 35
ஒன்பது 77
ஓங்காரம் 42
ஓதம் 27
ஓதி 26
ஓலம் 19
ஓரறிவுயிர் 63
கங்கணம் 47
கச்சி 97
கஞ்சமலர் 93
கட்கம் 35
கட்டளை 76
கட்டளைக் கலித்துறை 23, 46,60, 107
கட்டளைக் கலிப்பா 39
கட்டில் 69
கட்டு 12
கடக்களிறு 2
கடகம் 47
கடம் 2
கடல் 11, 18, 27, 32, 41, 47, 54, 55
கடவுட்கணம் 57

கடவுள் 36,91, 107, 110
குடி 18, 97
குடிமலர் 17
குடம்பற்று 69
கடைக்கண் 108
கண் 36, 38, 43, 64, 75, 97, 104, 105
கணக்கு 38
கணம் 103, 107, 110
கணாதரம் 2, 54
கணை 2, 37, 40, 72
கத்தி 77
கதம் 2
கதி 1, 4, 21, 40, 49, 55, 65, 82
கதிர் 11
கதிர்மணி 11
கதிரொளி 110
கந்தகுடி 110
கந்தம் 2
கபடம் 92
கபாலம் 92
கபிலம் 2, 54, 60
கமடன் 35, 52
கமலம் 7, 18, 57, 109
கமலவாகனன் 20
கயம் 36
கயல் 2, 14, 35, 93
கயிலாயம் 75
கயிலை 110
கயிறு 77
கரணம் 77
கரதலம் 2
கரம் 80
கரி (சாட்சி) 11
கருங்குவளை 72
கருணை 35, 63, 84, 97, 102, 105
கருத்தன் 80, 110
கருப்பம் 80
கரும்பு 66, 70, 110
கரும்புவில் 47
கருமக்கடல் 81
கருமம் 1,57, 77, 109
கருமை 105
கருவி 110
கல் 110
கல்யாணம் 62
கல்வி 90
கலசம் 35
கலவம் 14
கலவி 2
கலாம் 35
கலி 90
கலித்தாழிசை 45, 96
கலிநிலைத்துறை 26
கலியாணம் 50
கலிவிருத்தம் 15, 25, 33, 72, 88, 89
கலைமகள் காந்தர் 7
கலைமதி 35
கவரி 2
கவனம் 43
கவி 58
கள் 11, 48
களங்கம் 35, 106
களபம் 35
களவு 105
களி 92
களிவண்டு 31

கற்பகச்சோலை 78
கற்பத்து உச்சி 1
கற்பம் 69, 99
கற்பு 97
கற்றை 110
கறை 2, 6
கறையான் 45
கன்னி 2, 35
கனசாலை 110
கனல் 52
கனி 41
கா 110
காசு 110
காதம் 27
காதல் 72, 102
காந்தி 106, 110
காப்பியக் கலித்துறை 13, 34, 47, 53, 62, 63, 81, 83
காமம் 37
காமன் 18, 38, 40, 80, 81
காமுகர் 97
காயசித்தி 16
காயசோதி 10
காயம் 49, 82
கார் 17, 31, 69, 88
காரணர் 21
கால் 28, 100
காலம் 1, 2, 18, 31, 79
காலவிகற்பம் 1
காலன் 19, 39, 52, 64, 110
காவல் 36, 43, 77
காற்று 58
கானம் 27
கிடங்கி 110
கிரணம் 10
கிரமம் 10, 29
கிரியை 35
கிருபை 35, 39, 52, 54, 77, 83, 84, 97, 102
கிழங்கு 7
கிழத்தி 102
கிழவர் 110
கிழவன் 17
கிளை 55
கிரீடம் 54, 62, 98, 110
கீர்த்தி 50, 110
கீழுதடு 64
குடம் 69
குடர் 18
குடை 2, 70, 98, 110
குண்டலம் 87, 93
குணக்கடல் 32
குணம் 18, 34, 35, 107
குதிரை 43, 58, 66, 69, 97
குமரி 76
குரம்பை 77
குருநாம கருமம் 77
குரோதம் 42, 69
குலம் 73, 87
குழல் 14
குழாம் 43
குழை 15, 58, 87, 93
குளிகை 56
குற்றம் 15, 44, 48, 58, 73, 77, 106, 107, 110
குறம் 61
குறமகள் 61
குறை 10
குன்று 56
குஜராத் 53

கூகை 8
கூட்டம் 43, 87, 103
கூற்றம் 70
கூற்று 39, 110
கூற்றுவன் 19
கெண்டை 35, 93
கெணாதம் 60
கேண்மை 77
கை 110
கைக்கிளை 66
கைலாய மலை 110
கொடி 17, 35, 75, 110
கொடுமை 71
கொண்டவ் 91
கொத்து 110
கொலை 70, 86, 91, 105
கொற்றம் 35, 92, 97, 98
கோ 38, 47, 110
கோகனகம் 66
கோடாலி 54
கோத்திரம் 58, 77
கோது 44, 50, 79
கோதை 66, 110
கோபம் 40, 108
கோமான் 65, 65
கோயில் 76, 110
கோன் 16
சக்கரம் 27, 35, 41
சக்கராயுதம் 57
சக்கிரவர்த்திகள் 87
சகடம் 23, 45
சங்கிலி 40
சங்கு 45
சங்கை 61
சஞ்சலர் 16
சஞ்ஞி 82
சடை 89
சண்டம் 35
சண்டை 81, 93
சத்தம் 69
சத்தியோசாதன் 50
சத்துரு 32, 61,77, 94
சதுமுகன் 80
சதுரர் 48
சப்தம் 2
சபை 71, 110
சந்தம் 53
சந்த விருத்தம் 97, 105, 106
சந்தனக்குழம்பு 35
சந்திரன் 43, 91, 98, 100, 110
சம்பை 75
சமணத்துறவி 24
சமணம் 61
சமயம் 102
சமயவாதி 103
சமுத்திரம் 18, 32, 41, 47, 53, 55, 60, 74, 77, 78, 97
சயம் 35, 36
சயனம் 78
சர்வகாதி 2, 10, 25
சரண் 27, 108, 110
சரணம் 36, 37, 77
சரம் 108
சரமன் 80
சலம் 21, 53, 88, 97, 108, 190
சலனம் 77
சனனம் 77

சாத்திரம் 79, 85
சாதனம் 77
சாதி 73
சாது 19, 21, 24, 28, 42, 50, 60, 64, 80, 89, 95
சாந்தி நாதர் 1
சாமரம் 110
சாமரை 71
சாரதி 104
சாவு 77
சாறு 39
சிகரம் 69, 77, 110
சிகை 54
சிங்கம் 49, 81, 106, 110
சிங்காசனம் 75
சித்தசேத்திரம் 69
சித்தம் 35
சித்தர் 1, 19, 56, 89, 95, 102
சித்தி 2, 32, 35
சித்திரம் 110
சித்து 16, 56
சித்துவித்தை 56
சிதைவு 22
சிந்தை 32, 38, 43
சிநேகம் 63
சிப்பி 45
சிமிழ் 103
சிமையம் 110
சிரசு 46
சிரம் 25, 54, 80, 108, 111
சிலை 73, 81
சிவகதி 54
சிறுமை 35
சினம் 77, 93, 108
சினேகம் 93
சீயம் 49
சீவன் 1, 19, 35, 44, 48, 67, 77, 79, 84, 91, 96, 100, 102, 110
சுகதுக்கம் 77
சுகம் 35, 40, 48, 104
சுடர் 26, 49, 54, 62, 110
சுத்தம் 35, 77
சுரிதகம் 2
சுருதி 85, 95
சுரும்பு 2, 9, 14, 23, 29, 31, 35, 44, 78, 110
சுவர்க்கம் 4, 29, 38, 57, 84, 86
சுவாமி 1, 71, 78, 91, 107, 110, 111
சுற்றத்தார் 76
சுற்றம் 77
சுறாமீன் 91
சூதம் 77
சூது 78
சூரியசந்திரர் 28
சூரியமண்டம் 110
சூரியர் 43
சூரியன் 8, 26, 54, 58, 100, 110
செங்கோல் 70, 90, 94
செம்பொன் 56
செம்மை 77, 110
செம்மை நிறத்தோரிருவர் 1
செயம் 73
செரு 77, 80
செருக்கு 77
செல்வம் 57, 70, 77, 90, 110
செவிலி 102
சென்னி 25, 110

சேதனம் 77
சேவகம் 75
சைவம் 2, 54, 60
சொக்கட்டான் 78
சொர்க்கம் 35
ட்கிரி 110
ஞாலம் 6, 30
ஞானம் 16, 28, 62, 67, 77, 82, 91, 102
ஞானசூரியன் 8, 49
ஞானி 91
சோகம் 2, 40, 77
சோதி 25, 26, 28, 43, 62, 83, 95, 100, 106
சோதிட உலகம் 55
சோரி 25, 97
சோறு 56
தகடு 110
தசதருமம் 77
தசை 48
தஞ்சம் 52
தட்டு 69
தடம் 103, 105
தடாகம் 9, 36, 54, 110
தத்துவஞானம் 77
தத்துவம் 111
தமர் 72
தமிழ்மாலை 75
தர்மர் 1, 2
தரவு 2
தரளம் 65, 74
தரிசனம் 82
தரித்திரம் 90
தருமகண்டம் 75
தருமசக்கரம் 16, 25, 36, 70, 78, 9, 110
தருமம் 16, 57, 61, 79, 86, 90, 105, 110
தவம் 77, 105
தளிர் 23, 58
தற்புருடன் 50
தலை 46, 110
தலைவன் 91
தனம் 35, 55, 69, 77, 78, 108
தனு 35, 73, 81
தாமம் 71, 110
தாமரை 11, 35, 36, 46, 50, 51, 54, 57, 61, 63, 66, 68, 70, 72, 75, 78, 97, 104, 109, 110
தாவரம் 81
தாழிசை 2
தாள் 106, 110, 111
தானம் 77
திக்கு 48
திங்கள் 98
திகிரி 1, 16, 41, 57
திசை 2, 48
திசைமுகன் 6
திடர் 89
தியானம் 1, 77
திரவியம் 77
திரிகரணம் 59, 77
திரு 10, 35, 57, 61, 90
திருநாமம் 42
திருமலை 75
திருமால் 22, 34, 92
திருவாக்கு 20
திரை 54, 67, 74, 106
திலதம் 12
திவ்வியத்தொனி 34, 99

திவிபாதம் 69
தீ 28
தீங்கு 15
தீபங்குடி 75
தீர்த்தங்கரர் 76
தீர்த்தம் 53
தீவினைக்காடு 54
துக்கம் 77
துகள் 5
துகில் 48, 58
துணர் 5, 35, 110
துணிவு 28
துணை 14, 103
துதி 68
துந்துபி 2, 106
தும்பி 45
துயர் 71, 91, 94
துரங்கம் 58
துருநயம் 2, 54
துவர் 77
துவலை 29, 110
துவஜபூமி 55
துவீந்திரியம் 2
துளக்கம் 77
துறவறம் 109
துறை 74
துன்பம் 20, 40, 41, 61, 69, 71, 77, 89, 110
தூக்கம் 77
தூசி 110
தூஸ்ன 110
தூபி 110
தெப்பம் 41, 54
தெய்வம் 42, 102, 107, 110
தெய்வீகமூர்த்தி 100
தெரியல் 35
தெவ்வர் 25
தெளிவு 77
தென்றல் 58
தேகம் 35, 40, 49, 54, 77
தேசகாதி 2, 10, 25
தேர் 66, 97, 104
தேவகதி 84
தேவர் 47, 53, 56, 76, 78, 81, 84, 98, 99, 109, 110
தேவாதிபன் 22
தேவேந்திரர் 19, 36
தேன் 2, 29, 39, 45, 48, 71, 110
தேன்துளி 94
தொங்கல் 64
தொடர் 40
தொடி 110
தொடை 35
தொண்டர் 91, 103
தொல்விதி 20
தொனி 78
தோகை 89
தோடு 2, 27
தோரணம் 110
தோழன் 73
தோள் 35
நகை 48, 55, 58
நஞ்சு 68
நடுநிலைதீபம் 1
நண்பர் 63
நந்து 45

நமிநாதர் 1
நரகு 86, 91
நரம்பு 94
நரேந்திரர் 3
நரை திரை 16
நல்லறிவு 56
நல்லார் 66
நல்லொழுக்கம் 56, 77
நவை 48
நளினப் போது 27
நளினம் 54, 93
நற்காட்சி 56, 77
நறவு 23, 31, 35, 48
நன்மை 24
நன்னெறி 34, 69
நாகர் 76
நாகலோகம் 7, 55, 106
நாசம் 77
நாடகம் 36
நாடு 108
நாண் 66, 81, 110
நாதர் 42
நாதன் 12, 13, 41, 47, 58, 70, 94
நாமகருமம் 77
நாமம் 13, 36, 50, 77, 80
நாமமின்மை 58
நாயகர் 75
நாயகன் 13, 35, 38, 70, 91, 94
நாயகி 106
நாரி 66
நாற்கதி 20, 23, 40, 45, 49
நிச்சம் 53
நிச்சயகாலம் 2, 8
நிச்சயம் 34
நிணம் 14, 48
நித்தியப்பொருள் 1
நித்தியம் 2, 8, 34
நித்திய வினோதம் 2
நித்திராநித்திரை 2, 77
நித்திரை 2, 77, 108
நித்தியம் 2
நிதி 35
நிதியம் 41
நிந்தை 48
நிமலன் 87
நியதி 20
நிர்மலம் 35
நிருமலர் 69
நிருமலன் 20, 51, 87, 109
நிரை 106, 108
நிலம் 100
நிலவு 2, 35, 65, 106
நிலன் 28
நிலா 98, 110
நிலைபேறு 10
நிழல் 2, 31
நிறை 93, 97
நீர் 2, 28, 74, 100, 110
நீலம் 53, 72
நீழல் 2
நீறு 38
நூல் 77
நெஞ்சம் 41, 51, 52, 61, 70
நெடுமால் 31
நெருப்பு 88, 110
நெல் 69

நெற்றி 35
நெறி 48, 60, 65
நேசம் 15
நேமி 25, 27, 83
நேமிநாதசுவாமி 53
நேமிநாதர் 1, 32
நேரிசையாசிரியப்பா 17
நோய் 41, 53, 66, 71, 83, 102
பகல்காணாப்புள் 8
பகவர் 95
பகை 14, 41, 43, 52, 61, 77, 102, 106, 108
பகைவர் 77, 94
பகைவன் 91
பசி 18, 52, 91
பசு 69
பஞ்சபூதம் 28
பஞ்சவர் 106
பஞ்சேந்திரியம் 2
பட்டு 69
படர் 35
படக்கை 69
படை 35, 43, 87
படைக்கலம் 35
பண் 11
பண்ணவர் 62
பணம் 69
பணிநிலம் 55
பணிவிடை 75
பணை 55
பத்மம் 35
பதி 108
பதினான்குசீர்க்கழிநெடில் விருத்தம் 52
பந்தம் 4, 76, 110
பந்து 77
பயம் 2, 69, 77
பயன் 74
பரசு 35
பரணி 103
பரந்தாமன் 32
பரம்பரன் 27
பரமன் 41, 60
பரமாகமம் 2, 16, 33,39, 45, 77, 86
பரிகாசம் 69
பல்லவர் 62
பலி 108
பழம் 41
பழமை 90
பழவினை 77
பளிக்கு 110
பளு 93
பவளம் 55
பற்று 98
பறவை 45, 81
பனி 11
பாகன் 26, 104
பாட்டு 110
பாண்டம் 69
பாணம் 40, 78, 108
பாணி 110
பாதம் 18, 23, 37, 51, 59, 64
பாதாளம் 4, 29, 35, 38, 57
பாபம் 109
பாம்பு 54
பார் 81, 111
பாவம் 35, 78, 86
பாவி 60

பாற்கடல் 32
பிச்சை 108
பிடரி 110
பிண்டம் 77
பிண்டி 2, 12, 23, 31, 39, 45, 58, 86
பிணி 18, 41, 47
பிணை 72
பிணையல் 55
பிரகாரம் 55, 62, 96, 98, 110
பிரம்மம் 2
பிரமம் 54, 60
பிரமன் 92
பிரமாணம் 77
பிராணி 77
பிராணி சமயம் 77
பிராமணர் 73, 92
பிராயச்சித்தம் 77
பிரும்மா 86
பிழை 58
பிறப்பு 50, 77, 110
பிறவி 106
பின்னம் 77
பீடம் 110
புகழ் 48, 50, 68
புடவி 35
புண்டரீகம் 104
புணை 41, 54
புத்தமதம் 74
புத்தன் 55, 67, 70, 74
புத்தி 67, 91
புத்திரர் 67
புத்தேளிர் 83
புத்தேளுலகு 56
புயம் 35, 36, 108
புயவகுப்பு 35
புரந்தரர் 24, 62
புரவி 104
புலவர் 13, 50, 58, 64
புவனம் 21, 40, 42, 102
புவி 27, 105
புழு 77
புள்ளி 71
புன்மொழி 3
புனல் 22, 28, 97
புனிதர் 14
புனிதன் 51
பூ 2, 22, 35, 64
பூங்கொத்து 106
பூநிரை 64
பூண் 58
பூமாலை 71
பூமி 28, 61, 77, 81, 100, 110, 111
பூரணம் 51
பூலோகம் 56
பூவாளி 78
பெண் 110
பெருமான் 28
பெருமை 12, 37, 42, 53, 71, 77, 106, 109
பெற்றி 35
பேதமை 90
பேதாபேதம் 79
பேய் 108
பேர் 13, 50
பேரறிவு 30
பேராசை 77
பேரின்பம் 2, 34, 48, 52, 55, 60

| | | | |
|---|---|---|---|
| பொடி | 38 | மதங்கி | 105 |
| பொதியமலை | 75 | மதங்கியார் | 105 |
| பொய் | 85, 110 | மதம் | 58 |
| பொய்ச்சமயம் | 9 | மதனன் | 38 |
| பொய்மை | 77, 110 | மதி | 2, 56, 91, 100, 110 |
| பொருள் | 37, 76, 77 | மதிஞானி | 67 |
| பொலிவு | 111 | மதில் | 37, 56, 93, 110 |
| பொழில் | 45, 106 | மதிப்பு | 61 |
| பொற்பு | 35 | மதிவண்ணர் | 7 |
| பொற்றாமரை | 43 | மது | 48 |
| பொறி | 70, 71 | மதுரம் | 7, 41, 77 |
| பொன் | 66, 69, 72, 101, 110 | மயக்கம் | 15, 37, 39, 100, 108 |
| பொன்வண்ணர் | 1 | மயல் | 5, 10, 15, 48, 54 |
| பொன்னுலகம் | 56 | மயில் | 97 |
| போகமங்கை | 40 | மயிலாபுரி | 73, 74 |
| போகன் | 21 | மருங்கு | 36,43, 97 |
| போதகம் | 27 | மருந்து | 56, 71, 102 |
| போது | 23, 36, 50, 78 | மருள் | 110 |
| போர் | 81 | மருத்துவர் | 41 |
| பௌத்தம் | 2, 54, 60 | மரைமலர் | 105 |
| மகரம் | 47, 54, 73, 91, 106 | மலர் | 10, 26, 31,35, 46, 49, 70, 71, 72, 110, 111 |
| மகரமீன் | 91 | மலர் மடந்தை | 47 |
| மகள் | 73 | மலம் | 109 |
| மகளிர் | 35, 110 | மலை | 32, 35, 36, 52, 56, 97, 108, 110 |
| மட்டு | 88 | மழு | 54 |
| மடக்கு | 39, 78 | மழை | 29, 52, 55, 58, 71, 94, 106, 110 |
| மடந்தை | 20, 106 | மறம் | 25, 73, 78, 86 |
| மடவார் | 90 | மறலி | 52, 64 |
| மடு | 7 | மறவர் | 97 |
| மண் | 110 | மறன் | 35 |
| மணி | 11, 54, 58, 70, 90, 108 | மறு | 10, 35, 77,106 |
| மணிமாலை | 58 | மறுமை | 1, 77 |
| மணிவடம் | 14 | மன்மதன் | 18, 38, 40, 47, 61, 62, 78, 80, 81, 83, 91, 93 |
| மத்திமம் | 4, 29, 35 | | |

| | |
|---|---|
| மன்னர் | 25, 35, 62, 73, 106 |
| மனசோதி | 10 |
| மனம் | 35, 38, 43, 64, 91, 109 |
| மனிதர் | 45, 81 |
| மனை | 68 |
| மா | 43, 71 |
| மாகம் | 21 |
| மாசு | 30, 46, 54, 110 |
| மாட்சிமை | 66 |
| மாதர் | 35, 40, 64,66, 87, 89 |
| மாமிசம் | 77 |
| மாயநெறி | 48 |
| மாயம் | 49 |
| மாயை | 69 |
| மார்க்கம் | 48, 55, 60, 65, 77, 99 |
| மாரன் | 83 |
| மாரி | 17, 29, 71 |
| மால் | 11, 19, 28, 49, 97, 105 |
| மாலை | 35, 37, 55, 64, 66, 110 |
| மான் | 72 |
| மானம் | 69 |
| மானிடம் | 91 |
| மானுஷ்யதேகம் | 77 |
| மிஞிறு | 58 |
| மிருகம் | 84 |
| மிருகேந்திரன் | 3 |
| முக்தி | 1, 16, 32, 47 |
| முக்திவிழா | 50 |
| முகடு | 32 |
| முகில் | 18, 53, 105 |
| முகை | 78 |
| முடி | 54, 69, 73, 77, 98, 110 |
| முத்தம் | 35 |
| முக்தி | 35, 40, 54, 55, 60, 65, 77, 95 |
| முத்தி நாடு | 20 |
| முத்திநாயகி | 110 |
| முத்திலட்சுமி | 47 |
| முத்து | 65, 74 |
| முதல் | 35 |
| முதல்வன் | 26 |
| முதுகு | 87 |
| முயல் | 6 |
| முயற்சி | 110 |
| முரசு | 17 |
| முரண் | 37, 110 |
| முலை | 20, 35, 55, 78, 97 |
| முழவு | 110 |
| முளரி | 2, 97 |
| முனிவர் | 32, 54, 62, 95, 106, 110 |
| முனிவர்கணம் | 57 |
| முனிவரன் | 42 |
| மூப்பு | 77 |
| மூர்க்கர் | 99 |
| மூர்த்தி | 100, 110 |
| மூலமந்திரம் | 19, 41 |
| மூவறிவுயிர் | 63 |
| மூவுலகு | 94 |
| மூன்றாம்பிறை | 35 |
| மூன்று | 110 |
| மெத்தை | 69 |
| மெய் | 40, 77, 86 |
| மெய்ப்பொருள் | 41 |
| மெய்மை | 77 |
| மெய்யறிவு | 73 |
| மேகம் | 52, 53, 77, 91, 105, 110 |
| மேரு | 101 |
| மை | 53 |
| மைந்தர் | 58 |
| மொட்டு | 97 |

மோகம் 15
மோட்சம் 4, 76
மோட்சலோகம் 7
மௌலி 62
யமன் 39
யாக்கை 77
யாழ் 71
யானை 58, 93
யுத்தம் 40, 80, 81, 115
யோகம் 77, 82
யோகி 48
யோனி 101
யௌவனம் 77
ரசம் 2
ரதி 2, 89, 77
ரவி 100
ரூபம் 2
வச்ரம் 35
வசை 48
வஞ்சகம் 74, 69
வஞ்சம் 52, 92
வஞ்சனை 49, 77
வஞ்சி விருத்தம் 19, 93
வஞ்சித்துறை 44, 74
வட்டம் 32
வடம் 20, 58
வண்டி 23, 69
வண்டு 7, 11, 23, 39, 45, 58, 70, 71, 78, 110
வண்டுவிடுதூது 71
வந்தனை 24, 94
வம்பு 20
வமிசபரம்பரை 73
வரதர் 62
வரதன் 88
வரம் 24, 35, 58
வரம்பு 100
வரி 71
வரிசை 74, 108
வருத்தம் 70
வரை 36, 108, 110
வல்லவன் 64
வல்லி 81, 102
வல்வினை 25
வலயம் 32, 106
வலி 35, 37, 38, 41, 73, 77, 108
வலையம் 94
வழக்கம் 61
வளப்பம் 90
வறுமை 42, 56, 90
வனம் 35, 108
வனபூமி 81
வஸ்திரம் 48, 58
வாகனம் 21, 69
வாசம் 71
வாசனை 18, 26, 35, 51, 55, 66, 68, 71, 78, 94, 103, 110
வாத்திய ஒளி 110
வாமன் 44, 50, 77, 86
வாயு 28, 100
வார் 97
வாரணம் 51
வாரி 53
வாவி 9, 54
வாள் 35, 77, 87
வாளி 78
வானம் 26, 28
வானவர் 24
வானோர் 50
வாஸ்த்து 69

விச்சை 103
விசம் 18
விசும்பு 7, 18, 32, 70, 110
விடம் 18, 68
விடயம் 104
விண் 38, 110
விண்ணவர்கோன் 36
வித்தை 56
விநயம் 77
விநாயகர் 40
விமலர் 1
விமலன் 2, 79
வியாதி 33, 53, 66, 71, 77, 83, 101
விரதம் 77
விரிஞ்சன் 105
விருப்பு 69, 77
விரை 2, 68
வில் (160 செ.மீ) 14
வில் 77, 83
விலங்கு 45, 76,81, 84, 106
விலை 70
விவேகம் 16
விவேகி 50
விழி 35, 75, 81, 97, 106
விறல் 35, 110
வினை 48, 53, 74, 77, 81, 88, 95, 96, 109
வினைப்பகைவர் 2, 32, 44
வினைவனம் 54
விஷ்ணு 9
வீடு 16, 21, 60, 69, 76
வீணை 71
வீதி 26
வீரம் 77, 78
வீரர் 97
வீரன் 59
வீறு 77
வெகுளி 37, 110
வெண்பா 30, 66, 85,99
வெப்பம் 40, 43, 54, 59, 60, 91
வெம்மை 110
வெயில் 58
வெள்ளம் 53
வெள்ளி 69
வெற்பு 32, 35, 52, 55, 97
வெற்றி 35, 36, 70, 73, 80, 91, 92, 97, 98
வெற்றிக்கொடி 110
வெறி 10, 26, 35, 71, 78, 94, 110
வெறுப்பு 69, 77
வென்றி 25, 80
வேகம் 21, 40, 43
வேட்கை 102
வேட்கை நோய் 33
வேதம் 1, 26, 27, 38, 82, 91, 105, 110
வேதனை 41
வேதாகமம் 79
வேதியர் 73, 92
வேந்தர் 30
வேரி 29
வேல் 64, 75, 87, 97
வேலி 110
வேலைக்காரன் 69
வேலைக்காரி 69
வேள்வி 110
வைணவம் 2, 54, 60
வையம் 33
வைரம் 52, 97

## இணைப்பு - 4

## இதுவரை தெரியவந்த கலம்பக நூல்கள்

| வ. எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் நூற்றாண்டு |
|---|---|---|---|
| 1. | அகத்தீசர் கலம்பகம் | --- | -- |
| 2. | அம்பலவாண தேசிகர் கலம்பகம் | மீனாட்சி சுந்தரம் பிள்ளை | 19 |
| 3. | அர்ச் சூசையப்பர் கலம்பகம் | ஏ.ஸ். செகராவு முதலியார் | 18 |
| 4. | அருணைக்கலம்பகம் | எல்லப்ப நாவலர் | 17 |
| 5. | அழகர் கலம்பகம் | அரபத்த நாவலர் | 18 |
| 6. | ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் | நம்பியாண்டார் நம்பி | 10 |
| 7. | எடப்பாடி ஆறுமுகசாமி கலம்பகம் | கா.நா. நெல்லையப்பர் | - |
| 8. | எண்ணூர்க் கலம்பகம் | ஏ.எஸ். செகராவு முதலியார் | 18 |
| 9. | கச்சிக் கலம்பகம் | அரங்கநாத முதலியார், பூண்டி | 19 |
| 10. | கச்சிக்கலம்பகம் | ஞானப்பிரகாசர் - கச்சி | 16 |
| 11. | கட்டுரைக் கலம்பகம் | கணபதி ஐயர் - ச.கு. | 20 |
| 12. | கண்ணப்பர் கலம்பகம் | துரைசாமி முதலியார் வீ | 20 |
| 13. | கண்டிக் கலம்பகம் | அப்துல்காதிர்புலவர், அருள்வாக்கியார் | 19-20 |
| 14 | கதிர்காமக் கலம்பகம் | கந்தப்ப சுவாமி | 19 |
| 15. | காசிக் கலம்பகம் | குமரகுருபரர் | 17 |
| 16. | குமரக் கோட்டக் கலம்பகம் | சபாபதி முதலியார், புரசை | 19 |
| 17. | குருகைக் கலம்பகம் | முத்துசாமி ஐயங்கார் | 19-20 |
| 18. | குவாவீர்க் கலம்பகம் | குலாம் காதிறு நாவலர் | 19 |
| 19. | குறுஞ்செய்யுட் கலம்பகம் | ஆவுடையப்ப செட்டியார், அடுக்குமொழி | 19-20 |
| 20. | கைலைக் கலம்பகம் | குமரகுருபரர் | 17 |
| 21. | கொற்றந்தைக் கலம்பகம் | புகழேந்திப் புலவர் | 13 |
| 22. | கோயிற் கலம்பகம் | மணவாள மாமுனிகள் | 14 |
| 23. | சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் | சிவப்பிரகாச சுவாமிகள் துறைமங்கலம் | 17 |

| | | | |
|---|---|---|---|
| 24. | சிவப்பிரகாச சுவாமிகள் கலம்பகம் | சிவஞான தேசிகர் | 17 |
| 25. | சீகாளத்திக் கலம்பகம் | இராமசாமிச் செட்டியார், திருஎவ்வளூர் | 19 |
| 26. | சென்னை கந்தசாமிக் கலம்பகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 27. | சேயூர்க் கலம்பகம் | அந்தகக்கவி வீரராகவர் | 17 |
| 28. | சோழீசுவரர் மல்லைக்கலம்பகம் | சிறைமீட்டான் கவிராயர் பிள்ளைப் பெருமாள் | 17 |
| 29. | ஞான விநோதன் கலம்பகம் | தத்துவராயர் | 16 |
| 30. | தமிழ்ச்செய்யுட் கலம்பகம் | போப். ஜி.யு. | 19 |
| 31. | திருஎவ்வளூர்க் கலம்பகம் | இராமசாமி செட்டியார் திருஎவ்வளூர் | 19 |
| 32. | திருஎவ்வுட் கலம்பகம் | வேங்கட கிருஷ்ண தாசர் | 14 |
| 33. | திருக்கண்ணபுரக் கலம்பகம் | டிஎஸ். ராஜகோபாலன் | 20 |
| 34. | திருக்கலம்பகம் | உதீசித்தேவர் | 10 (or ) 14-15 |
| 35. | திருக்கழுக்குன்றக் கலம்பகம் | இராமசாமிச் செட்டியார், திருஎவ்வளூர் | 19 |
| 36. | திருக்காவலூர்க் கலம்பகம் | வீரமாமுனிவர் | 17-18 |
| 37. | திருக்கோட்டாற்றுக் கலம்பகம் | கருப்பையாப் பாவலர் | 19-20 |
| 38. | திருச்சுசிந்தைக் கலம்பகம் | பழனிக்குமார் பண்டாரம் | 20 |
| 39. | திருச்செங்கோட்டுக் கலம்பகம் | சுந்தர முதலியார் | - |
| 40. | திருச்செந்திற் கலம்பகம் | சுவாமிநாத தேசிகர் (ஈசானதேசிகர்) | 17 |
| 41. | திருஞான சம்பந்தர் கலம்பகம் | மாணிக்கவாசகத் தம்பிரான் மதுரை | 19-20 |
| 42. | திருத்தணிகைக் கலம்பகம் | கந்தப்பையர் | 18 |
| 43. | திருத்தணிகைக் கலம்பகம் | வேலாயுத முதலியார் தொழுவூர் | 19 |
| 44. | திருநல்லூர்க் கலம்பகம் | வெங்கடசுப்புப் பிள்ளை அரன்வாயில் | 19-20 |
| 45. | திருநாராயணபுரக் கலம்பகம் | வரதராஜ பிள்ளை கட்டளை | 19 |
| 46. | திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் | தொல்காப்பியத்தேவர் | 14 |
| 47. | திருப்பெருந்துறைக் கலம்பகம் | சுவாமிநாத முதலியார் | |
| 48. | திருப்பேரூர்க் கலம்பகம் | கந்தசாமி அடிகள் | 19 |
| 49. | திருப்பேரூர்க் கலம்பகம் | சபாபதிப் பிள்ளை குடந்தை | 19-20 |
| 50. | திருப்பேரைக் கலம்பகம் | அனந்த கிருஷ்ண ஐயங்கார் | 19-20 |

| | | | |
|---|---|---|---|
| 51. | திருப்போரூர்க் கலம்பகம் | சபாபதி முதலியார் புரசை | 19 |
| 52. | திருப்போரூர் வேம்படி விநாயகர் கலம்பகம் | வேலுத்தேசிகர் பாலூர் | 19 |
| 53. | திருமதீனத்துக் கலம்பகம் | பிச்சை இபுராகீம் புலவர் | 19-20 |
| 54. | திருமயிலைக் கலம்பகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 55. | திருவதிகைக் கலம்பகம் | உத்தண்ட வேலாயுத கவி | 16 |
| 56 | திருவரங்கக் கலம்பகம் | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் | 17 |
| 57. | திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கலம்பகம் | சங்கரலிங்கம் பிள்ளை அ | 19 |
| 58. | திருவாமாத்தூர்க் கலம்பகம் | இரட்டையர் | 15 |
| 59. | திருவாரூர்க் கலம்பகம் | - | - |
| 60. | திருவாவடுதுறைக் கலம்பகம் | மீனாட்சி சுந்தரம் பிள்ளை | 19 |
| 61. | திருவிடை மருதூர்க் கலம்பகம் | இராமசாமிச் செட்டியார் திருஎவ்வளூர் | 19 |
| 62. | திருவிருதைக் கலம்பகம் | பார்த்தசாரதி நாயுடு. மு | 19 |
| 63. | திருவீரைக் கலம்பகம் | பழனிக் குமார பண்டாரம் | |
| 64. | திருவெங்கைக் கலம்பகம் | சிவப்பிரகாசர் துறை மங்கலம் | 17 |
| 65. | திருவெண்ணைக் கலம்பகம் | இராசப்ப நாவலர் | 19 |
| 66. | திருவேங்கடக் கலம்பகம் | வீரராகவ முதலியார் பொற்களந்தை | 19 |
| 67. | திருவொற்றியூர்க் கலம்பகம் | கலியாண சுந்தரனார், பூவை | 19-20 |
| 68. | தில்லைக் கலம்பகம் | இரட்டையர் | 15 |
| 69. | துறைசைக் கலம்பகம் | சீனிசர்க்கரைப் புலவர் | 18-19 |
| 70. | தென்தில்லைக் கலம்பகம் | நாராயணசாமி ஐயர் பினனத்தூர் | 19-20 |
| 71. | நந்திக் கலம்பகம் | - - - - | 9 |
| 72. | நரசைக் கல்ம்பகம் | சாமிநாத பிள்ளை் | 18 |
| 73. | நவநீத கிருஷ்ணன் கலம்பகம் | - - - - | - - |
| 74. | நாகைக் கலம்பகம் | சவ்வாதுப் புலவர் | 17 |
| 75. | நெல்லைக் கலம்பகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 76. | நேமக் கலம்பகம்+ | முத்தப்ப செட்டியார் | 20 |
| 77. | பதாயிரு கலம்பகம் | குலாம் காதீறு நாவலர் | 19 |
| 78. | பர்வத வர்த்தினி கலம்பகம் | சுப்பிரமணிய ஐயர் | 19 |

| | | | |
|---|---|---|---|
| 79. | பருதாதுக் கலம்பகம் | குலாம்காதிறு நாவலர் | 19 |
| 80. | பருவ வருணனைக் கலம்பகம் | சுப்பிரமணிய அய்யர் (சதாவதானம்) | |
| 81. | பழனிக் கலம்பகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 82. | பாணர்க் கலம்பகம் | வீரராகவ முதலியார் | - |
| 83. | பாலூர்க் கலம்பகம் | வீரராகவ முதலியார் பொற்களந்தை | 19 |
| 84. | புதுவைக் கலம்பகம் | பெரியசாமிப் பிள்ளை. புதுவை | 19 |
| 85. | புதுவைக் கலம்பகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 86. | புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் | படிக்காசுப் புலவர் | 17-18 |
| 87. | மக்காக் கலம்பகம் | செய்கப்துல் காதிறு ஆலீம் புலவர் | 19 |
| 88. | மகிழ்மாக் கலம்பகம் | வேலாயுத முதலியார் தொழூவூர் | 19 |
| 89. | மதனக் கலம்பகம் | சீவரத்தினக் கவிராயர் | - |
| 90. | மதீனாக் கலம்பகம் | குலாம் காதிறு நாவலர் | 19 |
| 91. | மதுரைக் கலம்பகம் | குமரகுருபரர் | 17 |
| 92. | மயிலாசக் கலம்பகம் | தண்டபாணி சுவாமிகள் | 19 |
| 93. | மயிலைக் கலம்பகம் | பெரியசாமிப் பிள்ளை. புதுவை | 19-20 |
| 94. | மயூரகிரிக் கலம்பகம் | இராமநாதன் செட்டியார். அ | 19-20 |
| 95. | மறைசைக் கலம்பகம் | பீதாம்பரப் புலவர் | 20 |
| 96. | மாறன் கலம்பகம் | | |
| 97. | முருகக் கடவுள் கலம்பகம் | அரசன் சண்முகனார் | 19-20 |
| 98. | முருகக் கடவுள் கலம்பகம் | நாராயண சுவாமிகள் கவிராசர் | - |
| 99. | வரமங்கைக் கலம்பகம் | அப்புவையங்கார். நெ | 20 |
| 100. | வாட்போக்கிக் கலம்பகம் | மீனாட்சி சுந்தரம் பிள்ளை | 19 |
| 101. | விக்டோரியா தமிழ்ச் செய்யுள் கலம்பகம் | எஸ்.வி. இராமசாமி ஐயங்கார் | 19-20 |
| 102. | விந்தைக் கலம்பகம் | இராசப்ப நாவலர் | - |
| 103. | ஸ்ரீஅம்பலவாண தேசிகர் கலம்பகம் | ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள் | - |

## மறைந்துபோன கலம்பக நூல்கள்

1. பதுமையார்க் கலம்பகம்.
2. அந்தாதிக் கலம்பகம்.
3. அறம் வளர்த்த முதலியார் கலம்பகம்.
4. செஞ்சிக் கலம்பகம்.
5. துரியோதனன் கலம்பகம்.

## Our Publications pertaining to Palm-Leaf Manuscripts

### Descriptive Catalagues of Palm-Leaf Manuscripts in Tamil,

General Editors: **Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | Vol I Part I | Editor | M. Shanmukham Pillai, | 1990 | Rs. 177.50 | US $ 25 |
| 2. | Vol I Part II | Editor | M. Shanmukham Pillai, | 1990 | Rs. 177.50 | US $ 25 |
| 3. | Vol II Part I | Editor | M. Shanmukham Pillai, | 1991 | Rs. 177.50 | US $ 25 |
| 4. | Vol II Part II | Editor | M. Shanmukham Pillai, | 1992 | Rs. 225.50 | US $ 25 |
| 5. | Vol III Part I | Editor | Dr. A. Thasarathan, | 1993 | Rs. 250.00 | US $ 50 |
| 6. | Vol III Part II | Editor | Dr. A. Thasarathan, | 1993 | Rs. 250.00 | US $ 50 |
| 7. | Vol IV Part I | Editor | Dr. P. Subramaniam, | 1996 | Rs. 250.00 | US $ 50 |
| 8. | Vol IV Part II | Editor | Dr. P. Subramaniam, | 1996 | Rs. 250.00 | US $ 50 |
| 9. | Vol V Part I | Editors | Dr. P. Subramaniam, Dr. K. Jayakumar, | 1997 | Rs. 250.00 | US $ 25 |
| 10. | Vol V Part II | Editors | Dr. P. Subramaniam, Dr. K. Jayakumar, | | (in print) | |

### Palm-Leaf Manuscript Publications

General Editors: **Dr. Shu Hikosaka, Dr. G. John Samuel**

Editors:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | The Wandering Voice (3 Ballads), | Dr. R. Nirmala Devi, | 1987 | Rs. 120.00 | US $ 32 |
| 2. | The Art of Drumming - Mattalaviyal, | Dr. V.P.K. Sundaram, | 1988 | Rs. 90.00 | US $ 20 |
| 3. | The Dateless Muse - Veṅkalarājaṉ Katai, | Dr. R. Nirmala Devi, | 1988 | Rs. 80.00 | US $ 20 |
| 4. | The Unsung Melodies, Palavēcaṉ Ceṟvaikkāraṉ Katai, | Dr. V. Murugan | 1989 | Rs. 75.00 | US $ 32 |
| 5. | The Divine Pilgrimage - Perumāḷcāmi katai, | M. Shanmukham Pillai, | 1982 | Rs. 200.00 | US $ 40 |
| 6. | A Tale of Romance - Cakuntalai Nāṭakam, | Dr. A Thasarathan, | 1993 | Rs. 300.00 | US $ 50 |
| 7. | Varma Cūttiram, | Dr. P. Subramaniam, | 1994 | Rs.400.00 | US $ 50 |
| 8. | Nīli Yaṭcakāṉam, | Dr. P. Subramaniam, | 1994 | Rs. 150.00 | US $ 20 |
| 9. | Peṇṇaraciyar katai, | Dr. K. Jayakumar, D. Boominaganathan | 1995 | Rs.100.00 | US $ 20 |
| 10. | A Tale of Nemesis - Nīli Yaṭcakāṉam, | Dr. P. Subramaniam, | 1996 | Rs. 250.00 | US $ 20 |
| 11. | The Valorous Virgins - Peṇṇaraciyar Katai, | Dr. K. Jayakumar D. Boominaganathan | 1996 | Rs.220.00 | US $ 35 |
| 12. | A Tale of Betrayal - Cārankataraṉ Yaṭcakāṉam, | Dr. P. Subramaniam, | 1996 | Rs.400.00 | US $ 65 |
| 13. | The Epic Eternal - Irāmar Katai, Part I, | Dr. K. Jayakumar, | 1996 | Rs.450.00 | US $ 65 |
| 14. | The Epic Eternal - Irāmar Katai, Part II, | Dr. K. Jayakumar, | 1996 | Rs.450.00 | US $ 65 |
| 15. | Palm-leaf and other Manuscripts in Indian Languages, | Dr. A. Pandurangan, Dr. P. Maruthanayagam | 1996 | Rs.300.00 | US $ 50 |
| 16. | Destiny and Divinity - Varāṅkaṉ Katai, | M. Parimanan, | 1996 | Rs.200.00 | US $ 30 |
| 17. | The Vows Fulfilled - Āmaiyar Ammāṉai, | M. Maruthamuthu, | 1996 | Rs.450.00 | US $ 65 |
| 18. | Poetic Petals in the Interior Landscape-Uttaṇṭaṉ Kōvai, | R. Jayalakshmi, | 1997 | Rs.400.00 | US $ 50 |
| 19. | Where Justice Chimes | Dr. P. Subramaniam, | 1997 | Rs.400.00 | US $ 50 |
| 20. | The Defender of the Faith | Dr. K. Jayakumar, R. Jayalakshmi, | 1996 | Rs.350.00 | US $ 40 |
| 21. | Redemption Through Grace | M. Maruthamuthu | 1998 | Rs.350.00 | US $ 25 |